வேதாகமத்திலுள்ள ஞானஸ்நானம்

அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளை யிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார் (மத். 28:18-20).

விசுவாசத்தின் பயன்கள் யாவும் ஞானஸ்நானத்துடன் இணைவு பட்டுள்ள அளவுக்கு வேதாகமத்தில் விசுவாசமும் ஞானஸ்நானமும் இணைக்கப்பட்டுள்ளது. இந்தக் காரணத்தினால், ஞானஸ்நானம் விசுவாசத்தினின்று பிரிக்கப்பட முடியாது - அல்லது விசுவாசமும் ஞானஸ்நானத்திலிருந்து பிரிக்கப்பட முடியாது. கிறிஸ்தவராகும் செயல்முறையில் இவையிரண்டும் ஒன்று மற்றொன்றின்றிக் கலந்தாய்வு செய்யப்பட முடியாது, மற்றும் இவைகளின் பாகமாக ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்து இரட்சிப்பின் ஆசீர்வாதங்களை இணைவு படுத்த முடியாது.

புதிய எருசலேம் வேதாகமத்தின் முன்குறிப்பொன்று பின்வருமாறு எடுத்துரைக்கின்றது:

> ஞானஸ்நானம் என்பது விசுவாசத்திற்கு எதிரிடையாய்ச் செல்வ தில்லை, ஆனால் விசுவாசத்துடன் இணைந்து செல்கின்றது …, விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றிற்குப் பவுல் ஒரே விதமான செயல்விளைவுகளையே குறிப்பிட்டுள்ளார் … பாவி தண்ணீரினுள் முழுக்காட்டப்படுகின்றார் … மற்றும் இவ்விதமாக கிறிஸ்துவுடன் “அடக்கம்” பண்ணப்படுகின்றார் … [கலா. 3:26 மற்றும் கொலோ. 2:12 ஆகியவற்றைக் காணவும்][1]

வேதாகமக் கண்ணோக்கிலிருந்து ஞானஸ்நானத்தைப் பற்றிய கவனம்

GTG LIBRARY- BANGALORE

நிறைந்த பாடமொன்று, விசுவாசத்துடன் ஞானஸ்நானத்திற்குள்ள உறவு முறையின் காரணமாக அதன் இன்றியமையாமையை உறுதிப் படுத்துகின்றது.

வேத வாக்கியங்களை நாம் ஆராய்ந்து பார்க்கையில், NASBயின் தற்போதைய பதிப்பை நாம் பயன்படுத்துவோம். மற்ற மொழி பெயர்ப்புகள் பின்வரும் சுருக்கக் குறிப்புகளுடன் குறிப்பிடப்படுகின்றன:

KJV - King James Version
NIV - New International Version
NKJV - New King James Version

இந்தப் படிப்பில் உட்புகும் ஒவ்வொருவரும் அதைத் திறந்த மனதுடனும் திறந்த புத்தகமாகிய வேதாகமத்துடனும் செய்ய வேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன். இது ஞானஸ்நானத்தைப் பற்றிய ஊக்கம் நிறைந்த படிப்பிற்கும், அதைப் பற்றிய வேதாகமத்தின் போதனைக்கும் வழிநடத்தும்.

பல ஆண்டுகளுக்கு முன்பு நான், வேதாகமத்தைப் படித்துச் சில கேள்விகளைக் கொண்டிருந்த ஒரு பெண்மணியைச் சந்தித்தேன். அவர்கள் ஞானஸ்நானத்தைப் பற்றிக் கேட்டார்கள், மற்றும் நான் பாவமன்னிப்புக்கு நாம் ஞானஸ்நானம் பெறுதல் அவசியம் என்று அவர்களிடம் கூறினேன். அவர்கள் என்னை நம்பாத பொழுது நான் அவர்களிடம் அப். 2:38 வாசிக்கும்படி கேட்டுக் கொண்டேன். அப்பெண்மணி தனது வேதாகமத்தில் அப்படிப்பட்ட பகுதியொன்றும் இல்லையென்று கூறினார். நான் அப்பெண்மணியின் வேதாகமத்தை எடுத்து, அதைத் திறந்தேன். அப். 2:38 அதில் இல்லாதிருந்தது - அப்பெண்மணி அவ்வசனத்தைத் தனது வேதாகமத்திலிருந்து உண்மையிலேயே வெட்டி எடுத்து விட்டிருந்தார்!

பாவமன்னிப்புக்கு ஞானஸ்நானத்தின் அவசியத்தை மதக்குழுக்களில் உள்ளவர்கள் எல்லாருமே மறுக்கின்றனர். சிலர் ஞானஸ்நானப்படுத்துவதே இல்லை. புரொட்டஸ்டன்டு குழுவினர் பலர் ஞானஸ்நானத்தை நடைமுறைப் படுத்தினாலும் அதன் மீது பெரிய முக்கியத்துவம் எதையும் வைப்பதில்லை. அப்படிப்பட்ட குழுவினருடன் பழக்கப்பட்டவர்கள், வேதாகமம் ஞானஸ்நானத்தைப் பற்றி அதிகம் கூறுகின்றதா அல்லது ஞானஸ்நானத்திற்கு முக்கியத்துவம் எதையும் தருகின்றதா என்று வியப்படைகின்றனர். இவ்விதமாக, நாம் நமது படிப்பைத் தொடங்கு கையில், முதலில் நாம் வேதாகமத்தில் உள்ள "ஞானஸ்நானம்" மற்றும் "ஞானஸ்நானப்படுத்துதல்" என்ற வார்த்தைகளை ஆராய்வோம். இந்த வார்த்தைகளுக்கு வேதாகமத்தில் தரப்பட்டுள்ள முக்கியத்துவம் என்ன?

வேதாகமத்தில் "ஞானஸ்நானம்" என்ற வார்த்தை வரும் இடங்கள்

ஞானஸ்நானம் என்பது பழைய ஏற்பாட்டுக் கருத்தாக இருப்பதில்லை; இது மோசேயின் பிரமாணத்தில் போதிக்கப்படவில்லை அல்லது

GTG LIBRARY- BANGALORE

வரலாற்றின் அந்தக் காலத்தின்போது குறிப்பிடப்படவில்லை. புதிய ஏற்பாட்டுக்கு வரும் வரையிலும் நாம் ஞானஸ்நானம் பற்றிய போதனையைக் கண்டறிவதில்லை. ஞானஸ்நானத்தை அறிமுகப்படுத்த தேவன் முழுக்காட்டிக் கொண்டிருந்த யோவான் ஸ்நானனைப் பயன்படுத்தினார்.

"Baptize" மற்றும் "baptism" என்ற வார்த்தைகள் கிரேக்க வார்த்தைகளின் ஒலியாக்கங்களாய் உள்ளன. "*Baptizo*" என்ற வினைச் சொல்லானது எழுபத்தி ஒன்பது முறையும், "*baptisma*" என்ற பெயர்ச் சொல்லானது இருபத்தியிரண்டு முறையும் - ஆக மொத்தம் 101 முறைகள் (வேதாகமத்தில்) வருகின்றது. ஞானஸ்நானம் கொடுத்தவர் என்ற முறையில் யோவானைக் குறிக்க *baptistes* என்ற வார்த்தை பதினான்கு முறை பயன்படுத்தப் பட்டுள்ளது. யோவான், "யோவான் ஸ்நானன்" என்று தகுதியற்ற வகையில் அழைக்கப்படுகின்றார். அவர் "ஸ்நானன்" (Baptist) அல்ல ஆனால் அதற்குப் பதில் அவர் "முழுக்காட்டுபவராக" (ஸ்நானப்படுத்துபவராக) - *baptistes* என்ற வார்த்தையின் அர்த்தப்படி முழுக்காட்டுபவராக இருந்தார்.

ஞானஸ்நானம் பற்றி மாறுபட்ட ஏழு சந்தர்ப்பப் பொருள்களில் புதிய ஏற்பாடு பேசுகின்றது:

1. மேகத்திலும் கடலிலும் இஸ்ரவேலரின் ஞானஸ்நானம் - ஒரே ஒருமுறை (1 கொரி. 10:1, 2).

2. அக்கினி ஞானஸ்நானம் (மத். 3:11; லூக். 3:16) - இருமுறை.

3. இயேசுவால் சகிக்கப்பட்ட துன்பங்களின் (ஞான)ஸ்நானம் (மாற்கு 10:38, 39) ஏழுமுறை.

4. பரிசுத்த ஆவியானவருக்குள் ஞானஸ்நானம் (மத். 3:11) - ஆறுமுறை. (இந்த மொத்த எண்ணிக்கையானது சுவிசேஷங்களில் உள்ள இணைக் கூற்றுகள் [மாற். 1:8; லூக். 3:16; யோவா. 1:33] மற்றும் இயேசுவின் கூற்றுக்களில் உள்ள மேற்கோள்கள் [அப். 1:5; 11:16] ஆகியவற்றின் காரணமாக மூன்றாகக் குறைக்கப்பட முடியும்.)

5. யோவான் கொடுத்து வந்த தண்ணீர் ஞானஸ்நானம் (மாற். 1:4, 5) - முப்பத்தி ஒன்பது முறை. யோவான் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்தது பற்றிய ஆறு குறிப்புகள் உட்பட இணைச் சுவிசேஷங்களில் இது மீண்டும் கூறப்படுவதன் காரணமாக, இந்த எண்ணிக்கையானது பத்தாகக் குறைக்கப்பட முடியும்.

6. இயேசுவின் ஊழியத்தின் போது அவரால் போதிக்கப்பட்டதும், அவருடைய சீஷர்களால் நடைமுறைப்படுத்தப்படுவதுமான தண்ணீர் ஞானஸ்நானம் - நான்கு முறை (யோவா. 3:22, 26; 4:1, 2). (இது யோவான் அல்லது இயேசுவின் சீஷர்களாகும்படி நாடியவர்களுக்கு யோவானின் ஞானஸ்நானத்திற்கான அதே நோக்கத்திற்கானதாக [மாற். 1:4; லூக். 3:3] இருக்கலாம்.)

7. புதிய உடன்படிக்கையுடன் தொடர்புடையதாகப் போதிக்கப் பட்ட தண்ணீர் ஞானஸ்நானம் (மத். 28:19) - முப்பத்தி நான்குமுறை.

எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் "பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ் நானம்" உண்டு என்று போதிப்பவர்கள் அப்படிப்பட்ட சொல்வழக்கு

GTG LIBRARY- BANGALORE

வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டிராதது குறித்துத் திகைப்படையலாம். வேதாகமம் "பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்" என்றோ அல்லது "தண்ணீர் ஞானஸ்நானம்" என்றோ கூறுவதில்லை, ஆனால் அதற்கு மாறாக, பரிசுத்த ஆவியானவருக்''குள்'' அல்லது பரிசுத்த ஆவியானவ''ரில்'' ஞானஸ்நானம் (மத். 3:11) மற்றும் "யோர்தான் நதியில்" ஞானஸ்நானம் (மத். 3:6) என்று குறிப்பிடுகின்றது. பரிசுத்த ஆவியானவரில் இயேசு ஞானஸ்நானப்படுத்துவார் என்று யோவான் கூறினார். ஆவியானவர் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை (இயேசு ஞானஸ்நானம் கொடுத்தார்) ஆனால் அவருக்குள் அல்லது அவரில் மக்கள் ஞானஸ்நானப் படுத்தப்பட்டனர்.

சொற்றொடர்கள் வருமிடங்கள் ஒப்பிடப்பட்டன

பின்வரும் வார்த்தை ஒப்பீடுகள் யாவையும் அவைகள் தற்போதைய NASBயில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள வழிமுறையின் அடிப்படையில் அமைந்துள்ளன.

தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிக்கும் பொழுது புதிய ஏற்பாட்டில் "baptize" (ஞானஸ்நானப்படுத்துதல்) மற்றும் "baptism" (ஞானஸ்நானம்) என்ற சொற்கள் எழுபத்தேழு முறைகள் வருதலானது ஞானஸ்நானம் சில முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றது. இருப்பினும், இவ்வார்த்தைகள் வரும் எண்ணிக்கையானது தேவனுடனான நமது உறவுமுறைக்கு ஞானஸ்நானம் கொண்டுள்ள தனிச்சிறப்பைக் காண்பிக்க வேண்டிய அவசியம் எதுவும் இருப்பதில்லை. இவ்வார்த்தைகள் வரும் எண்ணிக்கையானது முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டுகின்றதே தவிர வேறு எதையும் நமக்குக் கூறுவதில்லை. ஞானஸ்நானம் என்ற வார்த்தை தோன்றுகின்ற எந்த வசனப் பகுதியும், ஏற்கனவே இரட்சிக்கப் பட்டிருந்த மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது என்று சுட்டிக் காட்டுவதில்லை என்ற உண்மையே குறிப்பிடத்தக்கதாக உள்ளது. ''பாவமன்னிப்பு'' மற்றும் ''இரட்சிப்பு'' போன்ற கருத்துக்கள் எப்பொழுதுமே ஞானஸ்நானத்திற்குப் பின்புதான் - ஒரு பொழுதும் அதற்கு முன்பு அல்ல - வருகின்றன (மாற். 1:4; 16:16; லூக். 3:3; அப். 2:38; 22:16; கொலோ. 2:12, 13; 1 பேது. 3:21).

''அறிக்கையிடு'' (கிரேக்கம்: homologeo) என்பது இருபத்தியாறு முறைகளும், மற்றும் "அறிக்கை" (கிரேக்கம்: homologia) என்பது ஆறு முறைகளும் வருகின்றன. தேவனுடன் விஷயங்களைச் சரிப்படுத்திக் கொள்வதற்காக அறிக்கையிடுதலைக் குறிக்க இந்த வார்த்தை வடிவங்கள் ஏறக்குறைய ஏழுமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

"மனம் திரும்பு" (கிரேக்கம்: metanoeo) என்பது முப்பத்தி நான்கு முறைகளும், மற்றும் "மனந்திரும்புதல்" (கிரேக்கம்: metanoia) என்பது இருபத்தியிரண்டு முறைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தை வடிவங்கள், பழைய பிரமாணத்தின் கீழிருந்த யூதர்களைக் குறிக்க ஒன்பது முறையும், யோவான் ஞானஸ்நானத்திற்கு அவசியமானதாக ஏழு முறைகளும், இராஜ்யம் சமீபித்திருந்ததால் தேவையானது என்று குறிக்க

GTG LIBRARY- BANGALORE

நான்கு முறைகளும், ஏற்கனவே கிறிஸ்தவர்களாய் இருக்கின்றவர்கள் தேவனுடன் சரியாவதற்கு அவசியமான அடிவைப்பு என்று குறிக்க பதினைந்து முறைகளும் மற்றும் இழந்துபோகப்பட்டிருப்பவர்களின் (கிறிஸ்தவரல்லாதவர்களின்) பதில்செயலைக் குறிக்க இருபத்தியோரு முறைகளும் வருகின்றன.

"நம்புதல்" (கிரேக்க வினைச் சொல்: pisteuo) என்பது 240 முறைகளும், "விசுவாசம்" (கிரேக்கப் பெயர்ச் சொல்: pistis) 243 முறைகளும் காணப் படுகின்றன. இவைகள் வேதாகமத்தில் உள்ள திறவுகோல் வார்த்தைகளாகும்: கிறிஸ்தவம் என்பது தேவன்மீதும், இயேசுவின்மீதும், தேவனுடைய செயல்கள்மீதும் மற்றும் அவருடைய வசனத்தின்மீதும் உள்ள விசுவாசத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. ''விசுவாசம்'' (கிரேக்கம்: pistis) மற்றும் "நம்புதல்" (கிரேக்கம்: pisteuo) என்பவை இரு மாறுபட்ட கருத்துக்கள் அல்ல; "நம்புதல்" என்பது ஒரு வினைச் சொல் (ஒரு செயலைக் குறிப்பிடுதல்) என்றிருக்கையில், ''விசுவாசம்'' என்பது விசுவாசிக்கின்ற ஒருவரின் இதயத்தில் என்ன உள்ளது என்பதை அடையாளப்படுத்தும் பெயர்ச் சொல்லாக உள்ளது என்பதே இவையிரண்டிற்கும் உள்ள ஒரே ஒரு வித்தியாசமாகும். (பின்வரும் வரைபடத்தைக் காணவும்.)

வரைபடம் 1

"ஞானஸ்நானப்படுத்து" "ஞானஸ்நானம்"	77 முறைகள்
"அறிக்கையிடு" "அறிக்கை"	32 முறைகள்
"மனந்திரும்பு" "மனந்திரும்புதல்"	56 முறைகள்
"விசுவாசி" (வினைச் சொல்) "விசுவாசம்"	483 முறைகள்

வார்த்தைகள் வரும் இடங்கள் - ஆய்வுக் கருத்து

"நம்புதல்" (வினைச் சொல்) என்ற சொற்றொடரானது வேதாகமத்தின் மற்ற கருத்துக்களுடன் பின்வரும் எண்ணிக்கையிலான முறைகள் வருகின்றது: இரட்சிப்பு - ஆறுமுறைகள், நித்திய ஜீவன் - ஏழு, புதுப் பிறப்பு - இரண்டு, நீதியைப் பெறுதல் - மூன்று, நீதிமானாக்கப்படுதல் - ஒன்று, மற்றும் பாவமன்னிப்பு - ஒன்று.

GTG LIBRARY- BANGALORE

"விசுவாசம்" என்பது மற்ற கருத்துக்களுடன் தொடர்புடைய வகையில் பின்வரும் எண்ணிக்கையிலான முறைகள் வருகின்றது: நீதி - ஏழு, நீதியைப் பெறுதல் - எட்டு,[2] இரட்சிப்பு - இரண்டு, மற்றும் மன்னிப்பு - ஒன்று.

இயேசுவில் நம்பிக்கை கொண்டுள்ள பெரும்பான்மையோர், இரட்சிப்பு மற்றும் பாவமன்னிப்புக்கு முன்னதாக இயேசுவில் நம்பிக்கை, மனந்திரும்புதல், மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவற்றைத் தேவன் கேட்கின்றார் என்பதை ஒப்புக் கொள்கின்றனர். இவைகள் கேட்கப் படுகின்றன என்று ஏற்றுக் கொள்வது, இந்த ஆசீர்வாதங்களைப் பெறுவதன் தொடர்பாக வேதாகமத்தில் இவை குறிப்பிடப்படும் எண்ணிக்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது. (வரைபடத்தைக் ப.16ல் காணவும்.) ஞானஸ்நானம் என்பது மனந்திரும்புதல் அல்லது அறிக்கையிடுதல் என்பவற்றுடன் தொடர்பு படுத்தப்படுவதைக் காட்டிலும் கிறிஸ்த வரல்லாதவரின் மன்னிப்பு மற்றும் இரட்சிப்பு ஆகியவற்றுடன் அதிக முறைகளும், "நம்பிக்கை" அல்லது "விசுவாசம்" என்பதுடன் ஏறக்குறையச் சமமான முறைகளும் இணைக்கப்பட்டுள்ளதைப் பலர் புரிந்து கொள்ளுவதில்லை.

''அறிக்கையிடு'' என்பது இருமுறை மட்டுமே பயன்படுத்தப் பட்டுள்ளது, இவ்விரு முறைகளிலும் இது கிறிஸ்தவரல்லாதவர் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளத் தேவையான ஒன்று என்ற வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

> *என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினா ரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும் (ரோமர் 10:9, 10).*

தீமோத்தேயுவின் "நல்ல அறிக்கை" என்பது, அவர் கிறிஸ்தவரான பொழுது செய்ததாகவே இருக்கும் (1 தீமோ. 6:12). யோவானின் ஞானஸ் நானத்தை நாடியவர்கள் தங்களின் பாவங்களை அறிக்கையிட்டனர் (மத். 3:6; மாற். 1:5). மனிதர் முன்பாக இயேசுவை அறிக்கையிடுகின்றவர்களைப் பிதாவின் முன்பு தாம் அறிக்கை பண்ணுவதாக இயேசு கூறினார் (மத். 10:32; லூக் 12:8). அவர் ஒருவேளை, கிறிஸ்தவராகும் போது ஒருவர் செய்கின்ற தொடக்க அறிக்கையைக் குறிப்பிட்டிருக்கலாம், ஆனால் துன்பங்களை எதிர்கொள்ளுகையில் இயேசுவில் கொண்டுள்ள விசுவாசத்தை எடுத்துரைத் தல்களும் இதில் உள்ளடக்கப்படலாம்.[3] பாவங்கள் மன்னிக்கப்படும் படியாகக் கிறிஸ்தவர்கள் அவைகளை அறிக்கையிடுதல் அவசியம் என்று அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிட்டார் (1 யோவா. 1:9).

இயேசுவின் மரணத்தினால் புதிய உடன்படிக்கை அர்ப்பணிக்கப்பட்ட பிறகு, மன்னிப்புக்கு அவசியமானது என்ற வகையில் "மனந்திரும்புதல்" என்பது மூன்று முறை குறிப்பிடப்பட்டுள்ளது.

> எழுதியிருக்கிறபடி ... மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம்

GTG LIBRARY- BANGALORE

> தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது ... என்றார் [இயேசு] (லூக். 24:46-47).

> பேதுரு அவர்களை [யூதர்களை] நோக்கி, நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது, பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் (அப். 2:38) என்றார்.

> உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள் (அப். 3:20).

மனந்திரும்புதல் என்பது ஒருக்காலும் புதிய பிறப்பு, இரட்சிப்பு, நீதிமானாக்கப்படுதல் அல்லது நீதி ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டு கலந்துரையாடுவதில்லை. அது ஞானஸ்நானத்துடன் இணைவுற்ற வகையில் யோவானால் கேட்டுக்கொள்ளப்பட்டது (மத். 3:8; லூக். 3:8) மற்றும் சில வேளைகளில் அது பாவமன்னிப்புக்குக் கேட்டுக் கொள்ளப்பட்டது (மத். 3:11; மாற். 1:4; லூக். 3:3; அப். 13:24; 19:4). தேவனுடைய இராஜ்யம் அருகாமையில் இருந்ததால் யோவானும் இயேசுவும் மனந்திரும்புதலைப் பிரசங்கித்தனர் (மத். 3:2; 4:17; மாற். 1:15). அப்போஸ்தலர்கள் இயேசுவால் முதன்முறை அனுப்பப்பட்ட பொழுது மனந்திரும்புதலைப் பிரசங்கித்தனர் (மாற். 6:12). பாவிகளை மனந்திரும்புகிறதற்கு அழைக்கவே தாம் வந்ததாக இயேசு கூறினார் (லூக். 5:32) மற்றும் மனந்திரும்புகின்ற பாவியினிமித்தம் பரலோகத்தில் மகிழ்ச்சி உண்டாகும் என்றும் அவர் கூறினார் (லூக். 15:7). மக்கள் மனந்திரும்பும்படிப் பவுல் உற்சாகப்படுத்தினார் (அப். 17:30; 20:21; 26:20). புதிய உடன்படிக்கையின் கீழ் இருப்பவர்கள் மனந்திரும்புதல் என்பது தேவனால் விரும்பப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (அப். 5:31; 11:18; ரோமர் 2:4; எபி. 6:1; 2 பேது. 3:9). கிறிஸ்தவர்கள் ஆகியுள்ளவர்களிடத்திலும் இது அவசியம் இருக்க வேண்டும் என்ற வகையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது (லூக். 17:4; அப். 8:22; 2 கொரி. 7:9, 10; எபி. 6:6; வெளி. 2:5, 16, 21, 22; 3:3, 19).

இரட்சிப்படைய நாம் வசனமாகிய சுவிசேஷத்தை விசுவாசிக்க வேண்டும் என்று இயேசு இருமுறை கூறினார் (லூக். 8:12; மாற். 16:16). இரட்சிக்கப்படுவதற்கு நாம் விசுவாசிக்க வேண்டும் என்று பவுல் நான்கு முறை போதித்தார் என்று நாம் காண்கின்றோம் (அப். 16:31; ரோமர் 1:16; 10:9; 1 கொரி. 1:21). மறுபடியும் பிறத்தல் என்பது விசுவாசத்துடன் சேர்த்து இரு சந்தர்ப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது (யோவா. 1:12, 13; 1 யோவா. 5:1). நித்திய ஜீவன் விசுவாசத்துடன் ஏழுமுறை இணைக்கப்பட்டுள்ளது (யோவா. 3:15, 16, 36; 6:47; 11:26; 20:31; 1 தீமோ. 1:16). பாவமன்னிப்புப் பெறுவதற்கு அவசியமானது என்ன என்று எடுத்துரைப்பதில் "விசுவாசி" என்பது ஒருமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது (அப். 10:43); மற்றும் அது "நீதிமானாக்கப்படுதல்," "விடுவிக்கப்படுதல்" அல்லது "நீதி" (அப். 13:39; ரோமர் 10:4, 10; கலா. 2:16) என்று மொழிபெயர்க்கப்பட்ட dikaios (அல்லது

GTG LIBRARY- BANGALORE

வரைபடம் 2

ஆய்வுக் கருத்துக்கள்

சொற்றொடர்கள் (வார்த்தைவடிவங்கள் உட்பட)	இரட்சிப்பு	மன்னிப்பு	புதிய வாழ்வு	நித்திய வாழ்வு	நீதிமானாக்கப் படுதல்/நீதி
“அறிக்கையிடு”	*2*	*0*	*0*	*0*	*0*
“மனந்திரும்பு”	*0*	*3*	*0*	*0*	*0*
“விசுவாசி”	*6*	*1*	*2*	*7*	*4*
“விசுவாசம்” கொள்	*2*	*1*	*0*	*0*	*15*
“ஞானஸ்நானம்” பெறு	*2*	*3*	*2*	*0*	*0*

GTG LIBRARY- BANGALORE

அதன் கிரேக்க வடிவங்களின் தொடர்பு வார்த்தை வடிவங்களில் ஒன்றுடன்) என்ற வார்த்தையுடன் நான்கு முறை இணைக்கப்பட்டுள்ளது.

இரட்சிக்கப்படுவதற்கு விசுவாசத்தின் அவசியம் இருமுறை குறிப்பிடப் பட்டுள்ளது (எபே. 2:8; 1 பேது. 1:9), மற்றும் இருதயத்தைச் சுத்திகரித்தல் பற்றி நாம் ஒருமுறை வாசிக்கின்றோம் (அப். 15:9). நீதி மற்றும் நீதிமானாக்கப்படுதல் (இரு வார்த்தைகளுமே dikaios அல்லது அதன் தொடர்புடைய கிரேக்க வார்த்தை வடிவங்களில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளன) என்பவை விசுவாசத்துடன் பதினைந்து முறை இணைவு படுத்தப்பட்டுள்ளன (ரோமர் 3:22, 26, 28, 30; 4:5, 13-16; 5:1; 9:30; கலா. 2:16; 3:8, 24; பிலி. 3:9; எபி. 11:7; யாக். 2:24) மற்றும் இவை ஆபகூக் 2:4ல் இருந்து மேற்கோள்களாகப் புதிய ஏற்பாட்டில் மூன்று முறை வருகின்றன.

ஞானஸ்நானமானது இரு வசனங்களில் இரட்சிப்புடன் இணைவு படுத்தப்பட்டுள்ளது (மாற். 16:16; 1 பேது. 3:21), இது மன்னிப்பு மற்றும் பாவங்களில் இருந்து சுத்திகரிக்கப்படுதல் ஆகியவற்றுடன் மும்முறை இணைவு படுத்தப்பட்டுள்ளது (அப். 2:38; 22:16; கொலோ. 2:12, 13; மற்றும் எபே. 5:26ஐயும் காணவும்), மற்றும் இது புதிய வாழ்வுடன் இருமுறை இணைவு படுத்தப்பட்டுள்ளது (ரோமர் 6:4; கொலோ. 2:12, 13), மற்றும், ஞானஸ்நானத்தின் மறைமுகக் குறிப்பிடுதலான தண்ணீரை இயேசு புதிய பிறப்புடன் இணைவித்தார் (யோவா. 3:3-5; தீத்து 3:5ஐயும் காணவும்).

ஞானஸ்நானமானது, அறிக்கையிடுதல் மற்றும் மனந்திரும்புதல் ஆகியவற்றுடன் இணைவிக்கப்பட்டுள்ளதை விட அதிகமான முறைகள் இரட்சிப்பு, மன்னிப்பு மற்றும் புதிய வாழ்வு ஆகியவற்றுடன் அடிக்கடி அல்லது மிகவும் அடிக்கடி இணைவிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவு. ஆகையால், இரட்சிப்புக்கு அறிக்கையிடுதலும் மனந்திரும்புதலும் அவசியம் என்று ஏற்றுக் கொள்பவர்கள் ஞானஸ்நானத்தையும் அவசியமானதாகக் கண்ணோக்க வேண்டும். "Baptize" என்ற வார்த்தையின் வடிவங்கள் ''நம்பிக்கை'' அல்லது ''விசுவாசம்'' என்ற வார்த்தைகளுடன் இணைவிக்கப்பட்டுள்ளதைக் காட்டிலும் மன்னிப்பு மற்றும் புதிய வாழ்வு என்பவற்றுடன் மிகவும் அடிக்கடி இணைவிக்கப்பட்டுள்ளன.

சொற்றொடர்கள் ஒன்றுகூடித் தோன்றும் இடங்கள்

தேவைப்படும் பலவித பதில்செயல்கள் ஒன்றாகக் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. ஒரு இடத்தில், யோவானின் “ஞானஸ்நானத்துடன்” தொடர்புடைய வகையில் “அறிக்கையிடும்”படி மக்களுக்கு அறிவிக்கப் பட்டது (மாற். 1:5). பவுல், “விசுவாசித்தால்” என்ற வினைச் சொல்லுடன் “அறிக்கையிடுதலை” இருமுறை பயன்படுத்தினார் (ரோமர் 10:9, 10), மற்றும் பிலிப்பு, புதிய உடன்படிக்கையின் ''ஞானஸ்நானத்துடன்'' “அறிக்கையிடுதலை” ஒருமுறை குறிப்பிட்டார், இவ்வசனப் பகுதிக்குப் பலத்த கையெழுத்துப் பிரதியின் ஆதாரம் இல்லாதிருக்கலாம் (அப். 8:37). “அறிக்கையிடுதல்” என்பது “மனந்திரும்புதல்” என்பதுடன் இணைந்து வருவதில்லை.

GTG LIBRARY- BANGALORE

“மனந்திரும்பு” என்பது “விசுவாசியுங்கள்” என்பதுடன் இணைந்து ஒரு முறை வருகின்றது (மாற். 1:15), இது “விசுவாசம்” என்பதுடன் ஒருமுறையும் (அப். 20:21), யோவானின் ‘‘ஞானஸ்நானத்துடன்’’ தொடர்புடைய வகையில் நான்கு முறைகளும் (மாற். 1:4; லூக். 3:3; அப். 13:24; 19:4) மற்றும் புது உடன்படிக்கையின் ஞானஸ்நானத்துடன் தொடர்புடைய வகையில் ஒரு முறையும் (அப். 2:38) வருகின்றது.

‘‘விசுவாசி’’ என்ற வார்த்தை யோவானின் ஞானஸ்நானத்துடன் தொடர்புடைய வகையில், வரப் போகிற கிறிஸ்துவை எதிர்பார்த்திருக்கும் நிகழ்வில் ஒருமுறை வருகின்றது (அப். 19:4). இது புது உடன்படிக்கை ஞானஸ்நானத்தின் நேரடிக் கூற்றுக்களுடன் இணைந்து நான்கு முறை வருகின்றது (மாற். 16:16; அப். 8: 12, 13; 18:8). (இது இரு முறை மறைவான கருத்தாக வருகின்றது [அப். 2:38, 44; 16:33, 34.]) இது இன்னும் ஒருமுறை வருகின்றது (அப். 8:37) ஆனால் இதன் கையெழுத்துப் பிரதி கேள்விக்குட்பட்டதாக உள்ளது. “விசுவாசம்” என்பது ஞானஸ்நானத்துடன் இருமுறை வருகின்றது (கலா. 3:26, 27; கொலோ. 2:12).

வேதாகமச் சொற்றொடர்களின் மேற்கண்ட ஒப்பீடானது, “நம்பிக்கை” மற்றும் “விசுவாசம்” என்ற வார்த்தைகள் ஞானஸ்நானத்துடன் இணைந்து மிகவும் அடிக்கடியும், மனந்திரும்புதல் மற்றும் அறிக்கையிடுதல் என்பவற்றுடன் மிகக் குறைவான முறைகள் இணைந்து வருவதை வெளிப்படுத்துகின்றது.

தொகுப்புரை

புதிய ஏற்பாட்டில் “ஞானஸ்நானம்” என்ற வார்த்தை அடிக்கடி வருவது மட்டுமின்றி, ஞானஸ்நானம் என்ற கருத்து தேவனிடத்தில் தொடக்கம் பெற்றதாகவும், இயேசுவால் போதிக்கப்பட்டதாகவும் உள்ளது.

ஞானஸ்நானம் என்பது புதிய ஏற்பாட்டில் சிறிய பாடம் அல்ல என்று மட்டுமே ஒருவர் முடிவு செய்ய இயலும். முக்கியமானவை என்று பொதுவாக ஒப்புக் கொள்ளப்படும் பிற தேவைக் கருத்துக்களை விட இது மிகவும் அடிக்கடி குறிப்பிடப்படுகின்றது. புதிய ஏற்பாட்டைப் பற்றிய ஒரு சுருக்கமான படிப்புக் கூட, ஞானஸ்நானம் என்பது இயேசுவால் போதிக்கப் பட்டதையும், மீண்டும் மீண்டும் அது வருவதையும் உறுதிப்படுத்துகின்றது.

குறிப்புகள்

[1]Henry Wansbrough, gen. ed., The New Jerusalem Bible (New York: Doubleday, 1985), 1875, n6a. [2]இது ஆபகூக் 2:4ல் இருந்து புதிய ஏற்பாட்டில் வருகின்ற மேற்கோள்களின் மூன்று எண்ணிக்கைகளை (ரோமர் 1:17; கலா. 3:11; எபி. 10:38) உள்ளடக்குவ தில்லை. இவ்விடங்களில், நீதிமான்கள் விசுவாசத்தினால் வாழ்வார்கள் என்று காண்பிக்கப்பட்டுள்ளது. [3]மனிதர் முன்பாக அவரை மறுதலித்தல் என்பது துன்பத்திலிருந்து தப்பிப்பதற்காக அவரை மறுதலித்தல் என்று அர்த்தப்படுவதாய் இருக்க வேண்டும் (மத். 10:33; லூக். 12:9 ஆகியவற்றைக் காணவும்.)

GTG LIBRARY- BANGALORE

அன்பு, கிருபை, இரக்கம் மற்றும் ஞானஸ்நானம்

அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும் போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார் (ரோமர் 5:6-8).

தேவனுடைய அன்பு, கிருபை மற்றும் இரக்கம் ஆகியவை இல்லையென்றால், நாம் அனைவரும் நித்திய தண்டனை என்ற அழிவுக்கு உட்பட்டிருப்போம். நமது இரட்சிப்புக்கு நம்மைத் தகுதியாக்கிக் கொள்ளவோ அல்லது நமது மன்னிப்பை உண்டாக்கிக் கொள்ளவோ நம்மால் எதுவும் செய்ய இயலாது. தேவனுடைய இயல்பும் செயல்பாடுகளுமே நமது இரட்சிப்பை நமக்களித்துள்ளன.

தேவனுடைய அன்பு

''தேவன் அன்பாகவே இருக்கிறார்'' *(1 யோவா. 4:8ஆ)* என்ற விளக்கத்தில் தேவனைப் பற்றிய விவரிப்பு ஒன்று காணப்படுகின்றது. தேவனுடைய அன்புதான் அவர் தம் குமாரனான இயேசுவை நமது பாவங்களுக்காக மரிக்கும்படி ஒப்புக் கொடுக்க அவரைத் தூண்டிற்று. நாம் யாராக அல்லது என்னவாக இருக்கின்றோம் என்பதாலோ அல்லது நமது நற்செயல்களினாலோ நாம் இரட்சிக்கப்படவில்லை ஆனால் தேவன் யாராக இருக்கின்றார் என்பதாலேயே நாம் இரட்சிக்கப்பட்டுள்ளோம். நாம் பாவிகளாயிருக்கையில், மன்னிப்புப் பெறத் தகுதியற்றவர்களாய், தண்டனைக்கு ஏற்றவர்களாய் இருக்கையில், தேவன் நமக்காகச் செயல்பட்டார்:

> நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம் மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார் *(ரோமர் 5:8).*

GTG LIBRARY- BANGALORE

தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை ... தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவா. 3:16).

நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது (1 யோவா. 4:10).

அவருடைய அன்புக்கு நாம் அருகதையற்றவர்களாயிருப்பினும், தேவனுடைய அன்பின் செயல்களினுடைய பயனைப் பெற்றுக் கொள்ளும் படியாக நாம் தேவனுக்குப் பதில்செயல் செய்ய வேண்டும். அன்புதான் தேவனை நமக்கு ஊழியம் செய்யும் செயல்பாட்டில் ஊக்குவித்தது. தேவன் மேல் நாம் கொள்ளும் அன்பானது நம்மை அவருக்குக் கீழ்ப்படுத்தும்படி தூண்ட வேண்டும் (யோவா. 14:15, 21, 23). அவர் நீதிமான்களின் பயனுக்கென்றுதான் செயல்படுகின்றார், ஆனால் துன்மார்க்கரை அவர் கவனித்துக் கேட்க மாட்டார்: “கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது” (1 பேது. 3:12). தேவன் தீமையைப் பாராட்டு வதில்லை என்பதால் இது உண்மையாய் உள்ளது. அவருடைய குமாரனைக் குறித்து அவர், “நீர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்” (எபி. 1:9அ) என்று உரைத்தார். அவர், ‘‘அக்கிரமக்காரர் யாவரையும்’’ வெறுக்கின்றார் (சங். 5:5ஆ).

இயேசுவில் நம்பிக்கை வைக்காமல், தேவனுடைய அன்புக்குப் பதில்செயல் செய்யாமல் இருக்கின்ற துன்மார்க்கம் செய்பவர் தேவனு டைய கோபத்தின் கீழ் நிலைத்திருக்கின்றார். யோவான் 3:36, “குமாரனிடத் தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன் மேல் நிலைநிற்கும்” என்று கூறுகின்றது. ரோமர் 2:5ல் பவுல், ‘‘உன் மனக் கடினத்திற்கும், குணப்படாத இருதயத்திற்கும் ஏற்றபடி, தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாளிலே உனக்காகக் கோபாக்கினையைக் குவித்துக் கொள்ளுகிறாயே’’ என்று எச்சரித்தார். (ரோமர் 1:18; எபே. 5:6; வெளி. 14:9, 10 ஆகிய வசனங்களை யும் காணவும்.)

தேவனுடைய அன்பும் கோபாக்கினையும் நேர்மாறானவைகளாய் இருப்பதில்லை, ஆனால் அவருடைய கோபாக்கினை என்பது அவருடைய அன்பின் விளைவாகவே இருக்கின்றது. இது, நாம் சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் எவ்விதம் பதில்செயல் செய்யலாம் என்பதைக்கொண்டு விவரிக்கப்பட முடியும். தனது கணவரை மிகவும் ஆழமான வகையில் அன்பு செய்கின்ற ஒரு பெண், அவர் இன்னொரு பெண்ணின்மேல் விருப்பம் கொள்ளும் போது பெரிதும் கலக்கம் அடைகின்றாள். அவள் தன் கணவர் மீது அன்பற்றவளாய் இருந்தால், அவர் எத்தனை பெண்களை விரும்பினா லும் அதற்காக அவள் அவர்மீது கோபம் கொள்ள மாட்டாள். தேவனுடைய

GTG LIBRARY- BANGALORE

அன்பு என்பது அவருடைய வைராக்கியம் மற்றும் கோபாக்கினை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருக்கலாம் (யாத். 20:5; உபா. 4:24).

நாம் தேவனுடைய அன்பில் எவ்விதம் நிலைத்திருக்க முடியும் என்பதை இயேசு நமக்குக் காண்பித்து, கூறியிருக்கின்றார். அவர், "பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்" (யோவா. 15:9, 10) என்று உரைத்தார்.

தேவனுடைய அன்பு நிபந்தனைக்குட்பட்டதாய் உள்ளது. விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவை தேவன் நம்மை இரட்சிக்குமுன்பு நாம் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகளாக அவரால் அமைக்கப்பட்டுள்ளன. நாம் இரட்சிக்கப்படுவதற்கு, அவர் மேல் நாம் கொண்டுள்ள அன்பின் விளைவாக இவற்றைச் செய்ய வேண்டும். அவருடைய அன்பை விரும்புவதற்காக அல்ல ஆனால் அவருடைய அன்பின் பயனை அடைவதற்காகவே நாம் இந்த நிபந்தனைகளை நிறைவேற்றுகின்றோம். நமது செயல் எதுவும் தேவனுடைய அன்பை ஈட்ட முடியாது; இருப்பினும், நமக்கு அவர் பலன் அளிப்பதற்கு முன்பு நாம் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகளை அவர் குறிப்பிட்டுள்ளதால், நாம் அந்த நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். "தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி" (எபி. 5:9) என்று வாசிக்கின்றோம்.

தேவனுடைய கிருபை

"கிருபை" என்று மிகவும் அடிக்கடி மொழிபெயர்க்கப்பட்டுள்ள *charis* (எபி.: *hen*) என்ற கிரேக்க வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் 155 முறைகள் வருகின்றன. இந்த வார்த்தையில் இருந்துதான் நாம் "charm" (வசீகரம்) என்ற வார்த்தையையும் அதன் இணை வார்த்தைகளையும் பெறுகின்றோம். நமது இரட்சிப்பானது தேவனுடைய இந்தப் பண்பையே சார்ந்துள்ளது. *The New International Dictionary of the Bible* என்ற நூலில் உள்ள ஒரு பாடத்தில் "கிருபை" என்பதற்கான விளக்கம் பின்வருமாறு தரப்பட்டுள்ளது:

> (1) சரியாகக் கூற வேண்டுமென்றால், இது மகிழ்ச்சி, சந்தோஷம், அக்களிப்பு, வசீகரம், இனிமை, அன்புக்குரிய தன்மை ஆகியவற்றைக் கொடுப்பதாயுள்ளது; (2) நல்ல சித்தம், அன்புள்ள இரக்கம், இரக்கம் முதலியன; (3) எஜமானர் தம் அடிமையின் மீது கொண்டுள்ள இரக்கம். இவ்விதமாக, ஒப்புவமையில் கிருபை என்பது மனிதரிடம் தேவன் கொண்டுள்ள இரக்கத்தன்மையைக் குறிப்பிட வந்துள்ளது (லூக். 1:30). [புதிய ஏற்பாட்டின்] எழுத்தாளர்கள் தங்கள் கடிதங்கள் பலவற்றின் முடிவில் தங்கள் வாசகர்கள் மீது தேவனுடைய கிருபையுள்ள தயவை அடிக்கடி வேண்டுகின்றனர் (ரோமர் 16:20; பிலி. 4:23; கொலோ. [1:2]; 1 தெச. 5:28), கூடுதலாக, "கிருபை" என்ற வார்த்தையானது, இரக்கத்தைப் பெறத் தகுதியற்றவர்களுக்குக்

GTG LIBRARY- BANGALORE

காண்பிக்கப்படும் தயவு என்ற கருத்தை விளக்க அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றது: ஆகையால் தகுதியற்றவர்கள் மேல் தயவு, விசேஷமாக இயேசு கிறிஸ்துவின் மூலமாக பாவிகள் மேல் பொழியப்படும் தயவின் கிருபையினுடைய தன்மை அல்லது அளவை (எபே. 2:4-5) இது குறிக்கின்றது. ஆகையால், கிருபை என்பது, வீழ்ந்து போன மனிதர்கள் பெறத் தகுதியற்ற தேவன் காண்பிக்கும் தயவாக உள்ளது. பிதாவானவருடைய ஒரே பேறான, கிருபையும் சத்தியமும் நிறைந்தவரான (யோவான் 1:14) கிறிஸ்துவை மனிதரின் இரட்சிப்புக்காக தேவன் அளித்துள்ளதாக - உள்ளது.[1]

கிருபையின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்திக் கூற இயலாது. நாம் பாவத்தினால் கடன்பட்டவர்களாகவும், நமது பாவத்திற்கு எதையும் விலையாகச் செலுத்த முடியாதவர்களாகவும் இருக்கின்றோம். கடனின் அளவு என்பது வேறுபாடு ஒன்றை ஏற்படுத்துவதில்லை. ஒருவர் பத்தாயிரம் ரூபாய்களும் இன்னொருவர் பத்து ரூபாயும் கடன்பட்டு, இருவருமே அக்கடனைத் திருப்பிச் செலுத்த வகையற்றிருந்தால், இருவருமே கடனாளிகளாய் இருக்கின்றனர். இயேசுவின் இரத்தம் இல்லாமல், யாவரும் பாவிகளாய் உள்ளனர் (ரோமர் 3:9, 10, 23), மரணத்திற்குப் பாத்திரராய் உள்ளனர் (ரோமர் 6:23; யாக். 1:15) மற்றும் நமது பாவங்களுக்கு விலை செலுத்த நம்மிடம் எதுவும் இல்லாதவர்களாகவே நாம் இருக்கின்றோம்.

பத்து ரூபாய்க் கடன் மன்னிக்கப்பட்ட ஒரு நபரும், பத்தாயிரம் ரூபாய்க் கடன் மன்னிக்கப்பட்ட ஒரு நபரும் ஆகிய இருவரும் சமமாகவே கடனிலிருந்து விடுதலையானவர்களாய் உள்ளனர். ஒரு பாவம் அல்லது பல பாவங்கள் மன்னிக்கப்பட்ட யாவருமே சமமாக மன்னிக்கப்பட்டு, தங்கள் பாவங்களில் இருந்து சம அளவில் விடுதலை பெற்றவர்களாகவே இருக்கின் றனர். பாவம் நிறைந்த பெண்ணுடன் இயேசு பேசியதை பரிசேயர் ஒருவர் விமர்சித்த பொழுது, இயேசு, "… இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது; இவள் மிகவும் அன்புகூர்ந்தாளே. எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்புகூருவான் … ." (லூக். 7:47) என்று உரைத்தார். இதுவே தேவனுடைய கிருபையின் வனப்பாக உள்ளது.

கிருபையினால் நிறைந்தவரான (யோவா. 1:14) இயேசு நமக்குக் கிருபையை அளித்திருக்கின்றார் (யோவா. 1:16). மனிதனின் செயல்கள் யாவும் மனிதனின் ஒரு பாவக் கறையை நீக்க முடியாது (எபே. 2:8). மோசேயின் நியாயப்பிரமாணமும் (யோவா. 1:17) பாவத்தை எடுத்துப் போட முடியாது, ஏனெனில் அது கிருபையை அளித்ததில்லை (கலா. 5:4). பவுல், "நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை; நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே" (கலா. 2:21) என்று எழுதினார்.

"அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு" (ரோமர் 3:24) நமது நீதியும் இரட்சிப்பும் அளிக்கப்படுகின்றது. பின்வருமாறு நாம் வாசிக்கின்றோம்:

நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல், கிருபைக்குக்

GTG LIBRARY- BANGALORE

கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது (ரோமர் 6:14).

அது கிருபையினாலே உண்டாயிருந்தால் கிரியைகளினாலே உண்டாயிராது; அப்படியல்லவென்றால், கிருபையானது கிருபை யல்லவே (ரோமர் 11:6).

கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; (எபே. 2:8, 9).

இரட்சிப்பு என்பது நமது செயல்களினால் அல்ல, ஆனால் தேவனுடைய செயலினாலேயே அளிக்கப்பட்டுள்ளது.

தேவனுடைய கிருபை, விலையேறப் பெற்ற அவருடைய தயவு என்பது ஒவ்வொருவருக்கும் கிடைத்திருக்க (தீத்து 2:11), எல்லாரும் அவருடைய கிருபையைப் பெறுவதில்லை. ஏனென்றால் கிருபையானது இயேசுவின் மூலம் வந்துள்ளது (யோவா. 1:17; ரோமர் 5:15), அவரைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் (யோவா. 1:11; 12:48) தேவனுடைய கிருபையைப் புறக்கணிக்கின்றனர். தேவனுடைய கிருபையின் காரணமாக இயேசு ஒருவரே தமது இரத்தத்தினால் நமது இரட்சிப்புக்கு விலை செலுத்தினார் (அப். 20:28; எபி. 9:14; 10:19, 20; 1 பேது. 1:17-19). ஆகையால், அவர் தாம் தேர்ந்துகொள்ளும் எவருக்கும், தாம் தேர்ந்துகொள்ளும் நிபந்தனைகள் எவற்றினாலும் இரட்சிப்பளிக்க உரிமை கொண்டுள்ளார் (எபி. 5:9).

ரோமர் 6ல் பவுல், "கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலை நிற்கலாம் என்று சொல்லுவோமா?"; "பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?" (வ. 1, 2) என்று கேட்டார். இந்தக் கேள்விகள், நாம் கிருபைக்குள் நுழையும் பொழுது பாவத்திற்கு மரித்து, பாவத்தை வழக்கமாய்ச் செய்வதை நிறுத்த வேண்டும் என்று மறைமுகமாய் உணர்த்துகின்றன. இது நடக்க வேண்டிய காலகட்டத்தைப் பவுல் இன்னொரு கேள்வியைக் கேட்பதன் மூலம் அடையாளப்படுத்தினார்: "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக் கிறீர்களா?" (வ. 3). பிறகு அவர், "மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்" (வ. 4) என்று எழுதினார்.

பவுலின் வார்த்தைகளிலிருந்து, நாம் ஞானஸ்நானம் பெறுகின்ற பொழுது தேவனுடைய கிருபைக்குள் பிரவேசிக்கின்றோம் என்று நாம் முடிவு செய்ய இயலும். நாம் இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெறுகின்ற பொழுது (ரோமர் 6:3), எபே. 1:7 மற்றும் 2 தீமோ. 2:1 ஆகியவற்றில் காணப்படுகின்றபடி இயேசுவுக்குள் இருக்கின்ற தேவகிருபையை நாம்

GTG LIBRARY- BANGALORE

பெற்றுக் கொள்ளுகின்றோம். இவ்வசனப் பகுதிகள் ஞானஸ்நானத்தை அவருடைய கிருபைக்குள் பிரவேசித்தலுடன் இணைவு படுத்துகின்றன. ஞானஸ்நானம் பெறாதிருக்கின்றவர்கள் கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கின்றனர், கிறிஸ்துவை விட்டுப் பிரிக்கப்பட்டுள்ளனர் (எபே. 2:12, 13) மற்றும் அவர்கள் கிறிஸ்துவுக்குள் உள்ள கிருபை (கலா. 5:4) இல்லாது இருக்கின்றனர். தேவனுடைய கிருபையானது ஞானஸ்நானத்தில் ஈட்டப் படுவதில்லை, ஆனால் ஒருவர் ஞானஸ்நானம் பெறும் பொழுது அவரது விசுவாசத்தினிமித்தம் அவர் அந்தக் கிருபையினுள் பிரவேசிக்கின்றார். நாம் பாவம் நிறைந்த வாழ்வைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு அவரது கிருபையின்மேல் சார்ந்திருக்க முடியாது. ஒரு தரம் “பரிசுத்தமாக்கப்பட்ட” பிறகு “மனப்பூர்வமாய்ப் பாவம் செய்கின்றவர்கள்” “கிருபையின் ஆவியை நிந்திக்கின்றனர்.” எபிரேயர் 10:26-29 பின்வருமாறு கூறுகின்றது:

> சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப் பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானா யிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள்.

தேவனுடைய இரக்கம்

“இரக்கம்” (கிரேக்கம்: வினைச் சொல் - *eleeo*; பெயர்ச் சொல் - *eleos*) என்பது ‘‘எதிராளி அல்லது சட்டத்தை மீறியவர் மீது விதிக்கப்படும் தண்டனையிலிருந்து பொறுமையாகச் சகித்து [விலக்குத் தந்து] இருத்தல்; பலவீனர், வியாதிப்பட்டவர் அல்லது ஏழைக்கு ஒருவர் உதவக்காரணமான பரிவிரக்கம்”[2] என்று அர்த்தப்படுகின்றது. மேலும் இது கொடுத்த கடனைத் தமக்குத் திருப்பிச் செலுத்துதலை நாடாமையையும் உள்ளடக்குகின்றது (மத். 18:33). கிருபை என்பது இரக்கத்தை உள்ளடக்கியதாய் இருந்தாலும், கிருபையானது இரக்கத்திற்கும் அப்பால் செல்லுகின்றது. கிருபை மற்றும் இரக்கம் ஆகிய இரண்டுமே தவறொன்றைத் தண்டிப்பதிலிருந்து விலகியிருக்கின்றன; இருப்பினும், கிருபையானது அதற்கு அப்பாலும் சென்று, தவறு செய்தவருக்கு உதவியளிக்கின்றது.

வீடில்லாத மனிதர் ஒருவர் வேண்டுமென்றே ஒரு வீட்டைச் சேதப்படுத்துவாரென்றால், அந்த வீட்டின் உரிமையாளர் அந்த மனிதரை நியாயப்படி தண்டித்து மற்றும்/அல்லது சேதாரத்திற்குரிய விலைக் கிரயத்தை செலுத்தும்படி நாடலாம். வீட்டின் உரிமையாளர் பணம் திருப்பிச் செலுத்தக் கட்டாயப்படுத்தாமலோ அல்லது தீங்கு செய்தவர் தண்டனை பெறுதலை வலியுறுத்தாமலோ அந்த உரிமையாளர் விலகியிருப்

GTG LIBRARY- BANGALORE

பாரென்றால், அவர் இரக்கம் காட்டுகின்றார். அந்த உரிமையாளர், சேதம் ஏற்படுத்திய மனிதரை மன்னித்து, அவர் வாழ ஒரு இடம் கொடுத்தா ரென்றால், அது கிருபையின் செயலாக உள்ளது.

தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிபவர்களுக்கு தண்டனை யிலிருந்து மன்னிப்பையும், விடுதலையையும் அவர் இரக்கம் நிறைந்த வகையில் ஏற்பாடு செய்துள்ளார். அவரது கிருபையின் காரணமாக, அவர் பரலோகத்தில் நித்திய ஜீவனை அளிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றார். தேவனுடைய இரக்கமானது, பாவிகளைத் தண்டிப்பதிலிருந்து அவரை விலக்கி வைத்துள்ளது மற்றும் அவரது கிருபையானது, (ஒருவர்) பெறத் தகுதியற்ற ஆசீர்வாதங்களை அளிக்க அவரைத் தூண்டுகின்றது.

“எல்லார் மேலும் இரக்கமாயிருக்கத் தக்கதாக, தேவன் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள்ளே அடைத்துப் போட்டார்” (ரோமர் 11:32). முன்பு கீழ்ப்படியாமல் இருந்து, பின்பு கீழ்ப்படிந்துள்ள பாவிகளுக்கு மன்னிப்பு வழங்குதல் இரக்கம் எனப்படுகின்றது. பவுல் தம்மை, இரக்கம் பெற்றிருந்த பிரதான பாவியென்று முன்னிறுத்தினார் (1 தீமோ. 1:15, 16). தேவனுடைய மன்னிப்பு மற்றும் இரக்கம் ஆகியவை பவுலுக்குத் தமஸ்கு நகரில் காண்பிக்கப்பட்டன. பவுலிடம் அனனியா, “இப்பொழுது நீ தாமதிக்கிற தென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு” (அப். 22:16) என்று கூறினார். பவுல் ஞானஸ்நானம் பெற்ற பொழுது, அவர் தேவனு டைய இரக்கத்தை ஈட்டவில்லை; ஆனால் அவர் தேவனுடைய கிருபை மற்றும் இரக்கத்தால் அளிக்கப்பட்டுள்ள மன்னிப்பிற்குள் பிரவேசித்தார்.

தொகுப்புரை

நாம் பாவிகளாய் இருந்த போதிலும், தேவனுடைய அன்பு, கிருபை மற்றும் இரக்கம் ஆகியவை நமக்கு உதவி செய்யும்படி அவரைத் தூண்டின. இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களைப் பெறத் தகுதியாகும்படி நாம் எதுவும் செய்ய முடியாது; இருப்பினும், இவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும். விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவை தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெறுவதற்குத் தகுதியுடைய சீர் பொருந்திய செயல்பாடுகள் அல்ல; மாறாக இவைகள், தேவன் தமது கிருபையிலும் இரக்கத்திலும் வாக்குத்தத்தம் செய்த தம் ஆசீர்வாதங்களை நமக்குத் தரும் முன்பு நாம் சந்திக்க வேண்டிய தேவைகளாக உள்ளன.

குறிப்புகள்

[1]J. D. Douglas and Merrill C. Tenney, eds., “grace,” in *The New International Dictionary of the Bible* (Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1987), 401. [2]J. D. Douglas and Merrill C. Tenney, eds., “mercy,” in *The New International Dictionary of the Bible* (Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1987), 641.

GTG LIBRARY- BANGALORE

விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம்

> எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப் படுகிறார்கள் ... கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார் (ரோமர் 3:23-26)

''விசுவாசத்தினால் மட்டும்'' இரட்சிப்பு என்ற உபதேசத்தை நம்புகின்றவர்கள், இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியமல்ல என்று வழக்கமாய்க் கூறுகின்றனர். அவர்கள், இரட்சிப்பிற்கான தேவனுடைய ஒரே நிபந்தனை என்ற வகையில் விசுவாசமானது மனிதரின் பகுதியில் வேறு எந்த ஒரு செயலையும் தவிர்த்து விடுகின்றது என்று வாதிடுகின்றனர். இதை அவர்கள் கோட்பாட்டில் எடுத்துரைத்தாலும், எப்பொழுதும் இதை அவர்கள் நடைமுறைப்படுத்துவதில்லை.

இரட்சிப்பு என்பது விசுவாசத்தின் அடிப்படையில் மட்டும் அமைந்திருந்தது என்றால், இரட்சிப்புக்கு அவசியமானவைகளாக வேறு எதுவும் போதிக்கப்படக் கூடாது. இது வேதாகமப் படிப்பு, போதனையைக் கவனித்தல், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல், "பாவிகளின் ஜெபத்தை" ஜெபித்து, ஒருவரின் இருதயத்தினுள் வருமாறு கிறிஸ்துவைக் கேட்டுக் கொள்ளுதல் ஆகிய எல்லாவற்றையும் தவிர்த்து விடும்.[1] இவைகள் யாவும், "விசுவாசம் மட்டும் போதும்" என்று போதிப்பவர்களால் விசுவாசத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது என்று வழக்கமாகக் கருதப்படுகின்றது. மேற் குறிப்பிட்ட மற்ற நிபந்தனைகளைக் காட்டிலும் அதிகம் தகுதியுடைய செயலாய் இல்லாது இருப்பதினால் ஞானஸ்நானத்தையும் விசுவாசத்தில் ஏன் உள்ளடக்கக் கூடாது? ஞானஸ்நானம் பெறுகின்றவர் நேரடியாக எதுவும் செய்வதில்லை, ஆனால் அவர் தமது உடல் தண்ணீருக்குள் இடப்பட்டு தண்ணீரை விட்டு வெளியில் கொண்டுவரும்படி அனு மதிக்கின்றார், அவ்வளவே - இது இயேசு சிலுவையில் தம்மை அறையும்படி தாம் எதுவும் செய்யாமல், மற்றவர்கள் தம்மைச் சிலுவையில் அறைய தம்மை ஒப்புக் கொடுத்த செயலைப் போன்றதாகும். நமது பாவங்களுக்காக அவர் இறந்த பின்னர், அவர் மற்றவர்களால் அடக்கம் பண்ணப்பட்டு,

GTG LIBRARY- BANGALORE

ஆவியானவரால் உயிர்த்தெழுப்பப்பட்டார் (ரோமர் 8:11).

விசுவாசம் கீழ்ப்படிதலை உள்ளடக்குகின்றதா?

"விசுவாசம்" மற்றும் "விசுவாசி" (வினைச்சொல்) என்ற வார்த்தைகள், "நம்பிக்கை மற்றும் நம்பகத் தன்மை" என்று விளக்கப்படக் கூடிய pisteuo என்ற வார்த்தையின் வடிவங்களில் இருந்து வருகின்றன. இதில் கீழ்ப்படிதலை விளைவிக்கின்ற ஒருவரின் நம்பிக்கைக்குப் பதில்செயல் புரியும் விருப்பமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. Pisteuo என்பதற்கு R. பல்ட்மேன் அவர்கள் பின்வரும் விளக்கம் கொடுத்தார்:

> ... "கீழ்ப்படிய." எபிரேயர் 11ம் அதிகாரமானது விசுவாசித்தல் என்றால் [பழைய ஏற்பாட்டு] பவுல் ரோமர் 1:8; 1 தெச. 1:8 (இ.வ. ரோமர் 15:18; 16:19)ல் காண்பிக்கப்படுவது போல கீழ்ப்படிதல் என்றே அர்த்தப்படுகின்றது. அவர் விசுவாசத்தின் கீழ்ப்படிதல் பற்றி ரோமர் 1:5 மற்றும் இ.வ. 10:3; 2 கொரி. 9:13லும் இதைப் பற்றிப் பேசுகின்றார்).[2]

"விசுவாசம்" மற்றும் "விசுவாசி" ஆகியவை மனரீதியான அல்லது உணர்வுப் பூர்வமான பதில்செயல்களைக் காட்டிலும் அதிகமானவற்றைச் சுட்டிக்காட்டுகின்றன. "கீழ்ப்படியாதவர்கள்," "கீழ்ப்படியாமை" மற்றும் "கீழ்ப்படிதலின்மை" ஆகியவைகள் இவைகளுக்கு எதிராக உபயோகப் படுத்தப்பட்டிருக்கின்றன இந்த வார்த்தைகள் apeithia[3] என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. யோவான் 3:36ல், "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் [கிரேக்கம்: pisteuo] நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ/ குமாரனுக்குக் கீழ்ப்படியாதவனோ [கிரேக்கம்: apeitheo] ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன் மேல் நிலை நிற்கும்" என்று எடுத்துரைக்கப்படுகின்றது. pisteuo ("விசுவாசித்தல்") என்பதன் நேர்மறைப் பயன்பாடானது apeitheo ("கீழ்ப்படியாமை") என்ற எதிர்மறைப் பயன்பாட்டிற்கு நேர்மாறானதாக உள்ளது, இது "விசுவாசம்" மற்றும் "விசுவாசித்தல்" என்ற வார்த்தைகளினால் சுட்டிக்காட்டப்படும் செயல், செயல்படுவதற்குத் தூண்டப்படும் போது நிறைவடைகிறது என்பதை உணர்த்தும் தெளிவான ஆதாரமாக உள்ளது.

எபிரேயர் 3:18, 19ல் ஒரு ஒப்பீடு உள்ளது: "பின்னும், என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று அவர் யாரைக் குறித்து ஆணையிட்டார்? கீழ்ப்படியாதவர்களைக் [கிரேக்கம்: apeitheo] குறித்தல்லவா? ஆதலால், அவிசுவாசத்தினாலே [கிரேக்கம்: apisteo] அவர்கள் அதில் பிரவேசிக்கக் கூடாமற் போனார்களென்று பார்க்கிறோம்." இவ்வசனப் பகுதி, கானானைக் கைப்பற்றும்படி அங்கு செல்லாமலிருந்து இஸ்ரவேலர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனதைக் குறிப்பிடு கின்றது. கிறிஸ்தவர்கள் "அவிசுவாசமுள்ள இருதயம்" (எபி. 3:12-15)

GTG LIBRARY- BANGALORE

உடையவர்களாய் இல்லாதிருக்கும்படி எச்சரிக்க இஸ்ரவேலர்கள் ஒரு உதாரணமாய்ப் பயன்படுத்தப்பட்டனர் (எபி. 3:9-11, 16-19). இஸ்ரவேலர்கள் "விசுவாசமில்லாமல் [கிரேக்கம்: pistis] கேட்டபடியால்" (எபி. 4:2) அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட செய்தி பயனற்றதாகியது. அவர்களைக் கீழ்ப்படிதலுக்குள் கொண்டு வரக் கூடிய விசுவாசம் அவர்களிடத்தில் இல்லாத காரணத்தினால் அவர்கள் தேவனுடைய பலனைப் பெறத் தவறி விட்டனர். அவர்கள் "கீழ்ப்படியாமையினால்" [கிரேக்கம்: apeithia] தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசிக்கத் தவறி விட்டனர் என்று எபி. 4:6 கூறுகின்றது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், அவர்களுடைய "கீழ்ப்படியாமையின் [கிரேக்க: apeithia] உதாரணத்தை" பின்பற்றாதிருக்கும்படி கிறிஸ்தவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றார் (எபி. 4:11). KJVயில் apeithia என்ற வார்த்தை வடிவங்கள் "கீழ்ப்படியாமை" என்று மொழிபெயர்க்கப்படுவதற்குப் பதிலாக எபி. 4:6, 11ல் அவிசுவாசம் என்றும் மற்றும் யோவான் 3:36ல் "விசுவாசியாதவன்" என்றும் நியாயமற்ற வகையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

கீழ்ப்படிதலின்றி விசுவாசம் என்பது முழுமையற்றதாய் உள்ளது என்று இவ்வசனப் பகுதிகள் தெளிவாய்க் காண்பிக்கின்றன. விசுவாசியாதவர்கள் என்பவர்கள் கீழ்ப்படியாதவர்களாய் இருக்கையில், விசுவாசம் கொண்டவர்கள் கீழ்ப்படிந்திருந்தவர்களாய் இருந்தனர். கீழ்ப்படிதலுக்கு வழி நடத்துகின்ற விசுவாசமே பலன்பெறும் விசுவாசமாயிருந்தது.

விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிப்பு உள்ளதா?

நற்செயல்களில் அடிப்படையில் இரட்சிப்பு என்ற உபதேசமான இன்னொரு புறக்கோடியான நிலையை எதிர்த்துப் போராடுவதற்காக மார்ட்டின் லூத்தர் "விசுவாசம் மட்டும்" போதும் என்ற உபதேசத்தை வடிவமைத்திருக்கலாம். அவர் தம் மொழிபெயர்ப்பில், ரோமர் 3:28ல் "விசுவாசம்" என்ற வார்த்தைக்குப் பிறகு "மட்டும்" என்ற வார்த்தையை உட்புகுத்தினார். இது புரொட்டஸ்டண்டு சபைகள் பலவற்றில் அடிப்படை உபதேசமாக இருந்துள்ளது. பெயர்க்குழுக் கூட்டத்தின் சட்ட புத்தகமான *The Book of Discipline* (ஒழுங்கு முறையின் புத்தகம்) என்ற நூலில் பின்வருமாறு கூறப்படுகின்றது: "ஆகையால், நாம் விசுவாசத்தினால் மட்டுமே நீதிமானாக்கப்படுகின்றோம் என்பது முழுமையானதும் ஆறுதல் தருவதாகவும் உள்ளது."[4]

வேதாகமமானது "விசுவாசம் மட்டும்" போதும் என்றோ அல்லது "செயல்கள் மட்டும்" போதும் என்றோ போதிப்பதில்லை, ஆனால் "அன்பினால் கிரியை செய்யும் விசுவாசம்" (கலா. 5:6) பற்றிப் போதிக்கின்றது. எபி. 11:6ல் இந்த சத்தியம் முன் வைக்கப்படுகின்றது: "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகின்றவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க

GTG LIBRARY- BANGALORE

வேண்டும்."[5] தேவன் இருக்கிறார் என்று விசுவாசிப்பது மட்டுமல்ல, ஆனால் அவரைப் பிரியப்படுத்துவதற்கு நாம் "அவரைத் தேட" வேண்டும் என்பது அவசியமாகும். "தேடுதல்" என்பது மனித முயற்சியை மறைமுகமாய்க் குறிப்பிடுகின்றது.

பிசாசுகள் நடுங்கப் போதுமான அளவுக்கு விசுவாசிக்கின்றன என்று யாக்கோபு சுட்டிக்காட்டினார் (யாக். 2:19). அவர், "அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலே தான் செத்ததாயிருக்கும்" (யாக். 2:17; வ. 20, 26ஐயும் காணவும்) என்று கூறினார். தேவனுடைய பார்வையில் நீதிமானாக்கப்படுதல் என்பது விசுவாசத்தின் மூலமாக மட்டும் வருவதில்லை: "ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே" (யாக். 2:24).

இயேசுவில் கொண்டுள்ள விசுவாசத்தின் மூலம் மட்டுமே இயேசுவுக்குக் கீழ்ப்படிதல் வர முடியுமென்பதால் இயேசுவில் விசுவாசம் கொள்ளுதல் என்பது முக்கியமானதாக உள்ளது (யோவா. 3:36). ஒரு நபர் தனது வீட்டிலிருந்து தொலை தூரத்தில் உள்ள ஒரு நாட்டில் தனது நண்பர்களைக் காணச் சென்றிருக்கும் பொழுது வியாதிப்படுகின்றார் என்று வைத்துக் கொள்வோம். அவர் எந்த மருத்துவரை நம்புவது என்று அறியாததால் ஒரு மருத்துவரிடம் செல்ல மறுத்து விடுகின்றார். இருப்பினும், அவரது நண்பர் மருத்துவரைப் பரிந்துரை செய்யும் பொழுது அவர் மகிழ்வுடன் அந்த மருத்துவரிடம் சென்று, அவர் மீது கொண்ட நம்பிக்கையால் அவர் குறிப்பிட்ட மருந்தை அருந்துகின்றார். இயேசுவில் விசுவாசம் கொண்டவர்களைப் பற்றிய விஷயத்திலும் இதுவே உண்மையாக உள்ளது. அவரை விசுவாசிக்கின்றவர்கள் அவருக்குக் கீழ்ப்படிவார்கள் (மத். 7:24-27) மற்றும் இவ்விதமாக அவர்கள் நித்திய இரட்சிப்பைப் பெறுவார்கள் (எபி. 5:9).

செயல்களினால் இரட்சிப்பு உண்டா?

பவுலும் யாக்கோபும் "விசுவாசம்" மற்றும் "செயல்கள்" (ரோமர் 3:28; யாக். 2:24) பற்றிய தங்களது போதனையில் முரண்படுவதாகச் சிலர் முடிவு செய்துள்ளனர். பவுலும் யாக்கோபும் ஒரே வகையான செயல்களைப் பற்றி எழுதியிருந்தால், நாம் நம்பிக்கையற்ற ஒரு முரண்பாட்டையே காண்போம். இருப்பினும், பவுல் நீதிமானாக்கப்படுவதற்குச் சுய சாதனையின் கிரியைகளைச் செய்தல் பற்றி எழுதியிருக்கையில், யாக்கோபு, நீதியை அளிக்க இயேசு செய்துள்ளவற்றின் மீதுள்ள விசுவாசத்தின் அடிப்படையில் செய்யப்படும் கிரியைகளைக் குறித்து எழுதினார்.

இவ்விரு வகையான செயல்களுக்கும் நல்லதொரு எடுத்துக் காட்டானது எரிகோவின் மதில்கள் அழிக்கப்பட்டதில் காணப்படுகின்றது. அந்த மதில்கள் விழக் காரணமாயிருந்தது என்ன? தேவனுடைய செயலினால் மற்றும் அவருடைய செயலினால் மட்டுமே. இஸ்ரவேலர்கள் அணி வகுத்துச் சென்றதோ அல்லது கூக்குரலிட்டதோ அச்சுவர்கள் இடிந்து நொறுங்கக் காரணமாயிருக்கவில்லை. இஸ்ரவேலரின் செயலின்

GTG LIBRARY- BANGALORE

அடிப்படையில் அந்த மதில்கள் விழுந்திருந்தனவென்றால், மக்கள் இடிக்கும் கருவிகளையும், மண் வெட்டிகளையும், கொந்தளங்களையும் பயன்படுத்தி அந்த மதில்களை வீழ்த்தியிருக்க வேண்டும். இப்படிப்பட்ட செயலையே பவுல் ''ஒருவனும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல'' (எபே. 2:9) என்று எழுதும் பொழுது அர்த்தப்படுத்தினார்.

''விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள் ஏழு நாள் சுற்றி வரப்பட்டு விழுந்தது'' (எபி. 11:30). இஸ்ரவேலர்களின் விசுவாசத்தின் அடிப்படையிலான அவர்களின் செயல்பாடானது யாக்கோபு விவாதித்த செயல்களின் விவரிப்பாக உள்ளது. அவர்களின் செயல்பாடானது அவர்களால் செய்ய முடிந்தவற்றின் மீதல்ல, ஆனால் தேவன் செய்வதாகக் கூறியிருந்த வாக்குத்தத்தத்தின் மீது கொண்ட விசுவாசத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது.

ஆசீர்வாதங்களை உண்டாக்கும் செயல்களின் வகையில் ஞானஸ்நானத்தை வைக்க முடியாது. விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவற்றைப் போலவே ஞானஸ்நானமும் பாவங்களை நீக்குவதற்கான உள்ளான திறன் எதையும் கொண்டிருப்பதில்லை. ஞானஸ்நானம் என்பது சுயசாதனையின் செயலாய் இருந்தால், இரட்சிப்பு மற்றும் பாவமன்னிப்புக்கென்று எதையேனும் செய்வதிலிருந்து அது விலக்கப்பட முடிந்திருக்கும். பாவங்களை நீக்கும் வல்லமையானது தண்ணீரிலோ, ஞானஸ்நானத்தைச் செய்விக்கிறவரிடத்திலோ அல்லது ஞானஸ்நானம் பெறத் தன்னைக் கீழ்ப்படுத்துகின்றவரிடத்திலோ இருப்பதில்லை. இயேசுவின் இரத்தம் மட்டுமே அந்த வல்லமையைக் கொண்டுள்ளது (மத். 26:28; எபி. 9:22). எரிகோவின் மதில்களைக் குறித்து இஸ்ரவேலரின் செயல்பாட்டில் இருந்ததைப் போலவே ஞானஸ்நானத்திலும் உள்ளது: ஈடுபட்டுள்ளவர்களின் செயல்களோ அல்லது நடவடிக்கைகளோ விரும்புகின்ற ஆசீர்வாதத்தை உண்டாக்க முடியாது.

தேவனுடைய வாக்குத்தத்தத்தின் மீது இஸ்ரவேலர்கள் கொண்ட விசுவாசமானது அவரது அறிவுறுத்தலுக்குக் கீழ்ப்படியும்படி அவர்களைத் தூண்டும் வரையிலும் தேவன் இஸ்ரவேல் மக்களை ஆசீர்வதிக்கவில்லை. தேவன் தாம் பலனளிக்கும் விசுவாசத்திற்கு இதை ஒரு முன்மாதிரியாகக் கொடுத்துள்ளார் (எபி. 11:30).

ஞானஸ்நானத்தின் செயல்பாடும் இதற்கு இணையாகவே உள்ளது. பவுல், ''ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாயும் இருக்கிறீர்கள்'' (கொலோ. 2:12) என்று எழுதினார். இதே வழி முறையில், இஸ்ரவேல் மக்களின் விசுவாசம் மற்றும் தேவனுடைய சித்தத்திற்கு அவர்களின் கீழ்ப்படிதலுள்ள பதில்செயல் ஆகியவற்றின் காரணமாக தேவன் இஸ்ரவேலருக்குப் பதில்செயல் செய்தார். அவர்களின் அணிவகுத்துச் செல்லுதல், சத்தமிடுதல் மற்றும் எக்காளங்கள் ஊதுதல் ஆகியவற்றிற்குத் தேவன் அவர்களுக்குப் பலன் அளித்தது போலவே (யோசு.

GTG LIBRARY- BANGALORE

6:1-20), நாம் ஞானஸ்நானத்தில் இயேசுவுடன் அடக்கம் பண்ணப்படும் பொழுது தேவனுடைய செயலின் மீதுள்ள நமது விசுவாசத்தின் காரணமாக அவர் நமது பாவங்களை மன்னிப்பார் (மாற். *16:16;* அப். *2:38; 22:16;* கொலோ. *2:12, 13).*

இஸ்ரவேலர்களின் செயல்பாடுகளில், பலனைப் பெறுவதற்கான உள்ளான திறன் எதுவும் இருந்ததில்லை, மற்றும் நாம் ஞானஸ்நானம் பெறும் செயலும் நம்மை இரட்சிப்பதற்கான உள்ளான திறன் எதுவும் கொண்டிருப்பதில்லை. அவர்கள் செய்த எச்செயலின் மூலமாகவும் அவர்களின் ஆசீர்வாதம் சாதிக்கப்படவில்லை, மற்றும் நாம் செய்கின்ற எச்செயலின் மூலமாகவும் நமக்கு ஆசீர்வாதம் கொண்டு வரப்படுவதில்லை. இருப்பினும், தேவன் செய்திருந்த வாக்குத்தத்தத்தின் மேல் இஸ்ரவேலர்கள் கொண்டிருந்த விசுவாசமானது கீழ்ப்படிதலில் வெளிப்படுத்தப்படும் வரையிலும் அவர்களுக்குப் பலன் அளிக்கப்படவில்லை; அது போலவே, தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளவற்றின் மீதான நமது விசுவாசம் ஞானஸ்நானத்தில் வெளிப்படுத்தப்படும் வரையிலும் நாம் பலன் அளிக்கப்படுவதில்லை. நாம் நமது செயல்களினால் இரட்சிக்கப் படுவதில்லை. நாம் செய்கின்ற எதுவும் நமது இரட்சிப்பைச் சாதிக்க முடியாது, ஏனெனில் அது இயேசுவால் சிலுவையில் சாதிக்கப்பட்டாயிற்று. நாம், சிலுவையில் அவரது மரணத்தினால் உண்டாக்கப்பட்ட மன்னிப்பைப் பெறுவதற்கு விசுவாசத்தினால் தூண்டப்பட்ட செயலின் மூலம் இரட்சிக்கப்படுகின்றோம்.

ஞானஸ்நானம் என்பது நாம் செய்கின்ற வேலையல்ல. நம்மை நாமே முழுக்காட்டுவதற்குப் பதிலாக, நம்மை தண்ணீருக்குள் அடக்கம் செய்யும் இன்னொருவருக்கு நாம் கீழ்ப்படிகின்றோம். ஞானஸ்நானம் என்பது எந்தக் கருத்தமைவிலும் நாம் செய்யும் செயலாய் இருப்பதில்லை; மாறாக, ஏதோ ஒன்று நமக்குச் செய்யப்படுகின்றதாக உள்ளது. ஞானஸ்நானமானது நமது பாவங்களை மன்னிக்க உள்ளான திறன் எதுவும் கொண்டுள்ளதாக நாம் விசுவாசிப்பதனால் அல்ல, ஆனால் ஞானஸ்நானத்தில் நமது பாவங்களை நீக்க தேவனே கிரியை செய்கின்றார் என்று நாம் விசுவாசிப்பதாலேயே நாம் ஞானஸ்நானத்திற்குக் கீழ்ப்படிகின்றோம் (கொலோ. *2:12, 13).* பத்தொன்பதாம் நூற்றாண்டில் (கிறிஸ்தவத்தை) மீளக் கட்டியெழுப்பும் இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரான அலெக்ஸாண்டர் கேம்ப்பெல் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> இறந்த மனிதர்கள் தங்களைத் தாங்களே அடக்கம் செய்து கொள்வதோ அல்லது தங்களைத் தாங்களே மீண்டும் உயிர்ப்பித்துக் கொள்வதோ இல்லை. ஞானஸ்நானத்தில் நாம் நமது சம்மதத்தைத் தருவதைத் தவிர மற்ற ஒவ்வொன்றிலும் செய்விக்கப்படும் தன்மை உடையவர்களாகவே இருக்கின்றோம். நாம் இன்னொருவரால் அடக்கம் பண்ணப்பட்டு உயிர்ப்பிக்கப்படுகின்றோம். ஆகையால் ஞானஸ்நானத்தின் எந்தக் கண்ணோட்டத்திலும் அது நற்கிரியை என்று அழைக்கப்பட முடியாது. ஆகையால் நமது ஆவிக்குரிய உறவில் ஞானஸ்நானம் கொண்டிருக்கக் கூடிய செல்வாக்கானது நமது சொந்த

GTG LIBRARY- BANGALORE

செயலின் எந்தத் தகுதியினாலும் ஏற்படுவதில்லை; உண்டாக்கும் காரணம் என்ற வகையில் அல்ல, ஆனால் ஒரு கருவி வகையிலான மற்றும் உடன் நிகழ்வு வகையிலான காரணத்தினால் நாம் "கிறிஸ்துவை அணிந்து கொள்ளுகின்றோம்" மற்றும் அவருடன் முறைப்படியாகவும் மற்றும் இருதயத்திலும் இணைக்கப் படுகின்றோம், அவருடன் உடன்படிக்கையில் பிரவேசிக்கின்றோம், மற்றும் அவருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் அவருடன் ஒன்றாக்கப்படுகின்றோம். ஆகையால், "உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றீர்கள்" - "கிறிஸ்துவை அணிந்து கொண்டீர்கள்" என்று அப்போஸ்தலர் கூறினார்.[6]

விசுவாசம் ஞானஸ்நானத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா?

ஞானஸ்நானம் விசுவாசத்திலிருந்து பிரிக்கப்பட முடியுமென்றால், இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியமில்லை; ஏனெனில் இரட்சிப்பு விசுவாசத்தைச் சார்ந்ததாகவே உள்ளது. இருப்பினும், வேதாகமம் ஞானஸ்நானத்தைப் பிரிக்க இயலாத வகையில் விசுவாசத்துடன் இணைக்கின்றது (மாற். 16:16; அப். 8:12, 13; 18:8; கலா. 3:26, 27; கொலோ. 2:12). புதிய எருசலேம் வேதாகமத்தில் இந்தக் கருத்தின் மீது உள்ள கூற்று சரியானதாக உள்ளது:

> ஞானஸ்நானம் என்பது விசுவாசத்திற்கு நேர் மாறானதாக இருப்பதில்லை, ஆனால் அதனுடன் இணைந்து செல்லுகின்றது, ... மற்றும் ஞானஸ்நானச் சடங்கின் செயல்படும் அடையாளத்தின் மூலமாக அதற்கு வெளிப்படையான விளக்கத்தைக் கொடுக்கின்றது. இந்தக் காரணத்தினாலேயே பவுல், விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றிற்கு ஒரே விதமான செயல்விளைவுகளைக் குறிப்பிட்டார் (இ.வ. ரோமர் 6:3-9 மற்றும் கலா. 2:16-20).[7]

டக்ளஸ் மூ அவர்கள் ரோமர் 6க்கு விளக்கவுரை அளிக்கையில், "விசுவாசம் ஞானஸ்நானத்திற்கு வழி நடத்துகின்றது என்று யூகிக்கப்படுவது போலவே, ஞானஸ்நானம் விசுவாசத்தை அதன் மதிப்புத் தன்மைக்கு யூகிக்கின்றது. எனவே, வ. 3-4ல் நாம் விசுவாசம் மற்றும் ஆவியானவரின் வரம் ஆகியவற்றை முன் அனுமானம் செய்து, ஞானஸ்நானம் என்பது முழுமையான மாற்றம் - தூண்டுதல் அனுபவத்திற்காய் நிலைநிற்கின்றது என்று யூகிக்க முடியும்"[8] என்று எழுதினார்.

இதே வழிமுறையில், தேவனுடைய ஆசீர்வாதங்கள் விசுவாசத் திலிருந்து விளைவதாகக் கூறப்படுகின்றது - ஆனால் ஏற்புடைய செயல்கள் நடந்த பிறகே இவை விளையும். ஆபேல் சரியான பலியைச் செலுத்தினார், நோவா பேழையைக் கட்டினார், ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தார், மற்றும் இஸ்ரவேலர்கள் எரிகோவைச் சுற்றி அணி வகுத்துச் சென்றனர் (எபி.

GTG LIBRARY- BANGALORE

11:4-8, 30). இரட்சிப்பும் இதைப் போலவே விசுவாசத்திற்குக் குறிப்பிடப் படுகின்றது - ஆனால் ஞானஸ்நானம் பெற்ற பிறகு மட்டுமே இரட்சிப்பு உண்டாகிறது (மாற். 16:16; 1 பேது. 3:21). செயல்படும்படி தேவனால் கூறப் பட்டு, தேவனுடைய வசனத்தின் மீது கொண்ட விசுவாசத்தினால் பதில் செயல் செய்யத் தவறியவர்கள் எவருக்கும் ஆசீர்வாதங்கள் ஒருக்காலும் வேதாகமத்தில் கொடுக்கப்பட்டதில்லை. தேவன் செயல்பாட்டைக் கட்டளையிடும் பொழுது, அவர் வாக்குத்தத்தம் செய்த ஆசீர்வாதத்தைக் கொடுக்கு முன்பு, செயல்படத் தேவையான விசுவாசத்தை எப்பொழுதுமே அவர் கேட்கின்றார். ஒருவர் ஞானஸ்நானம் பெறும் பொழுது, பாவங்களை மன்னிப்பதாகத் தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தின் மீது விசுவாசம் கொள்ளுதல் என்பது வழக்கமான விதியாய் உள்ளது; இது வேதாகம ரீதியான விசுவாசத்திற்கு ஒரு விதி விலக்காய் இருப்பதில்லை.

தொகுப்புரை

தேவனுடைய சித்தத்திற்குப் பதில் அளிக்கும்படித் தூண்டும் வகையில் உள்ள நம்பிக்கையே தேவன் பலன் அளிக்கும் விசுவாசமாக உள்ளது. ஒருவர் ஞானஸ்நானம் பெறுகையில் தேவனுடைய செயலின் மீதுள்ள விசுவாசத்திற்கே தேவன் பாவமன்னிப்பைக் கொண்டு பலனளிப்பார். விசுவாசமின்றி, மனிதரின் எந்தச் செயலும் தேவனுக்குப் பிரியமாய் இருக்க முடியாது (எபி. 11:6); ஆகையால், ஞானஸ்நானம் என்பது விசுவாசத்துடன் இணைந்திருக்கும் பொழுது மட்டுமே தேவனுடைய பார்வையில் மதிப்புள்ளதாக இருக்கின்றது.

இயேசு நமது பாவங்களுக்காக மரித்தார் (1 கொரி. 15:1-3) என்ற சுவிசேஷத்தை நாம் விசுவாசித்தால், நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது இரட்சிக்கப்படுகின்றோம் (மாற். 16:15, 16). "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன்" என்ற சொற்றொடரைப் பற்றி மொழிபெயர்ப் பாளர்களான இராபர்ட் பிராட்ச்சரும், யூஜீன் நிடாவும், "... இரு எச்சவினைகளையும் ஆளுமை செய்கின்ற ஒற்றைத் திட்டவட்ட சுட்டுச் சொல்லானது, யார் இரட்சிக்கப்படுவார் என்று விவரிக்கின்ற இரு வினைச் சொற்களையும் இணைக்கின்றது; இவ்வாக்கிய உறுப்பானது 'ஞானஸ் நானம் பெற்ற விசுவாசி' என்று மொழிபெயர்க்கப்பட முடியும்" என்று எழுதினார்.[9] இந்த நபர்தான் "இரட்சிக்கப்படுபவராக" இருக்கின்றார்.

விசுவாசமற்ற ஞானஸ்நானம் செல்லத்தக்கதல்ல, அல்லது தேவனு டைய சித்தத்தின்படியாக வெளிப்படுத்தப்படாத வரையில் விசுவாசமும் செல்லத்தக்கதல்ல. ஞானஸ்நானம் பெறுவதினால் நாம், இயேசு அடக்கம் பண்ணப்பட்டு உயிர்ப்பிக்கப்பட்டார் என்ற நமது விசுவாசத்தை வெளிப் படுத்துகின்றோம், ஏனெனில் நாம் அவருடன் இணையவும் மற்றும் அவருடன் தொடர்ந்த ஒரு ஐக்கியத்தில் பிரவேசிக்கவும், அடக்கம் பண்ணப்படுதல் உயிர்த்தெழுதல் என்ற அதே செயல்பாட்டிற்கு நாம் கீழ்ப்படிகின்றோம். அவருடைய இரத்தம், அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் மீது நாம் விசுவாசம் கொண்டுள்ள பொழுது,

GTG LIBRARY- BANGALORE

ஞானஸ்நானத்தில் அவரோடு கூட அடக்கம் பண்ணப்படுவதன் மூலமாக நாம் அந்த விசுவாசத்தை வெளிப்படுத்துபவர்களாய் இருக்க வேண்டும்.

குறிப்புகள்

[1]''பாவிகளின் ஜெபம்'' என்பதை மீண்டும் மீண்டும் கூறுதல் என்பது வேதாகமத்தின் போதனையாய் இல்லாதிருக்கையில், "விசுவாசத்தின் அடிப்படையில் மட்டுமே'' இரட்சிப்பு உள்ளதாக உரிமைகோருபவர்களில் பலரால் இது போதிக்கப்படுகின்றது. ஒரு ஜெபத்தைக் கூறுதல் என்பது கிறிஸ்தவரல்லாதவரைத் தேவனுடைய கிருபைக்குள் கொண்டு வர முடியாது, ஏனெனில் பவுலிடம் அனனியா, "உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (அப். 9:10, 11; 22:16) என்று கூறுவதற்கு முன்பு பவுல் பல நாட்கள் ஜெபித்திருந்தார். [2]R. Bultmann, "*pisteuo,*" in *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel and Gerhard Friedrich, trans. and abr. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 854. [3]*Apeithia* என்பது "கீழ்ப்படியாமை" என்பதாக ஆறுமுறைகள் தருவிக்கப்பட்டுள்ளது; *apeitheo* என்பது (எனது வேதாகமத்தில் உள்ள ஓரக்குறிப்பொன்றில்) ''அவிசுவாசம்'' என்று ஒருமுறையும், ''கீழ்ப்படியாமை'' என்று பத்துமுறைகளும், மற்றும் ''கீழ்ப்படியவில்லை'' என்று மூன்று முறைகளும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. *Apeithes* என்பது ''கீழ்ப்படியாதவர்'' என்று ஆறுமுறைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வார்த்தைகளை "கீழ்ப்படியாமை" என்று ஒரே சீராக மொழிபெயர்த்துள்ள NASB போலின்றி, KJVயில் பல இடங்களில் "விசுவாசமில்லாமை" அல்லது "அவிசுவாசம்" என்றுள்ளது. [4]*The Book of Discipline of the United Methodist Church* (Nashville: United Methodist Publishing House, 1976), 57. [5]விசுவாசிக்கத் தலைப்பட்டுள்ளவர்கள் இன்னமும் தேவனுடைய பிள்ளைகளாகாமல் இருக்கலாம், ஆனால் அவர்கள் ''தேவனுடைய பிள்ளைகளாகும்படி அதிகாரம் பெற்றவர்களாய்" (யோவா. 1:12) இருக்கின்றனர். யோவா. 12:42ல், "ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்கப்படாதபடி, பரிசேயர் நிமித்தம் அதை அறிக்கை பண்ணாதிருந்தார்கள்" என்று கூறப்படுகின்றது. இந்த அதிகாரிகள் விசுவாசித்திருப்பினும், இவர்களை இயேசு, பிதாவின் முன்பாக மறுதலிப்பார், ஏனென்றால் இவர்கள் அவரைக் கர்த்தரென்று அறிக்கையிடவில்லை (மத். 10:33; ரோமர் 10:9, 10 ஆகிய வசனங்களைக் காணவும்). [6]Alexander Campbell, *Christian Baptism With Its Antecedents and Consequents* (Nashville: McQuiddy Printing Co., 1913), 205. [7]Henry Wansbrough, gen. ed., The New Jerusalem Bible (New York: Doubleday, 1985), 1875, n6a. [8]Douglas J. Moo, *The Epistle to the Romans,* The New International Commentary on the New Testament, gen. eds. Ned B. Stonehouse, F. F. Bruce and Gordon D. Fee (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1996), 366. [9]Robert G. Bratcher and Eugene A. Nida, *A Translator's Handbook on the Gospel of Mark* (New York: United Bible Societies, 1961), 511.

GTG LIBRARY- BANGALORE

அறிவு, விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம் பெறுவதில் தீர்மானம்

> விருத்தசேதனம் அடைந்திருக்கிற அவர்களும் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ளாமலிருக்கிறார்கள்; அப்படியிருந்தும், அவர்கள் உங்கள் மாம்சத்தைக் குறித்து மேன்மை பாராட்டும்படிக்கு நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்கள். நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன். கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை; விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; புது சிருஷ்டியே காரியம் (கலா. 6:13-15).

உடல் ரீதியாக செயல்கள் தேவனுக்கு முக்கியமானவைகளாக உள்ளன. இது, நியாயப்பிரமாணத்தின் கீழ் விருத்தசேதனம் பெறாத மனிதன் தனது மக்களினின்று அறுப்புண்டு போகப்பட்ட உண்மையில் காணப்படுகின்றது (ஆதி. 17:14). இருப்பினும், சரியான வகையிலான வாழ்வை உள்ளடக்காத விருத்தசேதனமானது விருத்தசேதனமின்மை என்றே கருதப்பட வேண்டியதாய் இருந்தது (ரோமர் 2:25). அது போலவே, ஞானஸ் நானத்துடன் இணைந்துள்ள ஆவிக்குரிய கொள்கைகளுக்கு நாம் இருதயப் பூர்வமாகக் கீழ்ப்படிந்தால் மட்டுமே ஞானஸ்நானம் மதிப்புள்ளதாகின்றது. இது நமது பகுதியில் உடல் ரீதியான செயலை மட்டுமின்றி நமது இருதயம் இணைவிக்கப்பட்டிருத்தலையும் உள்ளடக்குகின்றது.

எவ்விஷயத்திலும் தேவன் அவருடனான நமது உறவுமுறையில் வெறுமையான உடல் ரீதியான செயல்களை மட்டும் கேட்டுக் கொண்டிருப்பதில்லை; அவர் இருதயத்தையும் அதே வேளையில் செயல்களையும் கவனிக்கின்றார். எலியாபின் தோற்றம் மற்றும் உயரம் ஆகியவற்றின் அடிப்படையில், அவரை இஸ்ரவேலின் அரசராகத் தேவன் தேர்ந்தெடுத்தார் என்று சாமுவேல் தவறாக முடிவு செய்தார். அவரிடத்தில் தேவன், "நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்க வேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ

GTG LIBRARY- BANGALORE

இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்" (1 சாமு. 16:7).

கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்பட்ட ஒரு வாழ்வை - ஒரு புது வாழ்வை - தேவன் (நம்மிடத்தில்) விரும்புகின்றார் (கலா. 6:14, 15). நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது ஒரு புது வாழ்வில் உட்புகாதிருந்தால், நமது ஞானஸ்நானம் மதிப்பற்றதாகின்றது; ஏனெனில் ஞானஸ்நானத்தின் மூலம் நாம் அனுபவிக்கின்ற மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றைத் தொடர்ந்து ஒரு புது வாழ்வு வர வேண்டியதாக உள்ளது (ரோமர் 6:4).

இந்த மாற்றத்திற்குப் பவுலின் வாழ்வானது நிறைவான எடுத்துக் காட்டாக உள்ளது. ஞானஸ்நானத்தில் அவர் தமது பழைய மனுஷனை மரணமடையச் செய்து, பிறகு இயேசுவுக்காகப் புதுவாழ்வொன்றைத் தொடங்கினார். ரோமர் 6:4-6 வசனப் பகுதிகள் நமக்குப் பின்வருமாறு கூறுகின்றன:

> மேலும் பிதாவின் மகிமையினால் கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப் பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.

பவுல் இதைப் பின்வரும் வகையில் எடுத்துரைத்தார்: "கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" (கலா. 2:20).

நாம் அறிய வேண்டியது என்ன?

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் கிறிஸ்தவரானவர்கள், தாங்கள் ஞானஸ்நானம் பெறுவது அவசியமாயிருந்தது என்று கற்றுக் கொண்ட அதே நாளிலேயே ஞானஸ்நானம் பெற்றதால் நாம் அறிய வேண்டியதெல்லாம் தேவன் ஞானஸ்நானத்தைக் கட்டளையிட்டார் என்பதே என்று சிலர் முடிவு செய்துள்ளனர். இருப்பினும், இதை விட அதிகமானது போதிக்கப்பட்டது, இது, ஞானஸ்நானம் பெறுபவர்களிட மிருந்து இதை விட அதிகமானவைகள் எதிர்பார்க்கப்படுகின்றன என்று அர்த்தப்படுகின்றது. ஆண்களும் பெண்களும் இயேசுவின் சீஷர்களாக வேண்டும் என்று அவர்களை இணங்க வைப்பதற்காகப் பின்வரும் சத்தியங்கள் போதிக்கப்பட்டன:

GTG LIBRARY- BANGALORE

1. உண்மையான தேவன் ஒருவரே (அப். 3:13; 14:15; 17:23-31). மக்களை இரட்சிப்புக்குள் கொண்டு வருவதற்காக, ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோரின் தேவன் யூதர்களுக்குப் பிரசங்கிக்கப் பட்டார். பிற்பாடு பவுல், வானத்தையும் பூமியையும் உண்டாக்கின உயிருள்ள தேவனைப் பற்றிப் புறஜாதியாருக்குப் பிரசங்கித்தார்.

2. இயேசு கர்த்தரும் கிறிஸ்துவுமாய் இருக்கின்றார், அவரே தேவகுமாரன் (அப். 2:36; 4:10, 11; 5:42; 9:20, 22; 10:36; 17:3; 18:5, 28 ஆகிய வசனங்களைக் காணவும்.) இயேசுவே தேவகுமாரனாகிய கிறிஸ்துவாக இருக்கின்றார் என்று விசுவாசித்தலின் அடிப்படையிலேயே ஆவிக்குரிய வாழ்வு அமைந்துள்ளது (யோவா. 20:30, 31).

*3. கர்த்தருடைய வசனம் இரட்சிக்கின்றது (அப். 11:14; 16:32; 2 தீமோ. 4:2*ஐயும் காணவும்).

4. இயேசுவே இரட்சகராக உள்ளார். இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் உட்பட முழுமையான சுவிசேஷம் பிரசங்கிக்கப் பட்டது. (அப். 2:32; 8:5, 25, 35; 14:7, 21; 16:10; 1 கொரி. 2:1, 2; 15:1-4 ஆகிய வசனங்களைக் காணவும்.)

5. இயேசு இன்றி நாம் இழந்துபோகப்பட்ட நிலையிலும் மன்னிப்பு தேவைப்பட்ட நிலையிலும் இருக்கின்றோம் (அப். 4:10-12).

6. நாம் நமது வாழ்வை மாற்றுதல் என்ற மனந்திரும்புதலை நடப்பித்தல் அவசியமாக உள்ளது (அப். 2:38; 3:19; 17:30).

7. நாம் ஞானஸ்நானம் பெறுகின்ற பொழுது நமது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன (அப். 2:38; 22:16).

8. தேவனுடைய இராஜ்யம் பற்றிய சத்தியமானது பிரசங்கிக்கப் பட்டது (அப். 8:12; 19:8; 20:25; 28:23, 31).

எத்தியோப்பிய மந்திரி ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பு எதை அறிந்து கொண்டிருக்க முடிந்தது? (அப். 8:26-39 வரையிலும் காணவும்.) பிலிப்பு, ஏசாயா 53ன் வசனப்பகுதி ஒன்றிலிருந்து அவருக்குக் கிறிஸ்துவைப் பிரசங்கித்தார். இந்த தீர்க்கதரிசனத்திலிருந்து அவர், இயேசுவைப் பற்றிப் பின்வருமாறு போதிக்க முடிந்தது: "நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்" (வ. 5); "கர்த்தரோ, நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்" (வ. 6); "அவருடைய ஆத்துமா தன்னைக் குற்ற நிவாரண பலியாக ஒப்புக் கொடுக்கும்" (வ. 10); "என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்து கொள்வார்" (வ. 11); "அநேகருடைய பாவத்தை (அவர்) தாமே சுமந்தார்" (வ. 12).

பிலிப்பு, "தேவனுடைய இராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து" (அப். 8:12) சமாரியர்களுக்குப் பிரசங்கித்தவற்றையே அவருக்கும் பிரசங்கித்திருப்பார். சுருக்கமாய்க் கூறுவதென்றால், "அவர் இயேசுவைக் குறித்து அவருக்குப் பிரசங்கித்தார்" (அப். 8:35).

இதன் விளைவாக, எத்தியோப்பிய மந்திரி ஞானஸ்நானம் பெற்றுக்

GTG LIBRARY- BANGALORE

கொள்ள விரும்பினார். அவர் இயேசுவே தனது (மந்திரியின்) பாவங்களுக்காக மரித்திருந்த கிறிஸ்து என்று புரிந்து கொண்டார் என்று நாம் முடிவு செய்ய இயலும். அவர் தாம் கிறிஸ்துவின் இராஜ்யத்தினுள் பிரவேசிக்க கூடும்படிக்கு மறுபடியும் பிறக்க (யோவா. 3:5) விரும்பியதை அவர் அறிந்தார். அவர் கிறிஸ்துவைப் பின்பற்றும்படி உறுதி எடுக்க மனதாயிருந்தார், மற்றும் ஞானஸ்நானம் பெறுவதால் இயேசுவின் மரணத்தின் மூலம் தமது பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமென்று அவர் விரும்பினார். கிறிஸ்தவராக விரும்பும் எவரும் நிச்சயமாக இதே விஷயங்களை அறிந்திருக்க வேண்டும்.

நாம் விசுவாசிக்க வேண்டியது என்ன

நாம் இரட்சிக்கப்படுவதற்கு, நாம் ஞானஸ்நானம் பெற வேண்டும் (மாற். 16:16; 1 பேது. 3:21). இரட்சிக்கப்படுவதற்கு நாம் விசுவாசிக்க வேண்டிய ஒவ்வொன்றும் ஞானஸ்நானம் பெறுவதற்கும் கூட விசுவாசிக்கப்பட்டாக வேண்டும். நாம் விசுவாசிக்க வேண்டிய பின்வரும் விஷயங்களைக் கவனியுங்கள்:

- நாம் பாவிகளாய் இருக்கின்றோம் (1 தீமோ. 1:15).
- தேவன் இருக்கின்றார், தம்மை உண்மையாகவே தேடுகின்றவர்களுக்கு அவர் பலன் அளிக்கின்றார் (எபி. 11:6).
- இயேசுவே "நானே இருக்கிறேன்" என்பவராயிருக்கிறார்.[1]
- இயேசுவே கிறிஸ்துவும் (யோவா. 20:30, 31) ஆண்டவருமாய் (அப். 2:36) இருக்கின்றார், இது அவர் கூறுவதை நாம் செய்வோம் என்று அர்த்தப்படுத்துகின்றது (மத். 7:21; லூக். 6:46).
- இயேசுவின் வசனங்களும் (யோவா. 5:47; 12:49, 50) மற்றும் சுவிசேஷமும் (மாற். 16:15, 16; ரோமர் 1:16; எபே. 1:13) விசுவாசிக்கப்பட வேண்டியவைகளாய் உள்ளன.
- இயேசுவைப் பற்றிய சாட்சியமும் (யோவா. 17:20; 2 தெச. 1:10) மற்றும் இராஜ்யத்தைப் பற்றிய போதனையும் (அப். 8:12) விசுவாசிக்கப்பட வேண்டியவைகளாய் உள்ளன.
- இயேசு உயிர்ப்பிக்கப்பட்டுள்ளார் (ரோமர் 10:9).
- இயேசு தமது இரத்தத்தின் மூலமாக நமது பாவங்களுக்குக் கிருபாதார பலியானார் (ரோமர் 3:26).
- தேவன் நமது வாழ்வில் செயல்படுகின்றார் (கொலோ. 2:12).

நாம் எதை விசுவாசிக்க வேண்டும் என்பதை தேவன் தேர்ந்தெடுத்துள்ளார் - ஆனால் நாம் எதை விசுவாசிக்கவும் செய்யவும் வேண்டும் என்பதை அவர் ஏன் தேர்ந்து கொண்டுள்ளார் என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் கேட்பதில்லை. நாம் ஏன் இயேசுவிலும் அவரது இரத்தத்திலும் விசுவாசம் கொள்ள வேண்டும் என்று அவர் தேர்ந்து கொண்டுள்ளார் என்பதையோ அல்லது மன்னிக்கப்படுவதற்கு நாம் மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று அவர்

GTG LIBRARY- BANGALORE

ஏன் தேர்ந்து கொண்டார் என்பதையோ நாம் ஒருக்காலும் அறியாமல் போகலாம். அவர் இந்தத் தெரிவுகளை ஏற்படுத்தியது ஏன் என்று நாம் கேட்க வேண்டியதில்லை. மாறாக, தேவன் என்ன செய்வார் என்பதில் விசுவாசம் கொண்டு நாம் செயல்பட வேண்டும்.

நாம் தீர்மானிக்க வேண்டியது என்ன

ஒரு புதுப் படைப்பாவதற்கு

நாம் நம்மைச் சுற்றிலும் உள்ள துன்மார்க்க உலகிலிருந்து வித்தியாசப் பட்ட புதிய மக்களாக வேண்டும். நாம் இயேசுவுக்கான ஊழியத்தில் நமது உடல்களை உயிருள்ள ஜீவ பலிகளாக ஒப்புக் கொடுத்துள்ளோம். பவுல், “... விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; புது சிருஷ்டியே காரியம்” (கலா. 6:15) என்று கூறினார். மேலும் அவர் பின்வருமாறும் கூட எழுதினார்:

> அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதா கிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12:1, 2).
>
> இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டி யாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின (2 கொரி. 5:17).

இருதயத்திலிருந்து கீழ்ப்படிதலின் விளைவாக ஞானஸ்நானத்தில் இந்தப் புது சிருஷ்டியும் சுயதியாகமும் நடைபெறுகின்றன (ரோமர் 6:4-7, 17, 18). இருதயத்துடன் இணைவு இன்றி நமது பகுதியில் செய்யப்படுகின்ற உடல்ரீதியான செயல் போதுமானதாய் இருப்பதில்லை. மதுபானப்பழக்கம் கொண்டவர் சபைக் கட்டிடத்தின் முன் கதவு வழியே உள் இழுத்து வரப் பட்டு, பின்கதவு வழியே வெளித்தள்ளப்பட்டால் தனது குடிப்பழக்கத் திலிருந்து குணமாக்கப்பட முடியும் என்பதைக் காட்டிலும் அதிகமான வகையில் நாம் தண்ணீரில் முழுக்காட்டப்படுவதினால் மட்டும் மாற்றப் படுவதில்லை. நாம் ஞானஸ்நானம் பெறுகின்ற பொழுது இருதயத்தில் மாற்றம் கொண்டிருந்தால் மட்டுமே புது சிருஷ்டிகள் ஆகின்றோம்.

ஞானஸ்நானத்தின் சந்தர்ப்பப் பொருளில் (ரோமர் 6:3-7) பவுல் இதைப் பின்வருமாறு விளக்கப்படுத்தினார்: “முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு,

GTG LIBRARY- BANGALORE

நீதிக்கு அடிமைகளானீர்கள்" (ரோமர் 6:17, 18).

நாம் பழைய மனிதனைக் களைத்து விட்டுப் புதிய மனிதனை அணிந்து கொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார். கொலோ. 3:9, 10ல், "ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செயல்களையும் களைந்து போட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே" என்று கூறப்படுகின்றது.

நாம் இயேசுவைப் பற்றிக் கற்றுக்கொள்ளும் பொழுது, நாம் கிறிஸ்தவர்களாகும் வேளையில் பாவம் நிறைந்த பழக்கங்கள் யாவும் கடந்த கால விஷயமாகின்றன என்பதை உணர வேண்டியவர்களாய் இருக்கின்றோம். எபே. 4:20-24ல் பின்வருமாறு கூறப்படுகின்றது:

> *நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை. இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே. அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்.*

ஞானஸ்நானத்தில் ஏற்பட வேண்டிய மாற்றத்தை ஒரு சிறு குழந்தையானது புரிந்து கொள்ளவோ அல்லது செயல்படுத்தவோ முடியாது என்பது தான் குழந்தை ஞானஸ்நானத்தில் உள்ள பிரச்சனைகளில் ஒன்றாக உள்ளது. அக்குழந்தையானது தனது இருதயத்திலிருந்து கீழ்ப்படிய முடியாது, ஏனென்றால் அது தான் ஞானஸ்நானம் பெறுகின்ற பொழுது நடைபெற வேண்டிய இருதய மாற்றத்தைப் பற்றிப் புரிந்து கொள்ளுவதில்லை.

கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற இரட்சிப்பை நாம் விரும்புகின்ற பொழுது, நாம் அவருடைய மன்னிப்பை நாடியவர்களாய் இருதயத்தில் உண்மைத் தன்மையுடன் அவரிடத்தில் வர வேண்டியவர்களாய் இருக்கின்றோம். ஞானஸ்நானத்தில் நாம் அவருடன் அடக்கம் செய்யப்படுகையில், அவருக்காகப் புதுப்படைப்பாக வேண்டுமென்று நாம் தீர்மானம் செய்ய வேண்டும். இதைக் காட்டிலும் குறைவான நோக்கத்துடன் நாம் ஞானஸ்நானத்தை நெருங்கினால், நாம் ஞானஸ்நானத்தின் அர்த்தத்தைத் தவிற விட்டுவிடுகின்றோம்.

சீஷராவதற்கு

யோவானால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அவரது சீஷரானார்கள், அதே போல, இயேசுவின் ஞானஸ்நானத்தில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அவருடைய சீஷரானார்கள் (யோவா. 4:1). "சீஷர்" (கிரேக்கம்: mathetes) என்ற வார்த்தையானது ஒருவருடைய போதனையில் அவரைப் பின்பற்றும்படியாக அவரிடமிருந்து கற்றுக் கொள்பவரைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. ஒரு நபருடைய நாமத்தில் (பெயரில்)

GTG LIBRARY- BANGALORE

ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுதல் என்பது, ஞானஸ்நானம் பெறுபவர் அந்த நபருடைய போதனையை ஏற்றுக் கொள்வதையும் அந்நபரின் சீஷராவதையும் மறைமுகமாய்க் குறிப்பிடுகின்றது.

1 கொரிந்தியர் நிருபத்தில் பவுல், கொரிந்து சபைக்குள் இருந்த பிரிவினையைப் பற்றிப் பேசியிருந்தார். அங்கிருந்த உறுப்பினர்கள் பலரும் தாங்கள் பவுல், அப்பொல்லோ மற்றும் கேபா (அதாவது பேதுரு; யோவா. 1:42ஐக் காணவும்) போன்ற தலை சிறந்த வித்தியாசப்பட்ட கிறிஸ்தவர்களின் சீஷர்களாயிருந்ததாகக் கூறிக் கொண்டிருந்தனர் (1 கொரி. 1:10-16). பவுல் அவர்களிடம், அவர்கள் பவுலின் நாமத்திலேயா ஞானஸ்நானம் பெற்றனர் என்று கேட்டார் (1 கொரி. 1:13). அவர்கள் பவுலின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறாதிருந்தால், அவர்கள் பவுலின் சீஷர்கள் என்று உறுதிப்படுத்தக் கூடாது என்பதே இவ்விடத்தில் மறைவான கருத்தாய் உள்ளது.

நாம் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறும் பொழுது, நாம் அவரைப் பின்பற்றுகின்றவர்களாகின்றோம் - அதாவது அவர் நமது ஆண்டவராகின்றார், நாம் அவரது ஊழியர்கள் ஆகின்றோம் என்பதை நாம் உணர்ந்தறிய வேண்டும். இனியும் நாம் பாவத்திற்கு ஊழியம் செய்கின்றவர்களாய் இருக்கக் கூடாது; அதற்குப் பதில் நாம் இயேசுவுக்கு ஊழியம் செய்கின்றவர்களாய் இருக்க வேண்டும். அவரை நாம் ஆண்டவரென்று ஏற்றுக் கொண்டு, தலை என்ற வகையில் அவருக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும் (எபே. 5:24).

தொகுப்புரை

ஞானஸ்நானம் என்பது ஆவிக்குரிய இணைவுகளும் மறை கருத்துக்களும் கொண்ட, உடல் ரீதியான செயலாக உள்ளது. இவைகள் இன்றி ஞானஸ்நானம் மதிப்பற்றதாக உள்ளது. வேதாகம ரீதியான கண்ணோக்கில் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வதற்கு, தேவனுடன் உள்ள உறவில் இருக்கும் தவறை (ஞானஸ்நானத்தில்) நாம் பாவமன்னிப்பின் மூலமாக நேராக்கிக் கொள்ளுகின்றோம் என்பதை உணர வேண்டும். பாவம் நிறைந்த வாழ்வை விட்டுவிட்டு, நமது ஒரே ஆண்டவரும் எஜமானருமாகிய இயேசுவுக்கு நம்மை ஒப்புக் கொடுக்கும் புதிய வாழ்வினுள் பிரவேசிக்க நாம் உறுதியெடுத்தவர்களாய் இருக்க வேண்டும்.

குறிப்பு

[1]இயேசு "நானே இருக்கிறவராயிருக்கிறேன்" ("I am He") என்று உரைத்தார். கிரேக்க மொழியில் "He" என்பது இல்லாதுள்ளது (யோவா. 8:24; 8:28, 58; 13:19 ஆகியவற்றையும் காணவும்). எனவே ஆங்கில வேத வசனப்பகுதியும் "I am" என்று இயேசு கூறியதாகவே வாசிக்கப்பட வேண்டும்.

GTG LIBRARY- BANGALORE

ஞானஸ்நானத்தில் நடைபெறும் மாற்றங்கள்

> *முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள் (ரோமர் 6:17, 18).*

நாம் ஞானஸ்நானம் பெறுகின்ற பொழுது, ஞானஸ்நானத்துடன் இணைந்துள்ள ஆவிக்குரிய உண்மை நிலைகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது இருதயத்திலிருந்து ஆவிக்குரிய ஈடுபாடு கொண்டிருந்தால், நான்கு முக்கியமான மாற்றங்கள் நடைபெறும்.

நிலைமையில் ஒரு மாற்றம்

ஞானஸ்நானத்திற்குள் வருவதில் நமது பாவத்தை மன்னிக்கத் தமது மரணத்தில் தம் இரத்தத்தைச் சிந்திய மேசியா என்ற வகையில், இயேசு கிறிஸ்துவின் மீது விசுவாசமுள்ளவர்களாய் நாம் வர வேண்டும். அவரை நமது கர்த்தராக ஏற்றுக் கொள்வதற்காக நமது கடந்த கால வாழ்வை விட்டு நீங்கும்படி நமது இருதயத்தில் நாம் தீர்மானம் செய்து கொள்ள வேண்டும். இதை நாம் செய்யும் பொழுது, அவர் நமது நிலைமையைப் பின்வருமாறு மாற்றுவார்: (1) இழந்துபோன நிலையிலிருந்து இரட்சிக்கப்பட்டுள்ள நிலைக்கு (மாற். 16:16; 1 பேது. 3:21), (2) பாவத்தினால் சுமை சுமத்தப்பட்டிருந்த நிலையிலிருந்து, நமது பாவங்களிலிருந்து சுத்தமாகக் கழுவப்பட்ட நிலைக்கு (அப். 22:16), மற்றும் (3) நமது பாவத்தினால் குற்ற உணர்வுள்ள நிலையிலிருந்து நமது பாவங்கள் மன்னிக்கப்பட்ட நிலைக்கு (அப். 2:38; கொலோ. 2:12, 13). இவைகள் வித்தியாசமான மூன்று நிலைகளல்ல, ஆனால் ஒரு மாற்றத்திற்கான மறைமுக சுட்டிக் காட்டுதல்களே ஆகும். கிறிஸ்தவரல்லாத ஒருவர் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் தமது பாவங்கள் கழுவப்பட்டு, கிறிஸ்தவராகும் பொழுது இந்த மாற்றம் நடைபெறுகின்றது.

GTG LIBRARY- BANGALORE

இடத்தில் ஒரு மாற்றம்

நாம் ஞானஸ்நானம் பெறும்பொழுது, ஆவிக்குரிய வகையில் நாம் சரியான ஈடுபாடு கொண்டிருந்தால், இனியும் நாம் கிறிஸ்துவுக்குப் புறம்பே இருக்க மாட்டோம், அங்கு நாம் அவரை விட்டுப் பிரிந்த நிலையில் இருந்தோம். எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல், "... கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமா யிருந்தீர்கள் ..." (எபே. 2:12).

கிறிஸ்தவர்களாவதில் நமது இருப்பிடம் மாறுகின்றது - ஏனெனில் நாம் கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கின்றோம், அது இயேசுவின் இரத்தத்தினால் தேவனுக்கு அருகில் கொண்டு வரப்படுகின்ற இடமாகும் (எபே. 2:11-13). இயேசுவுக்குப் புறம்பேயிருத்தல் என்பதிலிருந்து அவருக்குள் இருத்தல் என்பதற்கு நமது இடத்தை மாற்றுவதினால் (ரோமர் 6:3; கலா. 3:27), நாம் இயேசுவின் இரத்தத்தினால் சாத்தியமாக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களுக் குள் பிரவேசிக்கின்றோம். அவருக்குள் அவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது (எபே. 1:7; கொலோ. 1:14). கிறிஸ்துவுக்குள் நாம் புது சிருஷ்டிகளாக்கப்படுகின்றோம் (2 கொரி. 5:17), கிருபையைப் பெறும் வழி கிடைக்கின்றது (எபே. 1:6; 2 தீமோ. 2:1), நாம் இரட்சிப்பைப் பெறுகின்றோம் (2 தீமோ. 2:10), நித்திய ஜீவனை நாம் மகிழ்வுடன் அனுபவிக்கின்றோம் (1 யோவா. 5:11), மற்றும் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் நமக்குக் கிடைக்கப் பெறுகின்றன (எபே. 1:3).

இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெறுவதினால் நாம் இயேசுவில் உள்ள ஒரே சரீரமாகிய (ரோமர் 12:5), கிறிஸ்துவின் சரீரமாகிய (1 கொரி. 12:27), சபைக்குள் (எபே. 1:22, 23; 5:30; கொலோ. 1:18, 24; 3:15) பிரவேசிக் கின்றோம். நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது (1 கொரி. 12:13) பிரவேசிக்கின்ற சபை என்ற ஒரே சரீரத்திற்கு (எபே. 5:23) இரட்சகராக உள்ளவர் இயேசுவே.

சபையில் உள்ளவர்களின் பெயர்கள் பரலோகத்தில் ''எழுதப் படுகின்றன'' (எபி. 12:23). இது, நமது பெயர்கள் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளதால் (வெளி. 21:27) நாம் பரலோகத்தில் பிரவேசிப்போம் என்று அர்த்தப்படுகின்றது. அந்த ஜீவ புத்தகத்திலிருந்து (வெளி. 3:5) நமது பெயர் அழிக்கப்பட்டுவிடாதபடிக்கு நாம் வெற்றி கொள்ளும் வாழ்வை வாழ வேண்டும். நமது பெயர்கள் அந்த ஜீவ புத்தகத்தில் இல்லையென்றால், நாம் அக்கினிக் கடலிலே தள்ளப்படுவோம் (வெளி. 20:15). சபையின் உறுப்பினர்கள் என்ற வகையில் நாம் "திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால்" (எபே. 5:26) இயேசுவின் இரத்தத்தின் மூலம் பூரணராக்கப் பட்டுள்ளோம் (எபி. 12:23), குற்றமற்றவர்களாகவும், கறையற்றவர் களாகவும் ஆக்கப்பட்டுள்ளோம். ஆகையால் நாம், கரைதிறையற்றவர் களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுக்கப்படுவோம் (எபே. 5:27; கொலோ. 1:19-23).

GTG LIBRARY- BANGALORE

சபை என்பது இயேசுவின் இராஜ்யமாக உள்ளது (மத். 16:18, 19); அது அசைவில்லாத இராஜ்யம் (எபி. 12:28). இராஜ்யத்தின் உறுப்பினர்களும், இராஜ்யத்தின் புத்திரர்களும் இயேசு மற்றும் பிதா ஆகியோரின் நித்திய இராஜ்யத்தில் சூரியனைப் போலப் பிரகாசிப்பார்கள் (மத். 13:37-43; 2 பேது. 1:10, 11). அந்த இராஜ்யத்திற்குள் நாம் தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறப்பதன் மூலம் பிரவேசிக்கின்றோம் (யோவா. 3:3-5).

சபையின் உறுப்பினர்கள் தேவனுடைய வீடாகிய அவரது குடும்பத்தில் பிள்ளைகளாய் உள்ளனர் (1 தீமோ. 3:15). நாம் ஞானஸ்நானம் பெறும்பொழுது விசுவாசத்தின் மூலமாக தேவனுடைய பிள்ளைகளாக, தேவனுடைய குடும்பத்தின் உறுப்பினர்களாக ஆகின்றோம் (கலா. 3:26, 27). பிள்ளைகள் என்ற வகையில் நாம் தேவனுடைய வாரிசுகளாகின்றோம் மற்றும் இயேசுவுக்கு உடன் வாரிசுகளாகின்றோம் (ரோமர் 8:17; கலா. 4:7). வாரிசுகள் என்ற வகையில் நமது சுதந்தரமானது பரலோகத்தில் இருத்தல் என்ற அழிவில்லாத இடமாக உள்ளது (1 பேது. 1:3, 4).

நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் தொடங்கும்! இவர்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்தவர்களாய் இருக்கின்றனர் - ஏனெனில் இவர்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களிலிருந்து பேதுருவால் வேறு படுத்திக் காண்பிக்கப்படுகின்றனர் (1 பேது. 4:17). சுவிசேஷமானது இரட்சிப்பு உண்டாவதற்குத் தேவபெலனாக உள்ளது (ரோமர் 1:16), இது தேவனுடைய வீட்டிலிருப்பவர்கள், சபையார், இரட்சிக்கப்பட்டுள்ளனர் என்று அர்த்தப்படுகின்றது. நாம் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியவில்லை யென்றால், “... கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை” அடைவோம் (2 தெச. 1:10).

சபையானது “மந்தை” என்றும் அழைக்கப்படுகின்றது (அப். 20:28). இயேசு தமது மந்தையில் உள்ள ஆடுகளுக்காகத் தமது ஜீவனைக் கையளித்தார் (யோவா. 10:11, 15). நாம் அவருடைய ஆடுகள் என்ற வகையில் அவருக்குக் கீழ்ப்படிகின்றோம் (யோவா. 10:27; எபே. 5:24). நாம் அவரைப் பின்பற்றுகிறதினால் நமக்கு நித்திய ஜீவன் அளிக்கப்படும் (யோவா. 10:27, 28). இயல்பான உலகில், ஆடுகள் ஒரு மந்தைக்குள் பிறக்கின்றன; அது போலவே, ஆவிக்குரிய வட்டாரத்தில், நம்மை இயேசுவின் மந்தையில் உறுப்பினர்களாக்குவதற்கு ஆவிக்குரிய பிறப்பு (யோவா. 3:3-5) அவசியமாய் இருக்கின்றது.

நாம் எங்கு இருக்கின்றோம் என்பது பெரியதொரு வித்தியாசத்தை ஏற்படுத்துகின்றது. நாம் கிறிஸ்துவின் ஒரே சரீரமாகிய அவருடைய சபைக்குள் - இயேசுவின் இராஜ்யத்தினுள், தேவனுடைய குடும்பத்தினுள் மற்றும் இயேசுவினுடைய மந்தைக்குள் - இல்லையென்றால் நாம் பரலோகத்தினுள் பிரவேசிக்க முடியாது. நமது ஞானஸ்நானமே நம்மைக் கிறிஸ்துவின் சபைக்குள் வைக்கக் கூடிய இடமாற்றத்தைச் சாத்தியமாக்குகின்றது.

GTG LIBRARY- BANGALORE

ஊழியத்துவத்தில் ஒரு மாற்றம்

பாவத்திற்கு ஊழியம் செய்கின்ற வாழ்வை விட்டு, நீதிக்கு ஊழியம் செய்கின்ற புதிய வாழ்வில் பிரவேசித்தலே ஞானஸ்நானத்தில் நமது ஆவிக்குரிய ஈடுபாட்டின் விளைவாக உள்ளது (ரோமர் 6:16-18). பாவம் நம்மை அடிமைப்படுத்துகின்றது, மற்றும் அது நம்மைப் பாவத்தின் ஊழியக்காரர்களாய் ஆக்குகின்றது (யோவா. 8:34; ரோமர் 6:16; 2 பேது. 2:19). நமக்கு ஒப்புவிக்கப்பட்ட போதனைக்கு இருதயத்திலிருந்து கீழ்ப்படி தலினால் நாம் மாற்றப்படாத வரைக்கும் (ரோமர் 6:17, 18) நாம் பாவத்திற்கு ஊழியம் செய்வதிலேயே நிலைத்திருக்கின்றோம். ஞானஸ்நானத்தில் நாம் இயேசுவுடன் (ஆவிக்குரிய முறையில்) மரிக்கின்ற பொழுதுதான் மாற்றம் நிகழ்கின்றது (ரோமர் 6:3, 4). அந்த வேளையில், பழைய வாழ்வு சிலுவையில் அறையப்படுகின்றது, பாவ உடலானது ஒழிந்து போகின்றது, அதன் பின்பு நாம் இனியும் பாவத்திற்கு ஊழியம் செய்வதில்லை (ரோமர் 6:4-6). ஞானஸ்நானத்தில் நாம் பாவத்திற்கு மரிப்பதன் மூலமாக, பாவத்தின் ஆளுகை செய்யும் வல்லமையில் இருந்து நாம் விடுவிக்கப்பட்டுள்ளோம் (ரோமர் 6:7, 18).

உறவுமுறைகளில் ஒரு மாற்றம்

நாம் ஞானஸ்நானம் பெறுகின்ற பொழுது, நமது உறவுமுறைகள் மாறுகின்றன. நாம் ஞானஸ்நானம் பெற்று இயேசுவின் இராஜ்யத்திற்கு உட்படுத்தப்படுவதற்கு முன்பு நாம் சாத்தானுடைய ஆளுகையின் கீழ், இருளின் அதிகாரத்தில் இருக்கின்றோம் (அப். 26:18; கொலோ. 1:13). அவ்வகையில் நாம் அதை உணராமல் இருக்கலாம் மற்றும் அதை ஒப்புக் கொள்ள நாம் விரும்பாதிருக்கலாம் - ஆனால் அதுவே உண்மையான விஷயமாய் உள்ளது. நாம் பிசாசானவன் விரும்புகின்றவைகளைச் செய்கின்ற வரையிலும் (யோவா. 8:44) நாம் பிசாசின் பிள்ளைகளாகவே இருக்கின்றோம் (1 யோவா. 3:7, 8, 10). நமது விசுவாசமானது நம்மைத் துன்மார்க்கமானவனுடைய பிள்ளைகளாய் இருப்பதிலிருந்து தேவனு டைய பிள்ளைகளாய் இருக்கும்படி மாற வழிநடத்துகின்றது (கலா. 3:26, 27).

இராஜ்யத்தின் புத்திரர்கள் என்ற வகையில் நாம் இன்னமும் இவ்வுலகில் உள்ள பொல்லாங்கனின் பிள்ளைகளின் மத்தியிலேயே வாழ்கின்றோம் (மத். 13:37-39). அறுவடையை அறுக்கத் தூதர்கள் அனுப் பப்படும் பொழுது, இராஜ்யத்தின் புத்திரர்கள் சாத்தானுடைய புத்திரர்களில் இருந்து பிரிக்கப்படுவார்கள். துன்மார்க்கர் பிதாவினுடைய இராஜ்யத்திற்குள் நுழைவதற்குப் பதிலாக அக்கினியில் தள்ளப்படுவார்கள் (மத். 13:39-43).

நாம் பாவத்தின் இருளில் இருந்தால், நாம் தேவனுடன் ஐக்கியமாய் இருக்க முடியாது - ஏனெனில் தேவன் ஒளியாய் இருக்கிறார், அவருக்குள் இருள் இல்லை (1 யோவா. 1:5-7). பாவமானது நம்மைத் தேவனிடமிருந்து பிரிக்கின்றது மற்றும் நாம் அவருடன் ஐக்கியம் கொள்ளாதபடிக்குத் தடை

GTG LIBRARY- BANGALORE

செய்கின்றது (ஏசா. 59:1, 2). இயேசுவுக்குப் புறம்பே உள்ளவர்கள் அவரிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளனர்; அவர்கள் தேவனும் கிறிஸ்துவும் இல்லாதிருக்கின்றனர் (எபே. 2:11, 12). நாம் ஞானஸ்நானத்தினால் இயேசுவுக்குள் பிரவேசிக்கும் பொழுது (ரோமர் 6:3; கலா. 3:27), இருளுடன் நமக்குள்ள தொடர்பு முடிகின்றது, மற்றும் நாம் ஒளியுடன் நமது தொடர்பைத் தொடங்குகின்றோம். இயேசுவில் நாம் அவரது இரத்தத்தின் மூலமாக தேவனுக்கு அருகில் கொண்டு வரப்படுகின்றோம் (எபே. 2:13).

தொகுப்புரை

ஞானஸ்நானம் பெறுதல் மற்றும் தேவன் எதிர்பார்க்கின்ற ஆவிக்குரிய மாற்றங்கள் ஆகியவற்றின் பயன்களை நாம் புரிந்து கொள்ளும் பொழுது நாம் ஞானஸ்நானம் பெற வேண்டும். இந்த மாற்றங்கள் இன்றி, நாம் தேவனுடைய இராஜ்யத்தினுள் நுழைய அனுமதிக்கின்ற புதுப்பிறப்பை நாம் பெற்றுக் கொள்ள முடியாது (யோவா. 3:3-5).

ஞானஸ்நானம் தேவனிடத்திலிருந்து வந்ததா அல்லது மனிதரிடத்திலிருந்து வந்ததா?

"ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்" (யோவா. 1:33) என்று யோவான் தேவனை அடையாளப்படுத்தினார். "யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ? மனுஷரால் உண்டாயிற்றோ? யாரால் உண்டாயிற்று?" (மத். 21:25) என்று கேட்டதன் மூலம் யோவானின் ஞானஸ்நானம் தேவனால் உண்டாயிற்று என்று இயேசு மறைமுகமாய் உணர்த்தினார்.

லூக்காவும் கூட, ஞானஸ்நானத்தைத் தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியாகவே முன்னிறுத்தினார்: "பரிசேயரும் நியாய சாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாகத் தேவனுடைய ஆலோசனையைத் தள்ளி விட்டார்கள்" (லூக். 7:30).

ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்த பரிசேயர்கள் யோவானிடம், "நீர் கிறிஸ்துவுமல்ல, எலியாவுமல்ல, தீர்க்கதரிசியானவருமல்லவென்றால், ஏன் ஞானஸ்நானங் கொடுக்கிறீர்? என்று கேட்டார்கள்" (யோவா. 1:25). தேவனுடைய மாபெரும் மக்களுடன் அடையாளப்படுத்த வருகின்ற செயல்முறை என்பதாக அவர்கள் ஞானஸ்நானத்தைச் சரியாகத் தொடர்புபடுத்தினர்.

GTG LIBRARY- BANGALORE

ஞானஸ்நானம் ''எப்படி?''
''யாருக்கு?'' மற்றும் ''ஏன்?''

> *பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படுவான் என்றார் (மாற். 16:15, 16).*

ஞானஸ்நானத்தைக் குறித்த எண்ணப்போக்குகள் இயேசுப் பின்பற்றுவதாக அறிவித்துக் கொள்பவர்களிடையில் பிரிவினைக்குக் காரணமாகியுள்ளன. "ஞானஸ்நானம் கட்டளையிடப்பட்டுள்ளது என்ற உறுதிப்பாட்டின் மீது கிறிஸ்தவர்கள் பொதுவாக இணைந்துள்ளனர், ஆனால் அந்தக் கருத்தின் மற்ற அம்சங்கள் எல்லாவற்றின்மீதும் அவர்கள் பிரிந்து கிடக்கின்றனர்."[1] ஞானஸ்நானம் செயல்படுத்தப்பட வேண்டிய வழிமுறை, அது யாருக்குக் கொடுக்கப்பட வேண்டும் மற்றும் அதன் நோக்கம் ஆகியவையே இந்தப் பிரிவினைக்குக் காரணமாக உள்ள மூன்று அம்சங்களாகும். இந்த விபரங்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் வேதாகமம் கூறுவது என்ன என்று நாம் கண்ணோக்குவோம்.

ஞானஸ்நானம் எவ்விதம் செயல்படுத்தப்பட்டது?

முழுக்காட்டப்படுதல் என்பது தேவனுக்கு ஏற்புடையதாய் உள்ளது என்பதை ஏறக்குறைய ஒவ்வொருவரும் ஒப்புக் கொள்வார்கள், ஆனால் முழுக்காட்டுதலுக்குப் பதிலாகத் தெளித்தலையோ அல்லது ஊற்றுதலையோ தேவன் ஏற்றுக் கொள்வாரா இல்லையா என்பதில்தான் விவாதம் எழுகின்றது.

தேவனுக்குத் தொடர்புடைய எல்லா விஷயங்களிலும் நாம் உறுதியானதாய் இருக்கின்ற வழிமுறையைத்தான் பின்பற்ற வேண்டும். ''ஞானஸ்நானம் கொடுத்தல்'' (''திருமுழுக்குக் கொடுத்தல்'') என்ற வார்த்தையில் உள்ள சந்தர்ப்பப் பொருளே, ஊற்றுதல் அல்லது தெளித்தல் என்பவற்றையல்ல, ஆனால் முழுக்காட்டுதலையே சுட்டிக்காட்டுகின்றது.

GTG LIBRARY- BANGALORE

ஞானஸ்நானம் என்பதற்கு உலகப் பிரகாரமான அகராதிகள் தற்கால அர்த்தமாக “தெளித்தல், ஊற்றுதல் அல்லது முழுக்குதல்” என்பவற்றைக் கொடுத்தாலும், அவைகள் “ஞானஸ்நானப் படுத்துதல்” என்பதற்கான கிரேக்க வார்த்தை வடிவத்தின் சொல் தோற்ற வரலாற்றைத் தரும் பொழுது, அச்சொல் (தொடக்கத்தில்) “அமிழ்த்துதல்” அல்லது “முழுக்காட்டுதல்” என்று அர்த்தப்பட்டதாகவே எடுத்துரைக்கின்றன:

> *The American Heritage® Dictionary:* “baptize” is derived from “Gk. *baptein,* to dip.”[2]
>
> *The Anchor Bible Dictionary:* “The Gk. verb for ‘baptize’, *baptizein,* is formed from *baptein,* ‘dip,’ and means ‘dip frequently or intensively, plunge, immerse.’”[3]
>
> *Origins, a Short Etymological Dictionary of Modern English:* “The effectual Origin lies in Gr *baptizein,* a modified form of *baptein* ... to dip in water.”[4]

மற்ற எல்லா முக்கியமான அகராதிகள் யாவும் “அமிழ்த்துதல்” அல்லது “முழுக்காட்டுதல்” என்ற விளக்கத்தை ஒப்புக் கொள்ளுகின்றன.

மேலும் நாம், “ஞானஸ்நானம் என்பதன் வடிவம், தொடக்க காலத்தில் உடல் முழுவதையும் தண்ணீருக்குள் முழுக்காட்டுதல் என்பதாகவே இருந்தது, ஆனால் 2ம் நூற்றாண்டு முதல் நீரை ஊற்றி ஞானஸ்நானம் கொடுத்தல் என்பது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைமையாக உள்ளது”[5] என்றும் வாசிக்கின்றோம். “பழங்கால ஞானஸ்நானத் தொட்டிகள் காண்பிக்கின்றபடி, பழங்காலங்களில் முழுக்காட்டுதல்தான் வழக்கமான நடைமுறையாய் இருந்துள்ளது”[6] என்றும் வாசிக்கின்றோம்.

இந்த முறைமையின் நோக்கம் தெளிவாய் உள்ளது. ஆண்டர்ஸ் நைக்ரேன் அவர்கள், “ஞானஸ்நானம் பெறுபவர் தண்ணீருக்குள் முழுக்காட்டப்படும் பொழுது, அந்தச் செயல்பாடானது ‘கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணப்படுதல்’ என்பதைக் குறிக்கின்றது; மற்றும் அவர் தண்ணீரில் இருந்து வெளியே வருதல் என்பது ‘கிறிஸ்துவுடன் உயிர்த்தெழுதலை’ குறிக்கின்றது” என்று எழுதினார்.[7]

ரோமர் 6:4ஐக் குறித்து எவரெட் F. ஹாரிஸன் அவர்கள், “இருப்பினும் ஒரு கண நேரத்திற்கு ஞானஸ்நானத்தின் தண்ணீரின் கீழ் உடலானது மூழ்கியிருக்கையில் கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணப்படுதலையே [பவுல்] சித்தரிக்கின்றார் என்பது உறுதி” என்று கூறினார்.[8]

J. B. லைட்ஃபுட் அவர்கள், “பேராசிரியர் [B.] ஜோவாட் சரியாகக் கவனித்துள்ளபடி, ஞானஸ்நானத்தின் உருவகத்தை நினைவுகூருவதற்காக அப்போஸ்தலர், ‘மரித்த’ என்ற வார்த்தைக்குப் பதிலாக ‘அடக்கம் பண்ணப்பட்டோம்’ என்ற சொற்றொடரை அறிமுகப்படுத்துகின்றார், இது தெளித்தல் என்ற நமது நாட்களின் நடைமுறையில் மறைந்து போவதாயிருக்கின்ற ஒரு ஒப்புவமையாக உள்ளது” என்று விளக்கம்

GTG LIBRARY- BANGALORE

கொடுத்தார்.[9]

மார்ட்டின் லூத்தர், "ஞானஸ்நானம் (baptism) என்ற சொற்றொடர் ஒரு கிரேக்க வார்த்தையாக உள்ளது; இது இலத்தீன் மொழியில் MERSIO என்று தரவழைக்கப்படலாம்: நாம் ஏதாவதொன்றைத் தண்ணீரில் அமிழ்த்தும் பொழுது, அது முற்றிலும் தண்ணீரினால் மூடப்படலாம். பொதுவாக அந்தப் பழக்கம் தற்போது வழக்கொழிந்ததாக இருப்பினும் (ஏனெனில் அவர்கள் பிள்ளைகளை முழுவதுமாக முழுக்காட்டுவது இல்லை, ஆனால் சிறிது தண்ணீரைக் கொண்டு அவர்களைத் தெளிக்கின்றனர்), அல்லது அவர்கள் முழுவதுமாக முழுக்காட்டப்பட்டு, மீண்டும் தண்ணீரினின்று வெளியே எடுக்கப்படா விட்டாலும், அந்த வார்த்தையின் தோற்ற கால அர்த்தமானது அதையே சுட்டிக்காட்டுகின்றது" என்று எழுதினார்.[10]

மேலும் வேதாகமத்தில் "ஞானஸ்நானப்படுத்துதல்" என்ற வார்த்தை வருகின்ற இடங்களின் சந்தர்ப்பப் பொருளானது, அதன் அர்த்தம் "முழுக்காட்டுதலே" என்றுதான் சுட்டிக் காண்பிக்கின்றது:

> *அந்த நாட்களில், இயேசு கலிலேயாவிலுள்ள நாசரேத்தூரிலிருந்து வந்து, யோர்தான் நதியில் யோவானால் ஞானஸ்நானம் பெற்றார். அவர் ஜலத்திலிருந்து கரையேறினவுடனே ... (மாற். 1:9, 10).*
>
> *சாலீம் ஊருக்குச் சமீபமான அயினோன் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்தபடியினால், யோவானும் அங்கே ஞானஸ்நானங்கொடுத்துவந்தான் (யோவா. 3:23அ).*
>
> *... அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது ... (அப். 8:38, 39).*
>
> *அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம்பண்ணப்பட்டோம் (ரோமர் 6:4இ).*
>
> *ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டவர் களாகவும், ... அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள் (கொலோ. 2:12).*

யாருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது?

இயேசுவுக்குத் தங்கள் வாழ்வை ஒப்புக் கொடுக்கும்படி முடிவெடுக்கக் கூடியவர்களாய் இருந்த ஆண்களும் பெண்களும் ஞானஸ்நானம் பெற்றனர். ஞானஸ்நானத்திற்கான இந்தத் தகுதியும், பிற தகுதிகளும், தாங்கள் செய்வது இன்னதென்று புரிந்து கொள்ளக் கூடிய அளவிற்கு வயது முதிர்ந்தவர்களுக்குத்தான் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன.

(1) சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதைக் கேட்டு *(மாற். 16:15), (2)* சுவிசேஷத்தை விசுவாசித்து *(மாற். 16:16),* மற்றும் *(3)* மனந்திரும்பு

GTG LIBRARY- BANGALORE

கின்றவர்களுக்கே (அப். 2:38) ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டும் என்று வேதாகமம் எடுத்துரைக்கின்றது. (1) பிரசங்கித்ததைக் கேட்டார்கள் (அப். 8:12; 18:8) மற்றும் (2) செய்தியை ஏற்றுக் கொண்டு விசுவாசித்தார்கள் (அப். 2:41; 8:12; 16:33, 34; 18:8) இவர்கள் ஞானஸ்நானம் பெற்ற ஆண்களும் பெண்களுமாய் இருந்தனர் (அப். 8:12) என்று அறிவிக்கப் பட்டது. தேவனுடைய செயலின்மேல் அவர்கள் கொண்டிருந்த விசுவாசத்தின் காரணமாக (கொலோ. 2:12), இருதயபூர்வமாய்க் கீழ்ப்படிந்து (ரோமர் 6:17, 18), பழைய வாழ்வை முடிவுக்குக் கொண்டு வந்து, இயேசுவைப் பின்பற்றும்படி அர்ப்பணித்த ஒரு புதிய வாழ்வை (ரோமர் 6:4-7) அவர்கள் தொடங்கினர்.

ஞானஸ்நானத்துடன் இணைந்துள்ள ஆவிக்குரிய மறைகருத்துக்களைக் குழந்தைகளால் புரிந்து கொள்ள முடியாது, அல்லது அவர்கள் ஞானஸ்நானத்திற்குத் தேவைப்படும் உறுதிப்பாட்டை மேற்கொள்ள முடியாது. போதிக்கப்பட்டு, இயேசுவில் விசுவாசம் கொண்டு, இயேசுவுக்கு ஊழியம் செய்யும்படி தங்கள் வாழ்வை மாற்ற முடிவெடுத்துள்ள வர்களுக்குத்தான் ஞானஸ்நானம் தரப்பட வேண்டியதாய் இருக்கின்றது.

பரலோக இராஜ்யமானது, சிறு பிள்ளைகளைப் போலானவர்களைக் கொண்டதாக இருக்கிறது (மத். 19:14). அவர்கள் ஆதாமின் பாவங்களைச் சுதந்தரித்துக் கொண்டு, பாவிகளாகப் பிறக்கவில்லை, அல்லது சில உபதேச நூல்களில் போதிக்கப்படுவது போல அவர்கள் இயற்கையாகவே கெட்டுப் போனவர்களாய்ப் பிறப்பதில்லை.

நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியை ஆதாமும் ஏவாளும் உண்ட பிறகு மனிதன் கெடுமதியாளனாக மற்றும் ஒழுக்கம் கெட்டவனாக ஆகியிருந்தான் என்று தேவன் கூறவில்லை. மாறாக அவர், "இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப் போல் ஆனான்" (ஆதி. 3:22அ) என்றுதான் கூறினார். அவர்களும் அவர்களைத் தொடர்ந்து வந்துள்ள எல்லா சந்ததியும் ஜீவ மரத்திலிருந்து பிரிந்து நிற்றல் என்பதே தண்டனையாய் இருந்தது. ஆதாமுக்குள் நாம் அனைவரும் சரீர மரணத்தை எதிர் கொள்ளுகின்றோம் (1 கொரி. 15:22); ஆனால் ஆவிக்குரிய வட்டாரத்தில் ஒவ்வொருவரும் அவரவருடைய சொந்த ஆவிக்குரிய நிலைக்குப் பொறுப்பாளியாக உள்ளோம். ஆதாம் செய்தவற்றின் அடிப்படையில் அல்ல, ஆனால் நாம் ஒவ்வொருவரும் நமது உடலில் இருக்கையில் செய்தவற்றின் அடிப்படையில்தான் நமக்கு நியாயத்தீர்ப்பு அமையும் (2 கொரி. 5:10).[11]

ஞானஸ்நானத்தின் நோக்கம் என்னவாக இருந்தது?

யோவானின் ஞானஸ்நானமும் மன்னிப்பும்

வரப் போகிறவராய் இருந்த மேசியாவுக்கு மக்களை ஆயத்தப் படுத்துதலே யோவானின் ஊழியமாய் இருந்தது (மத். 3:3). அவர் தாம்

GTG LIBRARY- BANGALORE

பிரசங்கித்தவற்றைச் செய்ததினால் மட்டுமின்றி, மக்களை ஞானஸ்நானத் திற்குள் கொண்டு வந்ததினாலும் இதை அவர் செய்தார். சீஷத்துவத்திற்கு உறுதிப்பாடு அவசியமானது என்று மக்கள் உணருவதற்கு அவர் உதவி செய்தார்.

பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெற்றுக் கொள்வதற்கு ஞானஸ் நானம் அவசியமானதாக உள்ளது என்பதை ஏற்றுக் கொள்ளுமாறு அவர்களுடைய மனங்களை அவர் தயாரித்தார். யோவான், ''பாவ மன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைப்'' பிரசங்கித்ததாக மாற்கு 1:4 மற்றும் லூக்கா 3:3 ஆகிய வசனங்கள் கூறுகின்றன. யோவானிடம் ஞானஸ்நானம் பெற வந்த மக்கள் பாவங்களை அறிக்கையிட்டு (மத். 3:6) மன்னிப்பை நாடினர்.

"பாவ மன்னிப்பிற்காக"

இயேசுவின் நாமத்தினாலே பாவமன்னிப்பு என்பது இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்குப் பிறகு முதன்முதலாக எருசலேமில் போதிக்கத் தொடங்கப்பட வேண்டியதாயிருந்தது (லூக். 24:46, 47). அதற்கு முன்பு மன்னிப்பு என்பது குறிப்பிடப்பட்டிருந்தது, ஆனால் அவருடைய நாமத்தினாலே மன்னிப்பு என்பது குறிப்பிடப்பட வில்லை. இயேசுவின் நாமத்தில் மன்னிப்பு என்பதை முதன்முதலில் பேதுருவே பிரசங்கித்தார். ஆண்டவரும் கிறிஸ்துவுமானவரைச் சிலுவையில் அறைந்து விட்டோமே என்ற உண்மையானால் தொடப்பட்ட நிலையில் இருந்தவர்களிடம் "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்" (அப். 2:38அ) என்று பேதுரு கூறினார். அவர் எருசலேமில் பிரசங்கித்த இந்தச் செய்தியானது எல்லா நாட்டவருக்கும் உரியதாக உள்ளது (லூக். 24:47).

"பாவமன்னிப்புக்கென்று" அல்லது "பாவமன்னிப்புண்டாகும்படி" என்ற சொற்றொடரானது மத். 26:28; மாற். 1:4 மற்றும் லூக். 3:6; 24:47 ஆகிய வசனங்களில் காணப்படுகின்றன. நமது பாவங்கள் ஏற்கனவே மன்னிக்கப்பட்டுள்ளதால் இயேசு தம்முடைய இரத்தத்தைச் சிந்தினார் என்று தீவிரமான எந்த விசுவாசியும் கூறமாட்டார் (மத். 26:28) அல்லது நமது பாவங்கள் ஏற்கனவே மன்னிக்கப்பட்டதால் நாம் மனந்திரும்ப வேண்டும் என்று கூட அவர் கூறமாட்டார் (லூக். 24:47). பிறகு ஏன் அப். 2:38ல் உள்ள அதே சொற்றொடரானது ''பாவமன்னிப்புக்கென்று'' என்பதைத் தவிர வேறு எதையாவது அர்த்தப்படுத்துகின்றது என்பதில் எவரொருவரும் நிறைவடைய வேண்டும்? சில கையெழுத்துப் பிரதிகளில், லூக்கா 24:47ல் ''பாவமன்னிப்புக்காக'' என்பதற்குப் பதிலாக, "பாவ மன்னிப்பும்" என்றுள்ளது. இருப்பினும், "and" ("உம்") (Gk.: *Kai*) என்ற வார்த்தையின் பயன்பாடானது "for" (''க்கென்று'') (Gk.: *eis*) என்ற வார்த்தையின் பயன்பாட்டைக் காட்டிலும் கையெழுத்துப் பிரதிகளின் ஆதாரத்தை மிகக் குறைவாகவே பெற்றுள்ளது, இது ஐக்கிய வேதாகமச் சங்கங்களின் சமீபத்திய வெளியீடுகளிலும் நெஸ்லே - ஆலன்ட் கிரேக்க

GTG LIBRARY- BANGALORE

வசனப் பகுதியிலும் பிரதிபலிக்கப்பட்டுள்ளது.[12]

அப். 2:38ல் "மற்றும்" என்பதைக் கொண்டு இணைக்கப்பட்டுள்ள மனந்திரும்புதலும் ஞானஸ்நானமும் ஆகிய இரண்டுமே "பாவமன்னிப்புக் கென்ற" ஒரே நோக்கத்திற்கானவைகளாகவே உள்ளன. இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியமானது என்பதை விசுவாசிக்க விரும்பாததுதான் சிலர் பேதுருவின் இக்கூற்றிலிருந்து தப்பிக்கச் சூழ்ச்சி செய்வதற்கு முக்கிய காரணமாகும். இவ்வசனப் பகுதியில் உள்ள eis என்பது புதிய ஏற்பாட்டின் மற்ற சந்தர்ப்பப் பொருள்களில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளபடியாக ''பெற்றுக் கொள்வதற்காக'' என்று அர்த்தப்படுத்துவதாகப் புரிந்து கொள்ளப்படுதலே மிகவும் இயல்பான வழிமுறையாக உள்ளது.

"பாவமன்னிப்புக்கென்று" என்ற சொற்றொடரில் (மத். 26:28; மாற். 1:4; லூக். 3:3; 24:47; அப். 2:38 ஆகியவற்றில் காணப்படுகின்றபடி) உள்ள "என்று" என்பது கிரேக்க மொழியின் eis என்பதாக உள்ளது. ரோமர் 6:3ல் உள்ள ''என்று'' eis என்பது பற்றி J.B. லைட்ஃபுட் அவர்கள், ''இந்த முன்னிடைச் சொல்லானது அதற்குள் உட்படுத்தப்படும் கருத்தைத் தெரிவிக்கின்றது" என்று எழுதினார்; பிறகு அவர், "மாற்கு 1:4ல் eis aphesin harmartion [''பாவமன்னிப்புக்கென்று''] என்பதில் உள்ள முன்னிடைச் சொல்லின் அர்த்தமானது ... ஞானஸ்நானத்தின் நோக்கம் மற்றும் விளைவு ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றது" என்று எடுத்துரைத்தார்.[13]

மாற்கு 1:4ல் உள்ள eis என்பது "பாவமன்னிப்பு பெறப்படலாம்" என்று அர்த்தப்படுவதாக சார்லஸ் ஹோட்ஜ் அவர்கள் எடுத்துரைத்தார்.[14]

டக்ளஸ் மூ அவர்கள், "புதிய ஏற்பாட்டில் baptizo என்பதற்குப் பிறகு eis என்பது வருகின்ற அடுத்த ஒரே ஒரு இடம் (பொருள்) என்பது குறிப்பிட்ட இடம் சார்ந்ததாக/இயல்பான கருத்துள்ளதாக (மாற். 1:9 [யோர்தான் நதியில்]) அல்லது நோக்கத்தை/விளைவைக் குறிப்பிடுவதாக (மத். 3:11 மற்றும் அப். 2:38 [பாவமன்னிப்பு]) உள்ளது; ...'' என்றெழுதினார்.[15]

ஞானஸ்நானம் பெறுகின்றவர் தமது ஞானஸ்நானத்திற்கான நோக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று சிலர் உறுதிப்படுத்த முனைகின்றனர். ஒருவர் தேவனுக்குக் கீழ்ப்படிவதற்காக ஞானஸ்நானம் பெற்றால் - அவர் ஞானஸ்நானத்தின் நோக்கத்தைப் புரிந்து கொண்டிருந்தாலும், அல்லது புரிந்து கொள்ளாதிருந்தாலும் - அவர் மன்னிக்கப்படுவார் என்று அவர்கள் கூறுகின்றனர். மன்னிப்பு என்பது தேவனுடைய பகுதியென்றும் ஞானஸ்நானம் என்பது மனிதனுடைய பகுதியென்றும் ஆலோசிக்கப்படுகின்றது. இந்தக் கண்ணோட்டமானது, ஞானஸ்நானத்தின் நோக்கம் என்பதும் கூட மனிதனின் பகுதியாகவே உள்ளது என்பதைக் காணாமல் விட்டுவிடுகின்றது.

ஒரு கணவர் தமது மனைவியைப் புண்படுத்தி விட்டால், மற்றும் அவள் "நீங்கள் எனக்கு ஒரு டஜன் சிவப்பு ரோஜாக்களைக் கொடுத்தால் நான் உங்களை மன்னித்து விடுவேன்" என்று கூறினாள் என்றால், அவர் தாம் மன்னிக்கப்படும்படியாக அவளுக்கு அந்த ரோஜா மலர்களைக் கொடுக்க முடியும். அவர் மன்னிக்கப்படுவதற்காக, மன்னிக்கப்பட வேண்டும் என்ற

GTG LIBRARY- BANGALORE

விருப்பத்துடன் அல்லது மன்னிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் இதைச் செய்வார். மன்னித்தல் என்பது அவளுடைய பாகமாய் இருக்கும், ஆனால் அவர் மன்னிக்கப்படுவதற்காக ரோஜா மலர்களைத் தருதல் என்பது அவருடைய பாகமாய் இருக்கும்.

ஞானஸ்நானத்தில் பரிசுத்த ஆவியானவர் அருளப்படுவார் என்பதைப் புரிந்து கொள்ளுதல் அவசியமில்லை என்றால், பாவமன்னிப்பு என்பது ஞானஸ்நானத்தில் நோக்கமாக உள்ளது என்பதைப் புரிந்து கொள்ளுதலும் அவசியமில்லை என்று ஒரு மறுப்பு எழுப்பப்பட்டுள்ளது. பாவமன்னிப்பு என்ற நோக்கத்திற்கானதாகவே ஞானஸ்நானம் உள்ளது. ஞானஸ்நானம் பெற்று மன்னிக்கப் படுகின்றவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்படுகிறார். ஞானஸ்நானம் என்பது பாவமன்னிப்பிற்கானதாக உள்ளதால், நாம் நமது ஞானஸ்நானத்தின் நோக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு நேர்மாறான வகையில், பரிசுத்த ஆவியானவருடைய வரத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமென்ற அவசியம் இருக்காது, ஏனெனில் ஞானஸ்நானம் என்பது பரிசுத்த ஆவியானவரைப் பெறுவதற்கானதல்ல.

மனம் புண்படுத்தப்பட்ட மனைவி, "நீங்கள் மன்னிக்கப்படுவதற்காக ஒரு டஜன் ரோஜா மலர்களை எனக்குக் கொடுங்கள்; நான் உங்களுக்கு ஒரு முத்தம் தருவேன்" என்று கூறக் கூடும். அவளது கணவர் மன்னிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காக ரோஜா மலர்களைக் கொடுக்க முடியும் மற்றும் அதன் பிறகு அவர் மன்னிக்கப்பட்ட காரணத்தினால் முத்தத்தைப் பெற முடியும். நாம் மன்னிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் பெற வேண்டும்; பிறகு நாம் மன்னிக்கப்பட்டதால் பரிசுத்த ஆவியானவரைப் பெறுகின்றோம்.

பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு யூதர்களிடத்தில், அவர்கள் மனந்திரும்பி, அவர்களின் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டும், அதைத் தொடர்ந்து அவர்கள் பரிசுத்த ஆவியானவரை வரமாகப் பெற்றுக் கொள்வார்கள் என்று கூறினார்.

இயேசுவின் ஞானஸ்நானம்

இயேசு ஞானஸ்நானம் பெற்ற பொழுது பாவமற்றவராயிருந்தார், அவர் நமக்கு முன்மாதிரியாக உள்ளார். எனவே இது, நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது ஏற்கனவே மன்னிக்கப்பட்டு, பாவமற்றவர்களாயிருக்க வேண்டும் என்றே அர்த்தப்படுகின்றது என்று சிலர் போதிக்கின்றனர்.

இயேசுவை நோக்கி நமது கண்களை நிலைநிறுத்தி நாம் நமது ஓட்டத்தை ஓட வேண்டும் என்பதில் அவர் நமது முன்மாதிரியாக இருக்கின்றார் (எபி. 12:2). அவர் நடந்தது போலவே நாமும் நடக்க வேண்டும், அவருக்குள் இருந்த அதே சிந்தை நமக்குள்ளும் இருக்க வேண்டும், மற்றும் பவுல் கிறிஸ்துவைப் பின்பற்றியது போல நாம் பவுலைப் பின்பற்ற வேண்டியவர்களாய் இருக்க வேண்டும் (1 யோவா. 2:6; பிலி. 2:5; 1 கொரி. 11:1). நீதிக்காகத் துன்புறுவதில் இயேசு நமது முன்மாதிரியாக உள்ளார் என்று பேதுரு எழுதினார் (1 பேது. 2:21). இயேசு தமது ஜீவனைக்

GTG LIBRARY- BANGALORE

கொடுத்ததால், நாம் சகோதரருக்காக நமது ஜீவனைக் கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம் (1 யோவா. 3:16).

இயேசு நமது முன்மாதிரியாக இருக்கின்றார் என்பது, அவர் செய்த எல்லாவற்றையும் மற்றும் அதே நோக்கத்திற்காக நாம் செய்ய வேண்டும் என்று அர்த்தப்படுத்துகின்றதா? அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றும் நமது முயற்சியில் பின்வரும் கொள்கைகள் நம்மை வழிகாட்டி நடத்த முடியும்.

முதலாவது, இயேசு செய்தவற்றில் சில விஷயங்கள் தற்செயலானவை களாக/அவருக்கு மட்டுமே உரியவைகளாக மற்றும் நாம் பின்பற்ற அவசியமற்றவைகளாக உள்ளன. அவர் திருமணம் செய்து கொள்ளா திருந்தார். அவருக்குப் பிள்ளைகள் மற்றும் வீடு இருந்ததில்லை (லூக். 9:58). அவர் முப்பது வயதில் ஞானஸ்நானம் பெற்று பிரசங்கிக்கத் தொடங்கினார், மற்றும் தம் ஊழியத்தைத் தொடர அவர் பன்னிரு அப்போஸ்தலர்களைத் தேர்ந்து கொண்டார் (லூக். 3:21-24; 6:13). தம்மைத் தாமே ஆதரித்துக் கொள்வதற்குப் பதிலாக அவர், போதிப்பதில் நேரத்தைச் செலவிடும் படியாக மற்றவர்களிடமிருந்து பொருளாதார உதவியைப் பெற்றுக் கொண்டார் (லூக். 8:3).

இரண்டாவது, அவர் செய்த சில விஷயங்கள் கொள்கையளவில் உதாரணங்களாய் உள்ளன, ஆனால் நாம் அவற்றைச் செய்ய வேண்டும் என்று நம்மிடத்தில் கேட்கப்படுவதில்லை. நியாயப்பிரமாணத்தின்படி அவர் விருத்தசேதனம் பண்ணப்பட்டார் (லூக். 2:21), ஆனால் அது நமக்குக் கட்டளையாக இருப்பதில்லை (கலா. 6:15). அவரது ஞானஸ்நானத்திற்குப் பிறகு, அவர் நாற்பது நாட்கள் உபவாசம் இருந்தார்; பின்பு அவர் தம்முடைய ஊழியத்தைத் தொடங்கினார் (மத். 4:2). அவர் ஓய்வுநாளன்று ஜெப ஆலயங்களில் பிரசங்கித்தார் (லூக். 4:16, 31, 44; 6:6), பஸ்காவைக் கடைப்பிடித்தார் (லூக். 22:15, 16), மற்றும் மிருக பலி செலுத்தும்படியும், பழைய ஏற்பாட்டுக் கட்டளைகளைக் கடைப்பிடிக்கும்படியும் யூதமக்களுக்கு அவர் அறிவுறுத்தினார் (மத். 19:17; லூக். 5:14; 17:14). அவர் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்தார், அதன் கீழேயே அவர் பிறந்தார், நாம் தேவனுடைய சித்தத்திற்கு எவ்விதம் கீழ்ப்படிய வேண்டும் என்பதற்கு இவ்விதமாக அவர் முன்மாதிரியானார் (கலா. 4:4). இவை எல்லாவற்றையும் இயேசு செயல்படுத்தினார், ஆனால் இவைகள் இன்றைய நாட்களில் நம்மைக் கட்டுப்படுத்துவதில்லை (கலா. 3:24, 25; எபி. 7:12, 19; 10:9).

மூன்றாவது, அவர் செய்த சில விஷயங்கள் அதே போன்ற செயல்பாட்டளவில் அல்ல ஆனால் கொள்கையளவில் பின்பற்றப்பட வேண்டியவைகளாக உள்ளன. மீனின் வாயிலிருந்து பேதுரு எடுத்த ஒரு நாணயத்தைப் பயன்படுத்தி இயேசு வரி செலுத்தினார் (மத். 17:24-27). நாம் வரி செலுத்த வேண்டும் (ரோமர் 13:6), ஆனால் மீனின் வாயிலிருந்து எடுத்த பணத்தினால் அல்ல. அவர் தாழ்மையான ஊழியத்திற்கு உதாரணமாகத் தம் சீஷர்களின் பாதங்களைக் கழுவினார் (யோவா. 13:5-15) இதை உண்மையாகவே அதே செயல்பாட்டில் அல்ல ஆனால் கொள்கையளவில் அவரது சீஷர்கள் பின்பற்ற வேண்டும்.

GTG LIBRARY- BANGALORE

நான்காவது, அவர் செய்த சில விஷயங்கள் மாறுபட்ட ஒரு நோக்கத்திற்காகச் செயல்முறையில் பின்பற்றப்பட வேண்டியவைகளாய் உள்ளன. இயேசு, கர்த்தருடைய இராப் போஜனத்தை ஒரு முன்மாதிரி என்ற வகையில் கடைப்பிடித்தாரே தவிர, தம்மைத் தாமே நினைவுகூருவதற்காகக் கடைப்பிடிக்கவில்லை (1 கொரி. 11:23-25). நாம் மற்றவர்களுக்காக நமது ஜீவனைக் கொடுக்க வேண்டும் என்று இயேசு நமக்குக் காண்பித்தார் (1 பேது. 2:21; 1 யோவா. 3:16). நாம் மற்றவர்களுக்காக இறக்கலாம், ஆனால் இயேசு தம்முடைய இரத்தத்தைச் சிந்திய அதே நோக்கத்திற்காக நாம் இறக்க முடியாது (மத். 26:28).

நாம் ஞானஸ்நானம் பெற வேண்டும், ஆனால் இயேசு ஞானஸ்நானம் பெற்ற அதே நோக்கத்திற்காக அல்ல. அவர் யோவானின் ஞானஸ் நானத்தைப் பெற்றார். யோவான் பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைப் பிரசங்கித்தார் (மாற். 1:4; லூக். 3:3). இந்த ஞானஸ்நானம் பெற வந்தவர்கள் யோவான் பிரசங்கித்த மன்னிப்பை நாடியதைச் சுட்டிக்காட்டும் வகையில் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டனர் (மத். 3:6). மன்னிக்கப்படுவதற்காக மனந்திரும்பிய பாவி என்ற வகையில் யோவானின் ஞானஸ்நானம் பெற வந்த மற்ற எல்லாரையும் போல இயேசு ஞானஸ்நானம் பெறவில்லை.

இயேசு பாவம் செய்திராதிருந்தவர் எனவே ஞானஸ்நானம் பெறுவதற்கு அவர் நமக்கு உண்மையான முன்மாதிரியாக இருக்க முடியாது; ஆகையால் அவர் தமது பாவங்களிலிருந்து மனந்திரும்பவும் முடியாது. இயேசு எல்லா நீதியையும் நிறைவேற்றுவதற்காகவே ஞானஸ்நானம் பெற்றார். இயேசு பெற்ற ஞானஸ்நானம் நமக்கானது அல்ல. அவர் யோவானின் ஞானஸ்நானத்தைப் பெற்றார். இயேசு செய்தது போல இன்றைய நாட்களில் நாம் யோவானின் ஞானஸ்நானத்தைப் பெற்றால், நாம் மீண்டும் ஞானஸ்நானம் பெற வேண்டியது அவசியமாய் இருக்கும். (அப். 19:1-5ஐக் காணவும்.)

‘‘எல்லா நீதியையும் நிறைவேற்றுதல்’’ என்பதே இயேசு பெற்ற ஞானஸ்நானத்தின் நோக்கமாய் இருந்தது (மத். 3:15). அவர் ஒருவர் மட்டுமே இந்த நோக்கத்திற்காக ஞானஸ்நானம் பெற முடியும். நாம் நமது ஞானஸ்நானத்தின் நோக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டியவர்களாய் இருப்பது போலவே, அவர் தம்முடைய ஞானஸ்நானத்தின் நோக்கத்தைப் புரிந்து கொண்டிருந்தார். அவரது ஞானஸ்நானமானது நாம் என்ன செய்ய வேண்டும் என்பதற்கு ஒரு முன்மாதிரியாக உள்ளது, ஆனால் நாம் ஏன் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பதற்கு அது ஒரு முன்மாதிரியாய் இருப்பதில்லை. அவர் நீதியானவைகளே மட்டுமே செய்ததாலும், பாவம் இல்லாதவராய் இருந்ததாலும், அவர் எல்லா நீதியையும் நிறைவேற்றுவதற்கு ஞானஸ்நானம் பெற முடிந்தது. அதற்கு நேர் மாறான வகையில், நாம் நீதியுள்ளவர்களாகும்படி ஞானஸ்நானம் பெற வேண்டிய பாவிகளாக இருக்கின்றோம். சில விஷயங்களில் இயேசு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதற்கு நமது முன்மாதிரியாய் உள்ளார், ஆனால் நாம் அதை ஏன் செய்ய வேண்டும் என்பதற்கு அவர் முன்மாதிரியாக இருப்பதில்லை.

GTG LIBRARY- BANGALORE

ஐந்தாவது, சில விஷயங்களில் இயேசு, கொள்கை, நடைமுறை மற்றும் நோக்கம் ஆகியவற்றில் நமது முன்மாதிரியாக இருக்கின்றார். உதாரணமாக, அன்பு, ஊழியம், பரிவிரக்கம் மற்றும் தம்மையே கொடுத்தல் (ரோமர் 15:2, 3அ) ஆகியவற்றில் அவரது முன்மாதிரிகளைக் கவனியுங்கள். இவ்வழிமுறைகளில் நாம் அவரை முழுமையாகப் பின்பற்ற வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

தொகுப்புரை

பாவமன்னிப்பைப் பெறுவதே ஞானஸ்நானத்தின் நோக்கம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இயேசு அதைக் கட்டளையிட்டார்; பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் அதைப் பிரசங்கித்தனர்; நாம் அதற்குக் கீழ்ப்படிய வேண்டும்.

ஞானஸ்நானத்தைப் பற்றிப் பின்வருமாறு தொகுத்துரைக்கப் பட்டுள்ளது: "ஆதிக் கிறிஸ்தவர்களால் மிகவும் உணர்வுப்பூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த சடங்குகளில் ஞானஸ்நானம் ஒன்றாக இருந்தது. பாவத்திலிருந்து விளைந்த எல்லா அசுத்தங்களையும் கழுவி இவ்விதமாய் ஒருவருடைய அல்லது ஒருத்தியுடைய புதிய வாழ்வுக்கான ஆரம்ப நிலையைத் தயாரித்தல் என்பதே அதன் நோக்கமாயிருந்தது. அதன் மிகவும் அடிப்படையான வடிவமைப்பில் இச்சடங்கானது இதைப் பெறுபவர் அறிக்கையிட்டு அதைத் தொடர்ந்து இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் தண்ணீரில் முற்றிலுமாக முழுக்காட்டப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்வதாய் இருந்தது."[16]

குறிப்புகள்

[1]Harold Lindsell, ed., Harper Study Bible (Grand Rapids, Mich.: Zondervan, 1965), 1491, n28.19a. [2]*The American Heritage® Dictionary,* 3d ed., s.v. "baptize." [3]David Noel Freedman, *The Anchor Bible Dictionary* (New York: Doubleday, 1992), 583. [4]*Origins, a Short Etymological Dictionary of Modern English* (London: Routledge & Kegan Paul, 1959), 38. [5]Massey H. Shepherd Jr., *Encyclopedia International* (Danbury, Conn.: Lexicon Publications, 1981), 378. [6]Robert Cecil Mortimer, *Chamber's Encyclopedia.* vol. 2, rev. ed. (London: Pergamon Press, 1967), 112. [7]Anders Nygren, *Commentary on Romans,* trans. Carl C. Rasmussen (Philadelphia: Muhlenberg Press, 1949), 233. [8]Everett F. Harrison, *The Expositor's Bible Commentary,* vol. 10, *Romans - Galatians,* gen. ed. Frank E. Gaebelein (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1976), 69. [9]J. B. Lightfoot, *Notes on the Epistles of St. Paul: I-II Thessalonians, I Corinthians 1-7, Romans 1-7. Ephesians 1:1-14,* Thornapple Commentaries, ed., J. R. Harmer (London: Macmillan and Co., 1895: reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1980), 296. [10]Martin Luther *Opera* 1.72.

[11]ஆதாமும் ஏவாளும் நன்மை தீமை அறியும் மரத்தின் கனியை உண்ட பிறகு ஆவிக்குரிய வகையிலோ அல்லது ஒழுக்க ரீதியான வகையிலோ சீர் கெட்டிருந்தால், அவர்கள் ஒழுங்கான வழியில் நடந்து கொள்வதை நாடியிருக்க மாட்டார்கள்.

GTG LIBRARY- BANGALORE

விலக்கப்பட்ட மரத்தின் கனியை உண்டதின் விளைவாக ஏற்பட்ட புதிய புரிந்து கொள்ளுதலின் அடிப்படையில் அவர்கள் தங்கள் உடலுக்கு உடை உடுத்திக் கொள்ளும்படி நாடியது (ஆதி. 3:7) ஒழுக்க ரீதியாகச் செயல்படுவதற்கான ஒரு முயற்சி என்றே புரிந்து கொள்ளப்பட வேண்டும். [12]The Greek New Testament, United Bible Societies, 4th ed., Nestle-Aland Greek Text, 26th ed. [13]Lightfoot, 295-96. [14]Charles Hodge, *Commentary on the Epistle to the Romans* (Princeton: Np., 1886; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1974), 193. [15]Douglas J. Moo, *The Epistle to the Romans,* The New International Commentary on the New Testament, gen. eds. Ned B. Stonehouse, F. F. Bruce, and Gordon D. Fee (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1996), 360, n42. [16]Gayla Visalli, ed., *After Jesus: The Triumph of Christianity* (New York: Reader's Digest, n.d.), 36.

ஞானஸ்நானத்தின் அர்த்தம்

“முதலாவது, ஞானஸ்நானம் என்பது சந்தர்ப்பப் பொருளில் வேறு விதமாய்க் குறிப்பிடப்படாத பட்சத்தில், தண்ணீர் ஞானஸ்நானத்தையே அர்த்தப்படுத்துகின்றது ... ஆனால் ஞானஸ்நானம் எந்தப் பொருளைக் கொண்டு கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடுதலின்றி ‘ஞானஸ்நானம்’ மற்றும் ‘ஞானஸ்நானப்படுத்தப்பட்டனர்’ என்ற சொற்றொடர்கள் வரும் இடங்களில் அவை தண்ணீர் ஞானஸ்நானத்தின் குறிப்புகளாகவே உள்ளன என்று கூறுதலே பாதுகாப்பானதாக உள்ளது. இருப்பினும் தண்ணீர் ஞானஸ்நானம் என்று அர்த்தப்படாத பொழுது ஞானஸ்நானத்திற்கு பதில் பொருள் ஒன்று குறிப்பிடப்படுகின்றது: எடுத்துக்காட்டாக, ‘ஆவியினால்’.” [1] என்று ஜான் ஸ்டாட் அவர்கள் எழுதினார்.

இந்தக் கருத்தை ஆல்பிரெக்ட் ஒய்ப்க் ஒப்புக் கொள்கின்றார்: “ஞானஸ்நானம் பற்றிய புதிய ஏற்பாட்டுக் குறிப்புகள், அவற்றின் சந்தர்ப்பப் பொருளானது வேறு வகையில் குறிப்பிடாத பட்சத்தில், தண்ணீர் ஞானஸ்நானம் என்றே நினைக்கப்பட வேண்டும். ஞானஸ்நானம் என்பது ‘தண்ணீரில் முழுக்காட்டுதல்’ என்றே அர்த்தப்படுகின்றது. ஆகையால் ஊடகம் ஒன்றைக் குறிப்பிடுதல் அவசியமற்றதாக உள்ளது.”[2]

குறிப்புகள்

[1]John Stott, *Romans: God's Good News for the World* (Downers Grove, Ill.: InterVarsity Press, 1994), 173. [2]Albrecht Oepke, *“baptizo,” Theological Dictionary of the New Testament,* vol. 1, ed. Gerhard Kittel, trans. Geoffrey W. Bromiley, (Grand Rapids. Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 539.

GTG LIBRARY- BANGALORE

ஞானஸ்நானம் மற்றும் "புதிதான ஜீவன்"

> *கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படி, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம் (ரோமர் 6:3, 4).*

ரோமர் 6:1-7ஐப் புரிந்து கொள்ளுவதற்காக நாம் இவ்வசனங்களுக்கு வழி நடத்திய பவுலின் சிந்தனைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். அதிகாரங்கள் 1 முதல் 3 வரையிலும் பவுல், கிறிஸ்துவைக் கொண்டிராத புறஜாதியார் மற்றும் யூதர்கள் ஆகியோரின் நிலை பற்றி கலந்துரையாடினார்.

புறஜாதியார் பொல்லாங்கான மற்றும் பாவம் நிறைந்த வாழ்வில் ஈடுபட்டிருந்தனர், அச்செய்கைகளில் பெரும்பாலானவை யூதர்களுக்கு அருவருப்பாய் இருந்தன. அவர்கள் விக்கிரகாராதனைக்காரர்களாகவும், ஒழுக்கற்ற பாலுறவு கொள்பவர்களாகவும், மற்றும் அநீதியுள்ளவர்களாகவும் இருந்தனர் (1:24-32).

யூதர்களும் கூட இதே செயல்முறைகளில் சிலவற்றைத் தாங்களும் பங்கேற்று நடப்பித்ததால் அவர்கள் சிறந்த நிலையில் இருக்கவில்லை (2:1). அவர்கள் தங்களுடைய ஆவிக்குரிய நலனுக்கு, தாங்கள் பிரமாணத்தைப் பெற்றிருந்ததையும் மற்றும் விருத்தசேதனம் செய்யப்பட்டிருந்ததையும் சார்ந்திருந்தனர் (2:17, 25). அவர்கள் நியாயப்பிரமாணத்தின் தர அளவையின்படி வாழவில்லை அல்லது விருத்தசேதனத்தின் அர்த்தத்தைத் தங்கள் வாழ்வில் கொண்டிருக்கவில்லை என்பது மாய்மாலத்திற்குரியதாக இருந்தது. அவர்களும் புறஜாதியாரைப் போலவே பாவிகளாய் இருந்தனர் (3:9, 10, 23).

அவர்களின் செயல்கள் அவர்களை இரட்சிப்பதற்குப் பதிலாக, அவர்களின் செயல்கள் அவர்களை ஆக்கினைக்குள்ளாக்கின (2:5-13). புறஜாதியாரோ அல்லது யூதர்களோ தங்கள் செயல்களினால் இரட்சிக்கப்

GTG LIBRARY- BANGALORE

பட முடியாதிருந்தது, ஏனெனில் அவர்கள் யாவரும் பாவிகளாய் இருந்து (3:9, 10, 23) முழுமையற்ற செயல்களுடன் காணப்பட்டனர். பொல்லாங்கான நடவடிக்கைகளினால் கெடுக்கப்பட்டிருந்த அவர்களின் செயல்களை அவர்கள் சார்ந்திருப்பதற்குப் பதிலாக (4:1-8), அவர்கள் தங்களின் இரட்சிப்புக்குத் தேவ கிருபையைச் சாத்தியமாக்கியிருந்த (5:1, 2) இயேசுவின் செயலின் மீது விசுவாசம் கொண்டிருக்க வேண்டியிருந்தது.

நியாயப்பிரமாணமானது இந்தக் கிருபையை அளித்திருந்ததில்லை; மாறாக அது தனக்குக் கீழ் இருந்தவர்களைப் பாவத்தில் அடைத்துப் போட்டிருந்தது (3:20; 5:20, 21). புறஜாதியாரின் நிலையும் மேன்மையானதாக இருந்ததில்லை, ஏனெனில் அவர்கள் மனித கவனிப்பு மற்றும் அனுபவம் ஆகிய இயல்பான செயல்முறைகளின் மூலம் பெற்றிருந்த தேவனுடைய சித்தம் பற்றிய அறிவை மீறியிருந்தனர் என்ற உண்மையினால் பாவிகளாய் இருந்தனர் என்பது தெளிவாய்க் காணப்பட்டது (1:21; 2:14, 15). புறஜாதியாரும் யூதரும் ஆகிய இருசாராருமே நீதியற்றவர்களாய் இருந்தனர்; அனைவருமே தாங்கள் எந்தத் தராதரத்தின் கீழ் வாழ்ந்தார்களோ, அந்தத் தராதரத்தை மீறியிருந்தனர். மன்னிப்பைச் சாத்தியமாக்குவதற்காக, தேவன் - இயேசுவின் மூலம் - நீதியையும் நீதிமான்களாக்கப்படுதலையும் கொண்டு வரக் கிருபையையும், மற்றும் அவர்களின் பாவங்களையும் மீறுதல்களையும் மூடுவதற்கு மன்னிப்பையும் அளித்தார் (5:20, 21).

"கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலை நிற்கலாமா?" (6:1)

மன்னிக்கப்பட்டவர்கள் சிலரின் சிந்தையில் பின்வரும் கேள்வியானது ஒருவேளை எழும்பியிருந்திருக்கலாம்: "கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாமா?" (ரோமர் 6:1ஆ). இதை, ஒரு இளம் மணப்பெண்ணிடம் அவளும் அவளது கணவரும் பொருளாதாரக் கஷ்டங்கள் எதையேனும் எதிர்கொண்டால், அந்தக் கடனை அவளது மாமா ஒருவர், தாம் அடைத்து விடுவதாகக் கூறியதற்கு ஒப்பிடலாம். அவள் தனது கணவருடன் ஆலோசனை செய்து, தாங்கள் தங்கள் நிதி நிலைமை குறித்து அக்கறைகொள்ள வேண்டியதில்லை என்றும், ஆனால் தங்களால் வாங்க முடியாதவைகளை - விலை உயர்ந்த ஒரு கார், ஒரு புதிய வீடு மற்றும் விலை உயர்ந்த உடைகள், ஆபரணங்கள் போன்றவற்றை - முயற்சி செய்து வாங்குவதில் செலவழிக்க வேண்டும் என்றும் முடிவு செய்கின்றனர். அந்தப் பணக்கார மாமாவின் நோக்கம் மற்றும் பெருந்தன்மை ஆகியவற்றைப் பற்றி அவர்கள் தகுதியற்ற வகையில் அனுகூலமாய் நினைத்துக் கொண்டு அவரால் செலுத்தப்படும்படியான ஒரு பெரிய கடனை உருவாக்குகின்றனர்.

இதே போன்ற வழிமுறையிலேயே, தேவன் தமது கிருபையானது நமது பாவங்களை மூடும் என்று வாக்குறுதி அளித்துள்ளார், ஆனால் இது நாம் பாவம் நிறைந்த செயல்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட வாழ்வை நாம் வாழ்வதற்கு நம்மை உற்சாகப்படுத்தும் நோக்கம் கொண்டதல்ல. இது

GTG LIBRARY- BANGALORE

கிருபையின் நோக்கமாய் இருப்பதில்லை. ஞானஸ்நானத்தில் தகுதியான ஒரு ஆவிக்குரிய ஈடுபாடானது ஒரு புது இயல்பை ஏற்படுத்த வேண்டுமென்று பவுல் போதித்தார். கிறிஸ்தவர், கிறிஸ்துவுக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட ஒரு புதிய வாழ்வை வாழ வேண்டும்; அவர் கிருபையைச் சார்ந்திருப்பதின் காரணமாகத் தொடர்ந்து பாவம் செய்வதில்லை.

"அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை" (6:3, 4)

ஞானஸ்நானமும் புது வாழ்வும்

பவுல், கிருபையின் தவறான பயன்பாட்டிற்கெதிரான தமது கருத்தைக் கட்டி எழுப்புவதற்கு ஞானஸ்நானத்தைத் தேர்ந்து கொண்டது வினோதமானது என்று சிலர் நினைக்கலாம் (ரோமர் 6:1-7). ஞானஸ்நானம் என்பது ஆவிக்குரிய தொடர்பெதுவுமற்ற சடங்காக மட்டுமே இருந்திருந்தால், பாவம் நிறைந்த வாழ்வை முடித்துக் கொள்வதற்கான விவாதம் எதையும் ஞானஸ்நானம் என்ற கருத்திலிருந்து ஏற்படுத்த முடியாது. இருந்தாலும், ஞானஸ்நானம் என்பது தேவனுக்குக் கீழ்ப்படிகின்ற உடல் ரீதியான செயலாக மட்டுமின்றி, ஆவிக்குரிய, வாழ்வை மாற்றும் அனுபவமாய் இருப்பதால், ஞானஸ்நானத்தைத் தொடர்ந்து புது வாழ்வு ஒன்று ஏற்பட வேண்டும் என்ற பவுலின் விவாதம் மதிப்புள்ளதாய் இருக்க வேண்டும் - அது அவ்வாறே இருக்கின்றது.

ஞானஸ்நானத்தில் நாம் இயேசுவின் மரணத்திற்குள்ளாக ஞானஸ் நானம் பெறுவதால், நாம் அவருடன் இணைகின்றோம் (ரோமர் 6:3). சிலுவையில் இயேசுவின் மரணத்தின் மூலம், அவர் தமது உடல்ரீதியான வாழ்வை முடித்தார் - ஆனால் ஒரு புதிய உடல் ரீதியான வாழ்விற்குள் பிரவேசிக்கவே அவர் அதைச் செய்தார். ஆவிக்குரிய கருத்தில், ஞானஸ் நானம் என்பது நமது பாவம் நிறைந்த கடந்த கால வாழ்வு முடிந்து, ஆவிக் குரிய புது வாழ்வு தொடங்க வேண்டிய தருணமாய் இருக்க வேண்டும். பாவம் நிறைந்த நபராக தண்ணீரில் மூழ்கி, அதே பாவம் நிறைந்த நபராகத் தண்ணீரில் இருந்து வெளியே வரும் வெறும் உடல் ரீதியான செயலாய் மட்டும் இருப்பதற்குப் பதிலாக, நாம் இயேசுவோடும் அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலோடும் இணைக்கப்பட்டுள்ளதால் பழைய பாவம் நிறைந்த வாழ்வை மரணமடையச் செய்து, ஆவிக்குரிய புது வாழ்வில் பிரவேசிக்க வேண்டும் என்பதே பவுலின் மறைவான கருத்தாக உள்ளது.

ஞானஸ்நானம் என்பதை வெறும் அடையாளச் செயல் என்பதற்கும் மேலானதாகப் பவுல் கண்ணோக்கினார். டக்ளஸ் மூ பின்வருமாறு எழுதினார்:

> ... ரோமர் 6ம் அதிகாரத்திலோ, அல்லது [புதிய ஏற்பாட்டில்] வேறு எங்குமோ, உண்மையான உடல் அசைவுகள் - ஞானஸ்நானத்தில்

GTG LIBRARY- BANGALORE

மூழ்கி, எழுதல் [அதாவது தண்ணீருக்குள் சென்று பின்பு வெளிவருதல்] - என்பவை அடையாளக் குறிப்பிடுதலாகக் கருதப் பட்டதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. ரோமர் 6ல் ஞானஸ்நானம் ஒரு சடங்காகக் குறிப்பிடப்படவில்லை ஆனால் ஞானஸ்நானத்தின் எளிய நிகழ்ச்சியே குறிப்பிடப்பட்டுள்ளது என்பது உறுதி.[1]

ஆன்டர்ஸ் நைக்ரென் அவர்களும் இதைப் பின்வருமாறு ஒப்புக் கொள்கின்றார்:

> *ஞானஸ்நானம் பெறுபவர் தண்ணீருக்குள் மூழ்கும் பொழுது அச்செயலானது ''கிறிஸ்துவுடன்'' அடக்கம் செய்யப்படுதலைக் குறிக்கின்றது; மற்றும் அவர் மீண்டும் தண்ணீரை விட்டு வெளியே வரும் பொழுது, அது ''கிறிஸ்துவுடன்'' உயிர்த்தெழுதலைக் குறிக்கின்றது. ஆனால் அந்தக் காரணத்திற்காக ஞானஸ்நானத்தை பற்றிய பவுலின் கண்ணோட்டத்தை ''அடையாளம்'' என்று அவ்வார்த்தை பொதுவாகப் பயன்படுத்தப்படும் கருத்தில் குறிப்பது என்பது முற்றிலும் தவறான குறிப்பிடுதலாய் இருக்கும். ஏனெனில், பவுலின் கூற்றுப்படி ஞானஸ்நானத்தில் நாம் வெறும் அடையாளக் குறிப்பிடுதல்களுடனல்ல ஆனால் உண்மை நிலைகளுடன் செயல்பட வேண்டியுள்ளது. ஞானஸ்நானம் என்பது உண்மையில் நிகழ்கின்ற வற்றை அடையாளப் படுத்துவதாகவும், ஞானஸ்நானத்தின் மூலமே அது சுருக்கமாய் அடையாளமாவதாயும் உள்ளது.*[2]

எனவே ஞானஸ்நானம் என்பது நம்மை இயேசுவுக்குள்ளும் மற்றும் அவருடைய மரணத்துடன் இனைந்துள்ள ஒரு மரணத்திற்குள்ளாக்கு கின்றது.

புதுவாழ்வு பற்றிய மூன்று கேள்விகள்

ரோமர் 6:1-3ல் பவுலினால் மூன்று வளர்நிலைக் கேள்விகள் கேட்கப் பட்டன: (1) "கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாமா?" (வ. 1ஆ); (2) ''பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?" (வ. 2); (3) "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?" (வ. 3).

முதலாவது கேள்விக்குப் பவுல் பின்வருமாறு பதில் அளித்தார்: "கூடாதே." இந்தச் சொற்றொடரின் பயன்பாடானது கிறிஸ்தவர்கள் தங்கள் பாவங்களைக் கிருபையானது மூடுமென்று எதிர்பார்த்து பாவத்தில் தொடர்ந்து இருக்கக் கூடாது என்பதை மறைவாய்ச் சுட்டிக்காட்டுகின்றது என்பது உறுதி. பவுலின் கேள்வியானது சொல்லணியுடையதாக இருந்தது; அவர்கள் அதற்கான பதிலை அறியாதிருந்தனர் எனவே தாம் அவர்களுக்கு அப்பதிலைத் தெரிவிப்பதாகப் பவுல் அங்கு கருத்தை அறியப்படுத்தவில்லை. மாறாக, அவர்கள் ஞானஸ்நானத்தில் பெற்றிருந்த அனுபவத்தின் வாயிலாக, பவுல் கூறியதை ஏற்கனவே புரிந்து கொண்டிருக்க வேண்டும் என்ற அர்த்தத்தையே அவர் வலியுறுத்தினார்.

GTG LIBRARY- BANGALORE

இது போலவே, பவுலின் இரண்டாம் கேள்வியும் தனது சொந்தப் பதிலைத் தெரிவிக்கின்றது. நாம் பாவத்திற்கு மரித்தவர்களாயிருந்தால், இனியும் அதில் வாழக் கூடாது.

மூன்றாம் கேள்விக்குப் பதிலுரையாக - இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்றதன் மூலம் - நாம் அவருடைய மரணத்திற்குள் பிரவேசித்த பொழுது, பாவத்திற்கு நாம் மரித்தோம் என்று பவுல் பதில் அளித்தார். அந்த மரணத்திலிருந்து நாம் உயிர்ப்பிக்கப்பட்டுள்ளதால், பாவம் நிறைந்த நடைமுறைகளில் இருந்து விடுதலையான புதிய வாழ்வில் நாம் நடந்து கொள்ள வேண்டும்.

“மரித்த” (வ. 2, 7, 8), “மரித்தோர்” (வ. 11, 13) மற்றும் “மரணம்” (வ. 4) என்பவற்றினால் நமது பாவம் நிறைந்த கடந்த காலம் ஒழிவதே விளைவாய் இருக்க வேண்டும் என்று பவுல் அர்த்தப்படுத்தினார். “... ற்கு மரித்த,” “... ற்கு மரித்துள்ள” மற்றும் “... ற்கு மரிக்கும்” என்பவற்றினால் அவர் நம்மை முன்பு கட்டுப்படுத்திய பாவத்தின் வல்லமை ஒழிய வேண்டும் என்ற கருத்தை விளக்கப்படுத்தினார் (ரோமர் 7:4; கலா. 2:19; கொலோ. 2:20; 3:3-5; 1 பேது. 2:24). நாம் “பாவத்திற்கு மரித்ததாக” பவுல் வசனம் 2ல் எழுதினார். ‘‘அது எப்பொழுது மற்றும் எவ்விதம் நடைபெற்றது? அப்போஸ்தலரின் கூற்றுப்படி அது ஞானஸ்நானத்தில், ஞானஸ்நானத்தின் மூலமாகவே நடைபெற்றது.’’[3]

பாவ வாழ்வை முடித்து நீதியின் வாழ்வான ஒரு புது வாழ்வைத் தொடங்குதல் என்பதே பாவத்திற்கான மரணத்தில் நாம் பிரவேசிப்பதன் நோக்கமாக உள்ளது (ரோமர் 6:4). நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் சாயலில் ஆவிக்குரிய வகையில் பங்கு பெறுகின்றோம். இயேசு தம் உயிர்த்தெழுதலின் மூலமாக ஒரு சரீரப் புதுப்பித்தலுக்குள் பிரவேசித்தது போலவே, நாம் ஞானஸ்நானத்தின் மூலம் ஒரு ஆவிக்குரிய புதுப்பித்தலுக்குள் பிரவேசிக்க வேண்டும் (ரோமர் 6:5).

“நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவ சரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் (ஞானஸ்நானத்தில்) அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்ட தென்று” (ரோமர் 6:6) ஞானஸ்நானத்தில் இது நடைபெறுவதால் இந்த நிலை மாற்றம் ஏற்படுகின்றது. பழைய இயல்பின் ஒரு பகுதி மட்டும் ஒழிந்து போக வேண்டுமென்றல்ல ஆனால் பழைய மனிதன் முற்றிலுமாக இயேசுவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட வேண்டும் என்று பவுல் கருத்துத் தெரிவித்தார். இதன் விளைவாக நாம் ‘‘பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கின்றோம்’’ (ரோமர் 6:7). பாவத்துக்கு மரித்தவர்கள் ஆவதினால், பாவத்தின் அடிமைத்தனம், பாவத்தின் ஆளுகை, மற்றும் பாவத்தின் நடைமுறை ஆகியவற்றினின்று நாம் விடுதலையாக்கப் பட்டுள்ளோம். ஞானஸ்நானத்தில் நாம் இயேசுவுடன் அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்ப்பிக்கப்படும் பொழுது இயேசுவுடன் நாம் கொண்டுள்ள ஆவிக்குரிய ஈடுபாட்டின் காரணமாக இவை யாவும் நடைபெற வேண்டும்.

GTG LIBRARY- BANGALORE

பாவத்திற்கு மரித்து, நீதிக்குப் பிழைத்தல் என்பது ஞானஸ்நானம் என்ற செயலினால் மட்டுமே, ஏற்பட்டு விடாது, ஆனால் அந்தச் செயலுடன் இணைந்துள்ள இருதயப் பூர்வமான பதிலினால் ஏற்படுகின்றது. "முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்" (ரோமர் 6:17, 18).

"இனிப் பாவத்துக்கு அடிமைகளாய் இருப்பதில்லை" (ரோமர் 6:6, 7)

மன்னிக்கப்படுதல் என்பது ஞானஸ்நானத்துடன் இணைந்துள்ள ஆசீர்வாதங்களில் ஒன்றாக இருப்பினும் (அப். 2:38; 22:16) பாவத்திலிருந்து விடுதலையாக்கப்படுதல் என்பதைப் பற்றிப் பவுல் பேசுகையில் அவர் மேற் கூறியதை (மன்னிக்கப்படுதலைப்) பற்றிய கருத்தில் பேசவில்லை. பாவத்தின் அடிமைத்தனம் மற்றும் ஆளுகை ஆகியவற்றிலிருந்து நாம் விடுவிக்கப்பட்டுள்ளதால், நம்மை மன்னிப்பதற்கான தேவகிருபையைச் சார்ந்தவர்களாய் பாவச் செயல் முறைகளை இனித்தொடரக் கூடாது என்பதைக் காண்பிப்பதே ரோமர் 6:1-4ல் அவரது நோக்கமாய் உள்ளது. பாவத்திலே வாழ்வதென்பது கிறிஸ்தவர்களுக்குச் சாத்தியமற்றதென்று அவர் கூறவில்லை; மாறாக, பாவம் செய்தல் என்பது நமது புதுவாழ்வுக்கும் மற்றும் பாவத்திலிருந்து பெற்ற நமது புது விடுதலைக்கும் முரண்பாடானது என்றுதான் அவர் கூறினார். பாவத்திற்கான மரணத்திலும் புதிய ஜீவனிலும் ஞானஸ்நானத்தின் வழியே நாம் இயேசுவுடன் பிரவேசித்துள்ளதால் ஒரு புதிய வாழ்வை வாழ வேண்டும். பழைய மனிதன் சிலுவையில் அறையப்பட வேண்டும்; பாவ சரீரம் ஒழிந்து போக வேண்டும், மற்றும் நாம் இனியும் பாவத்திற்கு ஊழியம் செய்யக் கூடாது (ரோமர் 6:6).

இதனால் நம்மையே நாம், "பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத் திருக்கிறவர்களாகவும்" (ரோமர் 6:11) கருத வேண்டும். நாம் பாவத்திற்குக் கீழ்ப்படிந்து அதற்கு அடிமைகள் ஆகும் அளவுக்கு நமது சரீரத்தைப் பாவம் ஆளும்படியாக நாம் அனுமதிக்கக் கூடாது (ரோமர் 6:12).

நாம் பாவத்தில் வாழ்ந்தால், நாம் பாவத்திற்கு அடிமைகளாகி விடுகின்றோம் (ரோமர் 6:16). நாம் நீதிக்கு அடிமைகளாக வேண்டும், ஏனெனில் நாம் பாவத்தின் அடிமைத்தனம் மற்றும் ஆளுமை ஆகியவற்றில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளோம் (ரோமர் 6:13, 16, 19, 22). நாம் நியாயப்பிரமாணத்தின் கீழ் அல்ல ஆனால் கிருபையின் மன்னிக்கும் பயன்பாட்டின் கீழ் இருக்கின்றோம் என்ற உண்மையானது (ரோமர் 6:15) நம்மைப் பாவத்திலிருந்து விடுதலையாக்குகின்றதே தவிர பாவம் செய்வதற்கல்ல. பாவம் அடிமைப்படுத்துகின்றது; அது விடுதலையைக் கொடுப்பதில்லை (யோவா. 8:34). இந்தக் காரணத்தினால், நாம் இனியும் பாவம் செய்யக் கூடாது, ஆனால் பாவத்திற்கு மரித்தவர்களாய், நீதிக்கு

GTG LIBRARY- BANGALORE

வாழ்பவர்களாய் இருக்க வேண்டும். நாம் ஞானஸ்நானம் பெற்றபோது இருதயப் பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினால் பாவத்திலிருந்து விடுதலை யானோம் (ரோமர் 6:4-6, 17, 18).

தொகுப்புரை

இவ்வசனப் பகுதியில் பவுல், ஞானஸ்நானம் என்பதை நமது பழைய வாழ்வை முடித்து, புதிய வாழ்வைத் தொடங்குதல் என்ற செயலின் மையப் பகுதியாக ஆக்கினார். இது இயேசுவின் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுடன் இருதயத்திலிருந்து இணைவதால் நடைபெறுகின்றது. ஞானஸ்நானம் என்ற செயல்பாடானது தன்னிலேயே இப்படிப்பட்ட நிலை மாற்றத்தைக் கொண்டு வரும் என்று அவசியமில்லை. இருப்பினும், ஞானஸ்நானம் என்ற செயலில் நாம் ஆவிக்குரிய வகையில் இயேசுவின் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுடன் இணையும் பொழுது, இந்த நிலைமாற்றம் நடக்கும் என்று புரிந்து கொள்கின்றோம், மற்றும் அப்பொழுது பழைய வாழ்வு முடிந்து, போய், ஒரு புது வாழ்வு தொடங்கும்.

குறிப்புகள்

[1]Douglas J. Moo, *The Epistle to the Romans*, The New International Commentary of the New Testament, gen. eds. Ned B. Stonehouse, F. F. Bruce, and Gordon D. Fee (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1996), 362. [2]Anders Nygren, *Commentary on Romans*, trans. Carl C. Rasmussen (Philadelphia: Muhlenberg Press, 1949), 233. [3]Ibid., 234.

GTG LIBRARY- BANGALORE

ஞானஸ்நானமும் "கிறிஸ்துவை அணிந்து கொள்ளுதலும்"

> நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள் *(கலா. 3:26-29).*

தேவனுடைய பிள்ளைகளாய் இருத்தல் என்பது வேதாகமத்தில் உள்ள மிகவும் முக்கியமான உறவுமுறைகளில் ஒன்றாக உள்ளது. தேவன் இந்த வாழ்விலும் இனிவரும் வாழ்விலும் அருளுகின்ற பயன்கள் யாவும் இந்த உறவுமுறையின் அடிப்படையிலேயே உள்ளன (ரோமர் *8:17;* கலா. *4:7).*

இரட்சிப்பு மற்றும் புத்திரத்துவம் ஆகியவற்றிற்குப் பழைய ஏற்பாட்டுப் பிரமாணங்களைச் சார்ந்திருக்கும்படி கலாத்தியர்களைச் சில போதகர்கள் தவறாக வழி நடத்த நாடியதால் பவுல் கவலையடைந்தார். நீதியானது நியாயப்பிரமாணத்தினால் அல்ல ஆனால் இயேசுவில் கொண்டுள்ள விசுவாசத்தின் மூலமாகவே வருகின்றது என்பதை அவர் சுட்டிக்காட்டினார் (கலா. *2:16).* நியாயப்பிரமாணமானது நம்மை நீதிமான்களாக்கும் கிருபையை அளிக்கவில்லை; அதனால் அவ்வாறு அளிக்க முடிந்திருக்குமென்றால், இயேசு மரித்தது வீணானதாயிருக்கும் *(2:21).*

நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பாகவே, ஆபிரகாமின் மூலம் எல்லா இனத்தவரையும் ஆசீர்வதிக்கப்போவதாகத் தேவன் வாக்களித்திருந்தார் (கலா. *3:8;* ஆதி. *12:3; 22:18* ஆகியவற்றைக் காணவும்). நியாயப்பிரமாணமானது ஆசீர்வாதத்தைக் கொண்டு வரவில்லை; மாறாக அது தனக்குக் கீழ் இருந்த ஒவ்வொருவரையும் சபித்தது, ஏனென்றால் நியாயப்பிரமாணமானது தவறற்ற கீழ்ப்படிதலைக் கேட்டது *(3:10).* இருப்பினும், இது ஆபிரகாமின் (ஒரே) சந்ததியான கிறிஸ்துவின் மூலம்

GTG LIBRARY- BANGALORE

ஆசீர்வதித்தல் என்ற தேவனுடைய வாக்குத்தத்தத்தை வியர்த்தமாக்கக் கூடாதிருந்தது (3:16, 17). இஸ்ரவேலர்கள் தாங்கள் மீறுகிறவர்களாய் இருந்ததைப் புரிந்து கொள்ளவும், இயேசு என்ற சந்ததி வரும் வரை மட்டுமே அமலில் இருக்கவுமே நியாயப்பிரமாணம் தரப்பட்டது (3:19).

சட்டமானது மீறப்படும் பொழுது மக்களை நீதியுள்ளவர்களாக்கு வதற்கன்றி சட்டத்தை மீறியவர்களாக்குவதற்காகவே சட்ட அமைப்புகள் தராதரங்களைக் கொடுக்கின்றன. இயேசுவின் மூலமாகச் சாத்தியமாக்கப் பட்ட கிருபை மட்டுமே பாவிகளை நீதிமான்களாக்க முடியும். சட்ட அமைப்பானது ஜீவனைக் கொடுக்க முடியுமென்றால், நீதியானது நியாயப்பிரமாணத்தினால் உண்டாயிருக்கும் (3:21). கிருபையினால் மட்டுப்படுத்தப்படாத சட்ட அமைப்பொன்று அதன் கீழ் இருப்பவர் களுக்குச் சாபம் மட்டுமே தர முடியும், ஏனெனில் அப்படிப்பட்ட அமைப்பின் கீழ் இருப்பவர்கள் ஒருபோதும் சட்டத்தை மீறாமல் இருந்தால் மட்டுமே நீதிமான்களாக முடியும் (3:10). நம்மில் ஒருவர்கூட நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக்கப்பட முடியாது, ஏனெனில் நாம் யாவரும் பாவம் செய்பவர்களாய் இருக்கிறோம் (3:21, 22; ரோமர் 3:23ஐக் காணவும்). சட்டத்தை மீறியவர்கள் என்ற வகையில் நாம் இயேசு கிறிஸ்து என்ற இன்னொருவரின் செயலினாலேயே நீதிமான்களாக்கப்பட முடியும், அவரது செயலையே நாம் சார்ந்திருக்க வேண்டும் (3:22). கண்டிப்பான ஒரு சட்டமுறையின் அடிப்படையில் நாம் நமது சொந்த செயல்களைச் சார்ந்திருக்க முடியாது.

கிறிஸ்தவர்கள் மற்றும் கிறிஸ்தவரல்லாதவர்கள் ஆகிய இரு சாராருமே சில வகையான சட்டத்திற்குக் கணக்கு ஒப்புவித்தாக வேண்டும்; அல்லது, பாவிகளாய் யாருமே இருக்க முடியாது. “நியாயப்பிரமாணமில்லா விட்டால் மீறுதலுமில்லை” (ரோமர் 4:15). மீறுதல் இல்லையென்றால், கிருபையும் தேவையில்லை. இந்த கிறிஸ்துவின் யுகத்தில் நாம் கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் இருக்கின்றோம் (1 கொரி. 9:21; கலா. 6:2). நாம் இயேசுவின்மூலம் வந்துள்ள - கிருபையினாலும் ஆசீர்வதிக்கப்பட்டுள் ளோம் - நியாயப்பிரமாணத்தினால் அருளப்பட்டிராத கிருபையினால் (கலா. 5:4). இயேசுவின் மரணத்தின் மூலம் அவர் தமக்கு முன் வாழ்ந்தவர் களுக்கும் (எபி. 9:15) மற்றும் எல்லாக் காலங்களிலும் உள்ள மக்கள் உட்பட முழு உலகுக்கும் (1 யோவா. 2:2) கிருபையைக் கிடைக்கச் செய்துள்ளார்.

நமது இரட்சகராக இயேசு இருக்க வேண்டியதன் அவசியத்தைப் போதிப்பதே நியாயப்பிரமாணத்தின் நோக்கமாய் இருந்தது (கலா. 3:24). நாம் நமது சொந்த நீதியுள்ள செயல்களினால் அல்ல, ஆனால் அவருடைய செயலின் மீதுள்ள விசுவாசத்தினாலேயே நாம் நீதிமானாக்கப்பட முடியும் என்பதை நாம் புரிந்து கொள்வதற்கு நியாயப்பிரமாணம் உதவுகின்றது. இப்பொழுது இயேசு வந்து, அவர் மீதுள்ள விசுவாசத்தின் மூலமாக நீதியைச் சாத்தியமாக்கியுள்ளார், நாம் இனியும் “உபாத்தி”யாகிய நியாயப் பிரமாணத்தின் கீழ் இருப்பதில்லை (3:25).

நியாயப்பிரமாணமானது இஸ்ரவேல் மக்களை மட்டுமே தேவனு டைய மக்களாக அங்கீகரித்தது. இப்பொழுது நாம் அனைவரும் - யூதர்கள்

GTG LIBRARY- BANGALORE

மற்றும் புறஜாதியார் அனைவரும் ஒன்று போல - விசுவாசத்தின் மூலமாகக் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறும் பொழுது, தேவனுடைய பிள்ளைகளாக முடியும் (கலா. 3:26, 27). இனம், சமூகத்தில் அந்தஸ்து, அல்லது இயல்பான மற்ற வேறுபாடு எதுவுமின்றி தேவனுடைய பிள்ளைகள் என்ற வகையில் நாம் யாவரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாக இருக்கின்றோம் *(3:28).*

"கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரர்களாயிருத்தல்" *(3:26)*

பவுலின் கூற்றுப்படி, ஞானஸ்நானம் பெறும் நேரம் என்பது நாம் கிறிஸ்துவுக்குள் பிரவேசித்து, கிறிஸ்துவுக்குள் தேவனுடைய பிள்ளை களாகும் வேளையாய் உள்ளது. இயேசுவுக்குள் பிரவேசிப்பதினால் நாம் தேவனுடைய பிள்ளைகளாவது மட்டுமின்றி, அவருடைய இயல்பையும் பகிர்ந்து கொள்கின்றோம். "ஆகையால், 'கிறிஸ்துவுக்குள்' என்ற விளக்க மானது முழுக் கூற்றுக்கும் நேர்மறையானதாக எடுத்துக் கொள்ளப்பட்டு, பவுல் இந்தச் சூத்திரத்தை வேறெங்கும் பயன்படுத்துகின்ற வழிமுறையில் விளக்கப்பட வேண்டும் அதாவது, கிறிஸ்துவுடனான நெருங்கிய தொடர்புடைய மற்றும் அவருடைய ஐக்கியத்தினுள் ஒன்றாகுதலையும் மறைமுகமாகக் குறிப்பிடுதலாய் இருக்கும்."[1]

இதே கருத்தை ஜாண் R. W. ஸ்டாட் அவர்கள் மிக எளிமையான வழிமுறையில் எடுத்துரைத்தார்:

> நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருப்போம் என்றால், நாம் "விசுவாசத்தின் மூலமாக ... கிறிஸ்து இயேசுவுக்குள்" (வ. 26) இருக்க வேண்டும். இது "கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசத்தினால்" [KJV] என்பதைக் காட்டிலும் மேன்மையான தரவழைப்பாக உள்ளது. விசுவாசத்தினாலேயே நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றோம், மற்றும் கிறிஸ்துவுக்குள் இருத்தலின் மூலமாகவே நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கின்றோம்.[2]

"கிறிஸ்துவுக்குள்" என்ற சொற்றொடரைக் குறித்து ஜேம்ஸ் டி. டன் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> இதன் வலிவானது இவ்விடத்தின் சந்தர்ப்பப் பொருளினாலும் தெளிவாகின்றது: ''கிறிஸ்துவுக்குள்ளாக'' என்பது வசனம் 26ன் "கிறிஸ்துவுக்குள்" என்பதை விளக்கப்படுத்துகின்றது; "கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானப்படுத்தப்படுதல்" மூலமாகவே அவர்கள் "கிறிஸ்துவுக் குள் ..." ஆகியிருந்தனர். ... ஆனால் "கிறிஸ்துவுக்குள்ளாக" என்பது "உள்" ஆகுதல் என்பதைக் காட்டிலும் அதிகமான கருத்துடையதாக உள்ளது, இது எந்தக் கணத்தில் மற்றும் எந்தச் செயலுடைய வழிமுறையின் மூலமாக அவர்கள் வாழ்வும், விதிகளும் மற்றும் அடையாளங்களும் கூட கிறிஸ்துவுடன் கட்டப்பட்டது என்பதை விவரிக்கின்றது.[3]

GTG LIBRARY- BANGALORE

கலாத்தியர் நிருபத்தில் “விசுவாசம்” என்ற வார்த்தையைப் பவுல் பயன்படுத்துகையில், இவ்வார்த்தைக்கு முன் வழக்கமாக “the” என்ற சுட்டுச் சொல் வருகின்றது, மற்றும் புற உண்மைக் கருத்தின்படி இது “the faith” என்று தரவழைக்கப்பட வேண்டும். இவ்விதமாக ஜார்ஜ் டன்கன் சுட்டிக் காண்பித்தபடி பழைய மதத்தைக் குறிப்பிட்ட “நியாயப்பிரமாணம்” என்ற வார்த்தை இருந்ததுபோல “the faith” என்பது புதிய மதத்தின் குறிப்பிடுதலாக நடைமுறையில் இருக்கும்படி இந்நிருபத்தின் தொடக்க காலத்தில் வந்துள்ளது.”[4]

கலாத்தியர் 3:26 வசனமானது “கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தின் மூலமாக நீங்கள் யாவரும் தேவனுடைய பிள்ளைகளா யிருக்கிறீர்களே” (RSV) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; மற்றும் McCor அவர்களின் மொழிபெயர்ப்பில் இவ்வசனம் “நீங்கள் அனைவரும் கிறிஸ்துவுக்குள் கொண்டுள்ள விசுவாசத்தின் மூலம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கின்றீர்கள்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்விரு மொழிபெயர்ப்புகளின் ஒன்று சேர்ப்பானது இவ்வசனத்தின் நேரடியான தரவழைப்பைத் தருகின்றது: “ஏனெனில் நீங்கள் யாவரும் விசுவாசத்தினால் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கின்றீர்கள்.”

இயேசுவினால் நமக்குக் கொண்டு வரப்பட்ட விசுவாசத்தின் மூலமாக நாம் அவருக்குள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்க முடியும், தேவனு டைய பிள்ளைகளாவதற்கு நாம் கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கின்ற சமயம் நாம் ஞானஸ்நானம் பெறும் வேளையாய் இருக்கின்றது.

“உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ அத்தனை பேரும்” (3:27அ)

கிறிஸ்தவர்கள் ஒரு உபாத்திக்குக் கீழானவர்கள் அல்ல, “ஏனெனில்” (கிரேக்க வார்த்தையான *gar* என்பது “விளக்கத்தின் வழிமுறையில்” என்று அர்த்தப்படுகின்றது.[5]) நாம் விசுவாசத்தினாலே தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கின்றோம். இவ்விடத்தில் உள்ள மறை கருத்தானது, கிறிஸ்துவின் யுகத்தின்கீழ் நாம் ஒரு பாதுகாவலரின் கரத்தின் கீழாக வழி நடத்தப்பட அவசியம் கொண்டவர்களாய் இருப்பதில்லை என்று உள்ளது (கிரேக்கம்: வ. 24, 25ல் *paidagogos*). “பவுலின் காலத்தில் ‘pedagogue’ என்பவர் கிரேக்கம் மற்றும் ரோமக் குடும்பங்களின் வீட்டிலும் வெளியிலும் சிறு பிள்ளையை (ஆறு முதல் பதினாறு வயது வரை) மேற்பார்வையிடுவதற்காக வேலைக்கு அமர்த்தப்பட்ட ஒரு அடிமையாய் இருந்தார்.”[6]

“Pedagogue” என்பதை F. F. புரூஸ் அவர்கள் பின்வருமாறு விளக்கப் படுத்தினார்:

GTG LIBRARY- BANGALORE

> ... சுயாதீனமாய்ப் பிறந்த பையன் தனது வளர்ப்புத் தாதியின் கையிலிருந்து விடுபட்ட நாள் முதலாய் எங்கு சென்றாலும் அவனுக் குத் துணையாகச் செல்லக் கூடிய தனிப்பட்ட அடிமை உதவியாள். அவனைப் பள்ளிக்கு அழைத்துச் செல்வது ... அங்கு அவனுக்காகக் காத்திருப்பது ... பிறகு அவனை வீட்டிற்குக் கூட்டிச் செல்வது, மற்றும் அவன் கற்றறிந்த பாடங்களை அவன் ஒப்புவிக்கும்படி செய்து அவனது மனப்பாடத் திறனைச் சோதிப்பது ஆகியவை இவரது பணிகளாய் இருந்தன. பையனின் சிறு பருவத்தில் paidegogos என்பவர் அப்பையனின் சுயாதீனத்தின் மீது அவசியமான கட்டுப்பாட்டை விதித்தார், அவன் தக்க வயது வந்து தனது சுயாதீனத்தைப் பொறுப்பாகப் பயன்படுத்த முடியும் என்று அவன் மீது நம்பிக்கை கொள்ளப்படும் வரையிலும் இந்தக் கட்டுப்பாடு அவன் மீது விதிக்கப்பட்டது.[7]

எனவே உபாத்தி என்பவருடைய வழக்கமான பணிகள் ஒரு பிள்ளையை ஆசிரியரிடம் கூட்டிச் செல்லுவதோடு முடிவடைகின்ற நிலையில் அவர் ஒரு வீட்டு வேலை செய்யும் அடிமையாய் இருந்தார்.

இதே வழிமுறையில், நியாயப்பிரமாணமானது நம்மை இயேசுவிடம் கொண்டு வருவதற்கான "pedagogue," அதாவது வீட்டு வேலை செய்யும் அடிமையாகப் பணியாற்றியது. இயேசு வந்திருப்பதால், இனியும் நமது பாதுகாவலன் என்ற வகையில் நியாயப்பிரமாணமானது நமக்குத் தேவைப்படுவதில்லை. விசுவாசத்தினால் தேவனுடைய பிள்ளைகளாகி யிருக்கின்ற நிலையில் (கலா. 3:26, 27). இப்பொழுது நாம் பிள்ளைகளுக் குரிய ஆசீர்வாதங்களையும் சுயாதீனத்தையும் மகிழ்வுடன் அனுபவிக்க முடியும் (கலா. 4:6, 7).

பிள்ளைகளாவதினால் நாம் விசுவாசத்தின் மூலமாக கிறிஸ்துவின் குடும்பத்தாரைப் போன்றிருக்க வேண்டும், ''ஏனெனில்'' (''விளக்க மளித்தலின் வழிமுறையினால்'') கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றதினால் நாம் இயேசுவை அணிந்து கொண்டுள்ளோம். அதாவது, நாம் அவரது இயல்பைக் கொண்டுள்ளோம் (கலா. 3:26, 27). ஞானஸ்நானம் பெறுதல் என்ற வழிமுறையினால் நாம் தேவனுடைய பிள்ளைகளா கின்றோம், மற்றும் பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் இயல்புகளைக் கைக்கொள்வது போல நாம் தேவனுடைய இயல்புகளைக் கைக் கொள்ளுகின்றோம். விசுவாசத்திற்கு நாம் பதில்செயல் செய்யும் பொழுது, ஞானஸ்நானம் இந்த விளைவுகளைச் சாதிக்கின்றது.

"கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே" (3:27ஆ)

நாம் ''தேவனுடைய பிள்ளைகளாய்'' இருப்பதால் தேவனுடைய இயல்பைப் பெறுகின்றோம் என்ற கருத்து ''கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே'' (கலா. 3:27) என்ற சொல் விளக்கத்தில் அடக்கம் பெற்றுள்ளது, இது ''கிறிஸ்துவை அணிந்து கொள்ளுதல்'' என்றும்

GTG LIBRARY- BANGALORE

மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதிகாரம் கொண்ட ஒரு விளக்கவுரை யாளர் பின்வரும் விளக்கத்தைக் கொடுத்தார்:

> "அணிந்து கொள்ளுதல்" என்ற சொல் விளக்கம் உருவக நடையில் பயன்படுத்தப்படும் பொழுது குறிப்பிடப்படும் நபரின் "பண்பு அல்லது நிலைப்பாட்டை மேற்கொள்ளுதல்" அல்லது குறிப்பிடப் படும் நபராகவே ஆகுதல் என்று அர்த்தப்படுகின்றது. கிறிஸ்துவை அணிந்து கொள்ளுதல் என்பது கிறிஸ்துவாகுதல், ஒருவர் அவரது பண்பினை மேற்கொள்ளுதல், தேவனுக்கு முன்பாக அவரைப் போன்று (தேவனுடைய குமாரனாக) நிலைநிற்குதல் என்றாகின்றது.[8]

ஹெர்மன் N. ரிடர்போஸ் அவர்கள் பின்வருமாறு விளக்கம் அளித்தார்:

> ஒருவர் அணிந்து கொள்கின்ற (அல்லது அணிந்துள்ள: செயப்பாட்டு மொழிபெயர்ப்பு கூட சில முன்மொழிதல்களைக் கொண்டுள்ளது) ஒரு ஆடை அவருடைய உடலை மூடி, அவரது தோற்றத்தையும் வாழ்வையும் அடையாளப்படுத்துவது போலவே, கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறும் நபரும் கிறிஸ்துவை முற்றிலும் மேற்கொண்டு, அவரால் கொண்டு வரப்பட்ட இரட்சிப்புக்குள்ளாகின்றார்.[9]

ஜார்ஜ் S. டன்கன் அவர்கள் பின்வருமாறு எடுத்துரைத்தார்:

> அணிந்து கொள்பவர் தாம் அணிந்து கொண்டுள்ளதைக் கொண்டு ஒரு நுட்பமான வழிமுறையில் அடையாளப்படுத்தப்படுகின்றார் ... இவ்விதமாக, ஒரு மனிதர் ஞானஸ்நானப்படுத்தப்படுகையில் அவர் முற்றிலுமாய்க் கிறிஸ்துவைக் கொண்டு அடையாளப்படுத்தப் படுகின்றார், இனி வாழ்வது அவரல்ல ஆனால் கிறிஸ்துவே அவருக்குள் வாழ்கின்றார். அந்த நபர் இதற்கு முன்பு எப்படி இருந்திருப்பினும் அது ஒரு பொருட்டல்ல, இப்பொழுது கிறிஸ்துவுக்குள் அவர் ஒரு புது சிருஷ்டியாய் இருக்கின்றார்.[10]

இதே வழிமுறையில் நமது தோற்றமானது நாம் இயல்பாய் அணிந்துள்ள உடையின் இயல்பை மேற்கொள்ளுகின்றது, அது போலவே, நாம் கிறிஸ்துவை அணிந்து கொண்டிருப்பதால் கிறிஸ்துவின் பண்புகளை மேற்கொள்ளுகின்றோம். இது ஞானஸ்நானம் என்ற வெளிப்புறச் சடங்கினால் மட்டும் நடைபெறுவதாயிராமல் இச்செயல்மீது, நமது "பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும் படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கும்" (கொலோ. 3:9, 10) நமது உள்ளான ஆவிக்குரிய ஈடுபாட்டினால் வருவதாயிருக்கின்றது.

இயேசு செய்துள்ளவை மற்றும் உரைத்தவை மீது நாம் கொண்டுள்ள விசுவாசம் நம்மை ஞானஸ்நானத்திற்கு வழிநடத்தும் பொழுது, தேவன் நமக்கு இரட்சிப்பையும் மகன் என்ற உரிமையையும் பலனாகத் தருகின்றார். அவர் ஞானஸ்நானத்தின் மதிப்பின்மீது மட்டும் பலன் தராமல், செயலுக்குத்

GTG LIBRARY- BANGALORE

தூண்டுகின்ற (நமது) விசுவாசத்தின் காரணமாக நம்மை இரட்சிக்கின்றார். ஞானஸ்நானம் என்பது தன்னில் தானே ஒரு முடிவாக இருப்பதில்லை; மாறாக, அது இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தின் அடிப்படையிலான ஒரு செயலாயிருந்து, புதிய வாழ்வை விளைவிக்கின்றது. நாம் தேவனுடைய பிள்ளைகளாகும் பொழுது, இயேசுவின் இயல்பினுடைய பண்புகளில் காணப்படும் தேவனுடைய குடும்பத்தின் தன்மைகளை மேற்கொள்ளுகின்றோம்.

"நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" (3:26, 28, 29)

ஞானஸ்நானமும் ஒருமைப்பாடும்

கலாத்தியாவில் இருந்த கிறிஸ்தவர்கள் யாவரும் ஒரே குடும்பத்தில் இருந்தனர் என்ற உண்மையை உறுதிப்படுத்துவதற்குப் பவுல், "நீங்க ளெல்லாரும் ... தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே" (கலா. 3:26) என்ற சொல்விளக்கத்தைப் பயன்படுத்தினார். கிறிஸ்துவுக்குள் சகோதரர்கள் என்ற வகையில் அவர்கள் தங்கள் பின்னணி, சமூக அந்தஸ்து, அல்லது இனம் ஆகியவை எதுவாயிருப்பினும் ஆவிக்குரிய குடும்பத்தின் ஒரே விதமான பண்புகளைக் கொண்டிருந்தனர். ஞானஸ்நானம் பெற்றவர்கள் அனைவரும் கிறிஸ்துவுக்குள் பிரவேசித்துள்ளனர் என்பதை எடுத்துரைத்த பிறகு, கிறிஸ்துவுக்குள் இருக்கும் யாவரும் ஒன்றாய் இருக்கின்றனர் (கலா. 3:27, 28) என்று பவுல் கூறினார். ஞானஸ்நானம் நம் அனைவரையும் தேவனு டைய பிள்ளைகளாக்குகின்றது மற்றும் இவ்வழி வகையில் அது நம்மை ஒன்றிணைக்கின்றது. அது நம்மைப் பலவிதமான மாறுபட்ட மத அமைப்புகளுக்கு உட்படுத்துவதில்லை, ஆனால் அதற்கு மாறான வகையில், ஒரே குடும்பத்திற்குள் உட்படுத்துகின்றது: அது ஒரே சரீரமான (1 கொரி. 12:13), கிறிஸ்துவின் சரீரமான (1 கொரி. 12:27), அவருடைய சபையாக (கொலோ. 1:18) உள்ளது.

இன்றைய நாட்களில் நடைமுறைப்படுத்தப்படும் வித்தியாசப்பட்ட பலவித ஞானஸ்நானங்கள் (எனப்படுபவை) மக்களை மாறுபட்ட பல "சபைகளுக்கு"ள்ளாக்குகின்றது. புதிய ஏற்பாட்டின் ஒரே ஞானஸ்நானம் என்பது நம்மை ஒரே ஒரு சரீரத்திற்குள்ளாக்குவதாகவே இருக்கின்றது (எபே. 4:4, 5). இந்த ஒரே ஞானஸ்நானம் என்பது அரை சகோதரர் களையோ அல்லது அரை சகோதரிகளையோ உருவாக்குவதில்லை, ஆனால் இயல்பில் ஒன்றுபோலவே இருக்க வேண்டிய, தேவனுடைய பிள்ளை களான சகோதர சகோதரிகளை உருவாக்குகின்றது. அவர்கள் ஒரே குடும்பத்தில், கிறிஸ்துவுக்குள் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளனர். ஞானஸ்நானம் என்பது பிரிவினையின் ஆதாரமூலமாய் இருப்பதற்குப் பதில், (வேதாகமத்தில்) ஒன்றுபடுத்தும் செயலாகவே அர்த்தப்படுத்தப் படுகின்றது.

GTG LIBRARY- BANGALORE

நாம் கிறிஸ்துவுக்குரியவர்கள்

ஞானஸ்நானம் பெற்றதினால் கிறிஸ்துவுக்குரியவர்களாகியுள்ள நாம் அனைவரும் ஆவிக்குரிய வகையில் ஆபிரகாமின் சந்ததியாகவும் மற்றும் ஆபிரகாமின் சந்ததியான கிறிஸ்துவுக்குள் தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ள ஆசீர்வாதத்தின் சுதந்திரர்களாகவும் இருக்கின்றோம் (3:29). நமக்குள் செல்லுகின்ற உணவு நம்மில் ஒரு பாகமாகி நமக்கு உரியதாவது போல, கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கின்ற யாவரும் ஆவிக்குரிய வகையில் அவருடைய பாகமாகி, அவருக்கு உரியவர்களாகின்றோம். நாம் அவருக்குள் ஞானஸ்நானம் பெறுவதினால், நாம் இந்த உறவுமுறைக்குள் பிரவேசிக்கின்றோம். நாம் ஞானஸ்நானம் பெறாதிருந்தால், நாம் இயேசுவுக்குப் புறம்பே இருக்கின்றோம் - நாம் அவரை அணிந்திருப்பது இல்லை, மற்றும் அவருக்கு உரியவர்களாய் இருப்பதில்லை.

தொகுப்புரை

ஞானஸ்நானம் என்பது இயேசுவின் மீட்பின் பலியின் மீதுள்ள விசுவாசத்தின் செயல்பாடாகத் தேவனால் கேட்டுக் கொள்ளப்படுகின்றது. நாம் ஞானஸ்நானத்தை ஏற்றுக் கொள்ளும் பொழுது, நமது பாவங்களைக் கழுவவும் நமது வாழ்வை மாற்றவும் இயேசுவின் இரத்தத்தின் மீது நாம் கொண்டுள்ள தைரியமான நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றோம். ஞானஸ்நானத்தின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டுள்ள ஒரு நபர் அதில் உண்மையான இருதயத்துடன் பதில் செயலாற்றும் பொழுது அது "தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்" (கொலோ. 3:10) சிருஷ்டிக்கப்பட்ட புதிய வாழ்வைப் பெறுவதென்ற விளைவை (ரோமர் 6:4) அவருக்கு ஏற்படுத்தும். அவர் ஒரு புது சிருஷ்டியாக்கப்படுவார் (2 கொரி. 5:17), இயேசுவின் இயல்பினால் உடுத்துவிக்கப்பட்ட தேவனுடைய குழந்தையாவார் (கலா. 3:26, 27). ஞானஸ்நானம் என்பது ஒரு சடங்கிற்குப் பதில்செயல் என்பதை விட அதிகமானதாய் இருக்க வேண்டும்; அது நம்மை, இயேசுவை உடுத்திக்கொண்ட தேவனுடைய பிள்ளைகளாக மாற்ற வேண்டும்.

குறிப்புகள்

[1]Daniel C. Arichea Jr. and Eugene A. Nida, *A Translator's Handbook on Paul's Letter to the Galatians* (New York: United Bible Societies, 1976), 83. [2]John R. W. Stott, *The Message of Galatians: Only One Way* (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1968), 99. [3]James D. G. Dunn, *Black's New Testament Commentaries*, vol. 9, *A Commentary on the Epistle to the Galatians*, gen. ed. Henry Chadrick (Peabody, Mass.: Hendrickson, 1995), 203. [4]George S. Duncan, *The Epistle of Paul to the Galatians,* The Moffatt New Testament Commentary, ed. James Moffatt (Grand Rapids. Mich.: Zondervan, Hodder and Stoughton, 1955), 120. [5]கலாத்தியர் 3ல் ("ஏனெனில்") என்பது வசனங்கள் 25 மற்றும் 26, மற்றும் வசனங்கள் 26 மற்றும் 27 ஆகியவற்றிடையில் தொடர்பு படுத்தும் சொல்லாக உள்ளது. [6]Daniel

GTG LIBRARY- BANGALORE

C. Arichea Jr. and Eugene A. Nida, *A Translator's Handbook on Paul's Letter to the Galatians* (New York: United Bible Societies, 1976), 81. [7]F. F. Bruce, *The Epistle to the Galatians: A Commentary on the Greek Text* (Grand Rapids. Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 182. [8]Arichea and Nida, 84. [9]Herman N. Ridderbos, *The Epistle of Paul to the Churches of Galatia,* The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1953), 148. [10]George S. Duncan, *The Epistle of Paul to the Galatians,* The Moffatt New Testament Commentary, ed. James Moffatt (London: Hodder and Stoughton, 1955), 123.

ஞானஸ்நானத்தில் ஆவிக்குரிய ஈடுபாடு

ஞானஸ்நானம் இரட்சிப்புடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. விசுவாசமானது அந்த செயலைத் தூண்டுவதன் காரணமாக பலன் அளிக்கப்படுகின்ற விசுவாசச் செயலாக இது உள்ளது (அப். 2:38; கொலோ. 2:12). ஞானஸ்நானம் செல்லத் தக்கதாய் இருப்பதற்கு உடல் ரீதியான (அந்த) செயல்பாட்டுக்குக் கீழ்ப்படிகின்றவர் ஆவிக்குரிய வகையிலும் (அதில்) ஈடுபாடு கொண்டவராக இருக்க வேண்டும். அவர் தமது கடந்த காலப் பாவங்களுக்கு மன்னிப்புப் பெற்றுக்கொள்வதைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த அடக்கமும் உயிர்த்தெழுதலும் பழைய வாழ்வை முடித்து வைக்கின்றது - தாம் இயேசுவுடன் ஒரு புதிய உறவில் பிரவேசித்து அவரது கர்த்தத்துவத்தை ஏற்றுக் கொள்கின்றோம் - என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும்.

நமது பாவமன்னிப்பிற்கான இயேசுவின் மரணம் என்பது அவரது மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் மற்றவர்கள் அவருக்குச் செய்தவற்றினால் கொண்டு வரப்பட்டது. அதே வழிமுறையில், நமது இரட்சிப்பு என்பது இன்னொருவர் நம்மை ஞானஸ்நானத்தில் அடக்கம் செய்து உயிர்ப்பிக்க வைப்பதன் மூலம் கொண்டு வரப்படுவதாக உள்ளது. நமக்கு உடல்ரீதியாக இது நடந்து கொண்டிருக்கையில், நமது இருதயங்கள் ஆவிக்குரிய வகையில் ஈடுபாடு கொண்டு, நமது பாவங்களைக் கழுவ இயேசுவின் இரத்தத்தின் மீது நம்பிக்கை கொள்ளுகின்றன (ரோமர் 3:25).

GTG LIBRARY- BANGALORE

ஆவிக்குரிய விருத்தசேதனம் என்ற வகையில் ஞானஸ்நானம்

> *"அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப் பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவ சரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள். ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள். உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடேகூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து"; (கொலோ. 2:11-13).*

ஞானஸ்நானத்தைப் பற்றிய ஒரு வசனப் பகுதியான கொலோ. 2:11-13ஐப் பற்றி நாம் கலந்தாய்வு செய்யும் முன்பு, கொலோசெயருக்கு இந்த நிருபத்தை எழுதுவதற்கான பவுலின் நோக்கத்தை நாம் கவனிப்போம். இயேசுவின் மாபெரும் தன்மை என்பதே கொலோசெயர் நிருபத்தில் பவுலின் பிரதான வலியுறுத்தமாய் இருந்தது, அவர், மனிதருடைய ஆழமான தேவைகளுக்கு பதில் என்ற வகையில் இயேசுவைச் சித்தரித்து, இயேசுவில்தான் நாம் மீட்பையும் நமது பாங்களுக்கு மன்னிப்பையும் பெறுகின்றோம் என்று வலியுறுத்தினார் (கொலோ. 1:14). இயேசுவின் மாபெரும் பண்புகளைப் பற்றிய நமது அறிவானது (கொலோ. 1:15-18) அவர் மீது அளவில்லா நம்பிக்கையை நமக்கு அளிக்க வேண்டும்.

கிறிஸ்தவர்கள் இருளின் அதிகாரத்தினின்று விடுவிக்கப்பட்டு தேவனுடைய குமாரனின் இராஜ்யத்திற்குள்ளாக்கப்பட்டதாகப் பவுல் அறிவித்தார் (கொலோ. 1:13). இது இந்நிருபம் எழுதப்பட்ட வேளையில் பின்வருவனவற்றை மறைமுகமாய் உணர்த்திற்று: (1) இயேசு ஏற்கனவே இராஜாவாய் இருந்தார், (2) அவருடைய இராஜ்யம் இருந்து வந்தது, (3) மன்னிப்பு கிடைக்கக் கூடியதாய் இருந்தது மற்றும் (4) மக்கள் அவரது இராஜ்யத்தினுள் பிரவேசித்துக் கொண்டிருந்தனர். இயேசு பவுலுக்கு(சவுலுக்கு)த் தோன்றிய பொழுது, "அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்

GTG LIBRARY- BANGALORE

களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக் கொள்ளும்படியாக அவர்கள் இருளை விட்டு ஒளியினிடத்திற்கும் சாத்தானுடைய அதிகாரத்தை விட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படியாக நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும் பொருட்டு'' (அப். 26:18) பவுலைப் புறஜாதியாரிடம் அனுப்புவதாக அவரிடத்தில் இயேசு கூறினார். இருளில் இருந்து ஒளிக்கு உட்படுத்தப்பட்டவர்கள் என்பவர்கள் தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு இயேசுவின் இராஜ்யத்தினுள் இருப்பவர்களே.

இயேசுவுக்குள் நாம் மீட்பையும், நமது பாவங்களுக்கு மன்னிப்பையும் பெறுகின்றோம் (கொலோ. 1:14). தேவனுடன் நமது முறிந்த உறவை இயேசுவின் இரத்தம் சரிப்படுத்த முடியும் (1:20-22).

மற்றும், இயேசு தேவனுடைய சாயலாயிருப்பதால் அவர் மகா பெரியவராய் இருக்கின்றார் (1:15); அவர் சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேருமானவர் (1:15); சகலத்தையும் சிருஷ்டித்தவர் (1:16); எல்லாவற்றிற்கும் முந்தினவர் (1:17); எல்லாவற்றையும் நிலைநிறுத்துகின்றவர் (1:18); சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர் (1:18); மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேரானவர் (1:18); மற்றும் எல்லாவற்றிலும் முதல்வரானவர் (1:18).

இயேசுவை நமது கர்த்தர் என்ற நிலையிலிருந்து நம்மை எவரொருவரும் விலக்கி நடத்திச் சென்று விடாதபடிக்குப் பவுல் இயேசுவைப் பற்றிய இந்த அடிப்படை உண்மைகளை முன் வைத்தார் (2:4, 8). அவருக்குள் பின்வருபவை உள்ளன: ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்கள் எல்லாம் (2:3), தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக (2:9), நம்மைப் பரிபூரணமுள்ளவர்களாக்கும் திறமை (2:10), மற்றும் இயேசுவைப் பற்றும் விருத்தசேதனமானது நாம் ஞானஸ்நானம் பெறும் போது நமது பாவங்களை நீக்குகின்றது (2:11-13). இந்த உண்மை நிலைகள் நமக்கு, மனிதரின் போதனைகளையும் நியாயப்பிரமாணத்தில் கட்டளையிடப் பட்டுள்ளவற்றைப் பின்பற்றுவதையும் நாம் மறுக்கக் காரணமாயுள்ள (இயேசுவின் மீது) தைரியமான நம்பிக்கையை நமக்குத் தரக் காரணமானவைகளாய் இருக்க வேண்டும் (2:8, 14-17).

நாம் இயேசுவைக் கொண்டிராதவர்களாய் இருந்தால், நாம் நம்பிக்கை யற்றவர்களாகவும், தேவனற்றவர்களாகவும் இருக்கின்றோம்; ஆனால் நாம் அவருக்குள் இருந்தால், நாம் அவருடைய இரத்தத்தினாலே அவருக்குச் சமீபமாகின்றோம். எபேசியர் 2:13 வசனத்தில், "முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்" என்று கூறப்படுகின்றது.

கிறிஸ்து நமக்குள் இருப்பதிலும் நாம் கிறிஸ்துவுக்குள் இருப்பதிலும் தான் நமது மகிமையின் நம்பிக்கை உள்ளது (கொலோ. 1:27). அவருக்குள் நாம் சரீர இச்சைகளின் ஆளுகையிலிருந்து விடுவிக்கப்படுகின்றோம், ஆவிக்குரிய வகையில் உயிர் பிழைக்க வைக்கப்படுகின்றோம், மற்றும் நமது அக்கிரமங்கள் யாவும் மன்னிக்கப்படுகின்றன (கொலோ. 2:11-13).

அதிகாரம் 2ல் பவுல் தொடர்ந்து, கொலோசேயில் இருந்த கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்கு விசுவாசமுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். அவர்கள் அவருக்குரியவர்களாய் இருக்கின்றனர்,

GTG LIBRARY- BANGALORE

ஏனெனில் அவரிடத்திலிருந்து அவர்கள் ஆவிக்குரிய விருத்தசேதனத்தைப் பெற்றுக் கொண்டனர் என்று அவர் கூறினார். இந்த ஆவிக்குரிய விருத்தசேதனம் என்பது என்ன?

ஞானஸ்நானம் என்பது விருத்தசேதனத்தைப் போன்றதாக உள்ளது

> *அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப்பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள் (கொலோ. 2:11).*

ஆபிரகாமும் அவருடைய சந்ததிகளும் உடன்படிக்கையின் முத்திரையாக விருத்தசேதனத்தைப் பெற்றுக் கொண்டால் தேவன் அவர்களின் தேவனாயிருப்பதாக ஆபிரகாமிடத்தில் அவர் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார் (ஆதி. 17:7-11). விருத்தசேதனம் செய்து கொள்ளாத எந்த ஆண்பிள்ளையும் அவருடைய (ஆபிரகாமுடைய) மக்களில் இருந்து அறுப்புண்டு போவதாயிருந்தது (ஆதி. 17:14).

விருத்தசேதனத்தை ஆவிக்குரிய கருத்தில் ஞானஸ்நானத்துடன் பவுல் ஒப்பிட்டார்: விருத்தசேதனத்தில் (ஆண்) குழந்தையின் நுனித்தோலானது (வெட்டி) அகற்றப்படுவது போல, கிறிஸ்தவரின் இருதயத்தில் இருந்து பாவ இச்சைகள் நீக்கப்பட வேண்டியவைகளாய் உள்ளன. ஞானஸ்நானத்தை விருத்தசேதனத்துடன் ஒப்பிடுவதன் மூலம், ஞானஸ்நானத்தில் ஆவிக்குரிய விருத்தசேதனம் நடைபெறுவதாகப் பவுல் போதித்தார். ஞானஸ்நானத்தில், ஒருவர் தனது மாம்ச இச்சைகளையும் பாவசெயல்களையும் களைந்து போடுவதன் மூலம் ஆவிக்குரிய வகையில் விருத்தசேதனம் பண்ணப் படுகின்றார் (கொலோ. 2:11).

"களைந்து போடுதல்" (கிரேக்கம்: apekdusis) என்ற சொற்றொடர் "வரவேற்பற்ற உடைகளின் தொகுப்பு ஒன்றை நீக்குதல் அல்லது களைதல் என்ற உருவகமாய் இருப்பினும் இது கடந்த கால வாழ்வில் இருந்து முழுவதுமாக துண்டிக்கப்படுதல் என்பதையே கருத்தாக அறிவிக்கின்றது."[1] இவ்விடத்தில் விவரிக்கப்படுகின்ற விருத்தசேதனம் "கையால் செய்யப்படாத ஒன்றாக உள்ளது, அதாவது இது முற்றிலும் தேவனுடைய செயலாக உள்ளது ... ஞானஸ்நானத்தில் அனுபவிக்கப்படுவது தேவனுடைய செயலாக உள்ளது என்பதைப் பவுல் வலியுறுத்துகின்றார்."[2] (இதே போன்ற சொற்றொடர்கள் மாற். 14:58 மற்றும் 2 கொரி. 5:1 ஆகிய வசனங்களிலும் உள்ளன.)

"மாம்ச சரீரம்" என்பது "பாவ சரீரம்" (ரோமர் 6:6) மற்றும் "சாவுக்கேதுவான சரீரம்" (ரோமர் 7:24) என்றும் குறிப்பிடப்படலாம். இயேசு மாம்சத்தில் வந்தார் என்ற உண்மையினாலே ஆதாரப்படுத்தப்பட்டுள்ள வகையில் (யோவா. 1:14; ரோமர் 1:3) சரீரமும் மாம்சமும் பாவம் நிறைந்தவையல்ல - ஆனால் அவற்றின் மூலமாகப் பாவமானது தனது

GTG LIBRARY- BANGALORE

இச்சையை நமக்கு வெளிப்படுத்த வாய்ப்பைக் காண்கின்றது. "மாம்சம்" என்ற வார்த்தையின் மூலமாகப் பவுல், பாவம் நிறைந்த விஷயங்கள் நம்மைச் சோதிக்கப் பயன்படும் மனித இச்சைகளை அர்த்தப்படுத்தினார் (கலா. 5:24). ஞானஸ்நானத்தில் ஆவிக்குரிய வகையில் ஈடுபாடு கொள்பவரிடமிருந்து மாம்சத்திற்குரிய இந்த இச்சைகள் ஒரு கருத்தில் நீக்கப்படுகின்றன.

விருத்தசேதனம் (கொலோ. 2:11) மற்றும் ஞானஸ்நானம் (2:12) ஆகியவற்றிற்கிடையே உள்ள தொடர்பானது தெளிவானதாக உள்ளது. கிறிஸ்துவுக்குள் விருத்தசேதனம் என்பது ஞானஸ்நானத்தில் நிறைவேற்றப் படுகின்றது என்பதே பவுலின் சிந்தனையினுடைய வளர் நிலையாக உள்ளது.

முர்ரே ஹாரிஸ் அவர்கள், "உங்கள் ஞானஸ்நான வேளையில், தேவனு டைய வல்லமை நிறைந்த செயலின் மீதுள்ள உங்கள் விசுவாசத்தின் மூலம் நீங்கள் ஆவிக்குரிய வகையில் உயிர்ப்பிக்கப்படும் பொழுது இந்த இருதய விருத்தசேதனம் நடைபெறுகின்றது, இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பியதன் மூலம் தேவன் வல்லமையை செயல்விளக்கப்படுத்தினார்"[3] என்றார்.

ஞானஸ்நானத்தின் அர்த்தம்

> ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள் (கொலோ. 2:12).

கொலோசெயர் நிருபத்தில் "ஞானஸ்நானம்" என்று அர்த்தப்படுத்தப் படுவது பல வழிமுறைகளில் கண்ணோக்கப்பட்டுள்ளது:

(1) பவுல் ஆவிக்குரிய (தண்ணீரினால் அல்ல) ஞானஸ்நானத்தையே மறைமுகமாய் உணர்த்துவதாகச் சிலர் நினைத்துள்ளனர், ஆனால் விஷயம் இப்படியிருக்க முடியாது. ஞானஸ்நானத்தின் குறிப்புகளைப் பற்றி அல்பிரெக்ட் ஒப்க் அவர்கள், "சந்தர்ப்பப் பொருளானது வேறு வகையாய்ச் சுட்டிக்காட்டவில்லையென்றால், ஞானஸ்நானத்திற்கான புதிய ஏற்பாட்டுக் குறிப்புகள் தண்ணீர் ஞானஸ்நானமாகவே நினைக்கப்பட வேண்டும். ஞானஸ்நானம் என்றாலே 'தண்ணீரில் ஞானஸ்நானப் படுத்துதல்' என்றே அர்த்தமாகின்றது. ஆகையால் ஊடகம் ஒன்றைக் குறிப்பிடுதல் என்பது அவசியமற்றதாக உள்ளது" என்று க(வ)ணித்துள்ளார்.[4]

பாவ சரீரத்தைக் களைந்து போட்டு பாவத்தை மன்னித்தல் என்ற தேவனுடைய செயல்தான் நமது இரட்சிப்பில் ஆவிக்குரிய பாகமாய் உள்ளது. தேவனுடைய செயலின் மீதுள்ள விசுவாசத்தினால் ஞானஸ்நானம் பெறுதல் என்ற பதில்செயல் செய்வது என்பது நமது பாகமாக உள்ளது.

(2) நேரடியான/உண்மையான ஞானஸ்நானத்திற்குப் பதிலாகப் பவுல் ஒரு அடையாளத்தைக் குறிப்பிட்டார் என்று சிலர் கூறியுள்ளனர், ஆனால்

GTG LIBRARY- BANGALORE

இதுவும் உண்மையாய் இருக்க முடியாது. வேதாகமத்தின் மற்ற வசனப் பகுதிகள் ஞானஸ்நானத்தை ஒரு அடையாளமாக மட்டும் கருதியிருந்தால், இப்படிப்பட்ட ஒரு முடிவானது முறைப்படியானதாய் இருக்கலாம்; இருப்பினும் ஞானஸ்நானம் என்பது தண்ணீரை ஈடுபடுத்துகின்ற உடல் ரீதியான செயல் என்பதாகப் பிற கூற்றுகள் சுட்டிக்காண்பிக்கின்றன (மத். 3:13-17; அப். 8:35-39).

(3) இன்னொரு சிந்தனை வரிசையின்படி, ஞானஸ்நானத்தை விளைவிக்கின்ற இரட்சிப்பின் விசுவாசத்தைத் தேவன் (மக்களின்) இருதயத்தில் வைக்கின்றார் என்று பவுல் போதித்தார் எனப்படுகின்றது. விளக்கவுரையாளர்களின் ஒரு குழுவினர், "இயேசுவை உயிர்ப்பித்தலில் தேவனுடைய வல்லமையான செயலின் மீதுள்ள விசுவாசம் இரட்சிக்கும் விசுவாசமாக உள்ளது (ரோமர் 4:24; 10:9). மற்றும் இது இயேசுவை உயிர்ப்பித்த அவருடைய அதே 'வல்லமையான செயலினால்' கொண்டு வரப்படுகின்றது (எபே. 1:19, 20)" என்று எழுதினார்கள்.[5]

இருப்பினும், இழந்து போகப்பட்டவர்களின் இருதயங்களில் தேவன் விசுவாசத்தை வைக்கிறார் என்ற உபதேசம் வேத வசனங்களில் இருந்து அல்ல, ஆனால் நாமகரணக் கூட்டத்தின் போதனைக் கோட்பாடுகளில் இருந்து வந்த கருத்தாக உள்ளது. தேவனுடைய வசனத்தைக் கேட்பதி னாலேயே விசுவாசம் வருகிறது என்றுதான் வேதாகமம் போதிக்கின்றது (யோவா. 17:20; 20:30, 31; அப். 17:11, 12; ரோமர் 10:17).

(4) ஞானஸ்நானம் பெறுபவரின் விசுவாசம் அவரது வாழ்வில் தேவன் செய்கின்ற எந்த செயலின் மீதும் இருப்பதற்குப் பதிலாக, இயேசுவின் உயிர்த்தெழுதலின்மீது (அந்த விசுவாசம்) வைக்கப்படுகிறது என்பது இன்னொரு கண்ணோட்டமாக உள்ளது. வெகு சில விளக்கவுரையாளர்கள் இந்த விளக்கத்தை வெளிப்படுத்துகின்றனர்.

(5) ஞானஸ்நானம் பெறுபவர் தேவனுடைய செயலின் மீது - மரித்தோரிலிருந்து இயேசுவை எழுப்பிய அதே செயலின் மீது - விசுவாசம் வைக்கின்றார், அவர் இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் பலன்களைத் தம் வாழ்வில் பயன்படுத்திக் கொள்ளவே இவ்வாறு விசுவாசம் வைக்கின்றார் என்று பவுல் குறிப்பிட்டார் என்பதே மிகவும் சரியான கண்ணோட்டமாக உள்ளது. இது சந்தர்ப்பப் பொருளுடன் சீர் பொருந்தியதாக மற்றும் மிகவும் நியாயமான விளக்கமாக உள்ளது.

ரால்ஃப் P. மார்ட்டின் அவர்கள் பின்வருமாறு கூறினார்:

> கிறிஸ்துவின் மீட்பு என்ற ஆவிக்குரிய விருத்தசேதனத்திற்குப் பதில் அளிக்கின்ற கிறிஸ்தவ ஞானஸ்நானத்திற்கு, அதைப் பெறுபவரின் பகுதியில் தனிப்பட்ட ஒப்புதலும் ஏற்றுக் கொள்ளுதலும் தேவைப்படுகின்றது. விசுவாசத்தின் இன்றியமையாமையானது சடங்கை நோக்கி இலக்குப் படுத்தப்படாமல், அச்"சடங்கில்" தேவனு டைய செயல்களை நோக்கி இலக்குப் படுத்தப்படுகின்றது என்றே இது அர்த்தப்படுகின்றது, மற்றும் இது, விசுவாசிகள் மரித்து, உயிர்ப்பிக்கப் பட்டு தங்களைப் பாவத்தை வெற்றி கொண்ட தெய்வீக வாழ்வின் வட்டாரத்திற்குள் வைப்பது என்ற செயலைச் செய்ய வல்லமையுள்ள

GTG LIBRARY- BANGALORE

கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் இரட்சிக்கும் வல்லமைக்குப் பயன்படுகின்றது (ரோமர் 6:7, 9-11).[6]

ஹெர்பெர்ட் M. கர்ஸன் அவர்கள் பின்வருமாறு மிகச் சரியாகக் விளக்கியுள்ளார்.

> இவ்விதமாக, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் ஏற்கனவே செயல் விளக்கப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய வல்லமையான செயலானது விசுவாசியின் தைரியமான நம்பிக்கைக்குக் கருப் பொருளாய் உள்ளது. எனவே விவாதம் பின்வருமாறு இருக்கும்: அவர்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினுடைய உண்மையை ஏற்றுக் கொண்டார்கள். இது தேவனுடைய வல்லமைக்கு அடையாளமான செயல் விளக்கமாக இருந்தது, மற்றும் அவர்கள் அந்த வல்லமையைச் சார்ந்திருந்ததால் கிறிஸ்துவுடன் ஐக்கியத்தில் ஆவிக்குரிய உயிர்த்தெழுதலை அறிந்திருந்தனர்.[7]

G. R. *பீஸ்லே - முர்ரே அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> விசுவாசத்தின் செயல்பாட்டை, மனிதரின் எண்ணப்போக்கு எதையும் பொருட்படுத்தாமல் செயல்படத் தேவன் கேட்கும் ஞானஸ்நானம் மட்டுமே என்றோ அல்லது தேவன் ஞானஸ்நானத்தில் என்ன செய்கின்றார் என்பதைப் புரிந்து கொள்ளுதல் மட்டுமே என்றோ அல்லது ஞானஸ்நானத்திற்குப் பிறகு ஏற்புடைய பதில்செயலை ஏற்படுத்துவதற்கான விருப்பத்தை மெய்ப்பித்தல் என்றோ குறிப்பிடுதல் தவறானதாக உள்ளது.[8]

ஞானஸ்நானம் பெறுகின்றவர் செயல்படும் விசுவாசம் கொண்டிருக்க வேண்டியதன் அவசியத்தை பீஸ்லே - முர்ரே அவர்கள் கண்டார். இவ்விடத்தில் குறிப்பிடப்படுகின்ற விசுவாசம் என்பது இயேசு உயிர்ப்பிக்கப்பட்டார் என்ற உண்மையின் மீதுள்ளது மட்டுமின்றி, ஒரு நபர் ஞானஸ்நானம் பெறுகையில் நடைபெறும் தேவனுடைய செயலின் மீதுள்ள விசுவாசமாகும். மேலும் அவர் பின்வருமாறும் கூறினார்:

> ... விசுவாசியை மரித்தோரிலிருந்து எழுப்பும் வல்லமையை விசுவாசம் தன்னிலேயே கொண்டிருப்பது இல்லை - தேவன் அதைச் செய்யும் படியே, அது (விசுவாசம்) கண்ணோக்க முடியும்; ஆனால் இந்த எடுத்துரைப்பின்படி, ஞானஸ்நானம் பெறுபவரின் விசுவாசத்திற்குப் பதில்செயலாக ஞானஸ்நானத்தில் மரித்தவரைத் தேவன் தமது மகா வல்லமையினால் உயிர்ப்பிக்கச் செயல்படுகின்றார். தேவன் தமது செயலின் கருப் பொருள் மீது விசுவாசமற்ற வகையில் செயல்பாட்டின் காரணத்தினால் மட்டும் ஒருவரை உயிர்ப்பிக்கும் ஞானஸ்நானம் என்பது எண்ணவும் முடியாததாக உள்ளது.[9]

பரிசுத்த வசனங்களின் விளக்கவுரை: கொலோசெயர் என்ற நூலில், கார்ல் பிரான் அவர்கள் பின்வருமாறு எடுத்துரைத்தார்:

GTG LIBRARY- BANGALORE

> *எனவே தேவன் பண்பு படுத்தப்படுகின்றார்: ஒரு நபரை மரித்தோரில் இருந்து உயிர்ப்பிக்கின்றார், ஏனென்றால் முக்கூற்று முடிவு பின்வருமாறு செல்லுகின்றது: தேவன் கிறிஸ்துவை உயிர்ப்பித் துள்ளாரா, பிறகு அவர் என்னையும் புதிய வாழ்வினுள் கொண்டு வர முடியுமா (எபே. 1:19, 20ஐ ஒப்பிடவும்)? இது அனுபவிக்கப்படும் அளவில் ''தேவனுடைய செயல்பாடு'' என்றுள்ளது போன்ற விசுவாசமாகவே இந்நிகழ்வு முழுவதிலும் உள்ளது.[10]*

வில்லியம் பார்க்ளே அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> *கிறிஸ்துவை மரித்தோரில் இருந்து எழுப்பிய தேவனுடைய வல்லமை யாகிய செயல்படும் கிரியை மீது ஒரு மனிதர் விசுவாசம் கொள்ளும் பொழுதுதான் இது நடைபெற முடியும். அப்பொழுதுதான் சிலுவை யினூடாகவும், உயிர்ப்பிப்பதாகவும் இயேசு கிறிஸ்துவை வழி நடத்திய வல்லமையானது அதே செயலைத் தனக்கும் செய்யும் என்று அவர் நம்பிக்கை கொண்டு இணங்க முடியும்.[11]*

மார்வின் R. வின்சென்ட் அவர்கள், இப்படிப்பட்ட மாற்றமானது "தேவனுடைய செயலின் மீதுள்ள விசுவாசத்தினாலேயே" நடைபெறு கிறதேயன்றி, "தேவன் செயல்படுகின்றார் என்பதால் அல்ல ஆனால் தேவனு டைய செயலின் மீதுள்ள உங்கள் விசுவாசத்தினால் ... இது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் காட்சிப்படுத்தப்பட்டது போல இருக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார்.[12]

இராபர்ட் G. பிராட்சர் மற்றும் யூஜின் A. நிடா ஆகியோரால் நல்லதொரு தொகுப்புரை அளிக்கப்பட்டது:

> *[கொலோ. 2:12ன்] மையப் பகுதியானது, "நீங்கள் ஞானஸ்நானம் பெற்ற பொழுது, தேவன் தமது வல்லமையினால் உங்களை மீண்டும் வாழும்படியும் செய்தார். அவர் உங்களைக் கிறிஸ்துவுடனே கூடவே உயிர்த்தெழவும் செய்தார். இது தேவனுடைய வல்லமையின் மீது உங்களுக்குள்ள விசுவாசத்தின் விளைவாக நடைபெற்றது" என்று தரவழைக்கப்படலாம்.[13]*

இயேசுவின் மரித்த உடலுக்கு உயிர் கொடுத்த தேவனுடைய அதே வல்லமையானது பாவத்தில் மரித்துள்ளவரை எடுத்து ஆவிக்குரிய வாழ்வை அவருக்குக் கொடுக்க முடியும் என்ற விசுவாசம் கொண்டுள்ளவரே ஞானஸ்நானத்தில் பயனடையும் நபராக இருக்கின்றார். இது பிரசங்கியார் மீதோ, தண்ணீரின் மீதோ, (ஞானஸ்நானம் என்ற அந்த) செயல்பாட்டின் மீதோ, அல்லது இயேசுவின் உயிர்த்தெழுதலின் மீதோ கூட வைக்கின்ற விசுவாசம் அல்ல - ஆனால் இது, இயேசுவை எழுப்பியதால் (உடலுக்குரிய அல்லது ஆவிக்குரிய) வாழ்வளிக்கும் வல்லமையை செயல்விளக்கப்படுத்திய தேவனுடைய செயலின் மீது வைக்கின்ற விசுவாசமாக உள்ளது. இயேசுவின் இறந்த உடலில் புதிய ஜீவனைத் தேவன் வைத்தார் என்று ஒருவர் விசுவாசம் கொள்ள முடியுமென்றால், நிச்சயமாகவே அந்த நபர் தாம் ஞானஸ்நானம்

GTG LIBRARY- BANGALORE

பெறும்பொழுது, தேவன் ஆவிக்குரிய ஜீவனையும் மன்னிப்பையும் தமக்குத் தர முடியும் என்ற விசுவாசத்தின் திடமான அடிப்படையைப் பெற்றிருக்க முடியும்.

ஞானஸ்நானத்தின் செயலினுடைய செல்லுந்தன்மை தேவன் செய்கின்றவற்றின் மேலுள்ள விசுவாசத்தைச் சார்ந்துள்ளது. இப்படிப்பட்ட விசுவாசம் இல்லையேல், அந்த செயல்பாடு வெறுமையான, மதிப்பற்ற ஒரு சடங்காகவே உள்ளது. விசுவாசமும் புரிந்து கொள்ளுதலும் இல்லாமல் - ஞானஸ்நானம் தன்னிலே தானே - ஆவிக்குரிய விருத்தசேதனம் செய்வதோ அல்லது ஒருவரை இயேசுவுடன் உயிர் பெறச் செய்வதோ இல்லை. தேவனுடைய செயலின் மீது விசுவாசம் கொள்வதற்கு, நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது தேவன் என்ன செய்கின்றார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தேவன் நமது பாவங்களையும் பாவம் நிறைந்த இச்சைகளையும் களைந்து போட்டு, அவரால் செய்ய முடிந்ததும் மற்றும் செய்வதுமான வற்றின் மீது நாம் கொண்டுள்ள விசுவாசத்தினிமித்தம் நம்மை ஆவிக்குரிய வகையில் உயிர் பெறச் செய்கின்றார். இது நாம் இயேசுவின் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலில் அவருடன் இணையும் பொழுது மட்டுமே நடக்க முடியும். நாம் இதை - உடல் ரீதியாகவும் ஆவிக்குரிய வகையிலும் - ஞானஸ்நானத்தில் செய்கின்றோம்.

நாம் பின்வருமாறு முடிவு செய்ய வேண்டும்: (1) நாம் ஞானஸ்நானம் பெறுகையில் தேவனுடைய செயலை, ஜீவனையும் மன்னிப்பையும் கொடுப்பதற்கான தேவனுடைய செயல்படுதலாகப் பவுல் கண்ணோக்கினார், மற்றும் (2) இப்படிப்பட்ட செயல்விளைவுகளைக் கொண்டு வருவதற்கான உள்ளான திறனை ஞானஸ்நானம் கொண்டிருப்பது இல்லை. ஞானஸ்நானம் என்பது தேவன் செயல்படுகின்ற தருணமாக உள்ளது, ஏனென்றால் நாம் ஞானஸ்நானத்தில் இயேசுவுடன் அடக்கம் பண்ணப் பட்டு உயிர்ப்பிக்கப்படும் பொழுது, நமக்கு ஒரு புதிய ஆவிக்குரிய வாழ்வைத் தரவும் நமது பாவங்களை மன்னிக்கவும் நம்மை உயிர்ப் பிக்கும்படி கூட தேவன் செயல்பட முடியும் என்று நாம் விசுவாசிப் பதற்கான போதுமான ஆதாரத்தை நாம் இயேசுவின் உயிர்த்தெழுதலில் கண்டறிகின்றோம்.

உயிர்ப்பிக்கப்பட்டு மன்னிக்கப்படுதல்

> *உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதன மில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடேகூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து; (கொலோ. 2:13).*

ஞானஸ்நானம் பெறுகையில் தேவனுடைய வல்லமையானது தங்களுக்கு என்ன செய்ய முடியும் என்பதை விசுவாசிப்பவர்கள் உயிர்ப்பிக்கப்படுகின்றனர். இப்படிப்பட்ட ஒரு மாற்றம் நடக்கின்றது என்பதைக் காண்பிக்கப் பவுல் இரு உருவகங்களைப் பயன்படுத்தினார்

GTG LIBRARY- BANGALORE

(கொலோ. 2:11-13).

கொலோசெயிலிருந்தவர்கள் ஞானஸ்நானம் பெறும் முன்பு "விருத்த சேதனமில்லாதவர்களாக," மாம்ச இச்சைகளினால் கட்டுப் படுத்தப்பட்ட வர்களாக இருந்தனர் என்று பவுல் கூறினார். மேலும் அவர்கள் "பாவத்தில் மரித்தவர்களாய்" - அதாவது ஆவிக்குரிய நிலையில் மரித்து, இன்னும் பாவத்தினால் அசுத்தமாக்கப்பட்டவர்களாக - இருந்ததாகவும் அவர் விவரித்தார். ஞானஸ்நானத்தில் ஒரு மாற்றம் நடைபெற்றது: அவர்கள் தங்கள் ஆவிக்குரிய இச்சைகளைக் களைந்து போட்டதினால் ஆவிக்குரிய விருத்தசேதனம் பெற்றார்கள், மற்றும் ஆவிக்குரிய கருத்தில் இயேசுவின் உயிர்த்தெழுதலில் பங்கு பெற்றார்கள். தேவன் செய்ய முடிந்தவற்றில் அவர்கள் கொண்டிருந்த விசுவாசத்தின் காரணமாக அவர்கள் பாவத்தில் மரித்திருப்பதை விட்டு, உயிருள்ளவர்களாக்கப்பட்டனர். அவர்களின் முந்திய நிலைக்கு காரணமாயிருந்த பாவமானது ஞானஸ்நானத்தில் நீக்கப்பட்டு அவர்களை ஆவிக்குரிய விருத்தசேதனமும் ஆவிக்குரிய வாழ்வும் பெற்றவர்களாக்கிற்று. கொலோசெயிலிருந்தவர்களைப் பற்றிப் பவுல், "உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதன மில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடே கூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து"; என்று எடுத்துரைத்தார் *(கொலோ. 2:13).*

பவுலின் செய்திக்கான ஏற்புடைய வகையில் அமைந்த பின்வரும் தொகுப்புரையை A.T. இராபர்ட்சன் அவர்கள் கொடுத்தார்: "தேவன் ஜீவனைக் கொடுத்தார், மற்றும் அவர் ஆத்துமாவின் மீதும் சரீரத்தின் மீதும் ஜீவனைப் பொழிய முடியும். சந்தேகப்படுகின்றவர்களுக்குப் பவுல் தேவ வல்லமையை அளிக்கின்றார்."[14]

பிற்பாடு பவுல், ஞானஸ்நானத்தில் இயேசுவுடன் அடக்கம் பண்ணப் பட்டு உயிர்ப்பிக்கப்பட்ட அனுபவத்தைத் தொடர்ந்து வர வேண்டியது என்ன என்று போதித்தார். "நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டா னால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவை களையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது" *(கொலோ. 3:1-3).*

தொகுப்புரை

ஞானஸ்நானமற்ற விசுவாசம் முழுமையற்றதாக உள்ளது, மற்றும் தேவனுடைய செயலின் மீது விசுவாசம் அற்ற ஞானஸ்நானம் செல்லாததாக உள்ளது. இரட்சிப்பு என்பது இயேசுவின் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் ஞானஸ்நானத்தின் மூலம் நாம் பங்கு பெற விழையும் பொழுது தேவன் நமக்குச் செய்யக் கூடியது என்ன என்பவற்றின் மேலுள்ள விசுவாசத்தைச் சார்ந்துள்ளது. இது, தேவனுடைய வல்லமையானது இயேசுவை மரித்தோரிலிருந்து உயிர்ப்பித்தது என்றால், அதே வல்லமையானது நமக்கும் ஒரு புதிய ஜீவனைத் தரும் என்று கூறுகின்ற

GTG LIBRARY- BANGALORE

விசுவாசமாக உள்ளது. நாம் இயேசுவுடன் இந்த நிலைமாற்றத்தை அனுபவித்திருந்தால், நமது வாழ்வின் நோக்கை நாம் பூமிக்குரிய இலக்குகளிலிருந்து பரலோகத்திற்குரிய இலக்குகளுக்கு மாற்றிக் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

குறிப்புகள்

[1]Ralph P. Martin, *Colossians and Philemon,* The New Century Bible Commentary, gen. ed. Matthew Black (England: Marshall, Morgan & Scott, 1973; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 81. [2]Ibid., 82. [3]Murray J. Harris, *Colossians and Philemon* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1991), 112. [4]Albrecht Oepke, *"baptizo," Theological Dictionary of the New Testament,* vol. 1, ed. Gerhard Kittel, trans. Geoffrey W. Bromiley, (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 539. [5]Robert Jamieson, A. R. Fausset, and David Brown, *Commentary on the Whole Bible* (Grand Rapids, Mich.: Zondervan, 1961), 1321. [6]Ralph P. Martin, *Colossians: The Church's Lord and the Christian's Liberty* (Exerter: The Paternoster Press, 1972), 87. [7]Herbert M. Carson, *Stand Perfect in Wisdom* (Grand Rapids, Mich.: Baker, 1981), 110. [8]G. R. Beasley-Murray, *Baptism in the New Testament* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 273. [9]Ibid., 364. [10]Karl Braune, *Commentary on the Holy Scriptures: Colossians,* vol. 3, new ed., ed. Peter Lange, trans. M. B. Riddle (Grand Rapids. Mich.: Zondervan, 1969), 46.

[11]William Barclay, *The Letters to the Philippians, Colossians and Thessalonians,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1959), 168. [12]Marvin R. Vincent, *Word Studies in the New Testament,* vol. 3 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1946), 489. [13]Robert G. Bratcher and Eugene A. Nida, *A Translator's Handbook of Paul's Letters to the Colossians and to Philemon* (New York: United Bible Societies, 1977), 58. [14]A. T. Robertson, *Paul and the Intellectuals: The Epistle to the Colossians,* rev. and ed. W. C. Strickland (New York: Doubleday, Doran and Co., 1928; reprint, Nashville: Broadman Press, 1959), 84.

GTG LIBRARY- BANGALORE

ஞானஸ்நானத்தைப் பற்றிய ஒரு மறுகண்ணோட்டம்

யோவான், பாவமன்னிப்புக்கென்று (மாற். 1:4; லூக். 3:3) மனந் திரும்புதலுக்கேற்ற (மத். 3:2) ஞானஸ்நானத்தைப் பிரசங்கித்தார். அவரால் மனம் மாற்றப்பட்டவர்கள் விசுவாசித்து அல்லது மனந்திரும்பி(அவரது செய்தியை ஏற்றுக் கொண்ட)னர் என்பதாக சுவிசேஷ நூல்கள் அறிக்கை தராதிருப்பினும் அவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று அவை அறிக்கை தருகின்றன (மத். 3:6; மாற். 1:5; லூக். 3:21; யோவா. 3:23; 4:1). அவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர் என்ற உண்மையிலிருந்து அவரது செய்தியை அவர்கள் விசுவாசித்து மனந்திரும்பினர் என்று நாம் முடிவு செய்ய வேண்டும். மக்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிடும்படி யோவான் கூறியதாக (சுவிசேஷங்களில்) எவ்விடத்திலும் எடுத்துரைக்கப் படவில்லை, ஆனால் மக்கள் அவ்வாறே செய்தனர் (மத். 3:6).

யோவான் போதித்த ஞானஸ்நானத்திற்கு இயேசு தம்மைக் கீழ்ப்படுத்தினார் (மத். 3:13-17). ஞானஸ்நானத்தின் மூலமாக இயேசு அறியப்பட்டார் என்று யோவான் தமது சாட்சியத்தைக் கொடுத்தார் (யோவா. 1:31). யோவான் பின்வரும் கூற்றுகளில் அநேகமாய் இயேசுவின் ஞானஸ்நானம் பற்றி மறைமுகமாய்க் குறிப்பிட்டு இருந்திருக்கலாம்: "இயேசு கிறிஸ்துவாகிய இவரே ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர்; ஜலத்தினாலே மாத்திரமல்ல, ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர்;" "சாட்சியிடுகிறவைகள் மூன்று: ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே" (1 யோவா. 5:6அ, 8அ).

இயேசு யோவானைக் காட்டிலும் அதிகமான மக்களை ஞானஸ்நானத் திற்குக் கொண்டு வந்திருக்கலாம் (யோவா. 3:22, 26; 4:1). இந்த மக்கள் ஞானஸ்நானம் பெற்றனர் என்று சுவிசேஷ நூல்கள் எடுத்துரைக்கின்றன, ஆனால் இவர்கள் விசுவாசித்து, மனந்திரும்பி அல்லது அறிக்கையிட்டதாகப் பதிவு எதையும் நாம் காண்பதில்லை. இவைகள் திட்டவட்டமாகக் குறிப்பிடப்படாததால் மட்டுமே, இவர்கள் இவைகளைச் செய்ததில்லை என்று நாம் முடிவு செய்வோமா? ஞானஸ்நானம் பற்றிக் குறிப்பிடப்பட்டு, மற்ற விஷயங்கள் குறிப்பிடப்படாதிருக்கும் பொழுது நாம் எப்படி ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட முடியும்?

அப்போஸ்தலர்கள் ஞானஸ்நானம் பெற்றனர் என்று நாம் தைரியமாய்

GTG LIBRARY- BANGALORE

உறுதிப்படுத்த முடியாது, ஆனால் அவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர் என்பது மறைவான சுட்டிக்காட்டுதலையுடையதாய் இருக்கின்றது. யோவான் மற்றும் இயேசுவின் சீஷர்களானவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர் (யோவா. 4:1). இயேசு தம்முடைய சீஷர்களின் மத்தியிலிருந்து தான் தமக்கு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்தார் (லூக். 6:13), இது அவர், (தம்மிடம்) ஞானஸ்நானம் பெற்றவர்களையே தமது சீஷர்களாகும் படி தேர்ந்து கொண்டார் என்று சுட்டிக்காட்ட வேண்டும்.

நடபடிகளில் ஞானஸ்நானம்

நடபடிகளின் புத்தகத்தில் சில நிகழ்ச்சிகளில், மக்கள் மனந்திரும்பினர் அல்லது அறிக்கையிட்டனர் (எத்தியோப்பிய மந்திரியின் அறிக்கை என்பது அதிகாரப்பூர்வமானதாக நம்பப்படாதிருந்தால்) என்பது பற்றி எதுவும் கூறப்படாதிருக்கையில், அவர்கள் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றதாக அறிக்கை தரப்பட்டுள்ளது. விசுவாசித்தல் என்பது ஞானஸ்நானத்துடன் குறிப்பிடப்பட்டுள்ளது (அப். 8:12; 18:8); ஆனால் மனந்திரும்புதல் என்பது ஞானஸ்நானத்துடன் ஒரே ஒரு முறை மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது (அப். 2:38) மற்றும் அறிக்கையிடுதல் என்பது இத்துடன் இணைந்து குறிப்பிடப்படவில்லை. அறிக்கையிடும்படி மக்களிடம் கூறப்பட்டதாக நடபடிகளின் புத்தகமானது எவ்வித எடுத்துரைப்பையும் ஏற்படுத்துவ தில்லை. விசுவாசித்தல் அல்லது ஞானஸ்நானம் என்பது மட்டும் குறிப்பிடப் படுகையில் மனந்திரும்புதலும் அறிக்கையிடுதலும் மறைமுகமாய்க் குறிப்பிடப்படுகின்றன என்பது உறுதி. இது, ''விசுவாசித்தல்'' என்ற வார்த்தை வருகையில், ஞானஸ்நானமும் மறைவாய்க் குறிப்பிடப் படுகின்றது - அல்லது ஞானஸ்நானம் மட்டும் குறிப்பிடப்படும் பொழுது விசுவாசித்தல் என்பதும் மறைவாய் உணர்த்தப்படுகின்றது - என்று சுட்டிக் காட்டுவதாக இருக்க வேண்டும்.

மனந்திரும்புதல் மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவை இன்றி ஒரு மனிதர் இரட்சிக்கப்பட முடியாது என்றால், இயேசுவின் பிரசங்கித்தலுக்கு மக்கள் பதில்செயல் செய்த ஒவ்வொரு வேளையிலும் ஞானஸ்நானத்திற்குப் பதிலாக இந்தச் செயல்கள் ஏன் குறிப்பிடப்படவில்லை? இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியமில்லையென்றால், மனந்திரும்புதல் மற்றும் அறிக்கையிடுதல் (மதக் குழுக்கள் பல இவற்றை இரட்சிப்புக்கு அவசியமானவைகளாகக் கருதுகின்றன) ஆகியவை குறிப்பிடப்படாதிருக் கையில், ஞானஸ்நானம் அடிக்கடி குறிப்பிடப்படுவது ஏன்?

நடபடிகளின் புத்தகத்தில் பின்வரும் ஒப்பீடுகள் செய்யப்பட முடியும்.

அ. பின்வருவனவற்றைச் செய்யும்படி கிறிஸ்தவரல்லாதவர்களுக்குக் கூறப்பட்ட வேளைகளின் எண்ணிக்கை:

1. விசுவாசி(யுங்கள்) - மூன்று (அப். 8:37; 10:43; 16:31).
2. மனந்திரும்புகள் - மூன்று (அப். 3:19; 17:30; 26:20).
   மனந்திரும்பி விசுவாசியுங்கள் - பூஜ்யம்.
   மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுங்கள் - ஒன்று (அப்.2:38).

GTG LIBRARY- BANGALORE

3. ஞானஸ்நானம் பெறுங்கள் - மூன்று (அப். 2:38; 10:48; 22:16).
   ஞானஸ்நானம் பெற்று மனந்திரும்புங்கள் - ஒன்று (அப். 2:38).
   ஞானஸ்நானம் பெற்று அறிக்கையிடுங்கள் - பூஜ்யம்.
4. அறிக்கையிடுங்கள் - பூஜ்யம்.

ஆ. இந்த உடனடி பதில்செயல்கள் லூக்காவினால் அறிவிக்கப்பட்ட முறைகளின் எண்ணிக்கை:

1. விசுவாசித்தனர் - பன்னிரெண்டு (அப். 4:4; 8:12, 13; 9:42; 11:17, 21; 13:12; 13:48; 14:1; 17:12, 34; 18:8).
2. ஞானஸ்நானம் பெற்றனர் - ஒன்பது (அப். 2:41; 8:12, 13, 38; 9:18; 16:15, 33; 18:8; 19:5).
3. மனந்திரும்பினர் - பூஜ்யம்.
4. அறிக்கையிட்டனர் - ஒன்று (அப். 8:37 உண்மையான தெனில்; இல்லையென்றால் பூஜ்யம்).
5. விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றனர் - மூன்று (அப். 8:12, 13; 18:8).
6. மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றனர் - பூஜ்யம்.
7. மனந்திரும்பி அறிக்கையிட்டனர் - பூஜ்யம்.

இ. மக்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்த நிகழ்ச்சிகளினால் இந்த பதில்செயல்களை லூக்கா அறிக்கையிட்ட முறைகளின் எண்ணிக்கை:

1. விசுவாசித்தனர் - பதிமூன்று (அப். 2:44; 4:32; 11:17; 14:23; 15:5; 16:1, 34; 18:27; 19:2, 18; 21:20, 25; 22:19).
2. ஞானஸ்நானம் பெற்றனர் - ஒன்று (அப். 8:16).
3. மனந்திரும்பினர் - பூஜ்யம்.
4. அறிக்கையிட்டனர் - பூஜ்யம்.

இந்த ஒப்பீடுகளில் இருந்து, நடபடிகளின் புத்தகத்தில் மனந்திரும்புதல் மற்றும் அறிக்கையிடுதல் என்பவற்றைக் காட்டிலும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றனர் என்பது அதிக முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது தெளிவாய் உள்ளது. கிறிஸ்தவர்களானவர்களைப் பற்றிக் கூறுகையில் அவர்கள் விசுவாசித்து மற்றும்/அல்லது ஞானஸ்நானம் பெற்றனர் என்றே நடபடிகளின் புத்தகம் வழக்கமாய் எடுத்துரைக்கின்றது; ஆனால் அவர்கள் மனந்திரும்பினர் என்றோ அல்லது அறிக்கையிட்டனர் என்றோ எடுத்துரைக்கும் வசனப் பகுதி எதுவும் இல்லை.

பவுலின் நிருபங்களில் ஞானஸ்நானம்

புது உடன்படிக்கையின் ஞானஸ்நானம் பற்றிப் பவுல் சபைகளுக்கு எழுதிய தம் நிருபங்கள் பெரும்பான்மையானவற்றில் குறிப்பிட்டார் (ரோமர் 6:3, 4; 1 கொரி. 1:13-17; 12:13; கலா. 3:27; எபே. 4:5; கொலோ. 2:12). ஞானஸ்நானத்தின் இயல்பான விளைவென்ற வகையில் உறுப்பினர்கள் இயேசுவுக்குத் தங்களை அர்ப்பணிப்பதில் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும் என்று அவர் உற்சாக மூட்டினார். ஞானஸ்நானத்தைப் பவுல்

GTG LIBRARY- BANGALORE

ஒரு புது வாழ்வைத் துவங்குவதுடனும் (ரோமர் 6:4; கொலோ. 2:12, 13), அக்கிரமங்கள் மன்னிக்கப்படுதலுடனும் (கொலோ. 2:13), இயேசுவை அணிந்து கொள்ளுதலுடனும் (கலா. 3:27), மற்றும் விசுவாசிகளின் ஒருமைப்பாட்டுடனும் (1 கொரி. 12:13; கலா. 3:27, 28; எபே. 4:1-6) இணைத்துரைத்தார். பவுல் ஞானஸ்நானம் பற்றிக் குறிப்பிட்டார், ஆனால் இதனை அவர் விசுவாசம், மனந்திரும்புதல் அல்லது அறிக்கையிடுதல் ஆகியவற்றுடன் தொடர்புடையதாக உள்ளன என்பது பற்றி அவர் ஏதொன்றும் கூறவில்லை. அவர் மற்ற வசனப் பகுதிகளில் ஞானஸ் நானத்தைப் பற்றி மறைமுகமாய்க் குறிப்பிட்டிருக்கலாம் (எபே. 5:26; தீத்து 3:5).

பேதுருவின் எழுத்துக்களில் ஞானஸ்நானம்

பேதுரு விசுவாசத்தை/நம்பிக்கையைப் பற்றி நான்கு முறைகளும் (1 பேது. 1:8, 21; 2:6, 7) மற்றும் விசுவாசத்தைப் பற்றி ஏழு முறைகளும் (1 பேது. 1:5, 7, 9, 21; 5:9; 2 பேது. 1:1, 5) குறிப்பிட்டார், ஆனால் இதனை இரட்சிப்புடன் தொடர்புடையதாக அவர் ஒரு தரம் மட்டுமே குறிப்பிட்டார் (1 பேது. 1:9). எல்லா மக்களும் மனம்திரும்பும்படி தேவன் விரும்புவதாகக் கூறிய ஓரிடத்தில் மட்டும் அவர் (பேதுரு) மனந்திரும்பு தலைப் பற்றிக் கூறினார் (2 பேது. 3:9). அறிக்கையிடுதலைப் பற்றி அவர் ஒன்றும் கூறவில்லை.

நோவாவும் அவரது குடும்பத்தாரும் தப்புவிக்கப்பட்டதைப் பேதுரு நமது இரட்சிப்புடன் ஒப்பிட்டார்:

> அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற் போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர்மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப் பட்டார்கள். அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்து வினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது (1 பேது. 3:20, 21).

தொகுப்புரை

ஞானஸ்நானம் என்பது முதலில் யோவானாலும், பிறகு இயேசுவாலும், பிறகு அப்போஸ்தலர்களாலும் மற்றும் ஆதி சபையாராலும் போதிக்கப் பட்டது. சிலுவையில் இயேசுவின் மரணத்திற்குப் பிறகு, சுவிசேஷத்தில் போதிக்கப்பட்டு, இயேசுவில் விசுவாசம் கொண்டு, தங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பி, தேவனுடன் ஒரு புது உறவையும் ஒரு புது வாழ்வை யும் நாடியவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. ஞானஸ்நானம் என்பது தேவனுடனான தவறான உறவுமுறையானது இயேசுவின் இரத்தத்தின் மூலமாக நேராக்கப்படும் வேளையென்றும், ஒரு புதுவாழ்வு தொடங்கிய வேளை என்றும் கருதப்பட்டது.

GTG LIBRARY- BANGALORE

ஞானஸ்நானத்தின் மொழிநடை

ஞானஸ்நானத்தைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள துறைச் சொல்லானது விவரிப்பானவைகளாயும், அர்த்தம் நிறைந்தவைகளாயும், அளவை உருவகங்களும் வளமான கற்பனையும் நிறைந்தவைகளாயும் உள்ளது. இந்தச் சொற்களும் சொற்றொடர்களும் விவரமானவைகளாயும் மற்றும் தெளிவானவைகளாயும் உள்ளன; இவை ஞானஸ்நானத்தின் பல்வேறு அம்சங்களை நாம் புரிந்து கொள்வதற்கு உதவுகின்றன. ஞானஸ்நானத்துடன் பயன்படுத்தப்பட்டுள்ள பின்வரும் சொற்றொடர் களை நெருங்கி ஆராயுங்கள்:

சுவிசேஷங்களில்

1. *"இரட்சிக்கப்படுதல்"* ("மீட்கப்படுதல்") (மாற். 16:16; 1 பேது. 3:21ஐயும் காணவும்). "இரட்சிக்கப்படுதல்" என்பது, *Sozo* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகின்றது, இது ஆவிக்குரிய கருத்திலோ அல்லது சரீரத்திற்குரிய கருத்திலோ விடுதலை என்பதன் பொருளைக் கொண்டுள்ளது.

புதிய ஏற்பாட்டில் *Sozo* என்பது சில வேளைகளில் தீவிரமான அபாயத்திலிருந்து இரட்சிப்பு என்பதைக் குறிப்பிடுகின்றது (மத். 8:25; 14:30; 27:40; மாற். 15:30; யோவா. 12:27; அப். 7:25ஐயும் காணவும் ["deliverance" - இரட்சிப்பு]; 27:20; எபி. 5:7; 11:7). மற்ற இடங்களில் இது ''நலமாக்கப்படுதல்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது நோயுற்றவரைக் குணமாக்குதல் என்பதைக் குறிக்கின்றது (அப். 4:9; 14:9; யாக். 5:15 ["restore" - இரட்சிக்கும்]). இது பாவத்தில் இழந்து போகப்பட்டுள்ளவர்களுக்கு ஆவிக்குரிய மீறுதல்களில் இருந்து இரட்சிப்பைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுகின்றது (மத். 1:21; மாற். 16:16; லூக். 19:10; அப். 2:40; 1 தீமோ. 1:15).

2. *"மறுபடியும் பிறத்தல்"* (யோவா. 3:3-5). மறுபடியும் பிறத்தல் என்பது வாழ்வுக்குக் கொண்டு வரப்படுதல் என்ற கருத்தில் "கொண்டுவரப் படுதல்" (கிரேக்கம்: *gennao*) என்று அர்த்தப்படுகின்றது. யூத சிந்தனையில் அடங்கியுள்ள அதே கருத்துத்தான் அநேகமாகப் புதிய ஏற்பாட்டிலும் இருந்திருக்க வேண்டும்: "யூதமார்க்கத்தமைந்தவர்கள் மனமாற்றத்தினால்

GTG LIBRARY- BANGALORE

வெறும் இருப்பிலிருந்து உண்மையான வாழ்வுக்கு வருகின்றனர். அவர்கள் பரிசுத்த மக்களின் [சரீரத்திற்குள்] வந்து சேர்ந்தால் இவ்விதம் செய்கின்றனர்; ... பழைய பாரம்பரியங்கள் முடித்து வைக்கப்படுகின்றன; ஒரு புதிய உறவு தொடங்குகின்றது."[1]

நடபடிகளின் புத்தகத்தில்

3. "மன்னிப்பு" (அப். 2:38; கொலோ. 2:12, 13ஐயும் காணவும்). "மன்னிப்பு" என்பது "அனுப்பு," "விடுவி," "புறம்பே சுருட்டிப் போடு," அல்லது ''மன்னி'' என்று அர்த்தப்படுகின்ற *aphiemi* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து வருகின்றது. பாவத்திலிருந்து விடுவித்தலைக் குறிக்கும் பொழுது, இது "திருப்பிச் செலுத்துதல்'' என்ற அர்த்தத்தை மேற்கொள்ளுகின்றது.

4. பாவங்கள் "கழுவப்பட்டன'' (அப். 22:16; எபே. 5:26; தீத்து 3:5ஐயும் காணவும்). "கழுவப்படுதல்" (கிரேக்கம்: *apolouo*) என்பது *apo* ("...ல் இருந்து புறம்பே") மற்றும் *louo* ("கழுவ") என்பவற்றின் சேர்க்கையாக உள்ளது, இது புதிய ஏற்பாட்டில் இவ்விடத்தில் மட்டுமே காணப்படுகின்றது. குளிக்கும் பொழுது அழுக்கு நீக்கப்படுவது போல, ஞானஸ்நானத்தில் இயேசுவின் இரத்தத்தின் மூலமாக பாவம் கழுவப்படுகின்றது.

நிருபங்களில்

5. ''பாவத்திற்கு மரித்து,'' ''அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்று," மற்றும் "மரணத்திற்குள்ளாக" (ரோமர் 6:1-4). "மரித்து" (கிரேக்கம்: *nekros*) மற்றும் "மரணம்" (கிரேக்கம்: *thanatos*) என்ற வார்த்தைகள் வாழ்வின் ஒழிதலை விளக்குவதற்குப் பயன்படுத்தப் படுகின்றன. நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது, பாவத்தில் (அதுவரை) வாழ்ந்திருந்ததை நாம் விட்டொழிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம் - ஏனெனில் ஞானஸ்நானத்தில் நாம் பாவத்திற்கான மரணத்தில் பிரவேசிக்கின்றோம். இயேசுவின் மரணத்தில் பிரவேசித்தலினால், பாவத்தின் கடந்த கால வாழ்வுக்கு மரித்தவராகுதல் என்ற ஆவிக்குரிய கருத்தில் நாம் அவருடன் மரித்தவர்களாக வேண்டும்.

6. ''கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுதல்'' (ரோமர் 6:3). கிறிஸ்து"வுக்குள்'' (கிரேக்கம்: *eis*) பிரவேசித்தல் என்பது ஆவிக்குரிய வகையில் இயேசுவின் பாகமாகுதல் என்பதை மறைவாய்க் குறிப்பிடு கின்றது. நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது, நாம் அவருடைய பரிசுத்தம், நோக்கம் மற்றும் வாழ்வின் வழி ஆகியவற்றினால் அவருடன் இணைக்கப்பட்டவர்களாகின்றோம்.

7. "அடக்கம் பண்ணப்படுதல்" மற்றும் "அவருடன் உயிர்ப்பிக்கப் படுதல்/எழுப்பப்படுதல்" (ரோமர் 6:4; கொலோ. 2:12). ஞானஸ்நானத்தில் நாம் இயேசுவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் (நம்) உடல் ரீதியாகப் பங்கேற்றுக் காட்டுகின்றோம். அதே வேளையில், நாம் ஆவிக்குரிய புது வாழ்விற்கு எழுப்பப் படுவதற்கு ஏற்ற வகையில் ஆவிக்குரிய

GTG LIBRARY- BANGALORE

ஈடுபாடுள்ளவர்களாய் இருக்க வேண்டும். ஞானஸ்நானத்தில் அவரோடு அடக்கம் பண்ணப்படுதல் மற்றும் எழுப்பப்படுதல் ஆகியவற்றினால் நாம் அவரது அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் நமது விசுவாசத்தை வெளிப்படுத்துகின்றோம். நமது விசுவாசமானது இரட்சிப்பைக் கொண்டு பலன் அளிக்கப்படுகின்றது (ரோமர் *10:9; 1* பேது. *3:21*). முழுக்காட்டப் படுதல் என்ற உடல் ரீதியான செயலுடன் நாம் ஆவிக்குரிய வகையில் ஈடுபாடு கொள்ளும் பொழுது, நாம் யாருடன் அடக்கம் பண்ணப்பட்டு எழுப்பப்பட்டோமோ, அவருடைய சாயலாக மாற்றப்பட்ட வாழ்வைப் பெறுதல் என்பதே விளைவாகின்றது (ரோமர் *6:17, 18*).

8. ''புதிய ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளுதல்'' மற்றும் *''உயிர்ப்பிக்கப்படுதல்''* (ரோமர் *6:4;* கொலோ. *2:12, 13*). ''நடத்தல்'' என்பது செயல்பாடு மற்றும் இயக்கம் ஆகியவற்றை மறைகருத்தாகக் குறிப்பிடு கின்றது. ஞானஸ்நானத்தின் மூலம் நாம், ஆவிக்குரிய வகையில் உயிர்ப் பிக்கப்பட்ட தன் விளைவாய் இருக்க வேண்டியதான ஒரு புதிய ஆவிக்குரிய வாழ்வு முறையைத் தொடங்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

9. ''அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் சாயலில் அவருடன் இணைக்கப்படுதல்'' (ரோமர் *6:5*). ''இணைக்கப்படுதல்'' (கிரேக்கம்: *sunphutos*) என்பது ''ஒன்று கூடி வளருதல்'' என்பதன் அடிப்படை அர்த்தம் ஒன்றிலிருந்து வருகின்றது. ஞானஸ்நானத்தில் நாம் நமது கடந்த கால வாழ்வை வெற்றி கொண்டு புதிய வாழ்வினுள் வளர வேண்டியவர்களாய் இருக்கின்றோம். நாம் மரித்த அந்தக் கடந்த கால வாழ்வினுள் ஒருபோதும், பிரவேசிக்கக் கூடாது. இயேசு பரிசுத்தமும் தூய்மையும் உள்ளவரா யிருந்தார், மற்றும் அவர் தேவனுக்கும் மற்றவர்களுக்கும் ஊழியம் செய்தார். நாம் அதே போன்ற ஒரு வாழ்வினால் அவருடன் இணைக்கப் பட்டவர்களாக வேண்டும்; அவர் நடந்தது போலவே நாமும் நடக்க வேண்டும் (*1* யோவா. *2:6*).

10. ''பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப் பட்டது'' (ரோமர் *6:6*). ''கூடச் சிலுவையில் அறையப்பட்டது'' (கிரேக்கம்: *sustauroo*) என்பது ஒரு கூட்டு வார்த்தையாக உள்ளது: *sun* (''உடன்'' என்று அர்த்தப்படும்) மற்றும் *stauroo* (''சிலுவையில் அறையப்படுதல்'' என்று அர்த்தப்படும்) என்பவற்றின் கருத்துக்கள், நாம் ஞானஸ்நானத்தில் இயேசுவின் சிலுவை மரணத்தை ஆவிக்குரிய வகையில் அவருடன் பகிர்ந்து கொள்கின்றோம் என்ற கருத்தை ஆலோசனையாகத் தெரிவிக்கின்றன. ஆவிக்குரிய கருத்தைத் தவிர, சரீரப் பிரகாரமான சிலுவையில் அறையப்படுதல் என்பது நம்முடைய ஞானஸ்நானத்தில் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். அவர் உடல் ரீதியாக மரித்தார், ஆனால் நாம் நமது பழைய இயல்பின் பாவம் நிறைந்த இச்சைகளை மரணத்திற் குள்ளாக்குவதினால் ஆவிக்குரிய வகையில் மரிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

11. பாவ சரீரம் ''ஒழிந்து போயிற்று'' (ரோமர் *6:6*). ''ஒழிந்து போயிற்று'' என்பது, ''சக்தியற்றதாக்குதல், நீக்கிப் போடுதல், ஒழித்து விடுதல்'' என்று அர்த்தப்படுகின்ற *katargeo* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகின்றது.

GTG LIBRARY- BANGALORE

ஞானஸ்நானத்தில் நாம் ஆவிக்குரிய வகையில் ஈடுபாடு கொண்டால், சரீரத்தின் வகையிலான சோதனைகளின் மூலம் ஒரு காலத்தில் நம்மை ஆண்டு கொண்டிருந்த பாவங்கள் நீக்கப்படுகின்றன.

12. *''இனிப் பாவத்துக்கு அடிமைகளாயிராதபடிக்கு/ஊழியஞ் செய்யாதபடிக்கு''* (ரோமர் 6:6). *''அடிமைகள்/ஊழியம்''* என்பது, அடிமை ஒருவரால் செய்யப்படும் ஊழியத்தைக் குறிக்கின்ற *douleuo* என்ற வார்த்தையிலிருந்து வருகின்றது. நமது உடலில் முன்பு நாம் அனுமதித்திருந்த பாவங்களை ஒழித்து விடுவதினால் நாம் இனியும் பாவத்திற்கு அடிமைகள் என்ற வகையில் ஊழியம் செய்பவர்களாய் இருப்பதில்லை.

13. *''பாவத்திலிருந்து விடுதலையாக்கப்படுதல்''* (ரோமர் 6:17, 18). பாவத்தின் ஆளுகையிலிருந்து நமது விடுதலை என்பதே பாவத்திற்கான நமது மரணத்தின் விளைவாக இருக்கும்.

14. *''நீதிக்கு அடிமைகள்''* (ரோமர் 6:18). அடிமைத்தனத்தை நாம் ஒருக்காலும் விட்டு விட முடியாது. நாம் பாவத்திற்கோ அல்லது நீதிக்கோ அடிமைகளாய் இருக்கின்றோம். பாவத்திற்கு ஊழியம் செய்வதை விட்டு விலகிய நாம் நீதிக்கு அடிமைகள் ஆகின்றோம் (கிரேக்கம்: *douloo*, ''அடிமைப் படுதல்'' என்று அர்த்தம் தரும்).

15. *''தேவனுடைய புத்திரர்''* (கலா. 3:26). ''புத்திரர்கள்'' என்ற வார்த்தையானது ''பிள்ளைகள்'' என்றல்ல, ஆனால் நேர்முகமாக ''மகன்கள்'' என்றே அர்த்தப்படுகின்ற *huios* என்ற வார்த்தையிலிருந்து வருகின்றது. புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தையானது, உறவு முறையைக் காண்பிக்க மட்டுமின்றி, இயல்பைச் சுட்டிக்காண்பிக்கவும் பயன்படுத்தப்படுகின்றது. (''தேவனுடைய புத்திரர்கள்'' என்ற பாடத்தைக் காணவும்). ஞானஸ்நானத்தில் கொண்டுள்ள ஆவிக்குரிய ஈடுபாடானது நம்மை மீண்டும் பிறத்தல் என்பதற்கு அப்பாலும் கொண்டு சென்று, நாம் தேவனுடைய இயல்பை மேற்கொள்வதற்குக் காரணமாகின்றது. ''தகப்பனைப் போல பிள்ளையும் உள்ளான்'' என்ற சொல் வழக்கானது நம்மைப் பொறுத்த மட்டில், ''இரட்சிக்கப்பட்டவர்கள் இயேசுவைப் போன்றே உள்ளனர்'' என்றாக வேண்டும்.

16. *''கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுதல்''* (கலா. 3:27), நாம் தேவனுடைய பிள்ளைகளாகும் பொழுது, நாம் இயேசுவின் இயல்பை அணிந்துகொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றோம். நாம் உடைகளை அணியும் போது, அந்த உடைகளின் தோற்றத்தை அணிந்தவர்களாய் இருக்கின்றோம். இதைப் போன்றதொரு வழிமுறையில், நாம் இயேசுவை அணிந்து கொள்ளும் பொழுது, நாம் இயேசுவின் ஆவிக்குரிய தோற்றத்தைக் கொண்டவர்களாய் இருக்க வேண்டும். ஞானஸ்நானத்தில் நாம், இயேசுவை ''அணிந்து'' கொள்ளுகின்றோம் (கிரேக்கம்: *endo* - இது ''உள்'' என்று அர்த்தப்படும் என்பதுடன், ''உள் மூழ்குதல்,'' ''உட்பிரவேசித்தல்,'' அல்லது ''அணிந்து கொள்ளுதல்'' என்று ஒரு ஆடைக்குள் மூழ்குதலின் கருத்தில் அர்த்தப்படும் *duno* என்பது கூட்டப்பட்டதாக உள்ளது).

17. *''கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருத்தல்''* (கலா. 3:28). நம்மில் இயேசுவைத் தரித்துக் கொண்டவர்களாயிருக்கின்றவர்கள் அனைவரும்

GTG LIBRARY- BANGALORE

ஒரே விதமான ஆவிக்குரிய இயல்புடையவர்களாய் இருப்போம். ஒரே விதமான இயல்பைக் கொண்டிருத்தல் என்பது நம் அனைவரையும் ஒரே மாதிரியானவர்களாக்குகின்றது, இது நம்மை ஒன்றாக இணைக்கின்றது.

18. "விருத்தசேதனம் செய்யப்படுதல்" (கொலோ. 2:11, 12). விருத்தசேதனம் என்பது உடலில் இருந்து நுனித்தோலை நீக்கிப் போடுவது போலவே பாவத்தினால் கெடுக்கப்பட்ட உடலானது ஞானஸ்நானத்தில் நீக்கிப் போடப்பட வேண்டியதாக உள்ளது.

19. ஒரு "முன்மாதிரி" என்ற வகையில் நோவா (1 பேது. 3:20, 21). 1 பேதுரு 3:21 வசனமானது NKJVயில் (மற்றும் தமிழில்) "அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது ... இப்பொழுது நம்மையும் ... இரட்சிக்கின்றது" என்று சரியாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மாதிரி என்பது உருவகமாக உள்ளது, எதிர்மாதிரி அல்லது ஒப்பனை என்பது உண்மை நிலையாக உள்ளது. நோவாவின் பேழையைப் பாதுகாப்பாக மிதக்கச் செய்த தண்ணீரானது, இப்பொழுது நம்மை இரட்சிக்கின்ற "ஞானஸ்நான" தண்ணீரின் (எதிர்மாதிரி அல்லது ஒப்பனை) உண்மை நிலைக்கு ஒரு நிழலாக (மாதிரியாக) உள்ளது. பேழையானது நோவாவுக்கு எவ்வகையிலாவது பயன்படுவதற்குத் தண்ணீர் அவசியமானதாய் இருந்தது. நெருப்பு, கிருமிகள் அல்லது அழிவின் வேறு சில வழிமுறைகளை தேவன் அனுப்பியிருந்தால், பொல்லாங்கான உலகத்துடன் நோவாவும் அவரது குடும்பமும் கூட அழிந்து போயிருப்பார்கள். அதற்குப் பதில், தேவன் தண்ணீரை அனுப்பினார், அது நோவாவையும் அவருடைய குடும்பத் தாரையும் பாதுகாப்புக்குள் வழி நடத்திக் கொண்டு வந்தது. இது நமது இரட்சிப்புக்கு மாதிரியாய் இருந்தது; இதன் எதிர்மாதிரி அல்லது ஒப்பனை என்பது நமது இரட்சிப்புக்கு நம்மைக் கொண்டு வந்ததான தண்ணீர் ஞானஸ்நானம் ஆகும்.

20. "நல்மனச்சாட்சி" (1 பேது. 3:21). ஒருவர் ஞானஸ்நானம் பெறும் வரையிலும், அவர் தமது பாவங்களைக் கொண்டவராகவே இருக்கின்றார்; ஆகையால், அவர் ஒரு கலக்கமுற்ற மனச்சாட்சியை உடையவராகவும் இருக்க வேண்டும். ஞானஸ்நானம் பெறுவதினால் நாம், இயேசுவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படுதலை உணர முடியும். இது பாவங்களின் காரணமாக இனியும் கலக்கம் அடையாத ஒரு மனச்சாட்சியை விளைவிக்கின்றது.

தொகுப்புரை

பல விளக்க உருவகங்கள் ஞானஸ்நானத்துடன் இணைந்துள்ளன. தேவன் நமக்குச் செய்துள்ளவைகளை நாம் மதிக்கவும், அவைகளுக்கு ஏற்ற வகையில் பதில்செயல் கொடுக்கவும் நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கும் படிக்கு ஞானஸ்நானத்துடன் இணைந்துள்ள ஆசீர்வாதங்களை நாம் புரிந்து கொள்ள இவை உதவுகின்றன.

GTG LIBRARY- BANGALORE

குறிப்பு

[1]K. H. Rengstorf, *"gennao,"* in *Theological Dictionary of the New Testament*, ed, Gerhard Kittel and Gerhard Friedrich, trans. and abr. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdman's Publishing Co., 1985), 115.

GTG LIBRARY- BANGALORE

ஞானஸ்நானம் பெற வேண்டியது யார்?

ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும்படி கேட்கின்ற சிலர் ஞானஸ்நானம் பெறத் தயாரானவர்களாய் இருப்பதில்லை, மற்றும் பிறர் ஞானஸ்நானத்தில் தாங்கள் அடைய வேண்டிய மாற்றங்களை ஏற்கனவே அடைந்திருப்பதால் ஞானஸ்நானம் பெறத்தேவையில்லை என்று மறுத்து விடுகின்றனர்.

ஞானஸ்நானம் பெறுவதற்கு ஒருவர் தயாராவது எப்பொழுது?

பதின் பருவ (teen age) வயதை அடையாத பிள்ளைகள் ஞானஸ்நானம் பெற விரும்பும் பொழுது, ஞானஸ்நானம் கொடுப்பவர்கள் எப்பொழுதுமே கவலையடைகின்றனர். வேதாகமம், ஞானஸ்நானம் பெற விரும்புபவரின் வயது பற்றி சட்டம் எதையும் விதித்ததில்லை. இயேசு பன்னிரெண்டு வயதில் எருசலேம் தேவாலயத்திற்குச் சென்றதால் (லூக். 2:42) பிள்ளைகளும் அவர்களின் பன்னிரெண்டு வயதில் ஞானஸ்நானப் படுத்தப்பட வேண்டும் என்று சிலர் எடுத்துரைத்துள்ளனர். அவ்வேளையில் அவர் (இயேசு) தம் தாயிடத்தில், "என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா?" (லூக். 2:49) என்று கேட்டார்.

இருப்பினும் இயேசு பன்னிரெண்டு வயதில் ஞானஸ்நானம் பெறவில்லை, ஆனால் தம் ஊழியத்தைத் தொடங்குவதற்குச் சற்று முன்னதாக முப்பதாம் வயதில் ஞானஸ்நானம் பெற்றார் (லூக். 3:23). இந்த விஷயத்தில் இயேசு நமது முன்மாதிரியாக இருப்பதில்லை, ஏனென்றால் அவர் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டிய அவசியம் இல்லாதிருந்தது. ஞானஸ்நானம் பெறுவதற்குத் தேவையானவற்றை அவர் செய்ய வேண்டிய அவசியம் இல்லாதிருந்தது: தேவ வசனத்தில் போதிக்கப்படுதல் (யோவா. 6:45), இயேசுவில் விசுவாசம் கொள்ளுதல் (யோவா. 8:24), பாவத்திலிருந்து மனந்திரும்புதல் (அப். 17:30) மற்றும் இயேசுவை அறிக்கையிடுதல் (ரோமர் 10:9, 10) போன்றவற்றை அவர் செய்ய வேண்டியதில்லை. இங்கு கேள்வி என்பது வயது அல்ல, ஆனால் புரிந்து கொள்ளுதல், கணக்கொப்புவிக்க வேண்டியது மற்றும் விருப்பம்

GTG LIBRARY- BANGALORE

ஆகியவற்றைப் பொறுத்ததாகவே உள்ளது. இளம் மக்கள் மாறுபட்ட வயதுகளில் பக்குவம் அடைகின்றனர்.

ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்கின்றவர்களிடத்தில் அவர்கள் தயார் நிலையில் உள்ளனரா என்று தீர்மானிப்பதற்குக் குறைந்தபட்சம் பின்வரும் சில கேள்விகளைக் கேட்கலாம்:

1. நீங்கள் ஏன் ஞானஸ்நானம் பெற விரும்புகின்றீர்கள்?
2. நீங்கள் ஒரு பாவியா? உங்கள் பாவத்திற்காகத் தேவன் உங்களைத் தண்டிப்பார் என்று அஞ்சுகின்றீர்களா?
3. உங்கள் பாவங்களினிமித்தம் நீங்கள் தேவனை விட்டுப் பிரிக்கப் பட்டுள்ளதாக நம்புகின்றீர்களா?
4. தேவன் இப்பொழுதே உங்களுக்குத் தீர்ப்பளிக்க வேண்டி யிருந்தால், அவர் உங்களைப் பரலோகத்திற்கு அழைத்துக் கொள்வாரா அல்லது நரகத்திற்கு அனுப்புவாரா?
5. உங்களைக் குறித்து தேவனுடைய எண்ணப்போக்கு என்னவாக உள்ளதென்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? உங்கள் பாவங்களினி மித்தம் அவர் உங்களைவிட்டுத் தம் முகத்தை மறைக்கின்றார் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?
6. இயேசு யாராயிருக்கின்றார் என்று நீங்கள் விசுவாசிக்கின்றீர்கள் (யோவா. 8:24; ரோமர் 10:9)?
7. இன்று நீங்கள் மரித்தால், நீங்கள் ஒரு பாவியாகவே மரிப்பீர்களா (யோவா. 8:21)?
8. மனந்திரும்புதல் என்றால் என்ன?
9. உங்கள் பாவங்களை மன்னிக்க இயேசு என்ன செய்திருக்கின்றார் (மத். 26:28)? உங்கள் பாவங்களை மன்னித்து அவற்றைக் கழுவுவது எது (எபி. 9:22; வெளி. 1:5)? இது எப்பொழுது நடைபெறுகின்றது?
10. நீங்கள் ஞானஸ்நானம் பெற்ற பிறகு, இப்பொழுது வாழ்வதைக் காட்டிலும் எவ்விதம் மாறுபட்ட வகையில் வாழ்வீர்கள்?
11. உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும்?
12. நீங்கள் ஞானஸ்நானம் பெற்ற பிறகு, இயேசு உங்கள் வாழ்வில் கர்த்தர் ஆவாரா? இயேசு உங்கள் கர்த்தராக இருப்பதன் அர்த்தம் என்ன?
13. நீங்கள் ஞானஸ்நானம் பெற்றிருக்கும் பொழுது எந்த சபையில் பிரவேசிப்பீர்கள்?
14. புது வாழ்வைத் தொடங்க நீங்கள் தயாராயிருக்கின்றீர்களா?

தாம் பாவியாய் இருப்பதை உணருகின்ற ஒரு நபர் தமது பாவங்களினி மித்தமாகத் தாம் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டுள்ளதை நம்புகின்றார். தமது பாவங்களை மன்னிக்கின்ற இரத்தத்தையுடைய இயேசுவில் அந்த நபர் கர்த்தர் என்றும் மீட்பர் என்றும் நம்பிக்கை கொண்டால், அந்நபர்

GTG LIBRARY- BANGALORE

இயேசுவைப் பின்பற்றுவதற்காகத் தமது வாழ்வை மாற்ற மனதுள்ளவராய் இருந்தால், தேவனுடனான தவறான உறவை நேர்ப்படுத்திக் கொள்வது அவசியம் என்று அவர் உணர்ந்தால், அவர் ஞானஸ்நானம் பெறத் தயாராய் இருக்கின்றார். அவர் தம் பாவங்கள் மன்னிக்கப்படும் என்பதையும் மற்றும் அவர் தேவனுடனும் சக கிறிஸ்தவர்களுடனும் ஐக்கியத்தினுள் பிரவேசிப்பார் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஏற்கனவே ஞானஸ்நானம் பெற்றுள்ளவரைப் பற்றிய விஷயம் என்ன?

ஏற்கனவே ஞானஸ்நானம் பெற்றுள்ள சிலர், தாங்கள் ஞானஸ்நானம் பெற்ற பொழுது என்ன செய்தனர் என்பதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாது இருந்தாலும் தாங்கள் இரட்சிக்கப்பட்டுள்ளதாக நம்புகின்றனர். அவர்கள் ஞானஸ்நானம் பெற்ற பொழுது தேவனுடைய சித்தத்தைப் புரிந்து கொள்ளாதிருந்தால், வசன ரீதியான ஞானஸ்நானத்தின் அவசியத்தைப் பற்றிக் காண்பதற்கு அவர்களுக்குப் பின்வரும் கேள்விகள் உதவலாம்:

1. நீங்கள் முழுக்காட்டப்பட்டீர்களா?
2. ஞானஸ்நானம் பெற்ற பொழுது உங்கள் வயது என்ன?
3. நீங்களாகவே வேதாகமத்தைப் படித்திருந்தீர்களா?
4. உங்கள் சபையில் பிரசங்கிக்கப்பட்ட மற்றும் போதிக்கப்பட்டவற்றிலிருந்து ஞானஸ்நானத்தைப் பற்றி நீங்கள் அறிந்துள்ளதைக் கற்றுக் கொண்டீர்களா?
5. உங்களை ஞானஸ்நானப் படுத்திய பிரசங்கியார் எந்த நாமகரணக் கூட்டத்தைச் சேர்ந்தவர்?
6. சுவிசேஷக் கூட்டமொன்றின் போது நீங்கள் முன் சென்றீர்களா?
7. நீங்கள் அவ்வாறு முன் சென்ற பொழுது என்ன நடந்தது என்று விவரிக்கவும். மற்றவர்கள் உங்களுடன் ஜெபித்தார்களா? யாரேனும் ஒருவர், உங்களை "பாவிகளின் ஜெபம்" என்று அவர் அழைக்கும் ஜெபத்தை நீங்கள் ஜெபிக்கும்படி கூறினாரா?
8. சபையாருக்கு முன்பாக நீங்கள் பின்வருவது போன்ற அறிக்கை செய்தீர்களா?: "கிறிஸ்துவினிமித்தமாகத் தேவன் என் பாவங்களை மன்னித்துள்ளார் என்று நான் விசுவாசிக்கின்றேன்." அப்படிச் செய்திருந்தால், நீங்கள் இதைச் செய்த பிறகு இரட்சிக்கப்பட்டதாகக் கருதுகின்றீர்களா?
9. நீங்கள் இரட்சிக்கப்பட்டுள்ளதற்காக மக்கள் அகம் மகிழ்ந்து உங்களைப் பாராட்டுகின்றனரா? எந்த வேளையில் இதை அவர்கள் செய்தனர்?
10. நீங்கள் சபையாருக்கு முன்பாகச் சென்ற பொழுது உங்கள் ஆவிக்குரிய நிலையைப் பற்றிப் பிரசங்கியார் அறிவித்தது என்ன?
11. இதற்கு எவ்வளவு காலத்திற்குப் பிறகு நீங்கள் ஞானஸ்நானம்

GTG LIBRARY- BANGALORE

பெற்றீர்கள்?

12. நீங்கள் ஏன் ஞானஸ்நானம் பெற்றீர்கள்?
13. இது வேதாகமத்தில் உள்ள ஒரே ஞானஸ்நானத்துடன் எவ்விதம் ஒப்பிடப்படுகின்றது (எபே. 4:5)?

நாம் பெறுகின்ற ஞானஸ்நானத்தின் செல்லும் தன்மையானது நம்மை ஞானஸ்நானப்படுத்துவரைச் சார்ந்தது அல்ல. நமது சுயபுரிந்து கொள்ளுதலும் உறுதிப்பாடும்தான் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. நாம் வேதாகமத்தின் ஒரே ஞானஸ்நானத்தைப் பெற்றுள்ளோம் என்று நிச்சயப்படுத்திக் கொள்வது அவசியமாகும் (எபே. 4:5). பல மக்கள், ஞானஸ்நானம் என்று அழைக்கப்படுகின்ற ஒன்றைப் பெற்றுள்ளனர் ஆனால் அவர்கள் ஒரே ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்ததில்லை. இந்த ஒரே ஞானஸ்நானத்தைப் பெற்றிராதவர்கள் தங்கள் பெருமையை விழுங்கி/ கீழ்ப்படுத்தி, தேவனுடைய ஒரே ஞானஸ்நானத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும்.

G. C. ப்ரூவர் அவர்கள் பின்வருமாறு சரியாக எடுத்துரைத்தார்:

> வேத வசனம் போதிக்கின்ற முறைப்படி ஞானஸ்நானம் பெறுகின்ற ஒருவர், ஞானஸ்நானம் என்பது பாவமன்னிப்புக்காக அல்லது இரட்சிப்பின் நிலைக்காக என்பதை அறிந்திருக்க வேண்டும். இதை அவர், அறியாதிருந்தால், தவறான வாசிப்போ அல்லது தவறான வழிநடத்துதலோ ஏதோ ஓரிடத்தில் உள்ளது என்றாகின்றது.[1]

குறிப்பு

[1]G. C. Brewer, *Contending for the Faith* (Nashville: Gospel Advocate Co., 1941), 175-76.

GTG LIBRARY- BANGALORE

பச்சிளம் குழந்தைகளின் ஞானஸ்நானத்தைப் பற்றிய விஷயம் என்ன?

பச்சிளம் குழந்தைகள் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று நம்புபவர்களால் பின்வரும் கேள்விகள் அடிக்கடி கேட்கப்படுகின்றன.

கேள்வி: பச்சிளம் குழந்தைகள் யாவரும் பாவத்தில் பிறக்கின்றனரா?

பதில்: இல்லை. பாவம் நிறைந்த உலகில் இக்குழந்தைகள் பிறக்கின்றனர், ஆனால் இது அவர்களைப் பாவிகளாக்குவது இல்லை. ஒரு குழந்தை, தீவனக் களஞ்சியத்தில் பிறந்தால் அது அவனை ஒரு பசுவாக்கி விடுவதில்லை. சங். 51ல் தாவீது, "இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" என்று எழுதினார் (வ. 5). இது இவ்வசனத்தின் சொல்லர்த்தமான மொழி பெயர்ப்பாக உள்ளது. இது தாவீதின் பிறப்பைச் சூழ்ந்துள்ள சூழ்நிலை களின் இயல்பைத் தருகின்றது, ஆனால் இது அவர் பாவியாகப் பிறந்தார் என்று குறிப்பிடுவதில்லை. வேதாகமத்தின் சில மொழிபெயர்ப்புகள்[1] எபிரெய வசனப் பகுதியைக் கவனித்து மதிக்காமல், தாவீது ஒரு பாவியாகப் பிறந்தார் என்று எழுதுகின்றன. இது துரதிர்ஷ்டவசமானதாக உள்ளது.

கேள்வி: ஆதாமின் பாவக் குற்றத்தை ஒவ்வொரு நபரும் சுமக்கின்றனரா?

பதில்: இல்லை. ஆதியாகமம், மரணம் (3:3, 19), பிள்ளைப் பிறப்பின் வேதனை (3:16), மற்றும் சபிக்கப்பட்ட ஒரு பூமி (3:17) முதலியவை பாவத்தின் விளைவுகளாகும் என்று கூறுகின்றது. ஆதாம் மற்றும் ஏவாளின் பாவத்தினுடைய விளைவுகளை நாம் அனுபவிக்கின்றோம், ஆனால் அவர்களின் குற்றத்தை நாம் சுதந்தரித்துக் கொள்வதில்லை. ஒழுக்க ரீதியான தேர்வுகளைச் செய்து கொள்ளும் திறன் நமக்கு உண்டு; தேவனுடைய வசனத்திற்கு இசைவாக தேர்வு செய்ய நாம் தவறுகின்ற பொழுது, நாம் பாவத்தின் குற்றமுள்ளவர்கள் ஆகின்றோம்.

கேள்வி: குழந்தைகள் தேவனுடைய இராஜ்யத்திலிருந்து பிரிந்தவர் களாய்ப் பிறக்கின்றனரா?

பதில்: இல்லை. "பரலோக இராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது"

GTG LIBRARY- BANGALORE

(மத். 14:19) என்று இயேசு கூறினார்.

கேள்வி: குழந்தைகள் தங்கள் பெற்றோரின் பாவங்களைச் சுமக்கின்றனரா?

பதில்: இல்லை. ‘‘... குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதில்லை; நீதிமானுடைய நீதி அவன்மேல்தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல்தான் இருக்கும்’’ (எசே. 18:20). ஆகவே, ஒவ்வொரு நபருடைய நீதியும் அல்லது துன்மார்க்கமும் அவரவர் மேலேயே இருப்பதால், நியாயத்தீர்ப்பும் ஒவ்வொருவரும் செய்த செயல்களின் அடிப்படையிலேயே இருக்கும். ஒரு நபருடைய நீதியும் அல்லது துன்மார்க்கமும் இன்னொரு நபருக்குக் கணக்கிடப்படாது.

கேள்வி: நடபடிகளின் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ‘வீட்டாரின் மனமாற்றங்கள்’ பச்சிளம் குழந்தைகளை உள்ளடக்கு கின்றனவா?

பதில்: இல்லை, அவர்களில் ஒரு சில வீட்டாரே பச்சிளம் குழந்தை களைக் கொண்டிருந்தனர் என்பது ஏற்புடையதாயுள்ளது. “வீட்டார்’’ எனப்படுவோர், “தேவனுக்குப் பயந்து” (அப். 10:2) மற்றும் “விசுவாசித்து” (அப். 16:34; 18:8) இருந்தனர் என்று கூறப்பட்டது. லீதியாளுக்குக் குழந்தைகளோ அல்லது கணவரோ இருந்ததாகச் சுட்டிக்காட்டுவது எதுவுமில்லை (அப். 16:14, 15). சிறு பிள்ளைகள் வீட்டாரிலிருந்து தனிப்பட்ட வகையில் கணக்கிடப்பட்டனர் (ஆதி. 47:24ஐக் காணவும்). பச்சிளம் குழந்தைகள் ஞானஸ்நானப் படுத்தப்பட்டதான உதாரணங்கள் வேதாகமத்தில் காணப்படுவதில்லை. இதற்கு மாறாக, அப். 8:12ன்படி, “ஆண்களும் பெண்களும்” (“Men and Women”) *ஞானஸ்நானம் பெற்றனர்.*

கேள்வி: ஞானஸ்நானப்படுத்துதல் மூலம் பிள்ளைகள் தேவனுக்கு பிரதிஷ்டை பண்ணப்படுதல் அவசியமா?

பதில்: இல்லை. இயேசுவின் பிரசன்னத்தில் பிள்ளைகள் குற்றமறியாத நிலையில் ‘‘பாதுகாப்புடன்’’ உள்ளனர். அவர்கள் ஞானஸ்நானத்தில் தேவனுக்கு பிரதிஷ்டை பண்ணப்பட வேண்டும் என்று வற்புறுத்துவது மனித பாரம்பரியம் ஆகும். கிறிஸ்தவர்கள் இவ்வகையான மனித பாரம்பரியங்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் (கொலோ. 2:8).

கேள்வி: பழைய ஏற்பாட்டில் பச்சிளம் குழந்தைகள் விருத்தசேதனம் செய்யப்பட்டதால், பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது அவசியமல்லவா?

பதில்: இல்லை. இந்தச் சிந்தனை செல்லத் தக்கது என்றால், விருத்த சேதனமற்ற பிள்ளைகளைப் போலவே (ஆதி. 17:14), ஞானஸ்நானம் பெறாத ஒவ்வொரு குழந்தையும் தனது மக்களில் இருந்து அறுப்புண்டு

GTG LIBRARY- BANGALORE

போவதாயிருக்கும். பாவமன்னிப்புக்கென்றுள்ள ஞானஸ்நானம் (அப். 2:38), தேவனுக்கும் ஆபிரகாமுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்படிக்கையின் அடையாளமாய் இருந்த விருத்தசேதனத்தின் அதே நோக்கத்தை நிறைவேற்றுவதில்லை (ஆதி. 17:11). ஞானஸ்நானம் பெறுகின்றவர்கள் செய்யும்படி தேவன் கேட்கின்றவைகளைப் பச்சிளம் குழந்தைகள் செய்ய முடியாது. ஞானஸ்நானம் பெறுகின்ற மக்கள் தங்களுக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டதைக் கேட்டிருக்க வேண்டும். அவர்கள் சுவிசேஷத்தை விசுவாசிப்பவர்களாய் இருக்க வேண்டும் (மாற். 16:15, 16), மனந்திரும்ப வேண்டும் (அப். 2:38), மற்றும் ஒரு புது வாழ்வை வாழ வேண்டும் (ரோமர் 6:4). நடபடிகளில், வசனத்தைக் கேட்டு, ஏற்றுக் கொண்டு, விசுவாசித்து, மற்றும் மனந்திரும்பியவர்களே ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர் என்று கூறப்படுகின்றது (அப். 2:41; 8:12; 18:8). பச்சிளம் குழந்தைகளிடம் பாவம் எதுவுமில்லை, மற்றும் அவர்கள் (கேட்கப்படுபவற்றை) நிறைவேற்ற முடியாது, எனவே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கக் கூடாது.

பச்சிளம் குழந்தையாக இருந்த வேளையில் ஞானஸ்நானம் பெற்ற ஒருவர், அந்தத் தொடக்க வயதில் தாம் கிறிஸ்தவராவதற்கு அவசியமான விசுவாசத்தைக் கொண்டிருந்திருக்க முடியாது என்பதை உணர்ந்தறிய வேண்டும். இயேசுவின் இரத்தம் நம்மை நமது பாவங்களில் இருந்து சுத்திகரிக்கின்றது (ரோமர் 3:25) என்பதை பச்சிளம் குழந்தை புரிந்து கொள்ள முடியாது; அது மனந்திரும்பவும், இயேசுவைப் பின்பற்றவும் தம் வாழ்வை அர்ப்பணிக்கவும் முடியாததாக உள்ளது (யோவா. 12:26). ஞானஸ்நானம் பெறுகின்ற ஒரு நபர் இயேசுவின் சீஷராவதற்குத் தம்மை ஒப்புவிக்கின்றார் (மத். 28:19). இப்படிப்பட்ட ஒப்புக்கொடுத்தல் எதையும் (தமது ஞானஸ்நானத்தின்போது) செய்திராதவர்கள் தாங்கள் மன்னிக்கப் படும்படியும் இயேசுவுக்காகப் புது வாழ்வொன்றை வாழும்படியும் இந்த விருப்ப நோக்குடன் ஞானஸ்நானம் பெற வேண்டும்.

கேள்வி: பெற்றோர்களின் பாவங்களினால் அவர்களின் பிள்ளைகள் மேல் குற்றம் சுமருகின்றதா?

பதில்: இல்லை. பெற்றோரின் பாவத்தினால் அவர்களின் பிள்ளைகள் துன்புறலாம் (யாத். 20:5). இருப்பினும், தேவன், "... தம்மில் அன்புகூர்ந்து, தமது கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் ஆயிரம் தலைமுறை மட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன்" (உபா. 7:9ஆ) என்றுள்ளார்.

குறிப்பு

[1]இந்த கேள்விக்கான மொழிபெயர்ப்பு NIV, NRSV மற்றும் புதிய எருசலேம் வேதாகமத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

GTG LIBRARY- BANGALORE

"ஒரே ஞானஸ்நானம்"

"ஒரே ஞானஸ்நானம்" உள்ளது என்று பவுல் எழுதினார் (எபே. 4:5). இந்த "ஒரே ஞானஸ்நானம்" என்ற தகுதியுடையதாகக் கருதப்படும் இரு ஞானஸ்நானங்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானமும் மற்றும் தண்ணீரினால் ஞானஸ்நானமும் ஆகும். இரு ஞானஸ்நானங்களுக்கும் இடையில் ஒரு ஒப்பீட்டை ஏற்படுத்துவதன் மூலம் நாம், எபேசியருக்குப் பவுல் இந்த நிருபத்தை எழுதும்போது அமலில் இருந்ததும் தொடர்ந்து வரும் நூற்றாண்டுகளில் உலக நாடுகள் முழுவதிலும் தொடர்ந்து இருப்பதுமான "ஒரே ஞானஸ்நானம்" எது என்று நாம் தீர்மானம் செய்ய முடியும். பின்வரும் கேள்விகளுக்கான பதில்கள் ஒரு முடிவெடுக்க நமக்கு உதவும்:

1. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைக் கொடுத்தது யார்? மற்றும் தண்ணீர் ஞானஸ்நானத்தைக் கொடுத்தது யார்?

யோவான், தனக்குப் பின் வருகிற ஒருவர் - இயேசு - பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று எடுத்துரைத்தார் (மத். 3:11). சகல இனங்களுக்கும் ஞானஸ்நானம் கொடுப்பதன் மூலம் அவர்களைத் தம் சீடராக்கும்படியாக இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கூறினார் (மத். 28:19). மனிதரால் தரப்படும் ஞானஸ்நானம் எதுவும் தண்ணீர் ஞானஸ்நானமாகவே உள்ளது, ஏனெனில் மனிதர் பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு ஞானஸ்நானம் தரவில்லை மற்றும் தரவும் முடியாது. மேலும், இயேசு தண்ணீர் ஞானஸ்நானம் தரவில்லை (யோவா. 4:2); இயேசுவால் தரப்பட்ட ஞானஸ்நானம் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானமாகவே இருந்தது.

2. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை யார் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது? மற்றும் தண்ணீர் ஞானஸ்நானத்தை யார் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது?

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே வாக்களிக்கப்பட்டிருந்தது. அப். 1:2-5ல் வரும் பெயர்ச் சொற்களைக் கருத்தில் கொண்டு கவனிக்கும் பொழுது, இயேசு அவ்வசனப் பகுதிகளில் அப்போஸ்தலர்களைப் பற்றியே பேசினார் என்று காணப்பட முடியும். இயேசு "அப்போஸ்தலர்கள்" வசம் கட்டளைகளைக்

GTG LIBRARY- BANGALORE

கொடுத்திருந்தார் (வ. 2). "இவர்களுக்கு" அவர் தம்மை உயிருள்ளவராகக் காண்பித்து, "இவர்களுக்கு" நாற்பது நாளளவும் தரிசனமாகி (வ. 3), மற்றும் "அவர்களை" ஒன்றுகூட்டி, பிதாவானவர் வாக்குத்தத்தம் செய்ததைப் பெறும் வரையிலும் "அவர்கள்" - அப்போஸ்தலர்கள் - காத்திருக்கும்படி கட்டளையிட்டு (வ. 4), மற்றும் "நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்" (வ. 5) என்றும் கூறினார்.

முன்னதாகவே, கடைசி இராப்போஜனத்தின் போது (யோவா. 13:2, 4), இயேசு தம் அப்போஸ்தலர்களிடம் தனிப்பட்ட விதத்தில் பேசியிருந்தார் (மத். 26:20; லூக். 22:14). அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் அருளப்படுவார் என்று அவர் வாக்குத்தத்தம் செய்திருந்தார். ஆவியானவர் அவர்களுக்கு எல்லாவற்றையும் போதித்து, இயேசு கூறியிருந்த எல்லா வற்றையும் அவர்களுடைய நினைவுக்குக் கொண்டு வந்து, மற்றும் அவர்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துவார் (யோவா. 14:25, 26; 15:26; 16:12, 13).

பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்களே பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டவர்களாய் இருந்தனர். அப். 1:26ல் கடைசியாகக் குறிப்பிடப்பட்டவர்களும், இவ்விதமாக அப். 2:1ல் ''அவர்கள்'' எனப்படுபவர்களும் அப்போஸ்தலர்களே ஆவார்கள். மேலும் மக்களின் முன்பு நின்று உரையாற்றியவர்கள் இந்த அப்போஸ்தலர்களே ஆவர் (அப். 2:14). மக்கள் கூட்டத்தார் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று அப்போஸ்தலர்களிடம்தான் கேட்டார்கள் (அப். 2:6, 37).

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் அப்போஸ்தலர்களுக்கு மட்டும் உரியதாயிருந்தது என்றாலும், தேவன் புற இனத்தாரிலிருந்து முதல் முதல் கிறிஸ்தவர்களானவர்கள் மீது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை அருளியதென்ற ஒரு விதி விலக்கையும் ஏற்படுத்தினார். இது, தேவன் புற இனத்தாரை - இரண்டாந்தரக் கிறிஸ்தவர்களாக அல்ல ஆனால் யூதக் கிறிஸ்தவர்களுடன் சம அந்தஸ்தில் - ஏற்றுக் கொள்வார் என்பதைக் காண்பித்தது (அப். 11:15-17). அப்போஸ்தலர்கள் மற்றும் கொர்னேலியு மற்றும் அவரது குடும்பத்தார் மற்றும் நண்பர்கள் ஆகியோர் மட்டுமே பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் பெற்றதாக வேத வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பவுலும் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ் நானம் பெற்றார் என்று நாம் யூகம் செய்யலாம், ஏனென்றால் அவர், "மகா பிரதான அப்போஸ்தலருக்கும் நான் எவ்வளவும் குறைந்தவனாயிராத படியால்" (2 கொரி. 12:11) என்று கூறினார்.

தண்ணீர் ஞானஸ்நானம் எல்லா நாடுகளிலுள்ளவர்களுக்கும் மற்றும் சிருஷ்டிகள் முழுவதற்குமானது என்று இயேசு எடுத்துரைத்தார் (மத். 28:19; மாற். 16:15, 16). சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்ட எல்லா இடங்களிலும் மக்கள் தண்ணீர் ஞானஸ்நானமே பெற்றனர் (அப். 2:41; 8:12, 38, 39; 9:18; 10:47, 48; 16:15, 33; 19:5), ஆனால் அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் பெறவில்லை. பேதுருவின் எழுத்தும் (1 பேது. 3:21) மற்றும் பவுலின் நிருபங்களும், எல்லாக் கிறிஸ்தவர்களும் தண்ணீர் ஞானஸ் நானத்தை மட்டுமே பெற்றிருந்தனர் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன

GTG LIBRARY- BANGALORE

(ரோமர் 6:3, 4; 1 கொரி. 1:13; கலா. 3:27; கொலோ. 2:12).

3. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் எவ்விதம் தரப்பட்டது? மற்றும் தண்ணீர் ஞானஸ்நானம் எவ்விதம் தரப்பட்டது?

அப்போஸ்தலர்கள் மீதும், புற இனத்திலிருந்து முதல் முதலாய் மனம் மாறியவர்கள் மீதும் பரிசுத்த ஆவியைப் பொழிந்தருளிய கர்த்தரால் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் தரப்பட்டது (அப். 2:4, 17; 10:45). மக்களைத் தண்ணீரில் அடக்கம் செய்து, தண்ணீரில் இருந்து அவர்களை வெளியே கொண்டு வருதல் என்பதன் மூலம் (அப். 8:38, 39; ரோமர் 6:4; கொலோ. 2:12) தண்ணீர் ஞானஸ்நானம் என்பது மனிதக் கரங்களால் தரப்பட்டது.

4. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானமும் தண்ணீர் ஞானஸ் நானமும் யாருடைய நாமத்தினாலே தரப்பட்டன?

பிதாவானவர் பரிசுத்த ஆவியானவரை இயேசுவின் அதிகாரம் என்று அர்த்தம் கொள்ளும் இயேசுவின் நாமத்திலே அனுப்புவார் என்று இயேசு கூறினார் (யோவா. 14:26). "பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில்" ஞானஸ்நானம் தர வேண்டும் என்று இயேசு தமது பின்பற்றாளர்களுக்கு அறிவுறுத்தினார் (மத். 28:19). இவ்விதம் செய்வதினால் அவர்கள் இயேசுவின் அதிகாரத்தின்படி அவருடைய நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தனர்.

5. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெறுவதற்கும் தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பெறுவதற்கும் தேவையாயிருந்த தகுதிகள் யாவை?

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெறும் முன்பு அப்போஸ்தலர்கள் எருசலேமில் தங்கியிருக்கும்படி கேட்டுக் கொள்ளப் பட்டனர் (அப். 1:4, 5). அப்படிப்பட்ட செயல் எதுவும் கொர்நேலியு அல்லது அவரது குடும்பத்தார் மற்றும் நண்பர்கள் ஆகியோரிடம் கேட்கப்படவில்லை. அவர்களின் பகுதியில் தகுதிப்படுத்தும் செயல் எதையும் கேட்டுக் கொள்ளாமலேயே தேவன் ஆவியானவரை அவர்கள் மீது நேரடியாகப் பொழிந்தருளினார்.

தண்ணீர் ஞானஸ்நானம் பெறுவதற்கு, நாம் தேவனுடைய வசனத்தைக் கேட்டு (அப். 8:12; 18:8), இயேசுவில் விசுவாசம் கொண்டு (மாற். 16:16), மனந்திரும்பி (அப். 2:38), மற்றும் இயேசுவில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும் (ரோமர் 10:9, 10). இவைகளைச் செய்துள்ளவர்களுக்குக் காத்திருத்தல் எதுவும் தேவைப் படுவதில்லை (அப். 2:41; 8:12, 35-39: 16:33; 22:16; 9:18ஐக் காணவும்).

6. இந்த ஞானஸ்நானங்கள் எந்த அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டன?

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்பது ஒரு வாக்குத்தத்தம் என்ற வகையில் பெற்றுக் கொள்ளப்பட்டது (அப். 1:4, 5). தண்ணீர் ஞானஸ்நானம் என்பது ஒரு கட்டளை என்ற வகையில் கீழ்ப்படிய வேண்டியதாக உள்ளது (அப். 10:48). ஒரு ஞானஸ்நானம் என்பது கட்டளையிடப்பட்டு அல்லது ஒரு கட்டளை என்ற வகையில் பெற்றுக்

GTG LIBRARY- BANGALORE

கொள்ளப்பட்ட பொழுதெல்லாம் அது தண்ணீர் ஞானஸ்நானமாகவே இருக்க வேண்டும். தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பெறுதல் என்பது நாம் இயேசுவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிதலைச் சார்ந்துள்ளது. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்பது இயேசுவைச் சார்ந்ததாக இருந்தது. இந்த ஞானஸ்நானத்தை இயேசு நமக்குக் கொடுப்பதில்லை என்றால், அது நமது தவறாக இருப்பதில்லை; மாறாக, அது அவருடைய தெரிவாக உள்ளது. நமது செயல்பாடுகள் நமக்குப் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைத் தர முடியாது.

7. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றது யார்? தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பெற்றது யார்?

பெந்தெகொஸ்தே பண்டிகையின் போது இயேசு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவரை (அப். 1:1-8) அப்போஸ்தலர் களுக்குக் கொடுத்தார் (அப். 1:26-2:6, 14, 37). (பிற்பாடு, இந்த நிகழ்வானது "ஆதியிலே" என்று கூறப்பட்டது; அப். 11:15.) அவர் கொர்நேலியுவின் வீட்டாரையும் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானப்படுத்தினார் (அப். 11:15-18; 10:24ஐக் காணவும்). வேதாகமத்தில் இந்த இரு இடங்களில் மட்டுமே பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் பதிவு செய்யப் பட்டுள்ளது.

புற ஜாதியார், பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் பெற்றதைப் பேதுரு கண்ட பொழுது அவர், "பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினது போலவே, அவர்கள் மேலும் இறங்கினார்" (அப். 11:15) என்று கூறிய உண்மையின் மீது தனிச் சிறப்பான கவனம் வைக்கப்பட வேண்டும். அவர் புதுக் கிறிஸ்தவர்கள் எல்லார் மீதும் அருளப்பட்டது போலவே, அவர்கள் (கொர்நேலியு வீட்டார்) மீதும் ஆவியானவர் அருளப்பட்டார் என்று கூறவில்லை. அவர், ஆதியில் (தொடக்கத்தில்) அப்போஸ்தலர்கள் பெற்றிருந்த பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைக் குறிப்பிட்டார் (அப். 2:4).

இக்கருத்துடன் ஒப்புதல் கொண்ட வகையில் ஃபிரெடெரிக் டேல் ப்ரூனர் அவர்கள், பேதுருவின் கூற்றைப் பற்றிப் பின்வருமாறு எழுதினார்:

> அவர், பரிசுத்த ஆவியானவர் "ஆதியிலே நம்மேல் இறங்கினது போலவே" (வ. 15) கொர்நேலியு வீட்டார் மேலும் இறங்கியதாக வலியுறுத்தினார். இந்தக் குறிப்பு இன்றிமையாததாக உள்ளது. பரிசுத்த ஆவியானவர் "எப்பொழுதும் ஒவ்வொருவருக்கும் செய்கின்றது போலவே" கொர்நேலியுவின் வீட்டார் மேலும் இறங்கி வந்ததாகப் பேதுரு கூறுவதில்லை. பேதுரு அவ்வாறு கூறியிருந்தால், நாம் ஆதி சபையில் பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதுமே அல்லது குறைந்த பட்சம், பாஷைகளைப் பேசும் பொழுதாவது அருளப்பட்டிருப்பார் என்று நாம் யூகிக்கலாம். ஆனால் செசரியாவில் நடைபெற்றதற்கு இணையான நிகழ்ச்சியாகப் பேதுரு அறிந்துள்ள ஒன்றே ஒன்று என்ற வகையில் "ஆதியிலே" நடைபெற்ற நிகழ்ச்சிதான் இருந்தது என்பது, பெந்தெகொஸ்தே நாளின் வெளிப்பாடுகள் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு குறித்த நிலைக்குக் கொண்டு வருதல் சார்ந்ததாக

GTG LIBRARY- BANGALORE

இருந்ததில்லை என்பதுடன் அவை அநேகமாக அறியப்பட்டிருந்ததும் இல்லை.[1]

இந்த நிகழ்ச்சியைப் பற்றிப் பேதுரு பிற்பாடு, "நீங்கள் அறிந்திருக்கிற படி புறஜாதியார் என்னுடைய வாயினாலே சுவிசேஷ வசனத்தைக் கேட்டு விசுவாசிக்கும்படி தேவன் அநேக நாட்களுக்கு முன்னே உங்களில் ஒருவனாகிய என்னைத் தெரிந்து கொண்டார். இருதயங்களை அறிந்திருக்கிற தேவன் நமக்குப் பரிசுத்த ஆவியைத் தந்தருளினது போல அவர்களுக்கும் தந்தருளி, அவர்களைக் குறித்து சாட்சி கொடுத்தார்" (அப். 15:7, 8) என்று சுட்டிக்காட்டியதன் மூலம் குறிப்பிட்டார். புற ஜாதியார் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று எருசலேமிலிருந்த சகோதரர்களை இணங்க வைப்பதற்காகப் பேதுரு, ஆவியானவர் வருதல் என்பது புற ஜாதியார் மீது தொடர்ந்து நடந்த செயல்பாடாகும் என்று உரைக்கவில்லை. அதற்குப் பதிலாக, கொர்நேலியுவின் வீட்டாரும் நண்பர்களும் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெற்ற அந்த ஒரே முறை நிகழ்ச்சியைக் குறிப்பிடுதல் அவசியமானது என்று அவர் கண்டார். இந்தக் காரணங்களினால், பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்பது ஒரு தொடர் நிகழ்ச்சியல்ல ஆனால் மாறுபட்ட இரண்டு வேளைகளில் மட்டுமே நடந்த நிகழ்ச்சியாகும் என்று தான் முடிவெடுக்கப்பட வேண்டும்: பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெற்ற நிகழ்ச்சி மற்றும் புற ஜாதியாருக்கு இரட்சிப்பின் கதவு திறக்கப்பட்ட நிகழ்ச்சி. (ஒருவேளை, பவுல் மகாபிரதான அப்போஸ்தலர்களுக்கு எவ்விதத்திலும் குறைந்தவராயிராதபடிக்கு மூன்றாவது நிகழ்ச்சியாக ஒன்று இருந்திருக்கலாம்; 2 கொரி. 12:11, 12.)

எல்லா இனத்தைச் சேர்ந்த மக்களுக்கும் தண்ணீர் ஞானஸ்நானம் தரப்பட்டது. அப். 2:41; 8:12, 13, 38; 9:18; 10:48; 16:15, 33; 18:8; 19:5; 22:16 ஆகிய வசனங்களை வாசிக்கவும். இந்நிகழ்ச்சிகள் யாவற்றிலும் ஞானஸ்நானம் பெற்றவர்கள் ஒரு மனிதரால் ஞானஸ்நானம் பெற்றனர் மற்றும்/அல்லது ஒரு கட்டளைக்குக் கீழ்ப்படிந்தனர் என்ற உண்மை காணப்படும் வகையில், இவை தண்ணீர் ஞானஸ்நானம் நடைபெற்ற நிகழ்ச்சிகளே என்பது தெளிவு. மற்ற நிகழ்ச்சிகள் நிருபங்களில் காணப் படுகின்றன (ரோமர் 6:3, 4; 1 கொரி. 1:13-16; கலா. 3:27; எபே. 4:5; கொலோ. 2:12; 1 பேது. 3:21).

8. பரிசுத்த ஆவியானருடைய ஞானஸ்நானத்தின் நோக்கம் என்ன, மற்றும் தண்ணீர் ஞானஸ்நானத்தின் நோக்கம் என்ன?

அப்போஸ்தலர்களுக்கு வல்லமை அளித்து (அப். 1:8), வசனத்தை உறுதிப்படுத்தி (மாற். 16:20; எபி. 2:3, 4) மற்றும் இயேசுவின் வசனங்களை வெளிப்படுத்துதல் (யோவா. 14:26; 16:13) என்பதே பரிசுத்த ஆவியான வருடைய ஞானஸ்நானத்தின் நோக்கமாய் இருந்தது. இது அப்போஸ்தலர் களை இயேசுவின் சிறப்புப் பிரதிநிதிகள் என்ற வகையில் தயாரித்தது, ஏனெனில் இது தனிச்சிறப்பான அடையாளங்களுடன் அவர்கள் தங்கள் பணிப் பொறுப்பை உறுதிப்படுத்த அவர்களுக்கு வல்லமையளித்தது

GTG LIBRARY- BANGALORE

(2 கொரி. 12:12). புற ஜாதியாரும் கூட இரட்சிப்பின் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டு முதல் தரக் கிறிஸ்தவராக மதிக்கப்பட முடியும் என்று யூதக் கிறிஸ்தவர்களுக்கு நிரூபிப்பதற்காக புற ஜாதியாரின் விஷயத்தில், இந்த ஞானஸ்நானத்தைத் தேவன் பயன்படுத்தினார் (அப். 10:47; 11:17; 15:7, 8).

தேவன் பாவங்களை மன்னித்து (அப். 2:38; கொலோ. 2:12, 13), பாவங் களைக் கழுவி (அப். 22:16), மற்றும் பாவங்களில் இருந்து இரட்சிக்கும் (மாற். 16:16; 1 பேது. 3:21) முன்பு தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பாவிகள் விசுவாசத்தினால் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது ஒரு நிபந்தனையாக உள்ளது.

9. இந்த இரு ஞானஸ்நானங்களைப் பின் தொடர்ந்த விளைவுகள் யாவை?

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தின் மூலம், அப்போஸ்தலர்கள் அற்புதங்களை நிகழ்த்தினார்கள், மற்றும் நேரடியாகத் தேவனுடைய வசனத்தைப் பெற்றார்கள் (எபே. 3:3-5). புற ஜாதியார் பரிசுத்த ஆவியான வரின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டதால், அவர்கள் இரட்சிக்கப் படும்படிக்கு (மாற். 16:16ஐக் காணவும்) அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப் பேதுரு மனதாயிருந்தார் (அப். 10:47). புற ஜாதியிலிருந்து மனம் மாறியவர்கள் தேவனுக்கு ஏற்புடையவர்கள் என்றும், யூதக் கிறிஸ்தவர் களின் ஐக்கியத்திற்குத் தகுதியானவர்கள் என்றும் ஏற்றுக் கொள்ளும்படி யூதக் கிறிஸ்தவர்கள் வற்புறுத்தப்பட்டார்கள் (அப். 11:17, 18).

தண்ணீர் ஞானஸ்நானமானது பாவமன்னிப்பு (அப். 2:38), புது வாழ்வு (ரோமர் 6:4), மற்றும் கிறிஸ்துவின் சபையான (எபே. 1:22, 23) ஒரே சரீரத்தில் உறுப்பினராகுதல் (1 கொரி. 12:13) ஆகியவற்றை விளைவித்தது.

10. இரு ஞானஸ்நானத்தையும் உடனடியாகப் பின் தொடர்ந்த செயல்பாடுகள் யாவை?

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றவர்கள் பற்பல மொழிகளைப் பேசினார்கள் (அப். 2:4; 10:45, 46). தண்ணீரினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அகம் மகிழ்ந்தார்கள் (அப். 8:39; 16:33, 34).

இரு ஞானஸ்நானங்களையும் மீண்டும் பார்வையிட்டதில் நாம், இன்றைய நாட்களில் எல்லா மக்களுக்கும் தொடர்ந்து பயன்படுத்தப்படக் கூடிய ஞானஸ்நானம் எது என்பதைக் காண முடிகின்றது. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்பது வரையறைக்குட்பட்ட மக்கள் குழுவிற்குரியதாக மட்டும் இருந்திருக்கையில், தண்ணீர் ஞானஸ்நானம் என்பது எல்லா இனத்தவருக்கும் எல்லாக் காலத்திற்கும் உரியதாகும். இரட்சிக்கப்பட விரும்புகின்ற எல்லாப் பாவிகளின் தேவைகளையும் தண்ணீர் ஞானஸ்நானமானது நிறைவேற்றுகின்றது. பரிசுத்த ஆவியான வரின் ஞானஸ்நானம் அப்போஸ்தலர்களுக்குக் கிறிஸ்துவின் வசனத்தை உறுதிப்படுத்தி மற்றும் வெளிப்படுத்தியுள்ளது. அவர்கள் அவற்றை நமக்காகப் புதிய ஏற்பாட்டில் பாதுகாத்துள்ளனர். புற ஜாதியார் பற்றிய பதிவு செய்யப்பட்ட விபரமானது, புற இனத்தவராய் உள்ள நாம், கிறிஸ்துவின் மூலம் இரட்சிப்படைய முடியும் என்பதற்கும், கிறிஸ்தவர் களான யூதர்களின் அதே அளவில் நாமும் ஏற்றுக் கொள்ளப்பட முடியும்

GTG LIBRARY- BANGALORE

என்பதற்கும் சான்றாகப் பயன்படுகின்றது.

தொகுப்புரை

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்பது அப்போஸ்தலர்களை அவர்களின் மாபெரும் ஊழியத்திற்கென்று தயாரிக்கவும், புற ஜாதியாருக்கு (இரட்சிப்பின்) கதவைத் திறக்கவும் தேவனுடைய நோக்கத்தில் பயன்பட்டது. அந்த நோக்கங்கள் நிறைவேறிவிட்டதால், பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் தனது பணியை முடித்துள்ளது மற்றும் இவ்விதமாக அது முடிவடைந்துள்ளது. தண்ணீர் ஞானஸ்நானம் என்பது இன்னமும் எல்லா இனத்தவருக்கும் தேவைப்படுகின்றது, எனவே இயேசுவின் இரத்தத்தின் மூலம் இரட்சிப்பை நாடும் அனைவருக்கும் இது தொடருகின்றது.

குறிப்பு

[1]Frederick Dale Bruner, *A Theology of the Holy Spirit: The Pentecostal Experience and the New Testament Witness* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1970), 194.

அடக்கம் பண்ணப்பட்டு உயிர்ப்பிக்கப்படுதல் (ரோமர் 6:4)

ஞானஸ்நானத்தில் இயேசுவுடன் அடக்கம் பண்ணப்பட்டு உயிர்ப்பிக்கப்படுதலின் உணர்த்தும் கருத்துக்கள் என்ன? நாம் தண்ணீருக்குள் முழுக்கப்பட்டு பிறகு தண்ணீரில் இருந்து எழும்புகின்ற பொழுது ஞானஸ்நானம் என்ற செயல்பாடானது முழுமையடைகின்றது. எவரெட் F. ஹாரிஸன் அவர்களால் எடுத்துரைக்கப்பட்ட பின்வரும் விளக்கவுரையைப் பெரும்பாலான எழுத்தாளர்கள் ஒப்புக் கொள்ளுகின்றனர்: “இருப்பினும், ஒரு கணநேரத்திற்கு உடலானது ஞானஸ்நானத் தண்ணீரில் மூழ்கியிருக்கையில் கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணப் படுத்தலையே பவுல் சித்தரிக்கின்றார் (ரோமர் 6) என்பது உறுதி.”[1]

குறிப்பு

[1]Everett F. Harrison, *The Expositor's Bible Commentary*, vol. 10, Romans - Galatians, gen. ed. Frank E. Gaebelein (Grand Rapids. Mich.: Zondervan Publishing House, 1976), 69.

GTG LIBRARY- BANGALORE

ஞானஸ்நானம்: முன் நிபந்தனைகளும் ஆசீர்வாதங்களும்

ஞானஸ்நானம் என்பது மாறுபட்ட பல நோக்கங்களைக் கொண்டுள்ளது என்று சிலர் நம்பும்படியான வழிமுறைகளில் ஞானஸ் நானத்துடன் தொடர்புடைய சில சத்தியங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. இந்த எடுத்துரைப்புகள் மாறுபட்ட நோக்கங்களை உள்ளடக்குவதில்லை, ஆனால் அதற்கு மாறாக இவை பின்வரும் நான்கு வகைப்பாடுகளில் அடங்குகின்றன:

அ. முன் நிபந்தனைகள் - ஒரு நபர் ஞானஸ்நானம் பெறுவதற்கு அவசியமான செயல்பாடுகள், எண்ணப்போக்குகள் மற்றும் ஆதார மூலங்கள்.

ஆ. ஞானஸ்நானத்தில் பெறும் ஆசீர்வாதங்கள் - விருப்பங்கள் மாறுபட்ட வழிமுறைகளில் விவரிக்கப்படுகின்றன ஆனால் அவை யாவுமே, தேவனுடன் உள்ள உறவில் காணும் தவறை நேராக்கிக் கொள்வதற்காக பாவமன்னிப்புப் பெறுதலுடன்தான் தொடர்பு கொண்டுள்ளது.

இ. ஒருவரின் வாழ்வில் மாற்றங்கள் ஏற்படுதல் - இரட்சிப்படைய விரும்புபவரின் இருதயத்திலிருந்து வரும் கீழ்ப்படிதலின் விளைவு.

ஈ. இரட்சிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் - ஒருவரின் பாவங்கள் சுத்திகரிக்கப்பட்டதன் விளைவாகவும் தேவனுடன் சரியான உறவுமுறைக்குள் பிரவேசிப்பதன் விளைவாகவும் கிறிஸ்தவ வாழ்வில் பெறுகின்ற ஒவ்வொரு பயனும் அல்லது அனுகூலமும்.

இந்த வகைப்பாடுகளை நாம் இன்னும் நெருக்கமாகக் காண்போம்:

அ. முன் நிபந்தனைகள்:

1. இயேசுவைப் பற்றியும் அவரது வேண்டுகோள்களைப் பற்றியும் கேள்விப்பட்டுப் புரிந்து கொள்ளுதல் (அப். 18:8)
2. சுவிசேஷத்தில் வெளிப்படுத்தப்பட்டபடியாக இயேசுவை ஆண்டவரென்றும் இரட்சகர் என்றும் விசுவாசித்தல் (மாற். 16:16)
3. பாவத்திற்கு ஊழியம் செய்வதிலிருந்து இயேசுவுக்கு ஊழியம் செய்ய மாறும்படியாகத் தீர்மானம் செய்வதன் மூலம் மனந்திரும்புதல் (அப். 2:38)
4. இயேசுவைக் கர்த்தரென்று விசுவாசத்தினால் அறிக்கையிடுதல்

GTG LIBRARY- BANGALORE

(ரோமர் 10:10)

5. *அடக்கம் செய்யப்படுதல் மற்றும் உயிர்த்தெழுதல் (ரோமர் 6:4; கொலோ. 2:12) ஆகியவற்றிற்காக அதிகமான தண்ணீர் (யோவா. 3:23)*

ஆ. ஞானஸ்நானத்தில் பெறும் ஆசீர்வாதங்கள்:

1. *இரட்சிப்பு (மாற். 16:16; 1 பேது. 3:21)*
2. *பாவங்கள் மன்னிக்கப்பட்டுக் கழுவப்படுதல் (அப். 2:38; 22:16; கொலோ. 2:12, 13)*
3. *இயேசுவின் சரீரத்தினுள் பிரவேசித்தல் (1 கொரி. 12:13)*
4. *கிறிஸ்துவுக்குள் பிரவேசித்தல் (ரோமர் 6:3)*
5. *இயேசுவின் மரணத்திற்குள் பிரவேசித்தல் (ரோமர் 6:3)*

இ. ஒருவரின் வாழ்வில் மாற்றங்கள் ஏற்படுதல்:

1. *ஞானஸ்நானத்தில் இயேசுவின் மரணத்தைப் பகிர்ந்து கொள்ளுதலின் விளைவாகப் பாவத்திற்கு மரித்தல் (ரோமர் 6:1-4; கொலோ. 3:3)*
2. *புதிய ஜீவன் (ரோமர் 6:4)*
3. *இயேசுவின் புதிய ஜீவனைப் போன்றுள்ள தன்மை (ரோமர் 6:5)*
4. *பழைய மனிதன் சிலுவையில் அறையப்படுதல் (ரோமர் 6:6)*
5. *மாம்ச இச்சைகளை இறக்கச் செய்தல் (ரோமர் 6:6)*
6. *பாவத்திற்கு ஊழியம் செய்தலை முடித்து வைத்தல் (ரோமர் 6:6, 18)*
7. *ஒருவரின் வாழ்வில் பாவத்தின் வல்லமையிலிருந்து விடுதலை (ரோமர் 6:7, 17, 18)*
8. *நீதிக்கு ஊழியம் செய்தல் (ரோமர் 6:18)*
9. *இயேசுவை அணிந்து கொள்ளுதல் (கலா. 3:27)*
10. *மாம்ச இச்சைகளை விலக்குதல் என்ற ஆவிக்குரிய விருத்தசேதனம் (கொலோ. 2:11-13)*
11. *ஆவிக்குரிய வகையில் வாழ்விக்கப்படுதல் (கொலோ. 2:13)*
12. *மீண்டும் பிறத்தல் (யோவா. 3:3-5)*
13. *தேவனுக்குள் ஜீவன் கிறிஸ்துவுடன் மறைந்திருத்தல் (கொலோ. 3:3)*
14. *கிறிஸ்துவுக்குள் இருக்கும் யாவருடனும் ஒன்றாயிருத்தல் (கலா. 3:28)*

ஈ. இரட்சிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள்:

1. *அகமகிழ்ச்சி (அப். 8:39)*
2. *பரிசுத்த ஆவியின் வரம் (அப். 2:38; 5:32; கலா. 4:6)*
3. *நம்பிக்கை (1 பேது. 1:3, 4)*
4. *தேவனுடன் ஐக்கியம் (யோவா. 14:21)*
5. *மற்ற கிறிஸ்தவர்களுடன் ஐக்கியம் (அப். 2:42, 47)*
6. *கிறிஸ்துவுக்குள் வளருவதற்கான வாய்ப்பு (எபே. 4:15)*
7. *கிறிஸ்தவர்களுக்குக் கிடைக்கின்ற ஆவிக்குரிய சகல*

GTG LIBRARY- BANGALORE

ஆசீர்வாதம் (எபே. 1:3)

8. தேவனுடைய தொடர்ந்த பராமரிப்பு (எபி. 13:5)
9. நல்மனச்சாட்சி (1 பேது. 3:21)

ஞானஸ்நானம் பெறுவதற்கு, (''அ''வின் கீழ் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள எல்லா) முன் நிபந்தனைகளையும் நாம் நிறைவேற்ற வேண்டும். விசுவாசம் என்பது நமது உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தின் மீதுள்ள நம்பிக்கை என்று அர்த்தப்படுகின்றது. மனந்திரும்புதல் என்பது, இயேசுவுக்கு நம் வாழ்வை ஒப்புக் கொடுப்ப தற்காக கடந்த கால வாழ்வை விட்டு விடும் தீர்மானம் என்று அர்த்தப் படுகின்றது. இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரன் என்று விசுவாச அறிக்கை செய்தல் என்பது, நமது பாவத்திலிருந்து நம்மை விடுவிக்கக் கூடிய அவரைக் கர்த்தர் என்பதாக ஒப்புக் கொள்ளுதல் என்று அர்த்தப்படுகின்றது (ரோமர் 10:9, 10).[1]

இந்த முன் நிபந்தனைகளின்றி, ஆவிக்குரிய வகையிலோ அல்லது உடல் ரீதியாகவோ ஞானஸ்நானம் பெறு முடியாது மற்றும் மாற்றம் பெற்ற ஒரு வாழ்வு பின் தொடராது.

“ஞானஸ்நானத்தில் பெறும் ஆசீர்வாதங்கள்” என்ற வகைப் பாட்டில் (''ஆ''வின் கீழ்) அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொன்றும், மன்னிப்பு மற்றும் தேவனுடனும் கிறிஸ்தவர்களுடனும் புது வாழ்வில் பிரவேசித்தல் ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது, தேவனுடன் உள்ள உறவில் இருக்கும் தவறுகளை நேராக்குகின்றோம் என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியம். இந்தப் புரிந்து கொள்ளுதலின்றி நாம் நமது பாவங்களைக் கழுவுவதற்காக பரிகார பலியான இயேசுவின் இரத்தத்தின் மீது விசுவாசம் கொண்டிருக்க முடியாது (ரோமர் 3:25). ஆகையால், மன்னிப்பு பற்றிய புரிந்து கொள்ளுதல் என்பது, மன்னிப்படைவதற்காக நாம் ஞானஸ்நானம் பெறுகையில் இயேசுவின் சுத்திகரிக்கும் இரத்தத்தின் மீது நாம் விசுவாசம் கொள்வதற்கு முந்திய தேவையாக இருக்கின்றது.

''விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான்” (மாற். 16:16) என்று சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்ட பொழுது இயேசுவின் கூற்றினால் இதே சத்தியம் போதிக்கப்பட்டது. “கிறிஸ்து வானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த் தெழுந்தார்” (1 கொரி. 15:3, 4) என்ற உண்மையைச் சுவிசேஷம் உள்ளடக் கியிருக்கின்றது. இரண்டு எச்சவினைகளைக் (''விசுவாசித்து'' மற்றும் ''ஞானஸ்நானம் பெற்று'') கொண்ட கிரேக்கச் சுட்டுச் சொல்லானது அவ்விரு செயல்களும் ஒரே வேளையில் நடைபெற வேண்டும் என்று சுட்டிக்காட்டுகின்றது. இதை மனதில் கொண்டு, ஞானஸ்நானம் பெறுகின்றவர் சுவிசேஷத்தை - தனது பாவங்களுக்காக இயேசு மரித்தார் என்பது - அவர் ஞானஸ்நானம் பெறுகையில் விசுவாசித்தவராய் இருக்க வேண்டும் என்பதை இயேசுவின் கூற்றிலிருந்து நாம் காண முடியும்.

மேலும் நாம், ஞானஸ்நானத்தைத் தொடர்ந்து ஒரு புதிய வாழ்வு வர

GTG LIBRARY- BANGALORE

வேண்டும் (“இ”யின் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது) என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். ஆவிக்குரிய ஈடுபாடு இல்லாத ஞானஸ்நானம் புது வாழ்வைக் கொண்டு வருவதில்லை. நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது இயேசுவின் மரணம் மற்றும் அடக்கம் ஆகியவற்றுடன் ஆவிக்குரிய முறையில் இணைவதன் விளைவாகவே இந்தப் புதுவாழ்வு வருகின்றது. “ஒருவரின் வாழ்வில் மாற்றங்கள் ஏற்படுதல்” என்ற தலைப்பின் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொன்றும் பின்வரும் ஒரே கருத்தைக் கொண்டுள்ளன: நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது, மன்னிக்கப்படுவதற்காகவும் இயேசுவைப் பின்பற்றுவதற்கு அர்ப்பணிக்கப் பட்ட ஒரு புது வாழ்வை வாழ்வதற்காகவும் கடந்த கால வாழ்வை விட்டு விடுகின்றோம்.

இரட்சிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்கின்ற எல்லா ஆசீர்வாதங் களையும் நாம் ஒருக்காலும் அறிந்து கொள்ளவோ அல்லது புரிந்து கொள்ளவோ முடியாமல் போகலாம். தேவனுடனான உறவில் உள்ள தவறை நேராக்கிக் கொள்ளவும் மற்றும் இயேசுவைப் பின்பற்றுவதற்கு அர்ப்பணிக்கப்பட்ட புது வாழ்வில் பிரவேசிப்பதற்கும் நாம் ஞானஸ்நானம் பெற்றவுடன் கணக்கற்ற ஆசீர்வாதங்கள் வருகின்றன. இவைகளில் (“ஈ”யின் கீழ் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள) பல ஆசீர்வாதங்கள் நாம் கிறிஸ்தவ வாழ்வை வாழத் தொடருகையில் தெளிவாகின்றன.

ஞானஸ்நானத்தைத் திருமணத்துடன் ஒப்பிடலாம். திருமணம் முடிக்க வேண்டுமென்றால், ஒருவர் நாட்டின் சட்டத்தினால் கேட்கப்படுவது என்ன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். திருமண வாழ்வில் சில ஆசீர்வாதங்களும் பயன்களும் புரிந்து கொள்ளப்படலாம், ஆனால் எல்லாவற்றையும் புரிந்து கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. திருமண வைபவம் நடந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு (கூட) கூடுதலான ஆசீர்வாதங்கள் கண்டறியப்படலாம்.

இதே விஷயம் ஞானஸ்நானத்திற்கும் உண்மையானதாக உள்ளது: நமது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு அவசியமானது என்ன என்பதை நாம் விசுவாசித்து புரிந்து கொள்ள வேண்டும். இரட்சிக்கப்பட்டவர்கள் மகிழ்வுடன் அனுபவிக்கக் கூடிய பல ஆசீர்வாதங்களைப் பற்றி நாம் அறிந்துள்ள காரணத்தினால் நாம் ஞானஸ்நானம் பெற விரும்பலாம், ஆனால் கிறிஸ்தவருக்கு கிடைக்கும் சகல ஆசீர்வாதங்களையும் நாம் ஞானஸ்நானம் பெறுவதற்கு அறிய வேண்டும் என்ற அவசியம் இல்லை. (இந்த வெளியீட்டில் தொடங்குகின்ற “அறிவு, விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம் பெறுவதில் தீர்மானம்” என்ற பாடத்தைக் காணவும்.)

அப். 2:38ல் *eis* (“க்குள்” என்ற நேரடி அர்த்தம் தரும் கிரேக்க வார்த்தை) என்பது “... என்று” (“for”) என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதே வார்த்தையானது அப். 19:5ல் “... ஆலே” (“in”) என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. பாவமன்னிப்புக்“கென்று” (கிரேக்கம்: *eis*) ஞானஸ்நானம் பெறுவதில் நாம் “மன்னிப்பு” என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அது போலவே நாம் யாருடைய பெயருக்‘‘குள்ளாக’’ (கிரேக்கம்: *eis*) ஞானஸ்நானம் பெறுகின்றோம் என்பதையும் நாம் புரிந்து கொள்ள

GTG LIBRARY- BANGALORE

வேண்டும். இயேசுவின் பெயரைத் தவிர வேறு ஏதாவது பெயருக்குள்ளாக நாம் ஞானஸ்நானம் பெறுவதாக விசுவாசித்தால்/நம்பினால் நமது ஞானஸ்நானம் செல்லத்தக்கதல்ல - ஏனெனில் வேறு எந்தப் பெயரும் இரட்சிப்பைக் கொண்டு வர முடியாது (அப். 4:12). நாம் எந்தப் பெயருக்குள் ஞானஸ்நானம் பெறுகிறோம் என்பதைப் புரிந்து கொள்ளுதல் மற்றும் அதை ஏற்றுக் கொள்ளுதல் ஆகியவற்றை *eis* என்ற வார்த்தையின் பயன்பாடு மறைவாய் உணர்த்துவது போலவே, நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது பாவமன்னிப்புக் கிடைக்கின்றது என்பதையும் இது மறைவாக உணர்த்துகின்றது. மன்னிப்பு என்பதைத் தவிர வேறு எந்தக் காரணத்திற்காகவும் பெறுகின்ற ஞானஸ்நானம் என்பது, இயேசுவின் பெயரைத் தவிர வேறு எப்பெயரினாலும் பெற்றுக் கொள்ளும் ஞானஸ்நானத்தைப் போலவே செல்லத்தகாததாக இருக்கும்.

குறிப்பு

[1]ரோமர் 10:9ல், மூல வசனத்தில் "அறிக்கையிடுதல்" மற்றும் "விசுவாசித்தல்" என்பவை ஒரு தரம் வருகின்ற நிபந்தனை வினைச் சொற்களாக (aorist subjunctive) உள்ளன. Subjunctive என்றால் இவைகள் நிபந்தனைக்குட்பட்டவை என்று அர்த்தப்படுகின்றது; aorist என்றால் இவைகள் தொடர் செயல்கள் அல்ல ஆனால் ஒரு தரம் மட்டும் நிகழும் செயல்கள் என்று அர்த்தப்படுகின்றது. இயேசுவைப் பற்றி மற்றவர்களிடம் அறிக்கை செய்வதைக் கிறிஸ்தவரான பிறகு ஒருவர் செய்யும் தொடர் செயல் என்ற வகையில் பவுல் அறிக்கையிடுதல் பற்றி எழுதவில்லை, ஆனால் கிறிஸ்தவராகும் பொழுது செய்கின்ற அறிக்கையைப் பற்றியே அவர் இவ்விடத்தில் எழுதினார். இது கிறிஸ்தவர்கள் தொடர்ந்து செய்ய வேண்டிய அறிக்கையாய் இருக்குமென்றால், நிகழ் கால வினைச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கும். கிறிஸ்தவர்கள் தினந்தோறும் இயேசுவை அறிக்கையிட வேண்டும், ஆனால் அது அவர்கள் இரட்சிப்படைவதற்காக அல்ல.

GTG LIBRARY- BANGALORE

ஞானஸ்நானமும் இரட்சிப்பும்

மாற்கு 16:16 மற்றும் 1 பேதுரு 3:21 ஆகியவை ஞானஸ்நானத்திற்கும் இரட்சிப்புக்கும் இடையே உள்ள தொடர்பைத் தெளிவாகக் காட்டுகின்ற இரு வசனப் பகுதிகள் ஆகும். இந்தத் தொடர்பை நாம் அதிகம் முழுமை யாகப் புரிந்து கொள்வதற்கு இந்த வசனப்பகுதிகளை கவனத்துடன் கண்ணோக்குவோம்.

மாற்கு 16:16ல் இரட்சிப்புடன் ஞானஸ்நானம் எவ்வாறு இணைக்கப்பட்டிருக்கின்றது?

இயேசு ஞானஸ்நானத்தை இரட்சிப்புடன் - இரட்சிப்பை உண்டாக்குகின்ற வழிமுறையாக இன்றி, இரட்சிப்பைப் பெறுவதற்கான நிபந்தனையாக - இணைத்தார். NASBயில் மாற்கு 16:16 சரியாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது: "விசுவாசித்தவன் மற்றும் ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான்."

மாற்கு 16:16ன் அதிகாரத் தன்மை

இவ்வசனமானது பழங்காலக் கைப்பிரதிகள் சிலவற்றில் உள்ளடங்கி யிராததும், மாற்கு புத்தகத்தின் நீண்ட முடிவுப் பகுதியின் (மாற். 16:9-20) பாகமாக உள்ளதுமான காரணத்தினால், இதன் அதிகாரத் தன்மை பற்றிச் சிலர் கேள்வியெழுப்புகின்றனர். இப்பகுதியானது, நான்காம் நூற்றாண்டின் மிகப் பழமையான முழுக் கைப்பிரதிகளான Vaticanus (Codex B) மற்றும் Sinaiticus (Codex Aleph) என்ற புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களில் இல்லை. ஆனாலும், Vaticanus என்ற நூலில் *Kata Markon* ("மாற்குவின்படி") என்ற பகுதியில் 8ம் வசனத்தைத் தொடர்ந்து, ஒரு கல்வியாளர், "அடுத்த பத்தி வெறுமையாய் விடப்பட்டுள்ளது, இது Bயைப் பிரதியெடுத்தவர் தாம் பிரதி எடுத்த கையெழுத்துப் பிரதியில் காணப்படாத ஒரு முடிவுப் பகுதி உள்ளது என்பதை அறிந்துள்ளார் என்றுதான் கருத்துத் தருகின்றது …"[1] என்று வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த நான்காம் நூற்றாண்டுக் கையெழுத்துப் பிரதிகளுக்கு முன்பு இந்த

GTG LIBRARY- BANGALORE

நீண்ட முடிவு அறியப்பட்டிருந்தது. இம்முடிவின் பழம் தன்மை பற்றிக் கேள்வியெழுப்பப்பட முடியாது. "([KJV]யில் அச்சிடப்பட்டுள்ள) இந்த 'நீண்ட முடிவு' Tatian (ca. 170) அறிந்த ஒன்று என்பதும் பெரும் எண்ணிக்கையில் [ஆன கைப்பிரதிகளில்] உள்ளது என்பதும் உறுதி."[2]

இது இரேனியுஸ் (கி.பி. 130-200) அவர்களால் மேற்கோள் காட்டப் பட்டுள்ளது; Diatessaron, Codices Alexandrinus, Ephraemi மற்றும் Bezae என்ற ஐந்தாம் நூற்றாண்டுக் கைப்பிரதிகள் ஆகியவற்றில் உள்ளது. மற்றும் இரண்டாம் நூற்றாண்டின் முடிவில் எழுதப்பட்டதாக நினைக்கப்படும், நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த மிகப் பழைய சீரியாவின் பதிப்பொன்றிலும் இது உள்ளது. ஜஸ்ட்டின் மார்டிர் (கி.பி. 100-167) தமது Apology என்ற நூலில் (1.45) இப்பகுதியிலிருந்து மேற்கோள் காட்டினார் என்று நினைக்கின்றனர். நீண்ட முடிவிற்கான மற்ற தொடக்க கால மறைவான குறிப்புகள் அல்லது இதிலிருந்து மேற்கோள்கள் ஆகியவை Hippolytus (170?-235), Aphraates ஆகியோரின் எழுத்துக்களிலும், நிக்கொதேமுவின் சுவிசேஷத்திலும், அம்புரோஸ் (337-397), எபிபெனியஸ், கிறிஸ்ஸோஸ்தோம் (345-407), மற்றும் அகுஸ்தீன் (354-430) ஆகியோரின் எழுத்துக்களிலும் உள்ளன.

இதற்கு மறுபுறத்தில், சபை வரலாற்றாளரான இசுபியஸ் (கி.பி. 264-340) அவர்கள், பல கையெழுத்துப் பிரதிகளை ஆய்வு செய்து அவைகளில் பலவற்றில் இந்த நீண்ட முடிவு அடங்கியிருக்கவில்லை என்று உண்மையை எழுதினார்.[3] ஓரிகன் (185-254), அலக்சந்திரியாவின் கிளெமென்ட் (?-215), தெர்த்துல்லியன் (160-220), மற்றும் பிறரும் கூட இதைப் பற்றி அறியாதவர்களாகவே காண்பிப்பதாகக் கூறப்படுகின்றது; இருப்பினும், இவர்கள் இதை மேற்கோள் காண்பிக்கவில்லை என்பது இவர்கள் இதை இருந்ததாக உணரவில்லை என்பதற்கோ அல்லது இதை அவர்கள் மாற்கு சுவிசேஷத்தின் முடிவாகக் கருதவில்லை என்பதற்கோ ஆதாரமாய் இருப்பதில்லை.

மாற்குவின் எழுத்தாக்கம் பற்றிய மறுப்புக்கள் உட்பட - இந்தப் பணியின் அளவுக்கு அதிகமானதும், பலத்த ஆதாரமற்றதுமான - மற்ற குறிப்புகளும் உள்ளன. மாற்கு 16:9-20 பகுதியில் உள்ள வசனங்கள் "சொல்லாக்கம், பாணி மற்றும் இறையியல் பொருளடக்கம் ஆகியவற்றில் மாற்கு சுவிசேஷத்தின் மற்ற பகுதிகளைப் போலின்றி வித்தியாசப்பட்ட தன்மையைக் காட்சிப்படுத்துவதால்"[4] இப்பகுதியானது சுவிசேஷ விபரத்தில் உள்ளடக்கப்படக் கூடாது என்று சிலர் நம்புகின்றனர்.

இவ்வசனங்களின் அதிகாரத் தன்மை பற்றிய விவாதம் தொடர்ந்து நடைபெறுகின்றது மற்றும் இது ஒருக்காலும் முடிவு பெறாமலும் போகலாம். இவைகள் (இப்பகுதியின் வசனங்கள்) வேதாகமத்தின் பிற போதனைக்கு முரண்படாது உள்ளதால், இவை கிறிஸ்தவத்தின் தொடக்க நாட்களில் இருந்தே அறியப்பட்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டும் உள்ளதால், மற்றும் இவை மாற்கு சுவிசேஷத்தின் மூல முடிவுரையாக இருக்கச் சாத்தியம் உள்ளதால், வேதத்தின் மற்ற வசனங்களுடன் இவைகளும் படிக்கப்பட்டு மதிக்கப்பட வேண்டும்.

GTG LIBRARY- BANGALORE

மாற்கு 16:16ஐப் புரிந்து கொள்ளுதல்

மாற்கு 16:16ல் "விசுவாசித்து" மற்றும் "ஞானஸ்நானம் பெற்று" ஆகிய இரண்டுமே ஒருமுறை மட்டும் நடைபெறும் வினை எச்சங்களாக உள்ளன. கிரேக்க மொழியில் ஒருமுறை மட்டுமே நடைபெறும் வினையெச்சங்கள் எப்பொழுதுமே பிரதான வினையின் செயல்பாட்டிற்கு முன்னதாகவே இடம் பெறுகின்றன, இது பிரதான வினையான "இரட்சிக்கப்படுதல்" என்பதற்கு முன்னதாகவே "விசுவாசித்தல்" மற்றும் "ஞானஸ்நானம் பெறுதல்" ஆகிய இரண்டும் நடைபெற்றிருக்க வேண்டும் என்பதை அர்த்தப்படுத்துகின்றது.

The New Greek-English Interlinear New Testament என்ற நூலில் interlinear பகுதியில் கூட, இவ்வசனத்தை மொழிபெயர்ப்பதினால் கிரேக்க வினைச் சொற்களின் வலிவு வெளிக் கொண்டு வரப்படுகின்றது: "விசுவாசம் கொண்டவராகி ஞானஸ்நானம் பெறுகின்றவர் இரட்சிக்கப்படுவார்."[5] இவ்வசனப் பகுதியில், இயேசு, "விசுவாசித்தல்" மற்றும் "ஞானஸ்நானம் பெறுதல்" ஆகியவற்றிற்குப் பிறகுதான் "இரட்சிப்பை" வைத்தார். இயேசு, "தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணரா(னார்)" (எபி. 5:9). நாம் இரட்சிக்கப்பட வேண்டும் என்றால், நாம் சுவிசேஷத்தை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற வேண்டும்.

1 பேதுரு 3:21ல் இரட்சிப்புடன் ஞானஸ்நானம் எவ்வாறு இணைக்கப்பட்டிருக்கின்றது?

மாற்கு 16:16ல் பதிவு செய்துள்ள விபரங்களை இயேசு கூறியதைக் கேட்ட பேதுரு, அதே சத்தியத்தைப் போதித்தார். "அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப் பேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்" (1 பேது. 3:20) என்று பேசிய பொழுது பேதுரு பின்வரும் கூற்றையும் எடுத்துரைத்தார்: "அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது - மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து - இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது" (1 பேது. 3:21).

இவ்வசனமானது இரட்சிப்புக்கு ஞானஸ்நானத்தை ஒரு நிபந்தனை என்ற வகையில் போதிப்பதில்லை என்பதற்குப் பல்வேறு காரணங்களைச் சிலர் உரிமைகோரியுள்ளனர். (1) நோவாவின் குடும்பம் "தண்ணீர் மூலமாக" மீட்கப்படுவதற்குப் பதில், "தண்ணீரில் இருந்து" மீட்கப்பட்டது என்று அவர்கள் கூறுகின்றனர். (2) இவ்வசனத்தில் ஞானஸ்நானம் என்பது ஒரு "ஒப்பனையாக" எடுத்துரைக்கப்பட்டது என்று அவர்கள் கூறுகின்றனர். (3) "மாம்ச அழுக்கை நீக்குதல்" என்றால் பாவங்களைக் கழுவுதல் என்று அர்த்தப்படும் என்பதாக இவ்வசனம் போதிக்கின்றது என்று அவர்கள் நம்புகின்றனர்.

கருத்து (1)ல் உள்ள பிரச்சனை என்னவென்றால், பேழையில் அவர்கள் "தண்ணீரிலிருந்து" அல்ல ஆனால் "தண்ணீரினாலேயே" காக்கப்பட்டனர்

GTG LIBRARY- BANGALORE

(கிரேக்கம்: dia) என்று எடுத்துரைக்கப்படுகின்றது என்பதாகும். தேவன் தண்ணீரை அனுப்பியதால்தான் பேழை அவர்களைக் காத்தது. தேவன் நெருப்பை அனுப்பியிருந்தால், அவர்கள் பேழையில் காக்கப்பட்டிருக்க மாட்டார்கள். ஆனால் இறந்து போகும்படி எரியூட்டப்பட்டிருப்பார்கள். பேழைக்குள் அவர்கள் தண்ணீர் "மூலமாகவே" காக்கப்பட்டார்கள். இது இஸ்ரவேலர்களை எகிப்தியப் படையிடம் இருந்து காத்ததும், அதே வேளையில் எகிப்தியப் படைகளை அழித்ததுமான தண்ணீருக்கு ஒப்பிடப்பட வேண்டியதாக உள்ளது (யாத். 14:13, 27-30).

கருத்து (2)ல் உள்ள பிரச்சனை என்னவென்றால், KJV*யில்* "figure" *(தமிழில் "ஒப்பனை") என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள antitupon என்ற கிரேக்க வார்த்தை "உண்மை நிலை" என்ற அர்த்தம் கொண்டதாக உள்ளது.* (type - antitype: *இதில்* type *என்பது மாதிரி என்றும் அதற்கு எதிர்ப்பதமான* antitype *என்பது உண்மை நிலை என்றும் அர்த்தம் தருகின்றது.) நோவாவும் அவர் குடும்பமும் பேழைக்குள் இரட்சிக்கப்பட்டது நமது இரட்சிப்புக்கு ஒரு மாதிரி (ஒரு உருவகம்) ஆகும். நமது இரட்சிப்போ உண்மை நிலையாகும். பேழையில் உண்டான இரட்சிப்பு ஒரு மாதிரியாக இருக்க, ஞானஸ்நானம் என்பது அதன் எதிர்நிலையில் ஒரு உண்மை நிலையாக உள்ளது. இப்பொழுது ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்கின்றது ஏனென்றால் அதன் மூலமாகவே நாம் பாவத்திலிருந்து பாதுகாப்பான நிலைக்குக் கடந்து வருகின்றோம், இது பேழையில் இருந்தவர்கள் மரணப் பேரழிவில் இருந்து பாதுகாப்பிற்குக் கடந்து வந்ததைப் போன்றதாக உள்ளது.*

கருத்து (3)ல் உள்ள பிரச்சனை என்னவென்றால், ஞானஸ்நானம் இப்பொழுது நம்மை இரட்சிக்கிறது ஆனால் மாம்சத்தின் பாவத்தை அது நீக்குவதில்லை என்று கூறுவது போன்ற கூற்றுக்கள், பேதுரு தம் கூற்றுக்கு எதிராகத் தாமே பேசினார் என்று விளக்கம் அளிப்பதாக இருக்கும் என்பதாகும். பேதுரு ஞானஸ்நானத்தை நமது இரட்சிப்புடன் இணைத்தார் ஆனால் உண்மையைத் தெளிவு படுத்த விரும்பினார் என்பதே இந்தக் கூற்றைப் புரிந்து கொள்ள அதிகம் இயல்பான வழியாக உள்ளது. சரீரத்தின் புறம்பாகச் சுத்திகரித்தல் என்பதல்ல ஆனால் பாவமன்னிப்பில் காணப்படும் நல்மனச்சாட்சிக்கான நமது வேண்டுகோளாகத் தேவனிடத்தில் சமர்ப் பிக்கப்படுவதே ஞானஸ்நானத்தின் நோக்கம் என்று அவர் கூறினார்.

குறிப்புகள்

[1]Robert G. Bratcher and Eugene A. Nida, *A Translator's Handbook on the Gospel of Mark* (New York: United Bible Societies, 1961), 517. [2]Ralph P. Martin, *The International Standard Bible Encyclopedia,* ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1986), 236. [3]*Queastiones ad Marinum 1.* [4]Kenneth Baker, ed., notes on Mark, The NIV Study Bible (Grand Rapids, Mich.: Zondervan, 1995), 1528. [5]J. D. Douglas, ed., *The New Greek-English Interlinear New Testament,* trans. Robert K. Brown and Philip W. Comfort (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1993), 192.

GTG LIBRARY- BANGALORE

விசுவாசமும், நீதிமானாக்கப்படுதல் மற்றும் நித்திய ஜீவன் ஆகியவற்றின் ஆசீர்வாதங்களும்

நீதிமானாக்கப்படுதல் (தேவனுடைய பார்வையில் சரியானவர் களாக்கப்படுதல்) மற்றும் நித்திய ஜீவன் ஆகியவை ஞானஸ்நானத்திற்கு அல்ல ஆனால், விசுவாசத்திற்கே உரித்தாக்கப்பட்டுள்ளன - இது சரியானதே. இதற்கு நேர் மாறாக, இரட்சிப்பு மற்றும் பாவமன்னிப்பு ஆகியவை ஞானஸ்நானம் மற்றும் விசுவாசத்துடன் இணைக்கப் பட்டுள்ளன - இதுவும் சரியே. நீதிமானாக்கப்படுதலும், நித்திய ஜீவனும் விசுவாசத்தில் தொடர்ந்து நிலைத்திருப்பதைச் சார்ந்துள்ளன. பவுல் கொலோசெயருக்கு, "உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக் கினார். நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையை விட்டு அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப் பீர்களானால் அப்படியாகும்" (கொலோ. 1:21ஆ, 22) என்றெழுதினார். ஞானஸ்நானம் என்பது ஒருமுறை நடைபெறும் நிகழ்ச்சியாக உள்ளது, ஆனால் விசுவாசம் என்பது நித்திய ஜீவனை அடைவதற்காக ஒருவர் தொடர்ந்து கொண்டிருக்க வேண்டியதாக உள்ளது.

விசுவாசத்தின் மூலமாகவே நித்திய ஜீவன் வருகிறதென்று போதிக்கும் வேத வசனப் பகுதிகள் ஒருமுறை விசுவாசம் என்று போதிப்பதில்லை. "விசுவாசித்தல்" (யோவா. 3:16, 36) என்பதற்கு கிரேக்க மொழியில் உள்ள சொல்லானது நிகழ்கால வினையெச்சமாக உள்ளது, இது ஒரு குறிப்பிட்ட வேளையில் நடைபெறும் ஒரு செயலையல்ல ஆனால் தொடர்ந்து நிகழ்கின்ற ஒரு செயலையே குறிப்பிடுகின்றது.[1]

ஒரு குறிப்பிட்ட கால வேளையில் விசுவாசிப்பவர்களுக்கல்ல, ஆனால் இயேசுவில் தொடர்ந்து விசுவாசம் கொண்டுள்ளவர்களுக்கே நித்திய ஜீவன் உண்டு என்று யோவான் 3:16 போதிக்கின்றது. நீதிமானாக்கப்படுதலுக்கும் இதுவே உண்மையாக உள்ளது: இது தொடர்ந்து கொண்டுள்ள விசுவாசத் தினால் விளைகின்றது. இதற்கு மறுபுறம், இரட்சிப்பு மற்றும் பாவமன்னிப் பைக் கொண்டுள்ள புதிய பிறப்பு என்பது ஒருமுறை நடக்கும் நிகழ்வாக உள்ளது. இது இயேசுவின் மன்னிக்கும் வல்லமையுள்ள இரத்தத்தின் மீது ஒருவர் கொண்டுள்ள விசுவாசமானது அவரை ஞானஸ்நானம் பெறத்

GTG LIBRARY- BANGALORE

தூண்டும் பொழுது நடைபெறுகின்றது (யோவா. 3:5; ரோமர் 3:25; கொலோ. 2:12, 13). ஞானஸ்நானம் என்பது புதிய ஜீவனைத் தொடங்கி வைக்கின்ற புதுப்பிறப்பாக உள்ளது (ரோமர் 6:4), நாம் நித்திய ஜீவனைப் பெறுவதற்கு விசுவாசத்தினால் இப்புதுப்பிறப்பில் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும்.

குறிப்பு

[1]நிகழ்கால வினையெச்சம் என்பது "தொடர்ந்து நடைபெறும் செயலை" குறிக்கின்றது (C. F. D. Moule, *An Idiom Book of New Testament Greek,* 2d ed. [New York: Cambridge University Press, 1959], 99), மற்றும் இது நிகழ்கால முடிவுறாத வினைச் சொல்லைப் போலவே "காலமற்றதாகவும் நீண்டு நிலைபெறுவதாகவும்" உள்ளது (A. T. Robertson, *A Grammar of the Greek New Testament,* 4th ed. [Nashville: Broadman Press, 1923], 891).

GTG LIBRARY- BANGALORE

விசுவாசமும் தேவனுடைய கிருபையின் ஆசீர்வாதமும்

தேவனுடைய இரட்சிக்கும் கிருபைக்குள் நாம் சென்று சேரக் கூடிய வழியானது விசுவாசத்தின் மூலமாக நமக்கு வருகின்றது: "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அவர் மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவ மகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மை பாராட்டு கிறோம்" (ரோமர் *5:1, 2*). கிருபைக்குள் விசுவாசத்தின் அடிப்படையில் அமைந்த நிபந்தனையின் பேரிலேயே பிரவேசிக்க முடியும்; மற்றும் விசுவாசமானது செயல் மூலமாகவே நிறைவடைகின்றது (யாக். *2:22*).

கிருபையானது கிறிஸ்துவுக்குள் இருக்கின்றது (*2* தீமோ. *2:1*), நாம் ஞானஸ்நானத்தின் மூலமாக அவருக்குள் பிரவேசிக்கின்றோம் (ரோமர் *6:3*). நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது விசுவாசத்தின் மூலமாகக் கிருபையினுள் பிரவேசிக்கின்றோம், மற்றும் - கிருபை இருக்கும் இடமான - கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கின்றோம். ஞானஸ்நானம் பெறும் வேளை யானது நாம் கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கும் வேளையாக இருப்பதால், அவ்வேளையே நமது இரட்சிப்பைக் கொண்டு வருகின்ற தேவகிருபைக் குள் நாம் பிரவேசிக்கும் வேளையாகவும் இருக்க வேண்டும் (எபே. *2:8*).

GTG LIBRARY- BANGALORE

சுவிசேஷமும் ஞானஸ்நானமும்

நாம் சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசித்தாலன்றி, நமது ஞானஸ்நானம் மதிப்பற்றதாக உள்ளது. இதனால்தான் பவுல், ''ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை; சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார் ...'' (1 கொரி. 1:17) என்று எழுதினார். ஞானஸ்நானம் முக்கியமற்றது என்று பவுல் கூறவில்லை, ஆனால் அதற்கு மாறாக, அவர் சுவிசேஷத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இவ்வசனத்தில் உள்ள "இல்லை ... ஆனால்" என்ற கிரேக்க மரபுச் சொல் வழக்கானது பவுல் ஞானஸ்நானம் கொடுப்பவரல்ல என்று அர்த்தப் படுத்தவில்லை, ஏனெனில் அவர் ஞானஸ்நானம் கொடுத்தார் (1 கொரி. 1:14-16); மாறாக இது, சுவிசேஷமே அவரது வலியுறுத்தமாய் இருந்தது என்றுதான் அர்த்தப்படுத்திற்று.[1]

ஞானஸ்நானம் என்பது சுவிசேஷத்தின் ஒரு பாகமாய் இருப்பினும், முழுமையான சுவிசேஷமின்றி அது இரட்சிக்க முடியாது என்று பவுல் போதித்தார்; ஏனெனில் இரட்சிக்கும் வல்லமையானது ஞானஸ்நானத்தில் அல்ல, சுவிசேஷத்திலேயே உள்ளது (ரோமர் 1:16; எபே. 1:13). விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவை நம்மை இரட்சிப்பவையல்ல. இயேசுவின் இரத்தம் மட்டுமே இரட்சிக்கின்றது; இருப்பினும், நமது விசுவாசம் நம்மை மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெறும்படி வழி நடத்தாத வரையிலும் அவருடைய இரத்தம் நம்மை இரட்சிக்காது. நாம் தேவனுடைய வசனம் பிரசங்கிக்கப் படுவதைக் கேட்பதினால் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதற்கு வழிநடத்தப் பட வேண்டும்.

இரட்சிப்பு என்றால் ''என்ன?'' மற்றும் அது ''எப்பொழுது?'' என்பவைகளுக்கிடையில் வித்தியாசம் உள்ளது. இயேசுவின் மரணத்தில் அவர் சிந்திய இரத்தமே நம்மை இரட்சிக்கின்றது. "என் பாவத்தைக் கழுவுவது எது?" என்று கேள்வி கேட்டுப் பிறகு "இயேசுவின் இரத்தம் தானே'' என்று பதில் அளிக்கும் பழம்பாடல் அவ்வாறு கூறுவதில் சரியானதாகவே உள்ளது. நாம் இரட்சிப்பை உண்டாக்க ஒன்றும் செய்ய முடியாது (எபே. 2:8, 9); அதை இயேசுவின் இரத்தம் மட்டுமே செய்ய முடியும் (மத். 26:28; 1 பேது. 1:18, 19).

GTG LIBRARY- BANGALORE

இயேசுவின் இரத்தம் நமது பாவங்களை எப்பொழுது கழுவுகின்றது? நாம் அவருக்குக் கீழ்ப்படியும் பொழுது - நாம் விசுவாசித்து, மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெறும் பொழுது. இயேசு நமது பாவக் கடனை செலுத்தினார், ஆனால் அவருடைய மரணத்தின் மூலமாக அவர் அளித்துள்ள இரட்சிப்பைப் பெறுவதற்கு நாம் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் (எபி. 5:9). ஆகையால் இரட்சிப்பில் உள்ள "என்ன?" என்பது இயேசுவின் இரத்தம் என்பதாகவும், "எப்பொழுது?" என்பது நாம் அவருக்குக் கீழ்ப்படிகின்றபொழுது என்பதாகவும் உள்ளன.

தக்க கண்ணோக்கில் காண்கையில், விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகிய எல்லாமே சுவிசேஷத்திற்கு நாம் அளிக்கும் பதில்செயலின் பாகமாகவே உள்ளன. இயேசு நமது பாவங்களைத் தாமே சுமந்தார், பாவக்கடனைச் செலுத்தினார் என்ற சத்தியமாக உள்ள சுவிசேஷமே அவரது இரத்தத்தின் மூலமாக நமது பாவங்களை மன்னிக்க முடியும், மற்றும் அவரே இந்த அண்டத்தை ஆளுபவராக நமக்காகப் பரிந்து பேசுபவராய் எந்நாளும் வாழ்கின்றார். நாம் நமக்கு மரித்தவர்களாய் நமது கர்த்தரும் ஆண்டவருமாகிய அவருக்கு நமது வாழ்வை ஒப்புக் கொடுத்தால் நமக்காக அவர் பெற்றுள்ள வெற்றியானது நமது வெற்றியாகும்.

குறிப்பு

[1]இரண்டாவது கருத்தைக் காட்டிலும் முதலாம் கருத்தின் மீது அதிக வலியுறுத்தம் தரப்படுவதில்லை என்ற அர்த்தம் தரும் இதே வகையான கிரேக்க வார்த்தைக் கட்டமைப்பானது யோவா. 6:27; 12:47; 1 தீமோ. 5:23; 1 பேது. 3:3, 4, மற்றும் பல வசனப் பகுதிகளில் காணப்படுகின்றன.

GTG LIBRARY- BANGALORE

"தேவனுடைய புத்திரர்கள்" [கலா. 3:26]

"தேவனுடைய புத்திரர்கள்" என்ற சொற்றொடர் (1) தோற்றம், (2) உறவுமுறை, மற்றும் (3) இயல்பு ஆகியவற்றின் கருத்துக்களை உள்ளடக்குகின்றது.

முதலாவதாக, நமது ஆவிக்குரிய தொடக்கத்தினால் நாம் தேவனுடைய புத்திரர்களாய் இருக்கின்றோம். ஆவிக்குரிய வகையில் (நாம்) தேவனால் பிறத்தல் என்பது தான் நம்மை அவருடைய புத்திரர்களாக்குகின்றது. பெற்றோர்களால் பிறந்தவர்கள் அவர்களின் பிள்ளைகளாய் இருப்பது போலவே, தேவனால் பிறந்தவர்கள், அவருடைய பிள்ளைகளாய் இருக்கின்றனர். இயேசுவால் குறிப்பிடப்பட்ட புதிய பிறப்பை நாம் அனு பவித்திருந்தால் (யோவா. 3:3-5; 1 பேது. 1:3, 23ஐயும் காணவும்), நாம் தேவனால் பிறந்துள்ளதால் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கின்றோம் (யோவா. 1:13).

இரண்டாவதாக, நாம் ஆவிக்குரிய வகையில் தேவனுடன் உறவுள்ள வர்களாய் இருப்பதால், நாம் தேவனுடைய புத்திரர்களாய் இருக்கின்றோம். பேதுரு மாற்குவைத் தம் மகன் என்று அழைக்கும் பொழுது (1 பேது. 5:13) "குமாரன்" என்ற வார்த்தையை இந்த அர்த்தத்தில் தான் பயன்படுத்தினார், இவ்வார்த்தை, பேதுருவுடன் மாற்கு ஆவிக்குரிய வகையில் இளைய மகன் என்ற அர்த்தத்தில் தொடர்பு படுத்தப்பட்டார் என்று அர்த்தப்படுகின்றது.

மூன்றாவது, நாம் ஆவிக்குரிய வகையில் மறுபடி பிறந்து, நம்மைப் பிறப்பித்தவராகிய அவருடைய சாயலை மேற்கொள்வதால் நாம் தேவனு டைய புத்திரர்களாய் இருக்கின்றோம். 1 யோவான் நிருபத்தில், நாம் தேவனால் பிறந்திருந்தால் பாவத்தைச் செயல்படுத்துவதில்லை (3:9; 5:18) என்று நாம் கற்கின்றோம். நாம் தேவன் மீது அன்புகூர்ந்து, அவரை அறிந்துள்ளோம் (4:7), இயேசுவில் விசுவாசம் கொள்கின்றோம் (5:1), உலகத்தை வெல்லுகிறோம் (5:4) மற்றும் பொல்லாங்கு எதுவும் நம்மைத் தொடாதபடிக்குக் காத்துக் கொள்கின்றோம் (5:18).

"புத்திரர்கள்" அல்லது "பிள்ளைகள்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள *huioi* என்ற வார்த்தையில் நாம் யாருடைய புத்திரர்களாய் அல்லது பிள்ளைகளாய் இருக்கின்றோமோ, அவருடைய இயல்பைக் கொண்டிருப்போம் என்ற கருத்து அடங்கியிருக்க முடியும். "மகன்" என்ற

GTG LIBRARY- BANGALORE

வார்த்தை பின்வரும் வசனப் பகுதிகளில் இவ்வகையான கருத்திலேயே பயன்படுத்தப்படுகின்றது:

"நரகத்தின் மகன்" (மத். 23:15).
"இடி முழக்க மக்கள்" (மாற். 3:17).
"சமாதான பாத்திரன் [கிரேக்.: huios, "மகன்" என்ற அர்த்தம் தரும்]" (லூக். 10:6).
"இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள்" (லூக். 16:8; 20:34).
"ஒளியின் பிள்ளைகள்" (லூக். 16:8; யோவா. 12:36; 1 தெச. 5:5).
"உயிர்த்தெழுதலின் பிள்ளைகள்" (லூக். 20:36).
"கேட்டின் மகன்" (யோவா. 17:12).
"ஆறுதலின் மகன்" (அப். 4:36).
"பிசாசின் மகன்" (அப். 13:10).
"கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்" (எபே. 2:2; 5:6).
"பகலின் பிள்ளைகள்" (1 தெச. 5:5).
"கேட்டின்/அழிவின் மகன்" (2 தெச. 2:3).

இவை ஒவ்வொன்றிலும் "....ன் மகன் [கள்]" என்பது அந்த இயல்பைப் பெற்றிருத்தலையே அர்த்தப்படுத்துகின்றது. நாம் தேவனால் பிறந்துள்ளதால், அவரில் நமது ஆவிக்குரிய தொடக்கத்தைக் கொண்டுள்ளதால், அவருடன் ஆவிக்குரிய வகையில் உறவுமுறைப்படுத்தப்பட்டுள்ளதால், மற்றும் அவருடைய இயல்பின் குடும்பப் பண்புகளைக் கொண்டுள்ளதால் நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கின்றோம்.

GTG LIBRARY- BANGALORE

விசுவாசம் மற்றும் செயலின் மக்கள்

இயேசுவின் போதனை "விசுவாசம்" என்று அழைக்கப்படுகின்றது, ஏனெனில் அதைக் கேட்பவர்களிடத்தில் அது விசுவாசத்தை வேண்டுகின்றது. விசுவாசமே நமது செயல்பாடுகளுக்கு நம்மைத் தூண்டும் சக்தியாக உள்ளது. செயல்பாடுகளுக்கு நம்மைத் தூண்டும் நமது விசுவாசத்தின் காரணமாக நமது செயல்பாடுகளுக்குப் பலன் அளிக்கப்படுகின்றது. விசுவாசமற்ற செயல்பாடுகள் மதிப்பற்றவைகளாய் இருக்கின்றன (எபி. 11:6) மற்றும் செயலற்ற விசுவாசமும் மதிப்பற்றதாக உள்ளது (யாக். 2:24). செயல்களை விளைவிப்பதினால் தேவன் பலன் அளிக்கின்றதான அவருக்குப் பிரியமான விசுவாசம் பற்றிய தேவனின் விவரிப்பு எபிரெயர் 11ல் கொடுக்கப்படுகின்றது. பின்வருபவர்களின் விசுவாசமானது அவர்களைச் செயல்படத் தூண்டியதால் அவர்கள் தேவனுக்குப் பிரியமானவர்களானார்கள்:

ஆபேல் தம் பலியைச் செலுத்தினார் (வ. 4).

ஏனோக்கு தேவனுடன் சஞ்சரிக்கையில் (ஆதி. 5:24) எடுத்துக் கொள்ளப்பட்டார் (வ. 5).

நோவா பேழையைத் தயார் செய்தார் (வ. 7).

ஆபிரகாம் தேவன் கட்டளைப்படி கீழ்ப்படிந்து புறப்பட்டார் (வ. 8).

சாராள் கர்ப்பமானாள் (வ. 11).

ஆபிரகாம் ஈசாக்கைப் பலி செலுத்தினார் (வ. 17).

யோசேப்பு தம் எலும்புகளைக் குறித்துக் கட்டளை கொடுத்தார் (வ. 22).

மோசேயின் பெற்றோர் அவரை ஒளித்து வைத்தனர் (வ. 23).

மோசே தாம் வளர்ந்த பொழுது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்றழைக்கப்படுவதை மறுத்தார் (வ. 24).

மோசே எகிப்தை விட்டுப் புறப்பட்டுச் சென்றார் (வ. 27).

மோசே பஸ்காவைக் கடைப்பிடித்தார் (வ. 28).

இஸ்ரவேல் மக்கள் கடலினூடே அணிவகுத்துச் சென்றனர் (வ. 29).

இஸ்ரவேல் மக்கள் எரிகோவின் மதில்களைச் சுற்றி அணி வகுத்துச் சென்றனர் (வ. 30).

GTG LIBRARY- BANGALORE

இராகாப் ஒற்றர்களை மறைத்து வைத்தாள் (வ. 31).

கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்திற்கான இந்த எடுத்துக்காட்டுகள் யாவும், தேவனுடைய வசனத்தைச் சார்ந்து, கீழ்ப்படிதலுடன் செயல்பட நம்மைத் தூண்டுகின்ற விசுவாசத்தையே அவர் ஏற்றுக் கொள்கின்றார் என்பதற்கு ஆதாரமாக உள்ளன. தேவன் தாம் வாக்குத்தத்தம் செய்துள்ளபடி நமக்குப் பலன் அளிப்பார் என்று நாம் விசுவாசிப்பதால் நாம் கீழ்ப்படிகின்றோம். தேவன் நமக்குத் தருகின்ற ஆசீர்வாதங்கள் அவரது செயலின் மூலமாக நிறைவேற்றப்படுகின்றன; அவைகள், நமது விசுவாசத்தின் வெளிப்பாடாக அவர் கேட்டுக் கொள்கின்ற (நமது) செயல்களின் மூலம் சாதிக்கப் படுவதில்லை.

ஞானஸ்நானம் அவசியமற்றது என்று போதிக்கும் மக்கள் தங்கள் உபதேசத்திற்குப் பவுலின் எழுத்துக்களிலிருந்து “விசுவாசம் மட்டும்” என்ற உபதேசத்தை அடிப்படையாகக் கொள்கின்றனர். இருப்பினும், இது பவுலின் போதனையைப் புரிந்து கொள்வதில் குறைபாட்டைக் காண்பிக் கின்றது, மற்றும் இது, புதிய ஏற்பாட்டையும் இயேசுவின் வார்த்தை களையும் பவுலுக்கு நேர்மாறானவராக்குகின்றது. பிதாவின் சித்தத்தைச் ‘‘செய்கிறவர்களே’’ இராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள் என்று இயேசு போதித்தார் (மத். 7:21). அவர், தேவனுடைய வசனத்தைக் கேட்டு அதன்படி “நடப்பதால்” மட்டுமே மக்கள் ஆசீர்வதிக்கப்படுகின்றனர் என்று உரைத்தார் (லூக். 11:28). மற்றும், அவர் மக்களை, “நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்துக்காகவே கிரியை நடப்பியுங்கள்” (யோவா. 6:27) என்று உற்சாகப்படுத்தினார். யாக்கோபு, “மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறான்” (யாக். 2:24) என்று போதித்தார். “சத்தியத்திற்குக் கீழ்ப்படிதலின்” (1 பேது. 1:22) மூலமாக நமது ஆத்துமாக்கள் சுத்திகரிக்கப்படுவதாகப் பேதுரு போதித்தார். யோவான் “நாம் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்கிறவர்களானால் அவரை அறிந்திருக்கிறோம் என்பதை அதினால் அறிவோம்” என்றும், “நாம் அவரில் இருக்கிறதை அறிகிறோம்’’ (1 யோவா. 2:3-5; 3:24) என்று எழுதினார்.

“விசுவாசம் மட்டும்” என்ற கோட்பாடானது (பவுலினால் போதிக்கப் பட்டிருந்தால் அது) அவரையே முரண்பாடுள்ளவராக்குகின்றது, ஏனெனில் அவர், “சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்” (ரோமர் 2:7) என்று எழுதினார். மேலும் அவர், “... உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்தபடியினால் தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்” (ரோமர் 6:17, 18) என்றும், மற்றும் “... பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்” (பிலி. 2:12ஆ) என்றும் கூறினார். இயேசு, ‘‘தமக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும் நித்திய இரட்சிப்பை அடையக் காரணமானார்” என்று நாம் எபி. 5:9ல் வாசிக்கின்றோம்.

GTG LIBRARY- BANGALORE

ஞானஸ்நானம் என்பது தன்னிலேயே பாவத்தை நீக்குகின்ற செயல் அல்ல; மாறாக, அது இயேசுவின் செயலின் மீது கொண்டுள்ள விசுவாசத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. இந்த உண்மையானது, இது (ஞானஸ்நானம்) தேவனுடைய செயலின் மீது கொண்ட விசுவாசத்தினால் செயல்படத் தூண்டப்படும் பொழுது அந்த விசுவாசத்தின் பலனைப் பெறுகின்ற ஒரு பதில்செயலாக மட்டும் உள்ளதென்று அர்த்தப்படுகின்றது.

GTG LIBRARY- BANGALORE

தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் தண்ணீர்

வாழ்வுக்குத் தண்ணீர் இன்றியமையாததாக உள்ளது. நாம் அறிந்துள்ள படி, தண்ணீரின்றி இந்த உலகம் இருக்க முடியாது என்று அறிவியல் அறிஞர்கள் நம்புகின்றனர். தேவன் தமது நோக்கங்களை நிறைவேற்றத் தண்ணீரைப் பல நிகழ்ச்சிகளில் தேர்ந்தெடுத்துக் கொண்டார். தொடக்கத்தில் தேவன் எல்லாவற்றையும் படைத்த பொழுது, "ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கிற பூமி" (2 பேது. 3:5) என்பதாகவே கூறப்படுகிறது. தண்ணீரிலிருந்து உண்டாக்கப்பட்ட பிறகுதான் உயிர் வாழ்வு என்பது இப்பூமியில் சாத்தியமுள்ளதாக்கப்பட்டது. பூமியில் சகல விதமான சரீர வாழ்வையும் நீரானது நிலைநிறுத்திற்று (ஆதி. 2:6) மற்றும் அது அவற்றைத் தொடர்ந்து நிலைநிறுத்தி வருகின்றது.

நோவா தண்ணீரினால் காக்கப்பட்டார் (1 பேது. 3:20). நோவா பேழையைக் கட்டிய பிறகு, நோவாவையும் அவரது குடும்பத்தையும் பாதுகாப்பாய்ச் சுமந்து செல்லவும் அவர்களை அழிவில் இருந்து காக்கவும் தண்ணீர் அவசியமாயிற்று. அப்பொழுது தேவன் தண்ணீருக்குப் பதில் நெருப்பை அனுப்பியிருந்தால் அவர்கள் யாவரும் எரியூட்டப் பட்டிருப்பார்கள். தேவன் பெருவெள்ளத்தை அனுப்பிய பொழுது பேழையினுள் மனித வாழ்வைப் பாதுகாப்பதற்குத் தண்ணீர் அவசியமானதாக இருந்தது.

இஸ்ரவேலின் பிள்ளைகள் எகிப்தியரின் படைகளுக்குத் தப்பிச் சென்ற பொழுது, தண்ணீரினூடே பாதுகாப்பாகக் கடந்து சென்றனர். பார்வோனின் படையானது தண்ணீரால் அழிக்கப்பட்டது (யாத். 14:26-29). யாத். 14:30அ - வில் நாம், ''இவ்விதமாய்க் கர்த்தர் அந்நாளிலே இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து இரட்சித்தார்'' என்று வாசிக்கின்றோம். பின்னாட்களில் பவுல், "எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்" (1 கொரி. 10:2) என்று எழுதினார். இவ்வசனத்தைக் கொண்டு சிலர் ஞானஸ்நானம் என்பது தெளித்தலே என்று வாதிட்டுள்ளனர். இஸ்ரவேலர்கள் கடலைக் கடந்த பொழுது மேகம் அவர்கள் மீது தண்ணீரைத் தெளித்ததாக இவர்கள் கற்பனை செய்கின்றனர். இது உண்மையாயிருந்தால், இஸ்ரவேலர்கள் "வெட்டாந்தரையிலே" (யாத்.

GTG LIBRARY- BANGALORE

14:22) கடந்து சென்றிருக்க மாட்டார்கள். உண்மையில், தேவன் இஸ்ரவேலருக்கு அளித்திருந்த மேகமானது, தண்ணீர் மேகமாய் இல்லாமல், புகை மேகமாய் இருந்தது. அது, "பகலில் மேகத்தையும், புகையையும், இரவில் கொழுந்து விட்டு எரியும் அக்கினிப் பிரகாசத்தையும்" (ஏசா. 4:5) உடையதாயிருந்தது.

பிற்பாடு இஸ்ரவேலர்கள், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் பிரவேசிப்பதற்குத் தண்ணீரைக் கடந்து சென்றனர் (யோசுவா. 3:14-17). தண்ணீரைக் கடந்து சென்றதன் மூலம் மக்கள் தேவன் தங்களுக்கு வாக்குத்தத்தம் செய்திருந்த ஆசீர்வாதங்களைக் கண்டடைந்தனர்.

நாகமானுக்கும் அவரது தொழு நோய் குணமாகுதலுக்கும் இடையில் தண்ணீர் நின்றது (2 இரா. 5:1-14). இயேசுவிடம் வந்த பார்வையற்ற மனிதரைக் குணமாக்கத் தண்ணீர் பயன்படுத்தப்பட்டது (யோவா. 9:6, 7).

பரலோக வாழ்வின் நிலைப்பாடும் கூட தேவனுடைய அரியணையிலிருந்து ஓடிவரும் நீரின் நதியினாலேயே அடையாளப்படுத்தப்படுகின்றது (வெளி. 22:1). உயிர் வாழ்வு உட்பட தேவனுடைய ஆசீர்வாதங்கள் பலவும் தண்ணீரின் மூலமாகவே வருகின்றன. இயேசுவின் மூலம் இரட்சிப்பை நாடுகின்றவர்களுக்குத் தேவன் தண்ணீரைத் தேர்ந்தெடுத்தது என்பது தற்செயலானதல்ல (1 பேது. 3:21). ஒப்பீட்டுக் கருத்தின் அடிப்படையில் உடல் வாழ்வு என்பது இரத்தத்தைச் சார்ந்துள்ளது (ஆதி. 9:4) மற்றும் ஆவிக்குரிய வாழ்வு என்பது இயேசுவின் இரத்தத்தைச் சார்ந்துள்ளது (எபி. 9:22), அது போலவே தண்ணீர் என்பது உடல் வாழ்வுக்கும் மற்றும் கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய புது வாழ்வுக்கும் அவசியமானதாக உள்ளது (ரோமர் 6:4).

GTG LIBRARY- BANGALORE

ஞானஸ்நானத்தில் நாம் என்ன செய்கின்றோம்?

நாம் ஞானஸ்நானம் பெறுகின்றபோது புரிந்து கொள்ளப்பட வேண்டிய நான்கு கருத்துக்களை ஞானஸ்நானம் விளக்குகின்றது. நாம் கிறிஸ்தவர்களாகும்பொழுது என்ன நடக்கின்றது என்பதை இந்தக் கருத்துக்கள் விவரிக்கின்றன.

நாம் கொடுக்கின்றோம்

நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது தேவன் நம் வாழ்வில் அவர் தம் திருத்தப் பணிகளை நிகழ்த்தும்படியாக நம்மையே நாம் அவருடைய கரங்களில் தருகின்றவர்களாய் இருக்க வேண்டும் (கொலோ. 2:12). இந்த வேளையில் நாம் தேவனுடைய வசனத்தைக் கவனமாய் ஆராய்ந்திருக்க வேண்டும் (யோவா. 6:45; அப். 18:8). இயேசுவுக்கு நம்மையே கொடுக்கத் தீர்மானம் செய்வதினால், நாம் நீதிக்கு ஊழியம் செய்யும்படி உலகத்தின் ஊழியத்தை விட்டு விடுகின்றோம் (ரோமர் 6:17, 18). நாம் இயேசுவை ஆண்டவரென்றும், கிறிஸ்துவென்றும், தேவகுமாரன் என்றும் இருதயத்தில் கொண்டுள்ள விசுவாசத்தை வாய்மொழியாகவும் சாட்சியளிக்க வேண்டும் (ரோமர் 10:9, 10). இயேசுவுக்குள் ஒரு புது வாழ்வில் பிரவேசிக்கக் கூடும்படிக்கு நமது கடந்த காலத்திற்கு மரிப்பதன் மூலம் ஞானஸ்நானத்தில் நாம் இயேசுவுக்கு நம்மையே கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம் (ரோமர் 6:4).

நாம் பெறுகின்றோம்

இவ்வழி முறையில் நாம் நம்மையே கொடுத்தால், தேவனால் அளிக்கப்பட்டுள்ள பாவமன்னிப்பை இயேசுவின் இரத்தத்தினால் நாம் பெறுவோம் (அப். 2:38; கொலோ. 2:12, 13; எபி. 9:22). அவருடைய இரத்தம் நமது பாவங்களைக் கழுவும் (அப். 22:16; வெளி. 1:5) மற்றும் இரட்சிப்பை அருளும் (மாற். 16:15, 16; 1 பேது. 3:21). கடந்த காலப் பாவங்கள் சுத்திகரிக்கப்பட்டிருப்பதென்பது தெளிவான மனச்சாட்சியை விளைவிப்ப தால் நாம் ஒரு புதிய தொடக்கத்தைப் பெறுவோம் (1 பேது. 3:21). நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது ஒரு புதிய வாழ்வைத் தொடங்கு

GTG LIBRARY- BANGALORE

கின்றோம் (ரோமர் 6:4).

நாம் ஆகின்றோம்

நமது பாவங்கள் அழிக்கப்பட்ட பிறகு, நாம் கிறிஸ்துவுக்குள் புதுச் சிருஷ்டிகளாகின்றோம் (2 கொரி. 5:17). மீண்டும் பிறந்திருத்தலினால் (யோவா. 3:3-5) நாம் தேவனுடைய பிள்ளைகளாகின்றோம் (கலா. 3:26). நாம் கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்ட பொழுது (ரோமர் 6:5) அவரிடத்திலும் (எபி. 3:14) அவருடைய இயல்பிலும் (2 பேது. 1:4; 2 கொரி. 5:21ஐக் காணவும்) பங்குள்ளவர்கள் ஆகின்றோம். நாம் கிறிஸ்துவை "அணிந்து" கொள்கின்றோம் (கலா. 3:27) மற்றும் அவருடைய சாயலாக உருமாற்றப் பட்டு (2 கொரி. 3:18) அவரைப் போலாவதற்கு வளருகின்றோம்.

நாம் பிரவேசிக்கின்றோம்

நாம் தேவனுடைய பிள்ளைகளாவதினால் நாம் தேவனுடைய குடும்பமும், வீட்டாருமாகிய சபையினுள் பிரவேசிக்கின்றோம் (1 தீமோ. 3:15). சபையும் சரீரமும் ஒன்றே (எபே. 1:22, 23). ஞானஸ்நானத்தின் மூலம் நாம் இயேசு கட்டி எழுப்பியதும் (மத். 16:18) மற்றும் அவரையே தலைவராகக் கொண்டதுமான (எபே. 5:23) ஒரே சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்திற்குள் பிரவேசிக்கின்றோம் (1 கொரி. 12:13, 27). கிறிஸ்து மற்றும் அவரது சரீரம் ஆகியவற்றில் பிரவேசிப்பதினால் (ரோமர் 6:3; கலா. 3:27), தலையாகிய கிறிஸ்துவால் அருளப்படும் ஆசீர்வாதங்கள் யாவற்றுக்கும் நாம் வழிவாய்ப்பைப் பெறுகின்றோம். இது புது சிருஷ்டியாகுதல் (2 கொரி. 5:17) போன்ற ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும் உள்ளடக்குகின்றது (எபே. 1:3). அவருக்குள் இயேசுவின் இரத்தம், கிருபை, இரட்சிப்பு மற்றும் நித்திய ஜீவன் ஆகியவற்றின் மூலம் நாம் மீட்பைப் பெறுகின்றோம் (எபே. 1:7; 2 தீமோ. 2:1; 2:10; 1 யோவா. 5:11).

இயேசுவுக்குள் பிரவேசிக்கும் முன்பு நாம், "கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தோம். முன்னே தூரமாயிருந்த (நாம்) இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானோம்" (எபே. 2:12, 13). பாவம்தான் நம்மைத் தேவனிடமிருந்து பிரிக்கின்றது (ஏசா. 59:1, 2) மற்றும் அவர் நமக்கெதிராகத் தம் முகத்தைத் திருப்பிக் கொள்ளவும் காரணமாகின்றது (1 பேது. 3:12). நாம் ஞானஸ்நானம் பெறும்பொழுது நாம் இயேசுவுக்குள் பிரவேசிக்கின்றோம் (ரோமர் 6:3; கலா. 3:27). நமது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன (அப். 2:38; 22:16), மற்றும் இனியும் நாம் தேவனற்றவர்களாகவோ மற்றும் இயேசுவிலிருந்து பிரிந்தவர்களாகவோ இருப்பதில்லை.

GTG LIBRARY- BANGALORE

முன்னேற்பாடு

ஆசிரியரின் வழிகாட்டி நூலின் பாடங்களுடைய நல்ல முன் வைப்பானது நல்ல முன்னேற்பாட்டினால் சாத்தியமாகின்றது. பாடத்தை முன் வைப்பதற்கு ஒரு நபர் தம்மைத் தக்கமுறையில் தயார் செய்து கொண்டிருந்தால், அவர் நல்லதொரு பாடத்தை போதிக்க முடிகின்றது.

இந்த *ஆசிரியரின் வழிகாட்டி* நூலில் உள்ள பாடங்களை முன் வைக்க ஆசிரியர் தம்மைத் தாமே தயார் செய்து கொள்வதற்கு உதவியாகப் பின்வரும் ஆலோசனைகள் அளிக்கப் படுகின்றன:

1. ஜெபத்தில் நேரத்தைச் செலவிடுங்கள், நீங்கள் தக்க வகையில் தயாராகும்படியும், ஏற்புடைய எண்ணப்போக்குகளைக் கொண்டிருக்கும் படியும், பாடத்தைப் போதிக்க உங்களைத் தயாராயிருக்கும்படியான விஷயங்களைச் செய்யும்படியும், திறந்த மனதுடன் பாடத்தை அணுகும் படியும், பாடக் கருத்தைப் பற்றி வேதாகமம் கற்பிக்கின்றவைகளைத் தெளிவாய் காண முடியும்படியும், பாடக் கருத்தை இயன்ற அளவு முழுமையாகப் புரிந்து கொள்ளும்படியும், கற்பவருக்கு பாடத்தைப் புரிந்து கொள்ளச் செய்வது எப்படி என்று அறியும்படியும், கிறிஸ்துவின் நல்லதொரு பிரதிநிதியாய் இருக்கும்படியும் ஜெபம் செய்யுங்கள்.

2. பாடங்களைப் பற்றிய எல்லா அறிவுறுத்தல்களையும் வாசியுங்கள், மற்றும் பிறகு பாடத்தையே வாசியுங்கள், அத்துடன் (அதில் உள்ள) வேத வசனங்கள் யாவற்றையும் கண்ணோக்க நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். (பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள) வேத வசனங்கள் எல்லாவற்றையும் கண்ணோக்குதல் என்பது மட்டுமின்றி, முழு சந்தர்ப்பப் பொருளையும் புரிந்து கொள்வதற்கு அவ்வசனங்களைச் சுற்றிலுமுள்ள மற்ற வசனங்களை யும் வாசித்தலும் முக்கியமானதாக உள்ளது. சில வசனப் பகுதிகள் முன்னிறுத்தும் பிரச்சனைகளைக் கையாள ஆசிரியர் தயார் நிலையில் இருப்பார். பாடத்தின் சீரான ஓட்டத்திற்கும், மற்றும் பாடத்தின் நோக்கத்திற்கும் அவர் சிறப்புக் கவனத்தைச் செலுத்துவார்.

3. முழுப்பாடத்தைக் கொண்டு நிறைவேற்றப்பட வேண்டியது என்ன என்பதையும் மற்றும் பாடத்தில் ஒவ்வொரு பகுதி மற்றும் ஒவ்வொரு கூற்று ஆகியவற்றின் நோக்கம் என்ன என்பதையும் தீர்மானம் செய்யுங்கள். பாடத்தின் நோக்கத்தையும் மற்றும் ஒவ்வொரு பகுதியின் நோக்கத்தையும்

GTG LIBRARY- BANGALORE

எழுதுங்கள்.

4. போதிக்கப்படும் நபரின் மீது ஒரு கண்(ணோக்கு) வைத்துப் பாடத்தை ஆலோசியுங்கள். அவரது தேவைகள், அவரது எண்ணப் போக்குகள், அவரது பின்னணி, வேதாகமத்தைப் பற்றிய அவரது புரிந்து கொள்ளுதல், மற்றும் அவர் இயேசுவை அர்ப்பணிப்புடன் பின்பற்றுப வராக ஆவதற்கு அவருக்கு உதவும் வழிமுறைகள் ஆகியவற்றைப் பற்றிச் சிந்தியுங்கள்.

5. ஒரு கருத்தைத் தெளிவாக்குவதற்கோ அல்லது கற்பவரின் சிந்தையில் சத்தியத்தை ஆழப் பதியவைப்பதற்கோ உதவியாய் இருக்கக்கூடிய விளக்கங்களைப் பற்றிச் சிந்தியுங்கள். நல்ல விளக்கங்கள் என்பவை போதனையைப் புரிந்துகொள்ள ஒரு மாணவருக்கு உதவுவதுடன் பாடத்தை அதிகம் ஆர்வத்திற்குரியதாகவும் ஆக்குகின்றன.

6. ஒரு வேதவசனம் வாசிக்கப்படும் போது கற்பவர் எதைக் கண்ணோக்க வேண்டும் என்று அறிந்து கொள்ளத் தயார் செய்யும் வகையில் உதவும் கேள்விகளைப் பற்றிச் சிந்தியுங்கள். நல்ல கேள்விகள், வசனத்தில் பாடத்திற்குப் பொருத்தமான தகவல்மீது கற்பவர் கவனம் செலுத்தவும் மற்றும் வெறுமையாய்ச் செல்கின்றது எது என்று காண்பதற்கும் உதவும்.

7. பாடத்தை அறிமுகப் படுத்தவும், பாடத்தை எடுத்துரைக்கவும் மற்றும் பாடத்தைத் தொகுத்துரைத்து முடிவு செய்யவும் தயாராய் இருங்கள். அறிமுகம் என்பது மாணவரைப் பாடத்திற்குத் தயார் செய்ய வேண்டும், பாடத்தின் கருப்பொருள்/உடல் பகுதி என்பது பாடத்தாளின் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள கருத்துக்களை விவரிக்க வேண்டும், மற்றும் தொகுப்புரையும் முடிவுரையும் எடுத்துரைக்கப்பட்ட பாடத்தைச் சுருக்கமாக மீண்டும் பார்வையிட வேண்டும்.

இவ்வழிமுறைகளில் ஆசிரியர் தம்மைத் தாமே தயார் செய்து கொண்ட பிறகு, அவர் உண்மையான கற்பித்தல் அனுபவத்திலிருந்து, அனுபவத்தின் வாயிலாகப் பாடத்தை நன்கு பழகிக் கொள்வதற்காக அதை ஒரு நண்பரிடத்தில் எடுத்துரைக்க வேண்டும். இது, ஆசிரியர் பழக்கமற்ற சூழ்நிலை என்ற அழுத்தத்திலிருந்து விடுபட்டவராய் நட்புறவான சூழலில் (பாடத்தை) எடுத்துரைக்கும் திறமையை மேம்படுத்த உதவும். பாடத்தை எடுத்துரைக்கும் பொழுது அந்தப்பாடம் பிற்பாடு யாருக்கு(ச் சென்றடைய) நோக்கம் கொண்டுள்ளது என்பதை ஆசிரியர் தம் சிந்தையில் கொண்டிருக்க வேண்டும்.

கற்பவரின் செயல்முறைக்கோ அல்லது அவருக்கு அறிவுரைக்கோ தரப்படும் பாடத்தின் ஒவ்வொரு எடுத்துரைப்புக்கும் பிறகு, ஆசிரியர் பாடத்தைத் தாம் நடத்தியது பற்றி மதிப்பிட வேண்டும். மதிப்பீட்டிற்குப் பின்வரும் வினாக்களைப் பயன்படுத்தலாம்:

1. நான் பாடத்தைத் தக்க முறையில் அறிமுகப்படுத்தினேனா?

2. பாடத்தின் ஒவ்வொரு பகுதியையும் ஏற்ற வகையில் எடுத்துரைத்து, ஒவ்வொரு பகுதியின் நோக்கத்தையும் நிறைவேற்றினேனா?

GTG LIBRARY- BANGALORE

3. அறிமுகத்திலிருந்து பொருளடக்கப் பகுதிக்கும், அதில் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கும், பாடத்தின் பொருளடக்கப் பகுதியிலிருந்து பாடத்தின் முடிவுரைப் பகுதிக்கும் நான் தடங்கலற்ற, மென்மையான வகையில் மாறிச் செல்லுதலை ஏற்படுத்தினேனா?

4. எனது கேள்விகள் தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட்டனவா? மற்றும் அவை நாம் வாசித்த வேத வசனப்பகுதிகளில் இருந்து விரும்பப் படும் தகவலுக்குக் கற்பவரைத் தயாரித்தனவா?

5. நான் எனது விளக்கங்களை ஏற்ற முறையில் பயன்படுத்தினேனா? அவை பாடத்தை உயர்த்தி பிடித்தனவா?

6. ஒவ்வொரு பகுதிக்கும் மற்றும் பாடம் முழுமைக்குமான எனது நோக்கத்தை நான் நிறைவேற்றினேனா?

7. பாடத்தில் மாணவர் எதைக் கற்க வேண்டும் என்று நான் விரும்பினேனோ, அதை மாணவர் புரிந்து கொண்டாரா?

8. பாடத்தை நான் போதுமான அளவில் தொகுத்துரைத்து முடித்திருந்தேனா?

மேற் கூறியவற்றில் சில பகுதிகளை நன்கு செய்யவில்லை என்று ஆசிரியர் கண்டறிவாரேயானால், அடுத்த பாடத்தை நடத்துவதில் அவர் சிறக்கச் செய்ய முயற்சிப்பதில் நேரம் செலவிட வேண்டும். முதல் வகுப்பு என்பது சீராக இல்லாது போகலாம் ஆனால் ஒவ்வொரு பாடத்தை நடத்தும் பொழுதும் மேம்படுத்திக் கொள்வதற்கான பொறுமையின் விளைவாகச் சுலபமாய்ப் பாடத்தைப் புரிந்து கொள்ளுதல் என்பது செயல்முறையில் வரும்.

GTG LIBRARY- BANGALORE

எடுத்துரைப்பு

இந்த ஆசிரியர் வழிகாட்டி நூலில் உள்ள பாடங்களை நல்லமுறையில் எடுத்துரைத்தல் என்பது நல்ல முன்னேற்பாடு மற்றும் நல்ல செய்முறைப் பயிற்சி ஆகியவற்றின் விளைவாகவே ஏற்படும். பாடத்தைச் சுருக்கமான, ஆர்வமான, புரிந்து கொள்ளக் கூடிய மற்றும் இணக்கமான வழிமுறையில் தருதல் என்பதே ஆசிரியரின் நோக்கமாய் இருக்க வேண்டும். வீணாக்கப்படும் இயக்கம் என்பது சலிப்பை உண்டாக்கக் கூடும். இந்தக் காரணத்தினால், ஆசிரியர் ஒரு பாடத்தை நடத்தும் வேளையில் தம் நேரத்தை ஞானமாய்ச் செலவிடும்படி நாட வேண்டும்.

ஒரு பாடத்தை எடுத்துரைக்கையில் பின்வரும் கருத்துக்கள் கவனிக்கப்பட வேண்டும்:

ஒழுங்கமைவுகள்

ஒரு பாடத்தின் எடுத்துரைப்பு மற்றும் அதை ஏற்கச் செய்தல் ஆகியவற்றிற்கு இயல்பான ஒழுங்கமைவுகள் முக்கியமானதாயிருக்கக் கூடும். இடம் மிக முக்கியமானதாக உள்ளது. கற்றுக் கொள்பவருக்கு மிகவும் நெருக்கமாகவோ அல்லது மிகவும் தொலைவிலோ ஆசிரியர் அமரக் கூடாது. மிகவும் நெருங்கி அமருதல் என்பது கற்றுக் கொள்பவரை இடம் நாடச் செய்து விடும், மற்றும் தொலைவில் அமருதல் என்பது கற்பவர், தாம் தூர இருப்பதாக உணரக் காரணமாகலாம், இவ்விதமாக ஒரு வெறுப்பான மற்றும் ஏற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலையை இது உருவாக்கும்.

ஆசிரியர், கற்பவருக்கு அருகாமையில், முடிந்தால் ஒரு மேசை அருகிலோ அல்லது நாற்காலியின்மீது கற்பவருக்கு அண்மையில் அமர வேண்டும். இவ்வகையான ஒரு ஒழுங்கமைவினால் ஆசிரியரும் கற்பவரும் ஒரே பாடத் தாளைப் பயன்படுத்திப் படிக்க முடிவதுடன் தேவைப்பட்டால் ஒரே வேதாகமத்தையும் பயன்படுத்திப் படிக்க முடியும். ஆசிரியர் வலது கைப் பழக்கம் உடையவரானால், வலது புறமாகவும், அவர் இடது கைப் பழக்கம் உடையவரென்றால் இடது புறமாகவும் அமர வேண்டும். இவ்விதமாக, கற்பவர் ஆசிரியரின் கரங்கள் மறைக்காத வண்ணம் அவர் எழுதுவதை அல்லது வரைவதைக் காண இயலும்.

GTG LIBRARY- BANGALORE

பொருட்கள்

இந்த ஆசிரியரின் வழிகாட்டி நூலில் உள்ள பாடங்களுக்கு பாடத்தாள், ஒரு வேதாகமம் மற்றும் ஒரு பேனா ஆகியவை ஆசிரியருக்குத் தேவைப் படும். ஆசிரியரிடம் நன்கு தரமான முறையில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் வேதாகமம் ஒன்று இருத்தல் வேண்டும். சில மொழிபெயர்ப்புக் களைப் பயன்படுத்தும் பொழுது, பாடத்தாளிலே அல்லது கோடிட்ட இடங்களில் வரும் வார்த்தைகளிலோ சிறிய மாற்றம் செய்வது தேவைப்படலாம். கற்பவரிடத்தில் தரமான மொழிபெயர்ப்பு வேதாகமம் இல்லையென்றால், அல்லது அவரால் நன்கு வாசிக்க முடியவில்லை என்றால், அல்லது வசனப் பகுதிகளைக் கண்டறிவது கஷ்டமாய் இருந்தால், ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து படிப்பதற்கென்று பெரிய எழுத்துக்களில் அச்சிட்ட வேதாகமம் பல வேளைகளில் உதவியாய் இருக்கும். மாணவர் வேதாகமத்தை நன்கு அறியாதிருந்தால், இந்தக் காரணத்திற்காக வசனங்களைக் கண்டறிய அதிகமான நேரத்தைச் செலவிடுதல் அவசியம் என்று கண்டால், பாடம் நன்கு கடந்து செல்வது என்பது இதனால் தடைப்படும், மற்றும் பாடத்தின் அழுத்தமான தன்மையானது இழந்து போகப்படும்.

சில வேளைகளில் ஆசிரியர் கூடுதலாக சில துண்டுத் தாள்களைப் பயன்படுத்த விரும்பலாம்; இருப்பினும் ஆசிரியர், பாடத்தாளைப் பயன்படுத்தினால், அவர் அத்தாளின் பின்புறத்தில் எழுத முடியும். இதைச் செய்வதால், மாணவர் எல்லாக் குறிப்புகளையும் மற்றும் வரைபடங் களையும் ஒரே தாளில் பெற்றுக் கொள்வார்.

பாடத்தை எடுத்துரைத்தல்

பாடத்தை எடுத்துரைப்பதற்கு முன்பு கற்பவரைப் பற்றி அறியச் சற்று நேரம் எடுத்துக் கொள்ள ஆசிரியர் விரும்புவார். இது ஆசிரியர் கற்றுக் கொள்பவரைப் பற்றிப் புரிந்து கொள்ளக் கூடியதும் மற்றும் அவருடன் நல்லதொரு நட்புறவைக் கட்டியெழுப்பக் கூடியதுமான ஒரு குறுகிய ஆனால் அர்த்தம் நிறைந்த வேளையாக இருத்தல் வேண்டும்.

முதலாவது, ஆசிரியர் பாடத்தை அறிமுகப்படுத்துகின்றார். இவ்வேளையில், பின்தொடரும் பாடத்திற்கென்று ஆசிரியர் தயாரிப்புச் செய்கின்றார்.

இரண்டாவது, பாடத்தின் அறிமுகத்திற்குப் பிறகு, பாடத்தின் ஒவ்வொரு பகுதியையும் ஆசிரியர் எடுத்துரைக்கின்றார். ஆசிரியர், ஒவ்வொரு பகுதியையும் அறிமுகப்படுத்தி, ஒவ்வொரு பகுதியையும் எடுத்துரைத்து, மற்றும் ஒவ்வொரு பகுதியையும் தொகுத்துரைக்கின்றார். முழுப்பாடத்தையும் கற்பித்த பிறகு, பாடத்தில் உள்ள யாவற்றையும் கற்பவர் புரிந்து கொண்டுள்ளார் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக முழுப்பாடத்தையும் ஆசிரியர் மீண்டும் பார்வையிடுகின்றார்.

மூன்றாவது, பாடத்தின்போது கற்றுக் கொள்ளப்பட்டவைகளைச் சுருக்கியுரைத்தும், மாணவர் ஏற்றுக் கொண்டதாக ஆசிரியர் நம்புகின்ற முடிவுகளைத் தொகுத்துரைத்தும் ஆசிரியர் பாடத்தை முடிக்கின்றார்.

GTG LIBRARY- BANGALORE

கடைசியாக, கற்பவரிடமிருந்து ஆசிரியர் ஒரு பதில்செயலை நாடுகின்றார், அதாவது, பாடத்தில் பதில்செயல் ஒன்று தெரிவிக்கப் பட்டிருந்தால் அதை மாணவரிடம் நாடுகின்றார்.

ஆசிரியரின் வழிகாட்டி நூலில் உள்ள பாடங்களை எடுத்துரைக்கும் பொழுது, ஒவ்வொரு வேத வசனப் பகுதியையும் வாசிக்கும் முன்பு ஆசிரியர் ஒரு கேள்வி கேட்க வேண்டும், இது கோடிட்ட இடங்களில் வர வேண்டிய வார்த்தைகளின் மீது கவனம் செலுத்துவதற்கு மாணவருக்கு உதவ வேண்டும். எங்கு என்ன எழுதுவது மற்றும் வார்த்தைகளை எவ்விதம் உச்சரிப்பது என்பது பற்றி கற்பவருக்குச் சிலவேளைகளில் சிரமங்கள் ஏற்படும் என்பதால் பாடத்தாளில் ஆசிரியரே கோடிட்ட இடங்களை நிரப்ப வேண்டும்.

பாடத்தாளில் உள்ள கோடிட்ட இடங்களை நிரப்புதல் என்பது பாடத்தாளை ஆசிரியரே வைத்திருத்தல் என்ற கூடுதல் பலனையுடைய தாயிருக்கும், மற்றும் இக்காரணத்தினால் அவர் எவ்விதம் இடையூறும் இன்றி, பாடத்தாளின் பின்புறத்தில் எழுதவோ அல்லது வரையவோ முடியும்.

தெரிவிக்கப்படும் வேத வசனப்பகுதி ஒவ்வொன்றையும் உரக்க வாசிக்கும்படி மாணவரிடத்தில் கேட்டுக் கொள்ளப்பட வேண்டும். இது, கற்பவர் எந்த அளவு நன்றாக வாசிக்க முடியும் என்பதையும், அவர் வசனப் பகுதியைச் சரியாக வாசித்துள்ளாரா என்பதையும் அறிந்து கொள்ள ஆசிரியருக்கு உதவும். இது, வேதாகமத்தைக் கவனத்துடன் படித்தலின் முக்கியத்துவத்தை மாணவரின் சிந்தையில் ஆழப்பதியச் செய்வதுடன், வேதாகமம் கூறுகின்றவற்றின் செயல் தாக்கத்தினால் சிந்தையில் ஆழ் பதிவு ஏற்படவும் காரணமாய் இருக்கும்.

கோடிட்ட இடங்களில் வர வேண்டிய விடைகளை வேதாகமத்தில் கண்டறியும்படியாகக் கற்பவர்களை ஆசிரியர் உற்சாகப்படுத்த வேண்டும். இவ்வகையில், பாடம் நிறைவுறும் பொழுது ஆசிரியர், "இது நான் கூறியுள்ளவையா அல்லது வேதாகமம் இவ்வாறு போதிக்கின்றதா? இது நான் கூறியதாக மட்டும் இருப்பின் இதைப் புறக்கணித்து விடுங்கள், அல்லது இது வேதாகமம் கூறுவதாக இருப்பின் இதை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று கேட்டுக் கொள்ள முடியும்.

மாணவரின் கற்கும் வேகத்திற்கு ஆசிரியர் தம்மை தகவமைத்துக் கொள்ள வேண்டும். மிகவும் வேகமாகப் பாடத்தை நடத்துவது என்பது மாணவரை இழக்கக் காரணமாகி விடும், மற்றும் மிகவும் மெதுவாக நடத்துவது என்பது பாடத்தைச் சலிப்பூட்டுவதாக ஆக்கி விடும்.

அடுத்த கருத்திற்குச் செல்லுவதற்கு முன்பு நடத்திய ஒவ்வொரு கருத்தையும் மாணவர் புரிந்து கொண்டாரா என்று ஆசிரியர் உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்.

கற்பவர் ஒரு கேள்வி கேட்டு, அதற்கான பதிலை ஆசிரியர் அறியாது இருந்தால், ஆசிரியர் அந்தக் கேள்வியைப் படிக்க நேரம் வேண்டும் என்று கேட்டு, பின்னொரு சமயத்தில் அம்மாணவருடன் அக்கேள்வியைப் படிக்க வேண்டும். கற்பவர், பாடத்துடன் தொடர்பற்றதும், விரைவில் பதில்

GTG LIBRARY- BANGALORE

அளிக்க முடியாததுமான ஒரு கேள்வியைக் கேட்டால் அல்லது அப்படிப் பட்ட ஒரு பாடக் கருத்தை அறிமுகப்படுத்தினால், அப்படிப்பட்ட தொடர்பில்லாத பாடக் கருத்தைப் பற்றிப் பிற்பாடு படிப்பதற்கு அனு மதியை ஆசிரியர் கேட்க வேண்டும்.

பாடம் எடுத்துரைக்கப்பட்டு, மற்றும் ஆசிரியர் தமது எடுத்துரைப்பை மீண்டும் எண்ணிப் பார்க்கக் காலத்தைப் பெற்ற பிறகு, அவர் பாடத்தில் தரப்பட்டுள்ள எட்டு மதிப்பீட்டு வினாத் தாள்களையும் கவனத்தில் கொண்டு, தாம் எவ்வளவு நன்முறையில் பாடத்தை எடுத்துரைத்தார் என்பதை மதிப்பிட வேண்டும்.

GTG LIBRARY- BANGALORE

பாடங்களுக்கு அறிமுகப்படுத்துதல்

இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கற்றுக் கொள்ளத் தேவை உள்ளவர்களுக்கு இந்த *வழிகாட்டி* நூலில் உள்ள எட்டுப் பாடங்களும் இன்றியமையாதவைகளாக உள்ளன. இவைகள் தர்க்க அறிவுமுறைமைப்படியாக ஒன்றிலிருந்து இன்னொரு பாடத்திற்குத் தொடர்ந்து செல்லுகின்றன, மற்றும் இவை இந்தப் பயிற்சி நூலில் அமைவு பெற்றுள்ள வரிசை முறைமையின்படி பயனுள்ள வகையில் பயன் படுத்தப்பட முடியும். இருப்பினும் இவைகளைப் போதிக்கும் ஆசிரியர், படிக்கும் மாணவர் முதல் மூன்று பாடங்களில் உள்ளவற்றை ஏற்கனவே அறிந்து விசுவாசிக்கின்றார் என்பதை உணரலாம், மற்றும் இந்தக் காரணத்தினால் "இரட்சிப்பு" என்பது பற்றிய பாடமான 4-ம் பாடத்தில் இருந்து தொடங்க விரும்பலாம்.

மதம் பற்றிய விஷயங்களின் நுண்ணிய உணர்வுத் தன்மையின் காரணமாக, பின்னாளைய படிப்புகளுக்கு அஸ்திபாரம் போடுகின்றதற்கு உதவும் பாடங்களைக் கொண்டு தொடங்குவது சில வேளைகளில் முக்கியமானதாக உள்ளது. இந்தத் தொடக்கப் பாடங்கள் இரட்சிக்கப் படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று ஒருவர் கற்றுக் கொள்வதற்கு உதவும் கருத்துக்களைக் கொண்டிராதிருக்கலாம், ஆனால் இவைகள் வேதாகமத்தை அணுகும்முறை பற்றிய கருத்துக்களில் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க உதவலாம், இதில் சத்தியங்களின் பின்னணி பற்றிய புரிந்து கொள்ளுதல் இல்லாது போனால் கருத்து வேறுபாடுக்குக் காரணமாகலாம்.

இப்பாடங்களில் எதையும் போதிப்பதற்கு முன்பு, ஆசிரியர் இவைகளை எந்த வரிசைமுறையில் முன்னிறுத்த விரும்புவார் என்பதை அறிவதற்கு அவர் எல்லாப் பாடங்களையும் நன்கு அறிந்திருக்க வேண்டும். இந்த *வழிகாட்டி* நூலில் உள்ள எட்டுப் பாடங்களும் பின்வருமாறு சிந்தனைத் தொடரை மேம்படுத்துகின்றன:

பாடம் 1. "பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் ஆதார மூலம் எது?" என்ற பாடம், தேவன் தமது நல்ல சிருஷ்டிப்பை சாபத்தின் கீழ் வைப்பதற்குக் காரணமாக ஏதேன் தோட்டத்தில் என்ன நடந்தது என்பதை எடுத்துரைக்கின்றது. ஆதாமும் ஏவாளும் நன்மை தீமை அறியும் மரத்திலிருந்து கனியைப் புசித்ததின் மூலமாகப் பாவம் இவ்வுலகில்

GTG LIBRARY- BANGALORE

நுழைந்தது என்றும் மற்றும் அந்த மரத்திலிருந்து புசித்ததினால் மனித குலமானது நன்மை மற்றும் தீமையின் பிரச்சனைக்கு அறிமுகப்படுத்தப் பட்டது. இருப்பினும், பச்சிளம் குழந்தைகள் பாவிகளாய்ப் பிறப்பதில்லை அல்லது அவர்கள் நன்மை தீமை அறியும் அறிவுடன் பிறப்பதும் இல்லை. அவர்கள் இந்த அறிவை வாழ்வின் பிற்பகுதியில் வளர்த்துக் கொள்கின்றார்கள் என்பதையும் இந்தப் பாடத்திலிருந்து ஆசிரியர் காட்ட முடியும்.

பாடம் 2. ''தேவனுடைய திட்டம் என்ன?'' என்ற பாடம், ஆபிரகாமைப் பெரியதொரு இனமாக்கவும், ஆபிரகாமின் சந்ததி மூலம் பூமியின் (பல்வேறு) இனங்களையும் ஆசீர்வதிக்கவும் தேவன் கொண்டிருந்த திட்டத்தை எடுத்துரைக்கின்றது. தேவன் நியாயப்பிரமாணத்தின் மூலம் உலகத்தை ஆசீர்வதிக்க ஒருக்காலும் திட்டமிட்டிருந்ததில்லை (அது ஆசீர்வாதத்திற்குப் பதிலாக சாபத்தையே கொண்டு வந்தது), ஆனால் அதற்கு மாறாக, அவர் வானங்களையும் பூமியையும் படைப்பதற்கு முன்பாகவே தம்முடைய குமாரனின் மரணத்தின் மூலமாக மனித குலத்தை ஆசீர்வதிக்கத் திட்டமிட்டார். மனித குலத்தை இயேசுவிடம் கொண்டு வருதல் என்பது நியாயப்பிரமாணத்தின் நோக்கமாய் இருந்தது, ஆனால் இப்பொழுது இயேசு கிறிஸ்துவின் மீது விசுவாசம் வந்துள்ளதால், நாம் இனியும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவர்கள் அல்ல. மாறாக நாம் இயேசு கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையின் கீழ் இருக்கின்றோம் என்பதையும் ஆசிரியர் காட்ட முடியும்.

பாடம் 3. "இயேசு மனிதருக்குப் புது வழியாய் இருக்கின்றாரா?" என்ற பாடம் இயேசுவை, மிருக பலியுடன் கூடிய நியாயப்பிரமாணமாக எடுத்துரைக்காமல், மனிதகுலத்தின் இரட்சிப்புக்கான *வழியாக* அவரைப் பற்றி எடுத்துரைக்கின்றது, இந்த *வழியானது* எருசலேமில் பிரசங்கிக்கப் படத் தொடங்கி, உலகின் மற்றெல்லாப் பகுதிகளிலும் பரவியது. சிலுவையில் இயேசுவின் மரணத்திற்கு முன் நிழலாகத் தேவன் மிருக பலிகளை வைக்கத் திட்டமிட்டது எவ்விதம் என்று ஆசிரியர் காண்பிக்க முடியும். அவரது (இயேசுவின்) மரணத்திற்குப் பிறகு, இந்தப் புதிய வழியானது எருசலேம் தொடங்கி உலகம் முழுவதிலும் பிரசங்கிக்கப்பட முடிந்தது. மன்னிப்பின் வழி என்பதாக எருசலேமில் பிரசங்கிக்கப்பட்ட அதே விஷயம் தான் எல்லா நாடுகளுக்கும் எல்லாக் காலங்களிலும் தேவைப்படுகின்றது.

பாடம் 4. "நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கின்றீர்களா?" என்ற பாடம், இயேசுவின் இரத்தத்தின் மூலம் அளிக்கப்பட்டுள்ள பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ள ஒருவர் செய்ய வேண்டியவை என்ன என்பதை எடுத்துரைக்கின்றது. இயேசுவைப் பற்றிப் போதிக்கப்பட்டு, இயேசுவில் விசுவாசம் கொண்டு, இயேசுவுக்காக வாழ முடிவு செய்து, இயேசுவில் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு, ஞானஸ்நானத்தில் இயேசுவுடன் அடக்கம் பண்ணப்பட்டுள்ளவர்கள் தங்கள் பாவங்களில் இருந்து இரட்சிக்கப்படுவார்கள் என்று ஆசிரியர் காண்பிக்க முடியும். இயேசுவின் இரத்தத்தின் மூலமாக வரும் இந்த மன்னிப்பு, கிறிஸ்துவுக்குள்

GTG LIBRARY- BANGALORE

ஞானஸ்நானம் பெற்றுள்ளவர்களுக்குக் கிடைப்பதாக உள்ளது. கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற அனைவரும் அவரது ஒரே சரீரமான கிறிஸ்துவின் சபையில் உள்ளனர்.

பாடம் 5. "கிறிஸ்துவின் சபையைப் பற்றி வேதாகமம் கூறுவது என்ன?" என்ற பாடம், கிறிஸ்துவின் சபையானது எல்லாக் கிறிஸ்தவர்களையும் கொண்டதாக உள்ளது என்பதை எடுத்துரைக்கின்றது. விசுவாசிகளால் ஆன இந்த சரீரத்தைக் கட்டியெழுப்புபவராக, அஸ்திபாரமாக, தலையாக மற்றும் இரட்சகராக உள்ளவர் இயேசுவே. அவர்களின் மேலான தலை என்ற வகையில் அவர் தமது சரீரமானது ஒருமைப்பட்ட சரீரமாக, பிரிவினை எதுவுமின்றி இணக்கமுள்ளதாக வாழ வேண்டும் என்று விரும்புகின்றார். அவர்கள்மீது கொண்ட அன்பினால் அவர்களைத் தமக்கு முன்பாக மாசற்றவர்களாக, கறைதிரை அல்லது அது போன்ற எதுவும் இல்லாதவர் களாக தமக்கு முன்பு பரிசுத்தமும் குற்றமற்றவர்களுமாய் நிலைநிறுத்திக் கொள்வதற்காக அவர்களுக்காக அவர் மரித்தார்.

பாடம் 6. ''கிறிஸ்துவின் சபையினுடைய நிறுவன அமைப்பு எப்படியிருந்தது?'' என்ற பாடம் சபையின் என்றும் மாறாத நிறுவன அமைப்பைக் காண்பிக்கின்றது, இதில் இயேசு தலைவராக மற்றும் ஆதி அப்போஸ்தலர்கள் பன்னிருவரும் மற்றும் புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசி களும் உள்ளனர். பிராந்திய சபையில் மூப்பர்கள் (ஆயர்கள் மற்றும் மேய்ப்பர்கள் என்றும் அறியப்படுபவர்கள்), உதவிக்காரர்கள், சுவிசேஷ ஊழியர்கள், போதகர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் ஊழியம் செய்கின்றனர். இவர்கள் யாவரும் தங்களுக்கு ஏற்புடைய பணிகளையும் தகுதிகளையும் கொண்டுள்ளனர்.

பாடம் 7. "நீங்கள் தேவனை ஏற்புடைய வகையில் ஆராதிக்கின்றீர் களா?" என்ற பாடம், தேவனுக்கு ஏறெடுக்கும் ஆராதனையில் அவர் விரும்பும் செயல்களை எடுத்துரைக்கின்றது. தேவனை ஆவியிலும் உண்மையிலும் ஆராதிப்பது என்ற முறையில் அவர் ஏற்றுக்கொள்ளும் ஆராதனையைச் செய்யும்படி சபையார் நாட வேண்டும் என்று ஆசிரியர் காண்பிக்க முடியும். ஆராதனையில் தேவன் விரும்புகின்றவைகளை அவர் நமக்குக் கொடுத்திருக்கின்றார். நாம் செய்யும்படி அறிவுறுத்தியுள்ளவற்றில் இருந்து ஒன்றையும் எடுத்துப் போடவோ, அல்லது அவற்றுடன் ஒன்றையும் கூட்டவோ கூடாது என்று அவர் நம்மைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

பாடம் 8. "உங்களின் நித்திய அடைவிடம் எதுவாயிருக்கும்?" என்ற பாடம், மன்னிக்கப்படாத பாவிகள் மற்றும் மன்னிக்கப்பட்ட பாவிகள் என்ற இருவகை மக்கள் மட்டுமே உள்ளனர் என்று எடுத்துரைக்கின்றது. தேவனுடைய தர அளவைகள் எல்லாராலும் மீறப்பட்டுள்ள காரணத்தால் எல்லாரும் பாவிகளாகவே இருக்கின்றோம். மன்னிக்கப்படாத பாவிகளின் அடைவிடம் என்பது பெருந்துன்பம் உடையதாக, நித்திய தண்டனைக் குரியதாக இருக்கையில், மன்னிக்கப்பட்ட பாவிகளின் அடைவிடம் என்பது பரலோகத்தில் தேவனுடன் நித்திய பேரின்பத்தில் திளைப்பதாக இருக்கும். தேவனுக்குக் கீழ்ப்படிகின்றவர்கள் மன்னிக்கப்படுகின்றனர், மற்றும் அவருக்குக் கீழ்ப்படியாதவர்கள் மன்னிக்கப்படாதவர்களாய்

GTG LIBRARY- BANGALORE

இருக்கின்றனர். தேவனுடைய சித்தத்திற்கு மனித குலத்தின் பதில் செயலைப் பொறுத்தே மனித குலத்தின் நித்திய அடைவிடம் நிர்ணயிக்கப்படும்.

யோசனைகள்

தக்க வகையில் புரிந்து கொள்ளப்பட்டு, எடுத்துரைக்கப்படும் பொழுது, இந்த எட்டுப் பாடங்களும் ஒரு மாணவர் தம்முடைய இரட்சிப்பு இயேசுவைச் சார்ந்துள்ளது என்று உணர்ந்தறியச் செய்வதுடன், தாம் அவர் மீது விசுவாசத்துடனும் அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிதலுடனும் வாழ வேண்டும் என்பதையும் மாணவர் உணரச் செய்கின்றன. இயேசுவின் அதிகாரம், தேவனுடைய கிருபை, தேவனுடைய அன்பு, இயேசுவை தேவனுடைய குமாரன் என்ற வகையில் கனப்படுத்துதல் மற்றும் இயேசுவுடன் தனிப்பட்ட வகையில் உறவு கொள்ளுதல் ஆகியவற்றை வலியுறுத்தாத எந்த ஒரு எடுத்துரைப்பும் இந்தப் பாடங்களை முன் வைக்கையில் ஆசிரியர் கொண்டிருக்க வேண்டிய இலக்குகளில் குறைவுபடும்.

ஆசிரியர் இந்த *வழிகாட்டி* நூலில் உள்ள எட்டுப் பாடங்களையும் நன்கு அறிந்த பிறகு அவர் தாம் எடுத்துரைக்கப் போகும் பாடத்தின் மீது கவனம் செலுத்த வேண்டும். அவர் பாடம் முழுவதையும் வாசித்து அதில் உள்ள எல்லாக் கருத்துக்களையும் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். பாடத்தில் உள்ள வேத வசனப்பகுதிகள் எல்லாவற்றையும் எடுத்து அவை எவ்விதத்தில் பாடத்திற்கு ஏற்புடையவைகளாய் உள்ளன என்பதை அவர் அறிய வேண்டும். இதைச் செய்த பிறகு, அவர் பாடத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் எவ்விதம் எடுத்துரைப்பது என்று சிந்திக்கத் தயாராகின்றார்.

ஒவ்வொரு பாடத்திற்கும் ஆசிரியர் தம்மைத் தயாரிக்கவும், எடுத்துரைக்கவும் அடுத்து வரும் கருத்துக்கள் தரப்படுகின்றன. இந்த *ஆசிரியர் வழிகாட்டி* நூலில் உள்ள ஆலோசனைப்படி கருத்துக்களை அப்படியே பயன்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை, ஆனால் ஒவ்வொரு பாடத்தையும் எடுத்துரைக்குமுன்பு ஆசிரியர் இந்த *வழிகாட்டி* நூலில் உள்ள கருத்துக்களைப் புரிந்து கொள்ள நேரம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

GTG LIBRARY- BANGALORE

சுவிசேஷத்துவம்

"என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர் களாக்குவேன்" (மாற். 1:17). இந்த வார்த்தைகளினால் இயேசு அர்த்தப்படுத்தியது என்ன? பிழைப்புக்காக மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்களுக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டது. அவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தார்கள்; இப்பொழுது அவர்கள் மனிதரைப் பிடிப்பவர்களாவார்கள்! மாற்கு 1:17க்கு இணை வசனமான லூக்கா 5:10 இதை மிகத் தெளிவாகக் கொண்டு வருகின்றது: "பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனா யிருப்பாய்."

" 'பிடிக்க' என்பதற்கு லூக்கா பயன்படுத்தும் வார்த்தையானது zogreo என்ற கிரேக்க வேர்ச் சொல்லில் இருந்து வருகின்றது, இது உயிருடன் எடுத்தல் அல்லது உயிர் வாழப் பிடிபடுதல் என்ற நேரடி அர்த்தமுள்ளது ஆகும்."

டெலாஸ் மைல்ஸ்

சுவிசேஷத்துவத்தின் திறன் மிகு கொள்கைகள்

"இந்த ஆண்டில் சென்றடைந்த நபர்களின் எண்ணிக்கை 97 மற்றும் 98 என்பவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாடு மதிப்பிட முடியாத ஒரு ஆத்துமாவாகும்! அடையப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 15 மற்றும் 16 என்பவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாடு என்பது, ஒரு பிரிந்த இல்லமாகவோ, ஒருவரின் தந்தைக்குக் கிறிஸ்துவும் கிறிஸ்தவ ஐக்கியமும் தேவைப் படுவதாகவோ அல்லது ஆவிக்குரிய முன்னோடித்துவத்தில் வலிவானது முன்னேற்றமடையாமற்போன ஒரு இளைஞராகவோ இருக்கலாம்."

சார்லஸ் லிவிங்ஸ்டோன்

மக்களைச் சென்றடைய ஞாயிறு வேதாகமப் பள்ளியைப் பயன்படுத்துதல்

"கிறிஸ்தவர்களாகிய நாம் மற்ற நபர்களுக்குக் கடன்பட்டுள்ள முதல் ஊழியம் அவர்/அவள் கூறுவதைக் கவனித்தல் என்பதே ஆகும்."

டயட்ரிச் பொனோஃபர்

ஒன்று கூடி வாழ்தல்

GTG LIBRARY- BANGALORE

பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் ஆதார மூலம் எது?

I. படைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தவை எவை?

1. தேவன் ____________ ம் ____________ ம் படைத்தார். ஆதி. 1:1
2. தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது ____________. ஆதி. 1:31

II. ஏதேன் தோட்டத்தின் நடுவில் இருந்தது என்ன?

1. (ஏதேன்) தோட்டத்தின் நடுவில் ____________ மற்றும் ____________ அறியத்தக்க மரமும் மற்றும் ____________ மரமும் இருந்தன. ஆதி. 2:9
2. அவர்கள் நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் புசித்தால் அவர்கள் ____________. ஆதி. 2:17

III. ஏதேன் தோட்டத்தில் ஏவாள் எவ்விதம் சோதிக்கப்பட்டாள்?

1. பாம்பு, "நீங்கள் தோட்டத்திலுள்ள சகல மரங்களின் கனியையும் ____________ வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ?" என்றது. ஆதி. 3:1
2. (நன்மை தீமே அறியத்தக்க மரத்தின் கனியை) புசித்தால், தான் ____________ என்பதை ஏவாள் அறிந்திருந்தாள். ஆதி. 3:3
3. பாம்பு பின்வருமாறு கூறிற்று: அ. ____________ ஆதி. 3:4
   ஆ. ____________ ஆதி. 3:5
   இ. ____________ ஆதி. 3:5
4. அந்தக் கனியின் தன்மைகளாக ஏவாள் கண்டவை:
   அ. ____________ ஆதி. 3:6
   ஆ. ____________ ஆதி. 3:6
   இ. ____________ ஆதி. 3:6

IV. நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் புசித்ததால் ஏற்பட்ட விளைவுகள் யாவை?

1. அவர்கள் இருவருடைய கண்களும் ____________. ஆதி. 3:7
2. பாம்பு தன் ____________ நகர்ந்து செல்லும். ஆதி. 3:14
3. பெண் கர்ப்பவதியாயிருக்கையில்/பிள்ளை பெறுகையில் ____________ அடைவாள் மற்றும் ஆண் அவளை ____________. ஆதி. 3:16
4. பூமி ____________. ஆதி. 3:17 மற்றும் மனித குலம் ____________ த் திரும்பும். ஆதி. 3:19
5. தேவன், "மனிதன் ____________, ____________ அறியத் தக்கவனாய் ____________ ஒருவரைப் போல ஆனான்"

GTG LIBRARY- BANGALORE

என்று உரைத்தார். ஆதி. 3:22

V. *பிள்ளைகள் நன்மை தீமை அறிந்தவர்களாய் இவ்வுலகில் பிறக்கின்றார்களா?*

1. *பிள்ளைகளிடம் நன்மை தீமை அறியும் அறிவு _____________. உபா. 1:39*
2. *பிள்ளைகள் தீமையை __________________ ம் நன்மையை அறிந்திருப்பதில்லை. ஏசா. 7:16*
3. *ஒருவர் பார்வையற்றவராயிருந்தால் அவருக்குப் ____________ யோவா. 9:41*

VI. *பிள்ளைகள் பாவிகளாய்ப் பிறந்து பரலோக இராஜ்யத்திலிருந்து விலக்கப்பட்டுள்ளார்களா?*

1. *மகன், __________________________ அக்கிரமத்தைச் சுமப்பதில்லை. எசே. 18:20*
2. *மனுஷனுடைய ______________________ அவனுக்குள் உண்டாக்குகிற கர்த்தர் (சக. 12:1) ஆவிகளின் ______________________________ இருக்கிறார். எபி. 12:9. (பிர. 12:7ஐயும்காணவும்.)*
3. *பரலோக இராஜ்யம் சிறு ____________________________ ப் போன்றவர்களுடையதாக இருக்கின்றது. மத். 19:14*

Copyright 1992 - Gospel Light Pub. Co. Delight, AR 71940



கண்கள் திறக்கப்பட்டன
தேவனைப்போல் - நன்மை தீமை அறிதல்

பின் வருபவற்றால் பிள்ளைகள் பாவிகளாயிருக்கிறார்களா?

1. *சொந்த செயல்கள்? இல்லை*
2. *உடல் மூலமாக, பெற்றோர்களால்? இல்லை*
3. *ஆவி மூலமாக, தேவனால்? இல்லை*

GTG LIBRARY- BANGALORE

பாடத் தாளை எடுத்துரைத்தல்:

"பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் ஆதார மூலம் எது?"

"பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் ஆதார மூலம் எது?" என்ற இந்தப் பாடத் தாளானது தொடர்ந்து வரும் படிப்புகளுக்கு அடிப்படையை அமைப்பதால் நல்லதொரு தொடக்கப் பாடமாக இருக்க முடியும்.

நோக்கம்

ஆதாம், ஏவாள் ஆகியோரின் *பாவத்தின் விளைவாக,* இவ்வுலகில் பாவமும், உடல் ரீதியான மரணமும் நுழைந்திருப்பினும், அவர்கள் பாவத்தினால் உண்டான குற்றமானது தொடர்ந்து வந்த தலைமுறை யினரிடம் பகிரப்படவில்லை என்பதைக் காண்பிப்பதே "பாவம் மற்றும் மரணம்" என்ற பாடத் தாளின் நோக்கமாக உள்ளது. தேவனுடைய நல்ல படைப்பானது ஆதாம் மற்றும் ஏவாள் ஆகியோரின் பாவத்தினால் கறைப்பட்டது.

பாடச் சுருக்கம்

சுருக்கமாய்க் கூறினால், இந்தப்பாடம் தேவன் எல்லாவற்றையும் நல்லதாகவே படைத்தார். ஆனால் பாவத்தின் காரணமாக அவர் தமது நற்படைப்பின் மீது ஒரு சாபத்தை வைத்தார் என்று காண்பிக்கின்றது. ஆதாம், ஏவாள் ஆகியோரின் பாவத்தின் காரணமாக, பாவமும் நன்மை தீமை அறியும் அறிவும் இந்த உலகில் நுழைந்தது. ஆதாம் மற்றும் ஏவாள் ஆகியோரின் பாவத்தினால் பச்சிளம் குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர் என்றாலும், ஆதாம் ஏவாளின் பாவத்தினால் அக்குழந்தைகள் குற்றமுள்ள வர்களாகப் பிறப்பதில்லை.

அறிமுகம்

[இந்தப்பாடத்திற்குக் கற்பவரைத் தயார் செய்வதில் ஆசிரியர் அவர் (கற்பவர்) வேதாகமத்தை எவ்வளவு அறிந்துள்ளார் என்பதை உறுதிப் படுத்திக் கொள்ள விரும்பலாம். ஒரு நல்ல ஆரம்பம் என்பது பின்வருமாறு இருக்கலாம் (பின்வரும் கருத்தானது ஆசிரியர் ஒரு பாடத்தை எடுத்துரைக்

GTG LIBRARY- BANGALORE

கையில் வார்த்தைக்கு வார்த்தை அப்படியே கூற வேண்டிய எடுத்துரைப்பாக உள்ளது):]

நான் உங்களின் அறிவுக் கூர்மையை அவமானப்படுத்த விரும்ப வில்லை, ஆனால் நான் மிகவும் எளிமையான தகுதி நிலையிலிருந்து தொடங்க விரும்புகின்றேன், இதனால் நீங்கள் வேதாகமத்தின் இயல்பு மற்றும் அதன் கட்டமைப்பு பற்றிய உங்கள் புரிந்து கொள்ளுதலில் எந்த நிலையில் இருக்கின்றீர்கள் என்பதை நான் புரிந்து கொள்ள முடியும். வேதாகமம் இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்களா? அவை யாவை?

இவ்விரண்டில் எது அதிகமான பாடங்களைக் கொண்டுள்ளது என்பது உங்களுக்குத் தெரியுமா? பழைய ஏற்பாடா அல்லது புதிய ஏற்பாடா? [எது அதிகமான பாடங்களைக் கொண்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டு வதற்கு, புதிய ஏற்பாடு தொடங்கும் இடத்தில் வேதாகமத்தை விரித்து வைத்து, இரண்டு ஏற்பாடுகளின் அளவுக்கு இடையில் உள்ள ஒப்பீட்டைக் காண்பியுங்கள்.]

வேதாகமம் என்பது பல்வேறு எழுத்தாளர்கள் எழுதியவற்றின் தொகுப்பாக உள்ளது. முழு வேதாகமத்தில் 66 புத்தகங்கள் அடங்கியிருக்கின்றன. பழைய ஏற்பாடு 39 புத்தகங்களைக் கொண்டுள்ளது, மற்றும் புதிய ஏற்பாடு 27 புத்தகங்களைக் கொண்டுள்ளது.

வேதாகமத்தின் புத்தகங்கள் அவற்றின் அளவில், 2 யோவான் நிருபம் போல ஒரு பக்கத்திலிருந்து, சங்கீதம் புத்தகத்தைப் போல பல பக்கங்கள் வரையிலும் வேறுபடுகின்றன. ஒவ்வொரு புத்தகமும் அதிகாரங்களாகவும் (அத்தியாயங்கள்), ஒவ்வொரு அத்தியாயமும் வசனங்களாகவும் பகுக்கப் பட்டுள்ளது.

பழைய ஏற்பாட்டில் 4 பெரும் பிரிவுகள் உள்ளன: நியாயப்பிரமாணப் புத்தகங்கள் 5, வரலாற்றுப் புத்தகங்கள் 12, ஞானம் மற்றும் ஆராதனையின் புத்தகங்கள் (or) கவிதைப் புத்தகங்கள் 5 மற்றும் தீர்க்கதரிசனப் புத்தகங்கள் 17, இவை சில வேளைகளில் பெரிய தீர்க்கதரிசிகள் 5 என்றும் சிறிய தீர்க்கதரிசிகள் 12 என்றும் அந்தப் புத்தகங்களின் பாடங்களின் அளவின் அடிப்படையில் அவ்வாறு அழைக்கப்படுகின்றன. பெரிய தீர்க்கதரிசிகள் சிறிய தீர்க்கதரிசிகளை விட அதிகமானவைகளை எழுதியுள்ளனர்.

புதிய ஏற்பாட்டிலும் கூட 4 பெரும் பிரிவுகள் உள்ளன: இயேசுவின் வாழ்வு மற்றும் போதனைப் பற்றி 4 புத்தகங்கள், வரலாற்றுப் புத்தகம் 1, நிருபங்கள் 21 (இது சில வேளைகளில் பவுலின் நிருபங்கள் 13 மற்றும் பொது நிருபங்கள் 8 என்றும் பிரிக்கப்படுகின்றன), மற்றும் தீர்க்கதரிசனப் புத்தகம் 1.

இந்தப் பாடத்தில் நாம் வேதாகமத்தின் தொடக்கத்திலிருந்து ஆரம்பிக்கப் போகின்றோம் மற்றும் நாம் “பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் ஆதார மூலம் எது?” என்பது பற்றிய பாடத்தாள் (பக்கம் 149யைப் பார்க்கவும்) பற்றி ஆழ்ந்து சிந்திப்பதன் மூலம் படைப்பில் இருந்து தொடங்கப் போகின்றோம்.

GTG LIBRARY- BANGALORE

I. படைப்பு

1. படைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தவை எவை? ஆதியிலே தேவன் எவற்றைப் படைத்தார்? [கற்பவர்ஆதி. 1:1ஐ வாசிக்கட்டும்.] *தேவன் எதைப் படைத்தார்?* [கற்பவர் பதில் அளிக்கட்டும். கோடிட்ட இடங்களை ''வானத்தையும்'' மற்றும் ''பூமியையும்'' என்ற வார்த்தைகளினால் நிரப்பவும்.]

2. தேவன், தாம் படைத்தவைகள் எப்படியிருந்ததாகக் கண்டார்? [கற்பவர் ஆதி. 1:31ஐ வாசிக்கட்டும்.] *தேவனுடைய படைப்பு எப்படியிருந்தது?* [கற்பவர் பதில் அளிக்கட்டும், கோடிட்ட இடத்தை "நன்றாயிருந்தது" என்ற வார்த்தையினால் நிரப்பவும்.]

தேவன் படைத்திராத ஏதொன்றும் இருக்கின்றதா? தேவன் படைத்த எல்லாம் நன்றாயிருந்ததா? தேவன் எல்லாவற்றையுமே நன்றாகவே படைத்தார் என்றால், இப்பொழுது எல்லாமுமே நன்றாக இராதது ஏன்? இதைப் பற்றி தான் இப்பாடத்தின் பிற்பகுதியில் நாம் ஆராய்வோம்.

II. ஏதேன் தோட்டத்தில்

1. நாம் இப்பொழுது ஏதேன் தோட்டத்தைப் பற்றிச் சிந்திக்கப் போகின்றோம். ஏதேன் தோட்டத்தின் நடுவில் இருந்தது என்ன? [கற்பவர் ஆதி. 2:9ஐ வாசிக்கட்டும்.] *தோட்டத்தின் நடுவில் இரு வகையான மரங்கள் இருந்தனவா? தோட்டத்தின் நடுவில் இருந்த மரங்களுக்குக் கொடுக்கப் பட்ட பெயர்கள் என்ன?* [கோடிட்ட இடங்களை "நன்மை" மற்றும் "தீமை" மற்றும் "ஜீவன் தரும்" என்ற வார்த்தைகளைக் கொண்டு நிரப்பவும்.]

[பாடத்தாளின் *பின்புறத்தைத் திருப்பி* இரண்டு மரங்களை வரைந்து அவைகளுக்கு "நன்மை தீமை அறியும் மரம்" மற்றும் "ஜீவன் தரும் மரம்" என்று பெயரிடவும். உங்கள் வரைபடம் எவ்விதம் இருக்க வேண்டும் என்பதை அறிய இவ்வழிகாட்டி நூலில் இப்பாடத்திற்கான வரைபடத்தை பக்கம் 148ல் கவனிக்கவும். இரண்டு மரங்களை மாத்திரம் வரைய வேண்டும் மற்றும் ஆதாம் ஏவாள் ஆகியோரின் தலைகளைப் பெரியதாகவும், ஒவ்வொரு கண்ணுக்கும் ஒரு கோட்டை மட்டும் வரையவும். பாடத்தாளின் பின்புறத்தில் மற்றவைகளை வரைவதற்கு அதிகம் கருத்து அளிக்கும் இப்பாடத்தின் பிற்பகுதி வரையிலும் காத்திருங்கள்.]

வேதாகமத்தின் பெயர்கள் தனிச்சிறப்புடையவைகளாய் இருக்கின் றன. *அவைகள் "ஜீவன் தரும் மரம்" என்றும் "நன்மை தீமை அறியத்தக்க மரம்'' என்றும் அழைக்கப்பட்டது ஏன்? ஆதாமும், ஏவாளும் அந்த மரங்களின் கனிகளைப் புசித்தால் அவைகளின் பெயரில் உள்ள "ஜீவன்" மற்றும் ''நன்மை தீமை பற்றிய அறிவு'' ஆகியவற்றைப் பெறுவார்கள் என்பதால் அம்மரங்கள் அப்பெயர்களைக் கொண்டிருந்தன என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?*

2. அவர்கள், நன்மை தீமை அறியும் மரத்தின் கனியைப் புசித்தால் என்ன நடக்கும் என்று தேவன் கூறினார்? [கற்பவர் ஆதி. 2:17ஐ வாசிக்கட்டும்] *நன்மை தீமை அறியும் மரத்தின் கனியை உண்டால் அவர்களுக்கு என்ன நடக்கும்?* [''சாவார்கள்'' என்ற வார்த்தையைக்

GTG LIBRARY- BANGALORE

கோடிட்ட இடத்தில் நிரப்பவும்.]

இப்பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? நாம் செய்கின்ற ஒவ்வொன்றிற்கும் நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய நிலையில் தேவன் நம்மை வைத்துள்ளார் என்று நாம் கற்றுக் கொண்டுள்ளோம். நாம் செய்கின்ற ஒவ்வொன்றும் நம்மை உடல்ரீதியாகவோ, உணர்வு ரீதியாகவோ, மனதளவிலோ, சமூகத்தளவிலோ, ஒழுக்க ரீதியிலோ, அல்லது ஆவிக்குரிய வகையிலோ ஏதாவதொரு வழியில் பாதிக்கின்றது. மரங்களிலிருந்து அவர்கள் உண்டால் அவர்களுடைய வாழ்க்கையைப் பாதிக்கும்.

III. சோதிக்கப்படுதல்

1. நன்மை தீமை அறியத் தக்க மரத்தின் கனியைப் புசிக்கும்படி ஏவாள் சோதிக்கப்பட்டதைப் பற்றி நாம் இப்பொழுது ஆலோசித்துப் பார்ப்போம். பாம்பு அவளை எவ்விதம் சோதித்தது? [கற்பவர் ஆதி. *3:1*ஐ வாசிக்கட்டும்.] *அவளைச் சோதிப்பதற்கு அவன் (சாத்தான்) கூறியது என்ன?* [கோடிட்ட இடத்தில் "புசிக்க" என்று எழுதி நிரப்பவும்.] *இது ஏவாளைச் சோதிக்கக் காரணமானது ஏன்? ஒருவேளை இது, தேவன் கூறியிருந்தவற்றின் மீது ஏவாள் கேள்வி கேட்கக் காரணமாயிற்றா?*

2. அந்த மரத்தின் கனியைப் புசித்தால் தனக்கு மரணம் ஏற்படும் என்று ஏவாள் அறிந்திருந்தாளா? [கற்பவர் ஆதி. *3:3*ஐ வாசிக்கட்டும்.] *அந்த மரத்தின் கனியைப் புசித்தால் என்ன நடக்கும் என்று தேவன் கூறியிருந்ததாக ஏவாள் சொன்னது என்ன?* [கோடிட்ட இடத்தில் "சாவோம்" என்று எழுதி நிரப்பவும்.]

3. பாம்பின் பதில் என்னவாக இருந்தது? [கற்பவர் ஆதி. *3:4, 5*ஐ வாசிக்கட்டும்.] *எந்த ஒரு விஷயம் நடக்காது என்றும், எந்த இரு விஷயங்கள் நடக்கும் என்றும் பாம்பு கூறிற்று?* [கோடிட்ட இடங்களில் பின்வருமாறு எழுதி நிரப்பவும்: அ. "நீங்கள் சாகவே சாவதில்லை"; ஆ. "உங்கள் கண்கள் திறக்கப்படும்"; இ. "நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல இருப்பீர்கள்."]

பாம்பு கூறிய இந்த மூன்று கூற்றுக்களில் எது பொய் மற்றும் எது உண்மையாய் இருந்தன? அவர்கள் சாவார்களா? அவர்கள் சாவார்கள் என்று தேவன் கூறியுள்ளார் என்பதை நாம் ஏற்கனவே கற்றுள்ளோம். எனவே இது உண்மையான கூற்றாக உள்ளது. ஆனால், கண்கள் திறக்கப்படும் மற்றும் நன்மை தீமை அறிவார்கள் என்ற கூற்றுக்களைப் பற்றிய விஷயம் என்ன? இந்தக் கூற்றுக்கள் உண்மையா அல்லது பொய்யா? இவைகளைப் பற்றி இப்பாடத்தின் பிற்பகுதியில் நாம் கற்றறிவோம்.

4. அந்தக் கனியைக் குறித்து ஏவாள் கண்டது என்ன? [கற்பவர் ஆதி. *3:6*ஐ வாசிக்கட்டும்.] *அந்த மரத்தின் கனியைக் குறித்து ஏவாள் கண்ட மூன்று விஷயங்கள் யாவை?* [கோடிட்ட இடங்களில் பின்வருமாறு எழுதி நிரப்பவும்: அ. "புசிப்புக்கு நல்லது;" ஆ. "பார்வைக்கு இன்பமானது;" இ. "புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத் தக்கது."] *அந்த மரத்தின் நன்மை அல்லது தீமை பற்றி ஏவாள் கவனம் செலுத்தினாளா? அந்த*

GTG LIBRARY- BANGALORE

மரத்தின் தீமையான செயல்விளைவு பற்றிக் கவனம் செலுத்தத் தவறியது தான் அவள் வஞ்சிக்கப்படக் காரணமாயிற்றா?

மரத்தின் கனியைப் பற்றி ஏவாள் விரும்பிய யாவையும் 1 யோவான் 2:16ல் குறிப்பிடப்பட்டுள்ள உலகத் தொடர்பான விஷயங்களே என்பதைக் கவனியுங்கள். உலகத்தின் கவர்ச்சிகரமான அதே விஷயங்களில் நாம் பாவம் செய்யும்படி சோதிக்கப்படுவதால் நம்மையும் அவளுடன் அடையாளப் படுத்த முடியும்.

நன்மை தீமை அறியும் மரத்தின் கனியைப் புசித்தால் மரணம் ஏற்படும் என்பதை அறிந்திருந்தும் கூட, ஏவாள் அக்கனியைப் புசித்தாள். நாமும் கூட நாம் செய்கின்ற செயல் பாவமென்று அறிந்திருந்தும் கூட, அப்படிப்பட்ட பல செயல்களைச் செய்கின்றோம். ஒருவேளை இந்தக் காரணத்தினாலேயே நாம் ஏவாள் செய்ததைக் குறித்து அவளிடம் அதிகம் இரக்கமற்றவர்களாய் உணர்வு பெற்றிருக்கக் கூடாது.

IV. விளைவுகள்

1. நன்மை மற்றும் தீமை ஆகியவற்றை அறியும் அறிவைப் பெறும் மரத்தின் கனியை உண்டதால் ஏற்பட்ட விளைவுகளை நாம் இப்பொழுது ஆலோசனை செய்யப் போகின்றோம். ஆதாம் மற்றும் ஏவாள் ஆகியோரின் கண்களுக்கு என்னவாயிற்று? [கற்பவர் ஆதி. 3:7ஐ வாசிக்கட்டும்.] *அவர்களின் கண்களுக்கு என்ன செய்யப்பட்டது?* [கோடிட்ட இடத்தில் “திறக்கப்பட்டன” என்ற வார்த்தையை நிரப்பவும். தாளின் *பின்புறம்* உள்ள படத்தில் ஆதாம் மற்றும் ஏவாள் ஆகியோரின் கண்களைத் திறப்பது போலப் படம் வரையவும்.]

இது அவர்கள் அந்த வேளை வரைக்கும் தங்கள் கண்களை மூடிக் கொண்டு தோட்டத்தில் நடந்து கொண்டிருந்தனர் என்று அர்த்தப் படுத்துகின்றதா? இது அவர்களின் கண்கள் ஒழுக்கவுணர்வுக்கு, அதாவது நன்மை தீமையை அறியும் அறிவுக்கு மூடப்பட்டிருந்ததாகவும், அக்கனியை உண்ட செயலானது நன்மையையும் தீமையையும் அறியும்படி அவர்களின் கண்களைத் திறந்ததாகவும் அர்த்தப்படுத்துவதில்லையா? அவர்கள் அந்தக் கனியை உண்ணும் முன்பு நன்மை மற்றும் தீமை பற்றிய அறிவு இல்லாததினால் அவர்கள் நன்மை தீமையைப் பற்றிக் கவலை கொள்ளத் தேவையில்லாதிருந்தது, ஆனால் அவர்களின் கண்கள் திறக்கப்பட்ட பொழுது, தாங்கள் நிர்வாணமாய் இருந்ததை உணர்ந்தார்கள். அவர்கள் ஒழுக்க உணர்வு கொண்ட மனச் சான்றைப் பெற்றார்கள்.

2. பாம்பு எவ்விதம் தண்டிக்கப்பட்டது? [ஆதி. 3:14ஐ வாசியுங்கள்.] *இப்பொழுது முதல் அது எதினால் நகரும்?* [கோடிட்ட இடத்தில் “வயிற்றினால்” என்று எழுதி நிரப்புங்கள்.]

3. பெண் எவ்விதம் தண்டிக்கப்படுவாள்? [ஆதி. 3:16ஐ வாசியுங்கள்.] *குழந்தையைப் பெறும் பொழுது அவளுக்கு எது அதிகமாகும் மற்றும் மனிதன் அவள் மீது என்ன அதிகாரத்தைப் பெறுவான்?* [கோடிட்ட இடங்களில் “வேதனை” மற்றும் “ஆண்டு கொள்வான்” என்று எழுதி நிரப்பவும்.]

GTG LIBRARY- BANGALORE

4. தேவன் பூமிக்கு என்ன செய்தார்? [ஆதி. 3:17 வாசிக்கவும், மற்றும் கோடிட்ட இடத்தில் "சபிக்கப்பட்டிருக்கும்" என்று எழுதி நிரப்பவும்.] மற்றும் தேவன் வேறு எந்தத் தண்டனையை ஆதாமுக்கு வாக்களித்தார்? [ஆதி. 3:19ஐ வாசிக்கவும்] ஆதாம் எங்கு திரும்புவான்? [கோடிட்ட இடத்தில் "பூமிக்கு" என்று எழுதி நிரப்பவும்.]

5. மரத்தின் கனியை உண்ட செயல் ஆதாம் மற்றும் ஏவாள் ஆகியோரின் இயல்பைக் கெடுத்துப் போட்டதா? [ஆதி. 3:22ஐ வாசிக்கவும்.] மனிதன் யாரைப் போலானான் என்று தேவன் கூறினார்? [கோடிட்ட இடங்களில் ''நன்மை தீமை அறியத் தக்கவனாய்,'' ''நம்மில்'' என்ற வார்த்தைகளை எழுதி நிரப்பவும்.] மனிதன் எவ்வகையில் தேவனைப் போல ஆனான்? [நன்மை தீமை அறியத்தக்க வகையில். பாடத்தாளின் பின்புறத்தில் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கீழே "கண்கள் திறக்கப்பட்டன" என்று எழுதவும். மேலும் "நன்மை தீமை அறிவதில் தேவனைப் போல் ஆனார்கள்" என்றும் எழுதவும்.]

நன்மை தீமை அறியும் அறிவைப் பெறுதல் என்பது ஆதாம் ஏவாளின் இயல்பைக் கெடுத்துப் போட்டது என்று அர்த்தப்படுமேயானால், இது தேவன் கெட்டுப் போன இயல்புடையவராய் இருக்கின்றார் என்று அர்த்தப்படும், ஏனென்றால் தேவன் நன்மை தீமை அறியும் அறிவுடைய வராய் இருக்கின்றார்.

நன்மை தீமை அறியும் அறிவைக் கொண்டிருத்தல் என்பது நன்மைக்கும் தீமைக்கும் வேறுபாடு காணும் திறமையை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும், இந்த அறிவானது மனிதன் இப்பொழுது ஒழுக்க ரீதியான தேர்வைச் செய்ய வேண்டிய இக்கட்டான நிலையை எதிர்கொள்ள வேண்டும் என்று அர்த்தப்படுத்துகின்றது.

இப்பொழுது மனிதகுலம் தீமையைச் செய்யும்படி சோதிக்கப்பட முடியும். இதற்கு முன்பு, அவர்கள் ஒழுக்க ரீதியான தேர்ந்து கொள்ளு தலைக் குறித்துக் கவலைப்படத் தேவையற்றிருந்தது, ஏனென்றால் அவர்கள் நன்மை தீமை பற்றிய அறிவு இல்லாதிருந்தார்கள். இப்பொழுது அவர்கள் தவறான தேர்ந்து கொள்ளுதல்களை ஏற்படுத்த முடியும், மற்றும் அப்படிப்பட்ட தவறான தேர்ந்து கொள்ளுதல்கள் பாவம் நிறைந்த தேர்ந்து கொள்ளுதல்களாயிருக்கும். அந்த மரத்தின் கனியை அவர்கள் உண்ணும் முன்பு, அவர்கள் நன்மை தீமை பற்றிய அறிவுடையவர்களாய் இல்லாது இருந்தார்கள், மற்றும் இந்தக் காரணத்தினால் அவர்கள் பாவம் நிறைந்த தேர்ந்து கொள்ளுதல்களைச் செய்ய முடியாதிருந்தது.

V. ***பிள்ளைகள் நன்மை தீமையை அறிகின்றார்களா?***

1. பிள்ளைகள் இவ்வுலகில் பிறக்கும் பொழுது, அவர்கள் நன்மை தீமையை அறிகின்றார்களா? [உபா. 1:39ஐ வாசிக்கவும். கோடிட்ட இடத்தில் "இல்லை" என்று எழுதி நிரப்பவும்.]

2. அவர்களிடம் நன்மை தீமையை அறியும் அறிவு இல்லாததால், ஒழுக்க ரீதியான தேர்ந்து கொள்ளுதல்களை எவ்விதம் மேற்கொள்வது என்று அவர்கள் அறிந்துள்ளார்களா? [ஏசா. 7:16ஐ வாசிக்கவும்.] அவர்கள்

GTG LIBRARY- BANGALORE

எப்படிச் செய்வதென்று அறியாதுள்ளவைகள் *யாவை?* [கோடிட்ட இடங்களில் "வெறுக்கவும்" மற்றும் "தெரிந்து கொள்ளவும்" என்று எழுதி நிரப்பவும்.]

3. நன்மைக்கும் தீமைக்கும் இடையில் ஒன்றைத் தேர்ந்து கொள்ள ஒருவர் அறியாதிருந்தால், அவர் பாவம் செய்ய முடியுமா? [யோவா. 9:41ஐ வாசிக்கவும்.] ஒருவர் பார்வையற்றவராய் இருந்தால், அவரிடத்தில் என்ன இல்லை? [கோடிட்ட இடத்தில் "பாவமில்லை" என்று எழுதி நிரப்பவும்.]

''பார்வையற்றவர்'' என்பதன் மூலம் இயேசு எதனை அர்த்தப் படுத்துகின்றார்? அவர் உடல் ரீதியான பார்வையற்ற தன்மை பற்றிப் பேசுகின்றாரா? "பார்வையற்றவர்" என்பதன் மூலம் அவர் காண முடியாத நிலை அதாவது புரிந்து கொள்ள முடியாத நிலை பற்றி அர்த்தப் படுத்துவதில்லையா? புரிந்து கொள்ள முடியாத நபர் கணக்கு ஒப்புவிக்கத் தேவையில்லை என்று அவர் போதிப்பதில்லையா? மற்றும் இந்தக் காரணத்தினால் அவர் தேவனுக்கு முன்பாகப் பாவியென்று கருதப் படுவதில்லை என்று இயேசு போதிப்பதில்லையா? சிறுபிள்ளைகள் இந்தப் பிரிவில் அடங்குவதில்லையா?

VI. *பிள்ளைகள் பாவிகளாய்ப் பிறக்கின்றார்களா?*

1. நன்மை தீமை அறியாதவர்களாய் மற்றும் பாவம் செய்ய முடியாத வர்களாய்ச் சிறுவர்கள் இருக்கின்ற போது, அவர்கள் பெற்றோர்களி டமிருந்து பாவத்தைச் சுதந்தரித்து இவ்வுலகில் பாவிகளாய்ப் பிறப்பது என்பது சாத்தியமாகுமா? ஒரு மகன்/மகள் தனது தந்தையின்/தாயின் பாவத்தைச் சுமப்பதுண்டா? [எசே. 18:20ஐ வாசிக்கவும்.] மகன் *யாருடைய* பாவத்தைச் சுமப்பதில்லை? [கோடிட்ட இடத்தில் "தந்தையின்" என்று எழுதி நிரப்பவும்.] இவ்வசனம், ஒவ்வொரு நபரும் தனது பெற்றோரின் பாவத்தைக் *குறித்தல்ல,* ஆனால் தனது சொந்தப் பாவத்தைக் குறித்தே தேவனிடத்தில் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்று போதிப்பதில்லையா?

விளைவு மற்றும் *குற்றம்* ஆகிய இரண்டிற்கும் இடையில் வேறுபாடு ஒன்றை ஏற்படுத்துவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். ஆதாம் மற்றும் ஏவாள் ஆகியோரின் பாவத்தின் *விளைவாக* நாம் யாவருமே இறந்து போவோம். இருப்பினும், இது அவர்களின் பாவத்தின் காரணமாக நாம் *குற்றமுள்ளவர்களாகி,* பாவிகளாகக் கருதப்படுகின்றோம் என்று அர்த்தப் படுத்தவதில்லை. ஒரு மனிதன் தனது பிள்ளைகளை மிருகத்தனமாய் அடித்து இறக்கச் செய்வானென்றால், அவனது பாவத்தின் விளைவை அவர்கள் அனுபவிப்பார்கள், ஆனால் அவனது பாவத்தினால் அவர்கள் *குற்றம் உள்ளவர்களாக மாட்டார்கள்.*

2. ஒரு குழந்தை தனது ஆவியை யாரிடத்திலிருந்து பெறுகின்றது? [சக. 12:1ஐ வாசிக்கவும்.] மனுஷனுக்குள் தேவன் எதனை உண்டாக்குகின்றார்? [கோடிட்ட இடத்தில் ''ஆன்மா'' என்று எழுதி நிரப்பவும்.] ஆவிகளின் தகப்பன் யார்? [எபி. 12:9ஐ வாசிக்கவும்.] தேவன் ஆவிகளுக்கு என்னவாக இருக்கின்றார்? [கோடிட்ட இடத்தை "பிதாவாக" என்று எழுதி நிரப்பவும்.]

GTG LIBRARY- BANGALORE

நமது ஆவியை நாம் தேவனிடத்திலிருந்து பெறுகின்றோம் என்ற உண்மையானது (பிர. 12:7ஐயும் கவனிக்கவும்), நாம் பாவம் நிறைந்த ஆவியுடன் இவ்வுலகிற்கு வருவதில்லை என்று அர்த்தப்படுத்துகின்றது. ஏனெனில் அவ்வாறு நாம் வந்திருந்தால், தேவன் தீமையின் ஆதார மூலமாய் இருப்பாரல்லவா ஆனால் இது சாத்தியம் அல்ல (யாக். 1:13).

3. பரலோக இராஜ்யம் யாருடையதாக உள்ளது? [மத். 19:14ஐ வாசிக்கவும்.] *பரலோக இராஜ்யம் யாரைப் போன்றவர்களுடையதாக உள்ளது?* [கோடிட்ட இடத்தில் "பிள்ளைகளை" என்று எழுதி நிரப்பவும்.] சிறு குழந்தைகள் தீயவர்களாகவும், மோசமானவர்களாகவும் இருக்கின்றார்கள் என்றால், பரலோக இராஜ்யம் அவர்களைப் போன்றுள்ளவர்களுக்கு உரிமையானதாய் உள்ளதென்று எழுதப்பட்டுள்ளதே. ஆனால் சிறுபிள்ளைகள் தூய்மையும் தாழ்மையும் குற்றம் அறியாத் தன்மையும் உள்ளவர்களாய் இருப்பதால் பரலோக இராஜ்யம் அவர்களைப் போன்றவர்களுடையதாய் உள்ளது என்பதே உண்மையாகும். நிச்சயமாகவே பரலோக இராஜ்யம் சிறுபிள்ளைகளைப் போன்று அதாவது தூய்மையும், தாழ்மையும், குற்றமறியாத் தன்மையும் உள்ள மக்களுக்குரியதாகவே இருக்கின்றது.

[பாடத்தாளின் பின்புறத்தில் *"பிள்ளைகள் பின்வருவனவற்றால் பாவிகளாய் இருக்கின்றார்களா?:*

1. சொந்த செயல்கள்? ____________________

2. சரீரம் மூலமாகப் பெற்றோர்களினால்? ____________________

3. ஆவியின் மூலமாக, தேவனால்? ____________________

கற்பவர் கோடிட்ட இடங்களை நிரப்பட்டும். இந்தப் பாடத்திலிருந்து அவர் இந்த மூன்று கேள்விகளுக்கு "இல்லை" என்று பதில் அளிக்கக் கற்றிருக்க வேண்டும்.]

தொகுப்புரை

[பாடத்தைத் தொகுத்துரைப்பதில், கற்பவர் சரியாகப் பதில் அளிக்க முடிகின்றதா என்பதைக் காண்பதற்காக ஆசிரியர் முக்கிய தலைப்புகளில் உள்ள கேள்விகளைக் கேட்பதன் மூலம் பாடத்தைத் திருப்பிப் பார்க்கச் செல்வார். ஆசிரியர் கேள்வி கேட்க வேண்டும் மற்றும் மாணவர் அவற்றிற்குப் பதில் அளிக்க வேண்டும்.] இப்பாடத்தின் முக்கிய கேள்விகளுக்குப் பதில் அளித்தல் என்பதே இப்பாடத்தைத் தொகுத்துரைப்பதற்கு நமக்குள்ள நல்லதொரு வழியாகும்.

I. *படைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தவை எவை?* "மிக நல்ல வானங்களும் பூமியும்" என்பது சரியான பதிலாக இருக்கின்றது.

II. *ஏதேன் தோட்டத்தின் நடுவில் இருந்தது என்ன?* ஜீவனின் மரமும், நன்மை தீமை அறியும் அறிவைத் தரும் மரமும், இந்த மரத்தின் கனியைப் புசித்தால் அது அவர்களுக்கு இறப்பைக் கொண்டு வரும்.

III. *ஏதேன் தோட்டத்தில் ஏவாள் எவ்விதம் சோதிக்கப்பட்டாள்?* தேவனைக் கேள்வி கேட்கப் பாம்பு அவளை வழி நடத்திற்று, அதனால் அவள் நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியை உண்டால் சாவு ஏற்படும் என்று அறிந்திருந்தும், அதன் கவர்ச்சிகரமான குணங்களைக்

GTG LIBRARY- BANGALORE

கவனித்தாள். அதை அவள் உண்டால் இறந்து போவாள் என்பதைப் பாம்பு மறுத்துரைத்தது, மற்றும் அவர்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போலாவார்கள் என்றும் அது சுட்டிக்காண்பித்தது.

IV. *நன்மை தீமை அறியும் மரத்தின் கனியைப் புசித்ததால் ஏற்பட்ட விளைவுகள் யாவை?* பாம்பு தனது வயிற்றினால் நகர்ந்து செல்லும். பெண்ணானவள் பிள்ளையைப் பெறுகையில் மிகுந்த வேதனையை அனுபவிப்பாள் மற்றும் ஆண் அவளை ஆண்டு கொள்ளுவான். பூமியானது சபிக்கப்பட்டிருக்கும். அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு, தேவர்களைப் போல ஆகி நன்மை தீமை அறிந்தார்கள். அவர்கள் பூமிக்குத் திரும்புவார்கள், அதாவது இறந்து போவார்கள்.

V. *பிள்ளைகள் நன்மை தீமை அறிந்தவர்களாய் இவ்வுலகில் பிறக்கின்றார்களா?* பிள்ளைகள் நன்மை தீமை அறியாதவர்களாய் இவ்வுலகில் பிறக்கின்றனர், மற்றும் இந்தக் காரணத்தினால், அவர்கள் பாவமில்லாதவர்களாய் இருக்கின்றனர்.

VI. *பிள்ளைகள் பாவிகளாய்ப் பிறந்து பரலோக இராஜ்யத்திலிருந்து விலக்கப்பட்டுள்ளார்களா?* தகப்பனுடைய அக்கிரமத்தை மகன் சுமப்பதில்லை, மனிதனுக்குள் ஆவியை தேவனே உண்டாக்குகின்றார். ஆகையால் ஒரு குழந்தை தூய்மை மற்றும் குற்றமறியாத ஆவியுடன் பிறக்கின்றது. பரலோக இராஜ்யம் சிறு பிள்ளைகளைப் போன்றவர்களுடையதாயுள்ளது.

[ஆசிரியர் மாணவரிடம் பின்வருமாறு கேட்கலாம்: நீங்கள் பச்சிளம் குழந்தையாக இருக்கையில் ஞானஸ்நானப்படுத்தப்பட்டீர்களா? நீங்கள் எதற்காக ஞானஸ்நானப் படுத்தப்பட்டீர்கள் என்பதை அறிவீர்களா? நீங்கள் பிறக்கும் பொழுது ஒரு பாவியாகக் கருதப்பட்டு ஆக்கினைக் குள்ளாக்கப்பட்டீர்களா?

குழந்தை ஒரு பாவியாகவே பிறக்கின்றது என்பதை நிரூபிக்கப் பயன்படும் வசனப் பகுதியான சங். 51:5ஐ ஆசிரியர் ஆலோசிக்கலாம். இந்த வசனத்தைச் சிலர் நாம் இந்தப் பாடத்தாளில் கற்றுள்ளவற்றுக்கு முரணான வகையில் பிள்ளைகள் பாவிகளாய்ப் பிறக்கின்றனர் என்று நிரூபிக்கப் பயன்படுத்துவார்கள். இதை அவர்கள் NIV மற்றும் NRSV அல்லது இவ்வசனத்தின் தவறான பயன்பாடு போன்றவற்றின் மூலம் செய்கின்றனர். மூலமொழியான எபிரெயத்தில் இவ்வசனம் “இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்” என்று மட்டுமே உள்ளது.

இவ்வசனத்தில் தாவீது தம்மைத் தாழ்த்துவது போல, தாம் பிறந்த தீமையான சூழ்நிலையினால் பாதிக்கப்பட்ட தம் வாழ்வில் இருந்த குறைபாடுகளுக்காகப் புலம்பியது போலக் காணப்படுகின்றது. இது உண்மையென்றால், அவர், “நான் பிறந்த தீமையான சூழ்நிலையினால் நான் பிடிக்கப்பட்டு நான் இருக்கத் தொடங்கிய நாள் முதலாய் அதினால் பாதிக்கப்பட்டேன்” என்று மட்டுமே கூறினார் என்பதாகின்றது.

இதை, ஒரு நபர் உலகின் மோசமான குளிர் நிறைந்த பனிப் பகுதி ஒன்றில் இருக்கையில், ஒரு பனி நிறைந்த நாளில், “எனது தாய் ஒரு பனிப் புயலில் என்னைக் கர்ப்பந்தரித்தாள், மற்றும் பனி விழுந்த ஒரு மிகக்

GTG LIBRARY- BANGALORE

குளிரான இரவில் நான் பிறந்தேன், இது போன்ற உலகின் பகுதியொன்றில் நான் தங்கியிருப்பதில் வியப்பு எதுவுமில்லை'' என்று கூறுவதற்கு ஒப்பிடப்பட முடியும்.

இப்படிப்பட்ட ஒரு கூற்றானது, அவர் பனிப் புயலில் பிறந்ததால் தாம் ஒரு பனிப்பாறையாகப் பிறந்ததாக எண்ணினார் என்று மறைமுகமாய்க் குறிப்பிடாது. இதே போன்றுதான், துர்க்குணத்தில் உருவாகி, பாவத்தில் கர்ப்பந்தரித்ததாகத் தாவீது கூறிய கூற்றானது அவர் பாவியாய் இருந்தார் என்று கருதியதாக மறைமுகமாய் உணர்த்துவதாகாது. இந்தக் கூற்றானது, தாவீது தம் பிறப்பின் சூழ்நிலைகளைக் கருதிய கூற்றாக இருந்ததேயன்றி, தமது பிறப்பிற்குப் பின் தம் இயல்பைப் பற்றிக் கூறுவதாக இல்லை. அவர் பாவியாகப் பிறந்தார் என்று முடிவெடுத்தல் இவ்வசனத்தினால் மறைமுகமாய் உணர்த்தப்படாத ஒரு முடிவாக உள்ளது.

நன்மை தீமை அறியும் மரத்தின் கனியை ஆதாமும் ஏவாளும் உண்பதைத் தேவன் விரும்பாதிருந்தார் என்பதற்குக் காரணமாக தேவன் அவர்களுக்கு வருத்தம், கவலை மற்றும் குற்றம் ஆகிய அம்மரத்தின் விளைவு களைத் தர விரும்பவில்லை என்பதையும் ஆசிரியர் சுட்டிக்காட்டலாம். சிலவேளைகளில் தேவன் நமக்குச் சில விஷயங்களைத் தராதிருப்பதை நாம் அவருடைய அற்பத்தனம் என்று நினைக்கலாம், ஆனால் தேவனுடைய தடைகள் யாவும் நமது நன்மைக்கென்றே உள்ளன.

கற்பவர் இந்தப் பாடத்தை புரிந்து கொண்டுள்ளதை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகு, அடுத்த பாடத்திற்கான நேரத்தை ஏற்பாடு செய்யவும்.]

GTG LIBRARY- BANGALORE

தேவனுடைய திட்டம் என்ன?

I. தேவன் ஆபிரகாமிடம் வெளிப்படுத்திய திட்டம் என்ன?

1. ஆபிரகாமை ஒரு பெரிய ____________________ ஆக்குவதாகத் தேவன் வாக்களித்தார். ஆதி. 12:1, 2
2. பூமியில் உள்ள வம்சங்களெல்லாம் அவர் மூலமாக ____________________ ஆதி. 12:3
3. சந்ததியான ____________________ வின் மூலம் ஆசீர்வாதம் வந்தது. ஆதி. 22:18; கலா. 3:16

II. மாபெரும் இனம் எவ்விதம் பலுகி பெறுகினது?

1. ____________________ என்று பெயர் மாற்றப்பட்ட யாக்கோபை (ஆதி. 32:28) ____________________ தேசத்தில் ஒரு பெரிய இனமாக்குவதாகத் தேவன் வாக்களித்தார். ஆதி. 46:2, 3
2. எகிப்துக்குச் சென்ற ____________________ எண்ணிக்கையிலானவர்களில் இருந்து (யாத். 1:5) இஸ்ரவேலர்கள் புறப்படும் பொழுது, லேவிகோத்திரத்தின் ____________________ ஆண்கள் தவிர (எண். 3:39) ____________________ யுத்த வீரர்கள் எகிப்திலிருந்து வெளி வந்தார்கள். எண். 1:45, 46

III. இஸ்ரவேல் நாட்டின் சட்டமாயிருந்தது எது?

1. அவர்களின் சட்டமானது ____________________ (உபா. 4:2, 5) அவர்களுக்கு ஒரு ____________________ மக்கள் என்ற வகையில் (உபா. 4:7, 8) கட்டளையிடப்பட்டது.
2. இந்த சட்டத்தை அவர்கள் உரிமையாக்கிக் கொள்ளும் ____________________ கடைப்பிடிக்க வேண்டியிருந்தது. உபா. 4:5
3. தேவன் பத்துக் கட்டளைகள் என்ற ____________________ யும் அவர்களுடன் ஏற்படுத்தினார். உபா. 4:13
4. உடன்படிக்கையை அவர்கள் கடைப்பிடித்தால் அவர்கள் ____________________, ____________________, ____________________ தேவன் கிருபை அருளுவார். உபா. 5:33
5. உடன்படிக்கையை அவர்கள் மீறினால் (லேவி. 26:14, 15) தேவன் இனங்களுக்குள் அவர்களைச் ____________________ அவர்கள் தேசத்தைப் பாழாக்குவார். லேவி. 26:33

IV. முதல் உடன்படிக்கையில் இருந்த பிரச்சனை என்ன? எபி. 8:6, 7

1. நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்தவர்கள் ____________________ கீழ் இருந்தார்கள். கலா. 3:10
2. அது ____________________ மற்றும் ____________________ ஊழியமாய் இருந்தது. 2 கொரி. 3:6, 7, 9
3. அதை மீறியவர்கள் ____________________ பெறாமல்

GTG LIBRARY- BANGALORE

இறந்தார்கள். எபி. 10:28

V. இரக்கத்தை அருளுவதற்குத் தேவன் என்ன செய்வார்?

1. தேவன் முதலாம் உடன்படிக்கையைப் போல் ______________ ஒரு ______________ உடன்படிக்கையை வாக்களித்தார். எரே. 31:31, 32
2. தேவன் இரண்டாம் உடன்படிக்கையின் கீழ், தாம் ______________ இருப்பதாகக் கூறினார். எபி. 8:12
3. இயேசு ______________ உடன்படிக்கையின் கீழ், மீறுதல்களுக்காக மரித்தார். எபி. 9:15
4. இயேசுவின் ______________ புதிய உடன்படிக்கை உறுதிப் படுத்தப்பட்டது. எபி. 9:16, 17
5. இரண்டாவதை ______________ அவர், முதலாவதை ______________. எபி. 10:9
6. இரண்டாம் உடன்படிக்கை மேன்மையானதாகவும் ______________ வாக்குத்தத்தங்கள் உடையதாகவும் இருக்கின்றது. எபி. 8:6; 1 பேது. 1:3, 4

Copyright 1987 Gospel Light Pub. Co. Delight, AR 71940



GTG LIBRARY- BANGALORE

பாடத் தாளை எடுத்துரைத்தல்:

“தேவனுடைய திட்டம் என்ன?”

“தேவனுடைய திட்டம் என்ன?” என்ற பாடத் தாளை ஒரு தொடக்கப் பாடத் தாளாகப் பயன்படுத்த முடியும், அல்லது இது, “பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் ஆதார மூலம் எது” என்ற பாடத் தாளைத் தொடர்ந்து வர முடியும்.

நோக்கம்

தொடக்கத்திலிருந்தே தேவன் ஒரு திட்டத்தைக் கொண்டிருந்தார் என்று காண்பித்தலே “தேவனுடைய திட்டம் என்ன?” என்ற பாடத் தாளின் நோக்கமாக உள்ளது. இந்தப் பாடத்தில் ஆசிரியர், பழைய ஏற்பாடு என்பது இஸ்ரவேல் இனம் என்ற ஒரு இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு வழி காட்டுதலை அளித்தது மற்றும் புதிய ஏற்பாடு என்பது கிறிஸ்தவர்களுக்கு வழிகாட்டியாக உள்ளது என்று காண்பிக்க முடியும்.

பாடச் சுருக்கம்

ஆபிரகாமை ஒரு பெரிய இனமாக்கி அவரது சந்ததியான கிறிஸ்து வுக்குள் பூமியின் சகல இனங்களையும் ஆசீர்வதித்தல் என்ற தமது திட்டத்தை, தேவன் ஆபிரகாமிடம் வெளிப்படுத்தினார். இந்த இனம் எகிப்தில் வளர்ந்து மேம்பட்டது. அவர்களுக்குத் தேவன் சீனாய் மலையில் மோசேயின் மூலமாக ஒரு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். இந்த நியாயப்பிரமாணம் அவர்களுக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வரவில்லை, அதற்குப் பதிலாக அவர்களை ஒரு சாபத்தின் கீழ் வைத்தது. தேவன் வாக்களித்திருந்தபடி, இயேசுவின் மூலமாகவே ஆசீர்வாதம் வந்தது.

அறிமுகம்

[ஆசிரியர் முதலில் “பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் ஆதாரமூலம் எது?” என்ற பாடத் தாளைப் பயன்படுத்தியிருந்தால், அவர் அந்தப் பாடத்தாளை (இப்பொழுது) சுருக்கமாய் மீள்பார்வையிட வேண்டும்.] ஆதாம் ஏவாள் மூலமாக பாவம் இவ்வுலகினுள் வந்தது. இது நடக்கும் என்று தேவன் முன்னமே அறிந்திருந்தார், எனவே பாவமன்னிப்பைக் கொண்டு

GTG LIBRARY- BANGALORE

வரக் கூடிய திட்டம் ஒன்றை அவர் ஏற்கனவே வகுத்து வைத்திருந்தார். தேவனுடைய அந்தத் திட்டத்தை இந்தப் பாடம் எடுத்துரைக்கும்.

I. திட்டம் வெளிப்படுத்தப்பட்டது

1. தேவனுடைய திட்டத்தைக் கவனிப்பதில், நாம் வேதாகமத்தின் தொடக்கப் பகுதிக்கு நெருங்கி, வேதாகமத்தின் தொடக்கத்தின் வெகு அருகாமையிலிருந்து தொடங்க வேண்டும். ஆபிரகாம் என்று பிற்பாடு பெயர் மாற்றப்பட்ட ஆபிராமிடம் தேவன் தமது திட்டத்தை வெளிப் படுத்தினார். *(ஆதி. 17:5; "ஆபிராம்" என்றால் "மேன்மையான தந்தை" என்று அர்த்தமாகும் மற்றும் "ஆபிரகாம்" என்றால் "திரளான இனங்களின் தந்தை" என்று அர்த்தமாகும்.)*

தேவனுடைய வாக்குத்தத்தத்தில் இரு முக்கிய அம்சங்கள் உள்ளடங்கி யிருந்தன. ஆபிராம் தம் சொந்த நாட்டை விட்டு வந்தால் அவருக்கு என்ன செய்வதாகத் தேவன் வாக்களித்தார்? [ஆதி. 12:1, 2ஐ வாசிக்கவும்.] *தேவன் ஆபிராமை ஒரு பெரிய எதுவாக்குவதாக வாக்களித்தார்?* [கோடிட்ட இடத்தில் "இனம்" என்று எழுதி நிரப்பவும்.]

2. *தேவன் இன்னொரு பெரிய வாக்குத்தத்தத்தையும் உள்ளடக்கினார். அது என்னவாக இருந்தது?* [ஆதி. 12:3ஐ வாசிக்கவும்.] *ஆபிராமின் மூலம் பூமியில் உள்ள சகல இனங்களுக்கும் என்ன செய்யப்படும்?* [கோடிட்ட இடத்தில் "ஆசீர்வதிக்கப்படும்" என்று எழுதி நிரப்பவும்.]

[பாடத் தாளின் பின்புறம் "ஆபிரகாம்" என்றெழுதி, பின்பு 1. "இனம்" மற்றும் 2. "ஆசீர்வாதம்" என்று எழுதவும். (பக்கம் 160யைப் பார்க்கவும்)]

3. *ஆசீர்வாதம் ஆபிரகாமின் மூலமாக வருவதாயிருப்பினும், அது ஆபிரகாமினால் அருளப்படுவதாய் இராது. இது எவ்வாறு நிறைவேற்றப் படும்?* [ஆதி. 22:18 மற்றும் கலா. 3:16 ஆகிய வசனங்களை வாசிக்கவும்.] *ஆபிரகாமின் ஒரு சந்ததி மூலமாக ஆசீர்வாதம் அளிக்கப்பட வேண்டிய தாயிருந்தது. அந்த சந்ததி யார்?* [கோடிட்ட இடத்தில் "கிறிஸ்து" என்று எழுதி நிரப்பவும்.] கிறிஸ்து கொண்டு வருவதாய் இருந்த ஆசீர்வாதம் இஸ்ரவேல் இனத்திற்கானதாக மட்டுமின்றி பூமியின் சகல இனங் களுக்குமானதாக இருந்தது. [பாடத் தாளின் பின்புறத்தில் "ஆசீர்வாதம்" என்பதிலிருந்து தாளின் மையப் பகுதி வரையிலும் ஒரு கோட்டை வரைந்து, அங்கு "சந்ததி" என்று எழுதவும். பின்பு தாளின் வலது புறம் நோக்கி ஒரு வளைகோடு வரைந்து, அங்கு சிலுவையின் படம் ஒன்றை வரையவும். (பக்கம் 160ஐப் பார்க்கவும்)]

ஆபிரகாமுக்கு அருளப்பட்ட இந்த இரண்டு வாக்குத்தத்தங்களின் அடிப்படையில் வேதாகமம் இரு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆபிரகாமிடத்திலிருந்து வளர்ந்து பெருகின இனத்தைப் பற்றியதே பழைய ஏற்பாட்டின் முக்கிய அக்கறையாகவும், இயேசு கிறிஸ்துவின் மூலம் வர முடிந்த ஆசீர்வாதங்கள் பற்றியதே புதிய ஏற்பாட்டின் அக்கறையாகவும் உள்ளன. இனம் என்பது பற்றி வாசிக்க ஒருவர் விரும்புவாரென்றால், அவர் பழைய ஏற்பாட்டில் அதை வாசிப்பார். ஆசீர்வாதம் என்பது பற்றி வாசிக்க ஒருவர் விரும்புவாரென்றால், அவர் புதிய ஏற்பாட்டில் அதை வாசிப்பார்.

GTG LIBRARY- BANGALORE

II. ***இனத்தின் வளர்ச்சி***

1. ஆதியாகமம் புத்தகத்தின் எஞ்சியுள்ள பகுதியானது அந்த மாபெரும் இனத்தின் வளர்ச்சிக்கு வழி நடத்திய நிகழ்ச்சிகளைப் பற்றியதாக உள்ளது. இந்த மாபெரும் இனத்தின் வளர்ச்சியில், யாக்கோபு மிக முக்கியமான மனிதராவார் என்ற காரணத்தினால், தேவன் அவரது பெயரை மாற்றினார். [ஆதி. *32:28*ஐ வாசிக்கவும்.] *யாக்கோபின் பெயரை தேவன் என்னவென்று மாற்றினார்?* [கோடிட்ட இடத்தில் "இஸ்ரவேல்" என்று எழுதி நிரப்பவும். இது "தேவனோடு போராடியவர்" என்று அர்த்தப்படும்.] *இஸ்ரவேலின் பிள்ளைகள் என்பவர்கள் யாக்கோபின் சந்ததியார்களாய் உள்ளனர். இந்தக் கருத்தை நீங்கள் வேதாகமத்தை வாசிக்கையில் உங்கள் சிந்தையில் வைக்கவும். இஸ்ரவேலின் இனம் மற்றும் பிள்ளைகள் என்பவர்கள் யாக்கோபின் சந்ததியாராய் இருந்தனர்.* [பாடத் தாளின் பின்புறத்தில் ''ஆபிரகாம்'' என்பதற்குக் கீழே அம்புக் குறியிட்டு ''ஈசாக்கு'' என்று எழுதவும், மற்றும் இவர் ஆபிரகாமின் மகன் என்று விளக்கம் தரவும். பின்பு அதன் கீழ் அம்புக் குறியிட்டு "யாக்கோபு (இஸ்ரவேல்)" என்று எழுதி, இவர் ஈசாக்கின் மகன் என்று விளக்கம் தரவும். யாக்கோபின் பெயருக்குக் கீழே அம்புக் குறியிட்டு ''*12*'' என்று எழுதி, யாக்கோபு பன்னிரெண்டு மகன்களைப் பெற்றிருந்தார், அவர்கள் மூலம் இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களும் வந்தன என்று விளக்கம் தரவும்.]

[இந்த வேளையில், *யாக்கோபின் மகன்கள் தங்களின் சகோதரனான யோசேப்பை வர்த்தகர்களிடம் விற்றதையும், அவர்கள் அவரை எகிப்துக்குக் கூட்டிச் சென்றதையும் ஆசிரியர் விளக்கப்படுத்த வேண்டும். அவர் (யோசேப்பு) போத்திபாரிடத்தில் ஊழியக்காரனாய் இருந்து, போத்திபாரின் மனைவியால் பொய்க் குற்றம் சாட்டப்பட்ட பிறகு, சிறையில் அடைக்கப்பட்டார், அங்கு அவர் சமையல்காரன் மற்றும் திராட்ச இரசம் தயாரிப்பவன் ஆகியோரின் கனவுகளுக்கு விளக்கம் தந்தார். பிற்பாடு திராட்ச இரசம் தயாரிப்பவன், கனவுகளால் இடர்ப்பாடு அடைந்த பார்வோனிடம், அவனது கனவுக்கு யோசேப்பினால் விளக்கம் தர முடியும் என்று கூறினான். யோசேப்பு பார்வோனின் கனவுக்கு விளக்கம் தந்ததினால், வரப் போகிற பஞ்சமான ஏழு ஆண்டுகளுக்குத் தானியத்தைப் பத்திரப்படுத்தும் வகையில் உணவுப் பொருட்களை வளமான ஏழு ஆண்டுகளில் சேகரித்து வைக்கும் பொறுப்பு அவரிடத்தில் ஒப்படைக்கப் பட்டது.*

பஞ்சம் வந்த பொழுது, யோசேப்பின் சகோதரர்களைத் தானியம் வாங்கி வரும்படி யாக்கோபு எகிப்துக்கு அனுப்பி வைத்தார். தானியம் வாங்குவதற்காக இரண்டாம் முறையாக அவர்கள் எகிப்துக்கு வந்த பிறகு, அவர்களிடத்தில் யோசேப்பு, தாம் அவர்களின் சகோதரன் என்பதை வெளிப்படுத்தினார். அவர்களின் தந்தையை எகிப்துக்கு அழைத்து வரும்படி அவர் (யோசேப்பு) கூறினார். அவர்கள் யாக்கோபிடம் எகிப்துக்கு வருமாறு கூறிய பொழுது, யாக்கோபு எகிப்துக்குச் செல்வதா வேண்டாமா என்று முடிவெடுக்க வேண்டியதாயிற்று. இதை அவர் யோசித்துக் கொண்டிருக்கை யில் தேவன் அவருக்குத் தோன்றினார்.]

GTG LIBRARY- BANGALORE

தேவன் யாக்கோபிடம் என்ன கூறினார்? [*ஆதி. 46:2, 3ஐ வாசிக்கவும்.*] *யாக்கோபின் சந்ததியார் எந்த நாட்டில் ஒரு பெரிய இனமாகப் பலுகுவார்கள்?* [கோடிட்ட இடத்தில் "எகிப்து" என்று எழுதி நிரப்பவும். பாடத் தாளின் பின்புறத்தில் ஒரு சதுரம் வரைந்து அதற்குள் "எகிப்து" என்று எழுதவும். (பக்கம் 160ஐப் பார்க்கவும்)]

2. யாக்கோபு தம் மகன்கள் யாவரையும் மற்றும் அவர்களின் பிள்ளைகளையும் எகிப்துக்கு அழைத்துச் சென்றார். அவருடன் எத்தனை பேர் சென்றார்கள்? [*யாத். 1:5ஐ வாசிக்கவும்.*] *யாக்கோபுடன் எகிப்துக்கு வந்தவர்கள் எத்தனை பேர்?* [கோடிட்ட இடத்தில் *"70"* என்று எழுதி நிரப்பவும்.]

இவர்கள் மிக விரைவில் பலுகிப் பெருகினார்கள் [*யாத். 1:7-9.*] மோசே அவர்களை எகிப்திலிருந்து புறப்படச் செய்த பிறகு, மக்களைத் தொகையிடும்படி மோசேயும் ஆரோனும் கட்டளை பெற்றார்கள். இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பில் யாரெல்லாம் உள்ளடக்கப்பட வேண்டியிருந்தது? [*எண். 1:1-3ஐ வாசிக்கவும்.*] அவர்களுடைய சேனையில் எத்தனை ஆண்கள் இருந்தனர்? [*எண். 1:45, 46ஐ வாசிக்கவும்.*] சேனையில் எத்தனை பேர் இருந்தார்கள் [கோடிட்ட இடத்தில் *603,550* என்று எழுதி நிரப்பவும்.] இந்த எண்ணிக்கையில் யார் சேர்க்கப்படவில்லை, மற்றும் ஏன்? [*எண். 1:45-50ஐ வாசிக்கவும்.*] இந்த மக்கள் தொகையில் லேவியர்கள் யுத்த வீரர்களுடன் உள்ளடக்கப்படவில்லை, ஏனென்றால் அவர்கள் இஸ்ரவேல் இனத்தின் மதத் தொடர்பான விஷயங்களைக் கவனிக்க வேண்டியிருந்தது.

லேவியர்களில் எத்தனை பேர் இருந்ததாகக் கணக்கிடப்பட்டனர்? [*எண். 3:39ஐ வாசிக்கவும்.*] [கோடிட்ட இடங்களில் *"22,000"* மற்றும் தாளின் பின்பக்கம் *"603,550"* மற்றும் *"22,000"* பேர் எகிப்திலிருந்து போனார்கள் என்று எழுதி நிரப்பவும்.(பக்கம் 160ஐ பார்க்கவும்)] இஸ்ரவேலில் *603,550* யுத்த வீரர்களும், லேவிகோத்திரத்தில் *22,000* ஆண்களும் இருந்தனர். இவ்வளவு யுத்த வீரர்களும், இவ்வளவு ஆசாரியர்களும் கொண்டிருந்த அந்த இனத்தின் முழுமையான மக்கள் தொகையானது முப்பது முதல் ஐம்பது இலட்சம் வரை இருந்திருக்க வேண்டும் என்று பல்வேறு மதிப்பீடுகள் எடுத்துரைக்கின்றன.

இஸ்ரவேல் என்ற இனமானது கானான் நாட்டில் ஒரு சிறு தொடக்கத்திலிருந்து தேவன் வாக்களித்திருந்தபடி மிகப் பெரும் திரள் கூட்டமாகப் பலுகிப் பெருகிற்று. [உங்களிடம் ஒரு வரைபடம் இருந்தால், ஆபிரகாம் பலஸ்தீன நாட்டிற்குப் பயணமானது மற்றும் அவரது சந்ததியார் எகிப்திற்கும் பிறகு சீனாய் மலைக்கும் சென்றது ஆகியவற்றை அதில் கண்டறியவும்.]

III. (இஸ்ரவேல்) நாட்டிற்கு/இனத்திற்குச் சட்டம்

1. இஸ்ரவேலின் (யாக்கோபின்) சந்ததியார் எகிப்துக்கு வருவதற்கு முன்பு, அவர்கள் ஒரு சிறு குடும்ப மக்களாயிருந்தார்கள் மற்றும் ஒரு இனம் என்ற வகையில் அவர்களுக்குச் சட்டமெதுவும் தேவைப்பட்டிருந்ததில்லை. அவர்கள் எகிப்தில் இருக்கையில், எகிப்தியரின் சட்டங்களைக் கடைப்

GTG LIBRARY- BANGALORE

பிடித்து வாழும்படி கட்டாயப்படுத்தப்பட்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுது அவர்கள் ஒரு சுயாதீனமுள்ள இனமாக வளர்ந்து மக்கள் எண்ணிக்கையில் பெருகியிருப்பார்கள், அவர்களுக்குத் தங்கள் இனம்/நாடு என்பதற்கான சட்டம் தேவைப்பட்டது.

சட்டத்தை அவர்களுக்குக் கொடுத்தவர் யார்? [உபா. 4:2, 5ஐ வாசிக்கவும்.] அவர்களுக்கு மோசே யாருடைய சட்டத்தைக் கொடுத்தார்? [கோடிட்ட இடத்தில் "கர்த்தருடையது" என்று எழுதி நிரப்பவும்.] இது உலகம் முழுவதற்குமான சட்டமாய் இருந்ததில்லை, ஆனால் அவர்களுக்கு மட்டுமே உரியதாக இருந்தது. [உபா. 4:7, 8ஐயும் மற்றும் சங். 147:19, 20ஐயும் வாசிக்கவும்.] அது அவர்களுக்கு எந்த வகையில் சட்டமாக இருந்தது? [கோடிட்ட இடத்தில் "இனம்/நாட்டு" என்று எழுதி நிரப்பவும்.] தேவன் அவர்களுக்குக் கொடுத்திருந்த இந்த நாட்டுச் சட்டமானது அவர்களுக்கு மதரீதியான மற்றும் ஒழுக்க ரீதியான சட்டமாகவும் இருந்தது.

2. இந்த சட்டத்தை அவர்கள் எங்கு கடைப்பிடிக்க வேண்டியிருந்தது? [உபா. 4:5ஐ வாசிக்கவும்.] அவர்கள் இதை எவ்விடத்தில் கடைப் பிடிக்க வேண்டியிருந்தது? [கோடிட்ட இடத்தில் "நாட்டில்" என்று எழுதி நிரப்பிக் கொள்ளவும்.] இந்தச் சட்டத்தின் இயல்பே, இது பூமியின் மற்ற குடிகளுக்கான சட்டமல்ல ஆனால் அதற்கு மாறாக இது இஸ்ரவேல் நாட்டில் வாழ்ந்த மக்களுக்கான சட்டமாயிருந்தது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது.

இஸ்ரவேல் நாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் வாழ்ந்தவர்களுக்கு இந்தச் சட்டம் உண்டாக்கும் பிரச்சனைகளைக் கவனித்துப் பாருங்கள். (யூத இனத்தின்) சகல ஆண்களும் தேவன் தேர்ந்து கொண்ட இடமான எருசலேமிற்கு, ஆண்டிற்கு மூன்று முறை வர வேண்டியிருந்தது (உபா. 16:16). இந்த இடத்தில்தான் அவர்கள் தேவனை நாடி, தசம பாகத்தையும் காணிக்கை/பலிகளையும் கொண்டு வர வேண்டியதாயிருந்தது (உபா. 12:5-11; 14:22-25). சட்டரீதியான விஷயங்கள் அந்த இடத்தில்தான் முடிவு செய்யப்பட வேண்டியிருந்தன (உபா. 17:8, 9). மனிதரைக் கொலை செய்தவன் எவனும் இஸ்ரவேலில் இருந்த அடைக்கல நகர்கள் ஆறில் ஏதாவது ஒன்றிற்கு ஓடி ஒளிய வேண்டிய தாயிருந்தது (எண். 35:6). இது இஸ்ரவேலர்கள் தங்களின் நாட்டில் கீழ்ப்படிவதற்கான சட்டமாய் இருந்தது.

3. அவர்களின் சட்டங்கள் மற்றும் நியாயத்தீர்ப்புகள் ஆகியவற்றிற்கு அப்பால், அவர்களின் சட்டமானது இன்னொரு அம்சத்தையும் கொண்டிருந்தது. இது எவற்றை உள்ளடக்கியிருந்தது? [உபா. 4:13, 14 ஐ வாசிக்கவும்.] தேவன் அவர்களுடன் எதனை ஏற்படுத்தினார்? [கோடிட்ட இடத்தில் "உடன்படிக்கை" என்று எழுதிக் கொள்ளவும். பாடத் தாளின் பின்புறத்தில் மலை ஒன்றின் படம் வரைந்து அதை "சீனாய் மலை" என்று குறிப்பிடவும், மற்றும் அதன் கீழ், ''உடன்படிக்கை'' என்றும் பிறகு ''பத்துக்கட்டளைகள்'' என்றும் எழுதிக் கொள்ளவும். (பக்கம் 160ஐப் பார்க்கவும்)]

உடன்படிக்கை என்றால் என்ன? உடன்படிக்கை என்பது ஒரு

GTG LIBRARY- BANGALORE

முறையான ஒப்பந்தம் ஆகும். தேவன் இஸ்ரவேலுடன் ஒரு ஒப்பந்தத்தை, ஏற்படுத்தினார். பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடித்தல் என்பது அந்த ஒப்பந்தத்தில் இஸ்ரவேலரின் பொறுப்பாக இருந்தது.

4. உடன்படிக்கையின் அந்த பாகமான பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடித்து நடந்தால் இஸ்ரவேலருக்கு என்ன செய்வதாக தேவன் ஒப்பந்தம் செய்தார்? [உபா. 5:33ஐ வாசிக்கவும்.] பத்துக் கட்டளையை அவர்களுக்குத் தந்த பிறகு இதைத்தான் அவர் வாக்களித்ததாக இருக்கின்றது (உபா. 5:1-21). இதை அவர்கள் கடைப்பிடித்து நடந்தால் அவர்களுக்கு என்ன செய்வதாக வாக்களித்தார்? அவர்கள் என்னவாக ஆவார்கள்? [கோடிட்ட இடங்களில், "நாட்டில்," "பிழைத்து," "சுகித்து நீடித்திருக்கும் படி" என்று எழுதி நிரப்பவும்.] இஸ்ரவேலுக்குச் செய்வதாகத் தேவன் தம்மைத் தாமே நிர்ப்பந்தித்துக் கொண்டவற்றைக் கவனியுங்கள். *அவர்களுக்கு உலகப் பிரகாரமான ஆசீர்வாதங்களை அளிப்பதாக அவர் வாக்களித்தார்.*

5. அவர்கள் உடன்படிக்கையை மீறினால், தேவன் அவர்களுக்கு என்ன செய்வார்? [லேவி. 26:14, 15, 33ஐ வாசிக்கவும்.] அவர்களின் நாடு அவர்களிடமிருந்து பறித்துக் கொள்ளப்படும், மற்றும் என்ன நடக்கும்? [கோடிட்ட இடத்தில் "சிதற அடித்து" என்று எழுதிக் கொள்ளவும்.] யூத மக்கள் இன்று ஏன் சிதறடிக்கப்பட்டுள்ளார்கள்? தேவன் அவர்களுடன் ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கையை அவர்கள் மீறியதால் அவர்கள் சிதறடிக்கப்பட்டுள்ளார்கள். இதன் ஒரு பாகமாக, அவர்கள் சிதற அடிக்கப்பட்ட இடங்களில் உள்ள எல்லா மக்களுக்குள்ளும் அவர்கள் ஒரு "பழமொழியாய்" இருக்கின்றார்கள் (உபா. 28:37).

IV. *பிரச்சனை*

1. தேவன் இஸ்ரவேலுக்குக் கொடுத்திருந்த சட்டம் ஒரு நல்ல தராதரம் உள்ளதாக இருந்தது, ஆனால் தேவன் அதனுள் நோக்கம் நிறைந்த வகையில் ஒரு பிரச்சனையைக் கட்டி எழுப்பி வைத்திருந்தார் (எபி. 8:6, 7). அதற்குள்ளாகவே ஒரு பிழை கட்டி வைக்கப்பட வேண்டியிருந்தது.

நியாயப்பிரமாணத்தில் இருந்த பிழை என்ன? அதைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு அது செய்ததென்ன? [கலா. 3:10ஐ வாசிக்கவும்.] அதன் கீழ் இருந்தவர்கள் எதன் கீழ் இருந்தார்கள்? [கோடிட்ட இடத்தில் "சாபத்தின்" என்று எழுதி நிரப்பவும்.] அவர்கள் ஏன் சாபத்தின் கீழ் இருந்தார்கள்? அவர்கள் நியாயப்பிரமாணத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் தவறு எதுவும் செய்யாமல் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது என்ற உண்மையின் கீழ் இருந்தனர் என்ற அடிப்படையில் அவர்கள் சாபத்தின் கீழ் இருந்தார்கள், (கலா. 3:10). ஒருவர் கூட இதைச் செய்திருந்ததில்லை.

2. இந்தக் காரணத்தினால், அது என்ன வகையான அமைப்பென்று கருதப்பட முடிந்தது? [2 கொரி. 3:6, 7, 9ஐ வாசிக்கவும்.] அது என்ன வகையான ஊழியமாய் இருந்தது? [கோடிட்ட இடங்களில் "மரணத்துக் கேதுவான," "ஆக்கினைத் தீர்ப்புக் கொடுக்கும்" என்று எழுதி நிரப்பவும்.] நியாயப்பிரமாணத்தை மீறியவர்கள் வழக்கமாக மரண தண்டனை

GTG LIBRARY- BANGALORE

பெற்றதால் அது மரணத்துக்கேதுவான ஊழியமாக இருந்தது. நியாயப் பிரமாணத்தைத் திட்டவட்டமாக மீறிய எவருக்கும் மன்னிப்பு அளிப்பதற் கான ஏற்பாடு எதுவும் ஏற்படுத்தப்பட்டிருந்ததில்லை (எண். 15:27-31).

3. நியாயப்பிரமாணத்தைத் திட்டவட்டமாய் மீறியவர்களுக்கு என்ன நடந்தது? [எபி. 10:28ஐ வாசிக்கவும்.] அவர்கள் எதைப் பெறாமல் சாக வேண்டியதாயிற்று? [கோடிட்ட இடத்தில் "இரக்கம்" என்று எழுதி நிரப்பவும்.] [பாடத் தாளின் பின்புறத்தில் (பக்கம் 160ஐப் பார்க்கவும்) மலையின் கீழ்ப்பகுதியில் பின்வருமாறு வரிசையாக எழுதவும்: "1. சாபம்"; "2. மரணம்"; "3. ஆக்கினைத் தீர்ப்பு"; "4. இரக்கம் இல்லை"; "5. கிருபையில்லை (கலா. 5:4)."] ஆபிரகாமின் சந்ததியின் மூலம் எல்லா இனங்களையும் ஆசீர்வதிப்பதாகத் தேவன் வாக்களித்திருந்தார், ஆனால் அதற்கு மாறாக, நியாயப்பிரமாணம் ஒரு சாபத்தைக் கொண்டு வந்தது, எனவே தேவன் நியாயப்பிரமாணத்தின் மூலமாக சகல இனங்களையும் ஆசீர்வதிக்கத் திட்டமிடவில்லை என்பது தெளிவு.

நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தவர்கள் ஆசீர்வதிக்கப்படு வதற்குப்பதில் சபிக்கப்பட்டனர் என்றால், நியாயப்பிரமாணத்தின் நோக்கம் என்ன? மீறுதலின் நிமித்தமாக நியாயப்பிரமாணமானது கூட்டப்பட்டு, கிறிஸ்துவிடம் (அவர்களை) அழைத்துவரும் உபாத்தியாய் இருந்தது (கலா. 3:19, 24).

நாம் யாராய் இருக்கின்றோமோ, அதனாலேயே நாம் தேவனுக்கு ஏற்புடையவராரவதற்குப் போதிய அளவு நல்லவர்களாய் உள்ளோம் என்று மனித இயல்பில் நம்மில் சிலர் சிந்திப்பதுண்டு. ஒரு கருத்தில் நியாயப் பிரமாணம் என்பது மனிதன் தன்னைத் தானே மீட்டுக் கொள்ள முடியாது ஆனால் அவனுக்கு உதவி தேவை என்பதற்கு ஒரு பரிசோதனையாக இருந்தது.

இதை ஒருவர், கானடாவில் ஆரஞ்சை விளையச் செய்ய முடியாது என்று ஃபிளோரிடாவின் விவசாயியை நம்ப வைக்க முயலுகின்ற மனிதருடன் ஒப்பிடலாம். இதைச் செய்வதற்கு, அவர் கானடாவின் வெதுவெதுப்பான பகுதியில் தெற்கு மலைச் சரிவைத் தேர்ந்தெடுத்து ஆரஞ்சுத் தோப்பினை அங்கு ஏற்படுத்தலாம். முன் உறைபனி, பனி மற்றும் தோல்வி என்று வருகின்ற பல ஆண்டுகளுக்குப் பிறகு, அந்த விவசாயி கனாடா நாட்டில் ஆரஞ்சு விளையச் செய்ய முடியாது என்று நம்புகின்றார்.

இதே வழிமுறையில், தேவன் விசுவாசம் நிறைந்த ஆபிரகாமைத் தேர்ந்தெடுத்து, அவருடைய சந்ததியாரை பொல்லாத இனங்களிலிருந்து பிரித்தெடுத்து, பிறகு அவர்கள் கடைப்பிடிக்க ஒரு பூரணமான தராதரத்தை அளித்தார் (ரோமர் 7:12). இவ்வுலகில் எந்த மக்களினமாவது தங்கள் சொந்த செயல்களினிமித்தம் நீதிமானாக முடியுமென்றால், அப்படியாவதற்கான மிகச் சிறந்த வாய்ப்புக்களை இஸ்ரவேலரே பெற்றிருந்தார்கள், ஆனால் அவர்கள் யாவரும் பாவம் செய்தார்கள் (ரோமர் 3:9, 10). மனிதன் இதைத் தனது சொந்தமான வகையில் செய்து கொள்ள முடியாது, ஆனால் அதற்கு மாறாக, அவர்களின் பாவங்களை மன்னிக்க தேவனுடைய குமாரனின் மரணம் தேவை என்று தேவன் எல்லாக் காலங்களுக்குமாக நிரூபித்தார்.

GTG LIBRARY- BANGALORE

நமது மீறுதல்களை மூடுவதற்கு இரக்கம் அளிக்கக் கூடிய மீட்பர் ஒருவர் நமக்குத் தேவை என்பதைத் தீர்மானமாகச் சுட்டிக்காட்டுவதே நியாயப் பிரமாணத்தின் நோக்கமாய் இருந்தது.

V. தேவனுடைய திட்டம்

1. ஆபிரகாமின் சந்ததியொன்றின் வழியாக இவ்வுலகத்தாரை ஆசீர்வதிக்கத் தேவன் திட்டமிட்டிருந்தார். தேவனுடைய இந்தத் திட்டத்தை நியாயப்பிரமாணமானது வியர்த்தமாக்க மாட்டாது (கலா. 3:17) நியாயப்பிரமாணம் ஆசீர்வாதத்தை அளிக்க முடிந்திருக்குமென்றால், இயேசுவின் மரணம் தேவையற்றதாய் இருந்திருக்கும் (கலா. 2:21). இந்த ஆசீர்வாதத்தை அருளும் வகையில் நியாயப்பிரமாணத்தையும் உடன் படிக்கையையும் தேவன் திட்டமிடவில்லை.

தேவன் என்ன செய்யத் திட்டமிட்டார்? [எரே. 31:31, 32ஐ வாசிக்கவும்.] தேவன் தாம் என்ன செய்வதாக வாக்களித்தார்? அது அவர் இஸ்ரவேலுடன் செய்த உடன்படிக்கையைப் போல் இருக்குமா? [கோடிட்ட இடங்களில் "அல்ல," "புது" என்ற வார்த்தைகளை எழுதி நிரப்பவும்.]

2. புதுஉடன்படிக்கை எதைத் தருவதாயிருக்கும்? [எபி. 8:12ஐ வாசிக்கவும்.] புதிய உடன்படிக்கையின் கீழ் தாம் எப்படிப்பட்டவராய் இருப்பதாகத் தேவன் கூறினார்? [கோடிட்ட இடத்தில் "இரக்கமுள்ள வராய்" என்று எழுதி நிரப்பவும்.]

3. முதலாம் உடன்படிக்கையில் இரக்கம் என்பது கட்டியமைக்கப் பட்டிராததால், அவர்கள் இரக்கம் பெற முடியாதிருந்தது என்று அர்த்த மாகுமா? ஆபிரகாமின் மூலம் வாக்களிக்கப்பட்டிருந்த ஆசீர்வாதங்கள் நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் இன்றி எதன் அடிப்படையில் அவர்களையும் ஆசீர்வதிக்க முடிந்திருந்தது? [எபி. 9:15ஐ வாசிக்கவும்.] இயேசு எந்த உடன்படிக்கையின் கீழ் நடந்த அக்கிரமங்களுக்காகவும் மரித்தார்? [கோடிட்ட இடத்தில் "முதலாம்" என்று எழுதி நிரப்பிக் கொள்ளவும்.] எவரொருவரும் தேவனிடத்தில் வருதல் என்பது இயேசுவின் மூலமாக மட்டுமே செய்யப்பட முடியும் (யோவா. 14:6). இதுவே எப்பொழுதும் தேவனுடைய திட்டமாக இருந்துள்ளது. உலகத்தின் பாவங்கள் இயேசுவின் இரத்தத்தினால் மட்டுமே மன்னிக்கப்பட முடியும். நியாயப்பிரமாணம் இரக்கத்தையும் மன்னிப்பையும் அருளாதிருந்தது. அது தன் கீழ் இருந்தவர்களுக்கு சாபம் மட்டுமே தந்தது.

4. இந்தப் புது உடன்படிக்கை எப்பொழுது அமலுக்கு வந்தது? [எபி. 9:16, 17ஐ வாசிக்கவும்.] இது எப்பொழுது செயல் விளைவுள்ளதாகியது? [கோடிட்ட இடத்தில் "மரணத்தில்" என்று எழுதி நிரப்பவும்.] ஒரு உயிலை எழுதியவர் இறக்கின்ற வரையிலும் அந்த உயிலானது ஒரு இறந்த பத்திரமாகவே உள்ளது. இதே விஷயம் இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டைப் பொறுத்தமட்டிலும் உண்மையானதாயிருந்தது. இயேசுவின் மரணம்தான் அதைச் செயல் விளைவுள்ளதாக்கிற்று.

5. புது உடன்படிக்கை பழைய உடன்படிக்கைக்குப் பதிலாக

GTG LIBRARY- BANGALORE

வைக்கப்பட்டதா? [எபி. 10:9ஐ வாசிக்கவும்.] இரண்டாவதை என்ன செய்யும்படிக்கு அவர் முதலாவதை என்ன செய்தார்? [கோடிட்ட இடங்களில் "நிலைநிறுத்துவதற்கு 'நீக்கிப் போடுகிறார்' " என்று எழுதி நிரப்பவும்.] இயேசு தம் மரணத்தில் இரண்டாம் உடன்படிக்கையை அமலுக்குக் கொண்டு வந்த பொழுது, அவர் முதலாவதை நீக்கிப் போடவும் செய்தார். [பாடத் தாளின் பின்புறத்தில் "சந்ததி" என்று எழுதப்பட்டுள்ள சதுரக் கட்டத்திற்கு மேல், "முதலாம் (பழைய) உடன்படிக்கை" என்றும் அதற்குச் சற்றுத் தள்ளி சிலுவை படத்திற்கு மேற்பகுதியில் "இரண்டாம் (புதிய) உடன்படிக்கை" என்றும் எழுதிக் கொள்ளவும். (பக்கம் 160ஐப் பார்க்கவும்)]

6. இவையிரண்டில் மேன்மையானது எது மற்றும் ஏன்? [எபி. 8:6ஐ வாசிக்கவும்.] இரண்டாம் உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்கள் முதலாம் உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களுடன் எவ்விதம் ஒப்பிடப் படுகின்றன? இந்த வாக்குத்தத்தங்கள் எப்படிப்பட்டவையாக உள்ளன? [கோடிட்ட இடத்தில் "விசேஷித்த" என்று எழுதிக் கொள்ளவும்.] முதலாம் உடன்படிக்கையைக் கடைப்பிடித்தால் அவர்களுக்கு வாக்களிக்கப் பட்டிருந்தவை யாவை? வளமையுடன் கூடிய நாடு அவர்களுக்கு வாக்களிக்கப்படவில்லையா (உபா. 5:33)? நமக்கு அருளப்பட்டுள்ள விசேஷித்த வாக்குத்தத்தங்கள் யாவை? [1 பேது. 1:3, 4ஐ வாசிக்கவும்.] இஸ்ரவேல் நாட்டில் வளமையுடன் கூடிய நீடிய ஆயுளைக் காட்டிலும் ''பரலோகம்'' என்பது மிகவும் மேன்மையான ஆசீர்வாதமாய் இருப்பதில்லையா?

பழைய உடன்படிக்கையைக் காட்டிலும் புதிய உடன்படிக்கை அருளும் மேன்மையான பயன்கள் யாவை? [பாடத் தாளின் பின்புறத்தில் பழைய உடன்படிக்கை தருபவைகளாக எழுதப்பட்டுள்ளவற்றிற்கு நேராகப் பின்வருமாறு எழுதவும்: "1. ஆசீர்வாதம் (கலா. 3:14)"; "2. ஜீவன் (கலா. 3:21)"; "3. நீதி (கலா. 2:21)"; "4. இரக்கம் (எபி. 8:12)"; "5. கிருபை (யோவா. 1:17)."]

இவ்விரு உடன்படிக்கைகளில் எதின் கீழ் நீங்கள் வாழ்வீர்கள்? ஏன்? புதிய உடன்படிக்கையின் கீழ் நாம் மேன்மையான பயன்களையும் மேன்மையான வாக்குத்தத்தங்களையும் பெற்றிருக்கின்றோம். நிச்சயமாகவே நாம் முதலாம் உடன்படிக்கைக்குத் திரும்பிச் செல்ல விரும்புவதில்லை.

[இந்த இடத்தில், ஒழுக்க ரீதியான கொள்கைகள் நித்தியமானவைகள், மற்றும் புதிய உடன்படிக்கையானது நாம் கொலை செய்யக் கூடாது, விபசாரம் செய்யக் கூடாது, பொய் கூறக் கூடாது முதலியன போன்ற நித்தியமான ஒழுக்கக் கொள்கைகளை நீக்கிப் போடுவதில்லை என்பதை ஆசிரியர் விளக்கப்படுத்த விரும்பலாம். இந்தக் கொள்கைகள் புதிய உடன்படிக்கையில் உள்ளடங்கி இருக்கின்றன, ஆயினும் ஓய்வுநாள் பிரமாணம் இதில் உள்ளடங்குவதில்லை. ஓய்வுநாள் என்பது யூதர்களுக்குச் சிறப்பானதொரு நாளாக, அவர்கள் நினைவுகூர வேண்டிய நாளாக, வேலை எதுவும் செய்யாதிருந்து தாங்கள் எகிப்தில் அடிமைகளாய் இருந்து

GTG LIBRARY- BANGALORE

விடுவிக்கப்பட்டதை நினைவுகூரவேண்டிய நாளாக இருந்தது (உபா. 5:15). அது படைப்பை நினைவுகூர வேண்டிய நாளாக அர்ப்பணிக்கப் படாதிருந்தது. தேவன் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்ததால், இஸ்ரவேலர்கள் இளைப்பாறுதலின்றி எகிப்தில் இருந்ததை நினைவுகூருவதற்கு இஸ்ரவேலுக்கு இளைப்பாறுதலின் நாளாக ஏழாம் நாளைத் தேர்ந்து கொண்டார் (யாத். 20:11). ஓய்வுநாளுக்கு அடுத்த நாளான, வாரத்தின் முதல் நாள் (மத். 28:1; மாற். 16:1; லூக். 24:1) கிறிஸ்தவர்கள் கூடிவந்த நாளாக (அப். 20:7), இன்னமும் கூடிவரும் நாளாக உள்ளது. வாரத்தின் முதல் நாளில் கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பதன் அடிப்படையில் அந்த நாளானது கிறிஸ்தவர்கள் பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றிலிருந்து தங்கள் விடுதலையை நினைவுகூரும் நாளாக உள்ளது. அவர்களுக்கு இந்த நாள், இஸ்ரவேலர்களின் இளைப்பாறுதலின் நாளாகிய ஓய்வுநாளைப் போல உடலுக்கு ஓய்வளிக்கும் நாளாக இல்லாமல், ஆவிக்குரிய வகையில் ஒய்வு நாளாக உள்ளது.]

இந்தப் பாடத்தில் நாம், ஒரு மக்களினத்தின் மூலமாக அவர்களை மீட்க ஒரு நியாயப்பிரமாணத்தையல்ல, ஆனால் அவர்களுக்கு ஒரு இரட்சகரைக் காண்பித்த தேவனுடைய திட்டத்தையும், சிலுவையில் இயேசுவின் மரணத்தின் மூலமாகவே மனித குலத்தை மீட்பதாகத் தேவன் கொண்டிருந்த திட்டத்தையும் கவனித்தோம்.

தொகுப்புரை

இந்தப் படிப்பில் நாம் நமது பாவங்களில் இருந்து நம்மை மீட்பதற்கான தேவனுடைய திட்டத்தின் வெளிப்பாடுகளை ஆராய்ந்திருக்கின்றோம். இதுவே வேதாகமத்தின் ஆய்வுப் பொருளாக உள்ளது.

இப்பாடத்தின் முக்கிய கேள்விகளுக்குப் பதில் அளித்தல் என்பது இந்தப் பாடத்தைத் தொகுத்துரைப்பதற்கான நல்லதொரு வழியாக உள்ளது.

I. *தேவன் ஆபிரகாமுக்கு வெளிப்படுத்திய திட்டம் என்ன?* தேவன் ஆபிரகாமை ஒரு பெரிய இனமாக்குவார் (பழைய ஏற்பாட்டின் ஆய்வுப் பொருள்) என்பதையும் ஆபிரகாமின் சந்ததியின் மூலம் அதாவது, இயேசுவின் மூலம் எல்லா இனங்களையும் ஆசீர்வதிப்பார் (புதிய ஏற்பாட்டின் ஆய்வுப் பொருள்) என்பதையும் ஆபிரகாம் அறியச் செய்தார்.

II. *அந்த மாபெரும் இனம் எவ்வாறு வளர்ச்சியடைந்தது?* ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோரின் சந்ததியார் எகிப்திற்குச் சென்ற 70 பேரில் இருந்து எகிப்தில் ஒரு மாபெரும் மக்களினமாக வளர்ந்தனர், அவர்கள் மோசே மற்றும் ஆரோனின் தலைமையின் கீழ் எகிப்தை விட்டுப் புறப்பட்ட போது முப்பது முதல் ஐம்பது லட்சம் வரை எண்ணிக்கை கொண்ட மக்கள் கூட்டமாயினர், அதில் 6,03,550 யுத்த வீரர்களும், ஆசாரியத்துவக் கூட்டமான லேவிகோத்திரத்தில் 22,000 ஆண்களும் இருந்தனர்.

III. *இஸ்ரவேல் இனத்திற்குச் சட்டமாயிருந்தது என்ன?* இஸ்ரவேலரின் நாட்டில் அவர்கள் ஒரு இனம் என்ற வகையில் கடைப்பிடிக்க வேண்டிய

GTG LIBRARY- BANGALORE

சட்டத்தை தேவன் அவர்களுக்குச் சீனாய் மலையில் கொடுத்தார். உடன்படிக்கை (அவர்களுடன் தேவனுடைய ஒப்பந்தம்) என்பதும் அவர்களுடைய சட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது (ரோமர் 13:8-10). தேவனுடனான இந்த ஒப்பந்தத்தை அவர்கள் கடைப்பிடித்தால், அந்நாட்டில் அவர்கள் வளத்துடன் நீடிய காலம் வாழ்வார்கள், ஆனால் உடன்படிக்கையை அவர்கள் மீறினால், அந்த நாட்டிலிருந்து அவர்கள் துரத்தப்பட்டு, மற்ற இனங்களின் மத்தியில் சிதறடிக்கப்படுவார்கள்.

IV. *முதலாம் உடன்படிக்கையில் இருந்த பிரச்சனை என்ன?* நியாயப் பிரமாணத்தின் கீழ் இருந்தவர்கள் அதைக் கடைப்பிடிக்காத காரணத்தினால், நியாயப்பிரமாணம் அவர்களை சாபம், ஆக்கினைத் தீர்ப்பு மற்றும் மரண தண்டனையின் கீழ்க் கொண்டு வந்தது. அது இரக்கம் காட்டவில்லை என்பதே இதற்குக் காரணம் என்பதால் இது உண்மையாக உள்ளது.

V. *இரக்கம் காட்டுவதற்குத் தேவன் என்ன செய்வார்?* தேவன் இரக்கத்தை அளிக்கின்ற ஒரு புதிய உடன்படிக்கையை, ஒரு புதிய ஒப்பந்தத்தைக் கொண்டு வந்தார். இயேசுவின் மரணத்தின் மூலமாக, முதல் உடன்படிக்கையின் சாபம் எடுத்துப் போடப்பட்டது, ஒரு புது உடன்படிக்கை உறுதிப்படுத்தப்பட்டு, முதல் உடன்படிக்கை புறம்பே எடுத்துப் போடப்பட்டது. *முதலாம்* உடன்படிக்கைக்குப் பதிலாக *இரண்டாம்* உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது, இது மேன்மையான உடன்படிக்கையாகவும், மேலான வாக்குத்தத்தங்களின் மீது கட்டி யமைக்கப்பட்டதாகவும் (நாட்டில் வளமான நீடிய ஆயுள் என்பதற்குப் பதிலாக பரலோகத்தில் நித்திய ஜீவன்) இருக்கின்றது.

இன்றைய நாட்களில் நாம் புது உடன்படிக்கையின் நிபந்தனைகளின் படி வாழ வேண்டியவர்களாய் இருக்கின்றோம். நாம் முதலாம் உடன்படிக்கையின் கீழ் திரும்பிச் செல்ல விரும்புவதில்லை, ஏனெனில் அதன் கீழ் வாழ முயற்சித்தவர்கள் ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டு, நியாயப் பிரமாணத்தின் சாபத்தின் கீழ் இருந்தனர். இதற்கு மாறாக, நாம் இரண்டாம் உடன்படிக்கையின் கீழ் இருக்கின்றோம். ஏனென்றால் இதன் மூலம் நாம் கிருபை, இரக்கம் மற்றும் பரலோகத்தில் நித்திய ஜீவனின் நம்பிக்கை ஆகியவற்றைப் பெறுகின்றோம்.

இந்தப்பாடம் பல விஷயங்களை நாம் புரிந்து கொள்ள நமக்கு உதவுகின்றது: (1) கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டின் சட்டங்களைக் கடைப்பிடிக்காததற்கான காரணம்; (2) கிறிஸ்தவர்கள் சனிக்கிழமையில் அதாவது ஓய்வுநாளில் இளைப்பாறி இராததற்கான காரணம்; (3) இயேசுவின் மரணத்திற்குப் பிறகு உண்டான மனமாற்றங்கள், மக்கள் கிறிஸ்தவர்களாவது எப்படி என்பதற்கான எடுத்துக்காட்டுகளாகக் கருதப்பட வேண்டியதற்கான காரணம்; மற்றும், (4) கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது எப்படி என்பதைக் கற்றுக் கொள்வதற்குக் கிறிஸ்தவர்கள் புதிய ஏற்பாட்டைப் படிக்கும் காரணம்.

[பாடத்தைத் தொகுத்துரைத்த பின், மாணவர் நியாயப் பிரமாணத்தைப் படித்திருந்து அதில் போதிக்கப்பட்டுள்ள எல்லாவற்றிற்கும்

GTG LIBRARY- BANGALORE

கீழ்ப்படிய வேண்டும் என்று கருதினால், மற்றும் அவர் நியாயப் பிரமாணத்தில் பாவமன்னிப்புக்குச் செய்ய வேண்டியது என்ன என்பதையும் புதிய உடன்படிக்கையில் பாவமன்னிப்புக்காகச் செய்ய வேண்டியது என்ன என்பதையும் படித்திருந்தால், ஆசிரியர் நியாயப் பிரமாணம் பற்றி மாணவரின் எண்ணப்போக்கினைக் குறித்துக் கேட்கலாம்;

ஆசிரியர் அடுத்த பாடமானது பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகியவற்றில் பாவமன்னிப்பு பற்றி யோசனை தரும் என்று கூறி அதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.]

GTG LIBRARY- BANGALORE

இயேசு மனிதருக்குப் புதுவழியாய் இருக்கின்றாரா?

I. *பழைய மற்றும் புதிய வழிகள் ஒரே மாதிரியானவைகளா?*
   1. பழைய வழியின்கீழ் ஆசாரியர் (பாவ) நிவிர்த்தியை ஒரு மிருகத்தின் ______________ க் கொண்டு ஏற்படுத்தினார். லேவி. 4:30, 31
   2. இது ______________ மட்டுமே இருந்தது (எபி. 10:1) இது ______________ நிவிர்த்தி செய்ய மாட்டாது. எபி. 10:4
   3. இயேசுவின் ______________ தான் பாவ நிவிர்த்தியின் புது வழியாய் உள்ளது. எபி. 10:19, 20
   4. இயேசுவின் ______________ மூலம் புதிய உடன்படிக்கை உறுதிப்படுத்தப்பட்டது (எபி. 9:16, 17) மற்றும் இந்தக் காரணத்தினால்தான் அது ______________ பிரசங்கிக்கப்படத் தொடங்கிற்று. லூக். 24:46, 47

II. *புது வழியானது போதிக்கப்படும்படி ஏற்படுத்தப்பட்ட தயாரிப்புகள் யாவை?*
   1. வசனமானது ______________ இருந்து புறப்படும் என்று தேவன் வாக்களித்திருந்தார். ஏசா. 2:3
   2. ஆவியானவர் ______________ வருவார், அதன் மூலம் அப்போஸ்தலர்கள் முதலில் ______________, பிறகு யூதேயா, சமாரியா மற்றும் உலகத்தின் கடைசி பரியந்தமும் சாட்சி களாயிருக்க முடியும். அப். 1:8
   3. ஆவியானவர் வரும் பொழுது, அவர் அப்போஸ்தலர்களுக்கு ______________ போதித்து, (யோவா. 14:26) இயேசு உபதேசித்திருந்த ______________ அவர்களுக்கு நினைப்பூட்டுவார். யோவா. 16:13
   4. பெந்தெகொஸ்தே நாளன்று எருசலேமில் (அப். 2:5) அவர்கள் ______________ நிரப்பப்பட்டனர் (அப். 2:4) மற்றும் இயேசுவுக்குச் சாட்சி கொடுக்கத் தொடங்கினர். அப். 2:22

III. *பாவமன்னிப்பிற்கு என்ன செய்ய வேண்டும் என்று எருசலேமில் தொடங்கிப் பிரசங்கிக்கப்பட்டது?*
   1. விசுவாசித்தவர்கள் ______________ பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ______________ பெறும்படிக்குப் பேதுரு கூறினார். அப். 2:36-38
   2. எருசலேமில் போதிக்கப்பட்ட இச்செய்தியானது ______________ இனங்களுக்குமானதாக உள்ளது. லூக். 24:47

IV. *இது போதிக்கப்பட்ட பொழுது மக்கள் எவ்விதம் பதில்செயல் செய்தனர்? (கீழ்வரும் குறிப்புகள் அப். நட. புத்தகத்தில் உள்ளன)*
   1. 2:41 -- எருசலேம் ______________
   2. 8:12 -- சமாரியா ______________
   3. 8:36-39 -- எத்தியோப்பியர் ______________

GTG LIBRARY- BANGALORE

4. *9:18 --* பவுல் ____________________
5. *10:48 --* கொர்நேலியு ____________________
6. *16:33 --* சிறை அதிகாரி ____________________
7. *18:8 --* கொரிந்து ____________________
8. *19:5 --* எபேசு ____________________

V. *அவர்களின் ஞானஸ்நானத்தைத் தொடர்ந்து நடந்தது என்ன?*

1. அவர்கள் ____________________ ஜீவனுள்ளவர்களாய் நடக்க வேண்டியிருந்தது. ரோமர் *6:4*
2. அவர்களின் பாவங்கள் ____________________ *(அப். 2:38)* மற்றும் ____________________ பட்டன. அப். *22:16*
3. அவர்கள் ____________________ மாற்கு *16:15, 16*

Copyright 1987 - Gospel Light Pub. Co. Delight, AR 71940



GTG LIBRARY- BANGALORE

பாடத் தாளை எடுத்துரைத்தல்:

''இயேசு மனிதருக்குப் புது வழியாய் இருக்கின்றாரா?''

"இயேசு மனிதருக்குப் புது வழியாய் இருக்கின்றாரா?" என்ற பாடத் தாளை முதல் படிப்பாகப் பயன்படுத்தலாம், அல்லது இது "பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் ஆதார மூலம் எது?'' (பாடம் 1) என்ற பாடத் தாளைத் தொடர்ந்தோ அல்லது ''தேவனுடைய திட்டம் என்ன?'' (பாடம் 2) என்ற பாடத் தாளைத் தொடர்ந்தோ பயன்படுத்தலாம். ''தேவனுடைய திட்டம் என்ன?'' என்பதைத் தொடர்ந்து இதனைப் பயன்படுத்துவதுதான் சீரமைவான பயன்பாடாயிருக்கும்.

நோக்கம்

இயேசுவின் இரத்தமே மனிதரின் மன்னிப்புக்கு அடிப்படை என்று எருசலேமில் பிரசங்கிக்கப்படத் தொடங்கியதைக் காண்பிப்பதென்பதே "இயேசுவே வழி" என்ற பாடத் தாளின் நோக்கமாக உள்ளது. எருசலேமில் பிரசங்கிக்கப்பட்ட மன்னிப்பின் நிபந்தனைகள் எல்லா நாடுகளுக்கு மானவைகள்.

பாடச் சுருக்கம்

மிருக பலிகள் என்பவை உண்மையான பலியின் நிழலாய் மட்டுமே இருந்தன, மற்றும் இயேசுவின் இரத்தம் இப்பொழுது மன்னிப்பிற்கான புதிய செயல் விளைவுள்ள ஒரு வழியை அருளுகின்றது என்பதை இந்தப் பாடத் தாள் காண்பிக்கின்றது. போதிய தயாரிப்புக்குப் பிறகு, இந்தப் புதிய வழியானது எருசலேமிலும், பிறகு உலகின் எஞ்சிய பகுதிகளிலும் பிரசங்கிக்கப்பட்டது. எருசலேமில் போதிக்கப்பட்ட மன்னிப்பிற்கான இந்த நிபந்தனைகள் நடபடிகளின் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன, உலகின் எஞ்சிய பகுதிகளில் உள்ளவர்களும் இதே நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். நடபடிகளின் புத்தகத்திலுள்ள எல்லா பதில் செயல்களும் ஒரே மாதிரியானவைகளாய் உள்ளன, எனவே மன்னிப் பிற்கான அதே நிபந்தனைகள் எல்லாருக்கும் போதிக்கப்பட வேண்டும்.

அறிமுகம்

நியாயப்பிரமாணம் இரக்கத்தை அருள முடியாதிருந்தது என்று நாம்

GTG LIBRARY- BANGALORE

முந்திய பாடத்தில் கற்றுள்ளோம். இரக்கம், கிருபை மற்றும் நீதி ஆகியவற்றை அது அருளியிருந்தால், இயேசு வீணாக, பயனற்ற வகையில் மரணம் அடைந்தார் என்றாகி விடும். இந்தப் பாடத்தில் நாம், பழைய உடன்படிக்கையின் கீழ் இருந்தவர்கள் அறியாமையினால் பாவம் செய்த பொழுது என்ன செய்தார்கள் என்று கண்டறியப் போகின்றோம், மற்றும் புதிய வழியான, புதிய உடன்படிக்கையின் கீழ் மன்னிப்புக்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்றும் நாம் படிக்கப் போகின்றோம்.

I. பழைய மற்றும் புதிய வழிகள்

படிப்பின் இப்பகுதியில் நாம், பழைய உடன்படிக்கையின் கீழான மன்னிப்பின் வழியும், புதிய உடன்படிக்கையின் கீழான மன்னிப்பின் வழியும் ஒரே மாதிரியானவைகளா அல்லவா என்று ஆலோசித்து அறியப் போகின்றோம். [பாடத் தாளின் பின்புறத்தில் இடது புற மேல் மூலையில் ''பழைய உடன்படிக்கை'' என்று எழுதி அதன் கீழ் சீனாய் மலையை வரையவும்.]

1. பொதுமக்களின் பாவநிவிர்த்திக்கென்று ஆசாரியர்கள் பயன் படுத்தியது என்ன? [லேவி. 4: 30, 31ஐ வாசிக்கவும்.] மன்னிப்புக்கு ஆசாரியர்கள் மிருகத்தின் எப்பொருளைப் பயன்படுத்தினர்? [கோடிட்ட இடத்தில் "இரத்தத்தை" என்று எழுதி நிரப்பவும்.]

2. மிருகத்தின் இரத்தம் பாவமன்னிப்பை அருளியதா? [எபி. 10:1ஐ வாசிக்கவும்.] மிருகத்தின் இரத்தம் என்னவாக மட்டும் இருந்தது? [கோடிட்ட இடத்தில் "நிழலாக" என்று எழுதி நிரப்பவும்.] நிழல் என்பது ஏதேனும் பொருளைக் கொண்டுள்ளதா? ஒரு ஆழமான நீரோடையை நீங்கள் ஒரு பாலத்தின் வழியாகவா அல்லது ஒரு நிழலின் வழியாகவா, எதன் மூலம் கடந்து செல்லுவீர்கள்? ஒரு நிழல் என்ன செய்ய முடியும்? நிழல் என்பது ஒரு உண்மை நிலையின் இயல்பைச் சுட்டிக்காட்டுவதாக மட்டும் இருப்பதில்லையா?

[எபி. 10:4ஐ வாசிக்கவும்.] மிருகத்தின் இரத்தம் எதனை நிவிர்த்தி செய்ய முடியாதிருந்தது? [கோடிட்ட இடத்தில் "பாவங்களை" என்று எழுதி நிரப்பவும்.] மிருகங்களின் இரத்தம் என்பது - சிலுவையில் இயேசு சிந்திய இரத்தம் என்ற - உண்மை நிலையின் நிழலாக மட்டுமே இருந்தது. பாடத் தாளின் பின்புறத்தில் (பக்கம் 174ஐப் பார்க்கவும்) ஒரு சிலுவையையும் அதன் நிழலையும் (சீனாய் மலையின் படத்தருகில்) வரையவும்.

3. மன்னிப்பின் புதிய வழியாக உள்ளது என்ன? [எபி. 10:19, 20ஐ வாசிக்கவும்.] மன்னிப்பின் புது வழியாக இருப்பது எது? [கோடிட்ட இடத்தில் "இரத்தம்" என்று எழுதி நிரப்பவும்.]

4. இந்தப் புதிய வழி எப்போது அமுலுக்கு வந்தது? [எபி. 9:16, 17ஐ வாசிக்கவும்.] இயேசுவின் எதன் மூலம் புதிய வழி உறுதிப்படுத்தப்பட்டது? [கோடிட்ட இடத்தில் "மரணத்தின்" என்று எழுதி நிரப்பவும்.] இயேசுவின் நாமத்தினாலே பாவமன்னிப்பு எங்கு பிரசங்கிக்கப்படத் தொடங்கிற்று? [லூக். 24:46, 47ஐ வாசிக்கவும், மற்றும் கோடிட்ட இடத்தில் "எருசலேமில்" என்று எழுதி நிரப்பவும்.]

GTG LIBRARY- BANGALORE

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? மன்னிப்பிற்கான பழைய வழி என்பது மன்னிப்பின் நிழலாக மட்டுமே இருந்தது, அதாவது இயேசுவின் இரத்தம்தான் புது வழியான இரண்டாம் உடன்படிக்கை மற்றும் முதலாம் உடன்படிக்கையின் கீழ் இருந்தவர்களுக்கும் கூட மன்னிப்பின் அடிப்படையாக உள்ளது என்று நாம் கற்றுக் கொண்டுள்ளோம் (எபி. 9:15). மிருகங்களின் இரத்தம் என்பது ஒரு அடையாளமாக மட்டுமே இருந்தது, ஆனால் அந்த அடையாளமானது இயேசுவின் இரத்தத்தினால் பலப்படுத்தப்பட்டது/ஆதரிக்கப்பட்டது. இயேசு சிலுவையில் மரிப்பார் என்பதை அறிவதற்கு அவர் சிலுவையில் மரிக்கும் வரை தேவன் காத்திருக்கத் தேவையில்லாதிருந்தது. படைப்புக்கு முன்பே தேவன், இயேசுவின் மரணத்தைத் திட்டமிட்டு, முன்கண்டு, முன்னறிந்து இருந்தார் (1 பேது. 1:18-20).

II. *புதிய வழிக்கான தயாரிப்புகள்*

பழைய ஏற்பாடு பரிசுத்த ஆவியானவரால் தரப்பட்டிருந்தது (2 பேது. 1:19, 20) மற்றும் இயேசு பூமிக்கு வருவதற்கு முன்பே எழுதப்பட்டிருந்தது, ஆனால் இயேசு சிலுவையில் மரித்திருந்த பிறகும் கூட அவரது போதனை எதுவும் எழுதப்பட்டிருந்ததில்லை. இயேசுவின் போதனையை நினைவு கூருவதற்கான சில வழிமுறைகளும், புதிய வழியைப் பிரசங்கிக்கத் தொடங்க வேண்டிய இடமும் அருளப்பட வேண்டியதாயிருந்தது.

1. கடைசி நாட்களில் கர்த்தருடைய வசனமானது ஒரு குறிப்பிட்ட நகரிலிருந்து புறப்படும் என்று தேவன் வாக்களித்திருந்தார் [ஏசா. 2:3ஐ வாசிக்கவும்.] எந்த நகரிலிருந்து கர்த்தருடைய வசனம் புறப்படும்? [கோடிட்ட இடத்தில் "எருசலேமில்" என்று எழுதி நிரப்பவும்.] இது "கடைசி நாட்களில்" நடைபெறுவதாக இருந்தது (ஏசா. 2:2). புதிய ஏற்பாட்டின் படியாக நாம் இப்பொழுது கடைசி நாட்களில் இருக்கின்றோம் (எபி. 1:1, 2), இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளன்று பேதுருவும் கூட இதைச் சுட்டிக்காட்டினார் (அப். 2:1, 14).

2. அப்போஸ்தலர்களின் ஊழியத்திற்கென்று அவர்களைத் தயாரிப்பதற்காக ஆவியானவர் அனுப்பப்படுவாரென்று இயேசு வாக்களித்தார். [அப். 1:8ஐ வாசிக்கவும்.] ஆவியானவர் எதனோடே வருவார் மற்றும் அதன் மூலமாக அப்போஸ்தலர்கள் எங்கு சாட்சியளிக்கத் தொடங்க முடியும்? [கோடிட்ட இடங்களில் "பெலத்தோடே" மற்றும் "எருசலேமிலும்" என்று எழுதி நிரப்பவும். பாடத் தாளின் பின்புறத்தில் (பக்கம் 174ஐப் பார்க்கவும்) எருசலேமைக் குறிக்கும் வகையில் ஒரு கட்டம் வரைந்து, வசனமானது எருசலேமில் இருந்து யூதேயா, சமாரியா மற்றும் உலகின் எஞ்சிய பகுதிகளுக்குப் புறப்பட்டுச் செல்லுவதைக் குறிப்பிடவும். அக்கட்டத்திற்கு மேல் உள்ள இடத்தில் ''இயேசு'' என்றெழுதி, அதன் கீழ் ''பரிசுத்த ஆவியானவர்'' என்றெழுதவும்.]

3. ஆவியானவர் அப்போஸ்தலர்களை எவ்விதத்தில் தயாரிப்புச் செய்வார்? [யோவா. 14:26ஐ வாசிக்கவும்.] அப்போஸ்தலர்களுக்கு அவர் எவ்வளவு போதிப்பார்? மற்றும் இயேசு உபதேசத்திருந்தவற்றில்

GTG LIBRARY- BANGALORE

எவ்வளவை அவர்களுக்கு அவர் நினைவூட்டுவார்? [கோடிட்ட இடங்களில் "எல்லாவற்றையும்" என்று எழுதி நிரப்பவும்.] *அப்போஸ்தலர்களுக்கு அவர் எவ்வளவு சத்தியத்தை அளிப்பார்?* [யோவா. 16:13ஐ வாசிக்கவும்.] *அவர்களுக்கு அவர் எவ்வளவு சத்தியத்தைக் கொடுப்பார்?* [கோடிட்ட இடத்தில் "எல்லாவற்றையும்" என்று எழுதி நிரப்பவும்.]

[அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே ஆவியானவர் சகல சத்தியங்களையும் அருளினார் என்பது பற்றி கற்பவரிடத்தில் கேள்வி/ஐயப்பாடு எதுவும் இருக்குமென்றால், இந்த வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்ட போது அப்போஸ்தலர்கள் மட்டுமே இருந்தார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுங்கள் (யோவா. 13:1-4; மத். 26:20; லூக். 22:13, 14).]

4. எப்பொழுது மற்றும் எங்கு பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மீது இறங்கி வந்தார்? [அப். 2:4ஐ வாசிக்கவும்.] *ஆவியானவருக்காக அவர்கள் காத்துக் கொண்டிருக்கும்படி கூறப்பட்ட (லூக். 24:49; அப். 1:4) இடமான எருசலேமில் அவர்கள் காத்துக் கொண்டிருக்கையில் (அப். 2:5) அவர்கள் யாரால் நிரப்பப்பட்டனர்?* [கோடிட்ட இடத்தில் "பரிசுத்த ஆவியானவரால்" என்று எழுதி நிரப்பவும்.] *அவர்கள் அதன் பிறகு இயேசுவைக் குறித்துச் சாட்சியளிக்கத் தொடங்கினர் (அப். 2:22).*

[*பாடத் தாளின் பின்புறத்தில்* (பக்கம் 174ஐப் பார்க்கவும்) இயேசு அடக்கம் செய்யப்பட்டு, உயிர்த்தெழுந்து, பரலோகத்திற்கு ஏறிச் சென்றதை வரையவும். இதற்கு மேல் "புது உடன்படிக்கை" என்று எழுதவும்.] பெந்தெகொஸ்தே பண்டிகையானது பஸ்கா பண்டிகைக்கு ஐம்பது நாட்களுக்குப் பிறகு வந்தது (லேவி. 23:15), எனவே அது பஸ்கா பண்டிகையின் முடிவில் இயேசு உயிர்ப்பிக்கப்பட்டு ஐம்பது நாட்களுக்குப் பிறகு வந்தது. அவர் தம்முடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு பரலோகத்திற்கு எழுந்தருளிச் செல்லும் முன்பு இந்த பூமியில் நாற்பது நாட்கள் இருந்தார் (அப். 1:3). அவர் பரலோகம் திரும்பிச் சென்ற பத்தாவது நாளிலேயே பெந்தெகொஸ்தே பண்டிகை வந்தது. ஆகையால் இயேசு பரலோகம் திரும்பிச் சென்ற பத்தாவது நாளில் ஆவியானவர் அப்போஸ்தலர்களின் மீது அனுப்பப்பட்டார். [*பாடத் தாளின் பின்புறத்தில்* (பக்கம் 174ஐப் பார்க்கவும்) இதைச் சுட்டிக்காட்டுவதற்கு "40 நாட்கள்" என்றும், "10 நாட்கள்" என்றும் எழுதவும்.]

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? கடைசி நாட்களில் கர்த்தருடைய வசனமானது எருசலேமிலிருந்து புறப்படும் என்று தேவன் தீர்க்கதரிசனம் உரைத்து, அதற்குத் தயாரிப்புச் செய்தார் என்று நாம் கற்றுக் கொண்டுள்ளோம். வேத வாக்கியங்களில் தேவன் வாக்களித்திருந்தபடியாகவே இயேசுவின் நாமத்திலே எருசலேமில் தொடங்கி இரட்சிப்பைப் பிரசங்கிப்பதற்கு அப்போஸ்தலர்களைத் தயாரிக்கும்படி அவர்கள் மீது பரிசுத்த ஆவியானவரை இயேசு அனுப்பினார் (லூக். 24:46, 47). இதுவே இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளன்று அவர்கள் செய்த செயலாயிருந்தது (அப். 2:5, 22).

GTG LIBRARY- BANGALORE

III. *மன்னிப்பு வழங்கப்பட்டது*

1. பேதுருதான் *முதன் முதலாக* இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இரட்சிப்பைப் பற்றிப் பிரசங்கித்தவராய் இருந்தார். என்ன செய்ய வேண்டும் என்று பேதுருவிடம் கேட்டவர்களிடத்தில் அவர், சீனாய் மலையில் போதிக்கப்பட்டவைகளை அவர்கள் நிறைவேற்ற வேண்டும் என்று கூறியிருந்தால், அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று அவர் கூறியிருப்பார்? அவர்கள் மிருக பலியைச் செலுத்த வேண்டுமென்று (அல்லவா) அவர் கூறியிருப்பார். இயேசுவின் மரணத்தினுடைய நிறைவேறுதலுடன் இப்பொழுது இயேசுவின் இரத்தத்தினால் மன்னிப்பு என்ற புதிய வழியானது தொடங்கியிருந்தது. இந்தப் புதிய வழியில் மன்னிப்பிற்கான நிபந்தனைகள் யாவை? [அப். 2:38ஐ வாசிக்கவும்.] இயேசுவில் விசுவாசம் கொண்டவர்கள் *என்ன செய்து*, இயேசு கிறிஸ்துவின் பெயரால் *எதைப்* பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டார்கள்? [கோடிட்ட இடங்களில் "மனந்திரும்பி" மற்றும் "ஞானஸ்நானம்" என்று எழுதி நிரப்பவும்.]

2. அவர்கள் மிருகபலியைச் செலுத்தும்படி பேதுரு ஏன் கூறவில்லை? இயேசு சிலுவையில் மரித்த பொழுது பழைய வழியானது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. புதிய வழிக்கான தேவைகளாக எருசலேமில் தொடங்கி பேதுரு பிரசங்கித்தது என்ன? [லூக். 24:47ஐ வாசிக்கவும்.] எருசலேமில் பேதுரு பிரசங்கித்த இந்தச் செய்தியானது *யாருக்குரியது*? [கோடிட்ட இடத்தில் "எல்லா" என்று எழுதி நிரப்பவும். *பாடத் தாளின் பின்புறத்தில்* "எல்லா இனங்கள்" என்பதன் கீழ், "மனந்திரும்பி, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுங்கள்" என்று எழுதிக் கொள்ளவும் (அப். 2:38).]

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? புதிய வழியின் கீழ், இயேசுவில் விசுவாசம் கொண்டவர்கள் மனந்திரும்பி, அவர்களின் பாவங்களை இயேசுவின் இரத்தம் சுத்திகரிக்கும்படியாக ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்கின்றது என்று நாம் கற்றுக் கொண்டுள்ளோம்.

IV. *பதில்செயல்கள்*

எருசலேமில் பிரசங்கிக்கப்பட்ட செய்தி உலகின் எஞ்சிய பகுதியில் பிரசங்கிக்கப்பட்ட பொழுது, அப்பகுதிகளின் மக்கள் எவ்விதம் பதில்செயல் செய்தார்கள்? அவர்கள் எல்லாரும் அதே வகையாகப் பதில்செயல் செய்தார்களா? நடபடிகள் புத்தகத்தின் (மனமாற்ற) நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் ஒருவர் மன்னிக்கப்படுவதற்குச் செய்யத் தேவையானது பற்றி என்ன பிரசங்கிக்கப்பட்டது என்று கூறப்படுவதில்லை, ஆனால் அவர்கள் எவ்விதத்தில் பதில்செயல் செய்தனர் என்பதை இந்நூல் (நடபடிகள்) கூறுகின்றது. எருசலேமில் தொடக்கத்தில் பிரசங்கிக்கப் பட்டதே உலகின் எஞ்சிய பகுதிகளில் பிரசங்கிக்கப்படும் என்று உறுதிப்பாடு கொடுக்கப்பட்டுள்ள காரணத்தினால் ஒவ்வொரு (மனமாற்ற) நிகழ்ச்சியிலும் மன்னிப்பின் நிபந்தனைகளை (எடுத்துத்) தர வேண்டும் என்ற அவசியம் இல்லை. உலகின் எஞ்சிய பகுதிகளில் என்ன பிரசங்கிக்கப்

GTG LIBRARY- BANGALORE

பட்டது என்பதைக் கண்டறிவதற்கு, எருசலேமில் பிரசங்கிக்கப்பட்டது என்ன என்பதைக் கண்டறிதலே போதுமானதாக உள்ளது.

இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டிற்கு ஒப்பிடலாம்: சுத்திகரிப்புக் கருவியை விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றின் விற்பனை மேலாளர் ஒருவர் தமது விற்பனையாளர்களிடத்தில், ஒரு குறிப்பிட்ட சுத்திகரிப்புக் கருவியை இந்தியாவில் உள்ள ஒவ்வொருவரிடத்திலும் செயல் விளக்கப்படுத்தி சென்னை தொடங்கி எல்லா இடங்களிலும் அதன் பெறுமான மதிப்புக்கு அதனை விற்கும்படி அறிவுறுத்துகின்றார் என்று வைத்துக் கொள்வோம். என்ன நடந்தது என்பதைக் கூறும் நபர் அதைப் பின்வரும் வகையில் கூற முடியும்:

விற்பனையாளர்கள் சென்னை சென்று சுத்திகரிப்புக் கருவியைச் செயல்விளக்கப்படுத்தினார்கள். சென்னையிலிருந்த மக்களில் சிலர் ஆர்வம் கொண்டு, "சுத்திகரிப்புக் கருவிக்கு நாங்கள் செலுத்த வேண்டிய விலை எவ்வளவு?" என்று கேட்டார்கள். அதற்கு அந்த விற்பனையாளர்கள், "சுத்திகரிப்புக் கருவியை நீங்கள் ரூ. 13,200க்கு வாங்கலாம்" என்று பதில் அளித்தார்கள். செயல் விளக்கத்தினால் திருப்தியடைந்தவர்கள் சுத்திகரிப்புக் கருவியை வாங்கிக் கொண்டனர்.

அவர்கள் சுத்திகரிப்புக் கருவியைச் செயல்விளக்கப் படுத்துவதற்காக அங்கிருந்து கோயம்புத்தூருக்குச் சென்றார்கள். அங்கு செயல்விளக்கத்தில் திருப்தியடைந்தவர்கள் சுத்திகரிப்புக் கருவியை வாங்கினார்கள். பிறகு அவர்கள் மதுரைக்குச் சென்றார்கள், அங்கும் மக்கள் சுத்திகரிப்புக் கருவிகளை வாங்கினார்கள்.

இதைப் பற்றி எடுத்துரைப்பவர் சுத்திகரிப்புக் கருவியை ஒவ்வொரு முறையும் வாங்கியவர்கள் ரூ. 13,200 கொடுத்து வாங்கினார்கள் என்று மீண்டும் மீண்டும் கூறுவது என்பது அவசியமா? நிச்சயமாகவே அது அவசியமில்லை.

இது போலவே, லூக்கா நடபடிகளின் புத்தகத்தை எழுதியதில், பாவமன்னிப்படைய விரும்புபவர்கள் பாவமன்னிப்புக்காக மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுவது அவசியம் என்று கூறப்பட்டதை ஒவ்வொரு முறையும் குறிப்பிடவில்லை. எருசலேமில் பிரசங்கிக்கப்பட்ட அதே விஷயம் உலகின் எஞ்சிய பகுதிகளில் பிரசங்கிக்கப்பட்டது என்பதால், இது புரிந்து கொள்ளப்பட வேண்டியதாயிருந்தது. ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டதால் அவர்கள் பதில்செயல் செய்தனர் என்ற உண்மையானது அவர்கள் பாவமன்னிப்புக்கென்று (மனந்திரும்பி) ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தனர் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

1-8. மக்கள் எவ்விதம் பதில்செயல் செய்தனர்? [2:41; 8:12; 8:36-39; 9:18; 10:48; 16:33; 18:8; 19:5 ஆகிய வசனப் பகுதிகள் ஒவ்வொன்றையும் வாசித்த பிறகு கோடிட்ட இடங்களில் "ஞானஸ்நானம் பெற்றார்(கள்)" என்று எழுதி நிரப்பவும்.] பதில்செயல்கள் எப்பொழுதும் சீரானதாகவே இருந்தன என்ற உண்மையானது செய்தியும் சீரானதாகவே இருந்திருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். இரட்சிக்கப்படுவதற்கு

GTG LIBRARY- BANGALORE

அவர்கள் செய்யும்படி கூறப்பட்டது என்ன என்பது வெளிப்படுத்தப்படா திருந்தாலும், பதில்செயல்களின் சீரான தன்மையானது எருசலேமில் பிரசங்கிக்கப்பட்ட ஒவ்வொரு வார்த்தையும் மற்ற மக்கள் யாவருக்கும் போதிக்கப்பட்டது என்பதைச் சுட்டிக் காண்பிக்க வேண்டும்.

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? எல்லா இடங்களிலும் வசனம் பிரசங்கிக்கப்பட்டது, எல்லாரும் ஒரே விதமாகவே பதில்செயல் செய்தனர் என்பதை நாம் கற்றுள்ளோம்.

V. ஞானஸ்நானத்திற்குப் பிறகு

1. ஒருவர் ஞானஸ்நானம் பெற்ற பிறகு என்ன எதிர்பார்க்கப்பட வேண்டியுள்ளது? ஞானஸ்நானம் பெற்ற நபர் எவ்வகையான வாழ்வை வாழ வேண்டியுள்ளது? [ரோமர் *6:4*ஐ வாசிக்கவும்.] *ஞானஸ்நானம் பெற்ற நபர் வாழ வேண்டிய வாழ்வின் தன்மை என்ன?* [கோடிட்ட இடத்தில் “புதிய” என்று எழுதி நிரப்பவும்.]

2. ஒருவர் ஏன் ஞானஸ்நானம் பெற வேண்டும்? [அப். *2:38*ஐ வாசிக்கவும்.] *விசுவாசிகள் என்ன காரணத்திற்காக மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று பேதுரு கூறினார்?* [கோடிட்ட இடத்தில் ‘‘மன்னிக்கப்பட்டன’’ என்று எழுதி நிரப்பவும்.] *தர்சுப் பட்டணத்து சவுல்* [பின்னாளில் அப்போஸ்தலரான பவுல் என்று அழைக்கப்பட்டவர்] *தமது பாவங்கள் கழுவப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று அவருக்குக் கூறப்பட்டது?* [அப். *22:16*ஐ வாசிக்கவும்.] *சவுல் எழுந்து ஞானஸ்நானம் பெறும்படி கூறப்பட்டார் அப்பொழுது அவருடைய பாவங்கள் என்ன செய்யப்பட்டன?* [கோடிட்ட இடத்தில் “கழுவ” என்று எழுதி நிரப்பவும்.]

3. உலகெங்கும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி இயேசு தம் அப்போஸ்தலர்களுக்குக் கூறினார். சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகையில் யார் இரட்சிக்கப்படுவார்கள் என்று இயேசு கூறினார்? [மாற்கு *16:15, 16*ஐ வாசிக்கவும்.] *சுவிசேஷத்தில் விசுவாசமுள்ளவர்களாகி ஞானஸ்நானம் பெறுபவர்கள் என்ன செய்யப்படுவார்கள் என்று இயேசு கூறினார்?* [கோடிட்ட இடத்தில் “இரட்சிக்கப்பட்டனர்” என்று எழுதி நிரப்பவும்.]

இந்தப்பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? ஞானஸ்நானம் பெற்ற நபர் ஒருவர் புதிய வாழ்வை வாழும்படி எதிர்பார்க்கப்படுகின்றார் என்று நாம் கற்றுக் கொண்டுள்ளோம். இயேசுவில் விசுவாசம் கொண்ட நபர் ஒருவர், தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறும் பொழுது மன்னிக்கப்படுகின்றார்; அவரது பாவங்கள் கழுவப்படுகின்றன; மற்றும் அவர் இரட்சிக்கப்படுகின்றார்.

தொகுப்புரை

மனிதருக்கு இரட்சிப்பின் வழியாக இருப்பவர் இயேசுவே என்று நாம் இந்தப் பாடத்தில் கற்றோம். இரட்சிப்பிற்கான அவருடைய புது வழி என்பது நியாயப்பிரமாணத்தின் நிபந்தனைகளான முதலாம் உடன் படிக்கையின் *பழைய* வழியைப் போன்று இருப்பதில்லை.

GTG LIBRARY- BANGALORE

I. *பழைய மற்றும் புது வழிகள் ஒரே மாதிரியானவைகளாய் உள்ளனவா?* பழைய வழி என்பது மிருகங்களின் இரத்தம் என்ற *நிழலைத்* தேவைப்படுத்திற்று, ஆனால் புது வழியானது இயேசுவின் இரத்தம் என்ற *உண்மை நிலையை* அருளுகின்றது. இந்த *வழியானது* பெந்தெகொஸ்தே நாளன்று எருசலேமிலிருந்து பிரசங்கிக்கப்படத் தொடங்கியது.

II. *புது வழியானது போதிக்கப்படும்படி செய்யப்பட்ட தயாரிப்புகள் யாவை?* தேவனுடைய வசனம் கடைசி நாட்களில் எருசலேமிலிருந்து புறப்படும் என்று அவரே வாக்குத்தத்தம் செய்திருந்தார், இது அப்போஸ் தலர்கள்மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கிய பொழுது தொடக்கம் பெற்றது. அவர்கள், பெந்தெகொஸ்தே நாள் அன்று ஆவியானவருடைய உதவியின் மூலமாக சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தப்பட்டார்கள். ஆவியானவரின் வருகையுடன் அவர்கள் முதலில் எருசலேமிலும் பிறகு முழு உலகிலும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பிரசங்கிக்கத் தொடங்குவதற்குத் தயார் செய்யப்பட்டார்கள்.

III. *பாவமன்னிப்புக்கு என்ன செய்ய வேண்டியது தேவை என்று எருசலேமில் போதிக்கப்படத் தொடங்கியது?* அவர்கள் மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுதல் அவசியம் என்று பேதுரு போதித்தார்.

IV. *இது போதிக்கப்பட்ட பொழுது, மக்கள் எவ்விதத்தில் பதில்செயல் செய்தார்கள்?* அவர்கள் விசுவாசித்தல் மற்றும் மனந்திரும்புதல் (இது எடுத்துரைக்கப்பட்டுள்ளது அல்லது சில நிகழ்ச்சிகளில் மறைமுகமாய் உள்ளதாகக் காணப்படுகின்றது) ஆகியவற்றினால் பதில்செயல் செய்தனர், மற்றும் ஞானஸ்நானம் பெற்றனர் (இது பல நிகழ்ச்சிகளில் திட்டவட்டமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது).

V. *அவர்களின் ஞானஸ்நானத்தைத் தொடர்ந்து என்ன நடந்தது?* அவர்கள் மன்னிக்கப்பட்டதால், அவர்களின் பாவங்கள் கழுவப்பட்டதால், மற்றும் அவர்கள் இரட்சிக்கப்பட்டதால் அவர்கள் ஒரு புதிய வாழ்வை வாழும்படி எதிர்பார்க்கப்பட்டார்கள்.

பேதுரு இன்று இங்கிருந்தால், மக்கள் மன்னிக்கப்படுவதற்கு என்ன செய்யும்படி அவர் பிரசங்கிப்பார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? பேதுரு பிரசங்கித்தவற்றையே நீங்கள் கேட்கின்ற பிரசங்கியார்கள் பிரசங்கிக் கின்றார்களா?

[ஞானஸ்நானத்தைக் குறித்துக் கேள்விகள் எழுந்தால், அடுத்த பாடத்தில் இது மிகவும் முழுமையாக எடுத்துரைக்கப்படும் என்று கற்பவர்களுக்கு உறுதிப்படுத்துங்கள். அடுத்த பாடத்திற்கான ஒரு நேரத்தை ஏற்பாடு செய்யுங்கள்.]

GTG LIBRARY- BANGALORE

நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கின்றீர்களா?

<u>வேதாகமம் முடிவு செய்வதை அனுமதிப்பதற்கு நீங்கள் மனதாயிருக்கின்றீர்களா?</u>

I. *பின் வருவனவற்றை நீங்கள் செய்திருக்கின்றீர்களா?*

1. ____________________ *யோவான் 6:45*
2. ____________________ *யோவான் 8:24*
3. ____________________ *அப். 17:30*
4. ____________________ *ரோமர் 10:10*
5. ____________________ *மத். 28:18, 19; அப். 8:35-39*

ஞானஸ்நானத்தின் இக்கருத்தில் ________________ *அப். 2:36-38*
________________ *அப். 22:16*
________________ *மாற். 16:16*
________________ *1 பேது. 3:21*
________________ *அப். 2:47*

II. *நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றீர்களா?*



	கிறிஸ்துவுக்குள்	கிறிஸ்துவுக்கு புறம்பே *எபே. 2:12, 13*
2 கொரி. 5:17	________________	________________
கொலோ. 1:14	________________	________________
2 தீமோ. 2:10	________________	________________
1 யோவா. 5:11	________________	________________
எபே. 1:3	________________	________________
	________________	*கலா. 3:27* *ரோமர் 6:3, 4*

III. *நீங்கள் சரீரத்தில் இருக்கின்றீர்களா?*

1. *கிறிஸ்துவுக்குள் எத்தனை சரீரங்கள் உள்ளன?* ____________ *ரோமர் 12:5*
2. *ஒரே சரீரம் என்பது என்ன?* ________________ *கொலோ. 1:18, 24*
3. *ஒரே சரீரத்தில் நாம் எவ்விதம் பிரவேசிக்கின்றோம்?* ________________ *1 கொரி. 12:13*
4. *அதன் பிறகு நாம் என்னவாக உள்ளோம்?* ________________ *1 கொரி. 12:27*
   அல்லது வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால் கிறிஸ்துவின் ________________ *இருக்கின்றோம்.*

Copyright 1992 - Gospel Light Pub. Co. Delight, AR 71940

GTG LIBRARY- BANGALORE

ஒரே ஞானஸ்நானம் (எபே. 4:5)

1. *யார்? கேள்விப்பட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டவர்கள்*
2. *ஏன்? பாவமன்னிப்புக்கென்று (அப். 2:38)*
3. *என்ன? தண்ணீர் (மத். 3:16; அப். 8:38, 39)*
4. *எப்படி? அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்ப்பிக்கப்படுதல் (ரோமர் 6:4; கொலோ. 2:12)*



GTG LIBRARY- BANGALORE

பாடத் தாளை எடுத்துரைத்தல்:

“நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கின்றீர்களா?”

“நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கின்றீர்களா?” என்ற பாடத் தாள் “இரட்சிப்பின்” தாள் என்று அழைக்கப்படுகின்றது. இது இந்த ஆசிரியர் வழிகாட்டி நூலில் ஏற்கனவே எடுத்துரைக்கப்பட்டுள்ள மூன்று பாடத் தாள்களில் எதையாவது ஒன்றைத் தொடர்ந்து வரலாம்; இருப்பினும், இது “இயேசு மனிதருக்குப் புது வழியாய் இருக்கின்றாரா?” என்பதைத் தொடர்ந்து வருதலே மிகவும் ஏற்புடையதாயுள்ளது.

நோக்கம்

இயேசு தம் இரத்தத்தைக் கொண்டு நம்மைக் கழுவி அவருடைய சரீரத்தின் பாகமாக, இரட்சிக்கப்பட்ட அவருடைய மக்களின், சபையின் பாகமாக நம்மை ஏற்றுக் கொள்ளுமுன்பு நாம் என்ன செய்யும்படி கேட்கின்றார் என்பதை போதிப்பதே “இரட்சிப்பு” தாளின் நோக்கமாக உள்ளது.

பாடச் சுருக்கம்

பாடச் சுருக்கம் பின்வருமாறு: இரட்சிக்கப்பட, அதாவது, தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட விரும்புகின்றவர்கள் தேவ வசனத்தில் போதிக்கப்பட வேண்டும். அவர்கள் இயேசுவில் விசுவாசம் கொள்ள வந்தால், இயேசுவுக்காக வாழத் தீர்மானித்தால், அவரில் உள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டால், மற்றும் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றால் அவர்கள் ஆவிக்குரிய எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ள வழியுள்ள இயேசுவினுள் பிரவேசிப்பார்கள். கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றுள்ள யாவரும் கிறிஸ்துவின் சபை என்ற ஒரே சரீரமாய் இருக்கின்றார்கள்.

அறிமுகம்

[இப்பாடத்தின் அறிமுகம் முதல் மூன்று பாடங்களைச் சுருக்கமாய்த் தொகுத்துரைப்பதை உள்ளடக்கலாம். அவ்வாறு செய்வதில், ஆதாம் ஏவாள் மூலமாகப் பாவமும் மரணமும் உலகினுள் வந்தது என்பதை ஆசிரியர்

GTG LIBRARY- BANGALORE

குறிப்பிடலாம். தேவன் (மனிதரையோ மற்ற எதையுமோ) படைக்கும் முன்பே, தமது படைப்பினுள் பாவம் நுழையும் என்பதை அறிந்திருந்தார், மற்றும் அவர் சிலுவையில் இயேசுவின் மரணத்தின் மூலம் மனுக் குலத்தை இரட்சிக்க ஏற்கனவே திட்டமிட்டிருந்தார். இரட்சிப்பு என்பது மனுக்குலத்தால் ஈட்ட முடியாதது ஆனால் இயேசுவின் இரத்தத்தினால் அருளப்படக் கூடியது என்பதை நிரூபிக்க அவர் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். இயேசுவின் பெயரால் மன்னிப்பானது எருசலேமில் பிரசங்கிக்கப்படத் தொடங்கிய பிறகு உலகின் எஞ்சிய பகுதிக்கும் பிரசங்கிக்கப்பட்டது. இந்தப் பிரசங்கித்தலை ஏற்றுக் கொண்ட யாவரும் ஒரே விதமாகவே பதில்செயல் செய்து இரட்சிக்கப்பட்டார்கள்.]

எபிரெயர் 1:1-4 வசனப் பகுதி இயேசுவைப் பற்றிப் பின்வருவன வற்றைப் போதிக்கின்றது: (1) இவர் மூலமாகவே தேவன் இக்காலத்தில் நம்மோடு பேசியுள்ளார். (2) இவர் எல்லாவற்றிற்கும் சுதந்தரவாளியாக நியமிக்கப்பட்டுள்ளார். (3) அகிலம் முழுவதும் இவர் மூலமாகவே உண்டாக்கப்பட்டது. (4) இவர் இயல்பு மற்றும் மகிமை ஆகியவற்றில் பிதாவைப் போன்றவராகவே இருக்கின்றார். (5) இவர் தம்முடைய வசனத்தினாலே எல்லாவற்றையும் தாங்குகின்றார். (6) இவர் நமது பாவங்களுக்குச் சுத்திகரிப்பை ஏற்படுத்தியுள்ளார். (7) இவர் தமது பணியை நிறைவேற்றிய பிறகு, பிதாவின் வலது புறத்தில் அமர்ந்தார்.

இவர் உலகின் பாவங்களை மன்னிக்கக் கூடியவராய் இருப்பதற்காக, இவர் முழு உலகைக் காட்டிலும் அதிகம் மதிப்புடையவராய் இருக்க வேண்டியிருந்தது. ஒருவர், இன்னொரு நபருக்குரிய ஆயிரம் ஒரு ரூபாய்த் தாள்களை எரித்து விடுவாரென்றால், தாம் செய்த செயலுக்குப் பிராயச்சித்தமாக அவர் ஒரு ரூபாய்த் தாள் ஒன்றைச் செலுத்தித் தீர்க்க முடியாது, ஆனால் அவர் ஆயிரம் ரூபாய்த் தாள் ஒன்றைக் கொடுத்துத் தீர்க்க முடியும். இயேசு மனிதராக மட்டும் இருந்திருந்தால், அவர் முழு உலகின் பாவங்களுக்காக மரித்திருக்க முடியாது (யோவா. 1:1), ஆனால் அவர் தேவனாகவும் இருக்கின்றார், மற்றும் இந்தக் காரணத்தினாலேயே அவர் முழு உலகைக் காட்டிலும் அதிகம் மதிப்புடையவராயிருக்கின்றார், இதனால் அவர் இங்கு வாழ்ந்த, வாழும் மற்றும் வாழப் போகும் ஒவ்வொரு நபரின் பாவங்களுக்கும் கிரயம் செலுத்தக் கூடியவராயிருந்தார் (1 யோவா. 2:2).

இந்தக் காரணத்தினால், இயேசு தம் இரத்தத்தினால் நமது பாவத்தை மன்னிக்கக் கூடியவராய் இருக்கின்றாரா இல்லையா என்பதல்ல, ஆனால் அவருடைய இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதே கேள்வியாக உள்ளது.

I. *நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கின்றீர்களா?*

தேவன் நம்மை இரட்சிப்பதற்கு முன்பு அவர் நம்மிடம் கேட்கின்றவை களை நாம் செய்துள்ளோமா இல்லையா என்பது நமது மிக முக்கியமான கேள்வியாக உள்ளது. நீங்கள் இரட்சிக்கப்பட்டுள்ளதாகக் கருதுகின்றீர் களா? அப்படியென்றால், இரட்சிக்கப்பட நீங்கள் என்ன செய்தீர்கள்?

GTG LIBRARY- BANGALORE

நீங்கள் செய்தவற்றை நாம் (ஒரு தாளில்) எழுதலாம். இது மட்டும்தானா? நீங்கள் ஞானஸ்நானம் பெற்றீர்களா? எதற்காக நீங்கள் ஞானஸ்நானம் பெற்றீர்கள்? இரட்சிக்கப்பட்டிருத்தல் தொடர்பாக நீங்கள் எப்பொழுது ஞானஸ்நானம் பெற்றீர்கள்? இரட்சிக்கப்படுவதற்கென்றா அல்லது இரட்சிக்கப்பட்டிருந்ததைக் காண்பிப்பதற்கென்றா - எதற்காக நீங்கள் ஞானஸ்நானம் பெற்றீர்கள்? நீங்கள் ஒரு சபையில் சேருவதற்காகவா அல்லது இரட்சிக்கப்படுவதற்காகவா எதற்காக ஞானஸ்நானம் பெற்றீர்கள்? "இரட்சிக்கப்பட்டேன்" என்ற வார்த்தையை நாம் எழுதுவது என்றால், "ஞானஸ்நானம் பெற்றேன்" என்ற வார்த்தையை அதற்கு முன்பாக எழுதுவீர்களா அல்லது அதற்குப் பின்பாக எழுதுவீர்களா?

நீங்கள் இரட்சிக்கப்பட்டுள்ளீர்களா அல்லவா என்பதை வேதாகமம் முடிவு செய்யும்படி வேதாகமத்தை அனுமதிக்க நீங்கள் மனதாயிருக்கின்றீர் களா? வேதாகமத்தின் போதனையின்படி உங்கள் இரட்சிப்பை சோதித்தறிய நீங்கள் மனதாயிருக்கின்றீர்களா?

(1) நாம் குறிப்பிட்ட சிலவற்றைச் செய்ய வேண்டும் என்று வேதாகமம் போதிக்கின்றது. அவற்றை நீங்கள் செய்திருக்கின்றீர்களா? நாம் செய்ய வேண்டிய செயலாக யோவான் 6:45 வசனம் போதிப்பது என்ன? [யோவா. 6:45ஐ வாசிக்கவும்.] இயேசுவிடம் வர முடிந்தவர்கள் என்ன செய்துள்ளனர்? [கோடிட்ட இடத்தில் "கேட்டு கற்றுக் கொள்ளுதல்" என்று எழுதி நிரப்பவும்.] இயேசுவிடம் வருகின்ற நபர் தேவனாலே போதிக்கப்பட வேண்டும் என்று இவ்வசனப் பகுதி எடுத்துரைக்கின்றது. நாம் வேதாகமத்தை வாசிக்கும் பொழுது நமக்குப் போதிப்பது யார்? நாம் வேதாகமத்தை வாசித்தால், நாம் மனிதராலா அல்லது தேவனாலா, யாரால் போதிக்கப்படுகின்றோம்? மனிதரின் போதனையா அல்லது தேவனின் போதனையா, எது நம்மை இயேசுவிடம் கொண்டு வருகின்றது? தேவனுடைய போதனை மட்டுமே நம்மை இயேசுவிடம் கொண்டு வருவதில்லையா?

(2) நாம் என்ன செய்ய வேண்டும் என்று தேவனுடைய வசனம் நமக்குப் போதிக்கின்றது? [யோவா. 8:24ஐ வாசிக்கவும்.] நாம் நமது பாவங்களில் மரிப்பதிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும்? [கோடிட்ட இடத்தில் "இயேசுவில் விசுவாசம் கொள்ளுதல்" என்று எழுதி நிரப்பவும்.] இயேசுவில் விசுவாசம் கொள்ளாதிருந்தால் நமக்கு என்ன நடக்கும் (யோவா. 8:21)?

(3) நாம் வேறு எவற்றைச் செய்ய வேண்டும் என்று வசனம் நமக்குப் போதிக்கின்றது? [அப். 17:30ஐ வாசிக்கவும்.] எல்லா மனிதரும் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் கட்டளையிடுகின்றார்? [கோடிட்ட இடத்தில் "மனந்திரும்பு" என்று எழுதி நிரப்பவும்.] நாம் எவற்றிலிருந்து மனந்திரும்ப வேண்டும்? "மனந்திரும்புதல்" என்றால் என்ன? (ஒருவர் தம் பாவங் களுக்காக மனம் வருந்துதலை "மனந்திரும்புதல்" என்று அர்த்தப் படுவதாகப் பலர் நம்பிக் கொண்டுள்ளனர். 2 கொரி. 7:10ன்படி வருத்தம் என்பது ஒருவர் மனந்திரும்பக் காரணமாக வேண்டும், ஆனால் வருத்தம் மட்டுமே மனந்திரும்புதல் ஆகி விடாது. தேவனைப் பிரியப்படுத்தாத

GTG LIBRARY- BANGALORE

செயல்களைச் செய்வதிலிருந்து திரும்பி, அவரைப் பிரியப்படுத்தும் செயல்களைச் செய்வது என்று இருதயத்தில் தீர்மானம் செய்தலே மனந்திரும்புதலாக உள்ளது.)

(4) இயேசுவில் விசுவாசம் கொள்பவர்கள் மனந்திரும்புதல் என்பதை மட்டுமின்றி, வேறு எதைச் செய்ய வேண்டியதாகவும் உள்ளது? [ரோமர் 10:10ஐ வாசிக்கவும்.] *ஒருவர் இரட்சிக்கப்படுவதற்குத் தமது வாயினால் அவர் என்ன செய்ய வேண்டும்?* [கோடிட்ட இடத்தில் "அறிக்கையிடுதல்" என்று எழுதி நிரப்பவும்.] *ஒருவர் எதை அறிக்கை செய்கின்றார்? (ரோமர் 10:9). அவர் தம் பாவங்களை அறிக்கை செய்வதில்லை, ஆனால் அவர் இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்கின்றார் (மத். 16:16).*

(5) இயேசுவில் விசுவாசம் கொண்டுள்ளவர் வேறு எவற்றைச் செய்ய வேண்டும்? [மத். 28:18, 19; அப். 8:35-39 ஆகியவற்றை வாசிக்கவும்.] *இயேசுவைப் பற்றிப் போதிக்கப்பட்டு, அவரில் விசுவாசம் கொண்டவர்கள் எதைச் செய்ய வேண்டியிருந்தது?* [கோடிட்ட இடத்தில் "ஞானஸ்நானம் பெறுதல்" என்று எழுதி நிரப்பவும்.]

ஞானஸ்நானத்தின் பொழுது வாக்களிக்கப்படுவது என்ன? புது வழியை முதன் முதலாய்ப் பிரசங்கித்ததைக் கேள்விப்பட்டவர்கள் எந்தக் காரணத் திற்காக இயேசுவின் பெயரால் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கூறப்பட்டது? [அப். 2:38ஐ வாசிக்கவும்.] *அவர்கள் எந்தக் காரணத்திற்காக ஞானஸ்நானம் பெற வேண்டியிருந்தது?* [கோடிட்ட இடத்தில் "பாவமன்னிப்பு" என்று எழுதி நிரப்பவும்.]

சவுல் இயேசுவில் விசுவாசம் கொள்ளத் தொடங்கியிருந்து தம் பாவங்களிலிருந்து மனந்திரும்பியிருந்தார். அவர் மன்னிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று அவருக்குக் கூறப்பட்டது? [அப். 22:16ஐ வாசிக்கவும்.] *அவர் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கூறப்பட்டது ஏன்?* [கோடிட்ட இடத்தில் "பாவத்தைக் கழுவிப் போக்குவதற்கு" என்று எழுதி நிரப்பவும்.]

விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுதல் பற்றி இயேசு என்ன கூறினார்? [மாற். 16:15, 16ஐ வாசிக்கவும்.] *விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுபவர் என்ன செய்யப்படுவார் என்று இயேசு கூறினார்?* [கோடிட்ட இடத்தில் "இரட்சிக்கப்படுவார்" என்று எழுதவும்.] *இயேசு போதித்ததை ஒத்துப் போகும் வகையில் பேதுரு எழுதியது என்ன?* [1 பேது. 3:21ஐ வாசிக்கவும்.] *இப்பொழுது ஞானஸ்நானம் நமக்கு என்ன செய்கிறது என்று பேதுரு கூறுகின்றார்? இது இயேசு கூறியதுடன் ஒத்துப் போகின்றதா?*

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? தேவனுடைய வசனத்தின் போதனை மூலம் இயேசுவில் விசுவாசம் கொண்டுள்ளவர்கள், இயேசுவுக்காக வாழத் தீர்மானித்து, அவரில் உள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, அவர்கள் ஞானஸ்நானம் பெறும் பொழுது தங்கள் பாவங் களிலிருந்து இரட்சிக்கப்படுவார்கள் என்று நாம் கற்றுக் கொண்டுள்ளோம். [*"இரட்சிக்கப்படுதல்" என்றால் ஒருவர் தம் பாவங்களில் இருந்து இரட்சிக்கப்படுதல் என்று அர்த்தப்படுகின்றது (மத். 1:21).*]

GTG LIBRARY- BANGALORE

இரட்சிக்கப்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டவர்களாய் இருப்பதில்லை. அவர்கள் யாருடன் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்? [அப். 2:47ஐ வாசிக்கவும்.] இரட்சிக்கப்பட்டவர்கள் யாருடன் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்? [கோடிட்ட இடத்தில் "சபையுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்" என்று எழுதி நிரப்பவும்.] ஒருவர் ஞானஸ்நானம் பெறும் பொழுது அவர் இரட்சிக்கப்படுகின்றார் என்பதையும், பின்பு அவரை தேவன் சபை என்ற விசுவாசிகளின் சமூகத்தில் சேர்த்துக் கொள்கின்றார் என்பதையும் விளக்கவும்.

II. கிறிஸ்துவுக்குள்

இரட்சிப்பைப் போன்ற முக்கியமான விஷயத்தை யோசனை செய்து பார்ப்பதில், ஒவ்வொருவரும் கேள்விக்கு இடமின்றி தாம் வேதாகமத்தின் போதனையைப் புரிந்து கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒருவருடைய வருமான வரியைக் கணக்கிடுவதில், ஒருவர் வழக்கமாக அந்தக் கணக்கீடுகளை இரண்டு அல்லது மூன்று முறைகள் சரி பார்த்து மற்றும் தாம் தவறு எதுவும் செய்யவில்லை என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு இரண்டு அல்லது மூன்று வித்தியாசப்பட்ட வழிமுறைகளில் அக்கணக்கீட்டைச் சரிபார்ப்பார். இரட்சிப்பைப் பற்றி வேதாகமம் போதிக்கின்றது என்ன என்பதைப் பற்றித் தீர்மானிக்க முயற்சி செய்யும் பொழுது இதை விட பெரிய கவனத்தை நாம் மேற்கொள்ள வேண்டும்.

இந்தப் (பாடப்) பகுதியில் நாம், இயேசுவின் இரத்தத்தின் பயன்களைப் பெறுவது எப்பொழுது என்பது பற்றித் தவறு எதுவும் செய்து விடாதிருக்கின்றோம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளச் சோதித்துப் பார்க்கப் போகின்றோம். **கிறிஸ்துவுக்குள்** இருக்கும் ஆசீர்வாதங்களை யோசித்துப் பார்ப்பதினாலும், அந்த ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கு ஒருவர் கிறிஸ்துவுக்குள் எவ்விதம் பிரவேசிக்கிறார் என்று தீர்மானிப்பதாலும் செய்வோம்.

''கிறிஸ்துவுக்குள்'' இருக்கின்ற நபர் பெறுகின்ற ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் யாவை? [2 கொரி. 5:17ஐ வாசிக்கவும்.] கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற நபர் என்னவாக இருக்கின்றார்? [2 கொரி. 5:17க்குப் பிறகு "கிறிஸ்துவுக்குள்" என்ற வார்த்தை அடங்கியுள்ள வரைபடத்தினுள் உள்ள கோடிட்ட இடத்தில் "புதுச் சிருஷ்டி" என்று எழுதி நிரப்பவும்.]

கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற நபர் பெறுகின்ற ஆவிக்குரிய மற்ற ஆசீர்வாதங்கள் யாவை? [கொலோ. 1:14 (அல்லது) எபே. 1:7ஐ வாசிக்கவும்.] கிறிஸ்துவுக்குள் உள்ள ஆசீர்வாதம் என்ன? [கோடிட்ட இடத்தில் "பாவமன்னிப்பு" என்று எழுதவும்.] கிறிஸ்துவுக்குள் உள்ள எது இப்பாவ மன்னிப்பைச் சாத்தியமாக்குகின்றது? கிறிஸ்துவுக்குள் இருக்கும் இரத்தம் பாவங்களை மன்னிக்கின்றதா? கிறிஸ்துவுக்குள் இருக்கின்றவர்கள் இயேசுவின் இரத்தத்தின் மூலமாக மன்னிப்பைப் பெறுகின்றனர்.

கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற ஆவிக்குரிய இன்னொரு ஆசீர்வாதம் என்ன? [2 தீமோ. 2:10ஐ வாசிக்கவும்.] கிறிஸ்துவுக்குள் என்ன ஆசீர்வாதம் உள்ளது? [கோடிட்ட இடத்தில் "இரட்சிப்பு" என்று எழுதி நிரப்பவும்.]

GTG LIBRARY- BANGALORE

கிறிஸ்துவுக்குள் இரட்சிப்பு உள்ளது ஏனென்றால் இன்னொரு ஆசீர்வாதமும் கிறிஸ்துவுக்குள் உள்ளது (2 தீமோ. 2:1). அது என்ன? தேவனுடைய கிருபையினால் மனித குலத்தின் இரட்சிப்புக்காக இயேசுவின் இரத்தம் சிந்தப்பட்டது. இந்தக் கிருபை கிறிஸ்துவுக்குள் இருக்கின்றது மற்றும் இது கிறிஸ்துவுக்குள் உள்ள இரட்சிப்பை அருளுகின்றது.

கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற ஆவிக்குரிய மற்ற ஆசீர்வாதம் என்ன? [1 யோவா. 5:11ஐ வாசிக்கவும்.] கிறிஸ்துவுக்குள் உள்ள ஆசீர்வாதம் என்ன? [கோடிட்ட இடத்தில் "நித்திய ஜீவன்" என்ற எழுதி நிரப்பவும்.] நித்திய ஜீவனைப் பெறுவதற்காக (யோவா. 3:16) இயேசுவில் கொள்ளும் விசுவாசம் கிறிஸ்துவுக்குள் பிரவேசிப்பதற்காக இயேசு கேட்கின்றதைச் செய்வதை உள்ளடக்க வேண்டும்.

கிறிஸ்துவுக்குள் வேறு என்ன உள்ளது? [எபே. 1:3ஐ வாசிக்கவும்.] கிறிஸ்துவுக்குள் எத்தனை ஆசீர்வாதங்கள் உள்ளன? [கோடிட்ட இடத்தில் "ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்கள்" என்று எழுதி நிரப்பவும்.] பல மக்கள் தாங்கள் கிறிஸ்துவுக்குள் இருப்பதைக் குறிப்பதாக பணம், கார்கள், சொத்து, உடமைகள், பழைய ஏற்பாட்டின் ஆசீர்வாதங்கள் போன்ற உலகப்படியான ஆசீர்வாதங்களைக் கருதுகின்றனர்; இருப்பினும் இவைகள் கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்கள் அல்ல. கிறிஸ்தவர் அல்லாதவர்களும் இந்த ஆசீர்வாதங்களைப் பெற முடியும், ஆனால் கிறிஸ்துவுக்குள் உள்ளவர்களுக்கு மட்டுமே அதாவது கிறிஸ்தவர்களுக்கே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் கிடைக்கின்றன.

கிறிஸ்துவுக்குப் புறம்பே இருப்பவர்களின் நிலை என்ன? அவர்கள் கிறிஸ்துவுக்குள் உள்ள ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கின்றார்களா? [எபே. 2:12, 13ஐ வாசிக்கவும்.] கிறிஸ்துவுக்குப் புறம்பே இருக்கின்றவர்கள் கொண்டிராததவை என்ன? ["கிறிஸ்துவுக்கு புறம்பே" என்பதன் கீழ் உள்ள கோடிட்ட இடங்களில் ''கிறிஸ்து இல்லாதவர்கள்,'' ''நம்பிக்கை யில்லாதவர்கள்" மற்றும் "தேவனற்றவர்கள்" என்று எழுதி நிரப்பவும்.]

அவர்கள் கிறிஸ்துவுக்குள் பிரவேசிப்பதற்கு முன், தூரமாயிருந்தனர் ஆனால் இப்பொழுது அவர்கள் கிறிஸ்துவுக்குள் உள்ளனர், இயேசுவின் இரத்தத்தால் அவர்கள் சமீபமானார்கள் என்பதைக் கவனிக்கவும். தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டிருந்தவர்களை இயேசுவின் இரத்தம் தேவனுக்கு அருகில் கொண்டு வருகின்றது. இயேசுவின் இரத்தத்தினால் சமீபத்திற்குக் கொண்டு வரப்பட்டவர்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றனர், இயேசுவின் இரத்தத்தினுடைய பயனைப் பெறுவதற்கு ஒருவர் எங்கிருக்க வேண்டும்? அவர் கிறிஸ்துவுக்குள் இருக்க வேண்டும்.

இயேசுவுக்கு வெளியே ஒருவர் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற முடியுமா? ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்க வேண்டும் என்றே தேவன் திட்டமிட்டு வாக்களித்தார் (ஆதி. 22:18; கலா. 3:14-16).

வேதவாக்கியங்களின் இரு வசனப் பகுதிகள் மட்டுமே ஒருவர் எப்பொழுது கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கின்றார் என்பதை எடுத்துரைக் கின்றன. ஒருவர் எவ்விதம் இயேசுவுக்குள் பிரவேசிக்கின்றார்? [கலா. 3:27

GTG LIBRARY- BANGALORE

மற்றும் ரோமர் 6:3, 4 ஆகியவற்றை வாசிக்கவும்.] ஒருவர் இயேசுவுக்குள் எப்பொழுது பிரவேசிக்கின்றார்? [காலியாக உள்ள கட்டத்தில் (அம்புக் குறியிட்டது) "ஞானஸ்நானத்திற்குள்" என்றெழுதி நிரப்பவும்.]

கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கு ஒரு நபர் என்ன செய்ய வேண்டும்? ஒரு நபர் இந்த ஆசீர்வாதங்களைக் கிறிஸ்துவுக்கு வெளியே பெற முடியுமென்றால், அவர் இயேசுவின் இரத்தம் இன்றியே இவற்றைப் பெற முடியும், ஏனெனில் இயேசுவின் இரத்தம் அவருக்குள் இருப்பவர்களுக்கேயானதாகும்.

பகுதிகள் I மற்றும் II ஆகியவை ஒரே வகையான சத்தியத்தைப் போதிப்பதைக் கவனியுங்கள். ஞானஸ்நானம் பெறும் பொழுது ஒருவர் "பாவமன்னிப்பு," "பாவங்கள் கழுவப்படுதல்" மற்றும் "இரட்சிப்படைதல்" ஆகியவற்றைப் பெறுகின்றார். ஒருவர் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறும் பொழுது, பழையவைகள் (பாவங்கள் என்பது தெளிவு) ஒழிந்து போவதால் இயேசுவின் இரத்தத்தினால் அவர் "புதுசிருஷ்டி" ஆகின்றார், இது "பாவங்கள் கழுவப்படுதலுக்கு" இணையானது மற்றும் இயேசுவின் இரத்தத்தினால் அவர் "பாவமன்னிப்பும்" "இரட்சிப்பும்" அடைகின்றார் அல்லது வேறு வார்த்தையில் சொல்வதென்றால், "இரட்சிக்கப்படுகின்றார்."

மன்னிப்பு என்றால் *என்ன?* மற்றும் அது *எப்பொழுது* கிடைக்கின்றது? என்பதையும் கவனியுங்கள். *எது* பாவத்தை மன்னிக்கிறது என்பதற்கு இயேசுவின் இரத்தம் என்பது பதிலாயிருக்கையில், *எப்பொழுது* என்பதற்கு ஞானஸ்நானத்தில் இயேசுவின் இரத்தம் நம் பாவங்களை மன்னிக்கிறது. *என்ன/எது* என்பது ஞானஸ்நானம் அல்ல ஏனெனில் தண்ணீரானது பாவங்களை மன்னிக்கும் வல்லமை கொண்டிருப்பது இல்லை. மாறாக, ஞானஸ்நானத்தின் *பொழுது* பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. பார்வையற்ற மனிதன் குணமடைந்த நிகழ்ச்சியானது *என்ன* மற்றும் *எப்பொழுது* என்பதற்கு வேதாகமத்தின் நல்லதொரு எடுத்துக்காட்டாக உள்ளது (யோவா. 9:1-7). இயேசுவின் வல்லமை தான் அம்மனிதரைப் பார்வை பெறச் செய்தது, ஆனால் அம்மனிதர் சீலோவாம் குளத்தில் கழுவிய *பொழுதுதான்* காணத் தொடங்கினார். தண்ணீரல்ல, இயேசுவின் வல்லமையே அவரைக் காணும்படி செய்தது. அது போலவே, ஞானஸ்நானம் நமது பாவங்களை மன்னிப்பதில்லை (இயேசுவின் இரத்தம் அதைச் செய்கின்றது) ஆனால் ஞானஸ்நானத்தின் *பொழுது* இயேசுவின் இரத்தம் மன்னிக்கின்றது.

ஒரே ஞானஸ்நானம்

[ஞானஸ்நானத்தைக் குறித்த வேதாகமப் போதனையை மாணவர் புரிந்து கொண்டிருக்கிறார் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு பாடத் தாளின் பின்புறத்தில் "ஒரே ஞானஸ்நானம் (எபே. 4:5)" என்று எழுதவும், பிறகு பின்வரும் வார்த்தைகளை எழுதவும்: "1. யார்?"; "2. ஏன்?"; "3. என்ன?"; "4. எப்படி?"]

எந்த ஞானஸ்நானமும் சரியானதே என்று வேதாகமம் போதிப்ப தில்லை. ஒரே ஞானஸ்நானம் உண்டு என்றுதான் வேதாகமம் போதிக்

GTG LIBRARY- BANGALORE

கின்றது. ஒரு நபர் தனது சட்டைப் பையில் பல சாவிகளை வைத்திருக் கலாம், ஆனால் அவரிடத்தில் சரியான சாவி இல்லையென்றால் அவரால் கதவைத் திறக்க முடியாது. அது போலவோ, ஒருவர் பல முறை ஞானஸ்நானம் பெற முடியும், ஆனாலும் கூட அவர் நாம் பெறும்படி இயேசு விரும்பும் ஒரே ஞானஸ்நானத்தைப் பெறாதவராயிருக்கவும் கூடும்.

பாடத் தாளின் முன்புறத்தில் நாம் *யார்* ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கற்றோம். *யார்* ஞானஸ்நானம் பெற வேண்டும்? (சுவிசேஷத்தைக்) கேள்விப்பட்டு அறிந்து கொண்டு, இயேசுவை விசுவாசித்து, மனந்திரும்பி, மற்றும் இயேசுவை அறிக்கையிட்டவர்களே ஞானஸ்நானம் பெற முடியும். [*பாடத் தாளின் பின்புறத்தில் ''யார்?'' என்ற கேள்விக்கு அருகில் "கேள்விப்பட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டவர்கள்" என்று எழுதவும், மற்றும் இது மறுபுறத்தில் கற்றுத் தரப்பட்டது என்பதை விளக்கவும். (பக்கம் 184ஐப் பார்க்கவும்)*]

ஒருவர் *ஏன்* ஞானஸ்நானம் பெற வேண்டும்? பெந்தெகொஸ்தே நாளன்று இயேசுவின் நாமத்தினாலே பாவமன்னிப்பு என்பது முதன் முதலாகப் பிரசங்கிக்கப்பட்ட பொழுது, பேதுரு "பாவமன்னிப்புக்கென்று" இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தைப் பிரசங்கித்தார். [*பாடத் தாளின் பின்புறத்தில் "ஏன்" என்ற கேள்விக்கு அருகில் "பாவமன்னிப்புக்கு (அப். 2:38)" என்று எழுதவும். (பக்கம் 184ஐப் பார்க்கவும்)*] தவறான காரணத்திற்காக ஞானஸ்நானம் என்பது இயேசுவுக்குக் கீழ்ப்படிதலாய் இருப்பதில்லை (எபி. 5:9). பெற்றோர் ஒருவர் தனது பிள்ளையிடம் நகருக்குச் சென்று மளிகைச் சாமான்கள் சிலவற்றை வாங்கி வரும்படி கூறலாம். அந்தப் பிள்ளை நகருக்குச் செல்லுகிறான், ஆனால் மளிகைச் சாமான்களை வாங்கச் செல்லவில்லை என்றால், அவன் நகருக்குச் சென்றிருப்பினும் அவன் தனது பெற்றோருக்குக் கீழ்ப்படியவில்லை. ஒருவர் சரியான காரணத்திற்காக ஞானஸ்நானம் பெறாதிருந்தால், அவர் இயேசுவுக்குக் கீழ்ப்படியாதவராகவே இருக்கின்றார்.

ஞானஸ்நானத்தில் பயன்படுத்தப்படுவது *என்ன?* இயேசு தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றார் (மத். 3:16). எத்தியோப்பிய மந்திரி தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றார் (அப். 8:36-39). மக்கள் தண்ணீரில் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று பேதுரு அறிவுறுத்தினார் (அப். 10:47). [*பாடத்தாளின் பின்புறத்தில் "என்ன?" என்ற கேள்விக்கருகில் "தண்ணீர் (மத். 3:16; அப். 8:38, 39)" என்று எழுதி நிரப்பவும். (பக்கம் 184ஐப் பார்க்கவும்)*]

ஞானஸ்நானம் *எவ்வாறு* நிகழ்த்தப்பட்டது? "ஞானஸ்நானத்தில் நாம் 'அடக்கம் பண்ணப்பட்டு' மற்றும் 'உயிர்ப்பிக்கப்படுகிறோம்' " என்று வேதாகமம் போதிக்கின்றது [*பாடத் தாளின் பின்புறத்தில் "எப்படி?" என்ற கேள்விக்கருகில் "அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுப்பப்படுதல் (ரோமர் 6:4; கொலோ. 2:12)" என்று எழுதிக் கொள்ளவும். இயேசுவின் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலை நமது ஞானஸ்நானத்துடன் ஒப்பிடு வதற்கு ஒரு படம் வரையவும். (பக்கம் 184ஐப் பார்க்கவும்)*]

ஞானஸ்நானம் என்பது ஒரு சடங்காச்சாரத்திற்கும் மேற்பட்டதாக

GTG LIBRARY- BANGALORE

உள்ளது. ஞானஸ்நானத்தில் ''பழைய வாழ்வுக்கு'' மரித்தலும் அதைத் தொடர்ந்து ஒரு "புதிய வாழ்வுக்கு" உயிர்த்தெழுதலும் இருக்க வேண்டிய தாக உள்ளது (ரோமர் 6:4). ஞானஸ்நானத்தில் இப்படிப்பட்டதொரு மரணம் ஏற்படும் பொழுது, ஒருவரின் "பாவங்கள் கழுவப்படுகின்றன" மற்றும் அவர் "மன்னிக்கப்படுகின்றார்." இனியும் அவர் பழைய வாழ்வை யல்ல ஆனால் புதிய வாழ்வை வாழ வேண்டியவராய் உள்ளார், மற்றும் இனியும் அவர் ''இழந்து போகப்பட்டவராய்'' அல்ல ஆனால் "இரட்சிக்கப்பட்டவராய்" இருக்கின்றார். [*பாடத் தாளின் பின்புறத்தில் இவற்றை எழுதவும். (பக்கம் 184ஐப் பார்க்கவும்)*]

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? ஞானஸ் நானத்தில் இயேசுவுடன் அடக்கம் பண்ணப்பட்டு உயிர்ப்பிக்கப் பட்டவர்கள், இயேசுவுக்குள் பிரவேசித்து இயேசுவின் இரத்தத்தினால் அருளப்படுகின்ற ஆசீர்வாதங்களைப் பெறுகின்றனர் என்று நாம் கற்றுள்ளோம். இயேசுவுக்கு வெளியே இருப்பவர்கள் இயேசுவின்றி இருக்கின்றனர், இந்தக் காரணத்தினால் இந்த ஆசீர்வாதங்கள் இன்றி இருக்கின்றனர்.

III. ஒரே சரீரத்திற்குள்

பகுதி Iல் நாம், ஞானஸ்நானம் பெற்றவர்கள் சபை என்ற விசுவாசிகளின் சமுகத்துடன் சேர்க்கப்படுகின்றனர் என்று கற்றோம். இந்தப் பகுதியில் நாம் இதே கருத்தை இன்னொரு நோக்கில் இருந்து அணுகுவோம்.

1. கிறிஸ்துவுக்குள் உள்ள சரீரங்களின் எண்ணிக்கை பற்றி வேதாகமம் போதிக்கின்றது. கிறிஸ்துவுக்குள் எத்தனை சரீரங்கள் உள்ளன? [ரோமர் 12:5ஐ வாசிக்கவும்.] கிறிஸ்துவுக்குள் உள்ள சரீரங்கள் எத்தனை? [கோடிட்ட இடத்தில் "ஒன்று" என்று எழுதி நிரப்பவும்.]

2. "சரீரம்" என்பது "மாணவர் அமைப்பு" அல்லது "மக்களின் அமைப்பு" என்பது போன்று, மக்களின் குழுவைக் குறிக்கப் பயன்படும் சொற்றொட ராகும். கிறிஸ்துவுக்குள் உள்ள ஒரு சரீரம், (அல்லது) மக்கள் குழு என்பது எது? [கொலோ. 1:18, 24ஐ வாசிக்கவும்.] ஒரே சரீரம் என்பது என்ன? [கோடிட்ட இடத்தில் "சபை" என்று எழுதி நிரப்பவும்.]

3. கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கின்ற ஒருவர் எவ்விதத்தில் கிறிஸ்துவின் ஒரே சரீரத்தில் உறுப்பாக வேண்டியவராயுள்ளார்? பகுதி IIல் நாம், கிறிஸ்துவுக்குள் பிரவேசிப்பது எவ்விதம் என்று கற்றோம். 1 கொரி. 12:13 என்ற இந்த வசனம் அதே சத்தியத்தையே போதிக்கின்றது. [1 கொரி. 12:13ஐ வாசிக்கவும்.] அந்த ஒரே சரீரத்தில் நாம் எவ்வாறு பிரவேசிக்கின்றோம்? [கோடிட்ட இடத்தில் ''ஞானஸ்நானம் பண்ணப்பட்டு'' என்று எழுதி நிரப்பவும்.]

4. கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் எதன் உறுப்பினராய் இருக்கின்றனர்? [1 கொரி. 12:27ஐ வாசிக்கவும்.] இதன் பிறகு நாம் என்னவாக இருக்கின்றோம்? [கோடிட்ட இடத்தில் "கிறிஸ்துவின் சரீரம்" என்று எழுதி நிரப்பவும்.] சரீரமும் சபையும் ஒன்றே. எனவே ஒருவர் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு உறுப்பாய் இருக்கிறார் என்றால், அதனால் அவர்

GTG LIBRARY- BANGALORE

யாருடைய சபையில் உறுப்பினராய் இருக்க வேண்டும்? [கோடிட்ட இடத்தில் கிறிஸ்துவின் "சபையில்" என்று எழுதி நிரப்பவும்.]

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? ஒருவர் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறும் பொழுது அவர் கிறிஸ்துவின் சரீரத்தின் அதாவது கிறிஸ்துவின் சபையின் உறுப்பினராகின்றார் என்று நாம் கற்றுள்ளோம்.

தொகுப்புரை

இந்தப் படிப்பில் நாம், ஒருவர் தம் பாவங்களில் இருந்து எவ்விதம் இரட்சிக்கப்படுகின்றார் என்பதைக் கற்றுள்ளோம்.

I. *நீங்கள் இவற்றைச் செய்திருக்கின்றீர்களா?* நீங்கள் இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டு, கற்றறிந்து, அவரை விசுவாசித்து, மனந்திரும்பி, இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றிருக்கின்றீர்களா? நீங்கள் இவ்வாறு ஞானஸ்நானம் பெற்றிருந்தால், நீங்கள் உங்கள் பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்றுள்ளீர்கள், உங்கள் பாவங்கள் கழுவப்பட்டுள்ளன, நீங்கள் இரட்சிக்கப்பட்டுள்ளீர்கள், மற்றும் விசுவாசிகளான இயேசுவின் சமூகத்தில் ஒரு உறுப்பினராய் இருக்கின்றீர்கள்.

II. *நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றீர்களா?* அப்படியிருந்தால், நீங்கள் ஒரு புதுசிருஷ்டியாக, பாவங்கள் மன்னிக்கப்பட்டவராக, இரட்சிப்பைப் பெற்றவராக, நித்திய ஜீவனையும் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும் பெறுபவராக இருக்கின்றீர்கள். நீங்கள் கிறிஸ்துவுக்குள் இல்லையென்றால், நீங்கள் கிறிஸ்துவை உடையவராயிராமல், நம்பிக்கையற்றவராக மற்றும் தேவனற்றவராக இருக்கின்றீர்கள்.

ஒருவர் கிறிஸ்துவுக்குள் எவ்விதம் பிரவேசிக்கின்றார்? ஒருவரைக் கிறிஸ்துவுக்குள் வைக்கும் ஞானஸ்நானங்கள் எத்தனை? நீங்கள் ஒரே ஞானஸ்நானத்தை (வேதாகமத்தில் கூறப்படுகின்றபடியான ஒரே ஞானஸ்நானத்தை) பெற்றிருக்கின்றீர்களா? நீங்கள் தேவனிடத்திலிருந்து போதிக்கப்பட்டு, இயேசுவில் விசுவாசம் கொண்டு, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசுவில் உள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு, (தண்ணீரில் அடக்கம் செய்யப்பட்டு தண்ணீரில் இருந்து உயிர்ப்பிக்கப்படுதல் என்ற) ஞானஸ்நானம் பெற்றிருக்கின்றீர்களா? நீங்கள் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றீர்களா?

இரட்சிக்கப்படுவதற்கு நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கூற முடியுமா? நீங்கள் ஒரு ஆவிக்குரிய பொதுக் கூட்டத்தில் முன்னால் வந்தீர்களா? அவர்கள் உங்களை அதே வேளையில் ஞானஸ்நானப் படுத்தினார்களா? அல்லது இன்னொரு வேளைக்காகக் காத்திருந்தார்களா? அவர்கள் அப்படிக் காத்திருந்தால், அவர்கள் ஞானஸ்நானம் முக்கியமானதல்ல என்று நினைத்திருக்க வேண்டும். வேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ளவர்கள் சத்தியத்தை ஏற்றுக் கொண்ட உடனே ஞானஸ்நானம் பெற்றதாகக் கூறப்படுகின்றது; அதே நாளில் (அப். 2:41), அதே வேளையில் (அப். 16:33), உடனடியாக (அப். 9:18) அவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர்.

GTG LIBRARY- BANGALORE

இரட்சிப்பு என்பது நம்பர் (எண்) பூட்டைப் போன்றது. ஒரு எண்ணை (நம்பரை) நகர்த்துவது என்பது பூட்டைத் திறக்காது. ஒவ்வொரு நகர்த்துதலும் இன்றியமையாததாக உள்ளது. இருப்பினும், அவசியமான எல்லாவற்றையும் செய்த பிறகு பூட்டுத் திறக்கும் வேளை ஒன்றுள்ளது. இதுவே இரட்சிப்பைப் பொறுத்தமட்டிலும் உண்மையானதாக உள்ளது. இரட்சிப்புக்கு இன்றியமையாத யாவற்றையும் விசுவாசத்தின் காரணத்தினால் நாம் நிறைவு செய்யும் போது மற்றும் ஞானஸ்நானத்தில் அவ்வளர்ச்சியின் உச்சத்தை அடையும் பொழுது மட்டும் நாம் இரட்சிக்கப்படுகின்றோம்.

நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்க விரும்புகின்றீர்களா? நீங்கள் விரும்புகின்றீர்கள் அல்லவா? இயேசுவுக்காக ஒரு புதிய வாழ்வு வாழ நீங்கள் தயாராய் இருக்கின்றீர்களா? நீங்கள் தயாராயிருந்தால், ஞானஸ்நானத்தில் அவருடன் அடக்கம் பண்ணப்படுவதால் நீங்கள் ஏன் உங்கள் கடந்த கால வாழ்வுக்கு இறந்து, ஒரு புது வாழ்வுக்காக அவருடன் உயிர்த்தெழக்கூடாது?

III. *நீங்கள் (சபை என்ற) சரீரத்தில் இருக்கின்றீர்களா? எத்தனை சரீரங்களில் (சபைகளில்) நாம் உறுப்பினராய் இருக்க வேண்டும் என்று இயேசு விரும்புகின்றார்?*

நீங்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் (அதாவது கிறிஸ்துவின் சபையில்) அவயவமாய் இருக்க விரும்புகின்றீர்களா? நீங்கள் ஏன் இயேசுவைப் பின்பற்றுபவராகி அவரது சபையில் பிரவேசிக்கக் கூடாது? நீங்கள் ஏன் இப்பொழுதே ஞானஸ்நானம் பெறக் கூடாது?

GTG LIBRARY- BANGALORE

சுவிசேஷத்துவம்

விற்பன்னரான ஒரு விற்பனையாளர் ஒருமுறை, "நாம் எதையும் நடைபெறச் செய்யாத வரையிலும் எதுவும் நடைபெறுவதில்லை" என்று எழுதினார். நமது சுவிசேஷ ஊழியத்தில் நாம் விருப்பார்ந்த நோக்கங் கொள்ளாத வரையிலும் மிக நல்லது எதுவும் நிச்சயமாக நடைபெறுவதில்லை.

"சுவிசேஷ ஊழியம் என்பது ஏதோ ஒன்றினால் செய்யப்படுவது அல்ல, ஆனால் *யாரேனும் ஒருவரால்* செய்யப்படுகின்றது. சுவிசேஷம் என்பது சிலவற்றைப் பற்றியல்ல ஆனால் சிலரைப் பற்றி கவலைப்படுகின்றது. அது தேவனுடைய அன்பின் வெளிப்பாடாக வும், தேவன் ஒரு நபர் என்பதன் வெளிப்பாடாகவும் இருப்பதால் உணர முடியாத பாடமாகவோ அல்லது இயந்திரத்தனமான திட்டமாகவோ ஒருக்காலும் ஆவதில்லை. செய்தியைப் பரப்புவதற்கு ஏதேனும் செயல்முறை பயன்படுத்தப்பட வேண்டும், ஆனால் அழைப்பை விடுக்கும் கரங்கள் சதையும் இரத்தமும் உடையவை களாய் இருக்கிறது.

இராபர்ட் கோல்மன்
அவர்கள் எஜமானை சந்தித்தார்கள்

''நமது அயலகத்தார் நாம் அவரது ஆத்துமாவை மட்டும் நேசிப்பதற்கு ஒரு உடலற்ற ஆத்துமாவாக இருப்பதில்லை அல்லது நாம் அவரது உடல் சார்ந்த நலனையே கவனிக்க வேண்டியிருப் பதற்கு அவர் ஒரு ஆத்துமாவற்ற உடலாக இருப்பதும் இல்லை. தேவன் என் அயலகத்தாராக உள்ள மனிதரை சமுதாயத்தில் ஒரு ஆத்துமா - உடல் என்ற வகையில் படைத்தார். ஆகையால், நமது அயலகத்தாரை தேவன் உண்டாக்கிய வகையிலேயே நாம் அன்புகூர்ந்தோமென்றால், நாம் அவரது முழுமையான நலனை - அவரது ஆத்துமா, அவரது உடல், மற்றும் அவரது சமூகம் ஆகியவற்றின் நலனை - பற்றி தவிர்க்க முடியாத வகையில் அக்கறையாய் இருக்க வேண்டும்."

ஜான் R.W. ஸ்டாட்
"மாபெரும் கட்டளை ..... மாபெரும் ஆணை"
உலக சுவிசேஷ ஊழியம் என்ற பத்திரிகையில்

GTG LIBRARY- BANGALORE

கிறிஸ்துவின் சபையைப் பற்றி வேதாகமம் கூறுவது என்ன?

I. *கிறிஸ்துவின் சபையில் இருப்பவர்கள் யார்?*

1. *சவுல் ________________ துன்புறுத்தினார். அப். 8:3*
2. *இது ________________ துன்புறுத்துதலாயிருந்தது. அப். 9:1*
3. *இவர்கள் ________________ என்றும் அழைக்கப்பட்டார்கள். அப். 11:26*
4. *சபை ________________ என்றும் அறியப்படுகின்றது. எபே. 1:22, 23*

II. *எத்தனை சரீரங்கள்?*

__________ ரோமர் 12:4, 5
__________ 1 கொரி. 12:12
__________ 1 கொரி. 12:20
__________ எபே. 4:4
__________ கொலோ. 3:15

III. *இது யாருடைய சபை (சரீரம்)?*

__________ மத். 16:18
__________ 1 கொரி. 12:27
__________ எபே. 1:22, 23
__________ எபே. 5:30
__________ கொலோ. 1:24

IV. *சபைக்குக் கிறிஸ்து என்னவாக உள்ளார்?*

______________________________________ மத். 16:18
______________________________________ 1 கொரி. 3:11
______________________________________ எபே. 1:22
______________________________________ எபே. 5:23

V. *கிறிஸ்து சபைக்கு என்ன செய்திருக்கின்றார்?*

________________ ஏன்? ________________ எபே. 5:25
______________________________________ அப். 20:28

VI. *சபை ________________ க் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். எபே. 5:24*

VII. *உறுப்பினர்களுக்கிடையில் எவ்வகையான இசைவைக் கிறிஸ்து விரும்புகின்றார்?*

1. *நாம் ________________ அவர்களும் ________________ யோவான் 17:22*
2. *நீங்களெல்லாரும் ________________ காரியத்தைப் பேசவும், ________________இல்லாமல்... 1 கொரி. 1:10*
3. *நீங்கள் ________________ ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் ________________ போராடி... பிலி. 1:27*

VIII. *இயேசு சபையைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் ________________, ________________ கும் மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார். எபே. 5:26, 27*

Copyright, Gospel Light Pub. Co., 1965.

GTG LIBRARY- BANGALORE



GTG LIBRARY- BANGALORE

பாடத் தாளை எடுத்துரைத்தல்:

''கிறிஸ்துவின் சபையைப் பற்றி வேதாகமம் கூறுவது என்ன?''

"கிறிஸ்துவின் சபையைப் பற்றி வேதாகமம் கூறுவது என்ன?" என்ற பாடத் தாளானது "இயேசுவே வழி" அல்லது "இரட்சிப்பு" என்ற பாடத் தாளுக்குப் பிறகு எடுத்துரைக்கப்படுதல் ஏற்புடையதாக இருக்க முடியும். ஒருவேளை, ''இரட்சிப்பு'' என்ற பாடத் தாளுக்குப் பிறகு இதை எடுத்துரைப்பதென்பது மிகச் சிறந்த வேளையாக இருக்க முடியும். "இரட்சிப்பு" என்ற பாடத் தாள் முடிவடையும் இடத்தை இது தொடக்க இடமாக எடுத்துக் கொள்வதால் இது உண்மையாக உள்ளது.

நோக்கம்

மீட்கப்பட்டவர்கள் மனித நிறுவனமாகவோ, அமைப்பாகவோ அல்லது பெயர்க்குழுவாகவோ இல்லாத கிறிஸ்துவின் சபை என்ற ஒரே சரீரத்தில் உள்ளனர் என்பதை விளக்கப்படுத்துவதே "சபை" என்ற பாடத் தாளின் நோக்கமாக உள்ளது. கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள யாவரும் அந்த ஒரே சரீரத்தின் ஒருமைப்பாட்டிற்கு ஊழியம் செய்ய வேண்டியவர்களாக உள்ளனர்.

பாடச் சுருக்கம்

கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களான கிறிஸ்தவர்கள், சபை என்ற கிறிஸ்துவின் சரீரமாய் இருக்கின்றனர் என்று இந்தப் பாடத் தாள் போதிக்கின்றது. இயேசு சபை என்ற ஒரே சரீரத்தைக் கட்டி எழுப்பினார், அதற்கு அவரே தலையாக, அஸ்திபாரமாக மற்றும் இரட்சகராக இருக்கின்றார். அவருடைய அன்பானது அவரைத் தம்முடைய இரத்தத்தினால் அதைக் கிரயம் கொள்ளவும் அதைத் தமக்கு முன்பாக நிலைநிறுத்திக் கொள்ளவும் முடியும்படி அதற்காகத் தம்மையே மரணத்திற்கு உட்படுத்தும்படி அவரை வழி நடத்திற்று. அவர் தமது சபையில் உள்ள யாவரும் ஒருமைப்பாட்டுடன் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றார்.

அறிமுகம்

''இரட்சிப்பு'' என்ற பாடத் தாளைச் சுருக்கமாக மீள்பார்வை

GTG LIBRARY- BANGALORE

யிடுவதாலும், இரட்சிக்கப்பட்டவர்கள் சபையில் உள்ளனர் என்று குறிப்பிடுவதாலும் இந்தப் பாடம் அறிமுகப்படுத்தப்பட முடியும். இரட்சிக்கப்படுவதற்கு ஒருவர் என்ன செய்கின்றார் என்பதையும் இயேசுவின் மக்கள் கூட்டத்தில் ஒருவர் எவ்விதம் உறுப்பினர் ஆகிறார் என்பதையும் "இரட்சிப்பு" என்ற பாடத் தாள் எடுத்துரைக்கின்றது. கிறிஸ்துவின் சபையைப் பற்றி வேதாகமம் என்ன கூறுகின்றது என்பதை ஒருவர் அறிய இந்தப் பாடம் உதவக் கூடும்.

I. *சபையின் உறுப்பினர்கள்*

கிறிஸ்துவின் சபையில் உறுப்பினராயுள்ளவர்கள் யார் மற்றும் அவர்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர் என்பவை பற்றி நாம் இந்தப் பகுதியில் படிப்போம்.

1. கிறிஸ்துவின் சபையில் இருப்பவர்கள் யார்? [அப். 8:3ஐ வாசிக்கவும்.] சவுல் யாரைத் துன்புறுத்தினார்? [கோடிட்ட இடத்தில் "சபையை" என்று எழுதி நிரப்பவும்.] சபையைத் துன்புறுத்த நாடிய பொழுது சவுல் கட்டிடங்களை இடித்துத் தள்ளவில்லை என்பதைக் கவனியுங்கள். கிறிஸ்துவின் சபை என்பது ஒரு கட்டிடமோ, கட்டிடங்களோ அல்லது பல தரப்பட்ட படிகள் உள்ள நிறுவனமோ அல்ல, ஆனால் அதற்கு மாறாக இது, இயேசுவுக்குரிய ஆண்கள் மற்றும் பெண்களைக் கொண்ட ஒரு அமைப்பு ஆகும். [பாடத் தாளின் பின்புறத்தில் ஒரு சதுரக் கட்டத்தைப் பெரிதாக வரைந்து அதன் மேல்புறத்தில் "சபை" என்று எழுதவும். அதன் கீழ் "உறுப்பினர்கள்" என்று எழுதவும். இதற்கு மேல் "ஆண்கள் மற்றும் பெண்கள்" என்றெழுதவும். (பக்கம் 198ஐப் பார்க்கவும்)]

2. சவுல் சபையை அழிக்க நாடிய பொழுது, அவர் யாரை அழிப்பதற்கு நாடினார்? அப். 8:3 வரையிலும் பவுலின் செயல்களை லூக்கா எவ்விதம் விவரித்தார் என்பதையும் பிறகு அவர் பிலிப்புவின் செயல்களை எவ்விதம் விவரித்தார் (அப். 8:5) என்றும் கவனியுங்கள். அப். 9:1ல் அவர் சவுலைப் பற்றிய தமது விவரிப்பை விட்ட இடத்திலிருந்து மீண்டும் தொடங்கினார். அப். 8:3ல் அவர் சவுலைப் பற்றி எழுதுவதை விட்ட பொழுது, சவுல் சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தார். சவுலைப் பற்றிய எடுத்துரைப்பை லூக்கா மீண்டும் தொடர்ந்த பொழுது, சவுல் தாம் செய்து கொண்டிருந்ததை இன்னமும் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார். சவுல் இன்னும் யாரை அழிக்க நாடிக் கொண்டிருந்தார்? [அப். 9:1ஐ வாசிக்கவும்.] சபையின் உறுப்பினர்கள் என்னவென்று அழைக்கப்பட்டார்கள்? [கோடிட்ட இடத்தில் "கர்த்தருடைய சீஷர்கள்" என்று எழுதி நிரப்பவும். பாடத் தாளின் பின்புறம், "ஆண்கள் மற்றும் பெண்கள்" என்பதற்கு மேல் "சீஷர்கள்" என்று எழுதவும். (பக்கம் 198ஐப் பார்க்கவும்)]

[இந்த வேளையில் ஆசிரியர், ஒரு சீஷர் மற்றும் ஒரு அப்போஸ்தலர் என்பவர்களுக்கிடையே உள்ள வேறுபாட்டை விளக்குவது அவசியப் படலாம். பல மக்கள் பன்னிருவரை சீஷர்கள் என்று நினைப்பதே இதற்குக் காரணமாக உள்ளது. இயேசுவைப் பின்பற்றியவர்களாயிருந்த சீஷர்கள்

GTG LIBRARY- BANGALORE

என்ற பெரிய கூட்டத்திலிருந்து பன்னிரு அப்போஸ்தலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதை விளக்கப்படுத்த லூக். 6:12-14 வசனப் பகுதி உதவுகின்றது. அப்போஸ்தலர்கள் என்பவர்கள் பன்னிருவர் கொண்ட ஒரு சிறு குழுவாக, அவருடைய விசேஷித்த பிரதிநிதிகளாக இருந்தனர், சீஷர்கள் என்பவர்கள் அவரைப் பின்பற்றுகின்ற எல்லாருமாக இருந்தனர்.]

3. கர்த்தருடைய சீஷர்களே சபையின் உறுப்பினர்களாயிருந்தனர், ஆனால் சீஷர்கள் என்னவென்று அழைக்கப்பட்டனர்? [அப். 11:26ஐ வாசிக்கவும்.] சபையின் உறுப்பினர்களாயிருந்த சீஷர்கள் என்னவென்றும் அழைக்கப்பட்டார்கள்? [கோடிட்ட இடத்தில் "கிறிஸ்தவர்கள்" என்று எழுதி நிரப்பவும். பாடத் தாளின் பின்புறத்தில் "சீஷர்கள்" என்பதற்கு மேல் புறத்தில் "கிறிஸ்தவர்கள்" என்று எழுதி நிரப்பவும். (பக்கம் 198ஐப் பார்க்கவும்)]

4. "சீஷர்கள்" மற்றும் "கிறிஸ்தவர்கள்" என்ற சொற்றொடர்கள் சபையின் தனித்தனி உறுப்பினர்களைக் குறிக்கின்றன. இந்த உறுப்பினர்கள் ஒரு குழு என்ற வகையில் அதாவது முழுமையாக சபை என்று அழைக்கப் பட்டனர். இந்த மக்கள் குழுவை விவரிக்க இன்னொரு சொற்றொடரும் பயன்படுத்தப்பட்டது. [எபே. 1:22, 23ஐ வாசிக்கவும்.] சபை வேறு என்னவென்று அழைக்கப்படுகிறது? [கோடிட்ட இடத்தில் "சரீரம்" என்று எழுதி நிரப்பவும்.] பாடத் தாளின் பின்புறத்தில் சதுரத்தினுள் "சபை" என்ற வார்த்தையின் கீழ் "சரீரம்" என்று எழுதவும் (பக்கம் 198ஐப் பார்க்கவும்). சபை என்பது சரீரமாகவும், சரீரம் என்பது சபையாகவும் இருக்கும் என்றால், சபையைக் குறித்த உண்மையானது சரீரத்தைக் குறித்த உண்மையாக உள்ளது மற்றும் சரீரத்தைக் குறித்துக் கூறப்படுவது சபையைக் குறித்தும் கூறப்பட முடியும்.

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் ஒரு குழு என்ற வகையில் குறிப்பதற்கு "சபை" மற்றும் "சரீரம்" என்ற சொற்பதங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்று நாம் கற்றுள்ளோம். "சீஷர்கள்" மற்றும் "கிறிஸ்தவர்கள்" என்பவை தனித்தனி உறுப்பினர்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற சொற்பதங்களாக உள்ளன. கிறிஸ்தவர்களே கிறிஸ்துவின் சரீரத்தில் (சபையில்) உள்ளவர்களாய் இருக்கின்றனர்.

II. எத்தனை?

கிறிஸ்தவர்கள் பல மத நிறுவனங்களாக அமைந்திருந்தனர் என்பதாக வேதாகமம் போதிக்கின்றதா? கிறிஸ்தவர்கள் எத்தனை குழுக்களில் உறுப்பினர்களாய் இருந்தனர்? [ரோமர் 12:4, 5ஐ வாசிக்கவும்.] கிறிஸ்தவர்கள் எத்தனை சரீரங்களின் உறுப்பினர்களாய் இருந்தார்கள்? [கோடிட்ட இடத்தில் "ஒரே சரீரம்" என்று எழுதி நிரப்பவும்.] கிறிஸ்துவுக்குள் "ஒரே" சரீரம்தான் உள்ளது என்று வேதாகமம் கூறுகின்றது என்பதைக் கவனிக்கவும். "இரட்சிப்பு" என்ற பாடத் தாளில் நாம், "ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும்" கிறிஸ்துவுக்குள் இருக்கின்றன என்று கற்றோம். இது உண்மையாய் இருப்பதால், இதைத் தொடர்ந்து,

GTG LIBRARY- BANGALORE

கிறிஸ்துவுக்குள் உள்ள ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அந்த ஒரே சரீரம் தான் பெற்றுள்ளது என்ற கருத்து வருகின்றது. சரீரத்தைக் குறித்த உண்மை எதுவோ அது சபையைக் குறித்த உண்மையாகவும் உள்ளது. ஆகையால், கிறிஸ்துவுக்குள் உள்ள ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அந்த ஒரே சபைதான் கொண்டுள்ளது என்ற கருத்து தொடருகின்றது.

சரீரம் என்பது வேதாகமத்தில் பல தடவைகள் குறிப்பிடப்படுகின்றது. சரீரங்களின் எண்ணிக்கையைப் பற்றி வேதாகமம் முரண்படாத நிலையில் சீரானதாக உள்ளதா? [1 கொரி. 12:12, 20; எபே. 4:4; கொலோ. 3:15 ஆகிய வசனங்களை வாசிக்கவும்.] எத்தனை சரீரங்கள் உள்ளன? [கோடிட்ட இடங்களில் "ஒரே சரீரம்" என்று எழுதி நிரப்பவும்.] இவ்விஷயத்தில் வேதாகமம் சீரானதாக உள்ளதா? இது ஒரே சரீரம் தான் உள்ளது என்ற உண்மையை வலியுறுத்துவதில்லையா? [பாடத் தாளின் பின்புறத்தில் சதுரத்தினுள், சபை மற்றும் சரீரம் என்பதன் கீழ் ஒரே சபை, ஒரே சரீரம் என்று எழுதவும். (பக்கம் 198ஐப் பார்க்கவும்)]

இந்தப் பகுதியில் நாம் கற்றுள்ளது என்ன? உண்மையான ஒரே ஒரு சரீரம், உண்மையான ஒரே ஒரு சபை என்பதுதான் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை நாம் கற்றிருக்கின்றோம்.

III. ***யாருடைய சபை?***

இந்தப் பகுதியில் நாம் கிறிஸ்தவர்கள் கொண்ட இந்த சரீரமாகிய சபை யாருக்குரியது என்பதைத் தீர்மானம் செய்ய முயற்சிக்கப் போகின்றோம்.

இயேசு, தாம் ஒரு சபையைக் கட்டப் போவதாக வாக்களித்தார். அவர் யாருடைய சபையைக் கட்டி எழுப்பவிருந்தார்? [மத். 16:18ஐ வாசிக்கவும்.] இயேசு, தாம் யாருடைய சபையைக் கட்டி எழுப்பப் போவதாகக் கூறினார்? [கோடிட்ட இடத்தில் "என்" என்றும் அதைத் தொடர்ந்து அடைப்புக் குறிகளுக்குள் "கிறிஸ்துவின்" என்றும் எழுதி நிரப்பவும்.]

இந்த சரீரம், இந்த சபை, பின்நாட்களில் பவுலினால் குறிப்பிடப்படுகின்றது. இதைப் பற்றி பவுல் எப்படிக் குறிப்பிட்டார்? [1 கொரி. 12:27ஐ வாசிக்கவும்.] யாருடைய சரீரமென்று பவுல் அழைத்தார்? [கோடிட்ட இடத்தில் "கிறிஸ்துவின்" என்று எழுதி நிரப்பும்.]

இதே விஷயத்தை அர்த்தப்படுத்தி, சரீரத்தைப் பற்றிப் பவுல் இன்னும் என்ன கூறுகின்றார்? அந்த சரீரம் யாருடைய சரீரம் என்று அவர் கூறுகின்றார்? [எபே. 1:22, 23; 5:30; கொலோ. 1:24 ஆகிய வசனங்களை வாசிக்கவும்.] யாருடைய சரீரத்தைப் பவுல் ஒரே சரீரம் என்று அழைக்கின்றார்? [கோடிட்ட இடங்களில் "அவருடைய" என்றும் அதைத் தொடர்ந்து அடைப்புக் குறிகளுக்குள் "கிறிஸ்துவினுடைய" என்றும் எழுதவும். பாடத் தாளின் பின்புறத்தில் "சபை" என்பதற்குப் பிறகு "கிறிஸ்துவின் சரீரம்" என்று எழுதவும். (பக்கம் 198ஐப் பார்க்கவும்)]

இந்தப் பகுதியில் நாம் கற்றுள்ளது என்ன? இயேசு ஒரே ஒரு சரீரத்தை, ஒரே ஒரு சபையைக் கொண்டுள்ளார் என்று நாம் கற்றுள்ளோம். இந்த சரீரத்தில் எல்லாக் கிறிஸ்தவர்களும் உள்ளனர்.

GTG LIBRARY- BANGALORE

[இவ்வேளையில் ஆசிரியர் பாடத் தாளைத் திருப்பி ஒருவர் இந்த ஒரே சரீரமான ஒரே சபையில் எவ்விதம் பிரவேசிக்கின்றார் என்று கேட்க விரும்பலாம். பாடத் தாளின் பின்புறத்தில் "உலகம்" என்ற இடத்திலிருந்து "சபை" என்ற இடத்தினுள் வருவதைக் குறிக்கும் வகையில் வெற்றிட அம்புக்குறி ஒன்றை வரையவும். (பக்கம் 198ஐப் பார்க்கவும்)] ஒருவர் சபையினுள் எவ்விதம் பிரவேசிக்கின்றார்? "இரட்சிப்பு" பாடத் தாளிலிருந்து கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்க ஒருவர் என்ன செய்ய வேண்டும் என்று கற்றுக் கொண்டோம். நாம் வசனத்தைக் கேட்க வேண்டும், கற்றறிய வேண்டும், அவரில் விசுவாசிக்க வேண்டும், நம்முடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும், அவரிலுள்ள நம்முடைய விசுவாசத்தை அறிக்கை செய்ய வேண்டும் என்று இயேசு கற்பித்தார். இவற்றை நாம் செய்து, பின்பு வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஒரே ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டால், நாம் இயேசுவுக்குள் பிரவேசிக்கிறோம் (கலா. 3:27). இயேசுவில் ஒரே ஒரு சரீரம் மாத்திரமே இருக்கிறது. ஆகவே, நாம் இயேசுவுக்குள் ஞானஸ்நானப்படுத்தப்படும் போது, இயேசுவில் இருக்கிற அந்த ஒரே சரீரத்திற்குள் பிரவேசிக்கிறோம் என்பது தெளிவாகிறது. இருந்தாலும், நாம் எப்படி ஒரே சரீரத்திற்குள் பிரவேசிக்கிறோம் என்று தர்க்கித்து முடிவு செய்ய அவசியமில்லை. நாம் எப்பொழுது ஒரே சரீரத்திற்குள் பிரவேசிக்கிறோம் என்று வேதாகமம் நமக்குக் கூறுகின்றது. [1 கொரி. 12:13ஐ வாசிக்கவும்.] ஒரே சரீரத்திற்குள் நாம் எப்போது பிரவேசிக்கின்றோம்? [பாடத் தாளின் பின்புறம் நம்மை அந்த ஒரே சரீரத்திற்குள் வைப்பதை அம்புக் குறியில் எழுதவும். (பக்கம் 198ஐப் பார்க்கவும்)]

நாம் ஒரே சரீரமாக இருந்தால், நாம் என்னவென்று அழைக்கப் படுகின்றோம்? ஒரு குழு என்ற வகையில் நாம் *சரீரம்* என்று அதாவது கிறிஸ்துவின் *சபை* என்று அழைக்கப்படுகின்றோம். தனிநபர்கள் என்ற வகையில் நாம் *சீஷர்கள்* அதாவது *கிறிஸ்தவர்கள்* என்று அழைக்கப் படுகின்றோம்.

IV. கிறிஸ்துவும் சபையும்

இயேசு சபையுடன் கொண்டுள்ள உறவானது தனிச் சிறந்ததாக உள்ளது. இப்படிப்பட்ட ஒரு உறவை வேறு ஒருவரும் நிலை நிறுத்துவதில்லை.

சபையானது (இதற்கு முன்) எப்பொழுதும் இந்தப் பூமியில் இருந்ததில்லை, எனவே அது ஒரு தொடக்கத்தையும், அதைத் தொடங்கிய ஒருவரையும் கொண்டிருக்க வேண்டும். இயேசு தாம் என்ன செய்வதாகக் கூறியிருந்தார்? [மத். 16:18ஐ வாசிக்கவும்.] ஒரு நபர் கட்டி எழுப்பினால், அவர் என்னவாக இருக்கின்றார்? அவர் கட்டுபவராய் இருப்பதில்லையா? இயேசு சபைக்கு யாராயிருக்கின்றார்? [கோடிட்ட இடத்தில் "கட்டுபவர்" என்று எழுதி நிரப்பவும். பாடத் தாளின் பின்புறத்தில் சதுரக் கட்டத்தில் இடது புறத்தில் "கட்டுபவர்" என்றும் அதற்குக் கீழே "இயேசு" என்றும் எழுதவும். (பக்கம் 198ஐப் பார்க்கவும்)]

GTG LIBRARY- BANGALORE

இயேசு கட்டுபவராக மட்டுமின்றி, சபைக்கு இன்னொரு செயலைப் புரிபவராகவும் இருக்கின்றார். சபை யார் மீது கட்டப்பட்டுள்ளது? [1 கொரி. 3:11ஐ வாசிக்கவும்.] சபைக்கு இயேசு இன்னும் என்னவாக இருக்கின்றார்? [கோடிட்ட இடத்தில் "அஸ்திபாரம்" என்று எழுதவும்.] இயேசு தம் மீதே சபையைக் கட்டி எழுப்பினார் என்றால், நாம் இயேசுவைத் தவிர இன்னொருவர் மீது கட்டி எழுப்புவது சரியானதாயுள்ளதா? [பாடத் தாளின் பின்புறத்தில் சதுரக் கட்டத்தின் கீழ் "அஸ்திபாரம்" என்றெழுதி அதன் கீழ் "இயேசு" என்று எழுதவும். (பக்கம் 198ஐப் பார்க்கவும்)]

இயேசு சபைக்கு இன்னும் சிலவாக உள்ளார். அவர் சபைக்கு வேறு என்னவாக உள்ளார்? [எபே. 1:22ஐ வாசிக்கவும்.] இயேசு சபைக்கு என்னவாக உள்ளார்? [கோடிட்ட இடத்தில் ''தலை'' என்று எழுதி நிரப்பவும்.] எந்த ஒரு நிறுவனத்தின் உடலுக்கும் (அமைப்புக்கும்) தலையின் பணி என்னவாக உள்ளது? தலை என்பது நிறுவனத்தை வழி நடத்தி இயக்குவதாயிருப்பதில்லையா? எந்த ஒரு மனிதருமோ அல்லது மனிதர் குழுவோ சபைக்குத் தலையாக இருப்பதில்லை. இயேசு ஒருவரே சபையின் ஒரே ஒரு தலைவர் என்று வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளார். [பாடத் தாளின் பின்புறத்தில் சதுரக் கட்டத்திற்கு மேல் "தலை" என்றும் அதற்குக் கீழே "இயேசு" என்றும் எழுதவும். (பக்கம் 198ஐப் பார்க்கவும்)]

இயேசு சபைக்கு இன்னும் ஒன்றாக உள்ளார். அவர் சபைக்கு இன்னும் என்னவாக உள்ளார்? [எபே. 5:23ஐ வாசிக்கவும்.] இயேசு சபைக்கு யாராக உள்ளார்? [கோடிட்ட இடத்தில் ''இரட்சகர்'' என்று எழுதி நிரப்பவும்.] இயேசு தம் மீது கட்டியெழுப்பிய, தாமே தலைவராக உள்ள சபையில் இருக்கின்றவர்களுக்கு அவரே இரட்சகராக உள்ளார். [பாடத் தாளின் பின்புறத்தில் சதுரக் கட்டத்தின் வலது மேல் மூலையில் பரலோகம் என்று எழுதி வரைந்து அதை நோக்கி வெற்றிட அம்புக்குறியிட்டு வெற்றிடத்தில் ஒரு சிலுவையை வரைந்து அதன் கீழ் "இரட்சகர்" என்றும் மற்றும் அதன் கீழ் ''இயேசு'' என்றும் எழுதவும். (பக்கம் 198ஐப் பார்க்கவும்)]

இந்தப் பகுதியில் நாம் எதைக் கற்றுள்ளோம்? இயேசுவே சபையைக் கட்டியவராக, அதன் அஸ்திபாரமாக, அதன் தலைவராக மற்றும் சபையின் இரட்சகராக உள்ளார் என்று நாம் கற்றுள்ளோம். சபையுடன் இயேசு தம்மை இவ்வளவு அதிகமாய் உறவுபடுத்திக் கொண்டுள்ளார் என்றால், மனிதர்கள் சபையுடன் அவருக்குள்ள உறவை மதித்து, சபையுடன் அவருக்குள்ள உறவை எடுத்துப் போட முயற்சி செய்யாமல் இருப்பது அவசியம். மனிதர்கள் வேறு சபைகளைக் கட்ட முயற்சிக்கக் கூடாது, வேறே அஸ்திபாரத்தைப் போடவும், வேறே தலைவர்களுக்குக் கீழ்ப்படியவும், வேறு இரட்சகர்களை நாடவும் கூடாது. இயேசுவே சபையின் தேவைகள் யாவுமாய் இருக்கின்றார் (கொலோ. 2:10).

V. சபைக்காக இயேசுவின் மரணம்

இயேசு சபையைக் கட்டியவராக, அதன் அஸ்திபாரமாக, அதன்

GTG LIBRARY- BANGALORE

தலையாக மற்றும் சபையின் இரட்சகராக இருக்குமளவுக்கு அவர் சபைக்காக என்ன செய்துள்ளார்? மற்றும் அவர் ஏன் அதைச் செய்துள்ளார்? [எபே. 5:27ஐ வாசிக்கவும்.] *இயேசு தமது சபைக்காகக் கொடுத்தது என்ன? ஏன் அதைக் கொடுத்தார்?* [கோடிட்ட இடத்தில் "தம்மையே அதற்காகக் கொடுத்தார்" மற்றும் "அன்பினால்" என்று எழுதி நிரப்பவும்.] இது இன்னொரு வகையில் விளக்கப்படுகின்றது. [அப். 20:28ஐ வாசிக்கவும்.] *சபையை இயேசு எதைக் கொண்டு விலைக்கு வாங்கினார்?* [கோடிட்ட இடத்தில் "தம்முடைய சுய இரத்தத்தைக் கொண்டு" என்று எழுதி நிரப்பவும்.]

[இந்த வேளையில் ஆசிரியர் *பாடத் தாளின் பின்புறத்தில் அப். 20:28* என்று எழுதி, பின்வரும் கேள்விகளைக் கேட்க விரும்பலாம்:

1. *சபையை விலைக்கு வாங்கியது யார்?*
2. *சபை யாருக்கு உரியது?*
3. *சபை ஏன் அவருக்கு உரியதாயிருக்கின்றது?*
4. *அதற்காக அவர் செலுத்திய விலை என்ன?*
5. *சபையை நாம் என்னவென்று அழைக்க வேண்டும்?*
6. *சபையின் மதிக்கப்பட்ட விலை என்ன?*
7. *சபைக்கு எதனை விலை செலுத்த இயேசு தயாராயிருந்தார்?*
8. *இயேசுவுக்கு சபை மதிப்புள்ளதாக இருக்கின்றதா?*
9. *இயேசுவின் இரத்தத்தின் பயனை அடைய ஒருவர் எவ்விடத்தில் இருக்க வேண்டும்?*
10. *இயேசு தம்முடன் பரலோகத்திற்கு யாரை அழைத்துச் செல்வார்?*

இந்தக் கேள்விகளை எழுதிய பிறகு ஆசிரியர், இக்கேள்விகளுக்குக் கற்பவர் அப். 20:28ல் இருந்து பதில் அளிக்க உதவி செய்வார். பதில்கள் பின்வருபவைகளாய் இருக்கும் என்பது உறுதி: *1. இயேசு; 2. இயேசு; 3. அவர் அதை வாங்கினார்; 4. அவருடைய இரத்தம்; 5. அவருடைய (கிறிஸ்துவின்) சபை; 6. இயேசுவின் இரத்தம்; 7. அவருடைய இரத்தம்; 8. ஆம்; 9. அவருடைய சபையில்; 10. அவருடைய சபையை.*

10வது கேள்வியை விவரிப்பதற்கு, ஆசிரியர் பின்வரும் உவமையைப் பயன்படுத்தலாம்: ஒரு பை நிறைய மளிகை சாமான்களை வாங்கிய ஒரு நபர் அவற்றை ஒரு வைப்பறையில் வைத்துவிட்டு மற்ற சில பணிகளுக்காக விரைந்து சென்றார். அவர் திரும்பி வரும்பொழுது, அந்த அறையில் தமது பையுடன் அதே போன்ற மற்ற பல பைகள் இருப்பதைக் காண்கின்றார். *அவர் தம்முடன் எந்தப் பையை எடுத்துச் செல்வார்?* அவர் தாம் வாங்கியிருந்த பையை மட்டுமே எடுத்துச் செல்வார். அவர் வேறு பைகள் எவற்றையாவது எடுத்துச் செல்வாரென்றால், அவர் தமக்குரியதல்லாத பையை எடுத்துச் செல்பவராய் இருப்பாரே. அது போலவே, இயேசு தாம் விலை கொடுத்து வாங்கியவர்களையே பரலோகத்திற்குக் கூட்டிச் செல்வார். *அவர் தம் இரத்தத்தை விலையாகக் கொடுத்து வாங்கப்படாத வர்களைப் பரலோகத்திற்குக் கூட்டிச் செல்வாரென்றால், அவர் தாம் சிலுவையில் சிந்திய இரத்தத்தைத் தாமே மதிப்பற்றதாக்குபவராக இருப்பாரல்லவா?* ஏனெனில், அவர் தமது இரத்தத்தை விலை கொடுத்து

GTG LIBRARY- BANGALORE

வாங்கப்படாதவர்களைப் பரலோகத்திற்கு அழைத்துச் சென்றால், பரலோகத்தில் பிரவேசிப்பதற்கு அவரது இரத்தம் அவசியமில்லை என்றாகி விடுமல்லவா? சபை என்பது அவரது இரத்தத்தை விலை கொடுத்து வாங்கப்பட்ட மக்களைக் கொண்டதாகும்; ஆகையால், அவர் தம் சபையை மட்டுமே பரலோகத்திற்குக் கூட்டிச் செல்வார். நீங்கள் அவருடைய சபையில் இருக்கின்றீர்களா?]

இந்தப் பகுதியில் நாம் கற்றுள்ளது என்ன? இயேசு தம் அன்பினால் சபைக்காகத் தமது இரத்தத்தைச் சிந்தினார் என்று நாம் கற்றுள்ளோம். இயேசுவின் இரத்தத்தினுடைய பயன்களை நாம் அடைய வேண்டும் என்றால், நாம் அவருடைய சபையில் இருக்க வேண்டும்.

VI. கீழ்ப்படிகின்ற சபை

இயேசு கட்டியெழுப்பிய சபை யாருக்குக் கீழ்ப்படிகின்றது? அவரது சபையானது மத கட்டளைகள், ஆச்சாரங்கள் மற்றும் மனிதர்களின் பாரம்பரியங்கள் ஆகியவற்றிற்குக் கீழ்ப்படிகின்றதா? [எபே. 5:24ஐ வாசிக்கவும்.] சபை யாருக்குக் கீழ்ப்படிகின்றது? [கோடிட்ட இடத்தில் “கிறிஸ்துவுக்கு” என்று எழுதி நிரப்பவும்.]

இயேசு சபைக்குத் தலையாய் இருக்கின்றார், மற்றும் சபை அவருக்குக் கீழ்ப்படிந்திருக்கின்றது என்றால், சபைகள் தங்கள் சுய சட்டங்களையும் ஒழுங்கு முறைகளையும் ஏற்படுத்திக் கொள்ளுதல் என்பது சரியானதா யிருக்கின்றதா? கிறிஸ்துவின் சபையில் உள்ளவர்கள் அவருக்கே (கிறிஸ்துவுக்கே) ஒவ்வொன்றிலும் கீழ்ப்படிதல் உள்ளவர்களாயிருக்க வேண்டும். அவருடைய உபதேசத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள் (அவரது) மக்களினின்று அறுப்புண்டு போவார்கள் (அப். 3:23).

இந்தப் பகுதியில் நாம் கற்றுள்ளது என்ன? கிறிஸ்துவின் சரீரமான சபையானது கிறிஸ்துவின் சித்தத்தைச் செய்கின்றது என்று நாம் கற்றுள்ளோம்.

VII. இசைவு

1. இயேசு (தம்) மக்கள் என்ற ஒரே சரீரமான சபையைக் கொண்டுள்ளார் என்று நாம் ஏற்கனவே கற்றுள்ளோம். இந்த ஒரே சரீரத்தின் உறுப்பினர்கள் தங்களுக்குள் எவ்வகையான உறவுமுறை கொண்டிருக்கும் படி இயேசு விரும்புகின்றார்? அவர்கள் ஒருவருக்கு மற்றவர் அந்நியமா யிருக்கும்படி அவர் விரும்புகின்றாரா அல்லது அவர்கள் ஒருமைப் பாட்டுடன் இருக்கும்படி அவர் விரும்புகின்றாரா? [யோவா. 17:22ஐ வாசிக்கவும்.] இயேசுவும் பிதாவும் ஒருவருக்கொருவர் இசைவுடன் செயல்படுகின்றனர். இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் தங்களை (இயேசு மற்றும் பிதாவை) ஒரு முன்மாதிரியாகப் பின்பற்ற வேண்டும் என்று விரும்புகின்றாரா? [கோடிட்ட இடங்களில் “ஒன்றாயிருக்கிறது போல,” “ஒன்றாயிருக்கவும்” என்று எழுதி நிரப்பவும்.] இயேசுவும் பிதாவும் ஒன்றாயிருக்கிறதுபோல இயேசுவைப் பின்பற்றுகின்றவர்களும் ஒன்றாயிருக்கும்படி இயேசு விரும்புகிறார்.

GTG LIBRARY- BANGALORE

2. கொரிந்துவில் இருந்த சபையார் இயேசு விரும்பிய வகையில் வாழும்படி அவர்களை உற்சாகப் படுத்துவதற்காகப் பவுல் அவர்களுக்கு (நிருபம்) எழுதினார். அவர்களுக்குள் உட்பூசல் இருந்தது. அவர்கள் என்ன செய்யும்படிக்குப் பவுல் கேட்டுக் கொண்டார்? [1 கொரி. 1:10ஐ வாசிக்கவும்.] அவர்கள் என்ன செய்ய வேண்டியிருந்தது? [கோடிட்ட இடங்களில் "ஒரே" மற்றும் "பிரிவினைகள்" என்று எழுதி நிரப்பவும். வேதாகமத்தின் சில பதிப்புகளில் உள்ள வார்த்தை மாறுபாடுகளின் காரணமாக பாடத் தாளில் இவ்விடத்தில் ஆசிரியர் சிறு மாற்றங்கள் செய்ய வேண்டியிருக்கலாம்.] அவர்களிடையில் பிரிவினை என்பது ஏற்றுக் கொள்ள முடியாததாகவும் திருத்தப்பட வேண்டியதாகவும் இருந்தது.

3. பிலிப்பியில் இருந்த சகோதர சகோதரிகளுக்குப் பவுல் கொடுத்த அறிவுறுத்தல் என்ன? [பிலி. 1:27ஐ வாசிக்கவும்.] அவர்கள் விசுவாசத்திற் காகப் பிரயாசப்பட்டதில் என்னவிதமான எண்ணப்போக்கு இருக்க வேண்டுமென்று பவுல் விரும்பினார்? [கோடிட்ட இடங்களில் "ஒரே" மற்றும் "கூட" என்று எழுதி நிரப்பவும்.] எத்தனை விசுவாசங்கள் உள்ளன? ஒரே விசுவாசம்தான் உள்ளது (எபே. 4:5).

இந்தப் பகுதியில் நாம் கற்றுள்ளது என்ன? இயேசுவின் பின்பற்றாளர் களான அவருடைய சபையார் ஒருமைப்பாட்டுடன் இருக்க வேண்டும் என்று நாம் கற்றுக் கொண்டுள்ளோம். அவர்கள் இசைவுடன், ஒரே சிந்தையுடன், பிரிவினையின்றி, ஒருவருக்கொருவர் கெடுமதியின்றி ஒன்றாக ஊழியம் செய்ய வேண்டும்.

இயேசு ஒரே சபையைக் கட்டியெழுப்பி மற்றும் சபைக்குத் தலைவர் என்ற வகையில் விசுவாசிகள் என்ற தமது சரீரத்தில் ஒருமைப்பாட்டை விரும்புகின்றார் என்றால், பிறகு ஏன் இத்தனை சபைப் பிரிவுகள் இருக்கின்றன? இது பலர் கேட்கின்ற கேள்வியாக உள்ளது. இதற்கான பதில் எளியதாக இருப்பதில்லை, ஆனால் இவ்வாறு நடக்கும் என்று வேதாகமம் சுட்டிக் காண்பிக்கின்றது.

எபேசு சபையின் மூப்பர்களுக்குப் பவுல் அப்போஸ்தலர் என்ன கூறினார் என்பதைக் கவனியுங்கள். (அப். 20:17, 28-31ஐ வாசிக்கவும்.) சபைக்கு என்ன நடைபெறப் போவதாயிருந்தது? மனிதர்கள் மாறுபாடான வற்றைப் போதித்து அவ்வாறு செய்வதினால் தங்களுக்குச் சொந்த பின்பற்றாளர்களை ஏற்படுத்திக் கொள்வார்கள் என்று கூறப்படவில்லையா? [பாடத் தாளின் பின்புறத்தில் சபையைக் குறிக்கும் சதுரக் கட்டத்திலிருந்து வெற்றிட அம்புக் குறியொன்றை வரைந்து அதன் கீழ் உலகின் உள் மீண்டும் விழும் ஒரு சதுரக் கட்டத்தை வரையவும். அம்புக் குறிக்குள் "சீஷர்கள்" என்றெழுதி, புதிய சதுரத்திற்கு மேலும், கீழும் அதன் அருகிலும் "மனிதர்கள்" என்றெழுதவும். (பக்கம் 198ஐப் பார்க்கவும்)]

மனிதர்கள் தொடங்கியுள்ள சபைகள் என்பவை தங்களுக்கு மனிதர் களைத் தலைவர்களாகக் கொண்டுள்ளதையும் மனிதர்களின் போதனை களாகிய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டுள்ளதையும் கவனியுங்கள். இவைகள், இயேசு கட்டியெழுப்பிய, இயேசுவே தலைவராகவும், அஸ்திபாரமாவும், இரட்சகராகவும் இருக்கின்ற சபைக்குப் போட்டியாக

GTG LIBRARY- BANGALORE

எழும்பியுள்ளன.

இயேசு தம்முடைய சபைக்காக மரித்தார் மற்றும் அவரே தம் சபைக்கு இரட்சகராக இருக்கின்றார். மனிதர்கள் தொடங்கியுள்ள சபைகளுக்காக இறந்தது யார்? மற்றும் இந்த சபைகளுக்கு இரட்சகராக இருப்பது யார்? மனிதர்களின் சபைகள் தவறான கட்டியெழுப்புவரையும், அஸ்திபாரத்தையும் மற்றும் தவறான தலைவரையும் கொண்டுள்ளன. இதில் இவை இயேசு கட்டியெழுப்பிய சபையிலிருந்து மாறுபடுகின்றன, இவைகள் கிறிஸ்துவின் சபையின் இரட்சகரைப் போல ஒரு இரட்சகரைக் கொண்டிருத்தல் என்பது சாத்தியமாகுமா?

எல்லா மக்களும் இந்த உலகிலிருந்து, மனிதர்களால் தொடங்கப்பட்ட சபைகளில் இருந்தும் வெளியே வந்து, கிறிஸ்துவுக்குள், இயேசு கட்டியெழுப்பியுள்ள சபைக்குள் ஒன்றாயிருக்க வேண்டும். இது ஒன்று மட்டுமே பாதுகாப்பான மார்க்கமாக உள்ளது. மனிதர்கள் தங்கள் சபைகளை மீட்க முடியாது, ஆனால் இயேசு தமது சபையை மீட்க முடியும். நீங்கள் கிறிஸ்துவின் சபையில் உறுப்பினராய் இருக்கிறீர்களா? நீங்கள் அதில் உறுப்பினராய் இல்லையென்றால், ஏன் இப்பொழுதே அதில் உறுப்பினராகி, அவரை உங்கள் இரட்சகராகக் கொண்டிருக்கக் கூடாது?

VIII. *சபையின் அடைவிடம்*

இயேசுவின் அன்பு அவரைத் தமது சபைக்காக மரிக்கும்படி அவரைத் தூண்டிற்று (எபே. 5:25). ஆனால் இயேசு தம்மையே இவ்வாறு கையளிக்க வேண்டியது ஏன்? இதற்கு அப்போஸ்தலரான பவுலினால் இரண்டு காரணங்கள் தரப்படுகின்றன. [எபே. 5:26, 27ஐ வாசிக்கவும்.] இவற்றில் முதலாவது காரணம் எபே. 5:26ல் தரப்படுகின்றது. இயேசு சபைக்கு என்ன செய்யும்படி தம்மையே ஒப்புக் கொடுத்தார்? [கோடிட்ட இடங்களில் ‘‘சுத்திகரித்து,’’ ‘‘பரிசுத்தமாக்குகிறதற்கும்’’ மற்றும் ‘‘நிறுத்திக் கொள்வதற்கும்” என்று எழுதி நிரப்பவும்.]

“பரிசுத்தமாக்குதல்” என்ற வார்த்தை இன்றைய நாட்களில் அடிக்கடி பயன்படுத்தப்படுவதில்லை. இது எதனை அர்த்தப்படுத்துகின்றது? இது ஒரு தனிப்பட்ட/சிறந்த நோக்கத்திற்காகப் பிரித்து வைக்கப்படுதல் என்பதை அர்த்தப்படுத்துகின்றது. ஒரு துண்டுத் துணியானது பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட முடியும். அதைக் கொண்டு ஒருவர் தரையைத் துடைக்க முடியும், அதில் தமது மூக்கைச் சீந்த முடியும், அதைக் கொண்டு பாத்திரங்களைத் துடைக்க முடியும், இன்னும் பல வேலைகளைச் செய்ய முடியும். ஒரு துண்டுத் துணியின் மீது நாட்டுக் கொடியின் படம் அச்சிடப்பட்டிருந்தால், அத்துணியானது சாதாரண நோக்கங்களிலிருந்து பிரித்து வைக்கப்பட்டு, அது ஒரு கொடியாக மட்டுமே பயன்படுத்தப்படும். இயேசு தம் சபையைப் “பரிசுத்தமாக்குவதற்காக” இறந்தார், அதாவது தமது மக்கள் தமது பரலோக நோக்கங்களுக்குப் பணிபுரியக்கூடும் வகையில் அவர்களைத் தீமையான இவ்வுலகினின்று பிரித்து வைப்பதற்காக அவர் மரித்தார்.

மேலும் சபையைச் ‘‘சுத்திகரிப்பதற்காகவும்’’ அவர் மரித்தார். தீட்டுள்ளதும், அருவருப்பானதும் மற்றும் அசுத்தமானது எதுவும்

GTG LIBRARY- BANGALORE

பரலோகத்தில் உட்புக முடியாது (வெளி. 21:27). சபையைச் சுத்திகரித்து கரைதிரையற்றதாக்கும்படி இயேசு மரித்தார் என்பது அது சுத்தமா யிருக்கும்படி மட்டுமின்றி, அதை அவர் தம்முடன் பரலோகத்திற்கு அழைத்துச் செல்வதற்காகவும் நடைபெற்றது. கிறிஸ்துவுக்குள் உள்ள ஒரே சரீரமானது (சபையானது) சபையைக் கிரயம் கொண்ட (அப். 20:28) இயேசுவின் இரத்தத்தினால் (ரோமர் 12:5; எபே. 1:7) சுத்திகரிக்கப் படுகின்றது.

திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சபையைச் சுத்திகரிப்பதற்காகவும் இயேசு தம்மையே கையளித்தார் என்பதைக் கவனியுங்கள். தண்ணீரோ அல்லது வசனமோ தன்னிலே நமது பாவங்களைச் சுத்திகரிக்க வல்லமை பெற்றிருப்பதில்லை. திருவசனத்தினால் தண்ணீர் முழுக்கைக் கொண்டு (நம்மை) சுத்திகரிப்பதற்காக இயேசு தம்மையே கையளித்தார்.

வங்கியில் (ஒருவருடைய கணக்கில்) பணம் இல்லையென்றால், (அவர் தரும்) காசோலைக்கு எந்த மதிப்பும் இருப்பதில்லை. அது போலவே, தண்ணீர் மற்றும் வசனம் ஆகியவற்றினால் சுத்திகரித்தலை இயேசுவின் இரத்தமே சாத்தியமாக்குகின்றது. மக்கள் கேள்விப்பட்டு மற்றும் கற்றுக் கொண்டு, இயேசுவில் விசுவாசம் கொண்டு (யோவா. 17:20; அப். 17:11, 12), மனந்திரும்பி, இயேசுவில் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெறுவதற்கு வசனம் அவசியமானதாக உள்ளது. தண்ணீரின்றி வசனம் நம்மைச் சுத்திகரிக்காது, மற்றும் வசனமின்றி தண்ணீரும் நம்மைச் சுத்திகரிக்காது. தண்ணீர் மற்றும் வசனம் ஆகிய இரண்டுமே அவசியமானவைகளாய் உள்ளன. சவுல் எழுந்து ஞானஸ்நானம் பெற்றுத் தம் பாவங்கள் போகக் கழுவப்படும்படி கூறப்பட்டது எவ்விதம் என்று கவனியுங்கள் (அப். 22:16). வசனத்திற்குக் கீழ்ப்படிந்து (அப். 2:41) தண்ணீரில் ஞானஸ்நானம் பெறுவதினால் பதில்செயல் செய்கின்றவர் களைச் சுத்திகரிக்கும்படியாக இயேசு தம்மையே கையளித்தார்.

இயேசு தம்மையே கையளித்ததற்கான இரண்டாவது நோக்கம் எபே. 5:27ல் காணப்படுகின்றது. சபையைக் கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாகத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்காக அவர் தம்மையே ஒப்புக் கொடுத்தார்.

பணக்கார மனிதர் ஒருவர் நகரின் சேரிப் பகுதியொன்றின் வழியே காரில் செல்லுகையில் தன்னைக் கவர்ந்த ஒரு பெண்ணை அங்கு காணலாம். அவளைப் பற்றி அவர் அறிந்த பிறகு, அவர் தனது, தாயின் சம்மதத்துடன் அந்தச் சேரிப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதற்காக, அவள் தன் (அம்மனிதரின்) தாயைச் சந்திக்க வேண்டும் என்று விரும்பலாம். ஆனாலும் அப்பெண், ஆடம்பர வசதியான தனது தாயால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத நிலையில் இருப்பதைக் கண்ணுறும் அவர், அவளுக்கு நல்ல, சுத்தமான மற்றும் ஏற்புடைய ஆடையைக் கொடுத்து உடுத்தச் சொல்கின்றார். பிறகு அவளை அவர் தனது தாயிடம் அழைத்துச் செல்லுகின்றார்.

GTG LIBRARY- BANGALORE

இதே வகையில், நமது பாவம் நிறைந்த நிலையில், நாம் பிதாவின் வீட்டிற்குச் சென்றால் நாம் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத நிலையில் இருப்போம். இயேசு சபையை (நம்மைச்) சுத்திகரித்து, கற்புள்ள கன்னிகை யாகத் தமக்கு முன் நிறுத்திக் கொள்ள (2 கொரி. 11:2) தம்மையே உடுத்துவித்தார் (கலா. 3:27). நீங்கள் கிறிஸ்துவின் சபையில் இருக்கின்றீர் களா? நீங்கள் ஏன் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினனாயிருக்க வேண்டும்? கிறிஸ்துவின் சபையின் அடைவிடம் எது?

நீங்கள் கிறிஸ்துவின் சபையில் எவ்வாறு பிரவேசிக்கின்றீர்கள்? நீங்கள் திருவசனத்தைக் கேள்விப்பட்டு, இயேசுவில் விசுவாசம் கொண்டு, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசுவில் நீங்கள் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றிருக்கின்றீர்களா? இயேசுவின் சித்தத்திற்கு உங்கள் பதில்செயலில் உள்ள குறைபாடு என்ன? இப்பொழுதே நீங்கள் ஏன் அவருக்குக் கீழ்ப்படியக் கூடாது?

இந்தப் பகுதியில் நாம் கற்றுள்ளது என்ன? சபையை கறைதிரை மற்றும் குற்றம் ஆகியவை எதுவுமின்றித் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்காகத் தமது மரணத்தின் மூலம் அதைச் சுத்திகரித்துப் பரிசுத்தமாக்குவதற்காகத் தம்மையை ஒப்புக் கொடுக்க இயேசு சபையின் மீது கொண்ட அன்பானது அவரைத் தூண்டியது.

தொகுப்புரை

இந்தப் பாடத்தில் நாம், இயேசுவுக்குரிய மக்களாகிய அவருடைய சபையைப் பற்றிப் படித்தோம்.

I. *கிறிஸ்துவின் சபையில் இருப்பவர்கள் யார்?* கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவரைப் பின்பற்றுகின்றவர்கள், அவரது சீஷர்கள் அதாவது கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகின்ற ஆண்களும் பெண்களும் இருக்கின்றனர்.

II. *எத்தனை சரீரங்கள்?* ஒரே ஒரு சரீரம் மட்டுமே உள்ளது.

III. *இது யாருடைய சபை (சரீரம்)?* கிறிஸ்துவின் சரீரமானது இயேசுவுக்கு உரியது.

IV. *சபைக்கு கிறிஸ்து என்னவாக உள்ளார்?* கிறிஸ்து சபையைக் கட்டுபவராக, அஸ்திபாரமாக, தலைவராக மற்றும் சபைக்கு இரட்சகராக உள்ளார்.

V. *கிறிஸ்து சபைக்கு என்ன செய்திருக்கின்றார்?* கிறிஸ்து தமது இரத்தத்தைக் கொண்டு சபையை வாங்குவதற்காகத் தம்மையே ஒப்புக் கொடுத்தார்.

VI. *சபை கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்துள்ளது.*

VII. *உறுப்பினர்களுக்கிடையில் எவ்வகையான இசைவைக் கிறிஸ்து விரும்புகின்றார்?* அவர் தம் பிதாவுடன் தாம் கொண்டுள்ள இசைவு உறுப்பினர்களுக்கிடையில் இருக்கும்படி விரும்புகின்றார், ஏனெனில் அவர், “நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருக்கவும்” என்று ஜெபித்தார்.

VIII. *சபையைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால்,*

GTG LIBRARY- BANGALORE

சுத்திகரித்துப் பரிசுத்தமாக்குகிறதற்கும், தமக்கு முன் நிறுத்திக் கொள்வற்கும் இயேசு தம்மைமே ஒப்புக் கொடுத்தார்.

ஒருவர் கிறிஸ்தவராவதில் அவர் இயேசுவின் விசுவாசிகளாலான சரீரத்தில் அதாவது கிறிஸ்துவின் சபையில் உறுப்பினராகின்றார் என்று நாம் இப்பாடத்தில் கற்றுள்ளோம். இயேசு இவ்விதமாக ஒரே ஒரு சரீரத்தை மட்டுமே கொண்டுள்ளார், வேதாகமத்தில் போதிக்கப்பட்டுள்ள ஒரே ஞானஸ்நானம் பெறும் பொழுது நாம் இந்த சரீரத்தினுள் பிரவேசிக்கின்றோம். அவருடைய சரீரத்தின் உறுப்பு என்ற வகையில் நாம் அவர் கட்டி எழுப்பிய, அவர் ஒருவரே அஸ்திபாரமாகவும், தலைவராகவும், இரட்சகராகவும் உள்ள சபையின் உறுப்பினராகின்றோம். மனிதர்களின் சபைகளில் உறுப்பினராயிருப்பதற்குப் பதில் நாம் யாவரும் இந்த சபையில் தான் உறுப்பினர்களாய் இருக்க வேண்டும். சபையின் மீது இயேசு கொண்ட அன்பானது, அதைக் கறைதிரை முதலான எதுவுமின்றி குற்றமற்ற சபையாகத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்காக அதைச் சுத்திகரித்துப் பரிசுத்தமாக்குவதற்கு அவர் பாடுபட்ட மரணத்தில் காணப்படுகின்றது. அவர் தமது பின்பற்றாளர்கள் எல்லாரிடமும் ஒருமைப்பாட்டை விரும்புகின்றார்.

நீங்கள் கிறிஸ்துவின் சபையில் உறுப்பினராய் இருக்கின்றீர்களா? அவருடைய சபையில் நீங்கள் ஏன் உறுப்பினராய் இருக்க வேண்டும் என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்களா? இயேசு தமக்கு முன் நிறுத்திக் கொள்ளும் விசுவாசிகளின் அமைப்பில் உறுப்பாகும்படி இப்பொழுதே நீங்கள் ஏன் இயேசுவைப் பின்பற்றுபவராக, ஒரு கிறிஸ்தவராக மாறக் கூடாது? இப்பொழுதே நீங்கள் அவருடைய பின்பற்றாளராக ஆக விரும்புகின்றீர்களா?

[அடுத்த பாடத்திற்கான பாட நேரத்தை ஏற்பாடு செய்யவும்.]

GTG LIBRARY- BANGALORE

சகோதரர்களுடன் இணைதல்

ஜான் வெஸ்லி அவர்கள் ஜார்ஜியாவில் உள்ள சவான்னா என்ற இடத்திற்குச் சென்ற பொழுது, அங்கு 518 மக்கள் இருந்தனர். அவர்கள் செல்வந்தர்கள், இந்தியர்கள், அடிமைகள் மற்றும் ஏழை மக்கள் என்ற வகைப்பட்டவர்களாய் இருந்தனர். வெஸ்லி பிரசங்கித்த முதல் ஞாயிறன்று அங்குள்ள சிலர் காலணியில்லா திருந்ததைக் கவனித்தார். அடுத்த ஞாயிறு அன்றும் அதன் பிறகு அவர் ஜார்ஜியாவில் இருந்த ஒவ்வொரு ஞாயிறன்றும் அவர் தமது பிரசங்க மேடைக்குச் சென்ற போது வெறுங்கால்களுடனேயே சென்றார்.

எல்பர்ட் ஹப்பர்ட்

Little Journey's to the Homes of Great Reformers

நமக்கு முன்பாக மற்றவர்கள்

கர்த்தருடைய ஜெபத்தில் நீங்கள் ஒருமுறை கூட “நான்” என்று கூற முடியாது.

கர்த்தருடைய ஜெபத்தில் நீங்கள் ஒருமுறை கூட “என்னுடைய” என்று ஜெபிக்க முடியாது.

ஏனெனில் ஒவ்வொரு வேண்டுகோளிலும் மற்றவர்கள் உள்ளடக்கப் பட்டுள்ளனர்.

அதன் தொடக்கம் முதல் முடிவு வரையிலும் அது ஓரிடத்திலாவது “எனக்கு” என்று கூறுவதில்லை.

அறியப்படாத எழுத்தாளர்

இயேசுவின் நகைச் சுவை

“இயேசு எப்பொழுதாவது சிரித்தாரா?” என்று யாரோ ஒருவர் கேட்டார்.

அதற்கு இன்னொரு நபர், “எனக்குத் தெரியாது, ஆனால் என்னை அவர் நான் சிரிக்கக் கூடிய இடத்தில் வைத்துள்ளார் என்பது நிச்சயம்!” என்று பதில் அளித்தார்.

GTG LIBRARY- BANGALORE

கிறிஸ்துவின் சபையினுடைய நிறுவன அமைப்பு எப்படியிருந்தது?

I. *கிறிஸ்துவின் சபையில் இருந்த பணி நிலைகள் யாவை?*

1. *இயேசுவே சபைக்குத் ____________ இருக்கின்றார். எபே. 5:25*
2. *____________ ம் மற்றும் ____________ அஸ்திபாரத்தில் இருக்கின்றனர். எபே. 2:20*
3. *அவர் சிலரை ____________, ____________ சிலரைச் ____________, சிலரை ____________, ____________ ஏற்படுத்தினார். எபே. 4:13*

II. *இந்தப் பணி நிலைகளின் நோக்கங்கள் ____________, ____________, ____________ ஆகும். எபே. 4:11, 12*

III. *இந்தப் பணி நிலைகளில் பொறுப்புகள் எவைகளாய் இருந்தன?*

1. *இயேசு ____________ இருக்கின்றார். யாக். 4:12; அப். 3:23, 24*
2. *இயேசுவின் உபதேசத்தைக் ____________ மக்களுக்கு அப்போஸ்தலர்கள் போதிக்க வேண்டியிருந்தது. மத். 28:20*
3. *உபதேசம் ____________ மற்றும் ____________ ஆகியோருக்கு வெளிப்படுத்தப்பட்டது. எபே. 3:6*
4. *சபையானது ____________ உபதேசத்தில் தரித்திருந்தது. அப். 2:42*
5. *மூப்பர்கள் (கிரேக்கம்: poimaino,* pastor, shepherd*) தேவனுடைய மந்தையை ____________ அதைக் ____________ வேண்டியவர்களாய் இருக்கின்றனர். 1 பேது. 5:2, 3*
6. *பவுல் ____________ அழைத்து (அப். 20:17) அவர்கள் ____________ (episkopos,* bishops*) நியமிக்கப்பட்டுள்ள சபையை ____________ வேண்டும் என்று அவர்களுக்குக் கூறினார். அப். 20:28*
7. *சுவிசேஷகர்கள் வசனத்தைப் ____________ வேண்டியவர் களாய் இருந்தனர். 2 தீமோ. 4:2, 5*
8. *போதகர்கள் மற்றவர்களிடத்தில் ____________ வேண்டியவர்களாய் இருந்தனர். 2 தீமோ. 2:2*
9. *சபை ____________ (diakonos, ஊழியம் செய்பவர்கள்)க் கொண்டிருந்தது. 1 தீமோ. 3:8*
10. *சபைகளில் பெண்கள் ____________ வேண்டும். 1 கொரி. 14:34, 35; 1 தீமோ. 2:10-12*
11. *உறுப்பினர்கள் தங்களை ஆளுகின்றவர்களுக்குக் ____________ வேண்டும். எபி. 13:17*

IV. *ஒவ்வொரு சபையிலும் ____________ எத்தனை கண்காணிகள் (மூப்பர்கள், ஆயர்கள், பாஸ்டர்கள்) இருந்தனர்?*

GTG LIBRARY- BANGALORE

1. ஒவ்வொரு சபையிலும் ____________ நியமிக்கப்பட்டனர். அப். 14:23; தீத்து 1:5
2. இந்த சபைகள் ______________________ க் கொண்டிருந்தன. அப். 15:2; 20:17; பிலி. 1:1

V. இந்தப் பணி நிலைகளில் ஒருவர் பணிபுரிய முடியும் முன்பு அவர் குறிப்பிட்ட சில தகுதிகளை அடைய வேண்டியிருந்ததா?
1. அப்போஸ்தலர்கள் ______________________ அப். 1:21, 22
2. மூப்பர்கள் ______________________ 1 தீமோ. 3:1-7; தீத்து 1:5-9
3. உதவிக்காரர்கள் ______________________ 1 தீமோ. 3:8-13
4. சுவிசேஷகர்கள் ______________________ 2 தீமோ. 2:24, 25
5. போதகர்கள் ______________________ 1 பேது. 4:11

Copyright 1992 - Gospel Light Pub. Co. Delight, AR 71940



GTG LIBRARY- BANGALORE

பாடத் தாளை எடுத்துரைத்தல்:

''கிறிஸ்துவின் சபையினுடைய நிறுவன அமைப்பு எப்படியிருந்தது?''

"கிறிஸ்துவின் சபையினுடைய நிறுவன அமைப்பு எப்படியிருந்தது?" என்ற பாடத் தாளானது ''சபை'' என்ற பாடத் தாளை(பாடம் 5)த் தொடர்ந்து வருதல் பொருத்தமுடையதாக இருக்கின்றது. படிக்கும் மாணவர் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியத் தயாராய் இருப்பாரென்றால், "நிறுவன அமைப்பு" பற்றிய இந்தப் பாடத் தாளுக்கு முன்பு "அடைவிடம்" பற்றிய பாடத் தாளை (பாடம் 8) ஒருவர் கற்பிக்க முடிவு செய்யலாம்.

நோக்கம்

இயேசுவைப் பின்பற்றுபவர்கள் எவ்வித நிறுவன அமைப்புக்குட் பட்டிருக்க வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ளும்படியாக, சபையானது இயேசுவாலும் அப்போஸ்தலர்களாலும் நிறுவனமாக்கப் படுகையில் அதன் நிறுவன அமைப்பின் நிலை பற்றிக் கற்றுக் கொள்ளுவதே "நிறுவன அமைப்பு" என்ற இந்தப் பாடத் தாளின் நோக்கமாய் உள்ளது.

பாடச் சுருக்கம்

சபையின் தலைவரான இயேசுவே சபைக்கு ஒரே நியாயப் பிரமாணிகராய்/சட்டம் இயற்றித் தருபவராய் இருக்கின்றார். இயேசுவின் சிறப்புப் பிரதிநிதிகள் என்ற வகையில் அப்போஸ்தலர்கள் இயேசுவின் சட்டங்களை மற்றவர்களுக்கு அவர்கள் இயேசுவின் வசனத்தை அறியும்படி எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது. இந்த வசனத்தைப் பின்பற்றி மூப்பர்கள் சபையை வழிநடத்த வேண்டியிருந்தது. உதவிக்காரர்களும் சுவிசேஷ ஊழியர்களும் மூப்பர்களுக்கு உதவ வேண்டியிருந்தது, மற்றும் இயேசுவின் சித்தத்தைச் செயல்படுத்துவதில் சபையானது இந்த முன்னோடிகளைப் பின்பற்ற வேண்டியதாய் இருந்தது.

அறிமுகம்

[செயல் வலிவும் திறமையும் கொண்டிருப்பதற்கு நிறுவன அமைப்பு முக்கியமானதாக உள்ளது என்ற உண்மையைப் பற்றிச் சுருக்கமாய்ப் பேசுவதன் மூலம் இந்தப் பாடத்தை அறிமுகப்படுத்த முடியும். இயேசு

GTG LIBRARY- BANGALORE

தமது சபையின் நிறுவன அமைப்புக்கு ஏற்பாடு செய்தார். இயேசுவின் பின்பற்றாளர்கள் என்ற வகையில் நாம் அவருடைய நிறுவன அமைப்பின் திட்டத்தைப் பின்பற்ற நாட வேண்டும்.]

இன்றைய நாளில் சபைகள் எனப்படுபவை பல்வேறு வழிமுறைகளில் நிறுவப்படுகின்றன. இந்த சபைகள் ஒரு பலமான மைய அரசைக் கொண்டவைகளாக அந்த மைய அரசே அவைகளின் உள் விவகாரங்களைக் கட்டுப்படுத்தவும் உள்ளூர் சபைகளுக்குக் கட்டளையிடுகின்ற ஆணைகளை எழுதுவதாகவும் உள்ள அமைப்பைக் கொண்டுள்ளன. இது இயேசு தம் சபைக்கு ஏற்படுத்திய திட்டமாயிருந்ததா?

I. *பணி நிலைகள்*

இந்தப் பாடத்தில் நாம், பணி நிலைகள் என்பவற்றைக் கூறும் பொழுது, அதிகாரத்தைப் பற்றியல்ல ஆனால் பொறுப்புக்களைப் பற்றி மட்டுமே கூறுகின்றோம். சில விஷயங்களில் அதிகாரம் என்பது பணி நிலையின் உள்ளானதாக இருக்கின்றது, ஆனால் எல்லா விஷயங்களிலும் இப்படி இருப்பதில்லை; இருப்பினும் எல்லாப் பணி நிலைகளிலும் பொறுப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1. "சபை" என்ற பாடத் தாளை (பாடம் 5) நாம் படித்த பொழுது, சபையானது இயேசுவின் அதிகாரத்தின் கீழ் இருந்ததாக நாம் கற்றோம். சபைக்கு இயேசு என்னவாக உள்ளார்? [எபே. 5:23ஐ வாசிக்கவும்.] அவர் சபைக்கு என்னவாக உள்ளார்? [கோடிட்ட இடத்தில் "தலையாக" என்று எழுதி நிரப்பவும்.]

2. ஒரு கட்டிடம் கட்டப்படுவதற்கு முன்பு, அஸ்திபாரம் போடப் படுகின்றது. அஸ்திபாரமானது கட்டிடத்தின் கீழ் உள்ளது, மற்றும் கட்டிடத்தின் நிலைப்பாடு அஸ்திபாரத்தின் மீது வைக்கப்படுகின்றது. சபையின் அஸ்திபாரத்தில் இருக்கின்றவர்கள் *யார்?* [எபே. 2:20ஐ வாசிக்கவும்.] இந்த உருவகத்தில் இயேசு அஸ்திபாரத்தின் மூலைக்கல்லாகச் சித்தரிக்கப்படுகின்றார். மூலைக்கல் போடப்பட்ட பிறகு, கட்டிடத்தின் நிலைப்பாடானது மூலைக்கல்லுடன் தொடர்புடைய வகையில் வடிவமைக் கப்படுகின்றது. அஸ்திபாரம் என்பவர்கள் *யார்?* [கோடிட்ட இடங்களில் "அப்போஸ்தலர்கள்" மற்றும் "தீர்க்கதரிசிகள்" என்று எழுதி நிரப்பவும்.] இவ்வசனப் பகுதியில் பேசப்படுகின்ற தீர்க்கதரிசிகள் என்பவர்கள் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளாய் இராமல் புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளாய் உள்ளனர்.

இது "சபை" என்ற பாடத் தாளில் (பாடம் 5) நாம் கற்றவற்றுக்கு முரண்படுவதில்லை. அந்தப் பாடத்தில் நாம், இயேசுவே இந்த ஒரே அஸ்தி பாரமாய் இருக்கின்றார் என்று கற்றோம் (1 கொரி. 3:11). அந்த உருவகத்தில் அப்போஸ்தலர்கள் அஸ்திபாரம் இடுகின்றவர்களாகவும், தாங்களே அதன் மீது கட்டியெழுப்புகின்றவர்களாகவும் உள்ளனர். இந்த உருவகத்தில் இயேசு, அஸ்திபாரத்தில் உள்ள பிரதான கல்லாக, மூலைக்கல்லாக இருக்கின்றார். இயேசு பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றதில் இருந்து அவருடைய பிரதிநிதிகளாக அவருடைய இடத்தில் அப்போஸ்தலர்கள்

GTG LIBRARY- BANGALORE

நின்றிருக்கும் காரணத்தினால் அவர்கள் உட்பட சபையில் உள்ள ஒவ்வொன்றும் இயேசுவுடன் சீர்பொருந்தியுள்ளது. சபையில் இவர்களின் பணிபொறுப்பு பற்றி நாம் பிற்பாடு கலந்துரையாடுவோம்.

3. எபேசுவில் இருந்த சபைக்குப் பவுல் எழுதிய பொழுது அவர் அட்டவணைப்படுத்துகின்ற பணி நிலைகள் யாவை? [எபே. *4:13*ஐ வாசிக்கவும்.] பணி நிலைகள் *யாவை?* [கோடிட்ட இடங்களில் "அப்போஸ்தலர்கள்," "தீர்க்கதரிசிகள்," "சுவிசேஷகர்கள்," "மேய்ப்பர்கள்" மற்றும் "போதகர்கள்" என்று எழுதி நிரப்பவும்.] இந்தப் பணிநிலைகள் ஒவ்வொன்றின் பொறுப்புகள் பற்றி நாம் அடுத்த பகுதியில் படிப்போம்.

இந்தப் பகுதியில் நாம் கற்றுள்ளது என்ன? சபையானது பல்வேறு பணி நிலைகளைக் கொண்டிருந்ததென்றும், அவை யாவும் சபையின் தலையாகிய இயேசுவின் அதிகாரத்தின் கீழேயே பணியாற்றின என்றும் நாம் கற்றறிந்துள்ளோம்.

II. *பணிநிலைகளின் நோக்கங்கள்*

இந்தப் பணிநிலைகளில் ஊழியம் செய்பவர்களை மகிமைப் படுத்துவதற்காக இந்தப் பணிநிலைகள் ஏற்படுத்தப்படவில்லை. *இந்தப் பணிநிலைகளில் இருந்தவர்கள் எவற்றை நிறைவேற்ற வேண்டியிருந்தது?* [எபே. *4:11, 12*ஐ வாசிக்கவும்.] *இந்தப் பணிநிலைகள் எதற்காக நிலைநாட்டப்பட்டன?* [கோடிட்ட இடங்களில், "பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு," "சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும்," மற்றும் "கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும்" என்று எழுதி நிரப்பவும்.] இவைகள் பணித்துவப் பொறுப்புகள் என்பதைக் கவனியுங்கள். இந்தப் பணிநிலைகளில் இருந்தவர்கள் சபையின் உறுப்பினர்கள் பக்குவமடைவதற்கும், அவர்களின் முன்மாதிரியான இயேசுவின் அளவுக்குத் தக்கதாக அவர்கள் வளர உதவுவதற்கும் ஊழியம் செய்ய வேண்டியவர்களாய் இருந்தனர்.

இந்தப் பகுதியில் நாம் கற்றுள்ளது என்ன? சபைக்குள் பல்வேறு வகையில் ஊழியம் செய்தவர்கள் சபையைக் கட்டி எழுப்பவும் பக்குவப்படுத்தவும் ஊழியம் செய்ய வேண்டியவர்களாய் இருந்தார்கள் என்று நாம் கற்றுக் கொண்டுள்ளோம்.

III. *பொறுப்புகள்*

சபைக்குள் பல்வேறு பணிநிலைகளில் ஊழியம் செய்தவர்கள், சபையின் வளர்ச்சி மற்றும் ஊழியம் ஆகியவற்றில் உதவி நிறைந்த வகையில் செயல்படுவதற்குப் பணிப் பொறுப்புக்களைக் கொண்டிருந்தனர்.

1. ஒவ்வொரு நிறுவனமும் வழிகாட்டும் குறிப்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும். சபை பின்பற்ற வேண்டிய விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளைத் தீர்மானம் *செய்திருப்பவர் யார்?* [யாக். *4:12* மற்றும் அப். *3:23, 24*ஐ வாசிக்கவும்.] *சபையின் தலைவர் என்ற பணிநிலையில் இயேசு, யாராக இருக்கின்றார்?* [கோடிட்ட இடத்தில் "நியாயப் பிரமாணிக்கர்" என்று எழுதி நிரப்பவும்.] சபைக்கு நியாயப்

GTG LIBRARY- BANGALORE

பிரமாணிக்கர்கள் எத்தனை பேர் உள்ளனர்? சபைக்கு ஒரே ஒரு நியாயப்பிரமாணிக்கர் மட்டுமே இருக்கின்றார். அவர் தம்முடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாத எல்லாரையும் அழித்து விடுவார்.

[பாடத் தாளின் பின்புறத்தில் தாளின் மேற்புறத்தில் ஒரு சிறு செவ்வகம் வரைந்து அதனுள் "இயேசு" என்று எழுதவும். (பக்கம் 214ஐப் பார்க்கவும்)]

2. சட்டங்களையும், விதிகளையும் மற்றும் ஒழுங்கு முறைமைகளையும் ஏற்படுத்துவதற்கென்று சட்டப்பூர்வமான அதிகாரமோ, உரிமையோ அப்போஸ்தலர்கள் கொண்டிருந்ததில்லை. அவர்களின் பொறுப்பு என்னவாக இருந்தது? [மத். 28:20ஐ வாசிக்கவும்.] சபை என்ன செய்யும்படி அவர்கள் போதிக்க வேண்டியிருந்தது? [கோடிட்ட இடத்தில் "கடைப் பிடிக்கும்படி" என்று எழுதி நிரப்பவும்.] மக்கள் மீது விதிகளைக் கட்டுப்பாடு செய்ய அவர்களுக்கு அதிகாரம் இல்லாதிருந்தது. அவர்களுக்கு (மக்களுக்கு)ப் போதிக்கும்படி இயேசு தங்களுக்கு (அப்போஸ்தலர்களுக்கு) அறிவுறுத்தியிருந்தவற்றிற்குக் கீழ்ப்படியுமாறு மக்களுக்குப் போதித்தலே அவர்களின் பொறுப்பாக இருந்தது.

3. இயேசு தாம் பிதாவிடம் ஏறிச் சென்ற பிறகு, தமது போதனையை வெளிப்படுத்துவதற்குப் பலவகையான மக்களைப் பயன்படுத்தினார். அவர் தம் உபதேசத்தை/போதனையை யாருக்கு வெளிப்படுத்தினார்? [எபே. 3:6ஐ வாசிக்கவும்.] அதை அவர் யாருக்கு வெளிப்படுத்தினார்? [கோடிட்ட இடங்களில் "அப்போஸ்தலர்கள்" மற்றும் "தீர்க்கதரிசிகள்" என்று எழுதி நிரப்பவும்.]

4. இயேசு, பரிசுத்த ஆவியானவர் மூலமாக சகல சத்தியத்தையும் அப்போஸ்தலர்களுக்கு வெளிப்படுத்தினார். அவர்கள் பேசிய பொழுது, இயேசுவின் மூலம் தாங்கள் கேள்விப்பட்டிருந்த விஷயங்களைப் பற்றியே அவர்கள் மீண்டும் எடுத்துரைத்தார்கள் (யோவா. 16:13-15). அப்போஸ்தலர்கள் போதித்தவற்றுக்கு நாம் கீழ்ப்படிந்தால், அதனால் நாம் இயேசுவுக்குக் கீழ்ப்படிந்தவர்கள் ஆகின்றோம். யாருடைய உபதேசத்தில் சபையானது நிலைத்திருந்தது என்று கூறப்படுகின்றது? [அப். 2:42ஐ வாசிக்கவும்.] அவர்கள் யாருடைய உபதேசத்தில் நிலைத்திருந்தார்கள்? [கோடிட்ட இடத்தில் "அப்போஸ்தலர்களின்" என்று எழுதி நிரப்பவும்.] அப்போஸ்தலர்கள் இயேசுவிடமிருந்து தங்கள் உபதேசத்தைப் பெற்றிருந்தார்கள், எனவே அவர்கள் (சபை) அப்போஸ்தலர்களின் உபதேசத்தில் நிலைத்திருந்தனர் என்பதால் இயேசுவின் உபதேசத்தில் நிலைத்திருந்தனர் என்ற கருத்து தொடருகின்றது.

[பாடத்தாளின் பின்புறத்தில் ''இயேசு'' என்று எழுதப்பட்டுள்ள செவ்வகத்தின் கீழ் இன்னொரு செவ்வகம் வரைந்து, அதனுள் "அப்போஸ்தலர்கள்" மற்றும் "தீர்க்கதரிசிகள்" என்று எழுதவும். பிறகு இந்த செவ்வகத்தின் கீழ், நான்கு தனித் தனிச் சதுரங்கள் வரையவும்.] சபைகள் அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளுக்குப் பொறுப்புள்ளவைகளாய் இருந்தன, ஏனெனில் அவர்களின் மூலமாகவே இயேசு தம்முடைய போதனைகளைக் கொடுத்திருந்தார்.

5. பிராந்திய சபைக்குழுமங்களின் முன்னோடிகள் சபைக்குச் சட்டம்

GTG LIBRARY- BANGALORE

ஏற்படுத்தும் அதிகாரத்தைக் கொண்டிருந்ததில்லை. இயேசுவின் அறிவுறுத்தல்களைச் சபையார் ஏற்று நடத்துவதில் வழி நடத்துவதே இவர்களின் பொறுப்பாக இருந்தது. இவர்கள் மூப்பர்கள் என்று அறியப் பட்டனர், இவர்கள் என்னவாக மற்றும் எதைச் செய்ய வேண்டியவர்களாக இருந்தார்கள்? [1 பேது. 5:1, 2ஐ வாசிக்கவும்.] மந்தைக்கு அவர்கள் என்ன செய்ய வேண்டியவர்களாயிருந்தார்கள்? [கோடிட்ட இடத்தில் "மேய்த்து" என்று எழுதி நிரப்பவும்.] *Poimaino* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து "மேய்த்து" என்ற சொல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இதனை "பாஸ்டர்" அல்லது "மேய்ப்பர்" என்றும் மொழிபெயர்க்க முடியும். மூப்பர்கள் மந்தையை மேய்க்க வேண்டியவர்களாய் இருந்தார்கள். மூப்பர்கள் இன்னும் வேறு என்ன செய்ய வேண்டியவர்களாயிருந்தார்கள்? [கோடிட்ட இடத்தில் "கண்காணிப்பு" என்று எழுதி நிரப்பவும்.]

6. எபேசு சபையின் மூப்பர்களுக்குப் பவுல் அறிவுறுத்தல் கொடுத்தார். அவர்கள் என்னவென்று அழைக்கப்படுகின்றனர்? [அப். 20:17ஐ வாசிக்கவும்.] சபையின் முன்னோடிகளைக் குறிப்பிட்ட பொழுது, பயன்படுத்தப்பட்ட வார்த்தை என்ன? [கோடிட்ட இடத்தில் "மூப்பர்களை" என்று எழுதி நிரப்பவும்.] அவர்கள் என்ன செய்யும்படி கூறப்பட்டது? [அப். 20:28ஐ வாசிக்கவும்.] அவர்கள் எந்த இரு விஷயங்களைச் செய்யும்படி கூறப்பட்டார்கள்? [கோடிட்ட இடங்களில் "கண்காணிகளாக" மற்றும் "மேய்க்க" என்று எழுதி நிரப்பவும்.]

பிராந்திய சபையின் முன்னோடிகளைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப் பட்டுள்ள மூன்று சொற் பதங்கள் பட்டங்கள் அல்ல ஆனால் முன்னோடி களின் பணிநிலைகளில் அவர்களை விவரிக்கும் சொற்பதங்களாகும். "மூப்பர்கள்" என்ற சொற் பதமானது அவர்கள் புதுக் கிறிஸ்தவர்களில் இருந்தல்ல ஆனால், விசுவாசத்தில் முதிர்ச்சியுற்ற மனிதர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களாய் இருந்தார்கள் என்பதற்கான குறிப்பாகப் பயன்படுத்தப்பட்டது. சமுதாயத்திலுள்ள தலைவர்கள் பொதுவாக "மூப்பர்கள்" என்று அழைக்கப்பட்டனர். "மேய்ப்பதற்கு" என்ற வார்த்தையானது (*poimaino* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது) "மேய்ப்பர்" அல்லது "பாஸ்ட்டர்" என்று அர்த்தப்படும் வார்த்தையாக, ஒரு ஆட்டுமந்தையைப் பேணுபவரை அல்லது பாதுகாப்பவரைக் குறிக்கும் வகையில் பயன்படும் வார்த்தையாக உள்ளது. "கண்காணி" மற்றும் "ஆயர்" (bishop) (*episkopos* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது.) என்பது பிராந்திய சபையின் செயல்பாடுகளை நெறிப்படுத்தி இயக்குதல் என்ற அர்த்தப்படுகின்றது. இவைகள் மாறுபட்ட மூன்று பணிநிலைகள் அல்ல, ஆனால் அதற்குப் பதிலாக, ஒரே பணி நிலையை விவரிக்கும் மாறுபட்ட மூன்று சொற்றொடர்களாக உள்ளன. [பாடத் தாளின் பின்புறத்தில் வெற்றுச் சதுரங்கள் நான்கின் (உட்புறத்தின்) மேல் பகுதியில் "மூப்பர்கள்" என்று எழுதி நிரப்பவும். (பக்கம் 214ஐப் பார்க்கவும்)]

இவர்கள் தாங்கள் உறுப்பினர்களாயிருந்த சபைக்கு பாஸ்டர்களாக, கண்காணிகளாக இருந்தார்கள். இவர்கள் மனித ரீதியான தலைமையகம் எதையும் கொண்டிருந்ததில்லை, ஆனால் அதற்குப் பதிலாக கிறிஸ்துவின்

GTG LIBRARY- BANGALORE

கீழ் இருந்த அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் ஆகியோரின் கீழ் இருந்தார்கள். இவர்கள் தங்கள் கீழ் ஊழியம் செய்த/ஆராதனை செய்த சபைக்குச் சட்டம் ஏற்படுத்தும் அதிகாரம் கொண்டிருந்ததில்லை. இவர்கள் சட்டம் இயற்றுபவர்களாயில்லாமல், முன்னோடிகளாய் இருந்தார்கள்.

இவர்கள் "*the* preacher" *அல்லது* "*the* pastor" *என்ற சிறப்புத் தகுதி கொண்டிருந்ததில்லை. சபையின் தலைமைத்துவமானது ஆயர்கள் (கண்காணிகள்) மற்றும் பாஸ்டர்கள் (மேய்ப்பர்கள்) என்று அறியப் பட்டிருந்த மூப்பர்களின் கரங்களில் இருந்தது.*

7. மூப்பர்களின் இயக்கத்தின் கீழ் இருந்த சுவிசேஷகர்களும் இயேசுவின் போதனையைப் பரப்புவதில் உதவி செய்தனர். இவர்களுக்குப் பவுல் கொடுத்த அறிவுறுத்தல் என்ன? [2 தீமோ. 4:2, 5ஐ வாசிக்கவும்.] ஒரு சுவிசேஷகனின் பணி என்னவாக இருந்தது? [கோடிட்ட இடத்தில் ''பிரசங்கிக்க'' என்று எழுதி நிரப்பவும். பாடத் தாளின் பின்பக்கம் வரையப்பட்டுள்ள சதுரங்களில் ''மூப்பர்கள்'' என்பதற்குக் கீழே "சுவிசேஷகர்கள்" என்று எழுதி நிரப்பவும். (பக்கம் 214ஐப் பார்க்கவும்)]

சுவிசேஷகர்கள் வசனத்தைப் பிரசங்கிக்க வேண்டியவர்களா யிருந்தார்கள். இயேசு, அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் ஆகியோரின் மூலமாகக் கொடுத்திருந்த ஒரே வசனத்தை, ஒரே செய்தியை மட்டுமே கிறிஸ்தவர்கள் பிரசங்கிக்கப் பெற்றிருந்தார்கள். அவர்கள் சபைக்கு விதிகளையும் சட்டங்களையும் ஏற்படுத்த உரிமை பெற்றிருந்த தில்லை. இயேசுவிடம் தொடங்கியிருந்த செய்தியே அவர்கள் எடுத்துரைக்க வேண்டிய செய்தியாக இருந்தது.

8. மூப்பர்களின் வழிகாட்டுதலின் கீழ், போதகர்களும் ஊழியம் செய்தனர். அவர்கள் என்ன செய்ய வேண்டியிருந்தது? [2 தீமோ. 2:2ஐ வாசிக்கவும்.] போதகர்களின் பொறுப்பு என்னவாக இருந்தது? [கோடிட்ட இடத்தில் "போதிக்க" என்று எழுதி நிரப்பவும். பாடத் தாளின் பின்புறத்தில் சதுரங்களினுள் "உதவிக்காரர்கள்" என்பவற்றிற்குக் கீழ், "போதகர்கள்" என்று எழுதவும். (பக்கம் 214ஐப் பார்க்கவும்)] அவர்கள் அப்போஸ்தலர் களிடமிருந்து, இவ்விடத்தில் அப்போஸ்தலரான பவுலிடமிருந்து கற்றுக் கொண்டிருந்த யாவற்றையும் போதிக்க வேண்டியவர்களாய் இருந்தனர். பவுல் பரிசுத்த ஆவியானவரின் மூலமாக இயேசுவிடமிருந்து தம் செய்தியைப் பெற்றிருந்தார் (எபே. 3:3-5). போதகர்கள் மற்றவர்களுக்கு விதிமுறைகளை ஏற்படுத்த வேண்டியிருந்ததில்லை, அதற்குப் பதிலாக அவர்கள், இயேசு அப்போஸ்தலர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் கொடுத்திருந்த செய்தியை மற்றவர்களுக்குப் போதிக்க வேண்டியவர்களா யிருந்தார்கள்.

9. முன்னோடித்துவப் பொறுப்புக்களைக் கொண்டிராத மற்றவர் களும் சபையில் இருந்தனர். அவர்கள் யார்? [1 தீமோ. 3:8ஐ வாசிக்கவும்.] அவர்கள் என்னவென்று அழைக்கப்பட்டனர்? [கோடிட்ட இடத்தில் "உதவிக்காரர்களை" என்று எழுதி நிரப்பவும். பாடத் தாளின் பின்புறத்தில் சதுரங்களினுள் ''உதவிக்காரர்கள்'' என்று எழுதவும். (பக்கம் 214ஐப் பார்க்கவும்)] Diakonos என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து டீக்கன் என்ற

GTG LIBRARY- BANGALORE

வார்த்தை ஒலி பெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. இவ்வார்த்தையானது பணிபுரிய அல்லது தொண்டு செய்ய என்று அர்த்தப்படுகின்றது. இவர்களுக்கு மேற்பார்வையிடும் நிலை கொடுக்கப்படவில்லை, ஆனால் அதற்குப் பதில் சபைக்குத் தேவைப்படும் ஊழியங்களைக் கையாளுவதில் தங்களிடம் கேட்கப்பட்டவைகளை நன்கு செய்வதற்கு மூப்பர்களால் நம்பக் கூடிய அளவுக்குப் பொறுப்புள்ள மனிதர்களாய் இருந்தார்கள்.

10. சபைகளில் பெண்கள் மிக முக்கியமானவர்களாய் இருந்தார்கள். அவர்கள் சபையில் மாபெரும் ஊழியர்கள் சிலருடன் இணைந்து பணியாற்றினார்கள் (பிலி. 4:3). பெண்களின் மீது ஒரு சில தடைகள் மட்டுமே விதிக்கப்பட்டிருந்தன. பெண்களின் பணிப் பொறுப்பு பற்றிப் பவுல் எழுதியது என்ன? [1 கொரி. 14:34, 35; 1 தீமோ. 2:10-12ஐ வாசிக்கவும்.] பெண்கள் மீது இருந்த தடைகள் என்ன? [கோடிட்ட இடத்தில் "பேசாமலிருக்க" என்று எழுதி நிரப்பவும்.]

ஒவ்வொரு கிறிஸ்தவருக்குமே (சில) தடைகள் உள்ளன, எல்லாரும் ஒரே மாதிரியான திறனில் பணிபுரிவதில்லை (1 கொரி. 12:28, 29). ஒரு சில மனிதர்கள் மட்டுமே நியமிக்கப்பட்ட முன்னோடிகளாக ஊழியம் செய்ய முடிந்தது, மற்றும் எல்லாரும் ஊழியக்காரர்களாகவோ, அல்லது உதவிக் காரர்களாகவோ அல்லது போதகர்களாகவோ இருந்ததில்லை. ஆண்களைப் போலவே ஒவ்வொரு பணிநிலையிலும் பெண்களும் ஊழியம் செய்ய முடியும், ஆனாலும் அதில் இரண்டு தடைகள் மட்டும் உள்ளன: அவர்கள், சபையில் முன்னோடித்துவப் பொறுப்புக்களை மேற்கொள்ளலாகாது அல்லது பிராந்திய சபைக் குழுமங்களில் மூப்பர்களாக நியமிக்கப் படலாகாது. இல்லங்களில் பிள்ளைகளுடன் பெண்கள் கொண்டுள்ள நெருங்கிய தொடர்பின் காரணமாக அவர்கள் பிள்ளைகளின் மூலமாக சபையில் ஆண்கள் கொண்டுள்ள அதே செல்வாக்கைக் கொண்டிருக்க முடியும். பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதன் மூலம் (1 தீமோ. 2:15) அவள் மகிமையடைய முடியும் மற்றும் பெண் என்ற வகையில் அவள் தனது பணிப் பொறுப்பில் ஆண்களுக்குக் கிடைக்காத வகையில் சிறப்பான ஊழியம் செய்ய முடியும்.

11. அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் மூலமாகக் கையளிக்கப் பட்ட அறிவுறுத்தல்களை அறிந்தவர்களால் சபை உறுப்பினர்கள் வழி நடத்தப்பட வேண்டியிருந்தனர். சபையின் முன்னோடிகளுக்கு இவர்கள் எவ்வகையில் பதில்செயல் செய்பவர்களாய் இருந்தார்கள்? [எபி. 13:17ஐ வாசிக்கவும்.] இவர்கள் தங்களுக்கு மேலாயிருந்தவர்களுக்கு எவ்விதம் பதில்செயல் செய்கிறவர்களாயிருக்க வேண்டியிருந்தனர்? [கோடிட்ட இடத்தில் "கீழ்ப்படிந்து அடங்க" என்று எழுதி நிரப்பவும். பாடத் தாளின் பின்புறத்தில் சதுரங்களில், "உறுப்பினர்கள்" என்று எழுதி நிரப்பவும். (பக்கம் 214ஐப் பார்க்கவும்)] வாழ்விலும் இயேசுவால் போதிக்கப்பட்ட போதனையிலும் உறுப்பினர்களை வழி நடத்துவது முன்னோடிகளின் பணியாய் இருந்தது. சபைக்கு ஆவிக்குரிய வழிகாட்டும் குறிப்புகளைத் தர நாடுகையில் முன்னோடிகளுக்கு சபை உடனடியாக இணங்குவது அவசியமாயிருந்தது.

இந்தப்பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? சபையானது

GTG LIBRARY- BANGALORE

முறைப்படி நிறுவப்பட்டிருக்கையில் இயேசுவே சபையில் யாவருக்கும் தலையாய் இருக்கிறார் என்பதை நாம் கற்றுக் கொண்டுள்ளோம். சபையானது பின்பற்றத் தேவையான எல்லா அறிவுறுத்தல்களையும் இயேசு, அப்போஸ்தலர்கள் மற்றும் புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் ஆகியோர் மூலமாகக் கொடுத்தார். இயேசு, அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் ஆகியோருக்குச் சபையில் நிரந்தரமான பணிநிலைகள் உள்ளன, அவர்களைப் பின்தொடருபவர்கள் (பதவி நிலையில்) யாருமில்லை அதாவது அவர்களுக்குப் பதிலாக எவரொருவரும் அப்பதவி நிலையில் இருக்க முடியாது. சபையில் எப்பொழுதும் உள்ள அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் யாரெனில், இயேசு பரலோகம் சென்ற உடனேயே புதிய உடன்படிக்கையைப் பெற்றுக் குறுகிய காலமே ஊழியம் செய்தவர்களே ஆவார்கள். ஒரே முறையாக ஒப்புவிக்கப்பட்ட (யூதா. 3) இயேசுவின் சித்தம் பற்றி அறிவதற்கு, சபையானது இவர்களையே பின்னோக்கிப் பார்க்க வேண்டியதாயுள்ளது. இயேசு, சபைக்கு நியமித்த ஊழியத்தை அவரால் ஏற்பாடு செய்யப்பட்ட நிறுவன நடையில் செய்யும்படி நாடுபவர்களாக இருப்பவர்களே கிறிஸ்துவின் சபையார் என்ற குழுவினர் ஆவர்.

IV. **முன்னோடிகளின் எண்ணிக்கை**

1. முன்னதாக இப்பாடத்தில் நாம், முன்னோடிகள் என்பவர்கள் (அந்தந்த) பிராந்திய சபைகளிலும் இருக்கின்ற மூப்பர்களாவர் என்று கற்றோம். ஒவ்வொரு பிராந்திய சபைக்கும் ஒரு மூப்பரை(பாஸ்டர், ஆயர்)க் கொண்டிருந்ததா அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்களைக் கொண்டிருந்ததா? [அப். 14:23; தீத்து 1:5 ஆகியவற்றை வாசிக்கவும்.] ஒவ்வொரு பிராந்திய சபைக்கும் ஒரே ஒரு மூப்பர் தேர்ந்தெடுக்கப் பட்டாரா? அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனரா? [கோடிட்ட இடத்தில் "மூப்பர்கள்" என்று எழுதி நிரப்பவும்.] மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்ற உண்மையானது பிராந்திய சபைகள் ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்களைக் கொண்டிருந்தன என்ற கருத்தை மறைமுகமாய் உணர்த்துகின்றது.

2. சபைகள் நிறுவப்பட்ட பிறகு அவைகளைப் பற்றி நடபடிகளின் புத்தகம் குறிப்பிடுகின்றது. பிராந்திய சபைகள் ஒரே ஒரு மூப்பரைக் கொண்டிருந்தன என்று விவரிக்கப்படுகின்றனவா? [அப். 15:2; 20:17; பிலி. 1:1 ஆகியவற்றை வாசிக்கவும்.] பிராந்திய சபை மூப்பரைக் கொண்டிருந்தனவா அல்லது மூப்பர்களைக் கொண்டிருந்தனவா? [கோடிட்ட இடத்தில் "மூப்பர்களை" என்று எழுதி நிரப்பவும்.]

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? கர்த்தருடைய பிராந்திய சபைகள் ஒரு மனிதரின் ஆளுகையை நடைமுறைப் படுத்தவில்லை என்று நாம் கற்றுள்ளோம். சபையின் நடவடிக்கைகளைத் தனியொரு மனிதராக எவரும் கண்காணிக்கவில்லை. ஒவ்வொரு பிராந்திய சபையும் நியமிக்கப்பட்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட முன்னோடிகளைக் கொண்டிருந்தன, இது "the elder" (ஒரு மூப்பர்) எந்த

GTG LIBRARY- BANGALORE

ஒரு பிராந்திய சபையிலும் இருந்ததாக ஒருக்காலும் குறிப்பிடப்படவில்லை ஆனால் குறிப்பானது எப்பொழுதுமே பிராந்திய சபையின் "மூப்பர்கள்" என்றே உள்ளது என்ற உண்மையிலிருந்து தெளிவாகிறது.

V. **தகுதிகள்**

சபையின் பல்வேறு பணி நிலைகளில் எவராகிலும் பணியாற்ற முடிந்திருந்ததா? அல்லது தகுதிகள் தேவைப்பட்டனவா? [1 முதல் 5 வரை உள்ள எண்களின் பக்கம் உள்ள பின்வரும் வேத வசனக் குறிப்புகளை வாசிக்கவும்: அப். 1:21, 22; 1 தீமோ. 3:1-7; தீத்து 1:5-9; 1 தீமோ. 3:8-13; 2 தீமோ. 2:24, 25; 1 பேது. 4:11.] ஒவ்வொரு முறையும் வேத வசனங்களைப் *பரிசீலிக்கவும்.* இந்தப் பல்வேறு பணி நிலைகளில் ஒருவர் ஊழியம் செய்ய முடியு முன்பாக தடைகள் மற்றும் தகுதிகள் ஆகியவை கனப்படுத்தப்பட வேண்டியிருந்தனவா? [கோடிட்ட இடங்கள் *ஒவ்வொன்றிலும்* "ஆம்" என்று எழுதி நிரப்பவும்.] [ஒவ்வொரு பணிநிலைக்கான தகுதிகளை விவரமாக கலந்துரையாட வேண்டும் என்பது இப்பகுதியின் நோக்கமல்ல. அதை இன்னொரு வேளையில் செய்து கொள்வோம். இந்தப் பொறுப்புகளுக்கு கிறிஸ்தவராயுள்ள யாராவது ஒருவர் நியமிக்கப்பட்டு விட முடியாது என்பதைக் காண்பதற்குக் கற்பவருக்கு உதவுவதே நோக்கமாய் உள்ளது.]

இந்தப் பகுதியில் நாம் கற்றுள்ளவை என்ன? பிராந்திய சபைக் குழுமங்களில் பல்வேறு பணிநிலைகளுக்கு நியமிக்கப்பட்டவர்கள் அப்பொறுப்புகளை ஏற்பதற்கு முன்பாக தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டியவர்களாய் இருந்தனர் என்று நாம் கற்றுள்ளோம்.

தொகுப்புரை

சபையின் முழு அதிகாரமும் இயேசுவிடமே உள்ளது என்ற உண்மையானது இந்தப்பாடத்தில் தனித்து நிலைநிற்க வேண்டிய கருத்தாக உள்ளது. அவரே சபைக்குத் தலையாக உள்ளார், சபை செயல்படக் கூடிய வகை முறையைப் பற்றி அவரே ஏற்பாடுகள் செய்து அறிவுறுத்தி யிருக்கின்றார்.

I. *கிறிஸ்துவின் சபையில் இருந்த பணிநிலைகள் யாவை?* இயேசுவே தலையாக உள்ளார். அவருக்குக் கீழாக, அப்போஸ்தலர்களும், தீர்க்க தரிசிகளும், சுவிசேஷகர்களும், மேய்ப்பர்களும் மற்றும் போதகர்களும் உள்ளனர்.

II. *இந்தப் பணி நிலைகளின் நோக்கம் என்னவாயிருந்தது?* சபையானது இயேசுவுக்கு அதிகமான ஊழியத்தை நிறைவேற்றும்படி அதைக் கட்டி எழுப்பி பக்குவப்படுத்துவதே நோக்கமாயிருந்தது.

III. *இந்தப் பணி நிலைகளின் பொறுப்புகள் என்னவாயிருந்தன?* இயேசு ஒருவரே சட்டம் கொடுப்பவராய் இருக்கின்றார். சபை பின்பற்ற வேண்டிய அறிவுறுத்தல்களை அவர் அப்போஸ்தலர் மற்றும் தீர்க்கதரிசிகள் மூலம் கொடுத்துள்ளார். இந்தத் தகுதி நிலையில் அவர்களையே ஒவ்வொரு பிராந்திய சபையும் பின் நோக்க வேண்டும்.

GTG LIBRARY- BANGALORE

சுவிசேஷகர்கள், போதகர்கள், உதவிக்காரர்கள், பெண்கள் மற்றும் உறுப்பினர்களைக் கொண்ட பிராந்திய சபைகள் மூப்பர்களால் வழிநடத்தப்பட வேண்டியவைகளாக உள்ளன. பிராந்திய சபைக் குழுமத்தின் ஊழியம் மற்றும் உறுப்பினர்களின் ஆவிக்குரிய நலம் ஆகியவற்றை செயல்பாட்டில் ஒருங்கிணைக்க மூப்பர்கள் உதவுகின்றனர் (எபி. 13:17).

ஒவ்வொரு உறுப்பினரும் தாம் உறுப்பினராயுள்ள சபையில் தனக்குரிய பணிப் பொறுப்பைக் கொண்டுள்ளார். எல்லாரும் ஒரே பணிப் பொறுப்பில் செயல்படுவதில்லை.

IV. *ஒவ்வொரு சபையிலும் எத்தனை கண்காணிகள் (மூப்பர்கள், கண்காணிகள், ஆயர்கள்) இருந்தனர்?* ஒவ்வொரு பிராந்திய சபையும் ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்களால் வழி நடத்தப்பட்டது. ஒவ்வொரு பிராந்திய சபையும் தனது சொந்த மூப்பர்களை, தனது சொந்தக் கண்காணிகளை, அதாவது ஆயர்கள் மற்றும் மேய்ப்பர்களைக் கொண்டிருந்தது, அவைகள் மனிதராலான ஒரு மையத் தலைமையகத்தினால் கட்டுப்படுத்தப்படவோ அல்லது வழிநடத்தப்படவோ கிடையாது.

V. *இந்தப் பணி நிலைகளில் ஒருவர் பணி செய்யு முன்பு குறிப்பிட்ட தகுதிகளை உடையவராக இருக்க வேண்டியிருந்ததா?* பிராந்திய சபைகளில் பணியாற்றத் தொடங்குமுன்பு பொறுப்புகள் ஒப்புவிக்கப்பட்டவர்கள் தகுதியுடையோராய் இருக்க வேண்டியிருந்தனர்.

சபையின் மீதான அதிகாரம் இயேசுவுக்கு மட்டுமே உரியது என்று வேத வசனங்கள் தெளிவாய்ப் போதிக்கின்றன. வேறு எவருக்கும் இந்த உரிமையில்லை. இயேசுவைப் பின்பற்றுபவர்கள் இயேசு கட்டளையிட்ட யாவற்றையும் ''கடைப்பிடிக்க'' (மத். 28:20) வேண்டியவர்களாய் இருந்தனர், அவர்கள் மனிதர்களின் போதனைகளையும் கட்டளைகளையும் கடைப் பிடிக்க வேண்டியதில்லை.

அடுத்த பாடத்தில் நாம், ஆராதனையில் பயன்படுத்தும்படி இயேசு விரும்புகின்றவை என்ன என்பது பற்றிப் படிப்போம்.

[கற்பவருடன் இன்னொரு பாட வேளைக்கு ஏற்பாடு செய்யவும்.]

GTG LIBRARY- BANGALORE

நீங்கள் தேவனை ஏற்புடைய வகையில் ஆராதிக்கின்றீர்களா?

I. ஆராதனையில் தேவன் விரும்புகின்றவற்றை நீங்கள் பயன் படுத்துகின்றீர்களா?

1. ஆராதனை என்பது ________________ப் பிரியமானதாக இருக்க வேண்டும். 1 பேது. 2:5
2. ஆராதனை என்பது ________________ம் ____________ ம் ஏறெடுக்கப்பட வேண்டும். யோவா. 4:24
3. சத்தியம் என்பது ________________ உண்டாயிருக்கின்றது. யோவா. 1:17
4. அப்போஸ்தலர்கள் ________________ சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தப்பட்டனர். யோவா. 16:13
5. அவர்கள் ________________ கட்டளையிட்ட யாவற்றையும் போதிக்க வேண்டியிருந்தது. மத். 28:18-20

II. தேவன் புறக்கணிக்கின்றவற்றை நீங்கள் பயன்படுத்துகின்றீர்களா?

1. மனிதரின் கட்டளைகளின்படியான ஆராதனை ____________. மாற். 7:7
2. தேவனுடைய கட்டளைகளைத் தள்ளி விடுகின்ற ஒருவர் ________________ பாரம்பரியங்களைப் பின்பற்றுகிறார். மாற். 7:8
3. மனிதரின் பாரம்பரியங்கள் தேவனுடைய வசனத்தை ________________. மாற். 7:13.
4. மனிதருடைய பாரம்பரியங்கள் ________________ இருப்பதால் அவைகள் நம்மை ________________ கொலோ. 2:8
5. மனிதருடைய கட்டளைகள் ________________ இருந்து (நம்மை) விலக்குகின்றன. தீத்து 1:13

III. நீங்கள் கிறிஸ்துவிடமிருந்து வந்தவற்றையா அல்லது மனிதர்களிடமிருந்து வந்தவற்றையா, எவைகளைப் பயன்படுத்து கின்றீர்கள்?

கிறிஸ்துவிடமிருந்து		மனிதர்களிடமிருந்து
____________	லூக். 18:1 1 தீமோ. 2:5	________________
____________	லூக் 6:38 1 கொரி. 16:2	________________
____________	1 கொரி. 11:23-26 அப். 20:7	________________
____________	எபே. 5:19	________________
____________	2 தீமோ. 2:2	________________

GTG LIBRARY- BANGALORE

IV. *நீங்கள் கூட்டியிருக்கின்றீர்களா? அல்லது எடுத்துப் போட்டிருக்கின்றீர்களா?*

1. *நாம் ஒன்றையும் ______________________ அல்லது ______________________, ______________________ கூடாது.*
   வெளி. 22:18, 19
2. *______________________ உபதேசத்தில் நிலைத்திராமல் ______________________ ______________________ எவனும் ______________________ உடையவனல்ல.*
   2 யோவா. 9

Copyright 1992 - Gospel Light Pub. Co. Delight, AR 71940



GTG LIBRARY- BANGALORE

பாடத் தாளை எடுத்துரைத்தல்:

"நீங்கள் தேவனை ஏற்புடைய வகையில் ஆராதிக்கின்றீர்களா?"

"நீங்கள் தேவனை ஏற்புடைய வகையில் ஆராதிக்கின்றீர்களா?" என்ற இந்தப் பாடத் தாளை "சபை" என்ற பாடத் தாளுக்குப் பின்போ (பாடம் 5) அல்லது "நிறுவன அமைப்பு" என்ற பாடத் தாளுக்குப் பின்போ (பாடம் 6) படிக்க முடியும். ஆசிரியர் இதை ஒரு தொடக்கப் பாடத் தாளாகப் பயன்படுத்தக் கூடாது.

நோக்கம்

சபையின் தலை என்ற வகையில் இயேசு, தம் சபையானது பயன்படுத்த வேண்டும் என்று அவர் விரும்புகின்றவற்றைப் பற்றிக் கலந்துரையாடுதலே "ஆராதனை" பாடத் தாளின் நோக்கமாக உள்ளது.

பாடச் சுருக்கம்

மனிதர் கீழ்ப்படிய வேண்டிய சகல சத்தியமும் இயேசுவால் பரிசுத்த ஆவியானவர் மூலமாக புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் ஆகியோருக்குத் தரப்பட்டும், அவை எல்லாமே புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டும் உள்ளது என்பதை இந்தப் பாடத் தாள் காண்பிக்கின்றது. இந்த சத்தியமே தேவனை ஆராதிப்பதில் பின்பற்றப்பட வேண்டியதாக உள்ளது. மனிதர்களின் கட்டளைகளும் பாரம்பரியங்களும் மறுக்கப்பட வேண்டியவைகளாயுள்ளன, மற்றும் இயேசுவின் மூலம் வந்த சத்தியத்தை மட்டுமே தேவனை ஆராதிப்பதில் (நாம்) பின்பற்ற வேண்டும்.

அறிமுகம்

இந்தப் பாடத்திற்காக மாணவரைத் தயார் செய்வதில் ஆசிரியர், ஆராதனை பற்றியும், அதன் நோக்கம் பற்றியும் மற்றும் ஆராதனையில் மிக மேன்மையானவராக மதிக்கப்படுபவர் யார் என்பது பற்றியும் கலந்துரை யாடுவதினால் இந்தப் பாடத்தை அறிமுகப்படுத்தலாம்.

தேவனே ஆராதனையின் மையமாக உள்ளார். மனிதன் ஆராதனையின் மையமாக இருப்பதில்லை. ஆராதனை என்பது நம்மைப் படைத்தவரை மதிக்க, கனப்படுத்த, துதிக்க மற்றும் தேவனை வழிபட நாம் எடுக்கின்ற

GTG LIBRARY- BANGALORE

முயற்சியாக இருக்க வேண்டும். தேவனுடன் நமது அன்றாட நடையை நாம் பின்னோக்கிப் பார்க்கையில் தேவன் நம் வாழ்வில் செய்துள்ளவை பற்றிய ஆழ்ந்த சிந்தனையிலிருந்து ஆராதனை வெளிப்பட வேண்டும். தேவன் நமக்குச் செய்துள்ளவற்றை நாம் ஆழ்ந்து சிந்திக்கையில், நமது இருதயங்கள் நன்றி செலுத்துதலிலும் மற்றும் துதித்தலிலும் தேவனை நோக்க வேண்டும்.

நாம் ஆராதனையில் செய்கின்றவைகள் அவருக்கு நமது கீழ்ப் படிதலையும் அவர் மீதான (நமது) மரியாதையையும் காண்பிக்கும் என்பதை நாம் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். ஜார்ஜ் வாஷிங்டன் அவர்கள், தமது படைத் தலைவர்களுக்கு ஆபாசப் பேச்சுக்களுக்கு மனிதர்களைக் கண்டனம் செய்யும்படி உற்சாக மூட்டுவதற்காக ஒரு ஆணையை எழுதினார். தேவனுடைய உதவிக்காக அவரைத் தொழுது கொள்ளப் பயன்படும் நாவுகள் அவரைக் கனவீனப்படுத்தப் பயன் படுத்தப்படக் கூடாது என்பதே அவரின் இச்செயலுக்கான காரணமாய் இருந்தது. அவரால் கண்டிக்கத் தக்க மொழிநடையைப் பயன்படுத்துவதால், அவருக்கு இப்படிப்பட்ட அவமரியாதையைக் காண்பித்தால், அவர்கள் தேவன் தங்களை ஆசீர்வதிக்கும்படி எதிர்பார்க்க வேண்டியது ஏன்? அது போலவே, தேவனை ஆராதிப்பதற்கான நமது முயற்சிகள் தேவனால் கேட்டுக் கொள்ளப்பட்டிராதவற்றை ஆராதனையில் பயன்படுத்தும் முயற்சிகளினால் அழிக்கப்பட்டு விடக் கூடாது.

I. தேவன் எவற்றை விரும்புகின்றார்

1. ஆராதனையில் எவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்று தேவன் தேர்ந்து கொண்டுள்ளாரா? மனிதன் தேவனை ஆராதிக்க எவற்றைப் பயன்படுத்தும்படி தேவன் விரும்புகின்றார்? [1 பேது. 2:5ஐ வாசிக்கவும்.] *ஆராதனையில் யாருக்குப் பிரியமானதாக இருக்க வேண்டும்?* [கோடிட்ட இடத்தில், ''தேவனுக்கு'' என்று எழுதி நிரப்பவும்.] ஆராதனையில் பயன்படுத்தப்படுகின்றவை மனிதர்களைப் பிரியப்படுத்துகின்றதா அல்லவா என்பது இங்கு கேள்வியாய் இருப்பதில்லை, ஏனெனில் ஆராதனையில் மையமாய் இருப்பது மனிதனல்ல. நாம் ஆராதனை செய்யும் பொழுது மனிதரையல்ல, தேவனையே பிரியப்படுத்தும்படி நாட வேண்டும். மனிதரைப் பொறுத்தமட்டிலும் நாம் மனிதருக்கு மிகவும் ஈடுபாடுள்ள தயாரிப்புகளை நாம் ஏற்படுத்த முடியும், ஆனால் அது அங்கு கவனத்திற்குரியதல்ல. ஆராதனையில் நமது முயற்சிகள் தேவனைப் பிரியப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

2. ஆராதனையைக் குறித்து இயேசு என்ன கூறினார்? பழைய ஏற்பாட்டின் ஆராதனை ஒழிந்து போகையில், இயேசுவைப் பின்பற்று பவர்கள் எவ்விதம் ஆராதிக்க வேண்டியிருக்கின்றது? [யோவா. 4:23, 24ஐ வாசிக்கவும்.] *ஆராதனையில் கிறிஸ்தவர்கள் உள்ளடக்க வேண்டியவை யாவை?* [கோடிட்ட இடங்களில் "ஆவியிலும்" மற்றும் "உண்மையிலும்" என்று எழுதி நிரப்பவும்.]

''ஆவியிலும்'' என்பதினால் இயேசு, ஆராதனையில் மனிதரின் உள்ளான பகுதியானது ஈடுபாடு கொண்டிருக்க வேண்டும் என்று

GTG LIBRARY- BANGALORE

அர்த்தப்படுத்தியிருக்க வேண்டும். ஆராதனை முறைமையில் மட்டும் ஈடுபட்டு, ஆவிக்குரிய வகையில் ஈடுபாடின்றி இருப்பது என்பது போதுமானதல்ல. "என் இயேசுவே உம்மை நான் அன்புகூருகின்றேன்" என்று ஒருவர் பாடும் பொழுதே அவர் தம் வேலை, பொழுதுபோக்கு ஆகியவற்றின் மீது எண்ணம் கொண்டவராய், தம் இருதயத்தின் உணர்வை வெளிப்படுத்தாமல் இருக்கவும் முடியும், இதனால், "என் இயேசுவே உம்மை நான் அன்புகூருகின்றேன்" என்பது ஆராதனையாகி விடாது. அவருடைய ஆராதனை ஆவியில் இராது.

ஆவியில் மட்டுமின்றி ஆராதனை என்பது உண்மையிலும் இருக்க வேண்டும். "ஆவி" என்பது பொருளாகவும் "உண்மை" என்பது வடிவமாகவும்/முறையாகவும் உள்ளன. ஒரு பாத்திரத்தில் நீர் வேண்டும் என்று மறைமுகமாய் உணர்த்தும் வண்ணம் ஒருவர் குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டும் என்று கேட்கலாம். அப்போது, தோட்டத்திற்கு நீர் பாய்ச்சும் குழாயுடன் உள்ள ஒருவர் அந்த நபரை நோக்கி (குழாயின் மூலம்) தண்ணீரைப் பீறிட்டு ஓடச் செய்து "இதோ நீங்கள் குடிப்பதற்கான தண்ணீர் இதில் வருகிறதே" என்று கூறலாம். இங்கு பொருள் உள்ளது ஆனால் அதைத் தருகின்ற வடிவம்/முறை தவறானதாக இருக்கும். இது போலவே, ஒருவர் ஆராதனையில் தேவனிடம் நெருங்கலாம், ஆனால் தேவனைப் பிரியப்படுத்தும் முறையைப் பயன்படுத்துவதில் தவறி விடலாம்.

3. தேவன் உண்மையை வெளிப்படுத்தியிருக்கின்றாரா? அவர் உண்மையை வெளிப்படுத்தியிருந்தால், அதை எங்கு காண முடியும்? [யோவா. 1:17ஐ வாசிக்கவும்.] *தேவன் சத்தியத்தை யார் மூலம் வெளிப் படுத்தியிருக்கிறார்?* [கோடிட்ட இடத்தில் "இயேசு கிறிஸ்துவால்" என்று எழுதி நிரப்பவும்.] இயேசுவில் மட்டுமே சத்தியம் உள்ளது (எபே. 4:21). சத்தியமானது மோசே கொண்டு வந்த நியாயப்பிரமாணத்தில் காணப்படுவதில்லை. அந்த நியாயப்பிரமாணம் நிழலாக மட்டுமே இருந்தது (எபி. 10:1). இப்பொழுது நிஜம்/உண்மை நிலை வந்துள்ளது, நாம் இனியும் நியாயப்பிரமாணம் என்ற நிழலுக்குக் கீழானவர்கள் அல்ல (கலா. 3:24, 25; எபே. 2:14, 15; எபி. 7:18, 19). பழைய ஏற்பாட்டின் கீழ் இருந்தவர்களால் ஆராதனையில் பயன்படுத்தப்பட்டவைகள் இயேசு கிறிஸ்துவின் மூலம் வந்த சத்தியத்தில் அடங்கியிராதபட்சத்தில், அவைகள் கிறிஸ்தவர்களால் (ஆராதனையில்) பயன்படுத்தப்படக் கூடாது.

4. இயேசு வெளிப்படுத்திய சத்தியத்தின் அளவு என்ன? [யோவா. 16:13ஐ வாசிக்கவும்.] *பரிசுத்த ஆவியானவரால் அப்போஸ்தலர்கள் பெற்றுக் கொண்ட சத்தியத்தின் அளவு என்ன?* [கோடிட்ட இடத்தில் "சகல" என்று எழுதி நிரப்பவும்.] இயேசு மனிதருக்கு வெளிப்படுத்தப் போகின்ற சகல சத்தியமும் அப்போஸ்தலர்களுக்குத் தரப்பட்டது. நடைமுறைப் படுத்தப்படுவது எதாவது அப்போஸ்தலர்களால் போதிக்கப்படாததாக இருந்தால், அது இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டான சத்தியத்தின் ஒரு பகுதியாக இருப்பதில்லை.

[பாடத் தாளின் பின்புறத்தில் மேல் பகுதியில் "இயேசு" என்றும், அதன்

GTG LIBRARY- BANGALORE

கீழ் “பரிசுத்த ஆவி” என்றும், மற்றும் அதன் கீழ் “அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள்” என்றும் எழுதவும். அதற்கும் கீழே ஒரு வட்டம் வரைந்து அதன் மையப் பகுதியில் “சகல சத்தியமும்” என்று எழுதவும். (பக்கம் 226ஐப் பார்க்கவும்)] சபையின் தலையாகிய இயேசு புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் சகல சத்தியத்தையும் வெளிப்படுத்தியிருக்கின்றார். அவர்கள் ஒரு நடைமுறையானது பயன்படுத்தப்பட வேண்டும் என்று போதித்தால், அது இயேசுவிடமிருந்து வந்ததாகவும், இயேசுவால் கட்டுப்படுத்தப்பட்டதாகவும் இருக்கின்றது (மத். 18:18).

5. இயேசு பரலோகத்திற்குத் திரும்பச் செல்வதற்குச் சற்று முன்னர், அப்போஸ்தலர்களுக்கு, அறிவுறுத்தல் கொடுத்தார். எல்லா நாடுகளிலுமுள்ள எல்லா மக்களையும் சீஷர்களாக்கி, அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, அவர் அப்போஸ்தலர்களுக்குப் போதித்த யாவையும் கடைப்பிடிக்கும்படி அவர்களுக்கு(ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு)க் கற்பிக்குமாறு அப்போஸ்தலர்களிடம் அவர் கூறினார். புதிய கிறிஸ்தவர்கள் கடைப்பிடிக்கும்படியாக அவர்களுக்கு அப்போஸ்தலர்கள் *யாருடைய கட்டளையின்படியான போதனையை போதிக்க வேண்டியதாயிருந்தது?* [மத். 28:20ஐ வாசியுங்கள்.] அவர்கள் போதிக்க வேண்டியவற்றைக் கட்டளையிட்டது *யார்?* [கோடிட்ட இடத்தில் “இயேசு” என்று எழுதி நிரப்பவும்.]

இயேசுவால் தரப்பட்ட இந்த அறிவுறுத்தல் (சிலவற்றை) உள்ளடக்கியதாகவும் (சிலவற்றை) விலக்குவதாகவும் உள்ளது. இயேசு போதித்திருந்தவற்றைக் காட்டிலும் குறைவானவற்றைப் போதித்தல் என்பது போதுமானதாக இராது, மற்றும் இயேசு போதித்திருந்தவற்றைக் காட்டிலும் அதிகமாய்ப் போதித்தல் என்பது, இயேசு போதித்தவற்றை அவர்கள் கைக்கொள்ளும்படி போதித்தல் என்பதாகி விடாது. அது இயேசுவைத் தவிர எவரோ வேறொருவர் போதித்தவற்றைக் கடைப்பிடிக்கும்படி கற்பித்தல் என்பதாகி விடும். அவர்கள் இயேசுவுக்குக் கீழ்ப்படிந்தால், இயேசு அவர்களுக்குப் போதித்தவற்றைக் காட்டிலும் அதிகமாகவோ, அல்லது குறைவாகவோ போதிக்காமல், அவர் கட்டளையிட்ட எல்லாவற்றையும் அவரது பின்பற்றாளர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று போதித்திருப்பார்கள்.

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? ஆவியிலும் உண்மையிலும் ஏறெடுக்கப்படும் ஆராதனையே தேவனுக்குப் பிரியமான ஆராதனையாக உள்ளது என்று நாம் கற்றுக் கொண்டுள்ளோம். அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் மூலமாக சகல சத்தியமும் இயேசுவால் தரப்பட்டுள்ளது. இந்த அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளால் போதிக்கப்பட்டுள்ள சத்தியத்தையே இயேசுவின் பின்பற்றாளர்கள் ஆராதனையில் பயன்படுத்த வேண்டியவர்களாய் உள்ளனர்.

II. தேவன் எவற்றைப் புறக்கணிக்கின்றார்

மனிதர் ஆராதனையில் உள்ளடக்கும் எல்லாவற்றையும் தேவன் ஏற்றுக்

GTG LIBRARY- BANGALORE

கொள்கின்றாரா? ஆராதனையில் மனிதர் தாம் விரும்பும் எதையும் பயன்படுத்த உரிமை கொண்டுள்ளனரா?

1. தேவன் கட்டளையிட்டிராதவற்றை மனிதர் கட்டளையிட்டுள்ளது பற்றிய விஷயம் என்ன? தேவனுடைய கட்டளையின் அடிப்படையில் இல்லாத, மற்றும் மனிதருடைய கட்டளைகளின் அடிப்படையில் அமைந்த ஆராதனையை தேவன் ஏற்றுக் கொள்வாரா? [மாற். 7:7ஐ வாசிக்கவும்.] மனிதருடைய கட்டளைகளின் அடிப்படையிலான ஆராதனைக்கு தேவன் மதிப்பளிக்கின்றாரா? [கோடிட்ட இடத்தில் "வீணானது" என்று எழுதி நிரப்பவும்.] "வீணானது" என்ற வார்த்தை எதனை அர்த்தப்படுத்துகின்றது? "வீணானது" என்றால், பயனற்றது, மதிப்பற்றது, தகுதியற்றது, கனியற்றது என்று அர்த்தப்படுகின்றது. மனிதரால் கட்டளையிடப்பட்டவற்றைக் கொண்டு தேவனை ஆராதிக்க நாடுதல் என்பது தேவனுக்குத் தகுதியற்றதாக உள்ளது.

2. ஆராதனையின் ஆதார மூலங்களாக இருக்கச் சாத்தியமானவை இரண்டு மட்டுமே. ஒருவர் ஆராதனையில் பயன்படுத்துகின்றவைகள் தேவனிடமிருந்தோ, அல்லது மனிதரிடம் இருந்தோ வர வேண்டும். ஒருவர், தேவனுடைய கட்டளைகளைப் புறம்பே ஒதுக்கி வைக்கின்றபொழுது, அவர் யாருடைய கட்டளைகளைப் பின்பற்றுபவராய் இருப்பார்? [மாற். 7:8ஐ வாசிக்கவும்.] மனிதர் தேவனைப் பின்பற்றாது இருக்கையில், யாருடைய பாரம்பரியங்களைப் பின்பற்றுகிறவராய் இருக்கின்றார்? [கோடிட்ட இடத்தில் "மனிதரின்" என்று எழுதி நிரப்பவும்.]

யூதமக்கள், மனிதருடைய பாரம்பரியத்தைப் பின்பற்றிக் கொண்டிருந்தமைக்காக இயேசு அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கவில்லை. அதற்குப் பதில், அவர்கள் மனிதப் பராம்பரியங்களைப் பின்பற்றியதற்காக அவர்களை கண்டனம் செய்தார். மனிதர்களின் பாரம்பரியங்களை அல்ல ஆனால் தேவனுடைய சித்தத்தையே மனிதர் பின்பற்ற வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கின்றார்.

3. மனிதரின் பாரம்பரியங்களைப் பின்பற்றுகின்றவர்கள் தேவனுடைய வசனத்திற்குச் செய்வது என்ன? [மாற். 7:13ஐ வாசிக்கவும்.] மனிதரின் பாரம்பரியங்கள் தேவ வசனத்தை என்னவாக்குகின்றன? [கோடிட்ட இடத்தில் "அவமாக்குகின்றன" என்று எழுதி நிரப்பவும்.] மனித பாரம்பரியங்களால் தேவனுடைய வார்த்தை அவமாக்கப்படுகின்றது.

கப்பலின் மேல் தளத்தில் இருந்து கடலுக்குள் தவறி விழந்துவிட்ட ஒருவரை நோக்கி உயிர்காப்பு வளையம் ஒன்று வீசப்படும்பொழுது, அது அவரது உயிரைக் காக்க முடியும். இருப்பினும், யாரேனும் இன்னொருவர், கடலில் மூழ்கும் அம்மனிதர் உயிர்காப்பு வளையத்தை நெருங்கி விடாதபடி கற்களைக் கொண்டு, அவரைத் தாக்குவாரென்றால், அவரைக் காப்பதற்காக எறியப்பட்ட உயிர்காப்பு வளையமானது பயனற்றதாக இருந்து விடும். இதைத்தான் மனிதரின் பாரம்பரியங்கள் என்பவை, இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தைப் பின்பற்றாதவாறு ஒருவரைத் தடை செய்யக் கூடிய வகையில் செயல்படுகின்றன.

4. மனிதரின் பாரம்பரியங்கள் யாரிடம் இருந்து நமக்கு வருவதில்லை?

GTG LIBRARY- BANGALORE

[கோடிட்ட இடத்தில் ''கிறிஸ்துவிடமிருந்து வராமல்'' என்று எழுதி நிரப்பவும்.] *இவைகள் நமக்கு வேறென்ன செய்யக் கூடும்?* [*கொலோ. 2:8*ஐ வாசிக்கவும்.] *அவைகள் என்ன செய்யக் கூடும்?* [கோடிட்ட இடத்தில் ''கொள்ளைக் கொண்டு போய்விடும்'' என்று எழுதி நிரப்பவும்.] நாம் செய்கின்ற செயல்கள் மனிதர்களின் போதனைகளின்படியானதாகவோ அல்லது கிறிஸ்துவின் போதனைகளின்படியானதாகவோ உள்ளன. *நாம் மனிதரின் போதனையைப் பின்பற்றினால் தேவன் நம்மேல் பிரியமாயிருப்பாரா? அல்லது நாம் கிறிஸ்துவின் போதனையைப் பின்பற்றினால் தேவன் நம்மேல் பிரியமாய் இருப்பாரா?* நாம் செய்கின்ற செயல்கள் மனிதர்களின் போதனைப்படியானதாக இருந்தால், தேவன் அதைப் புறக்கணிப்பார். ஆனால் அது கிறிஸ்துவின் போதனைப்படியானதாக இருந்தால், தேவன் அதை ஏற்றுக் கொள்வார்.

[*பாடத் தாளின் பின்புறத்தில் வட்டத்திற்கு வெளியே மேல் பகுதியில்* ''மனிதர்களின் பாரம்பரியங்கள்'' என்று எழுதி நிரப்பவும். (பக்கம் 226ஐப் பார்க்கவும்)] மனிதர்களின் உபதேசங்கள் இயேசு கிறிஸ்துவின் சத்தியத்தின்படியானவைகளாய் இருப்பதில்லை. அவை தேவனுக்குப் பிரியமானவைகள் உள்ள வட்டத்தினுள் இருக்க முடியாது.

5. மனிதர்களின் கட்டளைகளைப் போதிக்கின்றவர்கள் யாராயிருக்கின்றனர்? [*தீத்து 1:13*ஐ வாசிக்கவும்.] *மனிதருடைய கட்டளைகளைப் போதிக்கின்றவர்கள் எதிலிருந்து விலகுகின்றவர்களாய் உள்ளனர்?* [கோடிட்ட இடத்தில் ''சத்தியத்தில்'' என்று எழுதி நிரப்பவும்.] இயேசு கிறிஸ்துவில்தான் சத்தியம் உள்ளது. மனிதருடைய கட்டளைகளை உபதேசிப்பவர்கள் சத்தியத்திலிருந்து விலகியவர்களாய் இருக்கின்றார்கள், மற்றும் இக்காரணத்தினால் அவர்கள் இயேசுவைவிட்டு விலகியவர்களாக இருக்கின்றார்கள்.

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? மனிதரிடத்திலிருந்து தோன்றக் கூடிய ஆராதனைச் செயல்பாடுகளைத் தேவன் புறக்கணிக்கின்றார் என்று நாம் கற்றுள்ளோம். மனிதருடைய பாரம்பரியங்களாய் மட்டுமே உள்ள விஷயங்களை ஆராதனையில் பயன்படுத்துவதென்பது தேவனுடைய பார்வையில் பயனற்றவையாய் உள்ளன. நாம் பின்பற்ற, இயேசு கிறிஸ்துவின் மூலம் உண்டான சத்தியம் அல்லது மனிதர்களின் பாரம்பரியங்கள் என்ற இரண்டு தெரிவுகளை மட்டும் கொண்டவர்களாக இருக்கின்றோம். இயேசுவின் மூலம் வந்துள்ளவற்றை தேவன் ஏற்றுக் கொள்கின்றார், ஆனால் மனிதர் மூலம் உண்டானவற்றை அவர் புறக்கணிக்கின்றார்.

III. *கிறிஸ்துவிடமிருந்தா அல்லது மனிதர்களிடமிருந்தா*

ஒரு செயல்முறையானது தேவனுக்குப் பிரியமானதா என்று முடிவு செய்வதற்கு, நாம் அதன் தோற்றத்தைத் தீர்மானம் செய்ய வேண்டும். நாம் செய்யும் செயல்முறைகள், இயேசு, அப்போஸ்தலர் மற்றும் தீர்க்கதரிசிகளின் போதனையில், அதாவது புதிய ஏற்பாட்டில் காணப்பட முடியுமென்றால், தேவன் அதை ஏற்றுக் கொள்வார் என்று நாம் அறிகின்றோம்,

GTG LIBRARY- BANGALORE

ஆனால் அங்கு நாம் அதைக் காண முடியாதென்றால், அது மனிதரிலிருந்து தோன்றுகின்றது மற்றும் அது புறக்கணிக்கப்பட வேண்டும் என்று நாம் அறிகின்றோம்.

நாம் என்ன செய்ய வேண்டும் என்று லூக். 18:1 மற்றும் 1 தீமோ. 2:5 ஆகியவற்றில் கூறப்படுகின்றது? ["கிறிஸ்துவிடமிருந்து" என்பதன் கீழ் உள்ள முதல் கோடிட்ட இடத்தில் "ஜெபித்தல்" என்று எழுதி நிரப்பவும்.] நாம் தேவனிடத்தில் ஜெபித்தால், இது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்குமா? இயேசு நமது மத்தியஸ்தர் என்ற வகையில் அவர் மூலமாய் ஜெபித்தால் இது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்குமா? இது புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டுள்ள காரணத்தினால் இது ஏற்றுக் கொள்ளப்படக் கூடியது என்று நாம் அறிகின்றோம். பழைய ஏற்பாட்டில் அவர்கள் இயேசுவின் மூலமாக ஜெபித்ததில்லை. பழைய ஏற்பாட்டில் அவர்கள் செய்தவற்றை நாம் செய்ய வேண்டுமா?

ஜெபங்களுடன் தொடர்புடைய சில மனித பாரம்பரியங்கள் யாவை? சிலர் மரியாள் மூலமாக ஜெபிக்கின்றனர்? சிலர் தூபவர்க்கத்தைப் பயன்படுத்துகின்றனர்? சிலர் புனிதர்களிடம் ஜெபிக்கின்றனர்? சிலர் மணிகளை(ஜெப மாலையை)ப் பயன்படுத்துகின்றனர்? [''மனிதர்களிடமிருந்து'' என்பதன் கீழ் உள்ள முதல் கோடிட்ட இடத்தில் மனிதர்களிடமிருந்து வந்த இவைகளை எழுதி நிரப்பவும்.] இந்த நடைமுறைகளைத் தேவன் ஏற்றுக் கொள்கின்றாரா? இந்த நடைமுறைகள் தேவனிடமிருந்து வந்தனவா அல்லது மனிதரிடமிருந்து வந்தனவா? பழைய ஏற்பாட்டில் அவர்கள் தூபவர்க்கத்தைப் பயன்படுத்தினார்களா? அவர்கள் செய்ததுபோல நாமும் நமது ஜெபங்களுடன் தூபவர்க்கத்தைப் பயன்படுத்த வேண்டுமா?

இவைகளை நாம் நடைமுறைப்படுத்தப் போகிறோமென்றால், இவைகள் எங்கு போதிக்கப்பட்டிருக்க நாம் காண வேண்டும்? இவை புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டிருக்க நாம் காண வேண்டும். இவை புதிய ஏற்பாட்டில் காணப்பட முடியாதென்றால், இவை மனிதரின் பாரம் பரியங்களாக, பயனற்றவைகளாக உள்ளன, மற்றும் இவை தவிர்க்கப்பட வேண்டும்.

ஆராதனையில் இன்னும் என்ன பயன்படுத்தப்பட வேண்டும்? [லூக். 6:38; 1 கொரி. 16:2 ஆகியவற்றை வாசிக்கவும்.] நாம் என்ன செய்யும்படி இயேசு கட்டளையிட்டுள்ளார்? ["கிறிஸ்துவிடமிருந்து" என்பதன் கீழ் உள்ள இரண்டாவது கோடிட்ட இடத்தில் "கொடுத்தல்" என்று எழுதி நிரப்பவும்.] இது இயேசுவிடமிருந்து வந்ததா அல்லது மனிதர்களிடமிருந்து வந்ததா? இது இயேசுவிடமிருந்து வந்ததென்றால், இது ஏற்றுக் கொள்ளப் படக் கூடியதாக உள்ளது, ஆனால் இது மனிதர்களிடமிருந்து வந்த தென்றால், இது தவிர்க்கப்பட வேண்டியதாக உள்ளது. கொடுத்தல் என்பது இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் ஆகியோரிடமிருந்து வந்தது என்பதால் இது தேவனுக்கு ஏற்புடையது என்று நாம் அறிகின்றோம்.

மனிதர்கள் தங்கள் "சபைகளை" ஆதரித்துத் தாங்குவதற்காகப் பணம் சம்பாதிக்க அறிமுகப்படுத்தியவை யாவை? ''மனிதர்களிடமிருந்து''

GTG LIBRARY- BANGALORE

என்பதற்குக் கீழ் உள்ள இரண்டாவது கோடிட்ட இடத்தில் "ரொட்டி விற்பனை, சீட்டுக் குலுக்கல், பல பொருட்கள் விற்பனை, தசம பாகம் முதலியன" என்று எழுதி நிரப்பவும்.] இவைகள் கிறிஸ்துவிடமிருந்து வந்தனவா அல்லது மனிதர்களிடமிருந்து வந்தனவா? இவைகள் கிறிஸ்துவிடமிருந்து வந்திருந்தால் அவரது போதனையில் இவைகள் காணப்பட முடியும், ஆனால் அவ்வாறு இல்லாதிருந்தால், இவைகள் மனிதரிடமிருந்து வந்தவையாகவும், புறக்கணிக்கப்பட வேண்டியவை யாகவும் உள்ளன. இந்த நடைமுறைகளை இயேசு அல்லது அப்போஸ்தலர்கள் ஆகியோரின் போதனையில் நாம் காண்பது இல்லை. தசம பாகம் கொடுப்பதென்பது பழைய ஏற்பாட்டில் கட்டளையிடப் பட்டுள்ளதா? தசம பாகம் கொடுப்பதென்பது பழைய ஏற்பாட்டில் கட்டளையிடப்பட்டுள்ளதா? தசம பாகம் கொடுத்தல் என்பது இயேசுவாலும் அப்போஸ்தலர்களாலும் போதிக்கப்பட்டுள்ளதா? தசம பாகம் கொடுத்தல் என்பது இன்றைய நாட்களில் நமக்கானது என்றால், அது இயேசுவால் கட்டளையிடப்பட்டிருக்கப்பட வேண்டும். அது இயேசுவின் கட்டளையாய் இருந்ததென்றால், அது அவருடைய அல்லது அப்போஸ் தலர்களுடைய போதனையில் காணப்பட வேண்டும். அது இயேசுவின் போதனையில் காணப்படாததால், அது மனிதர்களின் கட்டளை என்ற வகையில் புறக்கணிக்கப்பட வேண்டியதாக உள்ளது.

கிறிஸ்துவின் சபையில் இன்னும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது வேறு என்ன உள்ளது? [1 கொரி. 11:23-26; அப். 20:7 ஆகியவற்றை வாசிக்கவும்.] எதில் பங்கேற்கும்படி இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளையிட்டார்? ["கிறிஸ்துவிடமிருந்து" என்பதற்குக் கீழ் உள்ள மூன்றாவது கோடிட்ட இடத்தில் "கர்த்தருடைய பந்தி" என்று எழுதி நிரப்பவும்.] கர்த்தருடைய பந்தி என்பது கிறிஸ்துவிடமிருந்து வந்துள்ளதா அல்லது மனிதர்களிடமிருந்து வந்துள்ளதா? அது கிறிஸ்துவிடமிருந்து வந்துள்ளதென்றால், அதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றோம், ஆனால் அது மனிதர்களிடமிருந்து வந்ததென்றால், நாம் அதைப் புறக்கணிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். இயேசு வருகின்ற வரைக்கும் நாம் அப்பத்தை உண்டு, திராட்சை இரசத்தை அருந்த வேண்டியவர்களாய் இருக்கின்றோம், ஏனெனில் இயேசுவே தம்மை நாம் இவ்விதமாய் நினைவுகூர வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

ஓய்வு நாளான சனிக்கிழமையன்றல்ல ஆனால், வாரத்தின் முதல் நாளிலேயே கிறிஸ்தவர்கள் ஒன்று கூடினார்கள் (மத். 28:1; மாற். 16:1; லூக். 22:1; யோவா. 20:1). கிறிஸ்தவர்கள், அப்போஸ்தலர்களின் வழி நடத்துதலின் கீழ் இருந்தனர், எனவே கர்த்தருடைய பந்தியை வாரத்தின் முதல் நாளில் ஆசரித்தல் என்பது இயேசுவிடமிருந்து வந்ததாக இருக்க வேண்டும். கர்த்தருடைய பந்தியில் பங்கேற்பதினால் இயேசுவை நினைவு கூருவதற்காக வாரத்தின் முதல் நாளில் நாம் கூடிவரும் பொழுது நாம் மனிதர்களிடமிருந்து வந்ததை அல்ல ஆனால் இயேசுவிடமிருந்து வந்த நடைமுறையைச் செயல்படுத்துகின்றோம்.

கர்த்தருடைய பந்திக்கு மனிதர்கள் செய்துள்ளது என்ன? சிலர் திராட்ச

GTG LIBRARY- BANGALORE

இரசத்தை மக்களுக்குத் தராமல் வைத்துக் கொண்டுள்ளனர். சிலர் திராட்ச இரசத்திற்குப் பதிலாகத் தண்ணீரைப் பயன்படுத்துகின்றனர். சிலர் கர்த்தருடைய பந்தியை ஆண்டிற்கொருமுறையோ, காலாண்டிற்கொரு முறையோ, மாதத்திற்கு ஒருமுறையோ அல்லது வாரத்தின் எந்த நாளிலுமோ கடைப்பிடிக்கின்றனர். ["மனிதர்களிடமிருந்து" என்பதின் கீழ் உள்ள மூன்றாவது கோடிட்ட இடத்தில் "தண்ணீர், ஒரு பொருள் (மட்டும்), மற்றும் ஆண்டிற்கொருமுறை'' என்று எழுதி நிரப்பவும்.] இந்த நடைமுறைகள் கிறிஸ்துவிடமிருந்து வந்துள்ளனவா அல்லது மனிதர் களிடமிருந்து வந்துள்ளனவா? இவைகள் கிறிஸ்துவிடமிருந்து வந்துள்ளன என்றால், இவைகள் இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் ஆகியோரின் போதனையில் காணப்பட வேண்டும். அங்கு இவைகள் காணப்பட வில்லையென்றால், இவைகள் மனிதர்களிடமிருந்து வந்தவையாகவும், புறக்கணிக்கப்பட வேண்டியவைகளாகவும் உள்ளன. இவைகள் இயேசுவின் போதனையில் காணப்படுவதில்லை, எனவே இவைகள் மனிதர்களின் போதனை என்ற வகையில் புறக்கணிக்கப்பட வேண்டும்.

பழைய உடன்படிக்கையின் கீழ் இருந்த மக்கள் எகிப்திய அடிமைத் தளையிலிருந்து தங்கள் விடுதலையை ஓய்வுநாளில் (அதாவது, சனிக்கிழமை யில்) நினைவுகூர்ந்தார்கள். ஓய்வுநாளை கிறிஸ்தவர்கள் இவ்வகையில் கடைப்பிடிக்க வேண்டுமா? இப்படிப்பட்ட ஒரு நடைமுறையானது இயேசுவின் உபதேசத்தில் காணப்படுவதில்லை, எனவே இது நடைமுறைப் படுத்தப்படலாகாது.

ஆதி சபையார் ஆராதனையில் இன்னும் வேறென்ன செய்தார்கள்? [எபே. 5:19ஐ வாசிக்கவும்.] அவர்கள் என்ன செய்தார்கள்? ["கிறிஸ்துவிட மிருந்து" என்பதன் கீழ் உள்ள நான்காவது கோடிட்ட இடத்தில் "பாடுதல்" என்று எழுதி நிரப்பவும்.] கிறிஸ்தவர்களுக்குப் பாடும்படி அறிவுறுத்தப் பட்டது.

தேவனுடைய ஆராதனையில் பாடுதலுக்கும் அப்பால் அதனுடன் மனிதர்கள் உள்ளடக்கியவை யாவை? ["மனிதர்களிடமிருந்து" என்பதன் கீழ் உள்ள நான்காவது கோடிட்ட இடத்தில் "பியானோ, அர்மோனியம், கிதார் முதலியன'' என்று எழுதி நிரப்பவும்.] ஆராதனையில் இவைகள் பயன்படுத்தப்பட வேண்டியவைகளாய் இருந்தால், இவைகள் இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் ஆகியோரின் போதனையில் காணப்பட வேண்டும். இவைகள் இயேசுவின் போதனையில் காண முடியாது, எனவே இவைகள் மனிதர்களிடமிருந்து வந்தவையாய் இருக்க வேண்டும், இந்தக் காரணத்தினால் இவைகள் புறக்கணிக்கப்பட வேண்டும்.

பழைய ஏற்பாட்டு ஆராதனையில் இசைக் கருவிகள் பயன்படுத்தப் பட்டனவா? ஆலய ஆராதனையில் அவைகள் ஒரு அங்கமாயிருந்தன. பழைய ஏற்பாட்டு ஆராதனையில் பயன்படுத்தப்பட்டவற்றை கிறிஸ்தவர்கள் பயன்படுத்த வேண்டுமா? இயேசுவால் கட்டளையிடப் பட்டவற்றையே கிறிஸ்தவர்கள் பயன்படுத்த வேண்டும். எனவே அவர்கள் தேவனுடைய ஆராதனையில் இசைக் கருவிகளைப் பயன்படுத்துவதற்கு முன்பாக, அவைகளின் பயன்பாட்டிற்கான அறிவுறுத்துதலை இயேசுவின்

GTG LIBRARY- BANGALORE

போதனையில் காண வேண்டும். அவைகள் இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் ஆகியோரின் போதனையில் காணப்படுவதில்லை, எனவே அவைகள் மனிதர்களிடமிருந்து வந்தவை என்ற வகையில் புறக்கணிக்கப்பட வேண்டும். பாடுதல் என்பது மட்டுமே புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டு மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரே வகையான இசையாய் இருக்கின்றது, எனவே இது ஒன்று மட்டுமே இன்றைய நாட்களிலும் பயன்படுத்த வேண்டிய ஒரே இசையாக இருத்தல் வேண்டும்.

புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்ட இன்னொரு நடைமுறை என்ன? அவர்கள் என்ன செய்யும்படி அறிவுறுத்தப்பட்டார்கள்? [2 தீமோ. 2:2ஐ வாசிக்கவும்.] அவர்கள் என்ன செய்ய வேண்டியவர்களாய் இருந்தார்கள்? ["கிறிஸ்துவிடமிருந்து" என்பதன் கீழுள்ள ஐந்தாவது கோடிட்ட இடத்தில் "போதித்தல்" என்று எழுதி நிரப்பவும்.] போதித்தல் மூலம் அவருடைய மக்களை ஈர்த்து அறிவுறுத்துதல் என்பது தேவனுடைய வழியாக உள்ளது.

மனிதர்கள் என்ன செய்துள்ளனர்? ["மனிதர்களிடமிருந்து" என்பதன் கீழ் உள்ள ஐந்தாவது கோடிட்ட இடத்தில் "கைக் கூலி, பலவந்தம் மற்றும் பொழுதுபோக்கு" என்று எழுதி நிரப்பவும்.] இயேசுவின் போதனைகளை மக்கள் பின்பற்றும்படி செய்வதற்கு இப்படிப்பட்ட அணுகுமுறைகள் இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் ஆகியோரின் போதனைக்கு அந்நியமாய் உள்ளன. அவர்கள் போதித்தவற்றில் இவைகள் காணப்படாததால், இப்படிப்பட்ட நடைமுறைகள் மனிதர்களிடமிருந்து வந்ததாக இருக்க வேண்டும் என்பது தெளிவு, எனவே இவை தவிர்க்கப்பட வேண்டும். கடந்த கால வரலாற்றில் தேவபக்தியற்றவர்களை இயேசுவைப் பின்பற்றச் செய்வதற்கு மனிதர்கள், அந்த மக்களுக்குப் பணம் கொடுத்தல் அல்லது மற்ற வகையிலான கைக் கூலி கொடுத்தல் அல்லது படைபலத்தைப் பயன்படுத்துதல் போன்ற செயல்களைச் செய்துள்ளனர். அதிக வருகையை பெறுவதற்கு மனிதர்கள் நாடிய இன்னொரு வழி பொழுதுபோக்கு என்பதாகும். போதிக்கப்பட்டவர்களே இயேசுவிடம் வந்து, அவரைப் பின்பற்றத் தொடர்ந்தனர் (யோவா. 6:45). இது இயேசுவிடமிருந்து வருகின்றது.

[பாடத் தாளின் பின்புறத்தில், வட்டத்தினுள், ''ஜெபித்தல்,'' "கொடுத்தல்," "கர்த்தருடைய பந்தி," "பாடுதல்," "போதித்தல்" என்று எழுதவும். வட்டத்தின் வெளிப்புறத்தைச் சுற்றிலும் ''மனிதர்களின் பாரம்பரியங்கள்" என்பதன் கீழ், "மரியாளிடம் ஜெபித்தல்," "தூபவர்க்கம்," "சீட்டுக் குலுக்கல்கள்," "அப்பம் மட்டும்," "பியனோ," "அர்மோனியம்," ''கைக் கூலி,'' ''பலவந்தம்'' என்பவற்றை எழுதவும். (பக்கம் 226ஐப் பார்க்கவும்)]

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? இயேசுவால் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியத்தைப் பின்பற்ற நாடுகின்றவர்கள் இயேசுவால் போதிக்கப்பட்டவற்றை மட்டுமே பின்பற்றுகின்றனர் என்று நாம் கற்றுக் கொண்டுள்ளோம். இவர்கள், மனிதர்களிடமிருந்து தோன்றியவைகளைப் பயன்படுத்துவதன் மூலமாகத் தேவனை ஆராதிக்க நாடுவதில்லை. இவர்கள் கொடுத்தல், ஜெபித்தல், கர்த்தருடைய பந்தியில்

GTG LIBRARY- BANGALORE

பங்கு பெறுதல், பாடுதல் மற்றும் போதித்தல் ஆகியவற்றில் ஈடுபடுவார்கள். இயேசுவில் தொடக்கம் பெறாத ஏதொன்றையும் இவர்கள் (ஆராதனையில்) உள்ளடக்குவதில்லை.

IV. கூட்டுதல் அல்லது எடுத்துப் போடுதல்

நாம் (ஆராதனையில்) பயன்படுத்தும்படி இயேசு நமக்குக் கூறியுள்ள வற்றைப் பயன்படுத்துவதினால் தேவனை ஆராதிக்க நாடுகின்றீர்களா? கிறிஸ்தவ ஆராதனையில் மனிதர்களால் அறிமுகப் படுத்தியுள்ளவற்றை நீங்கள் பயன்படுத்துகின்றீர்களா?

1. நாம் எவற்றைச் செய்யக் கூடாது? [வெளி. 22:18, 19ஐ வாசிக்கவும்.] *எதைச் செய்பவர்கள் மீது இயேசு சாபம் கூறினார்?* [கோடிட்ட இடங்களில் "கூட்டவோ" மற்றும் "எடுத்துப் போடவோ" என்று எழுதி நிரப்பவும்.] இக்கூற்றானது வெளிப்படுத்தின விசேஷம் என்ற புத்தகம் பற்றி ஏற்படுத்தப் பட்டதாக உள்ளது. இதை ஏற்றுக் கொள்ள வேண்டும். வேதாகமத்தின் மற்ற புத்தகங்களை விட வெளி. புத்தகத்தைப் பற்றி தேவன் அதிகமாய் எண்ணுகின்றாரா அல்லவா என்பதே இங்கு கேள்வியாக உள்ளது. வெளி. புத்தகத்தை நாம் மாற்றக் கூடாது ஆனால் வேதாகமத்தின் மற்ற எந்தப் புத்தகத்தையும் மாற்றியமைப்பது சரியானதுதான் என்று தேவன் விரும்புகின்றதில்லையல்லவா? வேதாகமத்தின் மற்ற எல்லாப் புத்தகங்களையும் தேவன் இவ்விதமாகவே கண்ணோக்குகின்றார் என்பது உறுதி. இப்படிப்பட்ட (வெளி. புத்தகத்தை மட்டும் மாற்றியமைக்கக் கூடாது என்ற) கருத்தாய்வானது வேதாகமத்தின் எஞ்சிய உபதேசங் களுடன் சீர் பொருந்துவதாக உள்ளது (உபா. 4:2; 12:32; நீதி. 30:6).

2. தேவனோடும் இயேசுவோடும் உள்ள உறவைத் துண்டித்துக் கொள்பவர் யார்? [2 யோவா. 9ஐ வாசிக்கவும்.] *இயேசுவோடும் தேவனோடும் உள்ள நம் உறவைப் பாதிப்பது எது?* [கோடிட்ட இடங்களில் "கிறிஸ்துவின்," "மீறி நடக்கிற" மற்றும் "தேவனை" என்று எழுதி நிரப்பவும்.] "மீறி நடத்தல்" என்றால், "அப்பால் செல்லுதல், எல்லைகளுக்குப் புறம்பே செல்லுதல்" என்று அர்த்தப்படுகின்றது. இதைச் செய்பவர்கள் தேவனை உடையவர்கள் அல்ல.

இந்தப் பாடத் தாளின் பின்புறம் உள்ள வரைபடத்தைக் கவனியுங்கள். சகல சத்தியமும் இயேசுவால் தரப்பட்டுள்ளது. அவருடைய உபதேசத் திற்குப் புறம்பே, வட்டத்திற்கு வெளியே [வட்டத்தின் உள்ளிருந்து வெளிப்புறமாக அம்புக் குறி(கள்) வரையவும்.] செல்லுகின்றவர்கள் இயேசுவின் போதனையை விட்டு மனிதர்களின் போதனைக்குள் செல்லு பவர்களாய் உள்ளனர். இதைச் செய்பவர்கள் தேவனை உடையவர்கள் அல்ல. இயேசுவின் போதனையில் நிலைத்திருப்பவர்களே பிதாவையும் குமாரனையும் உடையவர்களாய் இருக்கின்றனர்.

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? நாம் இயேசுவின் போதனையில் நிலைத்திருக்க வேண்டும் என்று கற்றுக் கொண்டுள்ளோம். நாம், அவர் போதித்தவற்றுடன் ஒன்றையும் கூட்டவோ அல்லது அவர் போதித்தவற்றிலிருந்து ஒன்றையும் எடுத்துப் போடவோ கூடாது.

GTG LIBRARY- BANGALORE

இப்பொழுது பகுதி IIIக்குத் திரும்புங்கள், "கிறிஸ்துவிடமிருந்து" மற்றும் "மனிதர்களிடமிருந்து" என்பவற்றின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்களைப் பற்றிக் கேள்விகளைக் கேளுங்கள். ஒருவர் இயேசுவின் மூலமாக ஜெபித்தால், தம் வரவுக்குத் தக்கவாறு கொடுத்தால், வாரத்தின் முதல் நாளில் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்றால், அவர் பாடினால், மற்றும் அவர் போதித்தால், அவர் இயேசு போதித்தவற்றுடன் கூட்டுகிறவராய் இருக்கின்றாரா? இயேசு போதித்தவற்றிலிருந்து எடுத்துப் போடுகின்றவராய் இருக்கின்றாரா?

ஒருவர் மரியாளிடம் ஜெபித்தால், அவர் கூட்டுகின்றாரா? அவர் எடுத்துப் போடுகின்றாரா? அவர் கூட்டுகின்றார், மற்றும் அவர் இயேசுவின் மூலமாய் ஜெபிக்காதிருந்தால் அவர் எடுத்துப் போடுகின்றார். ஒருவர் தம் ஜெபத்துடன் தூபவர்க்கத்தைப் பயன்படுத்தினால், அவர் கூட்டுகின்றார்.

ஒருவர் சீட்டுக் குலுக்கல்கள், ரொட்டி விற்பனை, மற்றும் பல்பொருட்கள் விற்பனை ஆகியவற்றை (சபை தொடர்பாக) மேற் கொண்டால் அவர் கூட்டுகின்றாரா? அல்லது எடுத்துப் போடுகின்றாரா? இவற்றைச் செய்வதினால் அவர் கூட்டுகின்றார், மற்றும் அவர் இவற்றைப் பயன்படுத்திக் கொண்டு, (காணிக்கை) கொடுக்காதிருந்தால், கொடுக்கா திருப்பதினால் அவர் எடுத்துப் போடுபவராய் இருக்கின்றார்.

ஒருவர், கர்த்தருடைய பந்தியில் அப்பத்தை மட்டும் பயன் படுத்தினால், அவர் எடுத்துப் போட்டுள்ளாரா? அவர் திராட்ச ரசத்திற்குப் பதிலாக தண்ணீரைப் பயன்படுத்தினால், அவர் எடுத்துப் போட்டு மற்றும் கூட்டுகின்ற செயலையும் செய்துள்ளார். வாரந்தோறும் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்காதது என்பது எழுதப்பட்டவற்றினின்று எடுத்துப் போடுவதாக உள்ளது. கர்த்தருடைய பந்தியின் அப்பத்தின் மீது ஒருவர் (திராட்ச ரசத்திற்குப் பதிலாக) ஆப்பிள் சாற்றையோ அல்லது வெண்ணெய் மற்றும் ஜெல்லி ஆகியவற்றையோ தடவுவாரென்றால் அவர் வசனத்தில் போதிக்கப்பட்டவற்றுடன் கூட்டுபவராகவும், வசனத்தை எடுத்துப் போடுபவராகவும் இருக்கிறார். இப்படிப்பட்டவைகள் புறக்கணிக்கப்பட வேண்டும்.

ஒருவர் (ஆராதனையில்) இசைக் கருவிகளைப் பயன்படுத்தினால், அவர் கர்த்தருடைய ஆராதனையுடன் ஒன்றைக் கூட்டுகின்றார். பாடுதலுக்குப் பதிலாக இசைக் கருவி பயன்படுத்தப்பட்டதென்றால் அவர் கூட்டுபவராகவும், எடுத்துப் போடுகின்றவராகவும் இருக்கின்றார்.

போதித்தலுக்குப் பதிலாக, கைக்கூலிகள், பலவந்தம் அல்லது பொழுதுபோக்கு ஆகியவை பயன்படுத்தப்பட்டால், ஒருவர் கூட்டுபவ ராகவும் எடுத்துப் போடுபவராகவும் இருக்கின்றார். ஒருவர் இவைகளைச் செய்து கொண்டு போதிப்பார் என்றால், அவர் கூட்டுகின்றார்.

இயேசு சபைக்குத் தலைவராக இருக்கின்றார். ஆராதனை யாவும் புதிய ஏற்பாட்டில் அவருடைய வசனத்தில் போதிக்கப்பட்டவற்றின்படியாகவே இருக்க வேண்டும்.

GTG LIBRARY- BANGALORE

தொகுப்புரை

இந்தப் பாடத்தில் நாம், தேவனை ஆராதிக்க எவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்று சிந்திக்கையில் நம்மை வழி நடத்த வேண்டிய கொள்கைகளை ஆராய்ந்தறிந்தோம். தேவனுக்கான ஆராதனையில் நாம் தேவனுக்குப் பிரியமானவற்றைச் செய்வதில் நிச்சயமாயிருக்க வேண்டும்.

I. *ஆராதனையில் தேவன் விரும்புகின்றவற்றை நீங்கள் பயன்படுத்துகின்றீர்களா?* ஆவியோடும் உண்மையோடும் உள்ள ஆராதனையைத் தேவன் விரும்புகின்றார். சகல சத்தியமும் இயேசுவின் மூலமாக உண்டானதாகவும், புதிய ஏற்பாட்டின் அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் மூலமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இருக்கின்றது. இயேசு கட்டளையிட்ட யாவற்றையும் நாம் கடைப்பிடிக்க வேண்டியவர்களாயிருக்கின்றோம்.

II. *தேவன் புறக்கணிக்கின்றவற்றை நீங்கள் பயன்படுத்துகின்றீர்களா?* மனிதர்களின் பாரம்பரியங்களையும் கட்டளைகளையும் தேவன் புறக்கணிக்கின்றார். இயேசுவால் போதிக்கப்பட்டுள்ளவற்றை மட்டுமே அவர் ஏற்றுக் கொள்ளுகின்றார். மனிதர்களுடைய போதனையின்படி நாம் தேவனை ஆராதிக்க நாடினால், நமது ஆராதனை பயன் அற்றதாயிருக்கும்.

III. *நீங்கள் கிறிஸ்துவிடமிருந்து வந்தவற்றையா அல்லது மனிதர்களிடமிருந்து வந்தவற்றையா, எவைகளைப் பயன்படுத்துகின்றீர்கள்?* நாம் ஜெபிக்க, கொடுக்க, ஒவ்வொரு வாரமும் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்க, பாட மற்றும் போதிக்க வேண்டும் என்று இயேசு விரும்புகின்றார் என்பதாக நாம் கற்றோம். இவைகளுடன் தொடர்புடையவைகளென்று பல விஷயங்களை மனிதர்கள் அறிமுகப் படுத்தியிருக்கின்றனர் மற்றும் நாம் செய்யும்படி இயேசு கூறியவற்றை அவர்கள் மாற்றியிருக்கின்றனர்.

IV. *நீங்கள் கூட்டியிருக்கின்றீர்களா அல்லது எடுத்துப் போட்டிருக்கின்றீர்களா?* நாம் எதையும் கூட்டவோ எடுத்துப் போடவோ கூடாது என்று வேதாகமம் போதிக்கின்றது. இயேசுவால் கட்டளையிடப் பட்டவற்றுடன் மனிதர்கள் சிலவற்றைக் கூட்டியுள்ளனர் அல்லது அதிலிருந்து சிலவற்றை எடுத்துப் போட்டுள்ளனர். நாம் தேவனையும் கிறிஸ்துவையும் உடையவர்களாய் இருப்பதற்கு, நாம் மனிதர்கள் ஏற்படுத்திய இந்த மாற்றங்களைப் பின்பற்றாதவர்களாய் இருக்க வேண்டும்.

இயேசு ஒருவரே சட்டம் கொடுப்பவராய் இருக்கின்றார் (யாக். 4:12). செயல்முறைகளை நிலைநாட்டுவதற்கும் சட்டங்களை ஏற்படுத்துவதற்கும் மனிதர்களுக்கு உரிமையில்லை. இயேசு மட்டுமே அந்த உரிமையைக் கொண்டுள்ளார்.

அடுத்த பாடத்திற்கான ஒரு நேரத்தை ஏற்பாடு செய்யுங்கள்

GTG LIBRARY- BANGALORE

நேரடித் தொடர்பின் மதிப்பு

பல ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு இளைஞன் தனது பெண் தோழி தன்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று தீர்மானம் செய்தான். நாணம் என்ற தன்மை கொண்ட அவன் ஒவ்வொரு நாளும் அவளுக்குக் கடிதம் மூலமாக தனது அன்பான ஏற்பாடு பற்றி எழுதிக் கொண்டிருந்தான். அந்த அன்புக் குறிப்பானது ஒவ்வொரு நாளும் தவறாமல் அஞ்சலில் அனுப்பப்பட்டது. கடைசியில் மூன்று வாரங்கள் கழித்து அவனது பெண் தோழி திருமணம் முடித்துக் கொண்டாள்; ஆனால் அவள் கடிதம் கொண்டு வந்த அந்த அஞ்சலகரைத் திருமணம் செய்து கொண்டாள்!

இன்னொருவரின் கனவுக்காக செய்த தியாகங்கள்:

ஆல்பிரெக்ட் டியூரெர் என்பவர் ஒரு ஓவியராகும்படி கனவு கண்டார். அவரிடம் பணம் இல்லாதிருந்தது. அவர் ஜெர்மனியில் உள்ள நியூரெம்பர்க் நகருக்குச் சென்று, அங்கிருந்த ஒரு முதிய மனிதருடன் வாழ்ந்தார், அவரும் ஏழையாய் இருந்தார். ஒருவர் வேலை செய்வதென்றும் ஒருவர் படிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. அம்முதியவர், தாம் கடினமாய் உழைப்பதென்றும், டியூரெர் பள்ளி சென்று படிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். பிற்பாடு அம்முதியவர் தமது கடின உழைப்பானது தனது கரங்களை இனி ஒருக்காலும் வரைதல் செய்ய முடியாதபடி இறுக்கி விட்டது மற்றும் கரணைகளை ஏற்படுத்தி விட்டது என்று கண்டறிந்தார். நடந்ததை அறிந்த டியூரெர் மிகவும் வருத்தமுற்றார். ஒரு நாள் அவர் அறைக்குள் நுழைகையில் தமது நண்பர் தம் கரங்களைக் குவித்து ஜெபித்துக் கொண்டிருக்கக் கண்டார். அவரைப் பாராட்டும் வகையில் இவர் அந்தக் குவிந்த கரங்களை படமாய் வரைந்தார். அந்தக் கரங்கள் சுயநலமற்ற சேவை மற்றும் நற்குணப் பண்பு ஆகியவற்றின் அடையாளமாய் நிலைத்திருக்கின்றன.

GTG LIBRARY- BANGALORE

உங்களின் நித்திய அடைவிடம் எதுவாயிருக்கும்?

I. *பாவம் என்றால் என்ன?*

_______________________ *ரோமர் 14:23*
_______________________ *1 யோவா. 3:4*
_______________________ *1 யோவா. 5:17*
_______________________ *யாக். 4:17*

II. *நீங்கள் ஒரு பாவியாய் இருக்கின்றீர்களா?*

1. _______________ பாவஞ் செய்து ... ரோமர் 3:23
2. நீதிமான் _______________ இல்லை. ரோமர் 3:10
3. நமக்குப் பாவமில்லை என்போமானால் நம்மை _______________, _______________, _______________ நமக்குள் இராது. 1 யோவா. 1:8

III. பாவிகள் மற்றும் இரட்சிக்கப்பட்டவர்களின் அடைவிடம் எதுவாயிருக்கும்?

பாவி	இரட்சிக்கப்பட்டவர்
மத். 25:41	*மத். 25:46*
வெளி. 14:11	*வெளி. 14:13*
மத். 25:30	*வெளி. 21:4*
ரோமர் 2:9	*மத். 25:23*
யோவா. 8:21	*யோவா. 14:3*
மத். 10:28	*1 பேது. 1:3, 4*

VI. *நீங்கள் செய்கின்ற அல்லது செய்யாது விடுகின்ற எதைப் பொறுத்து உங்களின் நித்திய அடைவிடம் தீர்மானிக்கப்படும்?*

ரோமர் 2:8	*மத். 7:21*
2 தெச. 1:8	*எபி. 5:9*

Copyright 1992 - Gospel Light Pub. Co. Delight, AR 71940

GTG LIBRARY- BANGALORE



GTG LIBRARY- BANGALORE

பாடத் தாளை எடுத்துரைத்தல்:

"உங்களின் நித்திய அடைவிடம் எதுவாயிருக்கும்?"

"உங்களின் நித்திய அடைவிடம் எதுவாயிருக்கும்?" என்ற இந்தப் பாடத் தாளானது ஏறக்குறைய இந்நூலில் உள்ள எந்த ஒரு பாடத் தாளுக்குப் பிறகும் பயன்படுத்தப்பட முடியும். ஒருவேளை இந்தப் பாடத்தாளை, "இரட்சிப்பு" என்ற பாடத் தாளுக்குப் (பாடம் 4) பிறகு எடுத்துரைப்பது மிகச் சிறந்ததாக இருக்கும். மாணவர் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிதல் பற்றிச் சிந்திக்க வைக்க முயற்சி செய்கையில் ஆசிரியர் இந்தப் பாடத் தாளைப் பயன்படுத்த விரும்புவார்.

நோக்கம்

கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமை ஆகியவற்றின் விளைவுகளை எடுத்துரைத்து, கற்பவர் இயேசுவுக்கு அளிக்கும் பதில் செயலானது அவரின் நித்திய அடைவிடத்தைப் பற்றிய விஷயத்தில் விளைவுண்டாக்கும் என்று உணர உதவுவதே "அடைவிடம்" என்ற பாடத் தாளின் நோக்கமாக உள்ளது.

பாடச் சுருக்கம்

இந்தப் பாடமானது, பாவம் என்றால் என்ன என்றும், எல்லாரும் பாவம் செய்திருக்கின்றோம் என்றும் காண்பிக்கின்றது. மன்னிக்கப்படாத பாவியின் அடைவிடமானது, மன்னிக்கப்பட்ட, இரட்சிக்கப்பட்ட பாவியின் அடைவிடத்திலிருந்து மாறுபடுகின்றது. நாம் தண்டிக்கப் படுகின்றோமா அல்லது வெகுமதி பெறுகின்றோமா என்பது நாம் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிறோமா அல்லது கீழ்ப்படிவதில்லையா என்பதைப் பொறுத்ததாக உள்ளது.

அறிமுகம்

முந்திய பாடங்களில் நாம், பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் ஆதாரமூலம் பற்றியும், பாவத்திலிருந்து மனிதரை இரட்சிப்பதற்கான தேவனுடைய திட்டம் பற்றியும், மற்றும் இயேசுவே இரட்சிப்பின் வழி என்பது பற்றியும் படித்தோம். இயேசுவுக்குக் கீழ்ப்படிவதை நாம் தெரிவு

GTG LIBRARY- BANGALORE

செய்யாவிட்டால், நமது நித்திய அடைவிடம் எதுவாயிருக்கும்? (அப். 3:23ஐ வாசிக்கவும்.) இயேசுவின் சித்தத்தை ஏற்றுக் கொள்ளுதல் என்பது நமக்கு மிகவும் முக்கியமான விஷயமாக உள்ளது. நமது நித்திய அடைவிடம் அதைச் சார்ந்ததாகவே இருக்கின்றது. பாவம் என்பது நம் நித்திய அடைவிடத்தைப் பாதிக்கின்றது. நாம் ஒருக்காலும் பாவம் செய்திரா விட்டால், தண்டிக்கப்படுதல் பற்றி நாம் ஒருபோதும் கவலைப்படத் தேவையில்லை.

I. *பாவம் என்றால் என்ன?*

பாவம் என்றால் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ளாத காரணத்தினால், நம்மில் பலர் நாம் எவ்வளவு அடிக்கடி பாவம் செய்கிறோம் என்பதை உணருவதில்லை. புதிய ஏற்பாட்டில் “பாவம்” என்ற வார்த்தையானது *hamartia* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகின்றது, இது “குறியைத் தவற விடுதல், கடமையில் தவறுதல்” என்று அர்த்தப்படுகின்றது. பாவம் என்பது மனித வரலாற்றில் மிகப் பிரபலமாக இருப்பதால் அவ்வார்த்தை வேதாகமத்தில் பலமுறைகள் வருகின்றது.

நாம் எவ்விதம் வாழ வேண்டும் என்பதற்குத் தராதரமாகத் தேவன் தம்மையே, தம்முடைய சொந்த இயல்பையே நமக்குக் கொடுத்திருக்கின்றார் (1 பேது. 1:14-16). தேவன் நம்மை அவருடைய சாயலாகவே படைத்தார் (ஆதி. 1:26, 27). நாம் பாவம் செய்யும் பொழுது, தேவன் நமக்களித்த (அவருடைய) இயல்பை மீறுகின்றோம். நமக்காகத் தேவன் ஏற்படுத்திய வடிவமைப்பை நிறைவேற்றத் தவறிவிடுகின்றோம். நாம் பாவம் செய்யும் பொழுது, தேவன் நமக்களித்த (அவருடைய) இயல்பைக் கெடுத்துப் போடுகின்றோம்.

பாவம் என்றால் என்ன என்பது பற்றி வேதாகமம் நான்கு கூற்றுக்களைக் கொடுக்கின்றது. பாவம் என்றால் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள உதவுகின்ற முதலாவது கூற்றானது பவுலினால் எழுதப்பட்டது. பாவம் என்றால் என்னவென்று பவுல் எடுத்துரைக்கின்றார்? [ரோமர் 14:23ஐ வாசிக்கவும்.] பாவம் என்றால் என்ன? [கோடிட்ட இடத்தில் “விசுவாசத்தினால் வராத யாவும் பாவமே” என்று எழுதி நிரப்பவும்.] நாம் சரியென்று இணங்காதவைகளைச் செய்தலே பாவம் ஆகும். தேவனுடைய வசனம் கூறுகின்றவைகளை நாம் செய்கின்ற பொழுது, நாம் சரியானவற்றைச் செய்கின்றோம் என்ற விசுவாசத்துடன் நாம் செயல்பட முடியும், ஏனெனில் தேவனுடைய செய்தியை, தேவனுடைய வசனத்தைக் கேட்பதினாலேயே விசுவாசம் வருகின்றது (ரோமர் 10:17). தேவனுடைய வசனம் கூறுகின்றது என்ன என்று நாம் அறிந்தால், நாம் சரியானதைச் செய்கின்றோமா அல்லவா என்ற சந்தேகம் இல்லாமல் நாம் செயல்பட முடியும். இருப்பினும், சில விஷயங்களைப் பொறுத்தமட்டில் தேவன் என்ன கூறியுள்ளார் என்பதை நாம் புரிந்து கொள்ளாதிருக்கும் காரணத்தினால், நாம் சரியானதையே செய்கிறோமா அல்லவா என்பதில் நாம் நிச்சயமற்றவர்களாய் இருக்கலாம். சில விஷயங்கள் தவறானதாய் இருக்கலாம் என்று நாம் நம்பும் பொழுதோ, அல்லது சில விஷயங்களைச்

GTG LIBRARY- BANGALORE

செய்வது சரியானதாயிருக்குமோ என்று ஐயப்படும் பொழுது, ஆனாலும் எவ்வாறோ அவற்றைச் செய்தால், நாம் பாவம் செய்கின்றோம். விசுவாசத்தினால் வராத யாவும் பாவமாகவே இருக்கின்றது. தான் செயல்பட வேண்டுமா இல்லையா என்ற சந்தேகத்துடன் செயல் படுகின்றவர் பாவம் செய்கின்றார்.

நாம் சிந்தனை செய்கின்ற இரண்டாம் கூற்றானது அப்போஸ்தலரான யோவானால் எழுதப்பட்டது. பாவம் என்றால் என்னவென்று யோவான் கூறினார்? [1 யோவா. 3:4ஐ வாசிக்கவும்.] பாவம் என்றால் என்ன? [கோடிட்ட இடத்தில் "நியாயப்பிரமாணத்தை மீறுதலே பாவம்" என்று எழுதி நிரப்பவும்.] "மீறுதல்" என்றால், "சட்டத்தின்படி அமைக்கப்பட்ட எல்லைகளுக்கு அப்பால் செல்லுதல், சட்டத்தின் அனுமதி இன்றிச் செயல் படுதல்" என்று அர்த்தப்படுகின்றது. கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டில் காணப்படும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்கள் அல்ல (கலா. 3:24, 25) என்பதால் அந்த நியாயப்பிரமாணத்தைப் பற்றி யோவான் இந்த இடத்தில் எழுதியிருக்க *மாட்டார்*. இயேசுவால் போதிக்கப்பட்ட கொள்கைகளான "கிறிஸ்துவின் பிரமாணத்தை" (1 கொரி. 9:21)ப் பற்றியே யோவான் இவ்விடத்தில் எழுதியிருக்க வேண்டும். இயேசுவின் போதனை யினால் தன் வாழ்க்கை வழியைக் கட்டுப்படுத்தாது உள்ள நபர் பாவம் செய்கின்றார், மற்றும் இந்தக் காரணத்தினால் அவர் தேவனுடைய பார்வையில் பாவியாக நியாயம் தீர்க்கப்படுகின்றார். நியாயப் பிரமாணத்தை மீறுதல் என்பது பாவமாக உள்ளது.

நாம் சிந்தனை செய்கின்ற மூன்றாவது கூற்றும் யோவானாலேயே எழுதப்பட்டதாகும். பாவம் என்றால் என்ன என்று யோவான் கூறுகின்றார்? [1 யோவா. 5:17ஐ வாசிக்கவும்.] பாவம் என்றால் என்ன? [கோடிட்ட இடத்தில் ''அநீதியெல்லாம் பாவம்தான்'' என்று எழுதி நிரப்பவும்.] *சில* அநீதியான செயல்களை பாவம் என்று நாம் அடிக்கடி கருதுகின்றோம், ஆனால் *மற்றவற்றை* அவ்வளவு தீவிரமானதாக நாம் நம்புவதில்லை, அவற்றை நாம் பாவம் என்று கருதுவதில்லை. ஒரு அநீதியான செயலில் காணப்படக் கூடிய தீவிரத் தன்மை அல்லது தீவிரத் தன்மை குறைவு ஆகியவற்றைப் பொருட்படுத்தாது, அது இன்னமும் தேவனுடைய பார்வையில் பாவமாகவே உள்ளது. அநீதியெல்லாம் பாவம் தான். நாம் வாசிக்கவிருக்கும் நான்காவது கூற்றானது யாக்கோபுவால் எழுதப்பட்டது. பாவம் என்றால் என்னவென்று யாக்கோபு கூறுகிறார்? [யாக். 4:17ஐ வாசிக்கவும்.] பாவம் என்றால் என்ன? [கோடிட்ட இடத்தில் "நன்மை செய்ய அறிந்தும் அதைச் செய்யாமற் போனால் அது பாவமாகும்" என்று எழுதி நிரப்பவும்.]

பாவம் பற்றிய முதல் மூன்று கூற்றுக்களும், தவறாகச் செயல்படுவது பாவம் என்பதை வெளிப்படுத்தின. நாம் நமது சொந்த தர அளவை களையோ அல்லது தேவனுடைய தர அளவைகளையோ மீறுவதன் காரணமாக தவறானவைகளாய் உள்ள தவறான செயல்களில் ஈடுபடுவதைப் பற்றி அவை குறிப்பிடுகின்றன. இத்துடன் கூட, நாம் அறிந்த நன்மையைச் செய்யத் தவறுவதும் பாவமாக உள்ளது என்று யாக்கோபு

GTG LIBRARY- BANGALORE

எடுத்துரைக்கின்றார். தேவையில் உள்ள ஒரு நபருக்கு உதவ, தேவனுடைய சித்தத்தை மற்றவர்களுக்குப் போதிக்க, உதவி நிறைந்த வார்த்தையொன்றைப் பேச, முதலியவற்றை நாம் அறிந்திருந்தும், அதைச் செய்யாமற் போனால், நாம் பாவம் செய்கின்றோம். நன்மை செய்ய அறிந்திருந்தும் நாம் செய்ய அறிந்துள்ள அந்த நன்மையைச் செய்யாதிருத்தல் என்பது பாவம் ஆகும்.

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? இப்பகுதியில் நாம், சரியானதுதானா என்று நாம் சந்தேகப்படுபவற்றைச் செய்கின்ற பொழுது, நியாயப்பிரமாணத்தினால் அனுமதிக்கப்படாதவற்றைச் செய்கின்ற பொழுது, அநீதியான செயல் எதையும் செய்யும் பொழுது, நாம் செய்வதற்கு அறிந்த நன்மையைச் செய்யத் தவறும் பொழுது நாம் பாவம் செய்கின்றோம் என்று கற்றுக் கொண்டுள்ளோம்.

II. *நீங்கள் ஒரு பாவியாய் இருக்கின்றீர்களா?*

பாவத்தைப் பற்றி நாம் கற்றுள்ளவைகளின் அடிப்படையில், உங்களைப் பற்றி நீங்கள் எவ்விதம் நியாயந்தீர்ப்பீர்கள்? நீங்கள் *எப்பொழுதுமே* சரியானவை என்று அறிந்துள்ளவற்றைச் செய்தும், நீங்கள் சந்தேகம் கொண்டுள்ளவற்றை *எப்பொழுதுமே* செய்யாமல் தவிர்த்தும் இருக்கின்றீர்களா? இயேசு போதித்த கொள்கைகளான அவருடைய பிரமாணத்தில் நீங்கள் *எப்பொழுதுமே* நிலை நின்றிருக்கின்றீர்களா? அநீதியான செயல்பாடு ஒவ்வொன்றிலும் இருந்து நீங்கள் *எப்பொழுதுமே* நிலை நின்றிருக்கின்றீர்களா? நீங்கள் செய்ய வேண்டும் என்று அறிந்த நன்மையை நீங்கள் எப்பொழுதுமே செய்திருக்கின்றீர்களா? இவை யாவற்றிற்கும் நீங்கள் "ஆம்" என்று பதில் அளிக்க முடியும் என்றால், நீங்கள் ஒருக்காலும் பாவம் செய்யவில்லை என்றாகும். இவை யாவற்றுக்கும் "ஆம்" என்று உண்மை நிறைந்த வகையில் பதில் அளிக்கக்கூடிய ஒருவரை நீங்கள் அறிந்துள்ளீர்களா?

1. எத்தனை பேர் பாவிகளாய் உள்ளனர்? [ரோமர் 3:23ஐ வாசிக்கவும்.] எத்தனை பேர் பாவிகளாய் உள்ளனர்? [கோடிட்ட இடத்தில் "எல்லாரும்" என்று எழுதி நிரப்பவும்.] நாம் பாவம் செய்யும் பொழுது தேவ மகிமையற்றவர்களாகின்றோம் அதாவது, அவருடைய பரிசுத்த இயல்பைப் பெற்றிருப்பதில் இருந்து தவறுகின்றோம் என்பதைக் கவனியுங்கள். நாம் வாழ வேண்டிய தராதரமாகத் தேவன் தம்மையே ஒப்புவித்துள்ளார் என்பதை நினைவுகூருங்கள். தேவன் பொய்யுரையாதவராய் இருக்கின்றார், எனவே நாம் பொய்யுரைக்கக் கூடாது. தேவன் களவு செய்வதில்லை, எனவே நாம் களவு செய்யக் கூடாது. தேவன் தம்மிடம் நல்லவர்களாய் இராதவர்களுக்கும் நல்லவராய் இருக்கின்றார். எனவே நாம் நம்மைத் தவறாக நடத்துகின்றவர்களிடமும் நல்லவர்களாய் இருக்க வேண்டும் (மத். 5:44-48). நாம் தேவனுடைய பண்புகளைப் போலச் செய்ய வேண்டியவர்களாய் இருக்கின்றோம். நாம் இதைச் செய்யத் தவறும் பொழுது பாவம் செய்கின்றோம். எல்லாரும் தங்களைப் படைத்த பரிசுத்த படைப்பாளரின் பரிசுத்த இயல்பைக் கொண்டிருக்கத் தவறியிருக்கின்றோம்.

GTG LIBRARY- BANGALORE

2. எல்லாரும் பாவிகளாய் இருந்தால், நீதிமான் யாரேனும் இருக்கின்றாரா? [ரோமர் 3:10ஐ வாசிக்கவும்.] *எத்தனை பேர் நீதிமான் களாய் உள்ளனர்?* [கோடிட்ட இடத்தில் "ஒருவனும்" என்று எழுதி நிரப்பவும்.] தேவன் மட்டுமே நீதியுள்ளவராய் இருக்கின்றார். நம்மில் எவரும் நீதிமான் அல்ல.

3. நாம் நீதிமான் என்றும், ஒருக்காலும் பாவம் செய்யவில்லை என்றும் கூறினால், நம்மைப் பற்றி தேவன் கூறுவதென்ன? [1 யோவா. 1:8ஐ வாசிக்கவும்.] *நம்மைப் பற்றி என்ன கூறப்பட்டுள்ளது?* [கோடிட்ட இடங்களில், "நம்மை நாமே," "வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்," மற்றும் "சத்தியம்" என்று எழுதி நிரப்பவும்.] நம்மிடத்தில் பாவம் இல்லை என்று நாம் சொல்வோமென்றால், நமக்கு நாம் நேர்மையாய் இருப்பதில்லை. நாம் யாவரும் பாவம் செய்துள்ளோம். நாம் பாவம் செய்துள்ளோம் என்று தேவன் தெளிவாக எடுத்துரைக்கின்றார் (ரோமர் 3:23). தான் பாவம் செய்ததில்லை என்று கூறும் ஒருவர் தேவனைப் பொய்யர் என்று அழைக்கின்றார் (1 யோவா. 1:10) மற்றும் அவர் தாம் பாவியாய் இருக்கும் சூழ்நிலையிலிருந்து எவ்வகையிலும், மாறுவதில்லை, ஆனால் அதற்கு மாறாக அவர் தம்மைத் தாமே வஞ்சித்துக் கொள்கின்றார். அவர் சத்தியத்தை எதிர்கொள்ளுவதில்லை எனவே அவருக்குள் சத்தியம் இருப்பதில்லை.

நீங்கள் பாவம் செய்திருக்கவில்லை என்று நீங்கள் கூற விரும்ப மாட்டீர்கள் அல்லவா? பாவம் பற்றிய தேவனின் தராதரத்தை நான் சிந்திக்கும் பொழுது, நான் பாவியாய் இருக்கிறேன் என்ற உண்மையை நான் எதிர்கொள்ள வேண்டுமல்லவா? நீங்கள் பாவம் செய்துள்ளீர்கள் என்று நீங்கள் ஒப்புக் கொள்வீர்களா?

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? நாம் யாவரும் பாவிகளாய் இருக்கின்றோம் என்று நாம் கற்றுக் கொண்டுள்ளோம். தேவனு டைய தராதரத்தை நாம் யாவருமே மீறி நடந்து, நாம் செய்கின்ற யாவற்றிலும் அவரைப் போலிருக்கத் தவறி விட்டோம்.

III. ***உங்களின் அடைவிடம்***

எல்லாரும் பாவம் செய்துள்ளோம் என்பது ஒரு உண்மையாக உள்ளது. பாவமற்றவர்கள் என்று யாருமே இல்லை. நாம் மன்னிக்கப்படாத பாவிகளாகவோ அல்லது மன்னிக்கப்பட்ட அதாவது இரட்சிக்கப்பட்ட பாவிகளாகவோ இருக்கின்றோம். *நீங்கள் எவ்வகைப்பட்டவராய் இருக்கின்றீர்கள்? ஒரு மன்னிக்கப்பட்ட பாவியாகவா அல்லது மன்னிக்கப் படாத பாவியாகவா? நீங்கள் மன்னிக்கப்படாதவராய் இருந்தால், உங்களின் அடைவிடம் எதுவாயிருக்கும், மற்றும் நீங்கள் இரட்சிக்கப் பட்டிருந்தால் உங்களின் அடைவிடம் எதுவாயிருக்கும்?*

இடது புறம் உள்ளவர்களிடத்தில் இயேசு என்ன கூறுவார்? [மத். 25:41ஐ வாசிக்கவும்.] *எங்கு செல்லும்படி அவர் கூறுவார்?* "பாவி" என்பதன் கீழ் உள்ள முதல் [கோடிட்ட இடத்தில் "நித்திய அக்கினி" என்று எழுதி நிரப்பவும்.] *அந்த அக்கினி எப்பொழுது ஒழியும்? அந்த அக்கினி*

GTG LIBRARY- BANGALORE

என்றென்றும் ஒழியாது என்பது உறுதி (மாற். 9:48). அக்கினி என்றென்றும் ஒழியாதென்றால், தண்டனை என்றென்றும் தொடருவதாய் இருக்க வேண்டும். தண்டனை தொடர்ந்து இராதென்றால், அக்கினி தொடர்ந்து இருக்குமா? அக்கினியும் தண்டனையும் ''நித்தியமானவைகளாய்'' இருக்கின்றன (மத். 25:41, 46).

"நித்திய அக்கினி" மற்றும் ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டவர்களுக்கான "நித்திய தண்டனை" என்பவற்றிற்கு நேரெதிராக, இரட்சிக்கப்பட்டவர்கள் எதைப் பெறுவார்கள்? [மத். 25:46ஐ வாசிக்கவும்.] வலது புறத்தில் இருப்பவர்கள் எதைப் பெறுவார்கள் என்று இயேசு கூறுகின்றார்? ['இரட்சிக்கப்பட்டவர்' என்பதன் கீழ் உள்ள முதல் கோடிட்ட இடத்தில் "நித்திய ஜீவன்" என்று எழுதி நிரப்பவும்.] நீதியற்றவர்களுக்கு அக்கினி எவ்வாறு நித்தியமானதாகவும் என்றென்றும் இருப்பதாகவும் உள்ளதோ அதே போன்று நீதிமான்களுக்கு ஜீவன் (வாழ்வு) என்பதும் நித்திய மானதாகவும் என்றென்றும் இருப்பதாகவும் உள்ளது. நீங்கள் நித்திய அக்கினியைப் பெறுவீர்களா அல்லது நித்திய ஜீவனைப் பெறுவீர்களா?

துன்மார்க்கர் நித்திய அக்கினியில் என்ன செய்து கொண்டிருப்பார்கள்? [வெளி. 14:11ஐ வாசிக்கவும்.] அவர்களின் வாதையினுடைய புகை சதா காலங்களிலும் எழும்பிக் கொண்டிருக்கும், அவர்களுக்கு வாதையிலிருந்து என்ன கிடைக்காது? "பாவி" என்பதன் கீழ் உள்ள இரண்டாவது [கோடிட்ட இடத்தில் ''இளைப்பாறுதல் இராது'' என்று எழுதி நிரப்பவும்.] வாதையானது தொடர்ந்து இருக்கும். அக்கினியில் இருப்பவர்கள் அக்கினி யின் விளைவிலிருந்து இளைப்பாறுதல் பெறமாட்டார்கள். அது உண்மை யிலேயே நேரடியான அக்கினியாய் இருக்குமா? இது ஒரு முக்கியமான கேள்வியாய் இருக்கலாம், ஆனால் இதற்கான நிச்சயமான பதிலை நாம் அறியாதிருக்கலாம். இருப்பினும், அந்த அக்கினி உண்மையான அக்கினி யாய் இராவிட்டாலும், "அக்கினி" என்ற வார்த்தைப் பயன்பாடானது, அந்த வாதை அக்கினியில் இருப்பது போலக் கடுமையாக இருக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள உதவுகின்றது.

மன்னிக்கப்படாதவர்களுக்கான தண்டனைக்கு நேர்மாறான வகையில், இரட்சிக்கப்பட்டவர்கள் என்ன செய்து கொண்டிருப்பார்கள்? [வெளி. 14:13ஐ வாசிக்கவும்.] அவர்கள் எதைப் பெறுவார்கள்? [''இரட்சிக்கப்பட்டவர்கள்'' என்பதன் கீழ் உள்ள இரண்டாவது கோடிட்ட இடத்தில் ''இளைப்பாறுதல்'' என்று எழுதி நிரப்பவும்.] ''கர்த்தருக்குள் இருக்கின்றவர்கள்'' இளைப்பாறுதல் அடைவார்கள் என்பதைக் கவனியுங்கள். கர்த்தருக்குள் இருக்கின்றவர் யார்? "இரட்சிப்பு" என்ற பாடத் தாளில் இருந்து, ஞானஸ்நானம் பெறுவதினால்தான் நாம் கர்த்தருக்குள், இயேசுவுக்குள் வருகின்றோம் என்பதைக் கற்றோம் (ரோமர் 6:3; கலா. 3:27). [பாடத் தாளின் பின்புறத்தில், ஒருவர் கிறிஸ்துவுக்குள்ளாவது எவ்விதம் என்பதை வரைபடத்தின் மூலம் மீண்டும் விவரிக்கவும். இரட்சிக்கப்பட்டவர்களின் அடைவிடமாகிய பரலோகத் திற்கு நேரெதிராக, இழந்துபோகப்பட்டவர்களின் அடைவிடமாகிய நரகம் உள்ளது. (பக்கம் 242ஐப் பார்க்கவும்)]

GTG LIBRARY- BANGALORE

மன்னிக்கப்படாத பாவிகள் தங்கள் தண்டனையிலிருந்து இளைப் பாறுதல் பெறமாட்டார்கள். அவர்களின் மறுசெயல் பற்றி இயேசு கூறியது என்ன? [மத். 25:30ஐ வாசிக்கவும்.] அவர்கள் எவ்விதம் மறுசெயல் செய்வார்கள்? [கோடிட்ட இடத்தில் "அழுகையும் பற்கடிப்பும்" என்று எழுதி நிரப்பவும்.] எனது நண்பர்களில் ஒருவர், தாம் கண்ட வாகன விபத்து ஒன்றைப் பற்றி என்னிடத்தில் கூறினார். அந்த வாகனம் திடீரென்று தீப்பற்றிக் கொண்ட வேளையில் அவர் அங்கு சென்று சேர்ந்தார். காரினுள் அகப்பட்டுக் கிடந்த அதன் ஓட்டுநர் உருக்குலைந்த முகத்துடன், வலியினால் தனது பற்களைக் கடித்துக் கொண்டு, தீயின் உக்கிரத்திலிருந்து தப்பிக்க, கதவைத் திறக்கும்படி நம்பிக்கைழிந்த நிலையில் முயற்சி செய்ததை எனது நண்பர் காண முடிந்தது. நித்திய அக்கினியால் தண்டிக்கப்படுபவர்கள், அழுதுகொண்டும் வேதனையினால் பற்களைக் கடித்துக்கொண்டும் இருப்பார்கள்.

இதற்கு நேர் மாறான வகையில், இரட்சிக்கப்பட்டவர்கள் இவ்வாழ் வில் கடினமான வேளைகளின் வழியே கடந்து சென்றிருப்பினும், வரவிருக்கும் வாழ்வில் மாறுபட்ட ஒரு அனுபவத்தை அடைவார்கள். அவர்களின் வாழ்வு எது போல இருக்கும்? [வெளி. 21:4ஐ வாசிக்கவும்.] அவர்கள் இனி ஒருபொழுதும் எதை அனுபவிக்க மாட்டார்கள்? [கோடிட்ட இடத்தில் "துக்கமில்லை அலறுதலுமில்லை" என்று எழுதி நிரப்பவும்.] கடந்த காலத்தின் மகிழ்வற்ற உணர்வுகள் யாவும் முடிவடைந்து விடும். அவர்கள் இனி வருத்தம் அடைய மாட்டார்கள் மற்றும் ஒருபோதும் மீண்டும் அலற மாட்டார்கள்.

மன்னிக்கப்படாமல் உள்ள பாவி தனது தண்டனையில் மகிழ்வைப் பெற மாட்டார். அதற்குப் பதில் அவர் பெறுவது என்ன? [ரோமர் 2:9ஐ வாசிக்கவும்.] அவர் பெறுவது என்ன? [கோடிட்ட இடத்தில் "உபத்திரவமும் வியாகுலமும்" என்று எழுதி நிரப்பவும்.] பாவியாயிருப்பவர் புறம்பான வேதனையை மட்டுமின்றி வலிவார்ந்த உள்ளான பெருந்துக்கத்தையும் பெறுவார் என்பதை இந்த இரு வார்த்தைகளும் சுட்டிக்காட்டுகின்றன.

இப்படிப்பட்ட பயம் நிறைந்த வேதனைக்குப் பதிலாக, இரட்சிக்கப் பட்ட பாவிகள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். இரட்சிக்கப்பட்டவர்கள் தாங்கள் பெறும் பலனுக்குச் செய்யும் பதில்செயல் எப்படியிருக்கும்? [மத். 25:23ஐ வாசிக்கவும்.] அவர்கள் எதில் பிரவேசிப்பார்கள்? [கோடிட்ட இடத்தில் ''சந்தோஷத்திற்குள்'' என்று எழுதி நிரப்பவும்.] நீதிமான்களுக்கான பலன் என்பது வருத்தமும் வேதனையுமற்ற நித்திய மகிழ்ச்சியாக இருக்கும்.

இயேசு, பாவமும், வருத்தமும், மரணமும் உள்ள இந்த உலகை விட்டு, பரலோகத்தில் (யோவான் 20:17) தமது பிதாவுடன், நித்தியமான (2 கொரி. 4:18) உடல் ரீதியல்லாத ஆவி வாசம் செய்யும் தேவனுடைய இடத்திற்குக் கடந்து சென்றார். மன்னிக்கப்படாத பாவியாயிருப்பவர் இயேசுவுடன் இருக்கும்படி இவ்விதம் செல்ல இயலுமா? [யோவா. 8:21ஐ வாசிக்கவும்.] அவர் எதைச் செய்ய இயலாதவராய் இருப்பார்? [கோடிட்ட இடத்தில் "கிறிஸ்துவிடம் செல்ல இயலாது" என்று எழுதி நிரப்பவும்.]

GTG LIBRARY- BANGALORE

இரட்சிக்கப்பட்டுள்ள நபரின் விஷயத்தில் இது உண்மையாய் இருக்குமா? [யோவா. 14:3ஐ வாசிக்கவும்.] அவர் யாருடன் இருப்பார்? [கோடிட்ட இடத்தில் "கிறிஸ்துவுடன் இருப்பார்" என்று எழுதி நிரப்பவும்.] தம் பாவத்தில் மரிக்கின்ற ஒருவர் ஒருக்காலும் இயேசுவுடன் இருக்கும்படி சேர முடியாது என்ற உண்மையானது, அவர் தம் பாவங்கள் மன்னிக்கப்பட்டால் இயேசுவுடன் இருக்கும்படி சேர முடியும் என்ற உண்மையை மறைமுகமாய் உணர்த்த வேண்டும். நித்தியமான பூமி என்பது இயேசுவின் நித்திய இல்லிடத்தில் இருந்து பிரிக்கப்பட்டுள்ள காரணத்தால் வரையறைக்குட்பட்ட இல்லிடங்களே அதில் இருக்கும் என்பதால் இரட்சிக்கப்பட்டவர்கள்கூட இயேசுவினிடத்தில் சென்றடைய முடியாது என்றால், மேற்சொன்ன கூற்றானது அர்த்தமற்றதாக இருக்கும். இரட்சிக்கப்பட்டவர்கள் இயேசுவினிடத்தில் சென்று சேருவார்கள் (யோவா. 12:26).

துன்மார்க்கருடைய நித்திய இல்லிடம் என்னவாக இருக்கும்? [மத். 10:28ஐ வாசிக்கவும்.] அவர்கள் எங்கிருப்பார்கள்? [கோடிட்ட இடத்தில் "நரகம்" என்று எழுதி நிரப்பவும்.] இவ்விடத்தில் "அழித்தல்" என்ற வார்த்தையானது சிலர் தவறாக போதிப்பது போல நிர்மூலமாக்குவது என்று அர்த்தப்படுத்துவதில்லை, ஆனால் அதற்கு மாறாக, மத். 9:17ல் இதே கிரேக்க வார்த்தையினால் சுட்டிக்காட்டப்படுவது போல, வடிவமைப்பை அழித்தல் என்று அர்த்தப்படுகின்றது. திராட்ச இரசத் துருத்திகள் பாழாக்கப்படும் அதாவது அழிக்கப்படும். நரகம் என்பது நிர்மூலம் ஆகும் இடமாய் இராது, ஆனால் அதற்குப் பதிலாக, நித்திய அழிவின் இடமாக, அங்கு செல்பவர்களின் நித்திய அழிவுக்குரிய இடமாக இருக்கும் (2 தெச. 1:9). நித்திய தண்டனை என்பதே மன்னிக்கப்படாத பாவியின் அடைவிடமாய் இருக்கும்.

நரகத்தில் இருப்பதற்குப் பதிலாக, இரட்சிக்கப்பட்ட நபர் நித்தியத்திற்கும் எங்கு வாழ்வார்? [1 பேது. 1:3, 4ஐ வாசிக்கவும்.] இரட்சிக்கப்பட்டவர்களுக்கு முன்குறித்து வைக்கப்பட்டுள்ளது என்ன? [கோடிட்ட இடத்தில் "பரலோகம்" என்று எழுதி நிரப்பவும்.] இரட்சிக்கப்பட்ட யாவரும் பரலோகத்தில் இயேசுவுடன் இருக்கும்படி சேருவார்கள்.

பாவியின் தண்டனையை மீண்டும் கண்ணோக்குங்கள். அவர் இயேசுவுடன் இருக்க முடியாது, ஆனால் அதற்குப் பதிலாக அவர் நரகத்தில் உபத்திரவத்திலும் பெருந்துயரிலும் இருப்பார், அங்கு உள்ள நித்திய அக்கினியின் காரணத்தால் அவருக்கு அழுகையிலிருந்தும் தனது பற்கடிப்பிலிருந்தும் இளைப்பாறுதல் இராது.

இந்த அடைவிடத்திற்கு நேர் மாறாக, இரட்சிக்கப்பட்டவர்களைக் கவனியுங்கள். இரட்சிக்கப்பட்ட நபர் இயேசுவுடன் பரலோகத்தில் இருப்பார், அங்கு வருத்தமும் அலறுதலும் இனி ஒரு போதுமிராத வகையில், அவர் மகிழ்வைப் பெற்றிருப்பார். அவர் தமது பிரயாசங்கள் எல்லாவற்றையும் விட்டு ஓய்ந்திருப்பார் மற்றும் தேவனுடன் முடிவில்லாத வாழ்வை மகிழ்வுடன் அனுபவிப்பார்.

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? இரட்சிக்கப்

GTG LIBRARY- BANGALORE

பட்டவர் மற்றும் பாவி ஆகியோரின் அடைவிடங்கள் முற்றிலும் மாறுபட்டவையாய் இருக்கும் என்று நாம் கற்றுக் கொண்டுள்ளோம். இரட்சிக்கப்பட்டவர்கள் என்றென்றும் பரலோகத்தின் மகிழ்ச்சிகளை அனுபவிக்கச் சென்று சேருகையில், பாவிகள் நித்திய அக்கினியால் உருவாக்கப்பட்ட சித்திரவதையின் பெருந்துயரை அனுபவிப்பார்கள்.

IV. *அடைவிடத்தைத் தீர்மானிப்பது எது?*

நமது அடைவிடத்தைத் தீர்மானிப்பதில் நாம் ஏதேனும் செய்ய *முடியுமா? யார் தண்டிக்கப்படுவார்கள்?* [ரோமர் 2:8ஐ வாசிக்கவும்.] *யார் தண்டிக்கப்படுவார்கள்?* [கோடிட்ட இடத்தில் "சத்தியத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள்'' என்று எழுதி நிரப்பவும்.] இது வேதாகமத்தின் சீரான போதனையாக *உள்ளதா?* [2 தெச. 1:8ஐ வாசிக்கவும்.] *யார் தண்டிக்கப்படுவார்கள்?* [கோடிட்ட இடத்தில் ''சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள்" என்று எழுதி நிரப்பவும்.]

இவர்கள் *தண்டிக்கப்படுவார்கள் என்றால், யாருக்குப் பலனளிக்கப்படும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?* [மத். 7:21ஐ வாசிக்கவும்.] இராஜ்யத்திற்குள் *யார் பிரவேசிப்பார்கள்?* [கோடிட்ட இடத்தில் "பிதாவின் சித்தத்தின்படி செய்கின்றவர்கள்'' என்று எழுதி நிரப்பவும்.] இயேசு *யாரை ஆசீர்வதிப்பார்?* [எபி. 5:9ஐ வாசிக்கவும்.] இயேசு நித்திய இரட்சிப்பை *யாருக்குக் கொடுப்பார்?* [கோடிட்ட இடத்தில் "அவருக்குக் கீழ்ப்படிகின்றவர்களுக்கு" என்று எழுதி நிரப்பவும்.]

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? இயேசுவின் மூலம் உண்டாயிருக்கிற சத்தியத்திற்கு (யோவா. 1:17) நாம் *கீழ்ப்படியாதிருந்தால்,* நாம் நித்தியத்திற்கும் தண்டிக்கப்படுவோம், ஆனால் அவருக்கு நாம் கீழ்ப்படிந்தால், நாம் நித்திய இரட்சிப்பைப் பெறுவோம்.

தொகுப்புரை

இது ஒரு முக்கியமான பாடமாக உள்ளது, ஏனெனில் இதில் நாம், மகிழ்வுள்ள ஒரு நித்திய அடைவிடத்தை அடைய நாம் என்ன செய்ய முடியும்? என்பதைக் கற்றுக் கொண்டுள்ளோம்.

I. *பாவம் என்றால் என்ன?* சரியானது எது என்பதில் நாம் சந்தேகம் கொண்டுள்ளதைச் செய்தல், நியாயப்பிரமாணத்தை மீறுதல், எல்லா அநீதியும், மற்றும் நன்மை செய்ய அறிந்திருந்தும் அதை செய்யாமல் போகுதல் ஆகியவை பாவம் ஆகும்.

II. *நீங்கள் ஒரு பாவியாய் இருக்கின்றீர்களா?* ஆம். நாம் யாவருமே பாவிகளாய் இருக்கின்றோம்.

III. *பாவி மற்றும் இரட்சிக்கப்பட்டவர் ஆகியோரின் அடைவிடம் எப்படியிருக்கும்?* பாவியாயிருப்பவர் இயேசு மற்றும் தேவன் ஆகியோரின் பிரசன்னமின்றி வெறுமையாய் உள்ள நரகத்தில் தண்டனையை அனுபவிப்பார். இரட்சிக்கப்பட்ட நபர் பரலோகத்தில் என்றென்றும் இயேசு மற்றும் தேவன் ஆகியோரின் பிரசன்னத்தை மகிழ்வுடன் அனுபவிப்பார்.

IV. *நீங்கள் செய்கின்ற அல்லது செய்யாது விடுகின்ற எந்த விஷயம்*

GTG LIBRARY- BANGALORE

உங்களின் நித்திய அடைவிடத்தைத் தீர்மானம் செய்யும்? உங்களின் அடைவிடமானது, இயேசு நமக்குக் கொண்டு வந்த சத்தியத்திற்கு நீங்கள் கீழ்ப்படிகின்றீர்களா அல்லவா என்பதால் தீர்மானம் செய்யப்படும்.

நீங்கள் இயேசுவுடன் பரலோகத்தில் சென்று சேருவீர்களா? நீங்கள் இரட்சிக்கப்பட்டு இருக்கின்றீர்களா? நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கவில்லையென்றால், இரட்சிக்கப்படுவதற்கு நீங்கள் செய்யத் தேவையானது என்ன? நீங்கள் ஏன் இப்பொழுதே கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவருக்கென்று வாழக் கூடாது? நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்தால் எல்லாவற்றையும் ஆதாயப்படுத்திக் கொள்ளலாம். நீங்கள் மதிப்புள்ள எதையும் இழக்க வேண்டியிராது. ஏன் இப்பொழுதே கீழ்ப்படியக் கூடாது? இயேசுவுக்குக் கீழ்ப்படிய நீங்கள் திட்டமிட்டிருந்தால், கீழ்ப்படிய இதுவே மிகச் சிறந்த வேளையாக உள்ளது. நீங்கள் கீழ்ப்படிந்த பிறகு, இயேசு உங்களோடு இருப்பார் என்றும், நித்தியத்திற்கும் நீங்கள் அவருடன் வாழும்படி அவர் உங்களுக்கு ஆவியானவர் மூலம் உதவுவார் (எபே. 3:16) என்றும் நீங்கள் உறுதியாய் நம்பிக்கை பெறலாம். இயேசுவுடனான அன்றாட ஐக்கியத்தையும் இவ்வாழ்விற்குப் பிறகு அவருடனான நித்தியத்தின் மகிழ்ச்சியையும் நீங்கள் விரும்பவில்லையா? நீங்கள் என்ன முடிவெடுக்கும்படி இயேசு விரும்புகின்றார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? இப்பொழுதே நீங்கள் ஞானஸ்நானத்தில் இயேசுவுடன் அடக்கம் செய்யப்படுவதற்குத் தயாரா?

GTG LIBRARY- BANGALORE

இணங்கச் செய்தல்

பேதுரு யூத மக்களுக்கு அறிவுறுத்தி (அப். 2:14-36), அவர்களின் இருதயங்களைத் தொட்டு (அப். 2:37) மற்றும் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று அவர்களுக்குத் தெரிவித்த பிறகு (அப். 2:38), வசனத்திற்கு பதில்செயல் செய்ய அவர்களை இணங்கச் செய்யும்படி நாடினார் (அப். 2:40). இயேசுவின் சித்தத்திற்கு ஒரு பதில்செயலை நாடுதல் என்பது கிறிஸ்துவுக்கு(ள்) மக்களைக் கொண்டுவருவதில் ஒரு முக்கியமான பாகமாக உள்ளது.

இணங்கச் செய்தல் என்பது, தேவனுடைய வசனத்திற்குத் தக்க வகையிலான பதில்செயல் தருவதன் அவசியத்தை ஒரு நபர் தன் சிந்தையில் நினைத்துப் பார்க்க உதவுவதை உள்ளடக்க வேண்டும். அது ஒரு நபரை நமது சித்தத்திற்குப் பதில்செயல் அளிக்குமாறு வற்புறுத்துவதற்கான முயற்சியாய் இருக்கக் கூடாது.

சத்தியத்திற்கு (கற்பவர்) கீழ்ப்படிதலை ஆசிரியர் நாடும் முன்பு, கற்பவர் இரட்சிப்பு பற்றிய சத்தியத்தைப் புரிந்து கொண்டுள்ளாரா என்பதை ஆசிரியர் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமை ஆகியவற்றின் விளைவுகளை, கற்பவர் உணர்ந்தறிய வேண்டும்.

இந்த விஷயங்களை கற்பவர் புரிந்து கொண்டிருந்தால், போதிப்பவர் பிறகு உடனடியாக பதில்செயலின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்ட வேண்டும். சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய இதை விடச் சிறந்த வேளையை அவர் நினைத்துப் பார்க்க முடியுமா என்று போதிப்பவர் கேட்கலாம். பின்வரும் அனுகூலங்களும் உள்ளடக்கப்படக் கூடும்.

1. நீங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்தால், அவர் உங்கள் வாழ்வில் செயல்படுவார்.
2. தேவனுடைய பிள்ளை என்ற வகையில் நீங்கள் கிறிஸ்தவ வாழ்வை வாழ உதவுவதற்கு அவர் உங்களுக்கு தம் ஆவியானவரை அனுப்புவார். (கலா. 4:6; எபே. 3:16).
3. தேவனுடைய அன்பான குடும்பத்தில் நீங்கள் ஒரு பாகமாவீர்கள்.
4. நீங்கள் கீழ்ப்படிவதினால் உங்களை நேசிக்கும் எவரும் மகிழ்வடை

GTG LIBRARY- BANGALORE

வார். தேவன் மகிழ்வடைவார், இயேசு மகிழ்வடைவார், பரிசுத்த ஆவியானவர் மகிழ்வடைவார், தூதர்கள் மகிழ்வடைவார்கள், கிறிஸ்தவர் கள் மகிழ்வடைவார்கள், நீங்களே மகிழ்வடைவீர்கள் (அப். 8:39).

5. உங்கள் பாவங்கள் பற்றிய வருத்தத்தை நீங்கள் விட்டொழித்து, உங்கள் பாவங்களை வெற்றி கொள்ள உதவி பெறுவீர்கள்.

6. சக கிறிஸ்தவர்கள் உங்களுக்கு கிறிஸ்தவ வாழ்வை வாழ உதவுவார்கள், மற்றும் கிறிஸ்தவர் என்ற வகையில் நீங்கள் உங்கள் வாழ்வினாலும் போதனையினாலும் மற்றவர்களுக்கு உதவுவீர்கள்.

7. வாழ்வு நிச்சயமற்றதாக உள்ளது. நீங்கள் நிச்சயமாய்க் கருதக் கூடியதெல்லாம் நிகழ்காலம் மட்டுமே ஆகும்.

8. நித்தியம் என்பது பலனை மகிழ்வுடன் அனுபவிப்பதற்கான ஒரு நீண்டகாலமாக உள்ளது, ஆனால் தண்டிக்கப்பட்டிருப்பதற்கும் அதுவே ஒரு நீண்ட காலமாக உள்ளது.

9. இயேசு எந்த வேளையிலும் திரும்ப வரக் கூடும். நாம் எல்லா வேளைகளிலும் தயாராக இருக்க வேண்டியது அவசியம் (மத். 24:42-46).

10. நாம் காத்திருந்தால் எல்லாம் இழந்து போகப்படக்கூடும் என்றிருக்கையில், கீழ்ப்படியக் காத்திருப்பதினால் ஏதொன்றையும் ஆதாயப்படுத்த முடியாது.

11. இந்த உலகம் உங்களிடமிருந்து எடுத்துப் போடக்கூடாத உள்ளான சமாதானத்தை நீங்கள் பெற்றிருப்பீர்கள்.

12. நீங்கள் தேவனுடன் நெருங்கிய தனிப்பட்ட சஞ்சரித்தலைப் பெற முடியும்.

கற்பவர் இந்தப் பன்னிரெண்டு அனுகூலங்களுக்கு பதில்செயல் செய்யாமல் இருப்பாரென்றால், அவர் காத்திருக்கத் தேர்ந்து கொண்டுள்ளது ஏன் என்று கேளுங்கள். சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய இப்போதைக் காட்டிலும் சிறந்த வேளையொன்றை அவர் நினைக்க முடியுமா என்று போதிப்பவர் கேட்கலாம். அவர் கொண்டுள்ள எந்த மறுப்பையும் மென்மையாகக் கையாளுங்கள். இன்னும் அவர் காத்திருக்க விரும்பினால், அவரது கீழ்ப்படிதலுக்கு ஒரு நேரத்தை அவர் அமைக்க விரும்புகின்றாரா என்று கேளுங்கள். அவர் உங்கள் சித்தத்திற்குப் பதில்செயல் செய்வதினால் அல்ல ஆனால் நமது கிருபையும், இரக்கமும், பரிவிரக்கமும் கொண்ட தேவனுடைய அன்பிற்குப் பதில்செயல் செய்வதினாலேயே அவரது கீழ்ப்படிதலை நீங்கள் விரும்புவதாகக் கூறுங்கள்.

நீங்களும் மற்றவர்களும் உங்கள் ஜெபத்தில் அவரை உள்ளடக்கத் தொடருவது அவருக்கு விருப்பமா என்று கேளுங்கள். நீங்கள் அவரை நேசிக்கின்றீர்கள் என்பதையும், அவருடன் நீங்கள் பரலோகத்தில் தேவனு டைய நித்தியத்தைப் பகிர்ந்து கொள்வதை நிச்சயப்படுத்திக் கொள்ள விரும்புகிறீர்கள் என்பதையும் அவர் அறியும்படி செய்யுங்கள். இன்னமும் அவர் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியக் காத்திருப்பது என்பதை விரும்பினால், இன்னொரு பாடவேளைக்கு ஏற்பாடு செய்யுங்கள்.

GTG LIBRARY- BANGALORE